சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து

Witness Lee

சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து

விட்னெஸ் லீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

Living Stream Ministry
Anaheim, California • www.lsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
THE ALL-INCLUSIVE CHRIST
© 1969 Living Stream Ministry

Saghalathaiyum Ulladakiya Kiristhu
(Tamil)

By
WITNESS LEE

First Edition, 2006
Mass Distribution Edition, 2010

ISBN: **978-0-7363-4475-3**

Translated in India by
Amana Literature [Pvt] Ltd.
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
Living Stream Ministry
2431 W. La palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121,Anaheim, CA 92814 U.S.A.

பொருளடக்கம்

தலைப்பு	பக்கம்
அணிந்துரை	5
1 சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து—ஓர் அறிமுகம்	7
2 தேசத்தின் நன்மை—அதின் விசாலம்	23
3 தேசத்தின் நன்மை—அதின் ஏற்றம்	35
4 தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் I. தண்ணீர்	49
5 தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் II. உணவு	61
6 தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் II. உணவு (தொடர்ச்சி)	77
7 தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் III. கனிமப்பொருட்கள்	89
8 தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் III. கனிமப்பொருட்கள் (தொடர்ச்சி)	103
9 தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி I. ஆட்டுக்குட்டி, மன்னா, உடன்படிக்கைப் பெட்டி, கூடாரம்—இவைகளால்	117
10 தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி II. பலிகளாலும், ஆசாரியத்துவத்தாலும்	133
11 தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி III. கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகளால்	153
12 தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி IV. சேனையை உருவாக்குவதால்	173
13 தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி V. எதிர்க்கும் காரணிகள்	187
14 நல்ல தேசத்துக்குள் நுழைதல்	209
15 தேசத்தில் வாழ்க்கை	225
16 தேசத்தின் விளைவு—தேவாலயமும், நகரமும்	243

அணிந்துரை

இந்தப் புத்தகம் சகோதரர் விட்னெஸ் லீ அவர்கள் 1962ஆம் வருடம், டிசம்பர் மாதம், கலி.ஃபோர்னியா, லாஸ் ஏஞ்சலஸில் கொடுத்த செய்திகளின் தொகுப்பாகும்.

அதிகாரம் ஒன்று

சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து ஓர் அறிமுகம்

வேத வாசிப்பு: ஆதி. 1:1, 2, 9-12, 26, 27, 29; 7:17; 8:1, 13, 22; 12:1, 7; யாத். 3:8; 6:8; எசே. 20:40-42; 1 கொரி. 1:30-31; கொலோ. 2:6, 7, 16, 17; 3:11; எபே. 2:12; கலா. 5:4

இந்தச் செய்தித்தொடரில் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் முன்னடையாளமாகிய கானான் தேசத்தைப்பற்றி கொஞ்சம் பார்க்க விரும்புகிறோம். இந்தக் கானான் தேசத்தில் கட்டப்பட்ட நகரமும், ஆலயமும் கிறிஸ்துவின் நிறைவாகிய அவருடைய சரீரமாகிய சபைக்கு எப்படி முன்னடையாளமாக இருக்கின்றன என்றும் நாம் காண விரும்புகிறோம். இவ்வாறு சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை நாம் ஆழமாகப் பார்க்கப்போகிறோம். இந்தக் கிறிஸ்துவிலிருந்துதான், இந்தக் கிறிஸ்துவின்மேல்தான் கிறிஸ்துவின் நிறைவாகிய சபை கட்டப்படுகிறது. இது வெறும் கிறிஸ்துவும், வெறும் சபையும் இல்லை; மாறாக, சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவும், கிறிஸ்துவின் நிறைவாகிய அவருடைய சரீரமாகிய சபையும் என்பதை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

கிறிஸ்து எல்லாவற்றின் நிஜம்

நாம் பார்த்து, தொட்டு, அனுபவித்துமகிழ்கிற சகல பௌதீகப் பொருட்களும், சடப்பொருள்களும் வேதவாக்கியங்களின்படி நிஜமான பொருட்கள் இல்லை என்று நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அவைகள் மெய்ப்பொருட்களின் நிழல்கள், அடையாளங்கள், அவ்வளவுதான். ஒவ்வொருநாளும் நாம் அநேக சடப்பொருட்களைத் தொடுகிறோம். நாம் உணவு உண்கிறோம், தண்ணீர் குடிக்கிறோம், ஆடைகளைத் அணிகிறோம், வீடுகளில் வாழ்கிறோம், வாகனங்களை ஓட்டுகிறோம்—இந்தக் காரியங்களெல்லாம் நிஜமானவை இல்லையென்று நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும் என்றும், நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவைகள் வெறும் நிழல்களே, வெறும் அடையாளங்களே. நாம் ஒவ்வொருநாளும் உண்கிற உணவு நிஜமான உணவு இல்லை, மாறாக அது நிஜமான உணவின் ஓர்

அடையாளம். நாம் குடிக்கிற தண்ணீர் நிஜமான தண்ணீர் இல்லை. நம் கண்களுக்கு முன்னிருக்கும் வெளிச்சம் நிஜமான வெளிச்சம் இல்லை, அது வேறெதையோ சுட்டிக்காட்டுகிற ஓர் அடையாளம்.

அப்படியானால் நிஜமான காரியங்கள் என்ன? சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவேயன்றி வேறெதுவுமே உண்மையில் நிஜமான காரியங்கள் இல்லை என்று தேவனுடைய கிருபையால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். கிறிஸ்துவே நமக்கு நிஜமான உணவு, கிறிஸ்துவே நமக்கு நிஜமான தண்ணீர், கிறிஸ்துவே நமக்கு நிஜமான வெளிச்சம். நம்மைப் பொறுத்தவரை கிறிஸ்துவே நமக்கு எல்லாவற்றிற்கும் நிஜம். நம் சரீர ஜீவனும்கூட நிஜமான ஜீவன் இல்லை. அதுவும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிற ஓர் அடையாளமே. கிறிஸ்துவே நமக்கு நிஜமான ஜீவன். நீங்கள் கிறிஸ்துவைக் கொண்டிராவிடில் உங்களிடம் ஜீவன் இல்லை. "நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; என் சரீரத்தில் ஜீவன் இருக்கிறது," என்று நீங்கள் சொல்லலாம். ஆனால், இது நிஜமான ஜீவன் இல்லை என்று நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். இது கிறிஸ்துவாகிய நிஜமான ஜீவனைச் சுட்டிக்காட்டுகிற வெறும் நிழல்தான்.

ஒவ்வொருநாளும் நான் என் வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும்போதே, இந்த வீடு என் நிஜமான வாசஸ்தலம் இல்லை என்ற உணர்வும், உணர்ச்சியும் என்னிடம் இருக்கிறது. ஒருநாள் கர்த்தரிடம், "கர்த்தாவே, இது என் வாசஸ்தலம் இல்லை; இது நிஜமான ஒன்றல்ல; இது ஒன்றும் இல்லை; கர்த்தாவே, நீரே என் வாசஸ்தலம்," என்று சொன்னேன். ஆம், அவரே நமக்கு நிஜமான உறைவிடம்.

நான் இப்போது உங்களிடம் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். ஒருவேளை இது உங்களுக்கு ஒருபோதும் தோன்றாமல் இருந்திருக்கக்கூடும். கிறிஸ்துவே உங்கள் உணவு என்றும், கிறிஸ்துவே உங்கள் ஜீவத்தண்ணீர் என்றும், கிறிஸ்துவே உங்கள் ஒளி என்றும், கிறிஸ்துவே உங்கள் ஜீவன் என்றும் நீங்கள் மிகத் தெளிவாக அறிந்திருக்கக்கூடும். ஆனால், கிறிஸ்து என்ற நிலத்தின்மேல்தான் நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்று நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா என்று நான் உங்களைக் கேட்கவிரும்புகிறேன். கிறிஸ்துவே நிலம். ஒவ்வொருநாளும் இந்தப் பூமியில், இந்தத் துண்டு நிலத்தில், வாழ்ந்துகொண்டிருப்பதாக நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் இந்தப் பூமி உங்கள் நிஜமான நிலம் இல்லை என்று நீங்கள் உணரவேண்டும். இந்தப் பூமியும்கூட கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிற ஓர் அடையாளமேயன்றி வேறொன்றும் இல்லை. கிறிஸ்துவே நமக்கு நிஜமான நிலம். உணவு ஓர் அடையாளம்,

தண்ணீர் ஓர் அடையாளம், ஒளி ஓர் அடையாளம், நம் ஜீவன் ஓர் அடையாளம், நிலமும் ஓர் அடையாளமே. கிறிஸ்துவே நமக்கு நிஜமான நிலம். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நான் கிறிஸ்தவனாக இருக்கிறேன். ஆனால் சமீபகாலம்வரை கிறிஸ்துவே எனக்கு நிலம் என்ற எண்ணம் ஒருபோதும் எனக்கு இருந்ததேயில்லை என்று நான் உங்களிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். கிறிஸ்துவே எனக்கு ஜீவன், ஒளி, உணவு, எல்லாமும் என்று நான் அறிந்திருந்தேன். ஆனால், கிறிஸ்துவே எனக்கு நிலம் என்று நான் அறியவில்லை.

கடந்த சில ஆண்டுகளில் கர்த்தரை அதிகமதிகமாய் அனுபவிக்குமாறு அவர் என்னை நடத்தியிருக்கிறார். கர்த்தர் நமக்கு நிலமாக இருக்கிறார் என்று அவர் எனக்குக் காட்டுவதற்குமுன்பு, முதலாவது அவர் நம் வாசஸ்தலமாக இருக்கிறார் என்று எனக்குக் காண்பித்தார். இருபது ஆண்டுகளுக்கும் அதிகமாக நான் ஒவ்வொரு நாளும் வேதத்தை வாசித்திருக்கிறேன். ஆனால், கர்த்தரே நம் வாசஸ்தலம் என்பதைக் கவனிக்கவில்லை. ஒருநாள் தொண்ணூறாவது சங்கீதத்திலிருந்து நான் ஒரு காரியத்தைப் பார்த்தேன். முதல் வசனத்தில், மோசே, "ஆண்டவரே, தலைமுறை தலைமுறையாக நீரே எங்கள் வாசஸ்தலமாக இருக்கிறீர்," என்று சொன்னார். ஆ! கர்த்தர் என் வாசஸ்தலமாக இருக்கிறார் என்று பார்க்கும்படி அந்த நாளில் அவர் என் கண்களைத் திறந்தார். அந்நேரத்தில் கர்த்தரைச் சற்று அதிகமாக அறிந்துகொண்டேன். ஆனால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் கர்த்தர் என் கண்களை இன்னும் அதிகமாகத் திறந்தார். கர்த்தர் எனக்கு வாசஸ்தலமாக மட்டும் இல்லை, நிலமாகவும் இருக்கிறார் என்று நான் கண்டுகொண்டேன். கர்த்தர் எனக்கு நிலம். ஆ! அந்நேரத்திலிருந்து, வேதத்திலிருந்து கர்த்தர் எனக்கு அநேகக் காரியங்களைக் காட்டியிருக்கிறார். அந்நேரத்திலிருந்து பழைய ஏற்பாட்டில் கர்த்தர் எப்போதுமே ஒரு துண்டு நிலத்தை ஏன் குறிப்பிட்டார் என்று புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். கானான் தேசமாகிய ஒரு குறிப்பிட்ட நிலத்திற்குக் கொண்டுவருவதாகக் கூறிக் கர்த்தர் ஆபிரகாமை அழைத்தார். ஆதியாகமம் பன்னிரண்டாம் அதிகாரத்திலிருந்து பழைய ஏற்பாட்டின் இறுதிவரை கர்த்தர் எத்தனை தடவை திரும்பத்திரும்ப அந்தத் தேசத்தை முக்கியப்படுத்திக் குறிப்பிடுகிறார் என்று நீங்கள் நினைவுக்குக் கொண்டுவரலாம். தேசம்...தேசம்...உங்கள் பிதாக்களுக்கு நான் வாக்குத்தத்தம்பண்ணின தேசம். ஆபிரகாமுக்கு நான் வாக்குத்தத்தம்பண்ணின தேசம். ஈசாக்குக்கு நான் வாக்குத்தத்தம்பண்ணின தேசம். யாக்கோபுக்கு நான் வாக்குத்தத்தம்பண்ணின தேசம். உங்களுக்கு நான்

வாக்குத்தத்தம்பண்ணின தேசம். நான் உங்களை அந்தத் தேசத்திற்குக் கொண்டுவருவேன். தேசம், தேசம், எப்போதுமே தேசம்தான்.

தேவனுடைய நித்தியத் திட்டத்தின் மையம்

நகரத்துக்குள் இருக்கும் ஆலயமே பழைய ஏற்பாட்டின் மையம். நகரத்துக்குள் இருக்கும் இந்த ஆலயம் அந்தத் துண்டு நிலத்திலே கட்டப்பட்டது. இந்தத் துண்டு நிலத்தின்மேல் நகரம் கட்டப்பட்டது. ஆலயத்தையும், நகரத்தையும் உடைய இந்தத் துண்டு நிலம்தான் பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களின் உண்மையான மையம். இதுவே தேவனுடைய மனதின் உண்மையான மையமுமாகும். தேவாலயத்தையும், நகரத்தையும் உடைய இந்தத் துண்டு நிலம் தேவனுடைய மனதில் இருக்கிறது.

வேதவாக்கியங்களை நாம் அறிந்திருந்தால், தேவனிடமிருந்து நாம் வெளிச்சத்தைப் பெற்றிருந்தால், தேவனுடைய நித்தியத் திட்டத்தின் மையம், உருவகமாகப் பேசுவதானால், தேவாலயத்தையும் நகரத்தையும் உடைய நிலமே என்று நாம் உணர்ந்துகொள்வோம். ஆதியாகமம் முதல் அதிகாரத்திலிருந்து, பழைய ஏற்பாடு நிலத்தையே எப்போதும் மையமாக எடுத்துக்கொள்கிறது, எப்போதும் நிலத்துடன் தொடர்புடைய எதையாவது குறிப்பிடுகிறது.

ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தை நாம் பார்ப்போம்; அந்த அதிகாரத்தை மனப்பாடமாக ஒப்பிக்கும் அளவுக்கு, ஒருவேளை அது உங்களுக்கு மிகப் பரிச்சயமாக இருக்கக்கூடும். ஆனால் ஒரு காரியம் உங்களிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கக்கூடும். ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில் வெளிப்பரப்புக்கு அடியில் மிக முக்கியமான ஒரு காரியம் மறைந்திருக்கிறது. அதுவே *நிலம்*. தயவுசெய்து ஆழமாக ஆராய்ந்து பாருங்கள். ஆதியாகமம் முதல் அதிகாரத்தின்படி, தேவனுடைய சிருஷ்டிப்பின் குறிக்கோளும், இலக்கும் என்ன? நிலத்தை மீட்டுக்கொள்வதைத்தவிர வேறொன்றும் இல்லை. தேவன் நிலத்தைத் மீட்டுத்திருப்பி, அதின்மேல் ஏதோவொன்றைச் செய்ய விரும்பினார். "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்." பூமியைப்பற்றிய காரியம் என்ன? பூமியின்மேல் ஒழுங்கீனம் இருந்தது. அதின்மேல் பாழும், வெறுமையும், ஆழமான ஜலமும் இருந்தன. அது ஆழத்தின்கீழ் புதைந்திருந்தது. எனவே, தேவன் கிரியைசெய்ய ஆரம்பித்தார். அவர் இருளிலிருந்து வெளிச்சத்தையும், கீழே இருக்கிற ஜலத்திலிருந்துமேலே இருக்கிற ஜலத்தையும் வெவ்வேறாகப் பிரித்தார். பின்பு, அவர் பூமியிலிருந்து தண்ணீரைப் பிரித்தார். மூன்றாம் நாளில் பூமி ஜலத்திலிருந்து

வெளிப்பட்டது. மூன்றாம் நாளில்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மரணத்தின் ஆழங்களைவிட்டு வெளிப்பட்டார். எனவே, இது ஒரு முன்னடையாளம் என்பதை நீங்கள் பாருங்கள். மூன்றாம் நாளில் மரணத் தண்ணீரிலிருந்து தேவன் பூமியை வெளியே கொண்டுவந்தார். இந்த முன்னடையாளத்திலிருந்து, பூமி என்றால் என்னவென்று நீங்கள் உணர்ந்துகொள்ளலாம். பூமி அல்லது நிலம் கிறிஸ்துவின் முன்னடையாளம்.

ஜலத்தினின்று நிலம் வெளிப்பட்டபின்னர் என்ன நிகழ்ந்தது? ஆ! எல்லா வகையான ஜீவனும் தோன்றின—புல், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகள், கனிதரும் மரங்கள். இப்போது நீங்கள் இந்தச் சித்திரத்தைப் பார்க்கமுடிகிறது என்று நினைக்கிறேன். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின்பு, கர்த்தர் மரணத்தைவிட்டு விடுவிக்கப்பட்டபின்பு, அவர் பரிபூரண ஜீவனை உற்பத்தி செய்தார். ஆம், அவர் ஜீவ உற்பத்தியால் நிரம்பியிருந்தார். பின்னர் ஜீவனால் நிரம்பியிருந்த இந்த நிலத்தில், தேவ சாயலின்படி, தேவனின் ரூபத்தை உடையவனாக, மனிதன் சிருஷ்டிக்கப் பட்டான். தேவனுடைய அதிகாரம் இந்த மனிதனிடம் ஒப்புவிக்கப்பட்டது. கர்த்தர் மரணத்தைவிட்டு வெளிப்பட்டபின்பு பரிபூரண ஜீவன் உற்பத்திசெய்யப்பட்டது. இந்த நிறைவான ஜீவனின் நடுவில் தேவனுடைய சாயலோடும், தேவனுடைய ரூபத்தோடும், தேவனுடைய அதிகாரத்தோடும், தேவனுடைய பிரதிநிதியாகிய மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். கிறிஸ்து ஒரு துண்டு நிலம் என்ற வகையில், அவருக்குள் இந்தக் காரியங்களெல்லாம் நிகழ்ந்திருக்கின்றன.

நிலத்துக்கு என்ன பொருள் என்று இப்போது உங்களுக்குத் தெரியும். கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருக்கிறார் என்பதின் அடையாளமே இந்த நிலம். மனுக்குலத்துக்காகத் தேவன் ஆயத்தம்பண்ணின அனைத்தும் நிலத்தில் அடர்த்தியாய்க் குவிக்கப்பட்டிருக்கின்றன. தேவனுடைய சகல முன்னேற்பாடு களையும் அனுபவித்துமகிழுமாறு நிலத்தில் வாழ்வதற்காகவே மனிதன் சிருஷ்டிக்கப்பட்டான். மனிதனுடன் தொடர்புடைய எல்லாக் காரியங்களும் கிறிஸ்துவின் முன்னடையாளமாகிய நிலத்தில் அடர்த்தியாய்க் குவிக்கப்பட்டிருக்கின்றன. தேவன் நமக்காக ஆயத்தம்பண்ணியிருக்கும் சகல காரியங்களும் கிறிஸ்துவில் அடர்த்தியாய்க் குவிக்கப்பட்டிருக்கின்றன.

தேவன் தம் மக்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குள் எப்படிக் கொண்டுவந்தார் என்றும், அவருடைய மக்கள் அங்கே எப்படித் தங்கினார்கள் என்றும், அதின் ஐசுவரியங்களையெல்லாம் எப்படி அனுபவித்துமகிழ்ந்தார்கள் என்றும் நீங்கள் பின்பு பார்ப்பீர்கள். இதன் விளைவாக நகரமும்,

தேவாலயமும் உருவாயின. நகரமும், தேவாலயமும் இந்த நிலத்தை அனுபவித்துமகிழ்வதால் ஏற்படும் விளைவாகும். நகரம் என்றால் என்ன? தேவாலயம் என்றால் என்ன? நகரம் தேவனுடைய அதிகாரத்தின் மையம், தேவனுடைய இராஜ்ஜியம். தேவாலயம் தேவனுடைய வீட்டின் மையம், தேவனுடைய வாசஸ்தலம். தேவனுடைய இராஜ்ஜியமும், தேவனுடைய வீடும் நிலத்தை அனுபவித்துமகிழ்ந்ததின் விளைவாகும். தேவ மக்கள் இந்த நிலத்தை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுபவித்துமகிழும்போது ஏதோவொன்று உருவாகிறது—அதாவது தேவனுடைய அதிகாரமும், தேவனுடைய பிரசன்னமும் அல்லது வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தேவனுடைய இராஜ்ஜியமும், தேவனுடைய வீடும் உருவா கின்றன. கிறிஸ்துவை ஒரு துண்டு நிலமாக நாம் உடைமை யாக்கிக்கொண்டு அவருடைய ஐசுவரியங்கள் அனைத்தையும் நாம் அனுபவித்துமகிழ்ந்தால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுபவித்தபின்பு அதின் விளைவாக ஏதோவொன்று வெளியாகும்: அது தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கொண்ட சபை, அதாவது நகரத்தில் தேவாலயம்.

இப்போது நீங்கள் இவையனைத்தையும், பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் உள்ள வேதவாக்கியங்களுக்குப் பிரயோகிக்கலாம். கோட்பாட்டளவில், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாக் காரியங்களும் அப்படியே புதிய ஏற்பாட்டில் உள்ளவை போன்றவைகள் தான்; எந்த வித்தியாசமும் இல்லை. கிறிஸ்து நமக்கு நிலமாக இருக்கவேண்டும் என்பதுதான் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய நோக்கம். கிறிஸ்துவின் சகல ஐசுவரியங்களையும் அனுபவித்துமகிழ்வதற்கு நமக்கு ஆதாரம் இருக்கிறது. தேவன் நமக்கு இந்த ஆதாரத்தைத் தந்தார். அவருடைய ஐசுவரியங்களை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் அனுபவித்து மகிழ்ந்தபின்பு, அதன் விளைவாக ஏதோவொன்று வெளியாகும்: அது தேவனுடைய இராஜ்ஜியமும், தேவனுடைய வீடும் ஆகும், அதாவது அது தேவனுடைய இராஜ்ஜியத்தைக்கொண்ட சபை. இதுவே தேவனுடைய நித்தியத் திட்டத்தின் மைய எண்ணம்.

தேசத்துக்காக யுத்தம்

நீங்கள் வேதவாக்கியங்களைக் கவனமாக வாசித்தால், மிகக் கொடுமையான, கடுமையான ஒரு செயல் நடைபெறு வதைக் காண்பீர்கள். தேவமக்கள் இந்தத் துண்டு நிலத்தை அனுபவித்துமகிழாதபடிக்கு அவர்களை முறியடிக்க தேவனுடைய எதிரியான சாத்தான் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்துவிட்டான்; இன்னும் செய்துகொண்டிருக்கிறான். மக்கள்

கிறிஸ்துவை நிலமாக அனுபவித்துமகிழ்வதை நாசமாக்க அவன் தன்னால் இயன்றதையெல்லாம் செய்வான். வேதத்தை வாசித்துப் பாருங்கள். தேவன் வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்து, மனுக்குலம் அனுபவித்துமகிழ்வதற்காகப் பூமியைக் கொடுக்கவேண்டும் என்ற நோக்கம் கொண்டிருந்தார். ஆனால், சிறிது நேரம்கூட ஆகவில்லை, அவரை முறியடிக்கச் சாத்தான் ஒரு காரியத்தைச் செய்தான். சாத்தானின் கலகத்தால் தேவன் பிரபஞ்சத்தை நியாயந்தீர்க்க வேண்டியதாயிற்று. அந்த நியாயத்தீர்ப்பினால் பூமியானது ஆழத்திலிருந்த ஜலத்தின்கீழ் புதைக்கப்பட்டது. இது தேவனுடைய திட்டத்தைச் சிறிது காலத்திற்குத் தடுத்துநிறுத்தியது. பின்பு ஒரு காரியத்தை நடப்பிக்கவும், செய்யவும் தேவன் அங்கு வந்தார். நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, ஆழத்தின் ஜலத்திலிருந்து தேவன் நிலத்தை மீட்டுத்திருப்பிக்கொண்டார். மீட்டுத்திருப்பப்பட்ட இந்த நிலத்தின்மேல் பரிபூரண ஜீவன் உண்டானது. பின்பு தேவனுடைய சாயலையும், தேவனுடைய அதிகாரத்தையும் உடைய ஒரு ஜீவன் வெளிவந்தது. ஆயினும் சிறிது நேரம்கூட ஆகவில்லை, எதிரி மறுபடியும் வந்துவிட்டான். அவன் மனிதனை வஞ்சித்தான். எனவே, பூமியின்மேல் மறுபடியும் நியாயத்தீர்ப்பு வரவேண்டியதைத் தவிர்க்க முடியாது என்ற நிலைமைக்குத் தேவனை உள்ளாக்கிவிட்டான். மீட்டுத்திருப்பப்பட்ட பூமி, இன்னுமொரு தடவை, ஆழத்திலிருந்த ஜலத்தின்கீழ் போட்டு மூடப்பட்டது; பெருவெள்ளம் வந்து பூமி முழுவதையும் மூடிக்கொண்டது. உருவகமாகப் பேசுவதானால், கிறிஸ்துவாகிய நிலத்தை அனுபவித்துமகிழாதவாறு, மனிதன் அதிலிருந்து பிரிக்கப் பட்டான். எபேசியர் நிருபத்திலுள்ள "கிறிஸ்துவைச் சேராத வர்கள்" என்ற சொற்றொடர் நினைவிருக்கிறதா? ஜலப்பிரளயமாகிய நியாயத்தீர்ப்பின்கீழ் இருந்த அந்த மக்கள் எல்லாரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்திருந்த மக்களுக்கு ஒரு முன்னடை யாளம். உருவகமாகப் பேசுவதானால், பூமியிலிருந்து பிரிக்கப் படுவது என்பது கிறிஸ்துவிலிருந்து பிரிக்கப்படுவதாகும். ஆனால், பேழையாகிய மீட்பின்வழியாக நோவாவும், அவனுடைய குடும்பமும் நிலத்தை உடைமையாக்கிக்கொள்வ தற்கும், அதின் சகல ஐசுவரியங்களையும் அனுபவித்துமகிழ்வதற்கும் உரிமையைப் பெற்றுக்கொண்டார்கள். நிலத்தை அனுபவித்து மகிழ்வதற்கு, பேழை அவர்களைத் திருப்பிக் கொண்டுவந்தது. ஜலப்பிரளயம் மக்களைப் பூமியிலிருந்து பிரித்தது. ஆனால் பேழை மக்களைப் பூமிக்குத் திரும்பக் கொண்டுவந்தது. இன்னொரு தடவை மனிதன் நிலத்தை உடைமையாக்கிக்கொண்டு அதின் ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்ந்தான். ஆனால் மறுபடியும்,

அதிக நேரம் ஆவதற்குள், அவர்கள் பூமியை அனுபவித்து மகிழ்வதை நாசமாக்க எதிரி மேலும் சில காரியங்களைச் செய்தான். எனவே, சாத்தானால் முரட்டாட்டக்காரர்களாக்கப்பட்ட அந்த இனத்தைவிட்டு தேவன் ஆபிரகாம் என்ற ஒரு மனிதனை வெளியே அழைத்து, அவனை ஒரு குறிப்பிட்ட தேசத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதாக அவனிடம் சொன்னார். எப்போதும் தேசத்தை மீட்டுத்திருப்புவதே தேவனுடைய வேலை என்று நீங்கள் இப்போது உணரமுடியும். எப்போதும் முறியடித்து, நாசமாக்கி, தடுத்து, ஏதாகிலும் ஒன்றைச் செய்து தேசத்தைத் தாறுமாறாக்க வேண்டும் என்பதே எதிரியின் வேலை. மறுபடியும் கர்த்தர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவனை தேசத்துக்குக் கொண்டுவந்தார். ஆனால் அதிக காலமாவதற்குள், தெரிந்து கொள்ளப்பட்ட இவனும் கூடத் தேசத்தைவிட்டுத் தூரமாக எகிப்துக்கு மெல்லமெல்ல இழுத்துச்செல்லப்பட்டான். ஆம், கர்த்தர் அவனை மீண்டும் இன்னொருமுறை இந்தத் துண்டு தேசத்துக்குக் கொண்டு வந்தார். பின்பு அவனுடைய குமாரர்களாகிய இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் இந்தத் தேசத்தை விட்டுவிட்டு எகிப்துக்குப் போனார்கள். நீண்ட காலத்திற்குப்பிறகு, கர்த்தர் அந்த மக்கள் எல்லாரையும் எகிப்திலிருந்து மீண்டும் ஒருமுறை இந்தத் துண்டு தேசத்திற்கே கொண்டுவந்தார். மறுபடியும், சிறிது காலத்திற்குப்பிறகு எதிரி மீண்டும் இயங்க ஆரம்பித்தான். அதாவது, தேசத்தைக் கொள்ளையிடவும், அதிலிருந்த மக்களைச் சிறைப்பிடிக்கவும் பாபிலோனிலிருந்து கல்தேயர் சேனையை அவன் அனுப்பினான். மீண்டும் எழுபது ஆண்டுகளுக்குப்பிறகு, கர்த்தர் அவர்களை இன்னொரு தடவை இந்தத் துண்டு தேசத்துக்குக் கொண்டுவந்தார்.

இதுவே பழைய ஏற்பாட்டின் சரித்திரம் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கர்த்தர் இந்தத் தேசத்தை எத்தனை தடவை மீட்டுத்திருப்பினார்? குறைந்தது ஐந்து அல்லது ஆறு தடவைகள். கர்த்தர் அதைச் சிருஷ்டித்தார். ஆனால் எதிரி அதை நாசமாக்கினான். அதை மீட்டுத்திருப்ப கர்த்தர் வந்தார். ஆனால் எதிரி வேறெதையாவது வைத்து அதை எதிர்த்தான். மீட்டுத்திருப்பிக்கொள்ள கர்த்தர் மீண்டும் இயங்கினார். ஆனால் எதிரியும் மீண்டும் எதிர்த்து இயங்கினான். ஆ! இங்கேதான் போராட்டம் இருக்கிறது! நீங்கள் இதைக் காண்கிறீர்களா? இங்கேதான் யுத்தம் நடக்கிறது!

பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இந்த யுத்தங் களின் குறிக்கோளை எண்ணிப்பார்க்குமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த யுத்தங்கள் என்ன குறிக்கோளுக் காக நடந்தன? இந்த யுத்தங்களெல்லாம் தேசத்தை மைய

மாகக்கொண்டே நடைபெற்றன என்பதை நீங்கள் காண வேண்டும். தேசத்தைத் தாக்கி, அதைக் கைப்பற்றிக்கொள்வதற்காக எதிரி வந்தான். தம் மக்களுக்காக யுத்தம்செய்து, தேசத்தை மீட்டுத்திருப்பிக்கொள்வதற்காக தேவன் இயங்கினார். பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லா யுத்தங்களும் இந்தத் துண்டு தேசத்துடன் சம்பந்தப்பட்டவைகளே.

கிறிஸ்துவை அனுபவிக்கும் நம் அனுபவத்தின் அளவு

இந்தத் துண்டு தேசம் எது? இந்தத் தேசம் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவே என்பதை ஒருபோதும் மறவாதீர்கள். சாதாரணக் கிறிஸ்துவல்ல. மாறாக சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து. உங்களிடம் கிறிஸ்து இருக்கிறாரா என்று நான் உங்களைக் கேட்டால், "ஓ! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அவர் என்னிடம் இருக்கிறார்; கிறிஸ்து என்னிடம் இருக்கிறார்," என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் உங்களிடம் எப்படிப்பட்ட கிறிஸ்து இருக்கிறார் என்று நான் உங்களைக் கேட்பேன். உங்கள் அனுபவத்தில், உங்களிடம் வெறுமனே ஒரு சிறிய கிறிஸ்து, குறைவான கிறிஸ்துதான், இருக்கிறார், சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து உங்களிடம் இல்லையோ என்று நான் அஞ்சுகிறேன்.

நான் உங்களுக்கு ஒரு கதையை, உண்மைக் கதையை, சொல்கிறேன். நான் இரட்சிக்கப்பட்டவுடன் வேதத்தைக் கருத்தாய்ப் படித்தேன். பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம் என்று நான் போதிக்கப்பட்டேன். ஆ! இதைக் கற்றுக்கொண்டபோது நான் எவ்வளவாய்க் கர்த்தரைத் துதித்தேன்! "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், நீரே ஆட்டுக்குட்டியானவர், நீரே எனக்காக ஆட்டுக்குட்டியாக இருக்கிறீர்," என்று பரவசத்தில் சத்தமிட்டேன். ஆனால் ஆட்டுக்குட்டியை தேசத்துடன் ஒப்பிடுமாறு நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சின்ன ஆட்டுக்குட்டியையும், ஒரு பெரிய தேசத்தையும் நீங்கள் எப்படி ஒப்பிடமுடியும்? ஆட்டுக்குட்டி என்றால் என்ன? அது கிறிஸ்துவே என்று நீங்கள் சொல்வீர்கள். ஆனால் அது ஒரு சின்னக் கிறிஸ்துதான் என்று நான் உங்களுக்குச் சொல்வேன். ஆம், தேவன் தம் மக்களுக்காக வைத்திருந்த இலக்கு அதுவல்ல. "நல்லது, உங்களிடத்தில் ஆட்டுக்குட்டி இருக்கும்வரை அதுபோதும்," என்று தேவன் அவர்களிடம் ஒருபோதும் சொன்னதில்லை. இல்லை. உண்மையில் அவர்களைத் தேசத்துக்குள் கொண்டுவர வேண்டும் என்ற காரணத்திற்காகவே அவர் அவர்களுக்கு ஆட்டுக்குட்டியைக் கொடுத்தார் என்று தேவன் அவர்களிடம் சொன்னார். பஸ்கா தேசத்துக்காகவே.

உங்களிடம் கிறிஸ்து இருக்கிறாரா? ஆம், உங்களிடம் கிறிஸ்து இருக்கிறார். ஆனால், உங்களிடம் எப்படிப்பட்ட கிறிஸ்து இருக்கிறார். ஓர் ஆட்டுக்குட்டியா அல்லது ஒரு தேசமா? இஸ்ரவேல் மக்களெல்லாரிடத்திலும் அந்தப் பஸ்கா நாளில் எகிப்திலே ஆட்டுக்குட்டி இருந்தது; ஆனால், மிகச் சிலரே தேசத்துக்குள் நுழைந்தார்கள் என்று நான் வருத்தத் துடன் சொல்கிறேன். ஒரு சிலரே அந்தத் துண்டு தேசத்தை உடைமையாக்கிக்கொண்டார்கள்.

நான் இரட்சிக்கப்பட்டு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் ஆனபிறகு இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் அனுபவித்துமகிழ்ந்த மன்னாவும்கூட கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம்தான் என்று போதிக்கப்பட்டேன். நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். "கர்த்தாவே, நீரே என் உணவு. நீர் எனக்கு ஆட்டுக்குட்டி மட்டும் இல்லை, என் அனுதின மன்னாவும்கூட," என்று நான் கூறினேன். ஆனால் மன்னாதான் தேவனுடைய குறிக்கோளா, இலக்கா, என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். வனாந்தரத்தில் மன்னாவை அனுபவித்துமகிழ்வதற்காகவா தேவன் தம் மக்களை எகிப்திலிருந்து விடுவித்தார்? இல்லை! தேசமே குறிக்கோள். தேசமே இலக்கு. கிறிஸ்துவை நீங்கள் தேசமாக அனுபவித்து மகிழ்கிறீர்களா? எனக்குச் சந்தேகமாயிருக்கிறது. உங்களுக்கும் சந்தேகமாகத்தான் இருக்கிறது என்று நான் தைரியமாய்ச் சொல்வேன். ஆட்டுக்குட்டியை உங்கள் பஸ்கா வாகவும், கர்த்தரை உங்கள் அனுதின மன்னாவாகவும் நீங்கள் அனுபவித்துமகிழ்வதாக நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைத் தேசமாக அனுபவித்து மகிழ்வதாக வெகு சிலரே மெய்யாகச் சொல்லமுடியும்.

நாம் கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டிருக்கிறோம் என்று கொலோசெயர் 2ஆம் அதிகாரத்தில் வேதம் கூறுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் வேர்கொண்டிருந்தால், கிறிஸ்து நமக்கு என்னவாக இருக்கிறார் என்று ஆழ்ந்து சிந்திக்கும்படி இப்போது நான் உங்களைக் கேட்கிறேன். ஆம், கிறிஸ்துவே பூமி, கிறிஸ்துவே விளைமண். ஒரு செடி அல்லது ஒரு மரம் விளைமண்ணில், நிலத்தில், வேர்கொண்டிருக்கிறது. அது போலவே நாமும் கிறிஸ்துவில் வேர்கொண்டிருக்கிறோம். கிறிஸ்துவே உங்களுக்கு மெய்யான விளைமண்ணாகவும், மெய்யான நிலமாகவும் இருக்கிறார் என்று நீங்கள் ஒருபோதும் உணரவில்லையோ என்று நான் அஞ்சுகிறேன். நீங்கள் கிறிஸ்துவாகிய இந்த நிலத்தில் நடப்பட்ட ஒரு சின்னச் செடி. ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்குமுன்பு, இப்படிப்பட்ட எண்ணம் என்னிடம் ஒருபோதும் இருந்ததில்லை என்று நான்

அறிக்கைசெய்தாக வேண்டும். நான் வேதத்தை வாசித்தேன்; கொலோசெயர் புத்தகத்தில் அதிக நேரம் செலவழித்தேன்; நான் அதை மீண்டும் மீண்டும் வாசித்தேன். ஆனாலும், இப்படிப்பட்ட வெளிச்சத்தை நான் ஒருபோதும் பெறவில்லை. கிறிஸ்துவே என் விளைமண், என் உண்மையான பூமி, என்று நான் ஒருபோதும் அறியவில்லை. கடந்த சில ஆண்டுகள்வரை என் கண்கள் திறக்கப்படவில்லை.

கர்த்தருடைய பிள்ளைகளில் பெரும்பாலோர் இன்னும் எகிப்திலேயே தங்கியிருக்கிறார்கள் என்று நான் ஆழமாக உணர்கிறேன். அவர்கள் பஸ்காவை மட்டுமே அனுபவித்திருக் கிறார்கள், அவர்கள் கர்த்தரை வெறும் ஆட்டுக்குட்டியாகவே எடுத்திருக்கிறார்கள். அவர்கள் ஆட்டுக்குட்டியால் இரட்சிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் இந்த உலகத்திலிருந்து விடுவிக்கப்படவில்லை. ஆனால், சிலர் எகிப்தைவிட்டு வெளியே வந்துவிட்டார்கள். சிலர் உலகத்திலிருந்து விடுவிக்கப்பட்டு விட்டார்கள். ஆனாலும், அவர்கள் இன்னும் வனாந்தரத்திலேயே அலைந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவைக் கொஞ்சம் அதிகமாக அனுபவித்துமகிழ்கிறார்கள்; அவர்கள் அவரைத் தங்கள் அனுதின மன்னவாக அனுபவித்துமகிழ்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் உணவாக அனுபவித்துமகிழ்வதாகப் பெருமைபாராட்டக் கூடும். அதில் அவர்கள் மிகவும் திருப்தியடைந்துவிடுகிறார்கள். ஆனால் சகோதர சகோதரிகளே, இது போதுமா? கிறிஸ்துவைத் தங்கள் அனுதின மன்னாவாக அனுபவித்து மகிழ்பவர்களைச் சந்திக்கும்போது நாம் மிகவும் சந்தோஷமடைகிறோம் என்று நான் நினைக்கிறேன். ஆ! கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கர்த்தரைத் தினம்தினம் தங்கள் மன்னாவாக மெய்யாகவே அனுபவித்துமகிழ்கிற சில சகோதர சகோதரிகள் இங்கே இருக்கிறார்கள் என்று நாம் சொல்கிறோம். ஆனால், தேவனுடைய குறிக்கோளுக்கு இது மிகவும் குறைவானது என்று நாம் உணரவேண்டும். கிறிஸ்துவை ஏதோ கொஞ்சம் அனுபவித்துமகிழ வேண்டும் என்பதல்ல தேவனுடைய குறிக்கோள். மாறாக, அவர் நமக்கு சகலத்தையும் உள்ளடக்கி யவராக இருக்கவேண்டும். "ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே... அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்" (கொலோ. 2:6) என்ற வசனத்தைப் பாருங்கள்: அவர் நாம் நடப்பதற்கான களம், மண்டலம். அவர் ஏதோ கொஞ்சம் உணவோ அல்லது தண்ணீரோ இல்லை. அவர் ஒரு மண்டலம், ஒரு நிலப்பரப்பு. அதன் உள்ளே நாம் நடக்கலாம். நாம் அவரில் நடக்கவேண்டும். அவர் நம் நிலம், அவர் நம் பூமி, அவர் நம் இராஜ்ஜியம். அவரில் நடந்துகொள்ளுங்கள்.

இந்தச் சித்திரம் மிகத்தெளிவாக இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். எகிப்தில் ஆட்டுக்குட்டி இருந்தது; வனாந்தரத்தில் மன்னா இருந்தது; இஸ்ரவேல் மக்களுக்கு முன்னால் கானான் தேசம் இருந்தது. அதுவே இலக்கு. அந்தத் தேசம்தான் தேவனுடைய இலக்கு. நாம் அதனுள் நுழைய வேண்டும். அது நம் பங்கு. அதுவே நமக்குத் தேவனுடைய சகலத்தையும் உள்ளடக்கிய ஈவு. இதை நாம் உடைமையாக்கிக்கொள்ள வேண்டும். இது நம்முடையது, இதை நாம் அனுபவித்துமகிழவேண்டும்.

இந்நாட்களில் சபையைப்பற்றியும், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் வெளியாக்கத்தைப்பற்றியும் நாம் அதிகமாகப் பேசிக்கொண்டேயிருக்கிறோம். ஆனால், கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக நாம் உடைமையாக்கிக்கொண்டு, அவரை அனுபவமாக்கிக்கொள்ள முடியாவிட்டால், சபை என்பது ஒருபோதும் நிஜமாக இருக்கமுடியாது என்று நீங்களும், நானும் உணரவேண்டும். ஒரு செடி விளை மண்ணில் வேரூன்றப்பட்டுள்ளதைப்போல, நாம் கிறஸ்துவுக்குள் வேரூன்றப்பட்டிருக்கிறோம் என்று நீங்களும், நானும் உணரவேண்டும். கிறிஸ்துவை நமக்கு எல்லாமுமாக நாம் உடைமையாக்கிக்கொள்ள வேண்டும்—வெறும் வார்த்தைகளில் அல்லது உபதேசத்தில் இல்லை, மாறாக நடைமுறைக்குரிய நிஜத்தில், விளைமண் அந்தச் செடிக்கு எல்லாமுமாக இருப்பதைப்போலவே, கிறிஸ்துவும் நமக்கு எல்லாமுமாக இருக்கிறார் என்று நாம் உணரவேண்டும். கிறிஸ்துவை நாம் அனுபவமாக்கிக்கொள்ளும் அளவுக்கு நாம் இதை உணரவேண்டும். நீங்களும் நானும் ஏற்கெனவே வேரூன்றப்பட்டுவிட்டோம். ஆனால், நடந்த இந்த உண்மையை நாம் உடைமையாக்கிக்கொள்ளவில்லை. நாம் வேரூன்றப்பட்ட படியே, பிறருடன் சேர்ந்து அவரில் கட்டப்படுகிறோம் என்று கொலோசெயர் கூறுகிறது. கிறிஸ்துவில் வேரூன்றப்பட்ட அனுபவம் நமக்கு இல்லையென்றால், பிறருடன் சேர்ந்து நாம் எப்படிக் கட்டப்பட முடியும்? எனவேதான், கர்த்தருடைய மக்களின் நடுவில் சபை கட்டியெழுப்பப்படுவது என்பது சற்றேறக்குறைய பூஜ்யமாகவே இருக்கிறது. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்திலேயே இன்னும் அலைந்துகொண்டிருக்கும்போது தேவாலயமும், நகரமும் எப்படி உண்டாயிருக்கமுடியும்? அவர்கள் தேசத்தைச் சுதந்தரிக்காததால், அதற்குச் சாத்தியமே இல்லை. சபை எப்படி உண்மையாய்க் கட்டியெழுப்பப்பட முடியும்? கிறிஸ்துவினுடைய சரீரத்தின் மெய்யான வெளியாக்கம் எப்படி இருக்கமுடியும்? கிறிஸ்துவை நமக்கு எல்லாமுமாக உணர்ந்துகொண்டு, அனுபவிப்பதால் மட்டுமே அது முடியும். சகோதர சகோதரிகளே,

கர்த்தர் நம் கண்களைத் திறப்பாராக.

சில நடைமுறைக்குரிய எடுத்துக்காட்டுகள்

ஒவ்வொருநாளும் நாம் அநேக வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம் சகல வார்த்தைகளும் கிறிஸ்துவாகத்தான் இருக்கவேண்டும் என்று நீங்கள் உணர் கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவைப் பேசுகிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவையே உங்கள் வார்த்தைகளாக எடுத்துக்கொள்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவை அப்படி எடுத்துக்கொள்ளவில்லையென்றால், வீண் வார்த்தைகளைத்தான் நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நான் கூறுவதின் பொருள் என்ன வென்று ஒருவேளை நீங்கள் கேட்பீர்கள். நான் கூறுவதின் பொருள் இதுதான்: தேவனுடைய மனதில் கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார். இதைப் பார்ப்பதற்கு நீங்கள் வெளிச்சத்தைப் பெற்றிருந்தால், நீங்கள் ஒவ்வொரு நாளும் பேசும் வார்த்தைகளும்கூட கிறிஸ்துவாகத் தானிருக்க வேண்டும், இதை உணர்ந்துகொள்ளும் நிலைமைக்குப் பரிசுத்த ஆவி உங்களை நடத்திச்செல்வார். சிலுவையின் கிரியையை உங்கள் வாயின்மேலும், உங்கள் வார்த்தை களின்மேலும் நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். உங்கள் பேச்சில் நீங்கள் புதிதாக்கப்படுவீர்கள். உங்கள் மொழியில் நீங்கள் புதிதாக்கப்படுவீர்கள். "கர்த்தாவே, நான் சொல்லப்போவது உம்மைப்பற்றியதாக இல்லாவிட்டால், நான் அதைச்சொல்ல மாட்டேன். நான் சிலுவையை என் வாயின்மேல் பிரயோகிக் கிறேன். என் வார்த்தைகளில் நான் உம்மால் புதிதாக்கப்படும்படி சிலுவையை என் பேச்சின்மேல் பிரயோகிக்கிறேன்," என்று சொல்லும் அளவுக்கு நீங்கள் கிறிஸ்துவை அனுபவ மாக்கிக்கொள்வீர்கள்.

கிறிஸ்துவை நமக்கு எல்லாமுமாக நாம் எப்படி உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கு நான் உங்களுக்கு இன்னும் அதிகமாகச் சில எடுத்துக்காட்டுகளைத் தருகிறேன். நாம் சாப்பிடப்போகும்போதெல்லாம், கிறிஸ்துவே நம் மெய்யான உணவு என்ற உணர்வு நமக்கு உடனடியாக எழவேண்டும். "கர்த்தாவே, இது என் மெய்யான போஜனம் இல்லை; நான் வாழ்வதற்கான உணவு நீரே. மனிதன் உண்மையாகவே இந்த உணவினால் பிழைப்பதில்லை, மாறாக உம்மால்தான் பிழைக்கிறான். கர்த்தாவே, உணவைச் சாப்பிடுவதைவிட உம்மை உட்கொள்வதற்கே நான் அதிக நேரத்தைச் செலவழிக்க விரும்புகிறேன்," என்று நாம் சொல்லவேண்டும். நாம் இளைப்பாறச் செல்லும்போது, "கர்த்தாவே, நீரே என் இளைப்பாறுதல்; நீரே என் மெய்யான இளைப்பாறுதல்," என்று

சொல்லவேண்டும். நாம் எதைச் செய்வதாக இருந்தாலும், நாம் எதை அனுபவித்துமகிழ்வதாக இருந்தாலும், எதை அனுபவமாக்கிக் கொள்வதாக இருந்தாலும் கிறிஸ்துவே அதின் மெய்ப்பொருள் என்பதை நாம் உணரவேண்டும்.

சகோதரிகளே, நீங்கள்தான் எப்போதும் பொருள்களை வாங்கக் கடைக்குச் செல்பவர்கள். நீங்கள் கடையில் வாங்கப்போகும் அந்த மெய்யான பொருள் கிறிஸ்துவே என்று நீங்கள் எப்போதாவது எண்ணியதுண்டா? உங்களில் வெகு சிலருக்கே இப்படிப்பட்ட எண்ணம் இருந்திருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருக்கிறார் என்பதைப்பற்றி ஒரு செய்தியை ஒருவேளை கேள்விப்பட்டு, கூட்டத்தில் அல்லேலூயா பாடியிருப்பீர்கள். அதன்பின்பு சீக்கிரமே நீங்கள் எல்லாவற்றையும் மறந்துவிட்டீர்கள். கர்த்தரிடமிருந்து நீங்கள் உண்மையான வெளிச்சத்தைப் பெற்றிருந்தால், பரிசுத்த ஆவி கிறிஸ்துவை நடைமுறைக்குரிய வழியில் உங்களுக்கு ஒவ்வொருநாளும் படிப்படியாகச் சுட்டிக்காட்டுவார். நீங்கள் வாங்கப்போகும் எதுவாயினும், கிறிஸ்துவுக்கு ஓர் அடையாளமாகத்தானிருக்க வேண்டும் என்று அவர் உங்களுக்குக் காண்பிப்பார். கிறிஸ்துவுக்கு வெளியே இருக்கும் எதற்குமே நீங்கள் விலை கொடுக்க விரும்பமாட்டீர்கள். "நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்த விரும்புகிறேன்; நான் கிறிஸ்துவை அதிகமாகக் கொண்டிருக்க விரும்புகிறேன்," என்று சொல்வீர்கள். நீங்கள் எல்லாவற்றிற்கும் கிறிஸ்துவைப் பிரயோகிக்கலாம்.

வாலிபர்களே, நீங்கள் படிக்கப்போகும்போது, "கர்த்தாவே, நீரே என் புத்தகம். நான் உம்மை வாசிக்க விரும்புகிறேன். இந்தப் புத்தகங்களைவிட நான் உம்மை அதிகமாகப் படிக்க விரும்புகிறேன். நான் வாசித்துக்கொண்டிருக்கும் இந்தக் கணப்பொழுதில், நான் உம்மைப் பிரயோகிக்க விரும்புகிறேன்," என்று நீங்கள் சொல்லலாம்.

ஒவ்வொருநாளும் இப்படிப் பயிற்சிசெய்ய முயலுங்கள். கிறிஸ்துவைத் தேசமாக எடுத்துக்கொள்ளுங்கள். அவரை உங்களுக்கு எல்லாமுமாக எடுத்துக்கொள்ளுங்கள்—வெறும் உணவாக மட்டும் இல்லை, வெறும் வெளிச்சமாக மட்டும் இல்லை, வெறும் வாசஸ்தலமாக மட்டும் இல்லை; மாறாக, சகலத்தையும் உள்ளடக்கிய தேசமாக எடுத்துக்கொள்ளுங்கள். கிறிஸ்துவே உங்களுக்குச் சகலத்தையும் உள்ளடக்கியவராக இருக்கிறார் என்று நீங்கள் உணரவேண்டும். கிறிஸ்துவை அனுபவிக்க நீங்கள் பழகவேண்டும், அவரை எல்லாவற்றிலும் பிரயோகிக்க வேண்டும். அப்போது ஏதோவொன்று உங்களிலிருந்து வெளியே புறப்பட்டுவரும் என்று நான்

விசுவாசிக்கிறேன். அந்த ஏதோவொன்றுதான் தேவனுடைய இராஜ்ஜியத்தில் சபை கட்டப்படுதல், நகரத்திலுள்ள தேவாலயம். இதுவே தேவனுடைய குறிக்கோள்.

அதிகாரம் இரண்டு

தேசத்தின் நன்மை—அதின் விசாலம்

வேத வாசிப்பு: உபா. 12:9; எபி. 4:8, 9, 11; எபே. 3:17, 18; பிலி. 3:7, 8, 10, 12-14; யாத். 3:8; உபா. 4:25

தேவாலயத்தையும், நகரத்தையும் உடைய தேசமே தேவனுடைய திட்டத்தின் மையம் என்று பழைய ஏற்பாட்டில் நாம் பார்த்திருக்கிறோம். இந்தப் பூமியில் தேவன் ஒரு காரியத்தைச் செய்யத் திட்டமிட்டிருந்தார். அந்தத் துண்டு நிலத்தைச் சம்பாதித்து, அதின்மேல் தேவாலயத்தையும், நகரத்தையும் கட்டவேண்டும் என்பதே அந்தத் திட்டம். தேவாலயம் தேவனுடைய பிரசன்னத்தின் மையம்; நகரம் தேவனுடைய அதிகாரத்தின் மையம். அந்தத் துண்டு நிலத்தின்மேல் தேவாலயமும், நகரமும் கட்டப்படும்போது மட்டுமே தேவனுடைய பிரசன்னத்தையும், தேவனுடைய அதிகாரத்தையும் அதின்மூலம் உணரமுடியும். பழைய ஏற்பாட்டின் சரித்திரம் முழுவதையும் நீங்கள் மேன்மேலும் பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பழைய ஏற்பாடு முழுவதும் அந்தத் துண்டு நிலம், தேவாலயம், நகரம் ஆகியவைகளைப் பற்றியதே.

கிறிஸ்துவைக் குறிக்கும் சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம்

இந்தத் தேசம்தான் நிறைவான முன்னடையாளம், கிறிஸ்துவைக் குறிக்கும் சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம், என்று நாம் ஏற்கெனவே பார்த்தோம். பழையஏற்பாட்டில் அநேக முன்னடையாளங்கள் இருக்கின்றன என்று நமக்குத்தெரியும். பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம் என்று நமக்குத் தெரியும். மன்னாவும் கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம் என்று நமக்குத் தெரியும். ஆசரிப்புக் கூடாரமும், அதின் சகல பணிமுட்டுகளும், பாத்திரங்களும், வெவ்வேறு பலிகளும்கூட கிறிஸ்துவுக்கு முன்னடையாளங்களே. ஆனால், இந்தத் துண்டு நிலம் இல்லையென்றால், கிறிஸ்துவைக் குறிக்கும் சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம் இல்லை என்று நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஸ்கா ஆட்டுக்குட்டி சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம் இல்லை; மன்னாவோ, ஆசரிப்புக் கூடாரமோ, அதனுடன் தொடர்புடைய

சகல காரியங்களோகூட சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளங்கள் இல்லை. வெவ்வேறு வகையான அநேக பலிகளைக் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆனால், அவைகளும் கிறிஸ்துவின் வெவ்வேறு அம்சங்களை மட்டுமே சித்திரித்தன. கானான் தேசம் மட்டுமே நிறைவான முன்னடையாளம், கிறிஸ்துவைக் குறிக்கும் சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம். நாமெல்லாரும் கிறிஸ்துவை நம் மீட்பராக ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அது மிகவும் அற்புதமானது! ஆனால், கிறிஸ்து மீட்பர் என்றமுறையில் சகலத்தையும் உள்ளடக்கியவரல்லர் என்று நாம் உணரவேண்டும். கிறிஸ்துவே எல்லாமுமாகவும், எல்லாரிலும் இருக்கிறார் என்றும், கிறிஸ்துவே சகலத்தையும் உள்ளடக்கியவராக இருக்கிறார் என்றும் வேதவாக்கியங்கள் கூறுகின்றன. எல்லாம் அவரில் இருக்கிறது, அவர் எல்லாவற்றிலும் இருக்கிறார். அவரை இப்படிப்பட்டவராகக் காட்டுவதற்குக் கானான் தேசத்தைத்தவிர வேறொரு முன்னடையாளம் பழைய ஏற்பாட்டில் இல்லவே இல்லை.

"சகலத்தையும் உள்ளடக்கிய" என்ற வார்த்தைக்கு என்ன பொருள்? கிறிஸ்துவே ஒளி என்று வேதம் கூறுகிறது. ஆனால், இது சகலத்தையும் உள்ளடக்கியதில்லை. கிறிஸ்துவே நம் ஜீவன் என்று வேதம் கூறுகிறது. ஆனால், இதுவும் சகலத்தையும் உள்ளடக்கியதில்லை. கிறிஸ்துவே உணவு, ஜீவத்தண்ணீர் என்றும் வேதம் கூறுகிறது. ஆனால், இவைகளும் கூட அவரை சகலத்தையும் உள்ளடக்கியவராக்கவில்லை. கிறிஸ்து எல்லாரிலும், எல்லாமுமாயிருக்கிறார். கிறிஸ்து ஒளி மட்டும் இல்லை, ஜீவன் மட்டும் இல்லை, உணவு மட்டும் இல்லை, ஜீவத்தண்ணீர் மட்டும் இல்லை; கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருக்கிறார். உங்களுக்கு என்னவெல்லாம் தேவையோ, நீங்கள் எதையெல்லாம் தொடர்புகொள்கிறீர்களோ, நீங்கள் எதையெல்லாம் சம்பாதிக்கிறீர்களோ, நீங்கள் எதையெல்லாம் அனுபவித்து மகிழ்கிறீர்களோ, நீங்கள் எதையெல்லாம் அனுபவமாக்குகிறீர்களோ—இந்தக் காரியங்களெல்லாம் கிறிஸ்துவாகத்தான் இருக்கவேண்டும். கிறிஸ்துவே நமக்கு சகலத்தையும் உள்ளடக்கியவர்.

உபதேசரீதியில் நாங்கள் பேசவில்லை. மாறாக மிகவும் நடைமுறைக்குரியரீதியில் பேசுகிறோம். ஏதாவது ஒன்றை நீங்கள் செய்யும்போதெல்லாம், ஏதாவது ஒன்றை நீங்கள் அனுபவித்து மகிழும்போதெல்லாம், ஏதாவது ஒன்றை நீங்கள் பயன்படுத்தும் போதெல்லாம், நீங்கள் உடனடியாகக் கிறிஸ்துவைப் பிரயோகிக்கவேண்டும். எடுத்துக்காட்டாக, நீங்கள் ஓர் இருக்கையில் உட்கார்ந்திருக்கிறீர்கள். இது நிஜமான இருக்கை இல்லை என்று

உணர்கிறீர்களா? இது கிறிஸ்துவை சுட்டிக்காட்டுகிற ஒரு நிழல், ஓர் அடையாளம். கிறிஸ்துவே நிஜமான இருக்கை. உங்களிடம் கிறிஸ்து இல்லையென்றால் உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுக்கு ஓர் இருக்கை இல்லவே இல்லை என்பதே அதின் பொருள். உங்களுக்கு இளைப்பாறுதல் கிடையாது. நீங்கள் சார்ந்துகொள்வதற்கு ஒன்றுமேயில்லை. உங்களிடம் பொய்யான ஏதோவொன்று இருக்கிறது. ஏனென்றால், கிறிஸ்துவே மெய்யான காரியம்.

உங்களுக்கு விநோதமாகத் தோன்றக்கூடிய ஒரு காரியத்தை நான் உங்களுக்குச் சொல்லட்டுமா? சில வேளைகளில் நான் என் முக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொள்ளும்போது, "கர்த்தாவே, இவைகள் மெய்யான கண்ணாடி இல்லை; நீரே என் மெய்யான கண்ணாடி. நீர் இல்லாமல் என்னால் எதையும் பார்க்கமுடியாது. நீர் இல்லாமல் எனக்குப் பார்வை கிடையாது," என்று நான் சொல்கிறேன். கிறிஸ்துவே நமக்கு எல்லாமுமாக இருக்கிறார். உங்களிடம் கிறிஸ்துவும், அவரை அனுபவமாக்கிக் கொள்ளும் வழியும் இருந்தால், உங்களிடம் எல்லாம் இருக்கிறது. உங்களிடம் கிறிஸ்து இல்லையென்றால், இப்படி நடைமுறைக்குரிய வழியில் அவரை எப்படிப் பிரயோகிப்பது என்றும், எப்படி அனுபவமாக்கிக்கொள்வது என்றும் உங்களுக்குத் தெரியவில்லையென்றால், உங்களிடம் ஒன்றுமேயில்லை.

நீங்கள் படியில் ஏறிக்கொண்டிருக்கும்போது, கிறிஸ்துவே உங்களுக்கு மெய்யான படியாக இருக்கிறார் என்று நீங்கள் உணர்கிறீர்களா? கிறிஸ்துவே வழி என்று வேதம் கூறுகிறது; அவரின்றி வழியில்லை. எனவே, நீங்கள் நடந்துகொண்டிருக்கும்போது அல்லது வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கும் போது, "கர்த்தாவே, நீரே என் வழி, நீரின்றி எனக்கு வழியில்லை. காரியங்களைச் செய்வதற்கு எனக்கு வழியில்லை, தொடர்ந்து முன்னேறிச்செல்வதற்கு எனக்கு வழியில்லை, ஒரு நபராக இருப்பதற்கு எனக்கு வழியில்லை," என்று நீங்கள் சொல்ல வேண்டும். கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருக்கிறார், கிறிஸ்துவே நம் வழி.

கர்த்தருக்கு ஊழியம்செய்துகொண்டிருக்கும் கடந்த வருடங்களில் கணவனுக்கும், மனைவிக்குமிடையே ஏற்படும் பிரச்சினைகளை அநேக தடவை சந்தித்திருக்கிறேன். அநேக தடவை, சகோதரர்கள் என்னிடம் வந்து, "சகோதரர் லீ, என் மனைவியைச் சமாளிப்பதற்கு தயவுசெய்து எனக்கு ஒரு சிறந்த வழியைக் கூறமுடியுமா?" என்று கேட்டிருக்கிறார்கள். எப்போதுமே இதுதான் என் பதில்: "சகோதரரே, 'சிறந்த வழி' என்று ஒன்றில்லை. கிறிஸ்துவே சிறந்த வழி, கிறிஸ்துவே மிகச்சிறந்த வழி என்றும்

நான் சொல்வேன்." நான் இப்படிப் பதில் சொல்லும்போதெல்லாம் பெரும்பாலும் மக்கள் அதைப் புரிந்துகொள்வதில்லை. அவர்கள் எப்போதும், "நீங்கள் சொல்வதின் பொருள் என்ன?" என்று கேட்கிறார்கள். எனவே நான் அவர்களிடம், "சகோதரரே, உங்கள் பிரிய மனைவியைச் சமாளிப்பதற்கு கிறிஸ்துவே உங்களுக்கு மிகச் சிறந்த வழி என்பதே நான் சொல்வதின் பொருள்." எப்படி வாழ வேண்டும், எப்படி இணங்கிப்போக வேண்டும், தங்கள் மனைவிகளை எப்படிச் சமாளிக்கவேண்டும் என்று தங்களுக்கு விவரமாகச் சொல்லும்படி சிலவேளைகளில் அவர்கள் என்னை வற்புறுத்துகிறார்கள். அப்போது நான் அவர்களிடம் கூறுவது: "சகோதரரே, நான் உங்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். உங்கள் மனைவியைச் சமாளிப்பதற்குக் கிறிஸ்துவே உங்களுக்கு மிகச் சிறந்த வழி. இது மிகவும் எளிமையானது. எல்லாவற்றையும் மறந்துவிடுங்கள். கர்த்தருடன் ஒரு தனிப்பட்ட தொடர்பைக் கொள்ளும்படி உங்கள் ஆவியில் உள்ள அவரிடம் திரும்புங்கள். திரும்பி, அவரிடம், 'கர்த்தாவே, நீரே என் ஜீவன், நீரே என் வழி, நீரே எனக்கு எல்லாமுமாக இருக்கிறீர். எனவே, உம்மையே எல்லாமுமாக எடுத்துக்கொள்ள நான் இன்னொருதடவை உம்மிடத்திற்கு வருகிறேன். என் மனைவியைச் சமாளிப்பதற்கு நான் உம்மையே வழியாக எடுத்துக்கொள்கிறேன்' என்று சொல்லுங்கள். பின்பு நீங்கள் அறிவீர்கள் என்று நிச்சயத்துடன் இருங்கள். என்ன செய்யவேண்டும் என்று என்னால் உங்களுக்குச் சொல்லமுடியாது. ஆனால், கர்த்தர்தாமே உங்கள் வழியாக இருப்பார். என்னை நம்புங்கள்."

குறிப்பாக, சகோதரிகள் தங்கள் திருமண வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைப்பற்றி விவரமாகச் சொல்ல விரும்புகிறார்கள். அவர்கள், "ஆ! சகோதரரே, தயவுசெய்து எனக்குக் கொஞ்ச நேரம் ஒதுக்கித்தாருங்கள். என்னிடம் கொஞ்சம் பொறுமையாயிருங்கள். முழுக் கதையையும் நான் உங்களுக்குச் சொல்கிறேன்," என்று சொல்கிறார்கள். நான் அவர்களிடம் சொல்வது: "சகோதரியே, என்னிடம் பொறுமை இருக்கிறது. நான் உங்களுக்குச் செவிகொடுக்கவும் தயாராக இருக்கிறேன். ஆனால், இவைகளெல்லாம் பயனற்றவைகள் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். எவ்வளவு அதிகமாக நீங்கள் கூறுகிறீர்களா, எவ்வளவு அதிகமாக நீங்கள் இதைப்பற்றியும், அதைப்பற்றியும் என்னிடம் சொல்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் பிரச்சினைக்குள் மாட்டிக் கொள்வீர்கள். சாதாரணமாக இருங்கள். முழங்கால்படியிட்டு, உங்கள் ஆவியிலிருந்து, கர்த்தரிடத்தில் எதையாவது கூறுங்கள். எதையும் என்னிடம் சொல்லவேண்டாம். நீங்கள் சொல்வதைக் கேட்க நான்

விரும்பவில்லை என்பதல்ல இதன் பொருள். ஆனால், கிறிஸ்துவைத்தவிர வேறு சிறந்த வழியை என்னால் சுட்டிக்காட்ட இயலாது. நீங்கள் கிறிஸ்துவையே இன்னொரு தடவை தொடர்புகொள்ளவேண்டும்." இதன் விளைவாகப் பெரும்பாலான சகோதரர்களும், சகோதரிகளும் உணர்வடைந்து, கிறிஸ்துவைப் பற்றி ஏதோவொன்றை நடைமுறைக்குரிய வகையில் அறியும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் என்னிடத்தில் வந்து, "என் மனைவியைச் சமாளிப்பதற்கு கிறிஸ்துவே எனக்கு மிகச்சிறந்த வழி என்று இப்போது நான் அறிகிறேன்," என்றும், "என் கணவனைச் சமாளிப்பதற்கு கிறிஸ்துவே எனக்கு மிகச்சிறந்த வழி என்று இப்போது நான் அறிகிறேன்," என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

நீங்கள் பாருங்கள், இது வெறுமனே ஓர் உபதேசமோ அல்லது ஒருவகையான போதனையோ இல்லை. இதை நீங்கள் அனுபவிக்க வேண்டும். உங்கள் அன்றாட வாழ்க்கைக்குக் கிறிஸ்துவைப் பிரயோகிக்கவேண்டும்.

இஸ்ரவேல் மக்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியையும், பின்னர் நாற்பது ஆண்டுகளாக ஒவ்வொருநாளும் மன்னாவையும் அனுபவித்துமகிழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் ஒருபோதும் முற்றிலும் திருப்தியடையவில்லை. கிறிஸ்துவுக்குரிய சிறு தளவை மட்டுமே அவர்கள் பிரயோகித்தார்கள்; கிறிஸ்துவின் ஒரு சிறிய பங்கை மட்டுமே அவர்கள் அனுபவித்தார்கள். கானான் தேசத்துக்குள் நுழையும்வரை, அவர் அவர்களுக்கு எல்லாமுமாக இருக்கவில்லை, அவர்களும் முற்றிலும் திருப்தி யடையவில்லை. அவர்கள் தேசத்துக்குள் நுழைந்தபோது, அவர்கள் புசித்தது தேசத்திலிருந்து வந்தது, அவர்கள் குடித்தது தேசத்திலிருந்து வந்தது, அவர்கள் வாழ்க்கை முழுவதுமே தேசத்திலிருந்து வெளிவந்தது. தேசம் அவர்களுக்கு எல்லாமாக இருந்தது. கானான் தேசத்தைப்போல சகலத்தையும் உள்ளடக்கியதற்கு வேறு முன்னடையாளம் பழைய ஏற்பாட்டில் இல்லை.

தேவ மக்களுக்கான இளைப்பாறுதல்

இந்தத் தேசமே தேவமக்களுக்கு இளைப்பாறுதல் என்று தேவன் ஏன் சொன்னார் என்று நாம் உணரவேண்டும். ஆட்டுக்குட்டி இளைப்பாறுதல் இல்லை; மன்னா இளைப்பாறுதல் இல்லை; மாறாக தேசமே இளைப்பாறுதல். இஸ்ரவேல் மக்கள் பஸ்கா ஆட்டுக்குட்டியை அனுபவித்து மகிழ்ந்தார்கள். ஆனால், அவர்கள் இளைப்பாறுதலுக்குள் நுழையவில்லை. அவர்கள் நாற்பது வருடங்களாக ஒவ்வொரு நாளும் மன்னாவை அனுபவித்துமகிழ்ந் தார்கள். எனினும், அவர்கள் இளைப்பாறுதலுக்குள்

நுழையவில்லை. இளைப்பாறுதல் என்றால் என்னவென்று நமக்குத் தெரியும். இளைப்பாறுதல் என்பது முழுமையான ஒரு காரியம், நிறைவான ஒரு காரியம், பரிபூரணமான ஒரு காரியம். உங்களிடம் எல்லாம் இருக்கும்போதுதான், நீங்கள் மெய்யாகவே இளைப்பாறமுடியும். பஸ்கா ஆட்டுக்குட்டி தேவ மக்களுக்கான முழுமையான, பரிபூரணமான பங்கு இல்லை; எனவே அது இளைப்பாறுதல் இல்லை. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அது நல்லதாக இருந்தது. ஆனால், அது இளைப்பாறுதல் இல்லை. ஒரு குறப்பிட்ட அம்சத்தில் மன்னாவும்கூட நல்லது தான். ஆனால் அதுவும் நிறைவான, பரிபூரணமான, முழுமையான பங்கு இல்லை. தேசம் மட்டுமே தேவ மக்களுக்கு இளைப் பாறுதலாக இருந்தது. ஏனென்றால், தேசமே முழுமை, பரிபூரணம், நிறைவு. தேசத்தில் உங்களுக்கு எல்லாமே உண்டு. தேசம் உங்களைத் திருப்தியாக்கும்.

இஸ்ரவேல் மக்களுக்கு இளைப்பாறுதலாக இருந்த தேசம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் என்று எபிரேயர் 3, 4ஆம் அதிகாரங்கள்மூலம் நாம் அறியலாம். கிறிஸ்துவே இளைப் பாறுதல். ஏனென்றால், கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக உணரக்கூடிய நிலைமையில் நம்மில் பெரும்பாலோர் இன்னும் இல்லை. அவரை வெறுமனே நம் இரட்சகராகவும், நம் மீட்பராகவும், நம் ஜீவனாகவும், நம் வழியாகவும் மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம். நம்மில் வெகு சிலரே கிறிஸ்துவை நமக்கு எல்லாமுமாக அறிந்திருக்கிறோம். தேசமே இலக்கு. தேசமே இலட்சியம், தேசமே தேவனுடைய நித்தியக் குறிக்கோள். கிறிஸ்துவைத் தேசமாக நம்மால் உணர்ந்துகொள்ள முடியாவிட்டால் நாம் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம். நாம் கிறிஸ்துவை இதுவரை அனுபவித் திருப்பதைவிட இன்னும் அதிகமாக அனுபவிக்க வேண்டி யிருக்கிறது என்று நாம் காணவேண்டும். அவரைப்பற்றிய கொஞ்ச அனுபவம் மட்டுமே நம்மிடம் இருக்கிறது. இதுதான் இந்நாட்களில் எங்களுக்கு மிகுந்த பாரமாயிருக்கிறது. கர்த்தர் இதை மீட்டுத்திருப்பப்போகிறார் என்று நாங்கள் உறுதியாய் விசுவாசிக்கிறோம்.

தேசத்தின் நன்மை

பழைய ஏற்பாட்டில் இந்தத் துண்டு தேசம் ஒரு நல்ல தேசம் என்று அநேகத் தடவை அழைக்கப்படுகிறது. இது மெய்யாகவே குறிப்பிடத்தக்கது. "நான் உங்களை நல்ல தேசத்துக்குள் கொண்டுபோய்ச் சேர்ப்பேன்." நீங்கள் விசேஷ கவனம் செலுத்தாவிட்டால் இது வெறுமனே ஒரு சாதாரணமான

வாக்குமூலம் என்றுதான் நினைப்பீர்கள். நாம் ஏதாவதொன்றை எப்போதும் 'நல்லது' என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். எனவே, ஒன்றை 'நல்லது' என்று சொல்லும்போது நாம் அதற்கு எந்த முக்கியத்துவமும் கொடுப்பதில்லை, ஏதோவொன்றை விவரிக்கக்கூடிய வெறும் சாதாரண வார்த்தையாகவே அதைக் கருதுகிறோம். ஆனால், ஒரு காரியம் 'நல்லது' என்று கர்த்தர் கூறும்போது அதற்கு நாம் கவனம் செலுத்தவேண்டும். இது சாதாரணமானது இல்லை. அவர் இதை அடிக்கடி கூறுகிறார். ஒரு நல்ல தேசம்...ஒரு நல்ல தேசம்...ஒரு நல்ல தேசம்! அது மெய்யாக நல்லதாகவே இருக்கவேண்டும்.

இந்தத் தேசத்தின் நன்மை என்ன? அது நல்ல தேசம் என்று கர்த்தர் சொன்னதால், அதின் நன்மை என்ன? நம்மில் பெரும்பாலோர் கடந்த காலத்தில் இந்த விஷயத்திற்கு அதிகக் கவனம்செலுத்தவில்லை. அதை வெறுமனே ஒரு நல்ல தேசமாக எடுத்துக்கொண்டு, அதின் நன்மைக்கான காரணத்தை ஆராயாமல் அதை அத்துடன் விட்டுவிட்டோம்.

இந்தத் தேசத்தின் நன்மைகளை முழுவதும் வரையறுப்பது சற்றுக் கடினம். முதலாவது நான் உங்களுக்குச் சற்று நூதனமான ஒரு வரையறையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் அதை ஏற்கெனவே வாசித்திருக்கிறீர்கள். யாத்திராகமம் 3:8 கூறுகிறது: "அவர்களை...அந்தத் தேசத்திலிருந்து நீக்கி...நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்." விசாலமான தேசம். விசாலமான என்ற வார்த்தையைப் "பரந்துவிரிந்த" என்று மொழியாக்கம் செய்வது சிறப்பாயிருக்கும் என்று திரு. ஜே. என். டார்பி கருதுகிறார். அது நலமும் விசாலமுமான தேசம். அது முதலாவது விசாலத்தில் நல்லது.

விசாலம் என்றால் என்னவென்று நீங்கள் புரிந்துகொள்வீர்கள். ஆனால், இந்தத் தேசத்தின் விசாலத்தை உங்களால் விவரிக்கமுடியுமா? கிறிஸ்துவின் இடப்பரப்பையும், விரிவையும் உங்களால் சொல்லமுடியுமா? வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கிறிஸ்து எவ்வளவு பெரியவர் என்று உங்களுக்குத் தெரியுமா? நம்மெல்லாருக்கும் ஒரு குறிப்பிட்ட அளவு இருக்கிறது. ஆனால், கிறிஸ்துவின் அளவு என்ன? அப்போஸ்தலனாகிய பவுல் அதை நமக்கு எபேசியர் 3ஆம் அதிகாரத்தில் தருகிறார். அகலம், நீளம், உயரம், ஆழம் இவைகளே கிறிஸ்துவின் அளவுகள். அகலம் எவ்வளவு அகலமானது என்றும், நீளம் எவ்வளவு நீளமானது என்றும், உயரம் எவ்வளவு உயரமானது என்றும், ஆழம் எவ்வளவு ஆழமானது என்றும் உங்களால் கூற முடியுமா? நீங்கள் என்னைக் கேட்டால், "எனக்குத் தெரியாது. அது எல்லையற்றது," என்றுதான்

நான் சொல்லவேண்டியிருக்கும். பிரபஞ்சத்தின் அகலமே கிறிஸ்துவின் அகலம். முழுப்பிரபஞ்சத்திற்கும் அகலம் கிறிஸ்துவே, நீளம் கிறிஸ்துவே, உயரம் கிறிஸ்துவே, ஆழம் கிறிஸ்துவே. பிரபஞ்சத்திற்கு ஓர் எல்லை இருந்தால் அந்த எல்லை கிறிஸ்துவாகத்தான் இருக்கவேண்டும். கிறிஸ்துவின் பரிமாணங்களை உங்களால் ஒருபோதும் அளக்கமுடியாது. இதுவே தேசத்தின் நன்மைகளில் முதல் காரியம். தேசம் கிறிஸ்துவின் எல்லையற்ற அளவில் நல்லது.

கிறிஸ்துவின் விசாலத்தைப் பிரயோகித்தல்

இதை உங்களால் எப்படிச் செயல்படுத்தமுடியும் என்று இப்போது நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன்? கிறிஸ்துவின் அளவை உங்களால் பிரயோகிக்க முடியுமா? அகலம், நீளம், உயரம், ஆழம் ஆகியவைகளை உங்களால் பிரயோகிக்க முடியுமா? இதை நான் விளக்கிக்காட்டுகிறேன். ஒருநாள் ஒரு சகோதரி என்னிடம் வந்து, "சகோதரரே, என் குடும்பத்தை உங்களுக்குத் தெரியும். நம் சகோதரர் (அவருடைய கணவர்) எப்படிப்பட்ட நபர் என்று உங்களுக்குத் தெரியும்," என்றார். நான், "ஆம், எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்," என்றேன். "எனக்கு ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். இன்னொன்று கூடுதலாக உருவாகிக்கொண்டிருக்கிறது, மொத்தம் ஆறாகிவிடும். நான் இன்னும் இளமையாக இருக்கிறேன். ஆறானதற்குப்பிறகு இன்னும் அதிகமாகப் பிள்ளைகள் வரக்கூடும் என்று நான் பயப்படுகிறேன். சகோதரரே, இந்தச் சூழ்நிலையைப் பற்றி நான் கவலைப்படுகிறேன்," என்றாள். அப்போது நான் அவளிடம், "சகோதரியே, கிறிஸ்து எவ்வளவு பெரியவர் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டேன். அவள், "சகோதரரே, இது ஒரு விநோதமான கேள்வி. நான் அதைப்பற்றி ஒருபோதும் நினைத்துப்பார்த்ததேயில்லை. நீங்கள் கூறுவதின் பொருள் என்ன?" என்று கேட்டாள். அவள் பெற்றுக்கொண்டிருக்கும் கிறிஸ்து எல்லையற்ற கிறிஸ்து என்று அவள் உணர்ந்துகொள்ளும்படிச் செய்தேன். கிறிஸ்து நடைமுறைக்குரியரீதியில் எவ்வளவு பரந்தவர் என்று உணர்ந்துகொள்ள மக்களுக்கு உதவுவது சுலபம் இல்லை. அவள், "சகோதரரே, கர்த்தர் மிகப் பரந்துவிரிந்தவர் என்று எனக்குத் தெரியும், அது எனக்கு மிக நன்றாகத் தெரியும்," என்றாள். எனவே நான், "சகோதரியே, உங்கள் பிரச்சினை எனக்கு மிகவும் பரிச்சயமானது. நீங்கள் எப்போதும் அனுபவித்திருக்கிற காரியங்களுக்காக நான் கர்த்தருக்கு நன்றி கூறுகிறேன். இத்தனை ஆண்டுகளாக நீங்கள் எப்படித் தாக்குப்பிடித்தீர்கள்? உங்களால் எப்படித் தாக்குப்பிடிக்க முடிந்தது? இதை எனக்குச் சொல்லுங்கள்"

என்று கேட்டேன். "ஆ, அது கர்த்தரால்தான். கர்த்தர் இல்லாமல் அதை என்னால் ஒருபோதும் சமாளித்திருக்க முடியாது," என்று அவள் பதிலளித்தாள். அப்போது நான், "சகோதரியே, கர்த்தர் அவ்வளவு குறுகியவர் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? கணவனுடனும், ஐந்து பிள்ளைகளுடனும் வெற்றிகரமாய் வாழக் கடந்த ஆண்டுகளில் கர்த்தர் உங்களுக்கு உதவிசெய்தாரானால், இன்னும் அதிகமாக ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன் குடும்பம் நடத்துவதற்குக் கர்த்தரால் உங்களுக்கு உதவிசெய்யமுடியாதா? கர்த்தர் அவ்வளவு சிறியவரா, அவ்வளவு கட்டுப்படுத்தப்பட்டவரா?" என்று கேட்டேன். அப்போது அவள் புரிந்துகொண்டாள். "சகோதரரே, நிச்சயமாகக் கர்த்தர் எல்லையற்றவர், கர்த்தர் எல்லையற்றவர்," என்று வியந்து கூறினாள். "சகோதரியே, நல்லது! கர்த்தர் எல்லையற்றவர் என்று நீங்கள் அறிந்திருக்கும் வரை அது போதுமானது. சமாதானத்தோடு இருங்கள். உங்கள் பாரத்தையெல்லாம் அவர்மேல் வைத்து விடுங்கள். கர்த்தரை உங்கள் எல்லையற்ற உதவியாக எடுத்துக் கொள்ளுங்கள்," என்றேன்.

இன்னொரு சமயம், ஒரு சகோதரர் என்னிடம் வந்து, "சகோதரரே, என் மனைவி இப்படிப்பட்ட நபர். விஷயங்கள் மேன்மேலும் மோசமாகிவிடுமோ என்று நான் பயப்படுகிறேன். இதுவரை என்னால் தாங்கமுடிந்தது. ஆனால், இதற்குமேல் வேறெதாவது நடந்தால், அது எனக்கு அளவுக்கு மிஞ்சியதாக இருக்கும் என்று நான் பயப்படுகிறேன். எனக்கு நரம்புத்தளர்ச்சி உண்டாகிவிடும். அந்த எண்ணமே சகிக்க முடியாததாக இருக்கிறது," என்றார். அந்த சகோதரிக்குப் பதில் சொன்ன அதே விதத்தில்தான் அவருக்கும் பதில் சொன்னேன்: "சகோதரரே, கடந்த ஆண்டுகளில் உங்களால் எப்படி சமாளிக்க முடிந்தது?" "ஆ, அது கிறிஸ்துவால் மட்டுமே!" என்று அவர் வியப்புடன் கூறினார். "கர்த்தர் இந்த அளவுக்குக் குறுகியவர் என்று நீங்கள் நினைக் கிறீர்களா? பெரிய வகையில் நீங்கள் அவரை அனுபவிக்க விரும்பினால், ஒரு பெரிய கிறிஸ்துவை நீங்கள் அனுபவிக்க விரும்பினால், இதைவிட மோசமான சூழ்நிலையைச் சந்திக்கவும் நீங்கள் தயாராக இருக்கவேண்டும்," என்றேன். "ஆ, அதைப்பற்றித்தான் நான் பயப்படுகிறேன். இப்போதே வேண்டிய அளவுக்கு மோசமாக இருக்கிறது. இப்போதே அதை நிறுத்தும்படி நான் கர்த்தரிடம் கேட்கிறேன்," என்று அவர் கதறினார். "சரி, இது போதுமென்றால், இந்த அளவுக்கு மட்டுமே நீங்கள் கிறிஸ்துவை அறியமுடியும். நீங்கள் கிறிஸ்துவை அனுபவிப்பதில் வளர விரும்பினால், ஒவ்வொரு நாளும் மோசமான சூழ்நிலையைச் சந்திக்க நீங்கள் ஆயத்த மாக இருக்கவேண்டும்," என்று நான்

அவரிடம் சொன்னேன்.

ஆ, சகோதரர்களே, உங்கள் அனுபவத்தின்மூலம் நீங்கள் கிறிஸ்துவின் இடப்பரப்பையும், விரிவையும் உணர்ந்து கொள்ளலாம். உங்கள் அனுபவத்தின்மூலம் நீங்கள் கிறிஸ்துவின் விசாலத்தை உணர்ந்துகொள்ளலாம். அது எல்லையற்றது. கிறிஸ்து தம் எல்லையற்ற தன்மையில் நல்லவர்.

கிறிஸ்துவின் நன்மைக்கும், நம் நன்மைக்குமிடையேயுள்ள வித்தியாசம்

ஒருநாள் ஒரு சகோதரர் என்னிடம் வந்து, "நம் பொறுமைக்கும் அன்புக்கும், கிறிஸ்துவின் பொறுமைக்கும் அன்புக்குமிடையே யுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது எனக்குச் சற்றுக் கடினமாக இருக்கிறது. எது நம் பொறுமை? எது கிறிஸ்துவின் பொறுமை? எது நம் அன்பு? எது கிறிஸ்துவின் அன்பு?" என்று கேட்டார். இதற்கு எளிதாகப் பதில்சொல்லிவிட முடியாது. "சகோதரரே, நான் ஒருவரை என் அன்பினாலா அல்லது கிறிஸ்துவின் அன்பினாலா எந்த அன்பினால் அன்புசெய்கிறேன் என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்?" என்று தொடர்ந்து கேட்டார். நான் சிந்தித்துப் பார்த்து பின்பு அவரிடம், "நீ பிறரிடம் காட்டும் அன்பு கிறிஸ்துவின் அன்பாக இருந்தால் அது எல்லையற்றதாக இருக்கும். அது ஒருபோதும் தீர்ந்துபோகாது. நீ பிறரிடம் காட்டும் அன்பு உன் சொந்த அன்பாக இருந்தால் அது தீர்ந்துபோகும். இது நிச்சயம். அதற்கு ஓர் எல்லை உண்டு. இன்றைக்கு அவனை நேசிப்பாய், நாளைக்கு அவனை நேசிப்பாய், இந்தக் காரியங்களில் அவனை நேசிப்பாய், அந்தக் காரியங்களில் அவனை நேசிப்பாய். ஒரு நாள், அடுத்த நாள், மூன்றாவது நாள் அவனை நேசிப்பாய். இந்த மாதம், இந்த வருடம், அடுத்த வருடம் அவனை நேசிப்பாய், ஆனால் அதற்குமேல் நீ அவனை அன்புசெய்யமாட்டாய் என்கிற நேரம் வரும். இது நிச்சயம். உன் அன்பு தீர்ந்து விடும்," என்று சொன்னேன்.

மனிதனுடைய நன்மைக்கு ஓர் எல்லை உண்டு. ஆனால் கிறிஸ்துவின் நன்மை எல்லையற்றது. உங்கள் பொறுமைக்கு ஓர் எல்லை இருந்தால், அந்தப் பொறுமை கிறிஸ்து இல்லை. கிறிஸ்துவின் பொறுமையைக்கொண்டு நீங்கள் பொறுமை யாக இருந்தால், நீங்கள் எவ்வளவு அதிகமாகத் தவறாக நடத்தப்பட்டாலும் அவ்வளவு அதிகமாக நீங்கள் பொறுமையா யிருப்பீர்கள். இந்தப் பொறுமை ஒருபோதும் தீர்ந்துபோகாது. கிறிஸ்து தம் எல்லையற்றதன்மையில் நல்லவர்; கிறிஸ்து தம் விசாலத்தில் நல்லவர். எல்லாம் அவராக இருக்கும்போது அதற்கு எல்லையும் இல்லை, அதில் மாற்றமும் இல்லை.

கணவனுக்கும், மனைவிக்குமிடையே ஏற்படுகிற பிரச்சினைகளில் கொஞ்சமாவது நம்மில் பெரும்பாலோர் அனுபவித்திருக்கிறோம் அல்லது பார்த்திருக்கிறோம். தன் மனைவியை அதிகமாக நேசிப்பதுபோல் தோன்றுகிற ஒரு கணவனை நான் சில நேரங்களில் பார்த்திருக்கிறேன். இந்த மனிதன் தன் மனைவியை ஐந்து ஆண்டுகளுக்குப்பிறகு அன்புசெய்யமாட்டான் என்று என்னால் எப்போதுமே முன்னறிவிக்க முடியும்; அவனுடைய அன்பு தீர்ந்துபோய்விடும். ஆனால், கிறிஸ்துவின் அன்பு ஒருபோதும் தீர்ந்துபோகாது. நீ உன் மனைவியை கிறிஸ்துவின் அன்பினால் அன்பு செய்தால், அது எல்லையற்றதாக இருக்கும். நீ அவளை உன் சொந்த அன்பினால் அன்புசெய்தால், இன்று எவ்வளவு அதிகமாக அவளை அன்புசெய்கிறாயோ, இன்னொரு நாள் அவ்வளவு அதிகமாக அவளை வெறுப்பாய் என்று உறுதியாக நம்பலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் பிறரைக் கிறிஸ்துவின் அன்பினால் அன்புசெய்யலாம். "கர்த்தாவே, இது என் அன்பல்ல, மாறாக இது உம் அன்பு. உம் அன்பு நீரே ஆவீர். நான் உம்மைக்கொண்டு பிறரை நேசிக்கிறேன். நான் பிறரை உம்மில் நேசிக்கிறேன். நான் பிறரை உம்மூலம் நேசிக்கிறேன். கிறிஸ்துவின் அகலமும், நீளமும், உயரமும், ஆழமுமே நான் பிறரை நேசிக்கிற அன்பின் பரிமாணங்கள்," என்று நாம் சொல்லலாம்.

அந்தத் துண்டு தேசம் நல்ல தேசம். அது அதின் விசாலத்தில் நல்லது. கிறிஸ்துவுக்கு எல்லையேயில்லை. ஆ, சகோதரர்களே, நான் என்னைப்பற்றி அதிகமாகப் பேச விரும்பவில்லை. ஆனால், நாம் அனுபவிக்கிற கிறிஸ்து எல்லையற்ற கிறிஸ்து என்று என்னால் சாட்சிகூற முடியும். கடந்த முப்பது ஆண்டுகளில், எனக்குச் சம்பவித்திருக்கும் காரியங்கள் எப்போதும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. கர்த்தருடைய வேலை, சபைகள், உடன் வேலையாட்கள் ஆகியவைகளைப்பற்றிய பாரம் எப்போதும் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. பிரச்சினைகள் ஒருபோதும் குறையவேயில்லை. பாரங்கள், பாடுகள், பிரச்சினைகள், கஷ்டங்கள் ஒவ்வொருநாளும் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், பாரம் பெருகும்போது, நான் கிறிஸ் துவை அதிகமதிகமாக அனுபவித்திருக்கிறேன். கிறிஸ்து எந்த விதமான வரம்பும் இல்லாதவர் என்று நான் உணர்ந்திருக் கிறேன். கிறிஸ்துவைவிடப் பெரியது என்று சொல்லும் அளவுக்கு ஒரு பிரச்சினை ஒருபோதும் இருக்கமுடியாது. அவரால் தீர்க்கமுடியாத ஒரு சூழ்நிலை ஒருபோதும் இருக்கமுடியாது.

என்னிடத்தில் பன்னிரண்டு அங்குலம் அகலமும், பன்னிரண்டு

அங்குலம் நீளமுமுள்ள ஒரு கைக்குட்டை இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். இது அவ்வளவு தான் பெரியது. எனவே இது அவ்வளவு இடத்தை மட்டுமே மூடிமறைக்க முடியும். அந்தக் கைக்குட்டையால் முழு அறையையும் மூடமுடியாது; அதை மூடக்கூடிய அளவுக்கு இது அவ்வளவு பெரிதல்ல. ஆனால், கிறிஸ்து அளவேயில்லாத ஒரு துணியைப்போன்றவர் என்று நீங்கள் உணரவேண்டும். அவர் எவ்வளவு அகலமானவர், எவ்வளவு நீளமானவர் என்று உங்களால் சொல்லமுடியாது. வரம்பே இல்லை. அவரால் எதையும், எல்லாவற்றையும் மூடமுடியும். பிரச்சினை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் பரவாயில்லை, கிறிஸ்துவால் அதை மூடமுடியும், தீர்க்கமுடியும். கிறிஸ்து தம் எல்லையற்ற தன்மையில் நல்லவர். கிறிஸ்து தம் அகலத்திலும், நீளத்திலும், உயரத்திலும், ஆழத்திலும் நல்லவர். எல்லாச் சூழ்நிலையிலும் அனுபவிப்பதற்கும், அனுபவித்துமகிழ்வதற்கும் கிறிஸ்து நமக்கு இப்படிப்பட்ட விசாலமான தேசமாக இருக்கிறார்.

அதிகாரம் மூன்று

தேசத்தின் நன்மை—அதின் ஏற்றம்

வேத வாசிப்பு: உபா. 32:13; எசே. 20:40-42; 34:13-15; 37:22; அப். 2:32-33; எபே. 2:6; கொலோ. 3:1; பிலி. 3:10

தேசத்தின் முதல் நன்மை அதின் விசாலம் என்று நாம் பார்த்தோம். அது விசாலமாக இருப்பதால், அது நல்ல தேசம். தேசத்தின் நன்மையைப்பற்றி நாம் இப்போது இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பார்க்கவேண்டும். பூமியின் உயர்ந்த இடங்கள் இந்தத் தேசத்தில்தான் இருக்கின்றன என்று வேதத் தில் கூறப்பட்டுள்ளது: "பூமியிலுள்ள உயர்ந்த ஸ்தானங்களின்மேல் அவனை ஏறிவரப்பண்ணினார்" (உபா. 32:13). எனவே இந்தத் தேசத்தின் அடுத்த நன்மை அதின் ஏற்றம்.

உயிர்த்தெழுந்து பரமேறிய கிறிஸ்து

கானான் தேசம் ஓர் உயர்ந்த தேசம் என்று நம்மில் பெரும்பாலோருக்குத் தெரியும். கடல் மட்டத்திலிருந்து அதின் உயரம் குறைந்தது 2000 அடிமுதல் 4000 அடிவரை இருக் கிறது. அது மலைகளின் தேசம். இஸ்ரவேல் தேசம் மலைகள் நிறைந்த உயர்ந்த நாடு என்று கூறுகிற பல பத்திகள் உபாகமத்திலும், எசேக்கியேல் புத்தகத்திலும் இருக்கின்றன.

இது கிறிஸ்துவுக்குரிய எதற்கு முன்னடையாளமாயிருக்கிறது? இந்தக் கேள்விக்குப் பதில்கொடுப்பதற்கு, நாம் நம் வரைபடத்தைப் பார்க்கவேண்டும். கானான் தேசத்தின் ஒரு பக்கத்தில் பெருங்கடல் அல்லது மத்தியதரைக் கடல் இருக்கிறது. மறுபக்கத்தில் சாக்கடல் என்ற இன்னொரு கடல் இருக்கிறது. இவ்வாறு இந்தத் தேசத்தின் இரண்டு பக்கங்களிலும் கடல்கள் இருக்கின்றன. வேதத்திலுள்ள முன்னடையாளங்களின்படி கடல்கள் மரணத்தைக் குறிக்கின்றன. கிறிஸ்துவைச் சுற்றிலும் மரணத்தைத்தவிர வேறொன்றும் இல்லை என்பதே இதன் பொருள்! ஆனால், இந்த மரணத்தை விட்டு ஏதோவொன்று வெளியே எழுப்பப்பட்டது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டார்! எனவே உயர்ந்த தேசமாகிய மலைகள்மேலுள்ள தேசம், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு, பரமேறிய கிறிஸ்துவுக்கு, முன்னடையாளமாயிருக்கிறது. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டு பரலோகத்துக்கு உயர்த்தப்பட்டார். அவரே உயிர்த்தெழுந்து உன்னதத்திற்கு

ஏறிச்சென்றவர். அவரே உயர்ந்த மலை, கிறிஸ்துவே இஸ்ரவேல் மலைகள்மேலுள்ள உயர்ந்த தேசம். அவரின்றி, அவருக்கு வெளியே, மரணத்தைத்தவிர வேறொன்றும் இல்லை.

பெந்தெகொஸ்தே நாள் வந்தபோது, பேதுரு பதினொருவ ரோடுங்கூட நின்றான். அந்த நாளில் இருந்த சூழ்நிலையை நாம் சிந்தித்துப் பார்ப்போம். பேதுரு ஒரு மீனவன், ஒரு சின்ன மனிதன், ஓர் அற்பமான மனிதன், வெளித்தோற்றத்தில் எந்த மதிப்புமில்லாத மனிதன். ஆனால், இயேசு உயிர்த் தெழுந்து பரலோகங்களுக்கு ஏறிப்போனார் என்று சாட்சி பகரவும், பறைசாற்றவும், பேதுரு அந்நாளில் பதினொருவரோடுங்கூட எழுந்து நின்றபோது, இந்த அற்பமான மனிதன் இந்தப் பூமியின் மிகஉயர்ந்த அந்தஸ்தைவிட உயர்வான ஒரு நிலையில் இருந்தான். இந்தப் பூமியிலுள்ள மிகப் பெரியவர்களையும், மிக உயர்ந்தவர்களையும்கூட பேதுருவோடும், அவருடன் நின்றுகொண்டிருந்தவர்களோடும் ஒப்பிடமுடியாது. அவர்கள் ஏன் அவ்வளவு உயர்ந்தவர்கள்? அவர்களைப்போன்றவர்கள் எப்படி இவ்வளவாய் உயர்த்தப் படமுடியும்? ஏனென்றால், அவர்கள் பரமேறிச்சென்ற கிறிஸ்துவைப்பற்றிப் பேச எழுந்து நின்ற அந்தக் கணப் பொழுதில், அவர்கள் பரமேறிச்சென்ற கிறிஸ்துவில் இருந் தார்கள். அவர்கள் இந்தப் பூமியில் இருந்த மனிதர்கள் இல்லை; அவர்கள் பரலோகத்தில் இருந்த மனிதர்கள். அப்போஸ்தலர் நடபடிகளின் முதல் சில அதிகாரங்களை வாசிக்கும்போது பேதுருவும், யோவானும், அவர்களோடு இருந்தவர்களும் மலையின்மேல் இருந்த மக்கள், அதாவது பரலோகத்தில் இருந்த மக்கள், என்பதை உங்களால் உணரமுடியும். அவர்கள் இந்தப் பூமியிலுள்ள எல்லாவற்றையும் கடந்து அதற்குமேல் எழுந்துவிட்டார்கள். பிரதான ஆசாரியன், இராஜாக்கள், மக்களின் ஆட்சியாளர்கள் எல்லாரும் அவர்களுடைய பாதங்களின்கீழ் இருந்தார்கள். பரமேறிய கிறிஸ்துவினாலும், பரமேறிய கிறிஸ்துவில் இருந்ததாலும், அவர்கள் மனிதனின் மிக உயர்ந்த அந்தஸ்தையும் மிஞ்சிவிட்டார்கள். அவர்கள் அவரில் நடந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் இந்த உயர்ந்த மலையில், அதாவது இந்த உயர்ந்த தேசத்தில், வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

ஆ, சகோதர சகோதரிகளே, கிறிஸ்து விசாலமானவர் மட்டுமல்லர்; அவர் எல்லாவற்றையும்விட உயரமானவர்; அவர் மனித வரம்புகடந்த மேலானவர்!

பரமேறிய கிறிஸ்துவை அனுபவித்தல்

நம்மில் பெரும்பாலோர் கிறிஸ்துவை இப்படிக் கொஞ்ச மாவது

அனுபவித்திருப்போம் என்று நான் விசுவாசிக்கிறேன். இது என்ன அனுபவம்? என் அனுபவத்தில் சிறிதளவை உங்களுடன் பகிர்ந்துகொள்ள என்னை அனுமதியுங்கள்.

கர்த்தருடைய வேலையினிமித்தம் 1943இல் ஜப்பானிய இராணுவப் போலீஸார் என்னைச் சிறையிலடைத்தார்கள். அந்தச் சமயத்தில், சீனாவின் பெரும்பாலான பகுதியை ஜப்பானிய இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்தார்கள். நான் வேலைசெய்து கொண்டிருந்த நகரமும் அவர்களுடைய ஆக்கிரமிப்பின்கீழ்தான் இருந்தது. நான் காவலில் இருந்தபோது, சற்றேறக்குறைய ஒவ்வொரு நாள் காலையிலும், பிற்பகலிலும் என்னை வழக்கு விசாரணைக்காகக் கொண்டுசென்றார்கள். காலையில் 9முதல் 12வரையிலும், பிற்பகலில் 2:30முதல் 6வரையிலும் நான் அவர்களுக்கு முன்பாக நின்றேன். அது எவ்வளவு படுபயங்கரமான சூழ்நிலை என்று உங்களால் கற்பனைசெய்ய முடியாது. கர்த்தரைத்தவிர எனக்கு வேறு உதவியில்லை. ஜெபிப்பதைத்தவிர உதவிபெற எனக்கு வேறு வழியும் இல்லை. அவர்கள் என்னைத் தனியறையில் அடைத்தார்கள், ஏனென்றால், நான் ஏதாவது எழுதியோ, சொல்லியோ வெளியே அனுப்பிவிடுவேனோ என்று அவர்கள் பயந்தார்கள். எல்லா நேரமும் ஜெபிப்பதைத்தவிர, நான் செய்வதற்கு வேறெதுவும் இருந்ததில்லை. எவ்வளவு அதிகமாக ஜெபித்தேனோ அவ்வளவு அதிகமாக நான் பரலோகங்களில் இருந்ததைப்போல் உணர்ந்தேன் என்று என்னால் சாட்சிபகர முடியும். நான் சிறையில் இருக்கவில்லை; நான் பரலோகங்களில் இருந்தேன். வழக்கு விசாரணைக்காக நான் அதிகாரிகளுக்குமுன்பாகக் கொண்டுவரப்பட்டபோது, அவர்களைவிட நான் உயர்த்தில் இருந்ததாகவே உணர்ந்தேன். நான் அவர்களுக்குகீழே இருக்கவில்லை. நான் அவர்களுக்கு மேலே இருந்தேன். ஏன்? ஏனென்றால், நான் பரமேறியவருக்குள் இருந்தேன். சிறைச்சாலை எனக்கு ஒரு பொருட்டாக இருக்கவில்லை. கிறிஸ்துவே எனக்கு எல்லாமுமாக இருந்தார். சகோதர சகோதரிகளே, அவர்களுடைய எல்லாப் பயமுறுத்தல்களின் மத்தியிலும் நான் பரலோகங்களில் வாழ்ந்து கொண்டிருந்தேன்.

மூன்று வாரங்கள் என்னை இப்படி நடத்தியபின்பு, அவர்களால் என்னிடத்தில் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. நான் ஒரு மூடநம்பிக்கையுள்ள மனிதன் என்பதுதான் அவர்களுடைய ஒரே தீர்ப்பு. "திரு.லீ, நீ தேவனைப்பற்றிப் பித்துப்பிடித்தவன்," என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு நாள், என்னைப் பரியாசம்பண்ணுவதற்காக அவர்கள் என்னைச் சிறையிலிருந்து வெளியே அழைத்தார்கள். "தேவனா அல்லது தேசமா? எது அதிக முக்கியம்? எங்களுக்குச் சொல்," என்று

அவர்கள் வேண்டுமென்றே கேட்டார்கள். எனக்கு அவர்களுடைய சூழ்ச்சிகள் தெரியும். தேசம்தான் அதிக முக்கியம் என்று சொன்னால், அவர்கள் என்னை அதற்குமேலும் ஒரு மூடநம்பிக்கையுள்ள நபர் என்று தீர்க்காமல், ஒரு தேசபக்தியுள்ள நபர் என்று தீர்ப்பார்கள். நான் தேசபக்தியுள்ளவனா இல்லையா, நான் தேசத்தின்மேல் அக்கறையுள்ளவனா இல்லையா, என்பதைத் தீர்மானிக்கவே அவர்கள் உத்தேசித்திருந்தார்கள். நான் தயங்கினேன். "சீக்கிரம் சொல். சீக்கிரம், சீக்கிரம்," என்று அவர்கள் அதிகாரத்துடன் கோரினார்கள். எவ்வளவு அதிகமாக அவர்கள் "சீக்கிரம்" என்று சொன்னார்களோ, அவ்வளவு அதிகமாக நான் தயங்கினேன். கடைசியாக நான் அவர்களிடம், "எனக்கு தேவன் தான் முதலிடம்," என்று சொன்னேன். பின்பு அவர்கள், "நல்லது, இன்று தேவன் உனக்கு ரொட்டி தரட்டும். நாங்கள் இனிமேல் சிறையில் உனக்கு உணவு தரமாட்டோம்," என்றார்கள். இது இன்னொரு வகையான பயமுறுத்தல். நான் அவர்களைப் பார்த்து சும்மா சிரித்துவிட்டு, என் அறைக்குத் திரும்பிச்சென்றேன்.

இந்த நிகழ்ச்சிக்குப்பின்பு விரைவில் ஒரு கிரேக்க வாலிபன் கைதுசெய்யப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டான். இந்த மனிதனுக்கு நகரத்தில் உறவினர்களே இல்லையென்பதால், என்னிடமிருந்து எந்தத் தகவலையும் அவனால் கொண்டுபோக முடியாது; எனவே எங்கள் இருவரையும் ஒரே அறையில் அடைப்பது பாதுகாப்பாக இருக்கும் என்று இராணுவப் போலீஸார் கருதினார்கள். பகல் உணவு சாப்பிடும் நேரம் வந்தபோது, உணவு பரிமாறுகிற ஜப்பானியப் போர்வீரன் என் தனிஅறைக்கு வந்தான். அவனுக்கு சீனமொழி பேசத் தெரியாது. எனவே அவன் என் கவனத்தைக் கவர்ந்து, தன் விரலைப் பரிகாசத்துடன் பல தடவை மேல்நோக்கிக் குத்திக்காட்டினான். அதின் பொருள் என்னவென்றால், அவன் எனக்கு எதுவும் தரமாட்டானாம். தேவனே என்னைப் போஷிக்க வேண்டுமாம். அவன் சில ரொட்டித் துண்டுகளை அந்த கிரேக்க வாலிபனுக்குக் கொடுத்துவிட்டு, எனக்கு ஒன்றுமே கொடுக்காமல் சென்றுவிட்டான். அவன் போன பிறகு, கிரேக்க வாலிபன் என்னுடன் பேசி, என் சூழ்நிலையைப்பற்றி விசாரித்தான். எனவே அவனிடத்தில் என் கதையைச் சொன்னேன். அப்போது அவன், "திரு.லீ, நான் இந்த உணவைச் சாப்பிடமாட்டேன். நீங்கள் இதைச் சாப்பிடுங்கள்," என்றான். "ஆனால் இது உன் பங்கு," என்று நான் பதிலுரைத்தேன். "நீங்கள் கிறிஸ்துவுக்காகத் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள். நான் ஏன் உங்களுடைய துன்பத்தைப் பகிர்ந்துகொள்ளக் கூடாது?" என்று அவன் சொன்னான். எனவே ரொட்டியைச் சாப்பிடவும், பாலைக் குடிக்கவும் அவன் என்னைக் கட்டாயப்படுத்தினான்.

அடுத்த நாள், மறுபடியும் என்னைப் பரியாசம்பண்ண அவர்கள் என்னைச் சிறையிலிருந்து வெளியே கொண்டுவந்தார்கள். "உன் தேவன் உனக்கு வேண்டிய ஆகாரத்தை அளித்தாரா?" "ஆம்" என்று நான் கூறினேன். என்னிடத்தில் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. நான் தேவனைத் தவிர வேறொன்றைப் பற்றியும் கவலைப்படாத மூட நம்பிக்கையுள்ள ஒரு மனிதன் என்று அவர்கள் நினைத்தார்கள். பின்பு அவர்கள், "நல்லது. உன் முடியை வெட்ட ஒரு நாவிதனை அழைப்போம், உணவு விடுதியிலிருந்து உனக்குக் கொஞ்சம் நல்ல உணவைக் கொண்டு வருவோம்," என்றார்கள்.

இது எப்படிப்பட்ட அனுபவம் என்று நீங்கள் உணர்கிறீர்களா? இது பரமேறிய கிறிஸ்துவை அனுபவிப்பதாகும். நாம் பரமேறிய வருக்குள் இருக்கிறோம். நாம் அவரை அனுபவிக்கும்போது, நாமும் பரமேறினவர்களாக இருக்கிறோம். நாம் மனித வரம்புக்கு மேம்பட்டிருக்கிறோம். எல்லாம் நம் பாதங்களின்கீழ் இருக்கிறது.

நான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாக்கப்பட்டக் கொஞ்ச காலத்தில் காசநோயால் பாதிக்கப்பட்டு, கடுமையாய்ச் சுகவீன மடைந்தேன். முழு ஓய்வுக்காக ஆறு மாதங்கள் படுத்த படுக்கையாய்க் கிடந்தேன். அதைத் தொடர்ந்து இரண்டரை ஆண்டுகளாக, மீட்டுத்திருப்புதலுக்காக மிகக் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கொஞ்சமாகவே வேலை செய்யமுடிந்தது. மனந்திறந்து சொல்லவேண்டுமானால், அந்த நாட்கள் உண்மையாகவே இருண்ட நாட்கள். ஆனால் நான் எப்போதெல்லாம் ஜெபித்தேனோ, அப்போதெல்லாம் படுக்கையில் இல்லை, பரலோகங்களில் இருந்ததைப்போலவே உணர்ந்தேன் என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். நான் மிகக்கடுமையாய் நோய்வாய்ப் பட்டிருந்துங்கூட ஜெபித்தபோது, சுகவீனத்தில் இல்லை, மாறாக மிக மேலான பரலோகங்களில் இருந்தேன் என்ற உணர்வு என்னிடம் இருந்தது. அந்நாட்களில் நான் கர்த்தருக்குள் எப்பேர்ப்பட்ட இன்பத்தை அனுபவித்தேன் என்று உங்களுக்குத் தெரியாது. சிறைவாசமும், உபத்திரவமும், பின்பு வறுமையும், வியாதியும். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், பரமேறிய கிறிஸ்து என் வழியாக இருந்தார்! மனித வரம்புக்கு மேம்பட்ட கிறிஸ்து பரலோகங்களுக்கு என் வழியாக இருந்தார்.

சகோதர சகோதரிகளே, நாம் எப்படி பரலோகங்களில் இருக்கமுடியும்? கிறிஸ்துவுக்குள் இருப்பதின்மூலம். கிறிஸ்து பரமேறிச் சென்றிருக்கிறார். இப்போது கிறிஸ்துவே இப் பிரபஞ்சத்திலுள்ள உயர்ந்த மலை. அவரே உயர்ந்த தேசம். பரமேறிய கிறிஸ்துவை அனுபவிப்பதின் பொருள் என்ன வென்று உங்களில் பெரும்பாலோர் இப்போது புரிந்துகொள்கிறீர்கள் என்று

நான் விசுவாசிக்கிறேன்.

நான் வாலிபனாக இருந்தபோதே கர்த்தருக்கு ஊழியம்செய்ய முன்வந்தேன். அவருடைய இறையாண்மையின் முன்னேற்பாட்டின்படி, அவர் என்னை இரண்டு அல்லது மூன்று மூத்த உடன்-வேலையாட்களுடன் ஒன்றாக வைத்ததற்காக நான் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். சகோதரர் வாட்ச்மேன் நீ அவர்களில் ஒருவர். அவரிடமிருந்து நான் அதிகமான உதவியைப் பெற்றுக்கொண்டேன். ஒருநாள் நான் ஒரு சகோதரியுடன் ஐக்கியங்கொள்ளும்போது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவர் எப்படி அனுபவித்திருந்தார் என்று என்னிடம் சொன்னார். அப்போது, சுமார் முப்பது ஆண்டு களுக்குமுன்பு, நான் ஒரு வாலிபன். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்கும் அவருடைய பரமேறுதலுக்கும் நமக்கும் என்ன சம்பந்தம் என்று எனக்குப் புரியவில்லை. உபதேசரீதியில் பேசுவதென்றால், உயிர்த்தெழுதலைப்பற்றியும், பரமேறுதலைப்பற்றியும் நான் எல்லாவற்றையும் அறிந்திருந்தேன். ஆனால், அனுபவரீதியில் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் நான் அறியவில்லை. கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குரிய அநேக அனுபவங்களை அந்தச் சகோதரி பெற்றிருந்ததாக அவர் என்னிடம் சொன்னார். அவர் சொன்னார்: "சகோதரர் லீ, ஒரு நாள் நான் ஒரு பிரச்சினையைச் சந்தித்தேன். எனக்கு ஏன் இத்தகைய பிரச்சினை இருக்கவேண்டும் என்பதற்குக் காரணமே இல்லை. ஆயினும், அது எனக்கு வந்தது. நான் கர்த்தரிடத்தில் சென்றேன், ஜெபித்தேன். 'கர்த்தாவே, இதற்குக் காரணம் என்ன?' என்று ஜெபித்தேன். 'என் உயிர்த்தெழுதலின் வல்லமையை நீ அறியும்படிக்கு' என்று கர்த்தர் பதிலுரைத்தார்." அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமைக்குரிய ஒன்றை அவர் கற்றுக் கொண்டதாக என்னிடம் சொன்னார். அந்த அழுத்தங்கள், அந்தப் பிரச்சினைகள், அந்தக் கடுந்துன்பங்கள் ஆகிய வைகளின் விளைவாக கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் சத்துவத்தின் வல்லமைக்குரிய ஒன்றை அவர் கற்றுக்கொண்டார். எதுவும் அவரை நசுக்கவோ அல்லது சோர்வுறச் செய்யவோ முடியவில்லை. எவ்வளவு அதிகமாகப் பிரச்சினை இருந்ததோ, அவ்வளவு அதிகமாக அவர் விடுதலைபெற்றவராக இருந்தார். கொஞ்சக் காலத்திற்குப்பிறகு அதைவிடக் கடுமையான பிரச்சினை அவருக்கு வந்ததாக அவர் என்னிடம் சொன்னார். அவர் மறுபடியும் கர்த்தரிடத்தில் சென்று, "கர்த்தாவே, இது என்ன?" என்றார். மறுபடியும் கர்த்தர் அவருக்கு, "இது என் உயிர்த்தெழுதலின் வல்லமையை நீ அறிந்துகொள்வதற்காகத்தான்," என்று பதில்கொடுத்தார்.

ஆ, நான் அவருடைய சாட்சியைக் கேட்டுக்கொண்டிருந்த போது, நாங்கள் இருவருமே பரலோகங்களில் இருந்ததுபோல் நான் உணர்ந்தேன். அவர் மட்டும் அங்கு இருக்கவில்லை, நானும் அவருடன் அங்கே இருந்தேன். இதுவே பரமேறிய கிறிஸ்துவை அனுபவிப்பதாகும். நாங்கள் சகல வரம்பையும் கடந்துவிட்டோம், சகமும் எங்கள் பாதங்களின்கீழ் இருந்தது. எதுவும் எங்களை மனங்குன்றச் செய்யமுடியாது.

பரமேறிய கிறிஸ்துவைப் பிரயோகித்தல்

"நான் மிகவும் மனங்குன்றிப்போயிருக்கிறேன்," என்று நீங்கள் சிலவேளைகளில் சொல்கிறீர்கள். அதின் பொருள் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் மரணத்தின் வல்லமையின்கீழ் இருக்கிறீர்கள் என்பதுதான் அதின் பொருள். ஆவியில் அல்லது இருதயத்தில் குன்றிப்போயிருப்பதாக நீங்கள் உணரும்போ தெல்லாம் நீங்கள் மரணத்தின் பயமுறுத்தலின்கீழ் இருக்கிறீர்கள், அந்தகாரத்தின் வல்லமையின்கீழ் இருக்கிறீர்கள் என்பதே அதின் பொருள். கிறிஸ்துவை, பரமேறிய கிறிஸ்துவை, உங்கள் சூழ்நிலைக்கு எப்படிப் பிரயோகிக்க வேண்டும் என்று நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் கிறிஸ்துவை உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டும். "எந்த வகையான சூழ்நிலையும் என்னை மனங்குன்றிப்போகச்செய்ய நான் அனுமதிக்கமாட்டேன். நான் பரமேறிய கிறிஸ்துவை உடையவன். நான் பரமேறிய கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன்," என்று நீங்கள் சொல்லவேண்டும். நீங்கள் கர்த்தரிடம் செல்லவேண்டும்; அவரைத் தொடர்புகொள்ள வேண்டும். நீங்கள் அவரைத் தொடர்புகொள்ளும்போது, நீங்கள் உயிர்த்தெழுவீர்கள், பரமேறிச்சென்றுவிடுவீர்கள். ஏனென்றால், நீங்கள் தொடர்புகொள்ளும் கிறிஸ்து பரலோகங்களுக்கு ஏறிச்சென்ற கிறிஸ்து. நீங்கள் அவரைத் தொடர்புகொள்ளும்போது, பள்ளத்தாக்குகளில் இல்லை, மாறாக உயர்ந்த மலைகளில் இருப்பீர்கள். நீங்கள் கடல் மட்டத்திற்கும்மேல் மிக உயரத்திலுள்ள உன்னத தேசத்தில் இருப்பீர்கள். பிரச்சினை என்னவென்றால், நீங்கள் மனங்குன்றிப்போயிருப்பதைப்போல உணரும்போ தெல்லாம் கிறிஸ்துவை மறந்துவிடுகிறீர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறிச்சென்றிருக்கிற இப்படிப்பட்ட ஒரு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்பதை நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். நீங்கள் அவரைப் பிரயோகிப்பதில்லை. நீங்கள் அவரிடத்தில் வருகிறதில்லை. நீங்கள் அவரைத் தொடர்பு கொள்ளுகிறதில்லை.

பலவேளைகளில், கலக்கம் நிறைந்த மனங்களுடன் சகோதரர்கள் என்னிடத்தில் வந்திருக்கிறார்கள். ஒரு சமயம், ஒரு

சகோதரன் இப்படிப்பட்ட நிலைமையில் என்னிடம் வந்தான். அவனுடன் கொஞ்ச நேரம் பேசியபிறகு, "சகோதரனே, நாம் முழங்கால்படியிட்டு ஜெபிப்போம்," என்றேன். "சகோதரர் லீ, என்னால் ஜெபிக்கமுடியாது; என் மனம் பிரச்சினையினால் நிரம்பியிருக்கிறது," என்று அவன் மறுமொழி கொடுத்தான். சிலவேளைகளில் நீங்களும் இந்த சகோதரனைப்போலவே இருக்கிறீர்களோவென்று நான் பயப்படுகிறேன். அவனை ஜெபிக்கச் செய்வது மிகக் கடினமாக இருந்தது. இப்படிப்பட்ட ஒரு சகோதரனை நீங்கள் எதிர்கொள்ளும்போது உண்மையாகவே உங்களுக்குப் பலம் தேவைப்படுகிறது. சில வேளைகளில் நீங்கள் அவனால் பாதிக்கப்பட்டுவிடுவீர்கள். அவனால் ஜெபிக்க முடியாததால், நீங்களும் அவனால் அதிகமாகச் சோர்வடைந்து உங்களாலும் ஜெபிக்கமுடியாமல் போகும். நீங்கள் எழுந்து நின்று, "சகோதரனே நாம் என்ன செய்வோம்?" என்பீர்கள். அவன் என்ன செய்யவேண்டும் என்று உங்களைக் கேட்க வந்திருக்கிறான். ஆனால், அதே கேள்வியை நீங்கள் அவனிடத்தில் திரும்பக் கேட்கிறீர்கள். கிறிஸ்துவைத்தவிர வேறு வழியே இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையைச் சந்திக்கும்போ தெல்லாம் என் ஆவியை இயக்குவதற்கும், என் விசுவாசத்தைப் பயிற்சி செய்வதற்கும் நான் கற்றிருக்கிறேன். "கர்த்தாவே, நீர் இங்கு இருக்கிறீர்; இந்த வகையான சூழ்நிலையை நான் அனுமதிக்க வில்லை. எதிரியைக் கட்டும்! பலவானைக் கட்டும்! இந்தச் சகோதரனை விடுதலையாக்கும்! அவன் மனதை விடுவியும்! அவனை ஜெபிக்கச் செய்யும்," என்று நான் கூறுகிறேன். நாம் போராடி ஜெபிக்கவேண்டும். நாம் போராடவேண்டும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! பரமேறிய கிறிஸ்துவைத் தொடர்புகொள்வதற்காக நீங்கள் இப்படிப்பட்ட ஜெபத்தை ஜெபிக்கும்போதெல்லாம், நீங்கள் பிறருடைய ஆவியை விடுதலையாக்குவீர்கள். நீங்கள் அவர்களைப் பரலோகங்களுக்குக் கொண்டுவருவீர்கள். இப்படிப்பட்ட ஜெபம் அநேக மக்களை விடுதலையாக்கி யிருக்கிறது. "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், ஸ்தோத் திரிக்கிறேன். நான் விடுதலையாகிவிட்டேன்!" என்று அவர்கள் கண்ணீரோடே ஜெபிக்கக்கூடும்.

சகோதர சகோதரிகளே, உங்களுக்குள் நடைபெறும் யுத்தத்தை உங்களால் எப்படிப் போராடமுடியும்? அதை நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஒரேவொரு வழிதான் உண்டு. அந்த வழி பரமேறிய கிறிஸ்துவுக்குள் நாம் இருப்பதே. பரலோகங்களில் இந்தப் பரமேறிய கிறிஸ்துவுடனே இருப்பதால், நீங்கள் எதிரிக்கு விரோதமாகப் போராடலாம்; எதிரி உங்களுடைய பாதங்களுக்குக் கீழே இருப்பான். நீங்கள் சாத்தானால் மனங்குன்றிப்போகும்போது,

நீங்கள் அவனு டைய பாதங்களின்கீழ் போடப்பட்டிருக்கும்போது, அவனுக்கு விரோதமாக எப்படிப் போராடமுடியும்? நீங்கள் பரமேறிய கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள் என்று உணர்ந்துகொள்ள வேண்டும். நீங்கள் கிறிஸ்துவுக்குள் பரலோகங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறீர்கள்.

எசேக்கியேல் 34:13-15ல் நமக்குக் கூறப்பட் டிருக்கிறதற்குச் செவிகொடுப்போம்:

> "அவைகளை ஜனங்களிடத்திலிருந்து புறப்படவும், தேசங்களிலிருந்து சேரவும் பண்ணி, அவைகளுடைய சுய தேசத்திலே அவைகளைக் கொண்டுவந்து, இஸ்ரவேல் மலைகளின்மேலும், ஆறுகள் அண்டை யிலும், தேசத்தின் சகல வாசஸ்தலங்களிலும் அவை களை மேய்ப்பேன். அவைகளை நல்ல மேய்ச்சலிலே மேய்ப்பேன்; இஸ்ரவேலுடைய உயர்ந்த மலைகளில் அவைகளுடைய தொழுவம் இருக்கும்; அங்கே அவைகள் நல்ல தொழுவத்தில் படுத்துக்கொள்ளும், இஸ்ரவேலின் மலைகளின்மேல் நல்ல மேய்ச்சலை மேயும். என் ஆடுகளை நான் மேய்த்து, அவைகளை நான் மடக்குவேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்."

உயர்ந்த தேசத்தில், இஸ்ரவேல் மலைகளின்மேல், கர்த்தருடைய மக்கள் ஆறுகளை அனுபவித்துமகிழ்ந்தார்கள். ஆறுகள் பரிசுத்த ஆவியாகிய நீரோடைகளை, பரிசுத்த ஆவியாகிய ஜீவத் தண்ணீரை, குறிக்கின்றன. பரமேறிய கிறிஸ்துவுக்குள் ஜீவத் தண்ணீருள்ள நதிகள் உங்களுக்குள் பாய்ந்தோடுவதை நீங்கள் உணர்வீர்கள். சில வேளைகளில் உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆவியிலும் நீங்கள் வறட்சியை உணர்கிறீர்கள். பரமேறிய கிறிஸ்துவை நீங்கள் பிரயோகிக்காததே இதற்குக் காரணம். பரமேறிய கிறிஸ்துவை உங்கள் சூழ்நிலைக்குப் பிரயோகிப்பதற்கு உங்கள் விசுவாசத் தையும், உங்கள் ஆவியையும் இயக்கும்போது நீங்கள் உங்களுக்குள் ஒரு ஜீவநதியை உடனடியாக உணர்வீர்கள்.

இஸ்ரவேல் மக்களுக்கு மலைகளின்மேலே மேய்வதற்கு நல்ல மேய்ச்சல், கொழுத்த மேய்ச்சல், உண்டாயிருக்கும் என்றும் கூறப் பட்டுள்ளது. இது என்ன? இதுவே ஜீவ கிறிஸ்து. மேய்ச்சல் ஜீவன் நிரம்பியுள்ள கிறிஸ்துவைக் குறிக்கிறது. நீங்கள் திருப்தியடைவீர்கள். நீங்கள் ஒருபோதும் பசியாயிருக்கமட்டீர்கள். நீங்கள் ஆவியில் பசியாயிருப்பது போல உணரும்போதெல்லாம், கிறிஸ்துவைப் பரமேறியவராக நீங்கள் அனுபவிக்கவில்லை என்பதுதான் அதின் பொருள். இப்படிப்பட்ட கிறிஸ்துவை நீங்கள் உங்கள் சூழ்நிலைக்குப் பிரயோகித்தால், உடனே

திருப்தியாவீர்கள். மேய்வதற்கு உங்களிடத்தில் ஏதாவது கொஞ்சம் இருக்கும். கிறிஸ்துவாகிய மேய்ச்சலின் ஐசுவரியங்கள் உங்கள் நிரப்பீடாக உங்களுக்கு இருக்கும்.

இதுமன்றி, இந்த உயர்ந்த தேசத்தில், மந்தைகளுடன் படுத்துக்கொள்ள உங்களுக்கு இடம் உண்டு. இது இளைப்பாறுதல். நீங்கள் இளைப்பாறுதலின்றி இருக்கிறீர்களா? பரமேறிய கிறிஸ்துவைத் தொடர்புகொண்டு அவரைப் பிரயோகியுங்கள். இஸ்ரவேலின் மலைகளின்மேல் நீங்கள் இளைப்பாறுதலைக் காண்பீர்கள்.

உங்களுக்கு ஜீவத் தண்ணீர் இருக்கும். உங்களுக்குக் கொழுத்த மேய்ச்சல் இருக்கும். நீங்கள் படுத்துக்கொள்ள நல்ல தொழுவமும் இருக்கும். உங்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டக்கூடிய பானம் இருக்கும். உங்களுக்கு வலுவூட்டும் ஆகாரம் இருக்கும், உங்களுக்கு இளைப்பாறுதல் இருக்கும். இன்னொரு காரியமும் உண்டு, கர்த்தர்தாமே உங்கள் மேய்ப்பராக இருப்பார். இவையனைத்தையும் பரமேறிய கிறிஸ்துவுக்குள் அனுபவிக்கலாம். உங்களுடைய எல்லாச் சூழ்நிலைகளுக்கும் கிறிஸ்துவைப் பிரயோகிக்க நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் பயன்படுத்தினால், இந்தக் காரியங் களையெல்லாம் நீங்கள் அனுபவித்துமகிழ்வீர்கள். கர்த்தரை வெறும் அறிவிலும் அல்லது உபதேசத்திலும் மட்டும் இல்லை, உங்கள் அனுதின வாழ்வில், மிக நடைமுறைக்குரிய முறையில், நீங்கள் அனுபவிப்பீர்கள்.

அல்லாமலும், இஸ்ரவேல் மலைகளின் உயர்ந்த இடங் களில் கர்த்தர் தம் மக்களை சுகந்த வாசனையாக ஏற்றுக்கொள்வார் என்றும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் அங்கு கர்த்தரை சேவிப்பார்கள். கர்த்தர் அவர்களுடன் இருப்பார். அவர்கள் தங்கள் காணிக்கைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவார்கள், கர்த்தர் அவைகளை ஏற்றுக்கொள்வார்.

> "இஸ்ரவேலின் உயரமான மலையாகிய என் பரிசுத்த மலையிலே இஸ்ரவேலுடைய எல்லா வம்சத்தாருமாகிய தேசத்திலுள்ள அனைவரும் என்னைச் சேவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அங்கே அவர்கள்மேல் பிரியம் வைப்பேன். அங்கு நீங்கள் பரிசுத்தம்பண்ணுகிற எல்லாவற்றிலும் உங்கள் காணிக்கைகளையும் உங்கள் முதற்பலன்களையும் செலுத்தும்படி கேட்பேன். நான் உங்களை ஜனங்களிலிருந்து புறப்படப்பண்ணி நீங்கள் சிதறுண் டிருக்கிற தேசங்களிலிருந்து உங்களைச் சேர்த்துக் கொள்ளும்போது, சுகந்த வாசனையினிமித்தம் நான் உங்கள்பேரில் பிரியமாயிருப்பேன்; அப்பொழுது

புறஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உங்களால் பரிசுத்தம்பண்ணப்படுவேன். உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசமாகிய இஸ்ரவேல் தேசத்திலே நான் உங்களைத் திரும்பி வரப்பண்ணும்போது நான் கர்த்தர் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள்" (எசே. 20:40-42).

கிறிஸ்துவைப் பரமேறியவராக அனுபவிப்பதின்மூலம் கர்த்தரைச் சேவிக்க நாம் பலப்படுத்தப்படுவோம் என்பதே இதன் பொருள். அப்போது கர்த்தர் நம்மை ஏற்றுக்கொள்வார். நாம் அவருடன் மேன்மையான ஐக்கியம்கொண்டிருப்போம். இவைகளனைத்தும் நாம் பரமேறிய கிறிஸ்துவை அனுபவிப்பதையே சார்ந்திருக்கிறது.

பரமேறிய கிறிஸ்துவுக்குள் சேவித்தல்

"சகோதரரே, கர்த்தரை சேவிப்பது சுலபமா அல்லது கடினமா? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்ற கேள்வியை அநேகமுறை மக்கள் என்னிடம் திரும்பத் திரும்பக் கேட்டிருக் கிறார்கள். நான் எப்போதும் இப்படித்தான் பதில்சொல்கிறேன்: "அது உங்களுக்குள்ளா, கிறிஸ்துவுக்குள்ளா, யாருக்குள் நீங்கள் கர்த்தரைச் சேவிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. நீங்கள் உங்களுக்குள் கர்த்தரைச் சேவித்தால், அது மிகவும் கஷ்டம். நீங்கள் கிறிஸ்துவுக்குள் கர்த்தரைச் சேவித்தால் அது மிகவும் சுலபம். கிறிஸ்துவுக்குள் உங்கள் கிரியையின் பிரயாசம்கூட உங்களுக்கு இளைப்பாறுதலின் படுக்கையாக இருக்கும். நீங்கள் கர்த்தருடைய வேலையில் எவ்வளவு அதிகமாகப் பிரயாசப் படுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாகக் கர்த்தருடைய இளைப் பாறுதலையும் அனுபவித்துமகிழ்வீர்கள்."

"கர்த்தருக்காக நீ செய்யும் வேலை ஒரு பாரமாக இருப்பதாக நீ உணரும்போது, 'அதைக் கீழே வைத்து, என் படுக்கையாக அதின்மேல் படுத்துக்கொள்வேன்' என்று நீ கர்த்தரிடம் சொல்லவேண்டும்," என்று சகோதரர் வாட்ச்மேன் நீ எனக்குக் கூறினார். இது உங்களுக்குப் புரிகிறதா? கர்த்தரைப் பரமேறிய கிறிஸ்துவுக்குள் சேவிப்பது என்பது ஒருவகையான இளைப்பாறுதலேயன்றி வேறொன்றுமில்லை. எவ்வளவு அதிகமாகப் பிரயாசப்படுகிறாயோ, அவ்வளவு அதிகமாக நீ இளைப்பாறுகிறாய். பரமேறிய கிறிஸ்துவே இந்த வித்தியாசத்தை உண்டாக்குகிறார்.

1958-ல் நான் டென்மார்க்குக்குச் சென்றேன்; அப்போது அங்கு ஒரு சகோதரரைச் சந்தித்தேன்; அவர் முழுநேர ஊழியக்காரர்.

கர்த்தருக்கு ஊழியம்செய்வதைப்பற்றி அவர் அதிகமாகக் கற்றிருந்தார். நான் அங்கிருந்தபோது, அவருடைய மாநாட்டில் தொடர்ச்சியாகச் செய்திகள் கொடுக்கும்படி அவர் என்னைக் கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், அவர் என்னிடம் வந்து, "சகோதரர் லீ, நீங்கள் கவலைப்படுகிறீர்களா?" என்று கேட்டார். நான், "சகோதரரே நீங்கள் ஏன் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்கிறீர்கள்?" என்றேன். அவர், "நீங்கள் ஒரு பெரிய பாரத்தைச் சுமக்கிறீர்கள் என்று நான் நினைக்கிறேன். கிழக்கத்திய நாடுகளில் நடைபெறும் கர்த்தருடைய வேலையைப்பற்றிய மிகுந்த கரிசனை உங்களுக்கு உண்டு. உங்களிடம் அநேக உடன் வேலையாட்கள் இருக்கிறார்கள், அநேக சபைகள் இருக்கின்றன. இது ஒரு பெரிய வேலை. இதனுடன் தொடர்புடைய அநேகப் பிரச்சினைகள் இருக்கும்! நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்படுகிறீர்களா, இல்லையா என்று அறிய ஆசைப்படுகிறேன்," என்று பதிலுரைத்தார். "சகோதரரே, என் முகத்தை உற்றுப் பாருங்கள். அதைப் பார்த்தால், நான் கவலைப்படுவதுபோல் தோன்றுகிறதா?" என்று நான் அவரிடம் கேட்டேன். "அதனால் தானே நான் உங்களிடம் கேட்டேன். உங்களுக்கு அநேக பாரங்கள், உபத்திரவங்கள், பிரச்சினைகள் இருக்கும் என்றும், எல்லா நேரமும் நீங்கள் அவைகளைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்கள் என்றும் நான் நினைத்தேன். ஆனால், உங்கள் முகத்தைப் பார்க்கும்போது, அதின் அறிகுறியே அங்கு இல்லை. நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதவர் போலத் தோன்றுகிறீர்கள்," என்று அவர் விடையளித்தார். "சகோதரரே, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நான் ஒருபோதும் கவலைப்படுகிறதில்லை. இது முற்றிலும் கிறிஸ்துவால்தான். நான் பரலோகத்துக்கு ஏறிச்சென்றிருக்கிற கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன். எப்படிக் கவலைப்படுவது என்று எனக்குத் தெரியாது, அவரை எப்படித் துதிப்பது என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்," என்று நான் அவரிடம் கூறினேன்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம்! நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன்! கிறிஸ்துவே என் உயர்ந்த தேசம்! நான் இந்தத் தேசத்தில் வாழ்ந்துகொண் டிருக்கிறேன்! நான் இந்த உயர்ந்த தேசத்தில் நடந்து கொண்டிருக்கிறேன்! என் உபத்திரவங்களெல்லாம், என் பிரச்சினைகளெல்லாம், என் கஷ்டங்களெல்லாம், என் பாரங்க ளெல்லாம், என் பாதங்களின்கீழ் இருக்கின்றன. அவை என் இருக்கையாகிவிட்டன. என் எல்லாக் கஷ்டங்களின் மத்தி யிலும் என்னால் இளைப்பாறமுடியும். எல்லாப் பிரச்சினைகள் மத்தியிலும் என்னால் இளைப்பாறமுடியும். எவ்வளவு அதிகமாக எனக்குப் பிரச்சினைகள் இருக்கிறதோ,

அவ்வளவு அதிகமாக நான் பரமேறிய கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்கிறேன். இதுவே கிறிஸ்துவை அனுபவிக்கும் அனுபவம்.

நீங்களும்கூட இந்த அனுபவத்தைப் பெறமுடியும்; இப்போதே பெறமுடியும்; இப்போது பெற்றிருக்கிறீர்கள்; கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார், நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள். ஆனால், உங்களிடம் கிறிஸ்து இருக்கிறார் என்பதை நீங்கள் பலவேளைகளில் மறந்துவிடுகிறீர்கள் என்று நான் வருத்தத்தோடு சொல்கிறேன். நீங்கள் அப்படியே அவரை மறந்துவிடுகிறீர்கள். உங்கள் சூழ்நிலைக்கு நீங்கள் கிறிஸ்துவைப் பிரயோகிப்பதில்லை. நான் ஒருவித விசேஷமான அல்லது நூதனமான நபர் என்று தயவுசெய்து எண்ணிவிடாதீர்கள். நான் மிகவும் சாதாரணமானவன். நான் உங்களைப்போலவே ஒரு சாதாரணமானவன், பலவீனன், ஆனால் என்னிடம் இரகசியம் இருக்கிறது. நான் பிரச் சினைகளைச் சந்திக்கும்போதெல்லாம், "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உம்மை அனுபவிப்பதற்கு இதோ எனக்கு இன்னொரு வாய்ப்பு இருக்கிறது," என்று நான் சொல்கிறேன்.

கிறிஸ்துவை உங்கள் சூழ்நிலைக்குப் பிரயோகியுங்கள். அப்போது கிறிஸ்துவைப் பரமேறியவராக நீங்கள் அனுபவிப் பீர்கள். நீங்களும் அவரோடேகூட பரமேறினவர்கள் என்று அறிந்துகொள்வீர்கள். கிறிஸ்துவுக்குள் நீங்கள் பரலோகங்களுக்கு ஏறிச்சென்றிருக்கிறீர்கள். சகோதர சகோதரிகளே, அவர் எப்பேர்ப்பட்ட இரட்சகராக இருக்கிறார்! அவர் நமக்கு எப்பேர்ப்பட்ட கிறிஸ்துவாக இருக்கிறார்! என்னே இரட்சிப்பு! என்னே விடுதலை! அவர் பரலோகங்களுக்கு ஏறிச்சென்றுள்ள ஜீவனுள்ள கிறிஸ்து! இந்த அளவுக்குக் கிறிஸ்துவை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவர் விசாலமான கிறிஸ்து வாகவும், பரமேறிய கிறிஸ்துவாகவும் இருப்பதற்காக நாம் அவரைத் துதிக்கவேண்டும்.

அதிகாரம் நான்கு

தேசத்தின் நன்மை—அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள்

I. தண்ணீர்

வேத வாசிப்பு: உபா. 8:7; 11:11, 12; எபே. 3:8; யோவான் 4:14; 7:37-39; 2 கொரி. 6:8-10; பிலி. 4:12, 13

நாம் தொடர்ந்து தேசத்தின் நன்மையைப் பார்ப்போம். தேசத்தில் பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. அது விசாலத்திலும், ஏற்றத்திலும் நல்லது என்று நாம் பார்த்தோம். நாம் இப்போது தேசத்தின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் என்ற மிகப்பெரிய காரியத்துக்கு வருகிறோம். தேசம் அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களில் நல்லது. அது விசாலத்தில் நல்லது; அது ஏற்றத்தில் நல்லது; அது ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களில் நல்லது.

முதன்முதலாக, அது நீர்வளம் நிறைந்த தேசம். தேசம் அதின் நீர்வளங்களில் நல்லது. நம் அனுதின வாழ்க்கைக்குத் தண்ணீர் எவ்வளவு முக்கியம் என்று நம்மெல்லாருக்கும் தெரியும். சாப்பிடாமல் நாம் அநேக நாட்கள் தாக்குப்பிடிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன். ஆனால், தண்ணீர் குடிக்காமல் நாம் ஒரு நாளைக்கூடக் கடத்தமுடியாது. சொல்லப்போனால் வேறெல்லாவற்றையும்விட தண்ணீரே நம் மிக முக்கியமான தேவை. ஒவ்வொருநாளும் நமக்குத் தண்ணீர் தேவைப்படுகிறது. குடிப்பதற்குக் கொஞ்சம் தண்ணீர் மட்டும் எனக்குத் தந்தால் போதும், மூன்று நாட்களுக்குக்கூட என்னால் சாப்பிடாமல் இருக்க முடியும். ஆனால், ஒருநாள்கூட தண்ணீர் குடிக்காமல் இருக்க முடியாது.

ஊற்றுகள், ஏரிகள், ஆறுகள்

தேசம் தண்ணீர் வளம் நிறைந்தது என்று உபாகமம் கூறுகிறது. பயன்படுத்தப்பட்டுள்ள வெவ்வேறு சொற் றொடர்களைக் கவனியுங்கள்: "அது ஆறுகளுள்ள தேசம்," அதாவது ஆறுகள் நிறைந்த தேசம். "அது ஊற்றுகளும், ஏரிகளுமுள்ள தேசம்" (8:7). ஊற்றுகளுக்கும் ஏரிகளுக்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா? அது "ஊற்றுகளும் ஆழமான தண்ணீரும் உள்ள தேசம்," என்று ஜெ. என். டார்பியின் மொழியாக்கம் கூறுகிறது. இதை நான் இப்படி விளக்கிக்

காட்டுகிறேன்: ஒரு கிணறு இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். கிணற்றில் எப்போதுமே ஊற்று இருக்கும். கீழே, அதாவது கிணற்றின் அடியில், கிணற்றுக்குத் தேவையான தண்ணீரைக் கொடுக்கிற நீரூற்று இருக்கிறது. ஊற்றிலிருந்து தண்ணீர் புறப்பட்டு கிணற்றை நிரப்புகிறது. கிணறு ஏரியாக அல்லது ஆழமான தண்ணீராகிவிடுகிறது. பிறகு இந்த ஆழமான தண்ணீரிலிருந்து ஆறு வெளியே பாய்ந்தோடுகிறது. உங்களிடம் ஊற்று, பின்பு ஏரியாகிய ஆழமான தண்ணீர், பின்பு ஆறு ஆகியவைகள் இருக்கின்றன.

ஊற்று, ஏரி, ஆறுகள். சகோதர, சகோதரிகளே, இந்த நீர்நிலைகளின் பொருள் என்ன? இதற்குப் பதில் வேண்டு மானால் உடனடியாக நாம் கர்த்தருடைய வார்த்தைக்குத் திரும்பவேண்டும். அவர் கொடுக்கும் தண்ணீர் நமக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய், ஏரியாய், இருக்கும் என்று கர்த்தர் சொன்னார். இந்த நீர்நிலைகள் கிறிஸ்துவினுடைய ஜீவனின் விதவிதமான நிரப்பீடுகளுக்கு முன்னடையாளங்களாக இருக்கின்றன. கிறிஸ்துவின் ஜீவன் நமக்கு நிரப்பீடாக வெவ்வேறு வகையான நீர்நிலைகளைப் போல் இருக்கிறது.

தம்மிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் எவர்களோ, அவர்களுடைய மிக உள்ளான பகுதியிலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று கர்த்தர் சொன்னார். இது என்ன? இதுவே கிறிஸ்துவினுடைய ஜீவனின் நிரப்பீடு ஜீவத்தண்ணீராக வழங்கப்படுவதாகும். நீங்கள் உங்கள் அனுபவத்தை மீண்டும் நினைத்துப்பார்த்து, அதைக் கவனமாகச் சிந்தித்துப் பார்த்தால், ஒரு வகையில் கிறிஸ்து மிகவும் விசாலமானவர் என்றும், வற்றாதவர் என்றும், இன்னொரு வகையில் கிறிஸ்து மனித வரம்புக்கு மேம்பட்டு, பரலோகங்களில் இருக்கிறார் என்றும் நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள். பின்பு நீங்கள் அதை நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், கிறிஸ்துவினுடைய ஜீவனின் நிரப்பீடு ஜீவத்தண்ணீரைப்போலவே உங்களுக்குள் இருக்கிறது என்று நீங்கள் உணர்ந்துகொள்வீர்கள். சில சமயங்களில் நீங்கள் தாகமாயிருக்கிறீர்கள்; பௌதீக உடலில் இல்லை, மாறாக உங்கள் ஆவியில் தாகமாயிருக்கிறீர்கள். நீங்கள் தாகத்துடன் கர்த்தரிடத்தில் வந்து அவரைத் தொடர்பு கொள்ளும்போது, உங்களுக்குள் ஒரு குறிப்பிட்ட உணர்வைப் பெறுகிறீர்கள். நீங்கள் புத்துணர்ச்சியடைந்தவரைப்போல் உணர்கிறீர்கள்; நீங்கள் நீர்பாய்ச்சப் பட்டவரைப்போல் உணர்கிறீர்கள். நீங்கள் தாகமாயிருக்கும்போது உங்கள் உள்ளான மனிதனாகிய உங்கள் ஆவி வறட்சியாயிருக்கிறது என்பதே அதின் பொருள். ஆனால், நீங்கள் கர்த்தராகிய இயேசுவைத் தொடர்புகொள்ளும்போது, மிக

விரைவில் நீங்கள் நீர்பாய்ச்சப்பட்டதைப்போல உணர்கிறீர்கள். உங்கள் தாகம் தணிந்து விட்டது. வேறு எந்த பௌதீக பானத்தையும்விட இந்தப் பானம் உங்களுக்கு அதிகமாகப் புத்துணர்ச்சியூட்டுகிறது. பின்னர் நீங்கள் கர்த்தரை மேன்மேலும் தொடர்புகொண்டால், ஒவ்வொரு கணப்பொழுதுங்கூடத் தொடர்பு கொண்டால், நீர் பாய்ச்சப்பட்டதைப்போன்ற உணர்வைவிட அதிகமான ஓர் உணர்வைப் பெறுவீர்கள்; உங்களுக்குள்ளிருந்து ஒரு நதி புறப்பட்டு ஓடிக்கொண்டிருக்கும்.

உங்களுக்குள்ளிருந்து ஒரு நதி புறப்பட்டு ஓடும் என்று நான் சொல்லும்போது நான் கூறுவதின் பொருள் என்ன என்று நீங்கள் என்னைக் கேட்கக்கூடும். இத்தகைய அனுபவங்கள் உங்களுக்கு இல்லையா? நீங்கள் உள்ளான மனிதனில் வறட்சியாகவும் தாகமாகவும் இருக்கும்போது, கர்த்தரிடத்தில் வருகிறீர்கள், அவரைத் தொடர்புகொள்கிறீர்கள், புத்துணர்ச்சியடைகிறீர்கள். பின்பு நீங்கள் எவ்வளவு அதிகமாக அவரைத் தொடர்புகொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் நீர்பாய்ச்சப்படுவதோடு மட்டும் இல்லை, நீங்கள் நிரப்பவும்படுகிறீர்கள். நீங்கள் தண்ணீரால் நிறைந் திருக்கிறீர்கள். ஒரு சகோதரரைச் சந்திக்கும்போது, உடனேயே நீங்கள் "அல்லேலூயா" சொல்வீர்கள் என்று நான் விசுவாசிக் கிறேன். இது என்ன? இது உங்களுக்குள்ளிருந்து பாய்ந் தோடுகிற ஆறு. பின்பு மாலையில் நீங்கள் கூட்டத்துக்கு வரும்போது பாடிக்கொண்டே வருவீர்கள், புத்துணர்ச்சியுடன் வருவீர்கள். உடனே நீங்கள் துதியையோ அல்லது ஜெபத் தையோ ஏறெடுப்பீர்கள். இது, ஒரு ஜீவனுள்ள நதி உங்களுக்குள்ளிருந்து பாய்ந்தோடுவதைப்போல இருக்கும். உங்கள் ஜெபம் எல்லா சகோதர சகோதரிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சும். "சகோதரர்களே, இது எவ்வளவு நல்லது! ஆனால் இது ஒரு நதி மட்டுமே. எனக்குள்ளே ஓர் ஊற்று இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? ஊற்று மட்டும் இல்லை, ஆழமான தண்ணீருள்ள ஏரியும் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? நான் தண்ணீரால் நிறைந்திருக்கிறேன்; எனவே, ஏதோவொன்று பாய்ந்தோடிக்கொண்டேயிருக்கிறது" என்று நீங்கள் அவர்களிடம் சொல்லலாம்.

நீங்கள் இப்போது புரிந்துகொள்ளலாம். நம்மிடம் ஒரு நீரூற்று, ஓர் ஏரி, ஓர் ஆறு ஆகியவைகள் இருகின்றன. நீரூற்று—பிறப்பிடம், ஏரி—சேமிக்குமிடம், ஆறு—ஓட்டம். நம்மிடம் பிறப்பிடமும் சேமிக்குமிடமும், ஓட்டமும் இருக்கின்றன; நீரூற்று, ஏரி, ஆறு.

இப்படிப்பட்ட அனுபவம் கொஞ்சமாவது உங்களுக்கு இருக்கும் என்று நான் நிச்சயமாக விசுவாசிக்கிறேன். ஆனால், இந்தக் காரியங்களைப்பற்றிய ஆவிக்குரிய அறிவு உங்களிடம்

குறைவாகவே இருப்பதற்காக நான் வருத்தப்படு கிறேன். அதை உங்களால் வாய்விட்டுக்கூற முடியாது. இந்த ஜீவ நீரூற்றுக்காக, இந்த ஆழமான ஏரிக்காக, இந்தப் பாய்ந்தோடும் நதிக்காக போதுமான ஏற்ற துதியை உங்களால் செலுத்தமுடியாது. ஆ, நீங்கள் இதைப் புரிந்துகொண்டால் கூட்டங்களில் நீங்கள் கர்த்தருக்கு ஏறெடுக்கும் உங்கள் துதி மிகச் சிறப்பாக இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன். "கர்த்தாவே, நான் உம்மை எவ்வளவாய் ஸ்தோத்திரிக்கிறேன்; எனக்குள்ளே ஒரு நீரூற்று இருக்கிறது! இந்த நீரூற்றிலிருந்து ஆழமான தண்ணீருள்ள ஏரி வருகிறது. இந்த ஏரியிலிருந்து ஒரு நதி ஓடுகிறது. ஒரேவோர் ஆறு இல்லை, மாறாக பல ஆறுகள் பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றன. கர்த்தாவே, அது எனக்கு எவ்வளவாய் நீர்பாய்ச்சுகிறது; நான் மிகவும் புத்துணர்ச்சியடைந்துள்ளேன்; ஜீவ நதிகள் எப்போதும் எனக்குள்ளிருந்து பாய்ந்தோடிக் கொண்டிருக்கின்றன. நான் பிறருக்கு நீர்பாய்ச்சுவதற்காகவே இருக்கிறேன்," என்று உங்களால் சொல்லமுடியும்.

இந்த நேரத்தில் ஒரேவோர் ஆறு மட்டும் இல்லை, மாறாகப் பல ஆறுகள் இருக்கின்றன; ஒரேவொரு நீரூற்றும், ஒரேவோர் ஏரியும் மட்டும் இல்லை, அநேக நீரூற்றுகள், அநேக ஏரிகள். இதன் பொருள் என்ன? சில வேளைகளில் நீங்கள் உபத்திரவங் களாலும் பாடுகளாலும் நெருக்கப்படும்போது, நீங்கள் கர்த்தரைத் தொடர்புகொண்டு அவரிடமிருந்து ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்கிறீர்கள். உங்கள் பாடுகளில் கர்த்தரை ஒரு நிரூற்றாகவும், ஓர் ஏரியாகவும், ஓர் ஆறாகவும் நீங்கள் அனுபவிக்கிறீர்கள். இது எப்படிப்பட்ட நீரூற்று? எப்படிப்பட்ட ஏரி? எப்படிப்பட்ட ஆறு? அவைகளுக்கு உங்க ளால் ஒரு பெயர்சூட்ட முடியுமா? அவைகளுக்கு உங்களால் பல பெயர்களைச் சூட்டமுடியும் என்று நான் விசுவாசிக்கிறேன். சிலவேளைகளில் நீங்கள் அவரை மகிழ்ச்சியின் நீரூற்றாக அனுபவிக்கிறீர்கள், சிலவேளைகளில் சமா தானத்தின் நீரூற்றாக, சிலவேளைகளில் ஆறுதலின் நீரூற்றாக, சிலவேளைகளில் அன்பின் ஏரியாக, கிருபையின் ஏரியாக, ஒளியின் ஏரியாக அனுபவிக்கிறீர்கள். வேறு சில நேரங்களில் கிறிஸ்து உங்களுக்குப் பொறுமையின் ஆறாக, தாழ்மையின் ஆறாக, தயவின் ஆறாக இருக்கிறார். அநேக நீரூற்றுகள், அநேக ஏரிகள், அநேக ஆறுகள் இருக்கின்றன என்பதைப் பாருங்கள். பலவிதமான பரலோக நிரப்பீடுகள் இருக்கின்றன.

1950-லிருந்து ஏறக்குறைய ஒவ்வொரு வருடமும் நான் மணிலாவுக்குச் சென்று ஒரு சில மாதங்கள் அங்கு தங்கி யிருக்கிறேன். அங்குள்ள சகோதரர்கள் என்னை எப்போதும் ஒரு குறிப்பிட்ட குடும்பத்துடன் தங்கவைத்தார்கள். அந்தக்

குடும்பத்தில் எல்லா உறுப்பினர்களும் முதியவர்கள்; எனவே அவர்கள் வாலிபர்களைவிட அதிகச் சுதந்தரமாக என்னுடன் பேசுகிறார்கள். 1953இல் ஒருநாள், என் ஊழியத்திற்குப்பிறகு நாங்களெல்லாரும் கூட்டம் நடக்கும் அரங்கிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தோம். ஒரு வயதான சகோதரி என்னிடம், "சகோதரரே, பேசுவதற்கு உங்களிடம் எப்படி இவ்வளவு விஷயங்கள் இருக்கின்றன என்று தயவுசெய்து எனக்குச் சொல்வீர்களா? உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், நீங்கள் முதலாவது 1950-ல் வந்தபோது, உங்கள் செய்திகளைக் கேட்டு நான் பிரமிப்படைந்தேன். அடுத்தமுறை உங்கள் ஊழியத்தின் தரம் சற்றுக் குறைவாகவே இருக்கும் என்று அப்போது நான் நினைத்தேன். ஆனால், இரண்டாவது தடவை நீங்கள் வந்தபோது, உங்கள் ஊழியம் அதைவிடச் சற்று வளமாகவே இருந்ததை நான் கவனித்தேன்! கொடுப்பதற்கு உங்களிடம் இன்னும் அதிகமாகவே இருந்தது. 'மூன்றாவது தடவை அவர் வரும்போது (சொல்லவேண்டிய யாவற்றையும் ஏற்கெனவே சொல்லிவிட்டதால்) அவர் காலியாகிவிடுவார்; சொல்வதற்கு அவரிடம் ஒன்றுமே இருக்காது' என்று அப்போது நினைத்தேன். ஆனால் நான் ஆச்சரியப்படும் அளவுக்கு மூன்றாவது தடவை நீங்கள் வந்தபோது, உங்கள் ஊழியம் முதல் இரண்டு தடவைகளை விட, இன்னும் அதிக வளமாகவே இருந்தது. இங்கே இது இப்போது உங்கள் நான்காவது வருகை. இன்று மாலையில் உங்கள் செய்தியைக் கேட்டபிறகு, அது எவ்வளவு செழிப்பாக இருந்தது என்று என்னால் விவரிக்க முடியவில்லை. பேசுவதற்கு இந்தக் காரியங்களையெல்லாம் நீங்கள் எப்படிப் பெற்றுக்கொள்கிறீர்கள் என்று தயவுசெய்து எனக்குச் சொல்வீர்களா?" என்று கேட்டார்.

நான் அவருக்கு என்ன விடையளித்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? "இது மிக சுலபம். பரலோகங்களிலுள்ள நீரூற்றுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நீரூற்று என்னில் இருக்கிறது. இந்த நீரூற்றை உங்களால் ஒருபோது காலியாக்க முடியாது. எவ்வளவு அதிகமாக ஜீவத்தண்ணீர் வெளியே பாய்கிறதோ, அவ்வளவு அதிகமாகப் புதிய நிரப்பீடு உள்ளே பாய்கிறது. எவ்வளவு அதிகமாகப் பேசுகிறேனோ அவ்வளவு அதிகமாக இன்னும் நான் பேசவேண்டும். நான் பேசுவதை நிறுத்திவிட்டால் வருவதும் நின்றுவிடுகிறது. இந்த ஆறு எல்லா நேரமும் ஓடிக்கொண்டிருக்கிறது," என்று நான் அவரிடம் சொன்னேன்.

ஒருமுறை ஒரு சகோதரர் என்னிடம் வந்து, "சகோதரரே, உங்களால் இத்தனை காரியங்களை எப்படி உங்கள் மனதில் வைத்துக்கொள்ள முடிகிறது? நீங்கள் ஊழியம் செய்யும்

போதெல்லாம் உங்களுக்கு முன்னால் நீங்கள் குறிப்புகள் வைத்துக்கொள்வதில்லை என்பதை நான் கவனிக்கிறேன். உங்களால் எப்படி எல்லாவற்றையும் நினைவில் வைத்துக் கொள்ள முடிகிறது?" என்று கேட்டார். "சகோதரரே, எனக்குப் பெரிய அறிவாற்றல் கிடையாது. இவ்வளவு அதிகமான காரியங்களை என்னால் நினைவில் வைத்துக்கொள்ளமுடியாது. ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன். எனக்குள் ஒரு நதி இருக்கிறது. நான் பேச ஆரம்பிக்கும்போது அது வெளியே பாய்ந்தோடி வருகிறது," என்று நான் சொன்னேன். அப்போது அவர், "உங்களுக்குள் எவ்வளவு வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "சகோதரரே, எனக்குத் தெரியாது. என்னால் சொல்லமுடியாது. முப்பது ஆண்டுகளுக்கும் மேலாகிறது, நான் ஒருபோதும் காலியானதேயில்லை. ஒரு செய்தியைத் திரும்பப்பேசுவது எனக்குக் கடினமாயிருக்கும். அங்கு ஒரு நதி இருக்கிறது, ஊழியத்தின் நதி," என்று பதிலுரைத்தேன்.

இது அநேக ஆறுகளில் ஒன்றுதான். ஞானத்தின் ஆறு, புத்தியின் ஆறு, வெளிச்சத்தின் ஆறு, அன்பின் ஆறு, ஆறுதலின் ஆறு, சமாதானத்தின் ஆறு, மகிழ்ச்சியின் ஆறு, ஜெபத்தின் ஆறு, துதியின் ஆறு ஆகியவைகளும் இருக்கின்றன. உங்களுக்குள் எத்தனை ஆறுகள் இருக்கின்றன? எனக்குள் எத்தனை ஆறுகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியாது. ஒவ்வோர் ஆற்றிலும் எவ்வளவு இருக்கிறது என்றும் எனக்குத் தெரியாது. ஜீவனுள்ள கிறிஸ்துவுடன் மட்டும் நாம் தொடர்புவைத்துக்கொண்டால், அது மெய் யாகவே அற்புதமானது. ஜீவநதி வெளியே பாய்ந்தோடு வதைப்போல, நம்மால் பிறரை அன்புசெய்ய முடியும். நம் பொறுமை எல்லா நேரமும் ஒரு நதியைப்போல பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. நாம் பிறருக்கு நீர் பாய்ச்சுகிறோம்.

எப்பேர்ப்பட்ட அற்புதமான கிறிஸ்துவை நாம் கொண் டிருக்கிறோம்! எப்பேர்ப்பட்ட அற்புதமான ஊற்றை நாம் கொண்டிருக்கிறோம்! ஓர் அம்சத்தில் பார்க்கும்போது அவர் விசாலமானவர் என்று நீங்கள் உணர்ந்துகொள்கிறீர்கள். இன்னோர் அம்சத்தில் பார்க்கும்போது அவர் மனிதவரம்புக்கு மேம்பட்டவர் என்று உணர்ந்துகொள்கிறீர்கள். இந்த அம்சத்தில் பார்க்கும்போது, அவர் நீர்வளமிக்கவர்.

பள்ளத்தாக்குகளும், குன்றுகளும்

இந்தத் தண்ணீர்கள் பள்ளத்தாக்குகளிலும், குன்றுகளிலு மிருந்து பாய்ந்தோடுகின்றன என்று உபாகமம் கூறுகிறது. இதன் பொருள் என்ன? பள்ளத்தாக்குகளும், குன்றுகளுமில்லாமல் தண்ணீர் பாய்ந்தோட முடியாது என்பதில் ஐயமில்லை.

தேசமெல்லாம் சமவெளியாக இருந்தால் தண்ணீரின் ஓட்டம் இருக்காது. பள்ளத்தாக்குகளும், குன்றுகளும் எதைக் குறிக்கின்றன?

*2 கொரிந்தியர் 6:8-10*ல் பவுல் அநேக மாறுபட்ட காரியங்களை, அநேகப் பள்ளத்தாக்குகளையும், குன்றுகளையும் குறிப்பிடுகிறார்.

> "கனத்திலும் கனவீனத்திலும், துர்க்கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும் எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்த ராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், தண்டிக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் கொல்லப்படாதவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடைய வர்களாகவும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம்."

"கனம்" ஒரு குன்று; "கனவீனம்" ஒரு பள்ளத்தாக்கு. "துர்க்கீர்த்தி" ஒரு பள்ளத்தாக்கு; "நற்கீர்த்தி" ஒரு குன்று. "துக்கப்படுகிறவர்கள்" ஒரு பள்ளத்தாக்கு; "எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்கள்" ஒரு குன்று. "தரித்திரர்" இன்னொரு பள்ளத்தாக்கு; "எனினும் அநேகரை ஐசுவரியவான்களாக்கு கிறவர்." இது ஒரு குன்று மட்டும் இல்லை, இது ஒரு மலை. பவுல் ஓர் எத்தன் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் அவர் "எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்தர்;" பள்ளத்தாக்குடன் ஒரு குன்றும் இருக்கிறது. இந்த வசனங்களில் குறைந்தது ஒன்பது ஜோடிகள், ஒன்பது பள்ளத்தாக்குகள், ஒன்பது குன்றுகள் இருக்கின்றன. இந்த இடங்களிலிருந்துதான் தண்ணீர் பாயமுடியும்.

நீங்கள் எந்தக் குன்றுகளும் பள்ளத்தாக்குகளுமில்லாத ஒருவராக இருந்தால், உங்கள் வாழ்க்கை வெறுமனே ஒரு சமவெளியாக இருந்தால், உங்களுக்குள் தண்ணீர் எதுவும் ஓடாது என்பது நிச்சயம். எவ்வளவு அதிகமாக நீங்கள் துன்பப்படுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்களிடம் பாய்ந்தோடுதல் இருக்கும். நீங்கள் எவ்வளவு அதிகமாக இழிவுபடுத்தப்படுகிறீர்களோ, எவ்வளவு அதிகமாக உங்களைக் குறித்துத் தீமையான அறிக்கைகள் கொடுக்கப்படுகின்றனவோ, அவ்வளவு அதிகமாகத் தண்ணீர் பாயும்.

கடந்த வருடங்களில் அநேகத் தடவைகள் என்னைக் குறித்துத் தீமையான அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அநேக வேளைகளில் மக்கள் என்னிடத்தில் வந்து, "சகோதரரே, ஒரு

விஷயம் இருக்கிறது. ஆனால் பேசத் தயக்கமாயிருக்கிறது," என்று சொல்லியிருக்கிறார்கள். மக்கள் இப்படிப் பேசும்போதெல்லாம், அது ஒரு தீங்கான அறிக்கைதான். நான் இதைக் கேள்விப் படும்போது கர்த்தரைத் துதிக்கிறேன். "கர்த்தாவே, நான் உம்மை ஸ்ரோத்திரிக்கிறேன். இங்கே இன்னொரு பள்ளத்தாக்கு, எனக்குள்ளிருந்து இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பாய்ந்தோடுவதற்கு இதோ ஒரு பள்ளத்தாக்கு இருக்கிறது," என்று நான் கூறுகிறேன். நான் பல்வேறு வகையான நல்ல பட்டப்பெயர்களைப் பெற்றிருக்கிறேன். ஒரு குறிப்பிட்ட காரியத்தில் "மிகப் பலமான விரிவுரையாளன்" என்று சமீபத்தில் என்னை ஏளனமாய் அழைத்தார்கள். எனக்கு இந்தப் பெருமதிப்புக்குரிய பட்டம் கொடுக்கப்பட்டது. என்னைப்பற்றி எல்லா வகையான தீமையான அறிக்கைகளும் இருந்திருக்கின்றன. ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஒரு பள்ளத்தாக்கு இருக்கும்போ தெல்லாம் ஒரு குன்றும் இருக்கவேண்டும். இது நிச்சயம். தீமையான அறிக்கையைப்பற்றி நான் பயப்படுகிறதில்லை. துர்க்கீர்த்திக்குப்பின்பு நற்கீர்த்தி இருக்கும் என்று எனக்குத் தெரியும். ஜீவத்தண்ணீர் பள்ளத்தாக்குகளிலும், குன்றுகளிலும் பாய்ந்தோடுகிறது. ஆ, கிறிஸ்துவின் ஜீவன் விவரிக்கமுடியாத அளவுக்கு அற்புதமானது!

தேவன் உங்களுக்குத் துக்கத்தை நியமிக்கும்போதெல்லாம், மகிழ்ச்சி பின்தொடரும் என்று நிச்சயமாயிருங்கள். "துக்கப் படுகிறவர் என்னப்பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷிப் படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாகவும், ஒன்றுமில்லாத வர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும்." இவைகளெல்லாம் பள்ளத்தாக்குகளும் குன்றுகளும் ஆகும். "தாழ்ந்திருக்கவும் வாழ்ந்திருக்கவும் நான் கற்றுக் கொண்டேன்," என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார் (பிலி. 4:11, 12). அவர் இரகசியத்தைக் கற்றுக்கொண்டார். திருப்தியாயிருக்கவும், பட்டினியாயிருக்கவும் அவர் அறிந்திருந்தார். இரகசியம் என்ன? ஆ, கிறிஸ்து உள்ளே பாய்ந்தோடிக்கொண்டிருப்பதே இரகசியம்! நான் கற்றுக் கொண்டேன், நான் போதிக்கப்பட்டேன், நான் கற்பிக்கப் பட்டேன். எனக்குள் இருக்கும் ஜீவனுள்ள கிறிஸ்துவை எனக்குத் தெரியும்.

சகல பள்ளத்தாக்குகளும் சிலுவையின் அனுபவங்களாக, கிறிஸ்துவினுடைய மரணத்தின் அனுபவங்களாக, இருக் கின்றன. சகல குன்றுகளும் கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் அனுபவங்களாக இருக்கின்றன. பள்ளத்தாக்கு என்பது சிலுவை; குன்று என்பது உயிர்த்தெழுதல். எப்போதும் கொஞ்சம் பிரச்சினை,

கொஞ்சம் பள்ளத்தாக்கு, நம்மிடம் இருக்கவேண்டும். எப்போதும் குன்றுகளின்மேலே, எப்போதும் உயிர்த்தெழுதலின் அனுபவத்தில் இருக்கிறவர்களாகவும்கூட நாம் இருக்க வேண்டும். ஒரு பள்ளத்தாக்கு இருக்கும்போதெல்லாம், ஒரு குன்று இருக்கிறது. சிலுவை மரணத்தை நீங்கள் அனுபவிக்கும்போதெல்லாம், உயிர்த் தெழுதலையும் நீங்கள் அனுபவிப்பீர்கள். இந்த அனுபவங்கள் எல்லாவற்றிலிருந்து ஜீவத்தண்ணீர்கள் பாய்ந்தோடுகின்றன.

உபாகமம் 8:7ஐ நாம் இன்னும் கொஞ்சம் ஆழமாகப் பார்ப்போம். "பள்ளத்தாக்குகளிலும், குன்றுகளிலும் தண்ணீர் பாய்கிறது," என்று அது கூறுகிறது. குன்றுகளிலும் பள்ளத் தாக்குகளிலும் என்று கூறாமல், பள்ளத்தாக்குகளிலும் குன்று களிலும் என்று கூறுகிறது. முதலாவது பள்ளத்தாக்குகள், பின்பு குன்றுகள். ஏன்? பாய்ந்தோடும் தண்ணீரை நீங்கள் தொடர்புகொள்ளும் முதல் இடம் பள்ளத்தாக்குகளில்தான் இருக்கிறது. பின்பு அந்த நீரோடையை அதின் பிறப்பிடம் வரைக்கும் நீங்கள் தொடர்ந்துசென்றால், அது குன்றுகளிலிருந்து பொங்கிவருவதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள். நீரோடை பள்ளத்தாக்கில் இருக்கிறது. ஆனால் நீரூற்று குன்றுகளில் இருக்கிறது. பிறருக்கு நீர்பாய்ச்சுவதற்காக உங்களுக்குள்ளிருந்து ஏதாவது கொஞ்சம் பாய்ந்தோட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நீங்கள் பள்ளத்தாக்குகளில் இருக்கவேண்டும்.

வாலிபனாக இருந்தபோது நான் கேள்விப்பட்ட ஒரு கதையை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது. அது எனக்குப் பெரிதும் உதவியிருக்கிறது. கர்த்தருடைய ஊழியக்காரர் ஒருவருடைய மனைவி மிகவும் இளமையிலேயே மரித்துப்போனார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். அவரும் இளைஞனாகத்தான் இருந்தார். இந்தக் கடுஞ்சோதனை அவருக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாக இருந்தது. அவர் துன்பப்பட்டார். அதின்மூலம் அவர் ஏதோவொன்றைக் கற்றுக் கொண்டார். சில ஆண்டுகள் கழித்து ஒருநாள், இன்னொரு சகோதரருடைய மனைவி மரித்துப்போனார். அவருக்கும் சில பிள்ளைகள். இந்தச் சகோதரரை யாராலும் ஆற்றமுடியவில்லை. அவர் தன் மனைவியின் மரணத்தால் மிக அதிகமாக மனங்குன்றிப்போனார். அப்போது கர்த்தருடைய ஊழியக்காரர் அவரைப் பார்க்க வந்தார். அவர் வந்து சேர்ந்தவுடனே, மனங்குன்றிப்போயிருந்த சகோதரர் அவரிடம், "சகோதரரே, நான் ஆறுதலடைகிறேன், நான் புத்துணர்ச்சியடைகிறேன்! நீங்கள் உங்கள் மனைவியை இழந்தீர்கள்; உங்களுக்கு எட்டுக் குழந்தைகள். நானும் என் மனைவியை இழந்தேன். ஆனால் எனக்கோ நான்கு குழந்தைகள் தான். எனக்குப் புத்துணர்ச்சி யூட்டுகிற, என்னை ஆற்றுகிற ஏதோவொன்று உங்களிட மிருந்து

வெளிவருகிறது," என்று சொன்னார்.

பிரச்சினை மற்றும் சோதனை நேரங்களில் உங்களால் கிறிஸ்துவை அனுபவிக்கமுடிந்தால், பிறருக்குப் பாய்ந்தோடும் ஓட்டம் உங்களிடம் எவ்வளவாய் இருக்கும்! எவ்வளவு பாக்கியமாக நீங்கள் பிறருக்கு நீர்ப்பாய்ச்சுவீர்கள்! இதை நீங்கள் சமாதானமான நேரங்களிலோ அல்லது சந்தோஷமான நாட்களிலோ செய்யமுடியாது. இதை துக்கமான நாட்களிலும், வியாதிப்பட்ட நாட்களிலும், பிரச்சினை நிறைந்த நாட்களிலும்தான் செய்யமுடியும். இப்படிப்பட்ட நேரங்களில் நீங்கள் கிறிஸ்துவை அனுபவிக்கும் உங்கள் அனுபவத்தால் தான் பிறருக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கான ஜீவ ஓட்டத்தை நீங்கள் பெறலாம். மரணச் சூழ்நிலை ஒவ்வொன்றும் புத்துணர்ச்சியூட்டும் தண்ணீரை மிக அதிகமாக உங்களுக்குள்ளிருந்து பாய்ந்தோடச்செய்யும். குன்றுகள் மட்டும் இல்லை, பள்ளத்தாக்குகளும்கூட, பள்ளத்தாக்குகள் மட்டும் இல்லை குன்றுகளும்கூட. நமக்குள் கர்த்தருடைய மரணத்தின் அநேக அனுபவங்களும், கர்த்தருடைய உயிர்த் தெழுதலின் அநேக அனுபவங்களும் தேவை; அப்போது நாம் ஊற்றுகளாலும், ஏரிகளாலும், ஆறுகளாலும் நிரம்பியிருப்போம்.

இவை மெய்யாகவே இனிப்பான வசனங்கள். அது ஒரு நல்லதேசம். நீரோடைகளும், நீரூற்றுகளும், ஆழமான தண்ணீர்களும் பள்ளத்தாக்குகளிலும் குன்றுகளிலும் பாய்ந் தோடுகிற தேசம். அது கனத்திலும் கனவீனத்திலும், துர்க் கீர்த்தியிலும் நற்கீர்த்தியிலும், எத்தரென்னப்பட்டாலும் நிஜஸ்த ராகவும், அறியப்படாதவர்களென்னப்பட்டாலும் நன்றாய் அறியப்பட்டவர்களாகவும், சாகிறவர்கள் என்னப்பட்டாலும் உயிரோடிருக்கிறவர்களாகவும், துக்கப்படுகிறவர்கள் என்னப் பட்டாலும் எப்பொழுதும் சந்தோஷப்படுகிறவர்களாகவும், தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்கு கிறவர்களாகவும், ஒன்றுமில்லாதவர்களென்னப்பட்டாலும் சகலத்தையும் உடையவர்களாகவும்...எந்த விதமான சூழ்நிலையில் நீ இருந்தாலும், கிறிஸ்துவை அனுபவிக்கவும், கிறிஸ்துவைப் பிரயோகிக்கவும் முயற்சிசெய். அப்போது உனக்கு மட்டும் புத்துணர்ச்சியூட்டக்கூடியதாக இராமல், பிறருக்கும் நீர்பாய்ச்சு வதற்காகப் பாய்ந்தோடக்கூடிய ஏதோவொன்று உன்னிடம் இருக்கும். இது கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங் களின் ஒரு பகுதிதான். இது நல்ல தேசத்திலுள்ள ஐசுவரியங்களின் ஓர் அம்சம்தான். பள்ளத் தாக்குகளிலும், குன்றுகளிலும் பாய்ந்தோடுகின்ற நீரோடை களில், நீரூற்றுகளில், ஆழமான தண்ணீர்களில்—இந்த நீர்வளங்களில் அது நல்ல தேசம்.

கர்த்தருடைய கண்கள்

இந்தத் தண்ணீரெல்லாம் எங்கிருந்து வருகின்றன? அது பள்ளத்தாக்குகளிலும், குன்றுகளிலும் பாய்ந்தோடுகிறது. ஆனால் பள்ளத்தாக்குகளும், குன்றுகளும் தண்ணீரை எங்கிருந்து பெறுகின்றன? அது வானத்தின் மழைத் தண்ணீரைக் குடிக்கும் தேசம் என்று உபாகமம் 11:11, 12 கூறுகிறது. குன்றுகளும், பள்ளத்தாக்குகளும் பிறப்பிடம் இல்லை. பரலோகமே பிறப்பிடம்! எல்லா ஜீவத்தண்ணீர்களும், எல்லா ஆறுகளும் பரலோகத்திலிருந்தே வருகின்றன. பிறப்பிடம் பரலோகத்தில் இருக்கிறது. அது ஏன் பரலோகத்திலிருந்து வருகிறது? அந்தத் தேசம் கர்த்தர் நாடித் தேடுகிற தேசம் என்று அதே மேற்கோளில் கூறப்பட்டுள்ளது: அது உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம் (எபிரேயம்—தேடுகிற). தேவன் இந்த நல்ல தேசத்தை நாடித் தேடிக்கொண்டிருக்கிறார். வருஷத்தின் தொடக்கமுதல் வருஷத்தின் முடிவுவரை உன் தேவனாகிய கர்த்தரின் கண்கள் எப்பொழுதும் அதின்மேல் வைக்கப்பட்டிருக்கும். நீங்கள் கிறிஸ்துவைத் தொடர்பு கொள்ளும்போதும், கிறிஸ்துவை அனுபவித்துமகிழும்போதும், கிறிஸ்துவை அனுபவமாக்கும் போதும் அவருடைய ஜீவன் உங்களுக்குள்ளிருந்து பாய்ந்தோடுவதால், தேவ பிரசன்னத்தின் உணர்வு உங்களுக்கு எவ்வளவு ஆழமானதாக இருக்கும் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளலாம்! தேவ பிரசன்னம் உங்களுக்கு அவ்வளவு நிஜமாக இருக்கும். உங்களைத் தேவன் தேடிக்கொண்டிருக்கிறார் என்றும், தேவன் விசாரித்துக் கொண்டிருக்கிறார் என்றும் உணர்ந்துகொள்வீர்கள். வருஷத்தின் தொடக்கமுதல் வருஷத்தின் முடிவுவரை அவருடைய கண்கள் உங்கள்மேலிருப்பதை அனுபவிப்பீர்கள். ஏனென்றால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள், கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறீர்கள், கிறிஸ்துவை அனுபவிக்கிறீர்கள். நடைமுறைக்குரிய வகையில், நீங்கள் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்துவை ஜீவத் தண்ணீராக மட்டும் நீங்கள் அனுபவிக்காமல், தேவ பிரசன்னத்தையும் அனுபவித்து மகிழ்வீர்கள். தேவனுடைய கண்கள் எல்லா நேரமும் உங்கள்மேல் இருக்கும். தேவன் இந்த நல்ல தேசத்தைத்தான் நாடித் தேடிக் கொண்டிருக்கிறார். நீங்கள் இந்த நல்ல தேசத்துக்குள் வாழ்ந்து, அதின் ஐசுவரியங்களை அனுபவித்துமகிழவேண்டும். அப்போது நீங்கள் தேவனுடைய கண்களுடன்கூடிய தேவ பிரசன்னத்தைப் பெறுவீர்கள்.

நீங்கள் என்னிடத்தில் சந்தோஷமாக இல்லாதபோது, உங்கள் கண்களை என்னிடமிருந்து தூரமாகத் திருப்பிக்கொள்கிறீர்கள். தேவனும் அதையே செய்கிறார். ஆனால் கிறிஸ்துவை நீங்கள் இப்படிப்பட்ட தேசமாக அனுபவித்துமகிழும்போது, தேவனுடைய கண்கள் தொடக்கமுதல் முடிவுவரை உங்கள்மேல் இருக்கும்.

அதிகாரம் ஐந்து

தேசத்தின் நன்மை— அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள்

II. உணவு

வேத வாசிப்பு: உபா. 8:8-10; 32:13, 14; எண். 13:23, 27; 14:7, 8; நியா. 9:9, 11, 13; சக. 4:11, 14; ஓசியா 14:6, 7; யோவான் 12:24; 6:9, 13; 15:5

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறிக்கும் அநேக முன்னடையாளங்கள் இருக்கின்றன என்று நாம் பார்த்தோம். ஆனால் ஒன்றே ஒன்றுதான் கிறிஸ்துவைக் குறிக்கும் சகலத்தையும் உள்ளடக்கிய முன்னடையாளம். அது கானான் தேசம். இந்தத் தேசம் நல்ல தேசம் என்று அடிக்கடி குறிப்பிடப்படுகிறது. கர்த்தர் அதை "நல்ல தேசம்" என்று அழைத்தார். அது "மிக நல்ல தேசம்" என்றும் ஒருமுறை அழைக்கப்பட்டது. அதின் விசாலம், அதின் ஏற்றம், அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் போன்ற பல அம்சங்களில் அது எவ்வளவு நலமானது என்று நாம் பார்த்தோம். அது எவ்வளவு நீர்வள மிக்கது என்றும் பார்த்தோம். உணவு வகைகளில் அது எவ்வளவு வளமானது என்று இப்போது நாம் பார்ப்போம்.

கர்த்தர் யோவான் சுவிசேஷத்தில் நமக்கு ஜீவத்தண்ணீரைத் தருவதாகக் கூறினார். அவர் வானத்திலிருந்து இறங்கிவந்த ஜீவ அப்பம் என்றும் அதே சுவிசேஷத்தில் அவர் கூறினார். அவர் நமக்கு ஜீவத் தண்ணீரைத் தருவதோடு மட்டும் இல்லை, அவர் ஜீவ அப்பமாகவும் இருக்கிறார். குடிப்பது என்பது எப்போதும் உணவுடன் தொடர்புடையது. குடிப்பதும், உண்பதும் மிக நெருக்கமானவை. நான் உங்களை விருந்துக்கு அழைக்கும்போது, குடிப்பதற்கும் உங்களுக்கு ஏதாவது தருவேன், சாப்பிடுவதற்கும் ஏதாவது தருவேன். போஜனமும் பானமும் எப்போதும் சேர்ந்தே செல்கின்றன.

உபாகமம் 8ஆம் அதிகாரத்தில் ஏன் இப்படிப்பட்ட வரிசை இருக்கிறது என்று உங்களால் இப்போது புரிந்துகொள்ள முடியும். அது முதலாவது தண்ணீரைப்பற்றி—ஊற்றுகள், சுனைகள், நீரோடைகள் போன்ற பலவகையான நீர்நிலை களைப்பற்றிப் பேசுகிறது. நீர்நிலைகள்—ஊற்று என்ற நிலை, சுனை என்ற நிலை, நீரோடை என்ற நிலை—அவைகளின் நிலைகளில் மட்டும்

வேறுபட்டவைகள் இல்லை, மாறாக பல்வேறு வகையான ஊற்றுகளும், சுனைகளும், நீரோடைகளும்கூட இருக்கின்றன. நாம் இவைகளை ஏற்கெனவே பார்த்துவிட்டோம். உபாகமம் தேசத்தின் நீர்நிலைகளைப்பற்றிப் பேசியவுடனே, உணவைப் பற்றிப் பேசுகிறது.

ஏழு வகை உணவுகள்

உணவைப்பற்றி அதிகமான விவரங்கள் இருக்கின்றன. நாம் 8ஆம் வசனத்தைப் பார்ப்போம்:

> "அது கோதுமையும், பார்லியும், திராட்சைச்செடிகளும், அத்திமரங்களும், மாதளஞ்செடிகளுமுள்ள தேசம். அது ஒலிவமரங்களும், தேனுமுள்ள தேசம்."

தாவர இராஜ்ஜியத்தைச் சார்ந்த ஆறு காரியங்கள் இருக்கின்றன. மிகவும் நூதனமான ஏழாவது காரியம் தேன். தேனின் ஒரு பகுதி மிருக இராஜ்ஜியத்தையும், இன்னொரு பகுதி தாவர இராஜ்ஜியத்தையும் சார்ந்ததைப்போல் தோன்றுகிறது. ஏனென்றால், அது தேனீக்களால் உற்பத்திசெய்யப்படுகிறது. இதில் இரண்டு இராஜ்ஜியங்களும் இரண்டறக் கலக்கின்றன. இங்கு நாம் காணும் பல்வேறு காரியங்களை வரிசைப்படுத்துவோம்: கோதுமை, பார்லி, திராட்சைச்செடிகள், அத்தி மரங்கள், மாதளஞ்செடிகள், ஒலிவமரங்கள், தேன். இரண்டு விதமான தானியங்கள், நான்கு விதமான மரங்கள் மற்றும் தேன். முதல் மரமாகிய திராட்சைச்செடி திராட்சை ரசத்தை உற்பத்திசெய்கிறது. கடைசி மரமாகிய ஒலிவமரம் எண்ணெயை உற்பத்திசெய்கிறது. எனவே, நம்மிடம் திராட்சை ரசமும் எண்ணெயும் இருக்கின்றன. இரண்டாவது மரம் அத்திப் பழங்களை உற்பத்திசெய்கிறது. அத்திப்பழங்களை எபிரேய மக்கள் உணவாகக் கருதினார்கள். மூன்றாவது மரமான மாதளஞ்செடி அழகும், பரிபூரண ஜீவனும் நிறைந்த பழத்தை உற்பத்திசெய்கிறது. எனவே திராட்சைச்செடி, அத்திமரம், மாதளஞ்செடி, ஒலிவமரம் என்ற நான்கு மரங்கள் இருக் கின்றன. கோதுமை, பார்லி என்ற இரண்டு தானியங்கள் இருக்கின்றன.

இவை எல்லாவற்றின் பொருள் என்ன? கோதுமையின் அர்த்தத்தைக் கூறக்கூடிய ஒரு வசனத்தைக் கண்டுபிடிப்பது மிக சுலபம். கர்த்தரே கோதுமை மணி என்று யோவான் 12:24 கூறுகிறது. எனவே கோதுமை தெளிவாகக் கர்த்தராகிய இயேசுவுக்கு அடையாளமாக இருக்கிறது. பார்லி எதற்கு முன்னடையாளமாயிருக்கிறது? பார்லியும் கிறிஸ்துவுக்கே அடையாளமாக இருக்கிறது. திராட்சைச்செடி எதற்கு அடை யாளம் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியும். தாமே மெய்யான

திராட்சைச் செடி என்று கர்த்தர் கூறினார். கர்த்தரே திராட்சைச் செடியாக இருக்கிறார். அத்திமரம் யாருக்கு அடையாளம்? கேள்விக்கு இடமேயில்லை, அத்திமரமும் கிறிஸ்துவே. ஒலிவமரமும்கூட சந்தேகமேயில்லாமல் கிறிஸ்துவே. கோதுமை, பார்லி, திராட்சைச்செடி, அத்திமரம், மாதளஞ்செடி, ஒலிவமரம் ஆகியவை கிறிஸ்துவையே குறிக்கின்றன. ஆனால், இவை அனைத்தும் கிறிஸ்துவின் எந்த அம்சங்களைக் குறிக்கின்றன? இந்த விஷயத்தைக் கவனமாகப் பரிசீலனைசெய்ய நாம் கொஞ்ச நேரம் செலவு செய்யவேண்டும்.

கோதுமையும், பார்லியும்

ஆ! கர்த்தரை அவருடைய வார்த்தைக்காக நாம் தொழுது கொள்ளவேண்டும். அவர் பார்லியை அல்லது திராட்சைச் செடியை இல்லை, மாறாக கோதுமையையே முதலாவது வைத்தார். கோதுமை கிறிஸ்துவின் எந்த அம்சத்தைக் குறிக்கிறது? கர்த்தர் பூமிக்குள் விழுந்து மடிந்து அடக்கம்பண்ணப்படுகிற ஒரு கோதுமை மணியாக இருக்கிறார் என்று யோவான் 12:24-ல் நாம் பார்க்கலாம். கோதுமை, மனுவுருவெடுத்த கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம். கிறிஸ்து பூமிக்குள் விழுந்து மரித்து அடக்கம்பண்ணப் படுவதற்காக மனுவுருவெடுத்த தேவன். இதுவே கோதுமை மணி. இது மனுவுருவெடுத்த கிறிஸ்துவுக்கு, மரித்த கிறிஸ்துவுக்கு, அடக்கம்பண்ணப்பட்ட கிறிஸ்துவுக்கு, முன்னடையாள மாயிருக்கிறது.

பார்லி எதைக் குறிக்கிறது? உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை! கோதுமை அவருடைய மனிதமாம்சமாகுதல், மரணம், அடக்கம் ஆகியவைகளைச் சுட்டிக்காட்டுகிறது. இதைத் தொடர்ந்து, பார்லி அவருடைய உயிர்த்தெழுதலை, உயிர்த் தெழுந்த கிறிஸ்துவைச் சுட்டிக்காட்டுகிறது. இதை எப்படி நிரூபிக்கமுடியும்? கானான் தேசத்தில் எப்போதும் பார்லிதான் முதலாவது விளைகிறது; எல்லாத் தானியங்களிலும் பார்லிதான் முதலாவது தானியம். லேவியராகமம் 23:10இல், "நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்லவேண்டியது என்ன வென்றால், நான் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்தில் நீங்கள் போய்ச்சேர்ந்து அதின் வெள்ளாண்மையை அறுக்கும் போது, உங்கள் அறுப்பின் முதற்பலனாகிய ஒரு கதிர்க்கட்டை ஆசாரியனிடத்தில் கொண்டுவரக்கடவீர்கள்," என்று கர்த்தர் சொன்னார். அறுப்பின் காலம் வந்தபோது அறுப்பின் முதற் பலன் கர்த்தருக்குப் படைக்கப்பட வேண்டும். முதற்பலன் நிச்சயமாக பார்லிதான். நாம் இப்போது 1 கொரிந்தியர் 15:20ஐ வாசிக்கவேண்டும்: "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்." அறுப்பின்

முதற்பலன் உயிர்த்தெழுதலின் முதற்பலனாகிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறது என்று வேதாகம மாணவர்கள் எல்லாரும் அங்கீகரிக்கிறார்கள். பார்லி, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாயிருக்கிறது என்று இப்படியாக நாம் நிரூபிக்கலாம்.

கோதுமை மனுவுருவெடுத்த, சிலுவையிலறையப்பட்ட, அடக்கம்பண்ணப்பட்ட கிறிஸ்துவைக் குறிக்கிறது. பார்லி உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறிக்கிறது. இந்த இரண்டு விதமான தானியங்கள் கிறிஸ்துவினுடைய வரத்தும், கிறிஸ்துவினுடைய போக்குமாகிய அவருடைய இரண்டு அம்சங்களைக் குறிக்கின்றன. கோதுமையாக இருப்பதற்காகக் கிறிஸ்து கீழே இறங்கிவந்ததையும், பார்லியாக இருப்ப தற்காகக் கிறிஸ்து மேலே ஏறிப்போனதையும் அவை குறிக்கின்றன. இந்த இரண்டு விஷயங்களுக்கும் நீங்கள் முழுக் கவனம்செலுத்த வேண்டும். கிறிஸ்துவை நீங்கள் கோதுமையாக அனுபவித்திருக்கிறீர்களா? கிறிஸ்துவை நீங்கள் பார்லியாக அனுபவித்திருக்கிறீர்களா? கோதுமை, கிறிஸ்துவினுடைய எந்த வகையான அனுபவம்? பார்லி கிறிஸ்துவினுடைய எந்த வகையான அனுபவம்?

இயேசு ஐயாயிரம் பேரைப் போஷித்தபோது அவர் பார்லியால் செய்யப்பட்ட ஐந்து அப்பங்களைக்கொண்டு அவர்களைப் போஷித்தார். ஐந்து அப்பங்களைப்பற்றிய அற்புதம் பெரும்பாலான வர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அந்த அப்பங்கள் பார்லி அப்பங்கள் என்று வெகு சிலருக்குத்தான் தெரியும். இந்த வேதவாக்கியம் உண்மையாகவே அற்புதமானது! அவை கோதுமை அப்பங்களாக இருந்திருந்தால், ஏதோவொன்று தவறாக இருந்திருக்கும்.

ஆனால், அவைகள் கோதுமை இல்லை, அவைகள் பார்லி அப்பங்கள். அவைகள் பார்லி அப்பங்களாக இருந்ததால், அவைகளைக்கொண்டு ஐயாயிரம்பேரைப் போஷித்து மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடைகளில் எடுக்கமுடிந்தது. இது உயிர்த்தெழுதல். கிறிஸ்து தம் உயிர்த்தெழுதலில் மட்டுமே நமக்கு ஐசுவரியசம்பன்னராக இருக்கமுடியும். மனிதமாம்சமான கிறிஸ்து மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவர். ஆனால், தம் உயிர்த்தெழுதலில் அவர் மிகுந்த ஐசுவரியமானவர், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாகிய அவருக்கு வரம்பே கிடையாது. மனுவுருவெடுத்த கிறிஸ்துவாகிய அவர் வெறுமனே ஒரு கோதுமை மணி, ஒரு சின்ன நசரேயன், ஒரு தாழ்வான தச்சன். ஆனால், அவர் உயிர்த்தெழுதலுக்குள் வந்தபோது அவர் வரம்பற்றவர். காலமும், இடமும், சடப் பொருட்களும் இனிமேலும் அவரை மட்டுப்படுத்தமுடியாது. அங்கு ஐந்து அப்பங்கள் இருந்தன. ஆனால், உண்மையில் அங்கு

எண்ணற்ற அப்பங்கள் இருந்தன. பெண்களையும் குழந்தைகளையும் எண்ணாமல், ஐயாயிரம் பேரைப் போஷிக்கத் தேவையான அப்பங்கள் அங்கிருந்தன. தொடக்கத்தில் இருந்த ஐந்து அப்பங்களைவிட மீதியான அப்பங்கள் அதிகமாக இருந்தன. பன்னிரண்டு கூடைகள்! இதுவே பார்லி. இதுவே உயிர்த்தெழுதலிலுள்ள கிறிஸ்து. கிறிஸ்துவை அவருடைய உயிர்த்தெழுதலில் ஒருபோதும் மட்டுப்படுத்த முடியாது.

கோதுமையின் அனுபவம்

உபதேசரீதியில் சில போதனைகளைக் கொடுப்பதல்ல என் நோக்கம். அதுவல்ல என் பாரம். கோதுமையின் அனுபவத்தையும், பார்லியின் அனுபவத்தையும் நான் நாடுகிறேன். கோதுமையின் அனுபவத்தை நாம் பரிசீலனைசெய்வோம். சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய இறையாண்மையால், மட்டுப்படுத்தப்படுகிற, அழுத்தப்படுகிற ஒரு சூழ்நிலைக்குள் நீங்கள் போடப்படும் போதெல்லாம், கர்த்தரைக் கோதுமையாக நீங்கள் அனுபவிக்கலாம். அந்த மட்டுப்படுத்தப்பட்ட, அழுத்துகிற சூழ்நிலையில் நீங்கள் கர்த்தரைத் தொடர்புகொள்ளும்போது, அவர் உங்களுக்கு ஒரு கோதுமை மணியாக இருப்பார். அவரைத் தொடர்புகொண்டவுடனே உங்கள் சூழ்நிலையிலும், உங்கள் மட்டுப்படுத்துதலிலும் நீங்கள் முற்றிலும் திருப்தியாக இருக்கமுடியும். ஆ! உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்துவாகிய அந்த ஜீவன்தான் கோதுமை மணி. அதுவே மனுவுருவெடுத்த, மட்டுப்படுத்தப் பட்டவராயிருக்கிற சின்ன தச்சனுடைய ஜீவன். நீங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, அடக்கப்படுகிற ஒரு சுற்றுச்சூழ் நிலையில், கிறிஸ்துவுடன் ஒரு ஜீவனுள்ள தொடுதல் உங்களுக்கு உண்டாகும்போது, "ஆ! கர்த்தாவே, நீர் முடிவில்லா தேவன். ஆனால் நீர் முடிவுள்ள மனிதனானீர். எந்த விதமான கட்டுப்படுத்துதலையும் சகிக்க உம்மிடத்தில் வல்லமை உண்டு," என்று நீங்கள் கூறுவீர்கள். நீங்கள் கிறிஸ்துவைக் கோதுமையாக அனுபவிப்பீர்கள்.

ஒரு நாள் மிக நல்ல, ஆவிக்குரிய ஒரு சகோதரி என்னைப் பார்க்க வந்தாள். அவள் ஒரு பணக்காரக் குடும்பத்திலிருந்து வந்தவள். அவள் திருமணம்செய்த சகோதரர் தன் தாயைக் கவனிக்க வேண்டியிருந்தது. அந்தத் தாயார் தன் மகனிடத்தில் அன்பாயிருந்தார். ஆனால், மருமகளிடத்தில் கதையே வேறு. இந்த இளம் சகோதரி தன் அனுபவம் சரியா அல்லது தவறா என்பதைக் காண்பதற்காக ஐக்கியத்தை நாடி என்னிடம் வந்தாள். அவளுடைய மாமியார் ஒவ்வொருநாளும் அவளை எவ்வளவு கொடுமைப்படுத்தினாள் என்று என்னிடம் சொன்னாள். அவள் கர்த்தரிடம் சென்று, ஏதாவது செய்யும்படிக் கர்த்தரைக் கேட்டதாகச்

சொன்னாள். அவளுடைய மாமியாரை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கர்த்தரிடம் கேட்க நிச்சயமாக அவள் துணியவில்லை. ஆனால் அந்தச் சூழ்நிலையிலிருந்து அவளை விடுவிக்குமாறு கர்த்தரிடம் கேட்டாள். அவள் கர்த்தரை வேண்டிக்கொண்டபோது, கர்த்தர் தாம் பூமியில் எப்படிப்பட்ட நபராக இருந்தார் என்று உடனே அவளுக்குக் காண்பிக்க ஆரம்பித்தார். அந்தச் சின்னக் குடும்பத்தில் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு தச்சனாக அவர் எவ்வளவு மட்டுப்படுத்தப்பட்டவராக இருந்தார் என்று அவர் அவளுக்குக் காண்பித்தார். இத்தகைய தரிசனத்தை அவள் பார்த்தபோது, "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்! நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்! உம் ஜீவன் என்னில் இருக்கிறது. கர்த்தாவே, என் தற்போதைய சூழ்நிலையில் நான் திருப்தியாயிருக்கிறேன். எதையும் மாற்றும்படி நான் உம்மைக் கேட்கவில்லை. நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்," என்று அவள் கண்ணீருடன் கதறினாள். அவளுடைய அனுபவம் சரிதானா என்று அவள் என்னிடம் கேட்டாள். அது மிகவும் சரி என்று நான் அவளிடம் சொன்னேன். இந்தச் சகோதரி கிறிஸ்துவை ஒரு கோதுமை மணியாக அனுபவித்தாள். நிஜமாகவே அவள் ஓர் ஆவிக்குரிய சகோதரி.

கொஞ்சக் காலத்திற்குப்பின்பு, இந்தச் சகோதரி மீண்டும் என்னிடத்தில் வந்தாள். இந்தமுறை அவள், "சகோதரரே, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! என் குடும்பத்தின் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் நான் திருப்தியாயிருக்கிறேன் என்பது மட்டும் இல்லை. நான் கர்த்தராகிய இயேசுவை இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பார்த்திருக்கிறேன்: அவர் மட்டுப்படுத்தப்பட்டது மட்டும் இல்லை, அவர் மரணத்துக்குள்ளாக்கப்பட்டு, அடக்கமும் பண்ணப்பட்டார். கர்த்தர் இதை எனக்கு வெளிப்படுத்தினபோது, நான் அவரிடம், 'என் குடும்பத்திலுள்ள சூழ்நிலையைப் பொறுத்துக்கொள்வதில் மட்டும் திருப்தி அடையாமல், அவர் நிமித்தம் இந்தக் குடும்பத்தில் நான் மரித்து அடக்கம்பண்ணப் படவும்கூட விரும்புகிறேன்' என்று சொன்னேன்," என்று கூறினாள். இது கிறிஸ்துவைக் கோதுமை மணியாக இன்னும் அதிகமாக அனுபவிப்பதாகும்.

நம்மில் பலருக்கு, அநேக சூழ்நிலைகளில், கர்த்தராகிய இயேசு ஒரு கோதுமை மணியைப்போலவே இருக்கிறார். நாம் அவரை எவ்வளவு அதிகமாக அனுபவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அவர் இப்படிப்பட்டவராக இருக்கிறார் என்று நாம் உணர்ந்துகொள்கிறோம். அவர் நம்மில் வாழ்கிறார். நாம் மட்டுப்படுத்தப்பட விரும்புவதற்கும், மரிக்க விரும்புவதற்கும், அடக்கம்பண்ணப்பட விரும்புவதற்கும், ஒன்றுமில்லாமலிருக்க

விரும்புவதற்கும் நம்மில் கிரியை செய்ய அவர் நம் ஜீவனாக இருக்கிறார். இதுவே கிறிஸ்துவைக் கோதுமையாக அனுபவிப்பதாகும்.

உங்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் உண்டா? உங்களிடம் எப்படிப்பட்ட அனுபவம் உள்ளது? நீங்கள் உங்கள் மனைவியுடன் அல்லது உங்கள் கணவருடன் சண்டைபோடு கிறீர்களா? அப்படியானால் கிறிஸ்துவின் விஷயத்தில் உங்கள் கதை முடிந்துவிட்டது. நீங்கள் அவரை இப்படிச் செழிப்பாக அனுபவிக்க வேண்டும். நீங்கள் அவரை ஜீவத்தண்ணீராகவும், கோதுமை மணியாகவும் அனுபவிக்க வேண்டும். நீங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டு, குழப்பமடைந்திருக்கும்போது, கர்த்தரை நோக்கிப் பார்த்தால், அவர் தாம் மட்டுப்படுத்தப்பட்டு, மரணத்துக்கு உட்படுத்தப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறார் என்பதை உங்களுக்குக் காண்பிப்பார் என்பது நிச்சயம். இப்பேர்ப்பட்டவராக அவர் உங்களில் வாழ்கிறார் என்று அவர் உங்களுக்குக் காண்பிப்பார். நீங்கள் மட்டுப்படுத்தப்பட்டவராக இருக்குமாறு அவர் உங்களைத் தாங்குவார். நீங்கள் மரணத்திற்கு உட்படுத்தப்பட்டு, அடக்கம்பண்ணப்படும்படிக்கு அவர் உங்களுக்கு ஆதரவளிப்பார். இந்த அளவுக்கு அவர் உங்களுக்கு ஊக்கமளிப்பார். இப்பேர்ப்பட்ட நபராக இருக்கும்படி அவர் உங்களைப் பலப்படுத்துவார். அப்போது நீங்கள் கிறிஸ்துவை கோதுமை மணியாக அனுபவிப்பீர்கள்.

பார்லியின் அனுபவம்

ஆனால் இதுதான் முடிவா? இல்லை! கர்த்தருக்கு ஸ்தோத்திரம். கோதுமையைத் தொடர்ந்து பார்லி இருக்கிறது. கல்லறை கர்த்தருடைய முடிவல்ல. அவர் உயிர்த்தெழுந்தார்! கோதுமையைத் தொடர்ந்து பார்லி வந்தது! கோதுமை மரணப்பள்ளத்தாக்காக இருக்கிறது. ஆனால், பார்லி உயிர்த்தெழுதலின் மலையாக இருக்கிறது. நீங்கள் கிறிஸ்துவைக் கோதுமை மணியாக அனுபவிக்கும்போதெல்லாம், அதைத் தொடர்ந்து கிறிஸ்துவைப் பார்லியாக அனுபவிக்கும் அனுபவமும் வரும் என்பதில் உறுதியாயிருங்கள்.

உண்மையில், கிறிஸ்துவைக் கோதுமை மணியாக, மட்டுப் படுத்தப்பட்ட இயேசுவாக, அனுபவிப்பதற்கு நாம் அவரைப் பார்லியாக, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாக, *பிரயோகிக்க* வேண்டும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே நம்மில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். இந்த உயிர்த்தெழுந்த கிறிஸ்து மனித மாம்சமாகுதல், சிலுவைமரணம், அடக்கம் ஆகியவைகளினூடாகக் கடந்துசென்ற ஜீவனை உடையவராயிருக்கிறார். ஆனால், இன்று அவரே

உயிர்த்தெழுந்தவராக இருக்கிறார். மாம்சத்திலிருந்த கிறிஸ்து எப்போதும் மட்டுப்படுத்தப்பட்டவராயிருந்தார். ஆனால் உயிர்த்தெழுதலில் கிறிஸ்து மட்டற்றவர், விடுவிக்கப்பட்டவர். நம்மில் வாழ்கிற இந்த மட்டற்ற கிறிஸ்துவே மட்டுக்குட்பட்ட இயேசுவை நாம் பின்பற்றும்படிச் செய்கிறார். இன்று நாம் மட்டுக்குட்பட்ட இயேசுவைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறோம். ஆனால், நாம் இதை மட்டற்ற கிறிஸ்துவின் வல்லமையில் செய்கிறோம். நமக்குள் வாழ்கிற மட்டற்ற கிறிஸ்துவே இதை நம்மில் சாத்தியமாக்குகிறார்.

நான் உங்களை ஒன்று கேட்கட்டுமா? நீங்கள் உங்கள் வீட்டில் இருக்கும்போது அல்லது உங்கள் வேலை ஸ்தலத்தில் இருக்கும்போது, நீங்கள் எப்படி நடக்கிறீர்கள்? உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாகவா அல்லது மட்டுக்குட்பட்ட கிறிஸ்துவாகவா? நீங்கள் இயேசுவைப் பின்பற்றுபவரானால், நீங்கள் மட்டுக்குட்பட்டவராக இருக்கவேண்டும். இயேசு பூமியில் இருந்தபோது அவர் எப்போதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தார், அவருடைய குடும்பத்தால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தார். மாம்சப்பிரகாரமான அவருடைய தாயாராலும், மாம்சப்பிரகார மான அவருடைய சகோதரர்களாலும்கூட மட்டுப்படுத்தப்பட்டிருந்தார். அவர் எப்போதும் மட்டுப்படுத்தப்பட்டவராகவே இருந்தார். அவர் இடத்தால் மட்டுப்படுத்தப்பட்டிருந்தார். காலத்தால் மட்டுப்படுத்தப் பட்டிருந்தார். அவர் எல்லா வற்றாலும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தார். நாம் இயேசுவின் வாழ்க்கையை வாழ விரும்பினால், நாமும்கூட மட்டுப் படுத்தப்பட்டவராகவே இருக்கவேண்டும். நாம் அவர் அடிகளைப் பின்பற்றினால் நமக்கு எந்தச் சுதந்திரமும் விடுதலையும் கிடையாது. நாம் இயேசுவின் நிமித்தம் மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருப்பது என்னே ஆசீர்வாதம்!

ஆனால், நாம் மட்டுப்படுத்தப்பட்டவர்களாக வாழ்வு தற்கான ஆற்றல் எது? மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்க நம்மைப் பலப்படுத்தும் பலம் மெய்யாகவே பெரிதாக இருக்கவேண்டும். கோபப்படுவது சுலபம், ஆனால் பொறுமைக்குப் பலம் தேவை. சினங்கொள்வது சுலபம், ஆனால் நீடிய பொறுமைக்குப் பரலோக ஆற்றல் தேவை. அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையே மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருக்க நம்மைப் பலப்படுத்துகிற வல்லமை. சிறிதளவு பொறுமைக்காக நான் பலப்படுத்தப் படுவதற்குக்கூட உயிர்த்தெழுந்த கிறிஸ்து என்னில் வாழவேண்டியது அவசியமாக இருக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை என் பொறுமையாகப் பிரயோகிப்பதே கிறிஸ்துவைப் பார்லியாக அனுபவிப்பதாகும்.

ஒருவேளை நீங்கள் என்னிடம், "சகோதரரே, நான் எல்லா

நேரமும் மட்டுப்படுத்தப்பட்டவனாக இருக்கவேண்டும் என்று எனக்குத் தெரியும். நான் என் மனைவியால், என் பிள்ளைகளால், என் எஜமானால், சகோதரர்களால், பிரத்தியேகமாக ஒரு குறிப்பிட்ட சகோதரரால் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அது என்னை மட்டுப்படுத்துகிறது, இது என்னை மட்டுப்படுத்துகிறது, நாள் முழுவதும் நான் மட்டுப்படுத்தப்படுகிறேன். நாளைக்கும், அடுத்த நாளும், இன்னும் மோசமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறேன். சூழ்நிலையை என்னால் எப்படிச் சந்திக்க முடியும்? உயிர்த்தெழுந்த கிறிஸ்து என்னில் வாழ்கிறார் என்று உணர்கிறேன். ஆனால் அவர் என்னில் மிகக் குறைவாகவே இருக்கிறார். என்னிடம் ஐந்து அப்பங்கள் கூட இல்லையே, என்னிடம் வெறும் ஒரேவோர் அப்பம்தானே இருக்கிறது," என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆம்! உங்களிடம் ஒரேவோர் அப்பம்தான் இருக்கக்கூடும். ஆனால் அது பார்லி அப்பம். அது ஒருபோதும் மட்டுப்படுத்தப்பட முடியாத உயிர்த்தெழுந்த கிறிஸ்துவாகிய அப்பம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்களிடம் மிகக் குறைவாகவே இருப்பதுபோலத் தோன்றலாம். ஆனால் அதைப்பற்றிக் கவலையில்லை. ஏனென்றால் அவருக்கு எந்த மட்டுப்படுத்தலும் கிடையாது. எந்தச் சூழ்நிலையையும் சந்திக்க உங்களிடமுள்ள கொஞ்சமே போதுமானது. உங்களால் சூழ்நிலையைச் சந்திக்கமுடியாது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அது சரிதான்! உங்களால் நிச்சயமாக முடியாது. ஆனால் ஒருவரால் முடியும்—அவர் பார்லி. ஒரு பார்லி அப்பம் உங்களுக்குள் இருக்கிறது. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஒரு சிறு துண்டு உங்களில் இருக்கிறது. அது போதும். உயிர்த்தெழுந்த கிறிஸ்து மட்டற்றவர். உங்கள் சூழ்நிலைக்கு அவரைப் பிரயோகியுங்கள். அவர் ஒருபோதும் தீர்ந்துபோகாதவர். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வல்லமையால், மனுவுருவெடுத்த இயேசுவின் அடிகளை உங்களால் பின்பற்றமுடியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் ஜீவனைக்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட இயேசுவின் வாழ்க்கையை உங்களால் வாழமுடியும்.

சில வேளைகளில் ஒரு சகோதரர், "ஆ, ஒரு சாட்சி கொடுக்க வேண்டும் என்ற பாரம் எனக்கிருக்கிறது. ஆனால் நான் மிகப் பலவீனமாக இருக்கிறேன்," என்று சொல்லக் கூடும். ஐயாயிரம் மக்கள் போஷிக்கப்படுவதற்கான தேவை இருப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் கையிருப்போ ஐந்து பார்லி அப்பங்கள் மட்டுமே. இருந்தபோதும், விசுவாசத்துடன் முன்செல்ல வேண்டும். உங்கள் பங்கு மிகச் சிறியதாகத் தோன்றினாலும், தேவை மிக அதிகமாக இருந்தாலும், உங்களிடத்தில் இருப்பவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைவிட ஒன்றும் குறைவானவர் அல்லர்

என்று நீங்கள் உணர வேண்டும். உங்களைப் பலப்படுத்தும் அவரால் நீங்கள் எல்லா வற்றையும் செய்யமுடியும். ஏனென்றால் அவர் உயிர்த் தெழுந்தவர், அவர் மட்டற்றவர். அவரைப் பிரயோகியுங்கள்!

ஒரு சகோதரர் உங்களைப் பார்க்க வரும்போது, கிறிஸ்து உங்களுக்குள் பார்லியாக இருக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். இந்தச் சகோதரனுடன் நீங்கள் ஐக்கியம் கொள்ளும்போது கிறிஸ்துவைப் பிரயோகிக்கவேண்டும். சில வேளைகளில் நீங்கள் இதை அப்படியே மறந்துவிடுகிறீர்கள். நீங்கள் ஒரு சகோதரனைச் சந்திக்கும்போது வியட்நாமைப்பற்றி, உலக நிலைமையைப்பற்றி, அல்லது வானிலையைப்பற்றிப் பேசுகிறீர்கள். நீங்கள் வானிலையை நினைவில் கொண்டிருக் கிறீர்கள். ஆனால் கிறிஸ்துவை மறந்துவிடுகிறீர்கள். சகோதர னுடன் நீங்கள் ஐக்கியம்கொள்ளும்போது கிறிஸ்துவைப் பிரயோ கிக்கத் தவறிவிடுகிறீர்கள். அந்தச் சகோதரன் உங்களைவிட்டுச் சென்றபிறகு நீங்கள் பசியா யிருப்பதைப்போல உணர்கிறீர்கள். பசியோடு மட்டும் இல்லை, நோயுற்றிருப்பதைப்போலவும் உணர் கிறீர்கள். கிறிஸ்துவைப் பிரயோகிக்காததால் நோயுற்றிருக்கிறீர்கள். ஒவ்வொரு சூழ்நிலையையும், கிறிஸ்துவைப் பிரயோகிப்பதற்கான வாய்ப்பாகப் பிடித்துக்கொள்ள வேண்டும். அவரைப் பிரயோகி யுங்கள், அவரைப் பிரயோகியுங்கள், அவரைப் பிரயோகியுங்கள். அப்போது நீங்கள் கூட்டத்துக்கு வரும்போது துதிப்பதோ, சாட்சிகொடுப்பதோ உங்களுக்கு மிக எளிதாக இருக்கும். கர்த்தருக்குச் செலுத்துவதற்கு உங்களிடத்தில் அநேக பார்லி அப்பங்கள் இருக்கும்.

சில இளைய உடன் வேலையாட்கள் கூட்டத்துக்கு வரும்போது அங்கு மூத்த சகோதரர்கள் யாராவது இருக்கிறார்களா என்று எல்லாப் பக்கங்களிலும் பார்க்கிறார்கள் என்று சகோதரர் வாட்ச்மேன் நீ ஒருமுறை கூறினார். மூத்த சகோதரர்கள் யாரும் இல்லையென்றால், வந்திருக்கிறவர்கள் எல்லாரும் புதிய விசுவாசிகள் என்றால், ஜெபிக்கவும், தங்களிடம் இருப்பதை வெளிக்காட்டவும் அவர்களுக்குத் தைரியம் வருகிறது. ஆனால் சில மூத்த சகோதரர்களை அங்கு அவர்கள் பார்த்துவிட்டால், உடனே பயத்துடன் ஒடுங்கிப்போய்விடுகிறார்கள். இது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குரியதல்ல. உங்களிடம் உயிர்த்தெழுந்த கிறிஸ்து இருந்தால், அப்போஸ்தலனாகிய பவுலே அங்கிருந்தாலும், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம், என் சகோதரரிடம் உயிர்த்தெழுந்த கிறிஸ்து இருக்கிறார். என்னிடம்கூட அவர் இருக்கிறார். அவரிடத்தில் ஐந்நூறு அப்பங்கள் இருக்கக்கூடும். ஆனால் என்னிடம் குறைந்தபட்சம் ஓர் அப்பமாவது இருக்கிறது.

அல்லேலூயா!" என்று நீங்கள் சொல்வீர்கள். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சிறிதளவாவது உங்களிடம் இருக்கும்வரை எல்லாச் சூழ்நிலையையும் சந்திப்பதற்குத் தேவையானதைவிட அதிகமாகவே உங்களிடம் இருக்கிறது. அவரே பார்லி அப்பம், அவரே உயிர்த்தெழுந்தவர், எதுவும் அவரைத் தடுக்கமுடியாது, எதுவும் அவரை மட்டுப்படுத்த முடியாது.

நீங்கள் சகோதர சகோதரிகளுடன் கூட்டத்துக்கு வரும்போது, உங்கள் பொறுப்பை உணரவேண்டும். கூட்டத்தில் நீங்கள் பிறருடன் பகிர்ந்துகொள்ளவேண்டும். நீங்கள் கொஞ்சம் துதியையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும். நீங்கள் கொஞ்சம் ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும். இது உங்கள் பொறுப்பு. "ஆ, நான் மிகவும் பலவீனமானவன்," என்று நீங்கள் சொல்கிறீர்கள். உங்களில்தாமே நீங்கள் பலவீனர்கள். ஆனால் கிறிஸ்துவுக்குள் நீங்கள் பலவீனர்கள் இல்லை. "என்னிடத்தில் ஒன்றுமில்லை," என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆம், உங்களிடத்தில் ஒன்றுமில்லை. ஆனால் கிறிஸ்துவுக்குள் நீங்கள் எல்லாவற்றையும் கொண்டிருக்கிறீர்கள். "ஆ, மிகவும் தரித்திரனாயிருக்கிறேன்," என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆம், உங்களில்தாமே நீங்கள் தரித்திரராக இருக்கிறீர்கள். ஆனால் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குள் நீங்கள் தரித்திரர் இல்லை. உங்களிலிருக்கிற பார்லி கிறிஸ்து என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் கூட்டத்துக்கு வரும்போது, உங்கள் ஜெபத்தாலும், உங்கள் சாட்சியாலும் மற்றவர்களெல்லாரையும் போஷிப்பதற்கு, அவரை ஒரு பார்லி அப்பமாகப் பிரயோகியுங்கள். இதை முயற்சிசெய்யுங்கள்! இதைப் பயிற்சிசெய்யுங்கள்! அப்போது நீங்கள் மிகவும் வளமாக்கப்படுவீர்கள். தொடக்கத்தில் உங்களிடம் ஒரேவோர் அப்பம்தான் இருந்தது. ஆனால், இறுதியில் உங்களிடத்தில் நூறு அப்பங்கள் இருக்கக்கூடும். நீங்கள் இதைப் பயிற்சிசெய்வதின்மூலம் செழிப்பாக்கப்படுவீர்கள். கூட்டங்கள் உங்களுடைய வேலை இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். நீங்கள் அப்படி நினைத்தால் கூட்டங்களின் கதை அவ்வளவுதான். கிறிஸ்துவைப் பிரயோகிக்க நீங்கள் கற்றுக்கொள்ளவேண்டும். உங்களிடத்தில் இருக்கும் கிறிஸ்துவை நீங்கள் பயன்படுத்த வேண்டும்.

"நீங்களே அவர்களுக்குப் போஜனங்கொடுங்கள்," என்று இயேசு தம் சீடர்களிடம் சொன்னார். சீடர்கள், "எங்களிடத்தில் ஐந்து பார்லி அப்பங்கள் இருக்கின்றன. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம்?" என்றார்கள். கர்த்தர், "அவைகளை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்," என்று பதிலுரைத்தார். அவைகள் பார்லி அப்பங்களாக இருக்கும்வரை,

அவைகள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குரிய ஏதோ வொன்றாக இருக்கும்வரை, அது போதும். அது நிலைமையை நிறைவுசெய்யும், அங்கு மீதியும் இருக்கும்.

சகோதர சகோதரிகளே, நீங்கள் என் வார்த்தையை எடுத்துக் கொண்டால், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவில் விசுவாசமாயிருங்கள்; அவரைப் பிரயோகியுங்கள்; நீங்கள் எதை வைத்து ஆரம்பித்தீர்களோ, அதைவிட உங்களில் நிலைத்திருக்கும் மீதி அதிகமாக இருக்கும் என்று நீங்கள் கண்டுகொள்வீர்கள். இதுவே பார்லி. இது வெறும் போதனை இல்லை. மாறாக இது எல்லா நாளும் எல்லாச் சூழ்நிலையிலும் நாம் அனுபவிப்பதற்கும், பிரயோகிப்பதற்குமான ஒரு காரியம். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை, மட்டற்றவரை, தீர்ந்துபோகாதவரைப் பிரயோகியுங்கள். "கர்த்தாவே, தேவையை என்னால் நிறைவுசெய்ய முடியாது, சூழ்நிலையை என்னால் எதிர்கொள்ள முடியாது. ஆனால் நான் உம்மை எவ்வளவாய்த் துதிக்கிறேன். உம்மால் கூடும். முழுவதும் உம்மில் நம்பிக்கை வைத்து முழுவதும் உம்மேல் நம்பிக்கையாயிருந்து நான் முன்செல் கிறேன்," என்று அவரிடம் சொல்லுங்கள்.

கொஞ்சக் காலத்திற்குப்பின்பு, ஒருவேளை ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் இருக்கக்கூடும். தன் குடும்பத்தில் கிறிஸ்துவை கோதுமை மணியாக அனுபவித்திருந்த அந்த சகோதரி, இன்னொரு அனுபவத்தைப்பற்றி சாட்சிகொடுத்தாள். இந்தமுறை கிறிஸ்துவைப் பார்லியாக அனுபவித்திருந்தாள். அவளுடைய மாமியாரும், அவளுடைய உறவினர்களில் அநேகரும் அவள்மூலமாகக் கர்த்தரிடத்தில் கொண்டுவரப் பட்டதாக அவள் சாட்சிகொடுத்தாள். அநேக மக்களைப் போஷிக்கக்கூடிய ஒரு பார்லி அப்பமாக அவள் மாறியிருந்தாள். அவள் கிறிஸ்துவை உயிர்த்தெழுதலில் அனுபவித் திருந்தாள்.

இப்படிப்பட்ட அனுபவம் கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லியாகவும் உள்ளாக அறிய உங்களைத் தூண்டுவதோடல் லாமல், இந்த அனுபவத்தால் நீங்களே ஒரு கோதுமை மணி யாகவும் மாறிவிடுகிறீர்கள்; நீங்களே ஒரு பார்லி அப்பமாகவும் மாறிவிடுகிறீர்கள்; அப்போது நீங்கள் பிறருக்குப் போஜனமா யிருக்கிறீர்கள். நீங்கள் அனுபவித்திருப்பதை வைத்துப் பிறரை உங்களால் போஷிக்கமுடியும். அநேக மக்கள் இந்தச் சகோதரியால் போஷிக்கப்பட்டார்கள். அவள் கூட்டத்துக்கு வந்தபோதெல்லாம், தன் வாயைத் திறக்காமல் இருந்தபோதுங்கூட, சகோதர சகோத ரிகள் எல்லாரும் கிறிஸ்து தங்களுக்குள் பரிமாறப்படுவதையும், ஜீவன் பகிர்ந்துதரப்படுவதையும் உணர்ந்தார்கள். அவள் ஜெபித்தபோது எல்லாருடைய ஆவிகளும், இருதயங்களும் திருப்தி யடைந்தன. கர்த்தருடைய பிள்ளைகளின் நடுவில் அவள் ஒரு

கோதுமை மணியாகிவிட்டாள். அவளே அநேக மக்களைத் திருப்திப்படுத்திப் போஷிக்கக்கூடிய ஒரு பார்லி அப்பமாகி விட்டாள். அவள் கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லியாகவும் அனுபவித்தாள்; எனவே அவளே ஒரு கோதுமை மணியாகவும், ஒரு பார்லி அப்பமாகவும் ஆகிவிட்டாள்.

திராட்சைச்செடி

நாம் இப்போது மரங்களைக்குறித்துக் கொஞ்சம் பார்ப்போம். முதலாவது திராட்சைச் செடி. திராட்சைச் செடி எதைக் குறிக்கிறது? நியாயாதிபதிகள் 9:13-ல் திராட்சைச் செடி, "தேவனையும், மனுஷனையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ?" என்றது. ஓர் அர்த்தத்தில் இது பலியாகும் கிறிஸ்துவை, தம்மிடமிருந்த எல்லாவற்றையும் பலியாக்கிவிட்ட கிறிஸ்துவைச் சித்திரிக்கிறது. ஆனால் பிரதானமான காரியம் இது அல்ல. அவர் தம்மைப் பலியாக்கிய தின்மூலம் தேவனையும், மனுஷனையும் மகிழப்பண்ணக்கூடிய ஒன்றை உற்பத்திசெய்தார். இதுவே புதுத்திராட்சைரசம். இதுவே அதின் பிரதானமான உட்கருத்து.

கிறிஸ்துவை நீங்கள் இப்படி அனுபவித்தது உண்டா? நம்மில் பெரும்பாலோருக்கு இந்த வகையான அனுபவம் கொஞ்சம் உண்டு என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால், ஒருவேளை நாம் இதற்கு அதிகக் கவனம்செலுத்தியிருக்கமாட்டோம். சிலவேளைகளில், பிறரை சந்தோஷப்படுத்தவும், கர்த்தரை சந்தோஷப்படுத்தவும் நாம் நம்மையே பலியாக்க வேண்டிய ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்குள் கர்த்தர் தம் இறையாண்மை யின்படி நம்மை வைக்கிறார். இந்தச் சூழ்நிலையில் நாம் கர்த்தரைத் தொடர்புகொள்ளும்போது, நாம் அவரைத் திராட்சை ரசத்தை உற்பத்திசெய்கிற திராட்சைச் செடியாக அனுபவிக்கிறோம். நாம் தேவனை மகிழ்விக்கிறவராகவும், மற்றவர்களை மகிழ்விக்கிற வராகவும் கிறிஸ்துவை அனுபவிக்கிறோம். இந்த அனுபவத்தின் பயனாக நாம் திராட்சைச் செடியாகிவிடுகிறோம். நாம் மனிதனையும், தேவனையும் மகிழப்பண்ணக்கூடிய ஒன்றை உற்பத்தி செய்கிறவர்களாகிவிடுகிறோம். உங்களுக்கு இப்படிப் பட்ட அனுபவம் உண்டு என்று எனக்குத் தெரியும். எல்லாச் சூழ்நிலையிலும், எல்லாத் தேவையையும் சந்திப்பதற்குக் கிறிஸ்துவின் வெவ்வேறு அம்சங்கள் இருக்கின்றன. கிறிஸ்து அவ்வளவு ஐசுவரியமானவர். அவர் கோதுமை மணியும், பார்லி அப்பமும் மட்டும் இல்லை, அவரே எல்லா மரங்களு மாயிருக்கிறார். முதல் மரம் தேவனுக்கும் மற்றவர்களுக்கும் சந்தோஷத்தை உற்பத்திசெய்கிற மரம். எல்லா சகோதர

சகோதரிகளும் உங்களிடத்தில் சந்தோஷமாக இருக்கிறார்கள் என்றால், பெருமளவிலோ அல்லது சிறிய அளவிலோ நீங்கள் கிறிஸ்துவை இப்படி அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது நிச்சயம். நீங்கள் கிறிஸ்துவைத் திராட்சைரச உற்பத்தியாளராக அனுபவித்துக்கொண்டிருக்கிறீர்கள். பிறரை மகிழ்விக்க உங்களையே நீங்கள் அவர்களுக்காகப் பலியாக்குவதற்காக, கிறிஸ்து உங்களைப் பலப்படுத்தி, தியாகம்செய்யும் செம்மறியாக உங்களில் வாழ்கிறார்.

பல ஆண்டுகளுக்குமுன்பு நான் தைபேயிலுள்ள, ∴போர்மோஸாவில் இருந்தபோது ஆவிக்குரிய உதவியைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல சகோதர சகோதரிகள் வந்து எங்களுடன் தங்கினார்கள். அவர்களுக்குள் ஒரு சகோதரி எப்போதும் முறுமுறுத்துக்கொண்டே இருந்தாள், எப்போதும் புகார்செய்துகொண்டே இருந்தாள். அவள் குளிக்கும்போது, தண்ணீர் போதுமான அளவுக்கு சூடாக இருக்கவில்லை, அவள் சாப்பிட்டபோது உணவு மிகவும் குளிர்ந்திருந்தது. நாள் முழுவதும் "ஏன் இது?" "ஏன் அது?" இதுதான் கேள்வி. அவளுடன் தங்கியிருந்த எல்லாருக்கும் அவள் தலைவலியைக் கொடுத்தாள். யாரும் அவளுடன் சந்தோஷமாயிருக்கவில்லை. ஏனென்றால், அவள் தன்னையே பலியாக்கக் கற்றுக்கொள்ளவில்லை. பலியாக்கும் கிறிஸ்துவைத் தன் சூழ்நிலையில் எப்படிப் பிரயோகிக்கவேண்டும் என்று அவள் ஒருபோதும் கற்றுக் கொள்ளவில்லை. அவளும் சந்தோஷமாக இல்லை. வேறு யாரையும் அவள் சந்தோஷப்படுத்தவுமில்லை. அவளிடத்தில் திராட்சைரசம் குறைவாக இருந்தது. பிறருக்காவும், தேவனுக்காகவும் திராட்சைரசத்தை உற்பத்திசெய்ய தம்மையே பலியாக்குகிற, திராட்சைரச-உற்பத்தியாளராக அவள் கிறிஸ்துவை அனுபவிக்கவில்லை.

நீங்கள் கிறிஸ்துவை இந்த அம்சத்தில் அனுபவித்தால் உங்களிடத்தில் குடிப்பதற்கு அதிகத் திராட்சைரசம் இருக்கும். நீங்கள் வெறித்திருப்பீர்கள். அப்போது நீங்கள் கிறிஸ்துவைக் குடித்துப் பைத்தியமாக இருப்பீர்கள். நீங்கள் கிறிஸ்துவைக் குடித்து வெறியராகவும், பைத்தியமாகவும் இருக்கவேண்டும். "நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். கர்த்தாவே, நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். சுயநலம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியாது. அது எனக்கு அந்நிய மொழி. ஒவ்வொருநாளும் நான் கிறிஸ்துவாகிய திராட்சை ரசத்தைக் குடித்துக்கொண்டிருக்கிறேன்," என்று உங்களால் சொல்ல இயலவேண்டும்.

மிகவும் சுயநலமற்றவனே மிகவும் சந்தோஷமானவன். மிகவும்

சுயநலமுள்ளவர்கள்தான் எப்போதும் மிகவும் பரிதாபமானவர்கள். அவர்கள் எப்போதும், "என்மேல் பரிதாப மாயிரும்; என்னைக் கொஞ்சம் நல்லமுறையில் நடத்தும்," என்று கதறுகிறார்கள். அவர்கள் பிச்சைக்காரர்களைப்போன்றவர்கள்; எப்போதும் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தியாகம்செய்கிறவனே சந்தோஷமானவன். நம்மை நாமே எப்படித் தியாகமாய்ப் பலியாக்கமுடியும்? தியாகமாய்ப் பலியிட நமக்குப் பலமில்லை. ஏனென்றால் நம் ஜீவன் ஜென்மசுபாவ ஜீவன், சுயநலமிக்க ஜீவன். கிறிஸ்துவின் ஜீவன் மட்டுமே தியாகமாய்ப் பலியாக்கும் ஜீவன். இந்தக் கிறிஸ்துவை நீங்கள் தொடர்புகொண்டால், அவருடைய தியாகம்செய்யும் ஜீவனையே நீங்கள் அனுபவித்தால், தேவனுக்காகவும் பிறருக்காகவும் தியாகமாய் உங்களைப் பலியாக்க அவர் உங்களுக்கு ஆற்றலூட்டி, உங்களைப் பலப் படுத்துவார். அப்போது நீங்கள்தான் மிகவும் சந்தோஷமான நபராக இருப்பீர்கள். நீங்கள் சந்தோஷத்தால் வெறித்திருப்பீர்கள். இதுவே கிறிஸ்துவைத் திராட்சைச் செடியாக அனுபவிப்பதாகும். இந்த அனுபவத்தால் நீங்கள் பிறருக்கு ஒரு திராட்சைச் செடியாகி விடுகிறீர்கள். உங்களைத் தொடர்புகொள்கிற அனைவரும் உங்களுடன் சந்தோஷமாயிருப்பார்கள். நீங்கள் தேவனை மகிழ்விப்பீர்கள்.

திராட்சைப் பழங்களைத் திராட்சை ரசமாக்குவதற்கு என்ன செய்யவேண்டும்? அவைகள் பிழியப்பட வேண்டும். தேவனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்க நீங்கள் பிழியப்பட வேண்டும். கிறிஸ்துவே பார்லி என்றும், உயிர்த்தெழுந்த கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார் என்றும், எல்லாச் சூழ்நிலையையும் சந்திக்க அவர் போதுமானவர் என்றும் நீங்கள் அறிந்து களிகூருகிறீர்கள். அல்லேலூயா சொல்கிறீர்கள்! ஆனால் மிகவும் எளிதாக அல்லேலூயா சொல்லிவிடாதீர்கள். ஏனென்றால் பார்லியைத் தொடர்ந்து உடனே திராட்சைசெடி இருக்கிறது. தேவனுக்கும், மனிதனுக்கும் மகிழ்ச்சியைக் கொண்டுவர திராட்சைப் பழங்கள் பிழியப்பட வேண்டும். நீங்களும்கூட பிழியப்படவேண்டும். கிறிஸ்துவாகிய திராட்சை ரசத்தை நீங்கள் எவ்வளவு அதிகமாகக் குடிக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் பிழியப்பட வேண்டும் என்றும் உணர்ந்துகொள்வீர்கள். பிறரை மகிழ்விக்க, கர்த்தருடைய வீட்டில் ஏதோவொன்றை உற்பத்திசெய்ய, நீங்கள் உடைக்கப்பட வேண்டும்.

நீங்கள் வரிசையைப் பாருங்கள்: முதலாவது கோதுமை, பின்னர் பார்லி, பின்னர் திராட்சைசெடி, நம் அனுபவம் இதை நிரூபிக்கிறது. நான் மறுபடியும் சொல்கிறேன்: இவைகளை வெறும் உபதேசமாகவோ, போதனையாகவோ எடுத்துக்கொள்ளாதீர்கள்.

வெவ்வேறு அம்சங்களில் கிறிஸ்துவை நீங்கள் உணர்ந்து, அவரை உங்கள் அன்றாட வாழ்க்கையில் பிரயோகிக்கக்கூடிய வழிகளை நினைவில்கொள்ளுங்கள்.

அதிகாரம் ஆறு

தேசத்தின் நன்மை—
அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள்

II. உணவு (தொடர்ச்சி)

வேத வாசிப்பு: உபா. 8:7, 8; 7:13; 32:13, 14; நியா. 9:9, 11, 13; எசே. 34:29; எண். 13:23, 27; சக. 4:12-14

நல்ல தேசமாகிய கானானிலுள்ள மூன்று வகையான உணவுகளைப் பார்த்தோம்: கோதுமை, பார்லி, திராட்சை. நாம் மீண்டும் வரிசையைக் கவனிப்போம்: முதலாவது கோதுமை, பின்பு பார்லி, பின்பு திராட்சை. முதலாவது மனுவுருவெடுத்த, மட்டுப்படுத்தப்பட்ட, சிலுவையிலறையப்பட்ட, அடக்கம் பண்ணப்பட்ட இயேசுவை நாம் அனுபவிக்க ஆரம்பிக்கிறோம்; பின்பு உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை நாம் தொடுகிறோம். அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையால், அவர் இந்தப் பூமியில் வாழ்ந்த வாழ்க்கையை நாம் வாழமுடியும். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவால், மனுவுருவெடுத்த மட்டுப்படுத்தப்பட்ட இயேசுவின் வாழ்க்கையை நம்மால் வாழமுடியும். எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் துன்பப்படவேண்டும் என்று பின்பு கற்றுக்கொள்கிறோம். எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவை அனுபவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் திராட்சைரச ஆலைக்குள் போடப்படுவோம், நாம் பிழியப்படுவோம். அப்போதுதான் தேவனையும், மற்றவர்களையும் பிரியப்படுத்துவதற்கு ஏதேனும் உற்பத்திசெய்யப்படும். நம் அனுபவம் இந்தக் காரியங்களுக் கெல்லாம் சாட்சிபகர்கிறது.

அத்தி மரங்கள்

நாம் இப்போது நான்காவது காரியமாகிய அத்திமரங்களைப் பார்ப்போம். அத்திமரம் மதுரத்தையும், நற்கனியையும் குறிக்கிறது என்று நியாயாதிபதிகள் 9:11 கூறுகிறது. கிறிஸ்துவின் மதுரமும், கிறிஸ்துவின் திருப்தியும் நம் நிரப்பீடாக இருக்கின்றன என்று அது கூறுகிறது. முதலாவது காரியமாகிய கோதுமையில் மதுரத்தையும், திருப்தியையும் நம்மால் பார்க்கமுடியவில்லை; பார்லியிலும் நம்மால் அதைப் பார்க்க முடியவில்லை. திராட்சை யும்கூட கிறிஸ்துவின் மதுரமும், திருப்தியும் நம் நிரப்பீடாக

இருப்பதை வலியுறுத்தவில்லை. இதைக் காண்பதற்கு நான்காவது காரியமாகிய அத்தி மரத்துக்கு நாம் வரவேண்டும்.

எவ்வளவு அதிகமாகக் கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும் நாம் அனுபவித்துமகிழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாகக் கிறிஸ்துவின் மதுரத்தையும், திருப்தியையும் நாம் அனுபவிக்கிறோம் என்பதை நம் அனுபவத்திலிருந்து நாம் உணர்ந்துகொள்கிறோம். எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவை உயிர்த்தெழுந்தவராக அனுபவித்து மகிழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் பிழியப்படுவோம், அவ்வளவு அதிகமாக நாம் அவரைத் திராட்சையாக அனுபவித்துமகிழ்வோம். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அந்தக் கணப்பொழுதில்தானே, கிறிஸ்துவின் மதுரத்தையும், திருப்தியையும் நாம் நம் நிரப்பீடாக உணர்ந்துகொள்கிறோம்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன்பு சீனாவில், கியாங்-சு என்ற வட பிராந்தியத்தில் வாழ்ந்த ஒரு வாலிபப்பெண் சுகவீனமாயிருந்தாள். அது பஞ்சகாலம். அவள் கொடிய வறுமையில் இருந்தாள். அவள் வியாதியாயிருந்த அந்த நேரத்தில் கர்த்தரிடத்திற்குக் கொண்டுவரப்பட்டாள், கர்த்தரைப் பெற்றுக் கொண்டாள். முழுக் குடும்பத்திலுமிருந்து வந்த கடுமையான எதிர்ப்பின் மத்தியிலும், ஆவிக்குரிய வளர்ச்சியில் அவள் விரைந்து முன்னேறினாள். அந்த நேரத்தில்தானே அவள் கணவனும் மரித்துப்போனான். நெருக்கத்தின்மேல் நெருக்கம் அவளுக்கு வந்தது. ஒன்றன்பின் ஒன்றாக அவள் திராட்சை ஆலைக்குள் போடப்பட்டாள். உபதேசத்தைப்பற்றி அவள் மிகக் குறைவாகவே அறிந்திருந்தாள். ஆனால், மெய்யாகவே அவள் ஏதோவொன்றை ஆவியில் அனுபவித்தாள். அவள் கிறிஸ்துவை அனுபவித்தாள். ஒவ்வொருநாளும் அவள் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்தாள். கிறிஸ்துவே தன் உண்மையான ஜீவன் என்று சாட்சி பகர்ந்தாள். அவள் குடும்பத்தார் அவளைக் கடுமையாய் எதிர்த்தார்கள். அவள் எவ்வளவு அதிகமாய்க் கூட்டங்களில் கலந்துகொண்டாளோ, அவ்வளவு அதிகமாய் அவளுடைய மாமியார் அவளை அடித்து, சித்திரவதைசெய்தாள். அவளோ கர்த்தருக்கு ஸ்தோத்திரப் பாடல்களைப்பாடினாள். அவள் எவ்வளவு அதிகமாகக் களிகூர்ந்தாளோ, அவ்வளவு அதிகமாக அவளுடைய மாமியாரின் கடுங்கோபம் கிளர்ந்தெழுந்தது. அவள் இன்னும் அதிகமாகத் தாக்கப்பட்டாள். ஆனாலும், அந்தச் சகோதரி கலக்கமடைய வில்லை. அவள் மாமியாரின் அடிகள் அவளைக் கர்த்தரை இன்னும் அதிகமாகத் துதிக்கும்படிச்செய்தன. ஒருநாள் அவள் கூட்டத்திலிருந்து பாடிக்கொண்டே திரும்பியபோது, அவளுடைய மாமியாருக்குக் கடுமையான எரிச்சலுண்டாயிற்று. அவள், "நீ

என்னதான் செய்துகொண்டிருக்கிறாய்? நாம் மிகவும் தரித்திரர்கள். ஆனாலும் பாடுவதற்கு உனக்கு எப்படி இருதயம் வந்தது!" என்று கூச்சலிட்டாள். கத்திமுடித்த பின்பு அவளுக்கு நல்ல அடியும் கொடுத்தாள். அந்த வாலிப சகோதரி அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டு சத்தமாய் கர்த்தருக்குத் துதிகளைப் பாடி ஜெபித்தாள். மாமியாரால் அதைக் கேட்காமல் இருக்கமுடியவில்லை. கேட்பதற்காகக் கதவருகே வந்தாள். "இவளுக்கு என்ன ஆகிவிட்டது," என்று மாமியார் நினைத்தாள். "ஒருவேளை அவள் பைத்தியமோ!" அவள் உன்னிப்பாய்க் கவனித்துக் கேட்டாள். அந்த வாலிப சகோதரி எப்படி ஜெபித்துக் கொண்டிருந்தாள் என்று உங்களுக்குத் தெரியுமா? "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன், நான் உம்மை ஸ்தோத்திரிக் கிறேன், நான் மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன்! என் மாமியாரை மன்னியும்! அவர்களை இரட்சியும். கர்த்தாவே, அவர்களை இரட்சியும்! அவர்களுக்கு வெளிச்சத்தைத் தாரும். என்னிடத்தில் இருக்கும் சந்தோஷத்தை அவர்களுக்குத் தாரும்! கர்த்தாவே, அவர்களை ஆசீர்வதியும்!" இந்த எளிமையான ஜெபம் அவளுடைய மாமியாரைப் பெரிதும் திகைப்புக்குள்ளாக்கியது. அந்த வாலிபப்பெண் ஒருவேளை அவளை சபித்துக்கொண்டிருப் பாள் என்று அவள் நினைத்தாள். ஆனால் சபிப்பதற்குப்பதிலாக அவள் தன் மாமியாருக்காக ஜெபித்துக்கொண்டிருந்தாள். மாமியார் கதவைத் தட்டினாள். மாமியார் தன்னைத் திரும்பவும் அடிக்க வருகிறார் என்று பயந்து நடுங்கிக்கொண்டே அந்த வாலிப சகோதரி கதவைத்திறந்தாள். ஆனால் அதற்குப் பதிலாக, "மகளே, நீ எப்படி இருக்கிறாய், நீ எப்படி இருக்கிறாய்? நான் உன்னை அடித்தேன்! என்னை ஆசீர்வதிக்கவும், எனக்கு மகிழ்ச்சியைத் தரவும் உன் தேவனை வேண்டிக்கொண்டு நீ ஏன் எனக்காக ஜெபிக்கிறாய்? உனக்கு என்ன ஆயிற்று?" என்று மாமியார் கேட்டாள். அந்த வாலிப சகோதரி பதிலுரைத்தாள், "அம்மா, கிறிஸ்து என்னைத் திருப்தியாக்குகிறார்! நான் மிகவும் திருப்தியாயிருக்கிறேன். நான் மதுரத்தால் நிறைந்திருக்கிறேன். அம்மா, உங்களுக்குத் தெரியுமா, நீங்கள் என்னை எவ்வளவு அதிகமாக அடிக்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக என்னிடம் மதுரமும், திருப்தியும் இருக்கின்றன." உடனே மாமியார் உள்ளே வந்து அவள் கையைப் பிடித்து, "மகளே, நாம் முழங்கால் படியிடுவோம். எப்படி ஜெபிக்கவேண்டும் என்று எனக்குக் கற்றுத்தா. உன் இயேசுவை நான் என்னுடையவராக எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்," என்றாள்.

ஆ, கர்த்தருடைய மதுரமும், திருப்தியும் நம் நிரப்பீடாக இருக்கின்றன! எவ்வளவு அதிகமாக நாம் பிழியப்படுகிறோமோ,

அவ்வளவு அதிகமாக நாம் திருப்தியடைவோம் என்பதில் நாம் உறுதியாக இருக்கலாம். அவருடைய மதுரத்தையும், அவருடைய திருப்தியையும் நாம் உணர்ந்துகொள்வதற்கு நெருக்கம் நமக்கு உதவுகிறது. இதுவே கிறிஸ்துவை அத்திமரமாக அனுபவிப்பதாகும்.

மாதளஞ்செடிகள்

நாம் இப்போது ஐந்தாவது காரியமாகிய மாதளஞ்செடிகளுக்கு வருகிறோம். அவை எதைக் குறிக்கின்றன? நீங்கள் மாதளஞ் செடியைப் பார்த்திருக்கிறீர்களா? நீங்கள் பழுத்த மாதுளைப் பழத்தைப் பார்க்கும்போது உடனே ஜீவனின் பரிபூரணத்தையும், அழகையும் உணர்ந்துகொள்கிறீர்கள்.

நாம் சொன்ன அந்த வாலிப சகோதரியைப்பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவள் வாழ்க்கையில் எவ்வளவு அழகு இருந்தது! அவள் வாழ்க்கை கிறிஸ்துவின் வாழ்க்கையின் மறுரூபம். அங்கே பரிபூரண ஜீவன் எவ்வளவாய் இருந்தது! எங்கள் உடன் வேலையாட்களில் ஒருவர் அந்த இடத்துக்குச் சென்று அவளுடைய சூழ்நிலையுடன் நெருங்கிய பரிச்சயமுடையவரானார். அந்தப் பகுதியிலுள்ள சபைக ளெல்லாம் அவளுடைய அனுபவத்தின்மூலம் போஷிக்கப்பட்டன என்ற செய்தியை அவர் எங்களுக்குக் கொண்டுவந்தார். இப்பேர்ப்பட்ட பரிபூரண ஜீவனுக்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

நீங்கள் கிறிஸ்துவை கோதுமையாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், அத்திமரமாகவும் அனுபவித்துமகிழ்ந்து, அனுபவமாக்கும்போது, கிறிஸ்துவின் அழகு உங்களைச்சுற்றி மிளிர்கிறது. கிறிஸ்துவின் பரிபூரண ஜீவன் உங்களிடம் இருக்கிறது. இதுவே கிறிஸ்துவை மாதுளையாக அனுபவிப் பதாகும். நீங்கள் கிறிஸ்துவை உயிர்த்தெழுந்தவராக அனுபவித்து மகிழ்ந்து, அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின்மூலம் சகலவிதமான நெருக்கங்களையும், உபத்திரவங்களையும், பாடுக ளையும், போராட்டங்களையும் சகிக்க இயேசுவின் வாழ்க்கையை நீங்கள் இந்தப் பூமியில் வாழ்ந்தால், கிறிஸ்துவின் மதுரத்தையும் திருப்தியையும் நீங்கள் உங்களுக்குள் உணர்ந்துகொள்வீர்கள். ஜீவனின் அழகையும், பரிபூரணத்தையும் நீங்கள் மற்றவர்களுக்கு வெளியரங்கமாக்குவீர்கள். பிறர் உங்களைத் தொடும்போது அவர்கள் கிறிஸ்துவின் இனிமையையும், கவர்ச்சியையும் உணர் வார்கள். பரிபூரண ஜீவன் அவர்களுக்குள் செலுத்தப்படும்.

ஒலிவ மரம்

ஆறாவது காரியம் ஒலிவமரம். ஒலிவமரம் ஒலிவ எண்ணெயை உற்பத்திசெய்கிற மரம் என்று நமக்குத் தெரியும். தாவர இனம்

என்று நாம் வகைப்படுத்தக்கூடிய உணவுவகைகளில் இதுவே கடைசிக் காரியம். ஆவியானவர் இதை ஏன் கடைசிக் காரியமாக வைத்திருக்கிறார்? நாம் சகரிய 4:12-14ஐ வாசித்திருக்கிறோம். அந்தப் பத்தியில் கர்த்தருக்குமுன்பாக இரண்டு ஒலிவமரங்கள் இருக்கின்றன. அவைகள் எண்ணெயின் இரண்டு குமாரர்கள் என்று கர்த்தர் விளக்குகிறார். கிறிஸ்துவே எண்ணெயின் குமாரர் என்று நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். கிறிஸ்துவே தேவனுடைய பரிசுத்த ஆவியால் அபிஷேகம்பண்ணப்பட்ட மனிதர். தேவன் அவர்மேல் ஆனந்த தைலத்தை ஊற்றியிருந்தார். அவர் பரிசுத்த ஆவியால் நிறைந்த மனிதர். அவரே ஒலிவ மரம், எண்ணெயின் குமாரர். ஆ, நாம் அவரைக் கோதுமையாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், அத்திமரமாகவும், மாதுளையாகவும் அனுபவித்துமகிழ்ந்தால், நிச்சயமாக நாம் அவரை ஒலிவமரமாகவும் அனுபவித்து மகிழ்வோம். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப் பட்டிருப்போம் என்பதே இதன் பொருள். நாம் எண்ணெயால் நிறைந்திருப்போம். நாம் ஓர் ஒலிவமரமாகிவிடுவோம்.

ஒலிவமரத்தின் எண்ணெய் எதற்காகப் பயன்படுத்தப் படுகிறது? அது தேவனைக் கனம்பண்ணவும், மனிதனைக் கனம்பண்ணவும் பயன்படுத்தப்படுகிறது என்று நியாயாதிபதிகள் 9:9இல் கூறப்பட்டுள்ளது. நாம் தேவனையோ, மனிதனையோ கனம்பண்ண விரும்பினால் ஒலிவ எண்ணெயால்தான் நாம் அதைச்செய்யவேண்டும். நாம் கர்த்தருக்கு ஊழியம்செய்ய விரும்பினால், பிறருக்கு உதவிசெய்ய விரும்பினால், பரிசுத்த ஆவியால்தான் நாம் அதைச்செய்யவேண்டும் என்பதே இதன் பொருள். நாம் ஆவியானவரால் நிரப்பப்பட்ட மனிதனாக, ஒலிவமரமாக, எண்ணெயின் மகனாக, இருக்கவேண்டும். பரிசுத்த ஆவியில்லாமல் நம்மால் ஒருபோதும் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது, அல்லது பிறருக்கு உதவிசெய்யவும் முடியாது. ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் அவரைக் கோதுமை யாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், அத்திமரமாகவும், மாதுளையாகவும் அனுபவித்துமகிழ்ந்தால், நிச்சயமாக நாம் எண்ணெயை உடையவர்களாயிருப்போம். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருப்போம். நம்மால் உண்மையாகவே தேவனையும், மற்றவர்களையும் கனம்பண்ணமுடியும்.

கனம் என்ற வார்த்தையை நான் விரும்புகிறேன். நாம் தேவனை மட்டும் இல்லை, மற்றவர்களையும் கனம்பண்ண வேண்டும். இது ஓர் அற்பமான அல்லது மேலெழுந்தவாரியான விஷயம் என்று எண்ணிவிடாதீர்கள். நீங்கள் ஒரு சகோதரனையோ அல்லது ஒரு சகோதரியையோ தொடர்புகொள்ளப் போகும்போதெல்லாம், அவரைக் கனம்பண்ணப்போகிறீர்கள் என்று நீங்கள்

உணர்கிறீர்களா? எதை வைத்து நீங்கள் அவரைக் கனம்பண்ணுவீர்கள்? உங்களாலேயா? உங்கள் ஜென்மசுபாவ ஜீவனாலா? உங்கள் பழைய மனுஷனாலா? உங்கள் உலகப்பிரகாரமான அறிவினாலா? பரிசுத்த ஆவியைக் கொண்டு மட்டுமே அவரைக் கனம்பண்ணமுடியும். ஆனால், நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். நீங்கள் எண்ணெயின் மகனாக இருக்க வேண்டுமே. நீங்கள் கிறிஸ்துவை ஒலிவமரமாக அனுபவிக்க வேண்டுமே.

பரிசுத்த ஆவி ஒலிவமரத்தை ஏன் கடைசிக் காரியமாக வைத்திருக்கிறார் என்று இப்போது உங்களால் உணர்ந்து கொள்ளமுடியும். கிறிஸ்துவை மற்ற எல்லாக் காரியங்களாகவும் நீங்கள் அனுபவித்துமுடித்து, இந்தக் கட்டத்தை எட்டும்போது, நீங்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கிறீர்கள். அப்போது உங்களால் தேவனையும் கனம்பண்ணமுடியும், பிறரையும் கனம்பண்ண முடியும்.

ஒருநாள் ஒரு சகோதரர் என்னைச் சந்திக்க வந்தார். ஆனால் அவர் என்னைக் கனம்பண்ண வரவில்லை. அவர் என்ன சொன்னார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர், "சகோதரரே, நான் இன்று ஒரு திரைப்படம் பார்க்கச் சென்றேன். நான் பார்த்ததிலேயே இதுதான் மிகச் சிறந்த திரைப்படம்! நான் உங்களைப் பார்க்க வந்ததற்காக மிகவும் சந்தோஷப்படுகிறேன்," என்றார். அவர் என்னைக் கனவீனம்பண்ணியதாகவே நான் உணர்ந்தேன். அவர் என்னை அவமானப்படுத்தினார். பரிசுத்த ஆவியைக்கொண்டு என்னைக் கனம்பண்ணுவதற்குப்பதிலாக ஒரு திரைப்படத்தால் என்னை இழிவுபடுத்த வந்தார்.

சகோதர சகோதரிகளே, யாராவது ஒருவர் உங்களுடன் பரிசுத்த ஆவியில் ஐக்கியம்கொள்ள வந்தால் நீங்கள் உண்மையாகவே அவரால் கனம்பண்ணப்படுகிறீர்கள். அந்த நபர் பரிசுத்த ஆவியின்மூலமாக உங்களுக்கு உண்மையான கனத்தைக் கொடுக்கிறார். நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்போது மட்டுமே நம்மால் பிறரைக் கனம்பண்ண முடியும். இல்லையென்றால், நாம் சொல்வதெல்லாம், நாம் செய்வதெல்லாம் அவர்களைக் கனவீனப்படுத்தும். உலக நிலைமையைப்பற்றியும், இதைப்பற்றியும், அதைப்பற்றியும் மட்டுமே நம்மால் அவர்களுடன் பேச முடிந்தால், நாம் அவர்கள்மேல் கனவீனத்தைக் குவித்துக்கொண்டிருக்கிறோம். மற்றவர்களுடனான உங்களுடைய எல்லாத் தொடர்புகளிலும், கர்த்தருடைய இரக்கத்தாலும், கிருபையாலும், பரிசுத்த ஆவியாலும் நீங்கள் அவர்களைக் கனம்பண்ணுகிறீர்கள் என்று உங்களால் சொல்லமுடியுமா? அல்லது வேறு அநேகக் காரியங்களால் நீங்கள் அவர்களைக்

கனவீனப்படுத்துகிறீர்களா? பிறரைக் கனம்பண்ண நாம் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கவேண்டும். தேவனையும், பிறரையும் கனம்பண்ண நாம் ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிறோமா இல்லையா என்பது கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், அத்திமரமாகவும், மாதுளையாகவும், பின்னர் ஒலிவமரமாகவும் நாம் ஒவ்வொரு நாளும் எப்படி அனுபவித்துமகிழ்கிறோம், எப்படி அனுபவிக்கிறோம் என்பதையே பெரிதும் சார்ந்திருக்கிறது. முதல் ஐந்து காரியங்களையும் நாம் கடந்துவிட்டால், நிச்சயமாக ஆறாவது காரியமாகிய ஒலிவமரத்துக்கு நாம் வந்துசேர்வோம். நாம் எண்ணெயின் குமாரனாக, பரிசுத்த ஆவியால் நிறைந்த பரிசுத்தவானாக இருப்போம்.

மிருக ஜீவன்

நாம் தொடர்ந்து இப்போது மிருக ஜீவனைப்பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். ஆ, தேசத்தில் கிறிஸ்துவின் அம்சங்கள் மிக அதிகமாகவும், வளமாகவும் இருக்கின்றன! நமக்குக் காய்கறி ஜீவன் அதாவது தாவர ஜீவன் மட்டும் இல்லை, மிருக ஜீவனும் இருக்கிறது! இரண்டு விதமான ஜீவன்கள் இருக்கின்றன. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவில் தாவர ஜீவனின் அம்சமும் இருக்கிறது, மிருக ஜீவனின் அம்சமும் இருக்கிறது.

தாவர ஜீவன் ஜெநிப்பிக்கிற ஜீவன், பலுகிப்பெருகுகிற ஜீவன். அது எப்போதும் ஜெநிப்பித்துக்கொண்டும், பலுகிப்பெருகிக்கொண்டுமிருக்கிற ஜீவன். ஒரு கோதுமைமணி நிலத்தில் விழுகிறது, அது சாகிறது, அடக்கம்பண்ணப்படுகிறது. என்ன நடக்கிறது? முப்பது அறுபது அல்லது நூறுமடங்கு பலன் உற்பத்தி செய்யப்படும். இது ஜெநிப்பித்தல், இது பலுகிப்பெருகுதல். ஆகையால் தாவர ஜீவன் குறிக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அம்சம் ஜெநிப்பிக்கிற, பலுகிப்பெருகுகிற அம்சம். இது ஓர் அம்சம்.

ஆனால், இன்னோர் அம்சம் இருக்கிறது. வீழ்ச்சிக்குமுன்பு, அதாவது மனிதன் பாவம்செய்வதற்குமுன்பு தேவன் மனிதனுக்காக நியமித்திருந்த உணவு மிருக இனத்தைச் சார்ந்தது இல்லை, மாறாக தாவர இனத்தைச் சார்ந்ததுதான் என்று நாம் நினைவில்கொள்ளவேண்டும். வீழ்ச்சிக்குப் பின்புதான், மனிதன் பாவம்செய்தபின்புதான், அவனுடைய உணவுக்காக இரத்தம் சிந்தப்படவேண்டியிருந்தது. வீழ்ச்சிக்குமுன்பு மனிதன் உண்பதற்காக மிருகங்கள் தேவைப்படவில்லை. ஆனால், பாவம் நுழைந்தபோது தன் உணவில் அவன் மிருகங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டியிருந்தது. பாவம் இல்லாதிருந்தபோது

இரத்தத்தின்மூலமாக வரும் மீட்புக்கு அவசியம் இல்லை. ஆனால், வீழ்ச்சிக்குப்பின்பு பாவத்தினி மித்தம் இரத்தம் தேவைப்பட்டது. நாம் தேவனுக்குமுன்பாக வாழவேண்டுமானால், இரத்தத்தின் மூலமாக நாம் மீட்பில் பங்குபெற வேண்டும். மிருக ஜீவன் எதைச் சுட்டிக்காட்டுகிறது? அது மீட்கும் ஜீவனை, பலியாகும் ஜீவனைச் சுட்டிக்காட்டுகிறது. மனிதன் வீழ்ந்து பாவம்செய்தபின்பு அவன் தேவனுக்குமுன்பாக வாழ்வதற்கு இப்பேர்ப்பட்ட ஜீவன் தேவைப்பட்டது.

இவைகளே கர்த்தருடைய ஜீவனின் இரண்டு அம்சங்கள். ஒருபக்கம், அவருடைய ஜீவன் ஜெநிப்பிக்கிற ஜீவனாக இருக்கிறது. இன்னொரு பக்கம், அவருடைய ஜீவன் மீட்கும் ஜீவனாக இருக்கிறது. யோவான் 6-ல் கர்த்தர், "என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமா யிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு," என்றார். நாம் கிறிஸ்துவை மீட்பவராக அனுபவித்துமகிழவேண்டும்.

ஒருவேளை நீங்கள் ஏதோ கொஞ்சம் கற்றுக்கொண்டதாக இப்போது கருதக்கூடும். கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லி யாகவும், பலவிதமான மரங்களாகவும் எப்படிப் பிரயோகிப்பது என்று நீங்கள் கற்றுக்கொண்டீர்கள். இதில் நீங்கள் களிகூரு கிறீர்கள். ஆனால், உங்களால் ஒருபோதும் கிறிஸ்துவைப் பார்லி யாக எளிதில் பிரயோகிக்க முடியாது என்பதை நீங்கள் உணர வேண்டும். ஏனென்றால், நீங்கள் ஒரு பாவி, நீங்கள் பாவம்செய்திருக்கிறீர்கள். இந்த நாள்வரை நீங்களும், நானும் பாவிகள். நாம் கிறிஸ்துவைக் கோதுமை யாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், அத்திமரமாகவும், மாதுளையாகவும், ஒலிவமரமாகவும் பிரயோகிக்கும்போதெல்லாம், நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்கச் சிலுவையில் மரித்து இரத்தத்தைச் சிந்தின ஆட்டுக்குட்டியாகவும் அவரை நாம் பிரயோகிக்கவேண்டும். பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லாப் பலிகளிலும், காய்கறிகள் பலியாகச் செலுத்தப்பட்டபோது, அதனோடு எப்போதும் ஒரு மிருகமும் பலியாகச் செலுத்தப்பட்டது. காயீன் என்ன செய்தான் என்று உங்களுக்குத் தெரியும். அவன் எந்தவிதமான மிருகமும் இல்லாமல் காய்கறிகளைப் பலியாகச் செலுத்தினான். எனவே தேவன் அவனை நிராகரித்தார். நீங்கள் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ விரும்பும்போதெல்லாம், நீங்கள் பாவிகள் என்பதை உணரவேண்டும். கர்த்தர் தம் விலையேறப்பெற்ற இரத்தத்தால் உங்களை மூடிக்கொள்ளுமாறும், இன்னொரு தடவை சுத்திகரிக்குமாறும் நீங்கள் அவரைக் கேட்கவேண்டும். நீங்கள் கிறிஸ்துவைத் தாவரமாக, அதாவது

கோதுமையாக அல்லது பார்லியாக மட்டும் அனுபவித்துமகிழ முடியாது. நீங்கள் அவரை மிருகத்துடன் சேர்ந்த தாவரமாக அனுபவித்துமகிழ வேண்டும். நீங்கள் அவரை ஜெநிப்பிக்கும் ஜீவனாகவும், அதே நேரத்தில் மீட்கும் ஜீவனாகவும் அனுபவித்து மகிழ வேண்டும்.

ஒருநாள் ஒரு தம்பதியர், ஒரு சகோதரனும் சகோதரியும், என்னைப் பார்க்க வந்தார்கள். அவர்கள், "சகோதரரே, உங்கள் வயிறு அவ்வளவு பலமானதல்ல என்று எங்களுக்குத் தெரியும். எனவே நாங்கள் உங்களுக்காக சில பதார்த்தங்களைத் தயாரித்துள்ளோம். எங்கள் வீட்டுக்கு விருந்துக்கு வரும்படி உங்களை அழைக்கிறோம்," என்றார்கள். நானும், "வருவதற்கு விரும்புகிறேன்," என்று பதிலுரைத்தேன். நான் அங்கு சென்ற போது, அவர்கள் மெய்யாகவே சில நல்ல பதார்த்தங்களைத் தயாரித்திருந்தார்கள். அதை அவர்கள் மிக நேர்த்தியாய்த் தயாரித்திருந்தார்கள். அவர்கள் பந்தியை ஆயத்தம்செய்தபோது, அது மிகவும் வண்ணமயமாக இருந்தது. அங்கு பச்சை, சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறங்கள் இருந்தன, அது பார்ப்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தது. ஆனால் நான் என் தலையை அசைத்தேன். என் மனைவி அதைக் கவனித்துவிட்டு, "என்ன விஷயம்? ஏன் நீங்கள் உங்கள் தலையை அசைக்கிறீர்கள்? இந்த உணவு உங்களுக்குப் பிடிக்கவில்லையா?" என்று கேட்டாள், நான், "எனக்குப் பிடித்திருக்கிறது, ஆனால் இது வேதத்தின்படி இல்லை. மிருக இனத்தைச்சார்ந்த எதுவுமில்லையே," என்றேன். தயாரிக்கப் பட்டிருந்தவையெல்லாம் தாவர ஜீவனைச் சார்ந்தவையாகவே இருந்தன. எல்லாம் காய்கறிகள், காய்கறிகள், காய்கறிகளே. கொஞ்சம் பழங்களும் இருந்தன. அங்கு இறைச்சி இல்லை. மிருக ஜீவனைச்சார்ந்த எதுவுமே இல்லை. "நான் பாவி இல்லை என்றா நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று அந்த சகோதரியிடம் கேட்டேன். "கர்த்தரைக் கொலையுண்டவராக நான் எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்தக் கணப்பொழுதில் அவருடைய இரத்தம் எனக்குத் தேவையில்லை என்றும் நீங்கள் எண்ணுகிறீர்களா?"

இப்போது நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவை வெறுமனே தாவர ஜீவனாக, காய்கறி ஜீவனாக மட்டும் அனுபவிக்க முடியாது. நீங்கள் பாவமுள்ளவர்கள். நீங்கள் போஜன பலியைச் செலுத்தும்போதெல்லாம், மிருக இனத்தைச் சார்ந்த ஏதோவொன்றையும் கூடவே நீங்கள் செலுத்தவேண்டும். கிறிஸ்துவை உங்கள் ஜீவனாக, கோதுமையாக, பார்லியாக, அத்தியாக, மாதுளையாக நீங்கள் எடுக்கும்போதெல்லாம், அவரைக் காளையாகவும், ஆட்டுக் குட்டியாகவும்கூட எடுத்துக்கொள்ள

வேண்டும். அவரே நம் பாவங்களிலிருந்து நம்மை மீட்க தம் இரத்தத்தைச் சிந்தி சிலுவையில் கொலைசெய்யப் பட்டவர்.

ஒருநாள் ஒரு சகோதரர் என்னிடத்தில் வந்து, "சகோதரரே, நீங்கள் ஜெபிக்கும்போதெல்லாம், எப்போதும், 'கர்த்தாவே நாங்கள் உம்மை மேன்மேலும் அனுபவித்துமகிழுமாறு எங்களை உம் விலையேறப்பெற்ற இரத்தத்தால் கழுவிச்சுத்திகரியும்' என்று சொல்கிறீர்கள். அவருடைய இரத்தத்தால் உங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும்படி நீங்கள் ஏன் எப்போதும் கர்த்தரிடம் கேட்கிறீர்கள்?" என்று கேட்டார். நான், "சகோதரரே, உங்களிடம் பாவசுபாவம் இன்னும் இருக்கிறது என்று நீங்கள் உணர வில்லையா? நீங்கள் இன்னும் இந்தச் சீர்கெட்ட, கறைபடிந்த உலகத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்று உணரவில்லையா? நீங்கள் காலையிலிருந்து மாலைவரை அநேகக் காரியங்களால் கறைபடுத்தப்படவில்லையா?" என்று மறுமொழி கொடுத்தேன். நாம் கிறிஸ்துவை அனுபவித்து அவரை நம் ஜீவனாகப் பிரயோகிக்க வரும்போதெல்லாம், அவர் தாவர ஜீவனாக மட்டும் இல்லை, மிருக ஜீவனாகவும் இருக்கிறார் என்று நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். அவருடைய ஜெநிப்பிக்கிற ஜீவனின் சகல ஐசுவரியங்களையும் நாம் அனுபவித்துமகிழுமாறு அவரை மீட்கிறவராகவும், கொல்லப்பட்டிருக்கிற ஆட்டுக் குட்டியாகவும் எப்போதும் பிரயோகிக்க வேண்டும்.

பாலும், தேனும்

நாம் இப்போது பாலும், தேனுமாகிய இன்னும் இரண்டு காரியங்களுக்கு வருகிறோம். அந்த நல்ல தேசம் பாலும், தேனும் ஓடுகிற தேசம். பாலும், தேனும் எந்த ஜீவனைச் சார்ந்தவை என்று உங்களால் சொல்லமுடியுமா? அவை மிருக ஜீவனையா அல்லது தாவர ஜீவனையா எதைச் சார்ந்தவை? பரிசுத்த ஆவி அவைகளை வேதத்தில் எப்படி அமைந்திருக்கிறார் என்று கவனியுங்கள். உபாகமம் *8:8*-ல் தேன் தாவரங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது; கோதுமை, பார்லி, திராட்சை, அத்திமரம், மாதளஞ்செடிகள், ஒலிவமரம், பின்னர் தேன். உபாகமம் *32:14*-ல் பால் மிருகங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. மிருக ஜீவன்கள், ஆடுமாடுகள், பால், வெண்ணெய். பரிசுத்த ஆவியானவர் மிகவும் கண்ணியமானவர். அவர் தேனைத் தாவரங்களுடன் வைத்தார்; பாலை வெண்ணெயுடனும் மிருகங்களுடனும் வைத்தார். ஏன்? ஏனென்றால் தேனின் பெரும்பங்கு தாவர ஜீவனுடன் தொடர்புடையது என்று பரிசுத்த ஆவியானவருக்கு நன்றாகத் தெரியும். அது பெரும்பாலும் பூக்களிலிருந்தும், மரங்களி லிருந்தும் பெறப்படுகிறது. நிச்சயமாக மிருக ஜீவனின் ஒரு

பாகம் சம்பந்தப்பட்டிருக்கிறது; அந்த சின்ன மிருகம் தேனீ. பூக்களில்லாமல் நாம் தேனைப் பெறமுடியாது. தேனீக்கள் இல்லாமலும் நாம் தேனைப் பெறமுடியாது. நமக்கு பூக்களும் வேண்டும், தேகீக்களும் வேண்டும். இந்த இரண்டும் ஒத்துழைக்கின்றன. இந்த இரண்டு ஜீவன்களும் இரண்டறக் கலந்து, தேன் உற்பத்திசெய்யப்படுகின்றது. ஆனால், தேனின் பெரும்பாகம் தாவர ஜீவனைச் சார்ந்தது.

பாலைப்பற்றிய விஷயம் என்ன? பாலின் பெரும் பகுதி மிருக ஜீவனைச் சார்ந்தது என்று நாம் சொல்லலாம். ஆனால் அது உண்மையில் மிருக ஜீவன், தாவர ஜீவன் ஆகிய இரண்டினால் விளையும் உற்பத்திப்பொருள். மேய்ச்சல் இல்லையென்றால், புல் இல்லையென்றால், மிருக ஜீவன்களும் ஆடுமாடுகளும் இருந்தாலும்கூட பாலும் வெண்ணெயும் கிடைக்காது. எது சிறந்த உணவு? பாலா அல்லது திராட்சை, அத்தி, மாதுளை, ஒலிவமரங்களின் கனிகளா? ஆம், அவைகளெல்லாம் நல்லவைதாம். ஆனால் எது சிறந்தது? தாவர ஜீவனின் கனிகள் எல்லாவற்றையும்விட பால் சிறந்தது என்று நாமெல்லாரும் உணர்ந்துகொள்கிறோம் என்று நான் விசுவாசிக்கிறேன். ஏன்? ஏனென்றால் பாலிலும் தேனிலும் இரண்டுவிதமான ஜீவன் கலந்திருப்பதை நாம் அனுபவித்து மகிழ்கிறோம். இந்த இரண்டு காரியங்களும் தாவர மற்றும் மிருக ஜீவனைச் சார்ந்தவைகள் என்று நீங்கள் காண்கிறீர்கள்.

இதன் பொருள் என்ன? பாலும், தேனும் கிறிஸ்துவினுடைய ஜீவனின் எந்த அம்சங்களைச் சித்திரிக்கின்றன? நீங்கள் கிறிஸ்துவைக் கோதுமையாகவும், பார்லியாகவும், திராட்சையாகவும், பல மரங்களாகவும் அனுபவித்துமகிழும் அதே நேரத்தில், அவரைக் காளையாகவும், ஆட்டுக்குட்டியாகவும் அனுபவித்து மகிழ்கிறீர்கள். அப்போது பாலும், தேனும்போல் கர்த்தர் மிகவும் நல்லவராக இருக்கிறார் என்றும், கர்த்தர் உங்களுக்கு மிகவும் இன்பமானவராகவும் ஐசுவரியமானவராகவும் இருக்கிறார் என்றும் நீங்கள் உணர்ந்துகொள்கிறீர்கள். குறிப்பாக, நீங்கள் ஆவியில் பலவீனமாக இருக்கும்போது, நீங்கள் அவரைப் பிரயோகிக்கவும், அனுபவிக்கவும் கர்த்தரிடத்தில் வரும்போது, அவர் பாலாகவும் தேனாகவும் இருக்கிறார் என்று நீங்கள் உணர்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடைய ஜீவனின் ஐசுவரியங்களையும், இனிமையையும் உணர்கிறீர்கள். ஆ, பாலின் நன்மை, தேனின் இனிமை! அவர் பாலும் தேனும் ஓடுகிற தேசம். இந்த அனுபவம் கிறிஸ்துவினுடைய ஜீவனின் இரண்டு அம்சங்களாகிய ஜெநிப்பிக்கிற மற்றும் மீட்கிற ஜீவனிலிருந்து உற்பத்திசெய்யப்படுகிறது. எவ்வளவு அதிகமாக நீங்கள் அவரைக் கோதுமையாகவும்,

பார்லியாகவும், மற்றும் பிற காரியங்களாகவும், அதே நேரத்தில் மிருக ஜீவனாகவும், ஆடுமாடுகளாகவும் உணர்ந்துகொள் கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் கிறிஸ்துவைப் பாலாகவும், தேனாகவும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

நாம் மூன்று விதமான நீர்நிலைகளையும், குறைந்தது எட்டுவிதமான உணவு வகைகளையும் பார்த்தோம். ஆ, கிறிஸ்து நமக்கு எவ்வளவு ஐசுவரியமானவராயிருக்கிறார்! அவரைப்பற்றிய இப்பேர்ப்பட்ட, போதுமான, நிறைவான அனுபவத்தை நாம் உடையவர்களாயிருக்க வேண்டும். வெறும் ஜீவத்தண்ணீராக மட்டும் இல்லை, பல்வேறு வகையான உணவாக நமக்குள் இருக்கும் ஜீவன் முதிர்ச்சியடையும் அளவுக்கு நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ வேண்டும். அப்போது கர்த்தருக்கான கட்டிடம் எழும்பும், எதிரியோடு யுத்தம் நடக்கும். இதை நாம் அடுத்த அதிகாரத்தில் பரிசீலிப்போம்.

அதிகாரம் ஏழு

தேசத்தின் நன்மை— அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள்

III. கனிமப்பொருட்கள்

அந்தத் தேசம் நீர் வளமும் உணவுச் செழிப்பும் நிறைந்தது மட்டும் இல்லை, அது கனிமவளமும் நிறைந்தது.

> **உபாகமம் 8:9:** "...அது கல்லுகள் இரும்பாயிருக் கிறதும், செம்பு வெட்டி எடுக்கத்தக்க மலைகளுள்ளதுமான தேசம்."

இரும்பும் கல்லுகளும் ஒன்றாகவும், செம்பும் மலைகளும் ஒன்றாகவும் வைக்கப்பட்டிருப்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். இதன் பொருள் என்னவென்றால் இரும்புக்கும் கல்லுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது; செம்புக்கும் மலைகளுக்கும் அல்லது குன்றுகளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது.

> **ஆதியாகமம் 4:22:** "...பித்தளையாலும், இரும்பாலும் எல்லா விதமான வெட்டும் கருவிகள் செய்யும் கொல்லனானான்."

பழைய ஏற்பாட்டில், ஒரே உலோகத்தைக் குறிப்பதற்கு பித்தளை, வெண்கலம் என்ற இரண்டு வார்த்தைகளையும் மாறிமாறிப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இங்கு பித்தளையும், இரும்பும் வெட்டும் கருவிகளுடன் தொடர்புடையவைக ளென்று காண்கிறோம்.

> **உபாகமம் 33:25:** "உன் தாழப்பாள்கள் இரும்பும், வெண்கலமும் ஆகும்; உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பலமும் இருக்கும்."

இங்கு வெண்கலமும், இரும்பும் வாசல்களின் தாழ்ப்பாள் களுடனும், பலத்துடனும் தொடர்புடையவைகளென்று காண்கி றோம். இந்த வசனத்தில் வரும் "பலம்" என்ற வார்த்தையின் உண்மையான பொருள் "இளைப்பாறுதல்" அல்லது "பாதுகாப்பு." உண்மையில் "பாதுகாப்பு" என்ற வார்த்தை சிறந்தது. "உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பாதுகாப்பும் இருக்கும்." ஆகையால் இரும்பும், வெண்கலமும் இங்கே நம் பாதுகாப்புடன் தொடர்பு டையனவாய் இருக்கின்றன. உங்களுக்குப் பலம் உண்டென்றால் உங்களுக்குப் பாதுகாப்பும் உண்டு. உங்களுக்குப் பாதுகாப்பு உண்டென்றால் உங்களுக்கு இளைப்பாறுதலும் உண்டு.

எரேமியா 15:12: "வடக்கேயிருந்து வரும் இரும்பையும், வெண்கலத்தையும் இரும்பு நொறுக்குமோ?"

இந்த வசனம் இரும்பு மற்றும் வெண்கலத்தின் பலத்தைக் காட்டுகிறது. இதன் பொருள் என்னவென்றால், இரும்பையும் வெண்கலத்தையும் ஒருவராலும் உடைக்கமுடியாது.

1 சாமுவேல் 17:5-7: "அவன் தன் தலையின்மேல் வெண்கலச் சீராவைப்போட்டு, ஒரு போர்க்கவசம் தரித்துக்கொண்டிருப்பான்; அந்தக் கவசத்தின் நிறை ஐயாயிரம் சேக்கலான வெண்கலமாயிருக்கும். அவன் தன் கால்களிலே வெண்கலக் கவசத்தையும் தன் தோள்களின்மேல் வெண்கலக் கேடயத்தையும் தரித்திருப்பான். அவனுடைய ஈட்டித்தாங்கு நெசவுக்காரரின் படைமரத்தின் கனதியும் அவன் ஈட்டியின் அலகு அறுநூறு சேக்கல் இரும்பு மாயிருக்கும்! பரிசைப் பிடிக்கிறவன் அவனுக்கு முன்னாக நடப்பான்."

இந்த இராட்சசப் போர்வீரன் தலைமுதல் கால்வரை வெண்கலத்தால் மூடப்பட்டிருந்தான். அவனுடைய போராயுதம் இரும்பால் செய்யப்பட்டிருந்தது. அவன் முழுவதும் வெண் கலத்தால் மூடப்பட்டிருந்தான். அவன் யுத்தத்தில் பயன்படுத்திய போராயுதம் இரும்பால் செய்யப்பட்டிருந்தது.

வெளிப்படுத்தின விசேஷம் 1:15: "அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போலிருந்தது."

சங்கீதம் 2:9: "இருப்புக்கோலால் அவர்களை நொறுக்கி, குயக்கலத்தைப்போல் அவர்களை உடைத்துப்போடுவீர் என்று சொன்னார்."

வெளிப்படுத்தின விசேஷம் முதல் அதிகாரத்தில் வெண்கலம் ஜெயம்கொள்கிற, நியாயந்தீர்க்கிற கிறிஸ்துவின் பாதங்களுடன் தொடர்புடையது என்று காண்கிறோம். அவருடைய பாதங்கள் பிரகாசமான வெண்கலம் போலிருந்தது. இரண்டாம் சங்கீதத்தில் இரும்பு கர்த்தர் தேசங்களை ஆளப்போகிற கோலுடன் தொடர்புடையது என்று காண்கிறோம்.

மத்தேயு 5:14: "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமா யிருக்கிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது."

சங்கீதம் 2:6: "நான் என்னுடைய பரிசுத்த பர்வதமாகிய சீயோன்மீதில் என்னுடைய ராஜாவை அபிஷேகம்பண்ணி வைத்தேன் என்றார்."

மத்தேயு 5ஆம் அதிகாரத்தில், நகரம் மலையுடன் தொடர்புடையது என்று காண்கிறோம். இரண்டாம் சங்கீதத்தில், சீயோன் மலை அபிஷேகம்பண்ணப்பட்டவருடன் தொடர்புடையது என்று காண்கிறோம்.

> **1 பேதுரு 2:4-5:** "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும் படி பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்."

கர்த்தர் ஒரு ஜீவனுள்ள கல் என்றும், நாமும் ஜீவனுள்ள கற்கள் என்றும் இங்கே கூறப்பட்டுள்ளது. இந்த ஜீவனுள்ள கற்கள் எல்லாம் தேவனுக்காக ஓர் ஆவிக்குரிய மாளிகையைக் கட்டுவதற்காகவே.

> **எசேக்கியல் 37:22:** "அவர்களை இஸ்ரவேலின் மலைகளாகிய தேசத்திலே ஒரே ஜாதியாக்குவேன்; ஒரே ராஜா அவர்கள் எல்லாருக்கும் ராஜாவாக இருப்பார்."

தேசமும் இராஜாவும் மலையுடன் தொடர்புடையவை என்று இந்த வசனத்தில் பார்க்கிறோம். அவர்களைத் தேசத்தில் மட்டும் இல்லை, இஸ்ரவேலின் மலைகளிலும், அதாவது தேசத்தின் மலைகளிலும் ஒரே ஜாதியாக்குவதாகக் கர்த்தர் சொன்னார்.

> **சங்கீதம் 87:1:** "அவர் அஸ்திபாரம் பரிசுத்த பர்வதங்களில் இருக்கிறது."

இங்கு கட்டிடத்தின் அஸ்திபாரம் மலைகளுடன் தொடர்புடையது என்று காண்கிறோம்.

> **சங்கீதம் 48:1-2:** "கர்த்தர் பெரியவர், அவர் நமது தேவனுடைய நகரத்திலும், தமது பரிசுத்த பர்வதத் திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர். வட திசையி லுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது. அதுவே மகாராஜாவின் நகரம்."

தேவனுடைய நகரம் பரிசுத்த மலையுடனும், மகாராஜாவின் நகரம் சீயோன் மலையுடனும் தொடர்புடையவை என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

இந்தத் தொடர்புகள் எல்லாவற்றிலும் மிகுந்த ஆவிக்குரிய உட்கருத்து உண்டு. மொத்தத்தில் நான்கு காரியங்கள் இருக்கின்றன: கற்கள், குன்றுகள் அல்லது மலைகள், இரும்பு மற்றும்

செம்பு. கற்கள் மாளிகைக்காக இருக்கின்றன, குன்றுகள் அல்லது மலைகள் தேசத்தின் மையமான இராஜ்ஜியத்தின் மையமாகிய நகரத்துக்காக இருக்கின்றன; இரும்பும் செம்பும் போராயு தங்கள் செய்வதற்கானப் பொருட்களாக இருக்கின்றன.

நான்கு விதமான வளங்கள்

தேசம் முதலாவது நீர்வளமிக்கதென்றும், இரண்டாவது காய்கறி வளமும், தாவர வளமும் மிக்கதென்றும், மூன்றாவது மிருக வளமிக்கதென்றும், கடைசியாக கனிம வளமிக்கதென்றும் நாம் பார்த்தோம். நான்கு வகைகள் இருக்கின்றன. அவைகளின் வரிசையை நாம் சிந்தித்துப் பார்ப்போம்—அது மிக அர்த்தமுள்ளதும், மிக ஆவிக்குரியதுமாகும்.

முதலாவது, நமக்குத் தண்ணீர் வேண்டும். தண்ணீர் இல்லை யென்றால் தாவரங்கள் வளரமுடியாது. தண்ணீர் இல்லாமல் தாவரங்களும் காய்கறிகளும் ஒருபோதும் நிலைத்திருக்க முடியாது; ஒருபோதும் வளரவும் முடியாது. எனவே தண்ணீரே காய்கறிகளையும், தாவரங்களையும் முளைப்பிக்கிறது.

நாம் இப்போது பார்த்துக்கொண்டிருக்கிற பாலஸ்தீன தேசத்திற்கு நாங்கள் *1958*இல் போயிருந்தோம். எருசலேமில் ஒரு சில நாட்கள் தங்கினபின்பு, சபிக்கப்பட்ட நகரமாகிய எரிகோவைப் பார்க்கச்சென்றோம். எருசலேம் கடல் மட்டத்துக்கு மேலே *3000*முதல் *4000* அடிவரை உயர்ந்திருக்கிற ஒரு மலையில் கட்டப்பட்டிருக்கிறது. சாக்கடல் இருக்கிற எரிகோ பள்ளத்தாக்கு கடல் மட்டத்திலிருந்து *6000*முதல் *7000* அடி கீழே இருக்கிறது. எனவே, எருசலேமிலிருந்து எரிகோவின் மரணப்பள்ளத்தாக்குக்கு நாங்கள் கீழே, கீழே, இன்னும் கீழேசென்றோம். மூன்று மணிநேரப் பயணம். நாங்கள் அந்தப் பள்ளத்தாக்கின் அடியில் வந்துசேர்ந்தபோது, அது ஓர் உலைக்களம்போல் இருந்தது. ஆ! என்ன பயங்கரமான சூடு! அங்கு தென்றலே கிடையாது. அது ஓர் எரிகிற, வறண்ட வனாந்தரம்—வெறும் அனலும், தூசியுமே. அந்த உலர்ந்த வெறுமையான காட்சியின் மத்தியில், பண்டைய நகரமாகிய எரிகோவின் மிச்சமீதிகளைப் பார்ப்பதற்கு நாங்கள் உடனே புறப்பட்டுச்சென்றோம். நகரத்துக்குச் சற்று வெளியே ஒரு நீரூற்று இருந்தது. அதைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். அந்தத் தண்ணீர் எலிசா தீர்க்கதரிசியினால் சுகமாக்கப்பட்ட தண்ணீர். எனவே, அதைப் பார்ப்பதற்கு எங்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டாயிற்று. அங்கே ஒரு நீரூற்று, பொங்கிவருகிற ஒரு சுனை, பாய்ந்தோடும் ஒரு நீரோடை ஆகியவைகள் இருந்தன. தண்ணீர் ஓடும் திசையில் எங்கள் கண்களைத் திருப்பினபோது, சற்று தூரத்தில் அந்த காட்டுப்

பள்ளத்தாக்கின் மத்தியில் பசுமையான புல்லும், பனை மரங்களும், இன்னும் அநேகவிதமான மரங்களும் நிறைந்த ஓர் இடத்தைக் கண்டோம். அது அழகாக இருந்தது. பாருங்கள், அங்கு நீரூற்று, சுனை, ஓடுகிற நீரோடை, பின்னர் பசுமை நிறைந்த பூமி.

பரிசுத்த ஆவி தண்ணீரை முதலாவது வைத்தார். நீரூற்று, சுனை, நீரோடை ஆகியவைகள் சகலவிதமான தாவரங்களையும், தாவர ஜீவன்களையும் உருவாக்குகின்றன.

கால்நடைகள் எதை மேய்கின்றன? அவைகள் காய் கறிகளையும், தாவர ஜீவனையும் மேய்கின்றன. எனவே நீங்கள் ஒரு வரிசையைப் பார்க்கிறீர்கள்: முதலாவது தண்ணீர், பின்பு தாவரங்கள், அதன் பின்னர் மிருகங்கள். இந்த மூன்றுக்கும் பின்பு ஆவியானவர் வேறொரு காரியத்துக்குத் திரும்புகிறார், அதாவது இரும்பும் செம்பும் நிறைந்த கற்களுக்கும், மலைகளுக்கும் அவர் திரும்புகிறார்.

சகோதர சகோதரிகளே, இந்த வரிசை நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். இது ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைகளுடன் நூறு சதவீதம் ஒத்திருக்கிறது.

ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைகள்

ஆவிக்குரிய வாழ்க்கையின் முதல் நிலையில் நாம் கிறிஸ்துவை ஜீவத்தண்ணீராக அனுபவிக்கிறோம். "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம்பண்ணக்கடவன்," என்று இயேசு கூறினார் (யோவான் 7:31). இதுவே பாவிகளுக்கான சுவிசேஷம். வந்து குடியுங்கள், நீங்கள் நிரப்பப்படுவீர்கள்; உங்கள் தாகம் தீர்க்கப்படும். நாம் கர்த்தரிடத்திற்கு வரும்போது அவரை ஜீவத்தண்ணீராகவும், ஜீவ நீரோடையாகவும் அனுபவிக்கிறோம். நாம் இதைத்தொடர்ந்து அனுபவிப்பதின்மூலம் அடுத்த படிக்கு வருகிறோம். தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள ஒரு நதி பாய்கிறதென்றும், இந்த நதியில் ஜீவவிருட்சம் வளர்கிறதென்றும் கூறப்பட்டுள்ளது. ஜீவத்தண்ணீர் கிறிஸ்துவின் நிரப்பீட்டை நமக்கு உணவாகக் கொண்டுவருகிறது. கிறிஸ்துவை ஜீவத்தண்ணீராக அனுபவிப்பதால் இந்தத் தண்ணீரில் பல்வேறு வகையான தாவரங்கள் வளர்வதை நீங்கள் காண்பீர்கள்; நீங்கள் கிறிஸ்துவை உங்கள் ஜீவநிரப்பீடாக அனுபவிக்கிறீர்கள். ஜீவத் தண்ணீரின் ஓட்டத்தில் ஜீவ அப்பம், அதாவது ஜீவ உணவு, இருக்கும். இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் நீர்நிலைகளை மட்டும் அனுபவிக்காமல், கிறிஸ்துவின் நிரப்பீட்டையும் பல்வேறு வகையான உணவாக அனுபவிக்கிறீர்கள். இந்த வகையான

உணவுகளெல்லாம் உங்களை முதிர்ச்சியடையச் செய்யும். நீங்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருப்பீர்கள். நீங்கள் கர்த்தருக்கு முன்பாக ஓர் ஒலிவமரமாக, அதாவது எண்ணெயின் மகனாக, இருப்பீர்கள்.

இப்போது நீங்கள் முதிர்ச்சி அடைந்திருக்கிறீர்கள். கிறிஸ்துவைப்பற்றிய உங்கள் அனுபவம் பாலும் தேனும்போல மிக வளமாகவும், இனிமையாகவும் இருக்கிறது. தேன் என்றால் என்ன? எல்லா தாவர ஜீவனின் சாரமே தேன். பால் என்றால் என்ன? எல்லா மிருக ஜீவனின் சாரம். பாலும் தேனுமே எல்லா உணவு நிரப்பீட்டின் சாரம். சில வேளைகளில் நீங்கள் ஆவியில் பலவீனமாக இருக்கும்போது, கிறிஸ்துவைச் சிறிதளவு சுவைத்தால், அவர் எவ்வளவு வளமானவரென்றும், இனிமையானவரென்றும் நீங்கள் உணர்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவின் சிறிதளவையே பாலும் தேனுமாக அனுபவித்துமகிழ்ந்திருக்கிறீர்கள். ஆனால், நீங்கள் மெய்யாகவே கிறிஸ்துவின் ஜீவனில் முதிர்ச்சியுள்ளவராக இருந்தால், நாள் முழுவதும் கிறிஸ்து உங்களுக்குப் பாலும் தேனுமாக இருப்பார். நீங்கள் கிறிஸ்துவை முதலில் பெற்றுக் கொள்ளவரும்போது, நீங்கள் ஜீவத்தண்ணீரைக் குடித்துக் கொண்டிருப்பதாக உணர்கிறீர்கள். ஆனால் நீங்கள் கிறிஸ்துவுக்குள் முதிர்ச்சியடையும்போது, ஒவ்வொருநாளும் நீங்கள் பாலையும், தேனையும் குடித்துக்கொண்டிருப்பதாக உணர்கிறீர்கள். அவர் உங்களுக்கு அவ்வளவு இனிமையாகவும், அவ்வளவு வளமாகவும் இருக்கிறார். நிச்சயமாக ஜீவத் தண்ணீர் பாலிலும் தேனிலும் அடங்கியிருகிறது. ஆனால் இந்தப் பானம் தண்ணீரைவிட அளவுகடந்த வளமிக்கது.

நான் அமெரிக்காவிற்கு முதன்முறை வந்தபோது, என் மனதில் ஒரு காரியம் ஆழமாகப் பதிந்தது. நான் ஒரு சகோதரர் வீட்டில் தங்கியிருந்தேன். எனக்குத் தாகமுண்டானபோது, அந்தச் சகோதரரிடத்தில், "குடிப்பதற்கு ஏதாவது இருக்குமா," என்று கேட்டேன். அவரிடத்தில் தேநீர்ப் பாத்திரம் இருக்கிறதா என்று கேட்டேன். அவர் வருத்தத்தோடு தேநீர்ப் பாத்திரம் இல்லை என்றார். "அமெரிக்கா இவ்வளவு தரித்திரமான நாடா? உங்களிடத்தில் ஒரு தேநீர்ப் பாத்திரம் கூடவா இல்லை!" என்று நான் ஆச்சரியப்பட்டேன். நான் எங்கிருந்து வருகிறேனோ, அங்கு எங்களிடத்தில் எல்லா வகைகளிலும், எல்லா அளவுகளிலும் தேநீர்ப் பாத்திரங்கள் இருக்கும். பின்பு நான் அவரிடம், "உங்களிடம் சில தெர்மாஸ் தண்ணீர்ப் புட்டிகள் இருக்கிறதா?" என்று கேட்டேன். அதுவும்கூட இல்லை என்றே அவர் பதிலளித்தார். என்ன விஷயம் என்று நான் யோசித்தேன். பின்பு நான் ஆச்சரியப்படும் வகையில் அவர் எனக்கு ஒரு கோப்பை

பாலைக் கொடுத்து, "சகோதரரே, இங்கு அமெரிக்காவில் நாங்கள் தண்ணீருக்குப் பதிலாகப் பாலைக் குடிக்கிறோம். எல்லா நாளும் காலையிலும், மத்தியானத்திலும், மாலையிலும் நாங்கள் பாலைக் குடிக்கிறோம்," என்று சொன்னார். இது என் மனதில் ஆழமான பாதிப்பை உண்டாக்கிற்று. "ஆ, நீங்கள் இந்த நாட்டில் மெய்யாகவே செழிப்பாக இருக்கிறீர்கள். நீங்கள் எவ்வளவு செழிப்பாக இருக்கிறீர்களென்றால், தண்ணீருக்குப் பதிலாகப் பாலைக் குடிக்கிறீர்கள்," என்று சொன்னேன்.

கிறிஸ்துவைப்பற்றிய முதல் அனுபவம், ஜீவத்தண்ணீரின் அனுபவமாகும். ஆனால் அவரில் வளர்ந்தபின்பு அதாவது ஜீவனில் முதிர்ச்சியடைந்தபின்பு கிறிஸ்து ஜீவத்தண்ணீர் மட்டும் அல்லர், பாலும் தேனும் பாய்ந்தோடுகிற ஓட்டம் என்கிற நிலையை எட்டிவிடுகிறோம். இந்த வரிசையை நீங்கள் கவனிக்கவேண்டும். பரிசுத்த ஆவி தாவரங்களின் பட்டியலின் கடைசியிலே தேனை வைத்தார். அவர் பாலையும் வெண்ணையையும், கால்நடை களுக்கும், மந்தைகளுக்கும், மிருகங்க ளுக்கும் பின்னர் வைத்தார். இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் கிறிஸ்துவைத் தாவர ஜீவனாக அனுபவித்துமகிழ்ந்தால், பின்பு நீங்கள் அவரைத் தேனாக அனுபவித்துமகிழ்வீர்கள். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவரை மிருக ஜீவனாக அனுபவித்து மகிழ்ந்தால், அவர் பாலைப்போலவே இருக்கிறார் என்பதை நீங்கள் உணர்வீர்கள். அவர் உங்களுக்கு அவ்வளவு வளமானவராகவும், இனிமையானவராகவும் இருப்பார். இதன் பொருள் என்ன வென்றால், நீங்கள் ஓரளவுக்கு முதிர்ச்சி அடைந்திருக்கிறீர்கள்.

நாம் இப்போது கடைசிக் கட்டமாகிய கனிமப்பொருள்களுக்கு வருகிறோம். கற்கள், மலைகள், இரும்பு, செம்பு ஆகியவைகள் உள்ள ஓர் இடத்திற்கு நாம் வருகிறோம். இவைகள் எதற்காக இருக்கின்றன? இவைகள் மாளிகைக்காக, இராஜ்ஜியத்திற்காக, யுத்தத்திற்காக, பாதுகாப்பிற்காக இருக்கின்றன. கிறிஸ்தவர்களி டத்தில் முதிர்ச்சியடைந்த ஜீவன் இருக்கும்போதெல்லாம் தேவனுடைய வீடு கட்டப்படும். கூடவே ஆவிக்குரிய யுத்தமும் மேற்கொள்ளப்படும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கிறிஸ்துவை அனுபவித்து முதிர்ச்சி அடைந்த விசுவாசிகள் இருக்கும்போது அவர்களைக் கொண்டு தேவனுடைய வீடு கட்டப்படுகிறது; அவர்களே யுத்தத்தையும் நடத்துகிறார்கள். நாம் கிறிஸ்துவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுபவித்துமகிழும் போதெல்லாம் கட்டுதல், யுத்தம் என்ற விளைவு எப்போதும் ஏற்படுகிறது என்பதைக்குறித்து நாம் மிகத்தெளிவாக இருக்கவேண்டும். இந்த இரண்டும் எப்போதும் ஒன்றாகவே செல்கின்றன. உங்களுக்குத் தேவனுடைய மாளிகை

வேண்டுமென்றால், போராடுவதற்கு நீங்கள் ஆயத்தமாகவேண்டும். தேவனுடைய மாளிகைக்காக நமக்குக் கட்டுமானப்பொருட்கள் அவசியம். போர்புரிவதற்கு நமக்குப் போராயுதங்கள் அவசியம். இவைகளெல்லாம் கற்களையும், மலைகளையும், இரும்பையும், செம்பையும் சார்ந்திருக்கின்றன.

தேசத்தில் நகரமும் ஆலயமும் கட்டப்பட்டன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். கற்கள், இரும்பு, செம்பு ஆகிய இந்த கட்டுமானப்பொருட்களைக்கொண்டே அவைகள் கட்டப்பட்டன. தேவனுடைய மாளிகைக்கான கட்டுமானப் பொருளாகவும், யுத்தம்செய்வதற்கான போராயுதங்களாகவும், கிறிஸ்துவின் ஜீவனில் ஏதோவொன்று இருக்கிறது என்பதையே இந்த கனிமப்பொருட்கள் குறிக்கின்றன. இந்தக் காரியங்க ளெல்லாம் கிறிஸ்துவினுடைய ஜீவனின் ஐசுவரியங்களின் சிறிதளவாகவே இருக்கின்றன.

இந்த நிலையை நாம் வந்தடைந்திருக்கிறோமா இல்லையா என்பது நாம் கிறிஸ்துவை எப்படி அனுபவித்திருக்கிறோம் என்ற அளவையே சார்ந்திருக்கிறது. நாம் ஒவ்வொருநாளும் கிறிஸ்துவை ஜீவத்தண்ணீராக மட்டுமே அனுபவித்துமகிழ்ந்தால் நம் நடுவில் தேவனுடைய மாளிகை உருவாகும் நிலை வராது. நாம் இன்னும் மிகவும் இளையவர்களாகவே இருக்கிறோம். நாம் கிறிஸ்துவை ஜீவத்தண்ணீராக, கோதுமையாக, பார்லியாக, இன்னும் பல காரியங்களாக அனுபவித்துமகிழ வேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ வேண்டும். அப்போது கர்த்தருக்கு அங்கு ஒரு மாளிகை எழும்பும். எதிரியுடன் யுத்தமும் செய்யலாம்.

சில சமயங்களில் நீங்கள் ஒரு சகோதரரையோ அல்லது ஒரு சகோதரியையோ சந்திக்கிறீர்கள். அப்போது அவர் மிகவும் நல்லவர் என்று நீங்கள் உணர்கிறீர்கள். ஆனால் ஏதோவொன்று குறைவாக இருக்கிறது. உண்மையான குறை இருக்கிறது. அது பாவமானது என்பதல்ல; மாறாக, அவர்கள் கர்த்தரிடத்தில் உத்தமமாய் இருக்கிறார்கள். அவர்கள் மனப்பான்மையும் நேர்மறையாக இருக்கிறது. ஆனால் உங்கள் ஆவியின் ஆழத்தில் ஒரு குறையை உணர்கிறீர்கள். இதை உங்களால் விளக்கமுடியாது. சரியான வார்த்தையைக் கண்டுபிடிப்பது கடினம். அவர்கள் கொஞ்சம் உறுதியற்றவர்களாக, கொஞ்சம் மிருதுவானவர்களாக இருக்கிறார்கள் என்று ஒருவேளை நீங்கள் சொல்லலாம். நான் கூறுவதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அவர்கள் ஒரு ரொட்டித் துண்டைப்போல இருக்கிறார்கள். ரொட்டி நல்லது, ஆரோக்கியமானது. ஆனால் அது எவ்வளவு மிருதுவாகவும், உறுதியற்றதாகவும் இருக்கிறது!

அல்லது அவர்களை ஒரு கோப்பைப் பாலுக்கு ஒப்பிடலாம். பால் நல்லது, வளமானது. ஆனால் அது வெறும் திரவம் மட்டுமே, திரவத்தைப்போன்று பலவீனமானது. இப்போது ஒரு கல்லை அல்லது ஓர் இரும்புத்துண்டை, ஒரு செம்புத்துண்டை எடுத்துக் கொள்ளுங்கள்—ஆ! இங்கு பலமான ஒன்று இருக்கிறது! ஆனால் இந்த மக்கள் அதைப்போன்றவர்கள் அல்லர். அவர்கள் கல்லைப்போன்றவர்கள் அல்லர், அவர்களில் இரும்போ அல்லது செம்போ எதுவுமே இல்லாததுபோலத் தோன்றுகிறது. பாலை ஒரு போராயுதமாகக்கொண்டு போர்புரிய முடியாது. ஒரு ரொட்டித் துண்டை வைத்து உங்களால் யுத்தம்செய்ய முடியாது. அல்லது ஓர் அத்திப்பழத்தைக் கொண்டு சண்டைக்குப் போகமுடியாது. இது எவ்வளவு நகைப்புக்கிடமானது! உங்களிடத்தில் கொஞ்சம் இரும்போ அல்லது செம்போ இருக்கவேண்டும். உங்களிடத்தில் பலமான ஏதோவொன்று இருக்கவேண்டும். பாலைக்கொண்டு உங்களால் ஒரு வீட்டைக் கட்டமுடியாது. ரொட்டித் துண்டுகளைக் குவித்துவைத்துக்கொண்டு ஒரு மாளிகையைக் கட்டமுடியாது. உங்களிடத்தில் கற்கள் இருக்கவேண்டும், உங்களிடத்தில் கட்டுமானப் பொருட்கள் இருக்கவேண்டும். மேலும் கட்டுமானப் பொருட்களைத் தோண்டி எடுப்பதற்கும், வீட்டைக் கட்டுவதற்கும் உங்களிடத்தில் மலை இருக்கவேண்டும்.

சில சமயங்களில் நான் கர்த்தருடைய வேலைக்காரர்களில் சிலரைச் சந்திக்கும்போது ஒரு மலையைச் சந்திப்பதுபோன்ற உணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது. அவர் எவ்வளவு வளமானவர், எவ்வளவு பலமானவர், எவ்வளவு உறுதியானவர், எவ்வளவு பாதுகாப்பானவர் என்று என்னால் சொல்லமுடியாது. அவர் ஒரு மலையைப்போன்றவர். அவர் அங்கு உட்கார்ந்திருக்கும் போது அங்கே ஒரு மலை இருக்கிறது. உங்களால் அவரைத் தாக்கி உடைக்கமுடியாது. நீங்கள் அவரைத் தாக்கி உடைக்க முற்பட்டால் நீங்கள் தாக்கப்பட்டு உடைந்துபோவீர்கள். இது ஒரு மலை, இது ஒரு குன்று. நீங்கள் அவரோடு இடைப்பட முடியாது. அவர்தான் உங்களோடு இடைப்படவேண்டும்.

இதுவே ஆவிக்குரிய வாழ்க்கையின் கடைசிக் கட்டம். இந்த நிலைக்கு நீங்கள் வருவது மிகவும் சாத்தியமே. நீங்கள் தேவ மக்களின் நடுவில் ஒரு கல்லாக இருப்பதும், சபையில் ஒரு தூணாக இருப்பதும் மிகவும் சாத்தியமே. உங்களால் அப்பத்தைத் தூண்களுக்காகப் பயன்படுத்த முடியுமா? உங்களால் திராட்சைப் பழங்களை தூண்களுக்காகக் குவித்துவைக்க முடியுமா? இல்லை, முடியாது. நீங்கள் அதைச்செய்ய முடியாது. கல்லிலிருந்து அல்லது இரும்பிலிருந்து அல்லது செம்பிலிருந்து உங்களால் ஒரு தூணை உண்டாக்கமுடியும். அது மிகப்போதுமானது. தேவனுடைய

மாளிகைக்கு கல்லும், இரும்பும், செம்பும், மலையும் தேவை. இந்தக் கட்டுமானப் பொருட்களெல்லாம் தேவனுடைய மாளிகையுடனும், தேவனுடைய இராஜ்ஜியத்துடனும் தொடர்புடையவைகள்.

களிமண்ணிலிருந்து கல்லாக மறுரூபமாக்கப்படுதல்

நாம் கிறிஸ்துவுக்குள் சிறு குழந்தைகளாக இருந்துகொண்டு, ஜீவத் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டிருக்கும்போது, நம் நடுவில் கர்த்தருடைய மாளிகை உருவாகுவது எப்படிச் சாத்தியமாகும்? இது சாத்தியம் இல்லை, கிறிஸ்துவை அனுபவிப்பதின்மூலம் நாம் வளர்ந்திருக்கவேண்டும். நாம் முதிர்ச்சியடைந்திருக்க வேண்டும். நாம் கற்களாக இருக்கவேண்டும். கர்த்தர் ஜீவனுள்ள கல், நாம் அவருடைய மாளிகைக்கான கட்டுமானப்பொருட்களாகுமாறு ஜீவனுள்ள கற்களாக இருக்கவேண்டும்.

திருஷ்டாந்தமாகச் சொல்வதென்றால், ஆதாமுக்குள் நாம் ஒரு களிமண் துண்டு, நாம் கல் இல்லை; மாறாக வெறும் களிமண்தான். கர்த்தருடைய மாளிகை கற்களால் கட்டப்படுகிறது. ஆனால் நாமோ களிமண்ணால் உண்டாக்கப்பட்டிருக்கிறோம். நாம் களிமண் துண்டாக இருப்பதால் கர்த்தருடைய மாளிகைக்கான கட்டுமானப்பொருளாக எப்படி இருக்கமுடியும்? இது சாத்தியம் இல்லை. நாம் களிமண்ணிலிருந்து கல்லாக மறுரூபமாக்கப்பட வேண்டும். கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதின்மூலமாகவும், கிறிஸ்துவைப்பற்றிய நடைமுறைக்குரிய அனுபவத்தின்மூலமாகவும், பரிசுத்த ஆவியினால் நாம் மறுரூபமாக்கப்பட வேண்டும்.

சில நேரங்களில் ஒரு சில சகோதரர்கள் என்னிடத்தில் வரும்போது அவர்கள் ஓரளவு மறுரூபமாக்கப்பட்டிருக் கிறார்கள் என்று நான் உணர்கிறேன். ஆனால் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், அவர்களிடத்தில் சிறிதளவு கல் மட்டுமே இருக்கிறது. பெரும்பாலான பகுதி இன்னும் களிமண்ணாகவே இருக்கிறது. இதுபோன்ற சகோதரர்களை நீங்கள் சந்தித்திருக்கக்கூடும். சிறிதளவு மறுரூபமாகுதலை நீங்கள் உணரக்கூடும். அவர்கள் கல்லைப்போல் தோற்றமளிக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய ஆள்தத்துவத்தின் பெரும்பான்மையான பகுதி இன்னும் ஆரம்பத்தில் இருந்த அதே நிலையிலேயே இருக்கிறது. அவர்கள் இன்னும் பெரும்பாலும் ஆதாமுக்குள்தான் இருக்கிறார்கள். களிமண்ணில்தான் இருக்கிறார்கள். அவர்கள் இன்னும் அதிகமாக ஜென்மசுபாவ முள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

ஒருநாள் சில சகோதரர்களுடன் கலந்துறவாடிக்கொண் டிருந்தேன். அப்படிக் கலந்துறவாடிக்கொண்டிருந்தபோது, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் ஒரு சகோதரர் மிகவும் விடாப் பிடியாக இருந்தார். நான் அந்தச் சகோதரனை நோக்கி, "சகோதரனே, உன்னுடைய ஆவியில் ஒரு சிறிய கல் துண்டு இருக்கிறது; ஆனால் உன் தலை ஒரு களிமண் துண்டாகத் தான் இருக்கிறது," என்று சொன்னேன்.

பெரும்பாலான சகோதர சகோதரிகளின் மனப்போக்கு இன்னும் புதிதாக்கப்படவில்லை, இன்னும் மறுரூபமாக்கப்பட வில்லை. அவர்களுடைய மனப்போக்கு அப்படியே ஜென்மசுபாவ மனிதனுடையதைப்போலவே இருக்கிறது. அது ஜென்மசுபாவ கருத்துக்களாலும், ஜென்மசுபாவ எண்ணங்களாலும் நிறைந் திருக்கிறது. அது களிமண்ணாலான தலை. மனம் புதிதாக்கப் படுவதின்மூலமாக நாம் ஒரு களிமண் துண்டிலிருந்து ஒரு கல் துண்டாக மறுரூபமாக்கப்படுகிறோம். நாம் கல்லாக மாறினபின்பு இன்னும் அதிகமாக மறுரூபமாக்கப்படுமாறு அதாவது சாதாரணக் கல்லிலிருந்து விலையேறப்பெற்ற கல்லாகுமாறு, நாம் சுட்டெரிக்கப்பட்டுப் பிழியப்படுகிறோம். புதிய எருசலேமில் களிமண்ணின் துணிக்கையைக் கூட உங்களால் காணமுடியாது. எந்தவிதமான சாதாரணக் கற்களையும் உங்களால் கண்டுபிடிக்க முடியாது. ஒவ்வொரு கல்லும் ஒரு விலையேறப்பெற்ற கல். புதிய எருசலேம் விலையேறப்பெற்ற கற்களால் கட்டப்படுகிறது.

மலைகளும் குன்றுகளும்

கற்கள் எப்போதும் மலைகளுடனும், குன்றுகளுடனும் தொடர்புடையவைகள் என்று நமக்குத் தெரியும். நமக்குப் பாறைகள் வேண்டுமானால், கண்டிப்பாக மலைகள்வேண்டும். சமவெளிகளில் கற்களைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினம். அப்படியானால் மலைகளுக்கும், குன்றுகளுக்கும் என்ன அர்த்தம்? வேதத்தில் மலைகளும், குன்றுகளும் எப்போதும் உயிர்த்தெழு தலையும், பரமேறுதலையும் குறிக்கின்றன. அவை பூமிக்குமேலே, சமவெளிக்குமேலே, உயர்ந்திருக்கின்றன. களிமண்துண்டாகிய நீ எப்படி கல்லாக மறுரூபமாக்கப்பட முடியும்? உயிர்த்தெழுந்த ஜீவனில் மட்டுமே அது முடியும்! ஆவிக்குரிய, ஜீவனுள்ள கற்களெல்லாம் உயிர்த்தெழுந்த ஜீவனில் இருக்கின்றன. அவை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் என்ற மலையோடு இணைக்கப் பட்ட கற்கள். நாமெல்லாரும் ஆதாமின் ஜீவனில், அதாவது பழைய ஜீவனிலும் சுபாவத்திலும் வாழ்ந்துகொண்டிருந்தால், நாம் சமவெளியில் இருக்கிறோம் என்று அர்த்தம். நம்மிடையே மலை இல்லாததால், நம்மிடையே கல்லும் இல்லை. ஆனால் நாம்

உயிர்த்தெழுந்த ஜீவனில் வாழ்ந்து, நடந்துகொண்டிருந்தால் நாம் மலைகள் மற்றும் குன்றுகளின் நிஜத்தை அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறோம். இந்த மலைகளிலும் குன்றுகளிலும் நிச்சயமாகக் கற்கள் இருக்கின்றன. இதை இப்படி விளக்கிக்காட்டலாம். சில சகோதர சகோதரிகளோடு நான் கூடிவருகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு சகோதரன் என்ற முறையில், ஜென்மசுபாவ ஜீவனுக்கேற்றபடி நடக்கிறேன். அங்கு இன்னொரு சகோதரன் இருக்கிறான். அவனும் எப்போதும் ஜென்மசுபாவ ஜீவனில் வாழ்ந்துகொண்டிருக்கிறான். எங்களோடு கூடிவருகிற ஓர் அன்பான சகோதரி எப்போதும் தன் உணர்ச்சிகளிலேயே நடந்துகொண்டும், வாழ்ந்துகொண்டும் இருக்கிறாள்; சில சமயங்களில் அவள் மிக சந்தோஷமாக இருக்கிறாள், சில சமயங்களில் அளவுக்கு அதிகமாக துக்கமாகவும், சோர்வாகவும் இருக்கிறாள். உண்மையில் நாமெல்லாரும் இப்படிப்பட்ட விசுவாசிகளின் கூட்டமே. நாமெல்லாரும் மிகவும் ஜென்மசுபாவ முள்ளவர்கள்; ஜென்மசுபாவ ஜீவனிலேயே தொடர்ந்து வாழ்ந்து கொண்டும், நடந்துகொண்டுமிருக்கிறோம். நம்மிடையே குன்றின் சுபாவத்தையுடைய ஒன்றை உங்களால் உணரமுடிகிறதா? நிச்சயமாக இல்லை. நாமெல்லாரும் களிமண்ணாக இருக்கிறோம்; நாமெல்லாரும் சமவெளியில் இருக்கிறோம். நீங்கள் கல்லை எதிர் பார்த்தால், மண், பூமி, களிமண் என்று மண்ணைத்தவிர வேறொன்றையும் உங்களால் கண்டுபிடிக்கமுடியாது. மலை இல்லை. எனவே கல்லும் இல்லை. நீங்கள் கற்களை விரும்பினால், மலைப் பிரதேசத்திற்குச் சொல்லவேண்டும்.

விசுவாசிகளின் இன்னொரு கூட்டம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களுக்குச் சிலுவையைக்குறித்து ஏதோ கொஞ்சம் தெரியும். ஜென்மசுபாவ ஜீவனை மறுப்பது என்றால் என்ன என்பதைப்பற்றியும் ஏதோ கொஞ்சம்தெரியும்; ஆகையால் உயிர்த்தெழுந்த ஜீவனை அவர்கள் ஓரளவுக்கு உணர்ந்திருக்கிறார்கள். அவர்கள் புதிதான ஜீவனில் நடக்கிறார்கள். அவர்கள் புதிதான ஆவியில் ஊழியம்செய்கிறார்கள். அவர்கள் உயிர்த்தெழுதலில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடத்தில் வரும்போது, அங்கு ஏதோவொன்று உயர்ந்திருக்கிறதையும், ஏதோவொன்று மேம்பட்டிருக்கிறதையும், உங்களைவிட ஏதோவொன்று உயர்வாக இருப்பதையும் நீங்கள் உணர்கிறீர்கள். அவர்களுக்குள்ளும், அவர்களிடையிலும் கொஞ்சம் ஆவிக்குரிய குன்றும், கொஞ்சம் ஆவிக்குரிய மலையும் இருக்கிறது என்று நீங்கள் உணர்கிறீர்கள். அநேகக் கற்களை, விலையேறப்பெற்ற கற்களையும்கூடக் கண்டுபிடிப்பது கடினம் இல்லை. இவரைப் பார்த்தால் இவர் ஒரு கல்லாக இருக்கிறார்.

அவரைப் பார்த்தால் அவரும் ஒரு கல்லாக இருக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இவைகள் கற்கள். ஏனென்றால் இங்கு மலைகளும் குன்றுகளும் இருக்கின்றன.

மலைகளும் குன்றுகளும் வீட்டை அதாவது தேவனுடைய இராஜ்ஜியமாகிய நகரத்தை, கட்டுவதற்காகவே. வேதத்திலுள்ள அநேக நகரங்கள் மலைகளிலும், குன்றுகளிலும் கட்டப்பட்டிருக்கின்றன. நான் பாலஸ்தீனா தேசம் எங்கும் பயணம் செய்தபோது, ஏறக்குறைய எல்லா நகரங்களும் இப்படி மலைகளிலும், குன்றுகளிலும் கட்டப்பட்டிருந்ததைக் கவனித்தேன். பள்ளத்தாக்கில் அல்லது சமவெளியில் ஒரு சில நகரங்களே கட்டப்பட்டிருந்தன. நகரம்தான் தேசத்தின், அதாவது இராஜ்ஜியத்தின், மையம். பழைய ஏற்பாட்டில் நகரம் எப்போதுமே தேசம் அல்லது இராஜ்ஜியத்தின் அடையாளமாக இருந்தது. ஆகையால் கர்த்தருடைய பிள்ளைகளின் நடுவில், எப்போதெல்லாம் கொஞ்சம் ஆவிக்குரிய குன்று அல்லது மலை இருக்கிறதோ, அப்போதெல்லாம் வீட்டையும் நகரத்தையும் கட்டுவதற்கான சில கட்டுமானப்பொருட்கள், சில கற்கள் தானாகவே அங்கிருக்கின்றன என்பதுதான் இப்படிப்பட்ட பத்திகளில் பரிசுத்த ஆவியின் எண்ணம். தேவனுடைய அதிகாரமும், தேவனுடைய இராஜ்ஜியமும் அங்கிருக்கின்றன. கர்த்தர் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட பின்பு வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். ஆவிக்குரிய அதிகாரமும், பரலோக அதிகாரமும் எப்போதும் உயிர்த்தெழுதலில்தான் இருக்கிறது. நீங்களும் நானும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த ஜீவனில் வாழ்ந்துகொண்டும், நடந்துகொண்டும் இருந்தால் நம்மிடத்தில் பரலோக அதிகாரம் இருக்கும்.

சபையின் அதிகாரத்தைப்பற்றிய அநேக மக்களின் கருத்து முற்றிலும் தவறானது. சபையின் அதிகாரத்துக்கும், நிறுவனத்துக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. இது முழுக்க முழுக்க உயிர்த்தெழுதலைப்பற்றிய விஷயம். ஓர் உள்ளூர் சபையில் இரண்டு சகோதரர்கள் மிக அதிகமாக உயிர்த்தெழுதலில் இருந்தால், அவர்களுக்குத் தெய்வீக, பரலோக அதிகாரம் கொடுக்கப்படுகிறது. அவர்களே சபையின் அதிகாரம். அவர்களே அந்த உள்ளூர் சபையிலுள்ள குன்றுகள். அவர்களிடம் உயிர்த்தெழுதல் இருக்கிறது. எனவே அவர்களிடம் இராஜ்ஜியத்தின் அதிகாரம் இருக்கிறது.

நாம் கிறிஸ்துவுக்குள் பாலகர்களாக மட்டும் இருந்தால், நாம் அவரை ஜீவத்தண்ணீராக அனுபவித்திருக்கிறோம்; ஒருவேளை நம் ஜீவ நிரப்பீடாகவும் அனுபவித்திருக்கக்கூடும். நாம் ஒன்றாகக் கூடிவரும்போது எல்லாம் நன்றாகவே இருக்கிறது. ஒருவரோடொருவர் மிகவும் சந்தோஷமாக இருக்கிறோம். ஆனால்

நாம் மிகவும் இளைஞர்களாயிருக்கிறோம். பல நேரங்களில் நாம் நம் ஜென்மசுபாவத்தின்படி சந்தோஷமாக இருக்கிறோம். அதுபோல பல நேரங்களில் நாம் நம் ஜென்மசுபாவ உணர்ச்சியில் துக்கமாக இருக்கிறோம். நம்மிடையே குன்றுகளுமில்லை; நம்மிடையே மலைகளுமில்லை. நாமெல்லாரும் களிமண் பாளங்கள். இத்தகைய சூழ்நிலையில் உங்களால் சபையின் அதிகாரத்தை உணர முடியுமா? ஒருபோதும் முடியாது. எங்கே பரிசுத்தவான்கள் கர்த்தராகிய இயேசுவுடன் சிலுவையிலறையப் படுதல் என்றால் என்ன என்பதின் பொருளை அறிந்திருக்கிறார் களோ, எங்கே பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுதலில் வாழ்கிறார் களோ, அங்கே சபையின் அதிகாரம் இருக்கிறது. அவர்கள் சிரித்தால் உயிர்த்தெழுதலில் சிரிக்கிறார்கள். அவர்கள் அழுதால் உயிர்த்தெழுதலில் அழுகிறார்கள். அவர்கள் கோபப்படும்போதுங் கூட உயிர்த்தெழுதலின் ஜீவனிலே கோபப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய உயிர்த்தெழுந்த ஜீவனைத் தங்கள் அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கிறார்கள். அவர்களுக்கு இது வெறும் போதனை இல்லை. மாறாக நடைமுறைக்குரிய அன்றாட அனுபவமகிழ்ச்சி. நீ அவர்களைச் சந்திக்கும்போது, அவர்கள் மலையிலுள்ள கற்களைப்போன்றவர்கள் என்று உணர்கிறாய். இவர்களுக்கே பரலோக அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களே சபையின் அதிகாரம். இங்குள்ள பரிசுத்தவான்கள் இப்படி இருந்தால், தேவனுடைய வீடும் தேவனுடைய இராஜ் ஜியமும் இங்கு இருக்கின்றன. இங்கு தேவனுடைய வீடு கட்டப்படுகிறது, தேவனுடைய இராஜ்ஜியம் நிறுவப்படுகிறது.

நீங்கள் இதை வாசித்துவிட்டதால் உங்களிடத்தில் இது இருக்கிறது என்று தயவுசெய்து எண்ணாதீர்கள். நாம் பேசிக் கொண்டிருப்பதை அடைவதற்கு பல ஆண்டுகள் வேணடும். நான் உங்களுக்குத் திசைகளை மட்டும் தருகிறேன். இது நீங்கள் பின்பற்றிச் செல்வதற்கான வெறும் வரைபடமே. இதை எடுத்துக்கொண்டு தாழ்மையுடன் இதைப் பயிற்சி செய்யுங்கள். நாளைக்கே நீங்கள் ஒரு மலையாகிவிடுவீர்கள் என்று எண்ணாதீர்கள். இல்லை! இந்தக் காரியங்களைக்குறித்து ஜெபியுங்கள். இவைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான வழியைத் தேடுங்கள். அப்போது உங்களுக்குப் பயன் உண்டாகும்.

அதிகாரம் எட்டு

தேசத்தின் நன்மை—
அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள்

III. கனிமப்பொருட்கள் (தொடர்ச்சி)

வேத வாசிப்பு: உபா. 8:9; 33:25; எரே. 15:12; வெளி. 2:27; 1:15; மத். 28:18; லூக்கா 10:19; மத். 16:18, 19; 18:17, 18; எபே. 6:11-17

தேசம் முதலாவது நீர்வளமிக்கதென்றும், இரண்டாவது சகல விதமான காய்கறி வளமும், தாவர வளமும்,, மூன்றாவது கால்நடை வளமும், மந்தை வளமும்,, நான்காவது கனிமங்கள் அல்லது கனிம வளங்கள் மிக்கது என்றும் நாம் தெளிவாகப் பார்த்தோம். வெவ்வேறு வகையான வளங்களை வரிசைப்படுத்துவோம்.

1. நீர்நிலைகள்: ஊற்றுகள், சுனைகள், நீரோடைகள்.
2. தாவரங்கள், காய்கறிகள்: கோதுமை, பார்லி, திராட்சை, அத்திமரங்கள், மாதளஞ்செடிகள், ஒலிவமரங்கள்.
3. மிருகங்கள்: கால்நடைகள், மந்தைகள்

(தாவர ஜீவனும், மிருக ஜீவனும் ஒன்றாக இரண்டறக் கலக்கும்போது தேனும், பாலும் உற்பத்தியாகின்றன)

4. கனிமப்பொருட்கள் அல்லது கனிமங்கள்: கற்கள், மலைகள், இரும்பு, செம்பு.

இந்த ஐசுவரியங்களெல்லாம் ஆவிக்குரிய வாழ்வின் பல்வேறு நிலைகளுடன் எப்படி ஒத்திருக்கின்றன என்று பார்த்தோம். ஜீவத்தண்ணீர் நம் ஆவிக்குரிய அனுபவத்தின் முதல் நிலையைச் சார்ந்தது. கிறிஸ்துவை முதல் நிலையில் அனுபவிக்கும்போது, அவர் நமக்கு ஜீவத்தண்ணீராக இருக்கிறார் என்று நாம் உணர்கிறோம். பின்பு, இரண்டாவது நிலையில் கிறிஸ்துவைப் பற்றிய இன்னும் கூடுதலான அனுபவத்தைப் பெறுகிறோம். கிறிஸ்துவை அதிகத் திடமாக அனுபவித்துமகிழ்கிறோம். கிறிஸ்து நமக்குத் திட உணவாக இருக்கிறார். அவர் தண்ணீரைவிடச் சற்றுக் கூடுதலானவர். தண்ணீர் நிச்சயமாக நல்லதுதான்; மிகத் தேவையானதும்கூட. ஆனால் தண்ணீர் அவ்வளவு திடமானதல்ல. வெறுந் தண்ணீரை மட்டும் குடித்துக்கொண்டு என்னால் வாழவோ, வளரவோ முடியாது. நீங்கள் என்னை விருந்துக்கு அழைத்தால், எனக்குக் கொஞ்சம் கோதுமை அல்லது கொஞ்சம் பார்லிபோன்ற திட உணவு தரவேண்டும். தாவரங்கள் மற்றும்

காய்கறிகளுக்குப்பின்பு, ஒலிவமரம் வருகிறது. (ஒலிவமரம் பரிசுத்த ஆவியால் நிறைந்த எண்ணெயின் குமாரனாகிய கிறிஸ்துவைக் குறிக்கிறது.) இது உண்மையில் அற்புதமானது. அவர் உள்ளும், புறமும் பரிசுத்த ஆவியால் பூர்த்தியாய் நிரப்பப்பட்டிருந்தார். நாம் அவரை இப்பேர்ப்பட்டவராக அனுபவித்துமகிழலாம். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப் படமுடியும்; பரிசுத்த ஆவியினால் பூர்த்தியாய் நிரப்பப்பட முடியும். நாம் இப்படி ஆவியினால் நிரம்பியிருக்கும்போது, கிறிஸ்துவின் ஜீவனில் முதிர்ந்தவர்களாக இருப்போம். கிறிஸ்து பாலும், தேனுமாக நமக்கு அவ்வளவு பிரியமானவராகவும், இனிமையானவராகவும், செழிப்பானவராகவும் இருக்கிறார்.

கிறிஸ்துவை நாம் இப்படி வளமாக அனுபவிப்பதைத் தொடர்ந்து உடனடியாக நாம் கற்கள், மலைகள், இரும்பு, வெண்கலம் ஆகிய கனிமங்களுக்கு வருகிறோம். இதுதான் பரிசுத்த ஆவியானவரின் வரிசை. பரிசுத்த ஆவியானவர் இந்தக் காரியங்களையெல்லாம் ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைகளோடு ஒத்திருக்கும்படிக்கு இப்பேர்ப்பட்ட வரிசையில் வைக்கிறார். கிறிஸ்துவின் ஜீவனில் நாம் முதிர்ச்சியடையும் போது, கல்லுக்கும், மலைக்கும், இரும்புக்கும், செம்புக்கும் உரிய ஏதோவொன்று நம் அனுபவத்தில் நிகழ்கிறது.

முந்தைய அதிகாரத்தில், கற்களையும், குன்றுகளையும்பற்றி நாம் அதிகமாகப் பார்த்தோம். இரட்சிக்கப்பட்டு, மறுரூப மாக்கப்பட்ட பரிசுத்தவான்கள் தேவனுடைய கட்டிடத்திற்கான கட்டுமானப்பொருட்களாக இருக்கிறார்கள் என்பதையே கற்கள் குறிக்கின்றன என்று நாம் பார்த்தோம். நாம் இரட்சிக்கப் பட்டால் மட்டும் போதாது; தேவனுடைய கட்டிடத்திற்கான ஜீவனுள்ள கற்களாக மறுரூபமாக்கப்படவும்வேண்டும். ஆதியில் நாம் கற்கள் இல்லை; நாம் வெறும் களிமண் துண்டுகள். ஆனால் நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோது, அவர் நம் ஆவிக்குள் வந்து, நம்மை மறுரூபமாக்குவதற்காகத் தொடர்ந்து கிரியைசெய்து கொண்டிருக்கிறார். நாம் தேவனுடைய கட்டிடத்திற்கான கட்டுமானப்பொருட்களாக மாறும்படிக்கு பரிசுத்த ஆவியின் புதிதாக்குதலினால், களிமண்துண்டிலிருந்து கல்லாக மறுரூபமாக் கப்படுகிறோம்.

குன்றுகளும், மலைகளும் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் குறிக்கின்றன என்றுகூட நாம் பார்த்தோம். உயிர்த்தெழுதலிலும் பரமேறுதலிலும்தான் எப்போதும் அதிகாரமும், இராஜ்ஜியமும், இராஜாவும் உண்டு. உயிர்த்தெழுதல் என்பது உயர்த்தப்பட்ட ஒன்று; பரமேறுதல் என்பது மேம்படுத்தப்பட்ட ஒன்று. இந்த உயர்த்துதலில், தெய்வீக அதிகாரமாகிய தெய்வீக

அரசாங்கம், அதாவது இராஜாவை உடைய தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கிறது. இதுதான் மலைகள் மற்றும் குன்றுகளின் பொருள். களிமண்ணிலிருந்து கல்லாக மறுரூபமாக்கப் படுவதற்குரிய ஒரே வழி உயிர்த்தெழுதலில்தான் இருக்கிறது என்று நாம் பார்த்தோம். உயிர்த்தெழுந்த ஜீவனில் மட்டுமே கிறிஸ்து நம்மை மறுரூபமாக்க முடியும். ஜென்மசுபாவ ஜீவனில் நாம் ஒரு களிமண் துண்டு. ஆனால் உயிர்த்தெழுந்த ஜீவனில் நாம் ஒரு கல். தெய்வீக அதிகாரத்தையும், தெய்வீக அரசாங்கத் தையும் உடைய தேவனுடைய மாளிகைக்காக உருவாக்கப்பட்ட கற்கள் எல்லாம் உயிர்த்தெழுந்த ஜீவனின் விளைவாகும். கிறிஸ்துவை நாம் எவ்வளவு அதிகமாக அனுபவித்துமகிழ் கிறோமோ, எவ்வளவு அதிகமாக அனுபவமாக்கிக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அவருடைய ஜீவனின் மூலக் கூறுகளைக் கொண்டு பரிசுத்த ஆவியினால் நாம் மறுரூபமாக்கப்படுவோம். அப்போது தேவனுடைய மாளிகையும், தேவனுடைய இராஜ்ஜியமும் எழும்பும்.

இரும்பும், செம்பும்

நாம் இப்போது கடைசிக் காரியங்களாகிய இரும்புக்கும் செம்புக்கும் வருகிறோம். எபேசியருக்கு எழுதிய நிருபத்திலுள்ள வரிசைமுறை உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். முதல் அதிகாரம், கிறிஸ்துவுக்குள் நாம் பெற்றிருக்கிற எல்லா ஆசீர்வாதங்களையும்பற்றிக் கூறுகிறது. பின்னர் இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் அதிகாரங்க ளெல்லாம் கிறிஸ்துவின் ஐசுவரியங்களுடன் தொடர்புடையவைகள். இந்த ஒரேவொரு புத்தகத்தில் மட்டும்தான் "கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியம்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது (எபே. 3:8). இந்த ஐசுவரியங்களின் விவரத்திற்குப்பின்பு, புத்தகத்தின் கடைசி, ஆறாவது அதிகாரத்திற்கு வருகிறோம். அங்கு நாம் போராட்டத்தை, அதாவது யுத்தத்தைப் பார்க்கிறோம். எபேசியர் புத்தகத்திலுள்ள கடைசிக் காரியம் ஆவிக்குரிய யுத்தமாகும். எபேசியர் 6ஆம் அதிகாரத்தை நீங்கள் உங்கள் ஆவிக்குரிய அனுபவத்தில் வந்தடையும்போது, கிறிஸ்துவினுடைய ஐசுவரியங்களை நீங்கள் அபரிமிதமாக அனுபவித்துமகிழ்ந்திருப்பீர்கள், முதல் அதிகாரத்திலிருந்து 5ஆம் அதிகாரம்வரை உள்ள கிறிஸ்துவை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்கள். கிறிஸ்துவை நீங்கள் இந்த அளவுக்கு அனுபவித்துமகிழ்ந்திருப்பதாலும், தேவனுடைய மாளிகையும், தெய்வீக அரசாங்கமும் தேவையாயிருப்பதாலும், நீங்கள் ஆவிக்குரிய யுத்தம்பண்ணவேண்டும். நீங்கள் இந்தக் கட்டத்தை வந்தெட்டும்போது, போர்புரிவதற்கு

பலப்படுத்தப்படுவீர்கள், தகுதியுடையவர்களாயிருப்பீர்கள், கிறிஸ்துவின் ஜீவனில் முதிர்ச்சியடைந்திருப்பீர்கள். கிறிஸ்து வினுடைய ஐசுவரியத்தின் அனுபவத்தில் நீங்கள் போர்புரிய வேண்டும், உங்களால் போர்புரிய முடியும்.

இந்த அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள யுத்தகளத்துக்குள் கொண்டுவரப்பட்டவுடனேயே தலைச்சீரா, மார்புக்கவசம், கேடயம், பட்டயம் போன்ற சொற்றொடர்களை நாம் வாசிக்கிறோம். திருஷ்டாந்தமாகப் பேசுவதானால், தலைச்சீரா எதை வைத்து செய்யப்பட்டுள்ளது? மார்புக்கவசம் எதனால் ஆனது? நிச்சயமாக அவைகள் மிருதுவான அல்லது எளிதில் உடையக்கூடிய பொருட்களால் செய்யப்பட்டவைகள் இல்லை. *1* சாமுவேல் *17*ஆம் அதிகாரத்தில், முழுவதும் வெண்கலத்தால் மூடப்பட்ட ஓர் இராட்சசப் போர்வீரனைப் பார்க்கிறோம். அவனுடைய தலை, மார்பு, முழங்கால்கள், கால்கள் ஆகியவைகளெல்லாம் வெண்கலத்தால் மூடப்பட்டிருந்தன. அவன் போராடப் பயன்படுத்திய பட்டயம் இரும்பால் செய்யப்பட்டிருந்தது. கிறிஸ்துவினுடைய ஐசுவரியத்தின் கடைசிக் காரியம் இரும்பும், வெண்கலமும் (செம்பும்) ஆகும். ஏனென்றால் கிறிஸ்தவ அனுபவத்தின் கடைசிக் கட்டம் ஆவிக்குரிய யுத்தம். யுத்தத்தில் நமக்கு வெண்கலமும், இரும்பும் தேவைப்படுகின்றன.

இரும்பும், வெண்கலமும் கிறிஸ்துவினுடைய எந்த மூலக் கூறுகளைக் குறிக்கின்றன? கிறிஸ்து இரும்புக்கோலால் தேசங்களை ஆட்சிசெய்வார் என்று கூறப்பட்டுள்ளது. ஆகையால் இரும்பு கிறிஸ்துவினுடைய அதிகாரத்தைக் குறிக்கிறது. கிறிஸ்துவே இந்த முழுப் பிரபஞ்சத்தின் மேலும் முழு அதிகாரம் உடையவர். வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் பரலோகத்திற்கு பிதாவின் வலதுபாரிசத்திற்கு உயர்த்தப்பட்டு, எல்லாவற்றிற்கும் தலையாக்கப்பட்டிருக்கிறார். அவரிடத்தில் இரும்பு இருக்கிறது. இரும்புக்கோல் அவர் கரத்தில் இருக்கிறது. இது மிகத் தெளிவாயிருக்கிறது.

வெண்கலம் அல்லது செம்பு கிறிஸ்துவினுடைய எந்த அம்சத்தைக் குறிக்கிறது? செம்பு கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பைக் குறிக்கிறது. ஆனால் அவருடைய நியாயந்தீர்க்கும் வல்லமையும், நியாயந்தீர்க்கும் அதிகாரமும் அவர் அனுபவித்த பாடுகளிலிருந்தே வெளிவருகின்றன என்பதை நாம் உணரவேண்டும். அவர் இங்கு பூமியில் இருந்தபோது எல்லாவிதமான சோதனைகளினூடாகவும் கடந்துசென்றார். எல்லாவிதமான பாடுகளையும் அவர் அனுபவித்தார். அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருக்கின்றன. பாதங்கள் எதைக்

குறிக் கின்றன? பாதங்கள், நடையை அதாவது பூமியில் வாழ்ந்த வாழ்க்கையைக் குறிக்கின்றன. பூமியில் கர்த்தருடைய நடையும், வாழ்க்கையும் தேவனால் சுத்திகரிக்கப்பட்டிருந்தன, பளபளப் பாக்கப்பட்டிருந்தன. சோதிக்கப்பட்டிருந்தன. பரீட்சிக்கப் பட்டிருந்தன. அவைகள் சத்துருவாலும், மனுகுலத்தாலும்கூட பரீட்சிக்கப்பட்டிருந்தன. இந்த எல்லாப் பரீட்சைகளாலும் கர்த்தருடைய வாழ்க்கையும், நடையும் பூரணமானவையென்றும், பிரகாசமானவையென்றும், சுடர்வீசக்கூடியவை யென்றும் நிரூபிக்கப்பட்டு, வெளியாக்கப்பட்டிருக்கின்றன. மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்கு இதனால் அவர் தகுதியுடையவராயிருக்கிறார். அவர் பரீட்சிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்பட்டு, சுத்திகரிக்கப் பட்டிருக்கிறார். அவர் சாதாரண வெண்கலத்தை இல்லை, காய்ந்த பிரகாசமான வெண்கலத்தை உடையவராயிருக்கிறார். அவருக்கு ஆதாரம் உண்டு; நியாயந்தீர்க்க அவருக்கு உரிமை உண்டு.

வெண்கலத்தைப் பிரயோகித்தல்

இதை நாம் எப்படிப் பிரயோகிக்கலாம்? சில நேரங்களில் நீ கர்த்தரைப் பின்பற்றிச் செல்லும்போது, கர்த்தருக்கு ஊழியம்செய்து கொண்டிருக்கும்போது, அல்லது ஒருவேளை பேசுவதற்காக ஒரு கூட்டத்திற்கு வரும்போது, நீ எவ்வளவு அழுக்காவும் பாவியாகவும் இருக்கிறாய் என்ற எண்ணம் உன் மனதில் உதிக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் நீ என்ன செய்கிறாய்? ஆம், கர்த்தர் தம் விலையேறப்பெற்ற இரத்தத்தால் உன்னை மூடுமாறும், தம்மைக்கொண்டு உன் மனதை மூடுமாறும் நீ கர்த்தரிடம் கேட்கிறாய். ஆனால் இது என்ன என்று நீ உணர்கிறாயா? இதுவே வெண்கலத்தால் செய்யப்பட்ட தலைச்சீரா. கர்த்தரே சம்பூரணர் என்றும், பிரகாசமுள்ளவர் என்றும், பரீட்சிக்கப்பட்டு நிரூபிக்கப் பட்டவர் என்றும் நீ உணர்கிறாய். பின்னர் விசுவாசத்தால் நீ உன் ஆவியை இயக்கி எதிரியைப் பார்த்து, "சாத்தானே, நான் அழுக்கானவன்தான், நான் பாவிதான். ஆனால், என் கர்த்த ருக்கு ஸ்தோத்திரம், அவர் சம்பூரணர், அவர் பரீட்சிக்கப்பட்டு, நிரூபிக்கப் பட்டவர். அவரே என் மூடுதல். அவரே என் தலைக்குச் சீரா," என்று சொல். பரீட்சிக்கப்பட்ட, நிரூபிக்கப் பட்ட, பரிபூரணமான இந்தக் கிறிஸ்துவை உன் தலைக்குத் தலைச்சீராவாகப் பிரயோகிப் பதற்கு நீ விசுவாசத்தினால் உன் ஆவியை இயக்கமுடியும்.

உனக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் உண்டா? உண்டு என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால் இவைகளைப்பற்றி உனக்குத் தெளிவாகத் தெரியாது. இப்படிப் பிரகாசமுள்ள இருதயத்துடன் எப்படி கிறிஸ்துவைப் பிரயோகிப்பது என்று நீ கற்றுக்கொள்ள வேண்டும்.

எதிரியின் தந்திரமான செயல் எனக்குத் தெரியும். முப்பது ஆண்டுகளுக்குமுன்பு, நான் வாலிபனாக இருந்தபோது கர்த்தருடைய கிருபையால் நான் அவரை அதிகமாக நேசித்தேன். ஒவ்வொருநாளும் அதிகாலையில், பாட்டுப்பாடுவதற்கும், வேதத்தை வாசிப்பதற்கும், (அநேக நேரங்களில் ஆனந்தக் கண்ணீரோடும், அன்புக் கண்ணீரோடும்) ஜெபிப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட மலைக்குச் செல்வதுண்டு. ஆ! அந்த ஐக்கியம் மிக இனிமையாக இருந்தது! கர்த்தருடைய பிரசன்னம் மிக நிறைவாக இருந்தது! ஆனால் நான் மலையிலிருந்து கீழே இறங்கிவந்தபோதோ, எல்லாவிதமான நினைவுகளும் என் மனதில் தோன்றின. ஒவ்வொரு நாள் காலையிலும் இப்படித்தான் நடந்தது. முதலில் என்னிடத்தில்தான் ஏதோ கோளாறு என்று நான் நினைத்தேன். கர்த்தரிடத்தில் என் பாவத்தை அறிக்கைசெய்து என்னை மன்னிக்கும்படி அவரை வேண்டினேன். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஒரு சில நாட்களுக்குப்பின்பு எனக்குத் தெளிவு கிடைத்தது. "இல்லை! இது என்னிடமிருந்து வருவது இல்லை. நான் கர்த்தரை மிக அதிகமாக நேசிக்கிறேன், நான் அவருடைய வார்த்தையை வாசிக்கிறேன். ஜெபிக்கிறேன். கர்த்தருடன் எனக்கு இப்படிப்பட்ட மேன்மையான ஐக்கியம் இருக்கிறது. அப்படியானால் இந்தக் காரியங்கள் என்னிடமிருந்து எப்படி வரமுடியும்? அவைகள் எதிரியிடமிருந்துதான் வர முடியும்," என்று நான் சொன்னேன். நான் என்ன செய்தேன் என்று உங்களுக்குத் தெரியுமா? எதிரியை நான் முட்டியால் குத்தினேன். இதுதான் நான் போராடின முறை.

கொஞ்ச நாட்களுக்குப்பின்னர், என் தலைக்கு ஒரு தலைச்சீரா இருக்கிறது என்றும், தேவனுடைய போராயுதங்களுள் தலைச்சீராவும் ஒன்று என்றும் நான் கற்றுக்கொண்டேன். அதுமுதல் நான் பாடத்தைக் கற்றுக்கொண்டேன். இந்த எண்ணங்கள் என்னைத் தொந்தரவுசெய்யும்போதெல்லாம், நான் "கர்த்தாவே, உம் தலைச்சீராவால் என்னை மூடிக்கொள்ளும். அல்லேலூயா! நீரே ஜெயசீலர்! உம் விலையேறப்பெற்ற இரத்தம் ஜெயங்கொடுக்கிற இரத்தம்! கர்த்தாவே, என்னை மூடிக்கொள்ளும்! கர்த்தாவே, உமக்கு ஸ்தோத்திரம்," என்று சொன்னேன். நான் ஜெயம்பெற்றேன். கர்த்தர் ஏன் இப்படிப்பட்ட வீரியமுள்ள மூடுதலாக எனக்கு இருக்கமுடியும் என்று பின்னாட்களில் நான் தெளிவாகப் புரிந்துகொண்டேன். ஏனென்றால் அவர் தேவனால் மட்டும் இல்லை, எதிரியாலும் முழு மனுக்குலத்தாலும்கூட பரீட்சிக்கப் பட்டு, நிரூபிக்கப்பட்டவர்; ஏனென்றால், அவர் பூரணராக, பிரகாசமானவராக, ஒளிமிக்கவராக வெளிவந்தார்; அவரே வெண்கலம், காய்ந்த வெண்கலம்; எல்லாத் தாக்குதல்

களையும் எதிர்த்துக் தாக்குப்பிடிக்க அவரிடத்தில் திறமையும், பலமும், தகுதியும், ஆதாரமும் உண்டு. எதிரி இந்தப் பூரணரைச் சந்திக்கும்போதெல்லாம் ஓடிப்போகிறான். நீயாகவே ஒருபோதும் யுத்தம்செய்யாதே—இது உன் வேலை இல்லை. யுத்தம் கர்த்தருடையது.

நான் வாலிபனாக இருந்தபோது கேட்ட ஒரு கதையை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது. அது எனக்கு மிக உதவியாக இருந்தது. ஒரு சிறு பெண்ணின் தகப்பனுக்கு ஒரு கிறிஸ்தவ நண்பன் இருந்தான். ஒருநாள் அவன் அவருடன் ஐக்கியம்கொள்ள வந்தான். இந்தச் சிறு பெண் அவர்கள் உரையாடலை உற்றுக்கேட்டுக்கொண்டிருந்தாள். அந்தக் கிறிஸ்தவ நண்பன் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தான். எதிரி தன்னைத் தொடர்ந்து தோற்கடித்துக்கொண்டே இருப்பதாக அவன் அவளுடைய தகப்பனாரிடத்தில் சொன்னான். கடைசியில் அந்தச் சிறு பெண்ணால் பேசாமல் இருக்கமுடியவில்லை. அவள், "ஐயா, எதிரி என்னை ஒருபோதும் தோற்கடிப்பதில்லை! நீங்கள் என்னைவிட எவ்வளவோ பெரியவர். ஆனால் நீங்கள் யுத்தத்தில் எப்போதும் தோல்வியடைகிறீர்கள். நானோ யுத்தத்தில் எப்போதும் வெற்றி பெறுகிறேன்," என்று ஆச்சரியப்பட்டாள். அந்த நண்பன், "ஆ, இது என்ன?" என்று அவளைப் பார்த்து வியந்தான். "எனக்குச் சொல். நீ எப்படி யுத்தத்தில் ஜெயிக்கிறாய்?" என்று அவன் கேட்டான். "ஆ, அது சுலபம். எதிரி என்னிடத்தில் வந்து என் கதவைத் தட்டும்போது 'நீ யார்?' என்று நான் அவனைக் கேட்கிறேன். 'நான் சாத்தான்' என்று அவன் சொல்கிறான். 'சரி. கொஞ்சம் பொறு! நான் இயேசுவைக் கூப்பிடுகிறேன்!' என்று சொல்லி நான் இயேசுவைக் கூப்பிடுகிறேன். அப்போது எதிரி 'வேண்டாம், நான் ஓடிவிடுகிறேன்' என்று சொல்லி ஓடிவிடுகிறான். இதுதான் என் வழி. யுத்தத்தை ஜெயிப்பது மிக சுலபம்," என்று அந்தச் சிறு பெண் பதில்சொன்னாள்.

இந்தக் கதை உண்மையா, இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒரு காரியம் நிச்சயம். அது என்ன வென்றால், நீயாகவே யுத்தம்செய்ய முயன்றால், நிச்சயமாக நீ தோற்றுப்போவாய். ஆனால் எப்போதெல்லாம் கிறிஸ்து வுடனேகூட நீ யுத்தத்திற்குப் போகிறாயோ, எப்போதெல்லாம் கிறிஸ்துவைப் பிரயோகிக்க உன் விசுவாசத்தைப் பயிற்சி செய்கிறாயோ, அப்போதெல்லாம் நிச்சயமாக நீ வெற்றிபெறுவாய். கிறிஸ்துவே பரீட்சிக்கப்பட்டவர், நிரூபிக்கப்பட்டவர். அவரே உன் மூடுதல். எதிரியால் அவரிடத்தில் எதுவும் சொல்லமுடியாது; எதுவும் செய்யமுடியாது. அவரை உன் மூடுதலாகப் பிரயோகிக்கக் கற்றுக்கொள்.

கர்த்தர் முழுக்க முழுக்க பரீட்சிக்கப்பட்டிருக்கிறார். இப்போது அவர் மட்டுமே மற்றவர்களை நியாயந்தீர்ப்பதற்கு தகுதியுடையவராயிருக்கிறார். அவரிடத்தில் வெண்கலம் இருக்கிறது. அவரிடத்தில் மூடுதல் இருக்கிறது.

இரும்பைப் பிரயோகித்தல்

இப்போது அதிகாரம், அதாவது இரும்பு, என்றால் என்ன? வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் தமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கர்த்தர் சொன்னார். ஆனால் அதோடு முடியவில்லை. இந்த அதிகாரத்தைக் கர்த்தர் நமக்குத் தந்திருப்பதாகவும் சொன்னார். சகோதர சகோதரிகளே, கர்த்தருடைய அதிகாரத்தைக் கோருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு என்று உங்களுக்குத் தெரியுமா? வல்லமையைவிட அதிகமான ஏதோவொன்று உங்களுக்கு உண்டு. உங்களுக்கு அதிகாரம் உண்டு. அதிகாரத்துக்கும், வல்லமைக்குமிடையே உள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியுமா?

இதை இப்படி விளக்கிக்காட்டலாம். உன்னிடத்தில் ஒரு மோட்டார் வண்டி இருக்கிறது. அந்த மோட்டார் வண்டிக்கு வல்லமை இருக்கிறது. இப்போது போக்குவரத்து நடமாட்டத்தைத் தன் விசிலை வைத்துக்கொண்டு கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிற ஒரு போலீஸ்காரரைத் தெருவில் சந்திக்கிறாய் என்று வைத்துக்கொள். அவர் ஒரு சாதாரண சின்னப் போலீஸ்காரர். ஆனால் அவர் அங்கு நின்று தன் கையை உயர்த்தும்போது, எல்லா வாகனங்களும் நிற்கவேண்டும். இது என்ன? இது அதிகாரம், அதாவது அரசாங்கத்தின் அதிகாரம். அந்தச் சின்னப் போலீஸ்காரர் அரசாங்கத்தின் பிரதிநிதி. அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். நீ எந்த வகைக் காரை வைத்திருந்தாலும் சரி, அல்லது அந்தக் கார் எவ்வளவு சக்திவாய்ந்ததாக இருந்தாலும் சரி, அதைப்பற்றிக் கவலையில்லை. நீ நின்றே ஆகவேண்டும்! உன்னிடத்தில் காரோ, சரக்கு லாரியோ, பேருந்தோ என்ன இருக்கிறதோ அதைப்பற்றிக் கவலை யில்லை. அவர் "நில்" என்று சொல்லும்போது, நீ நிற்கவேண்டும். போலீஸ்காரரின் வல்லமையை எல்லாக் கார்களின் வல்லமையோடு ஒப்பிடும்போதுகூட, அவருடைய வல்லமை மிகக்குறைவு. உண்மையில் அது சற்றேறக்குறைய ஒன்றுமேயில்லை. ஆனால் நீ சக்தியுள்ள காரை வைத்திருந்தாலும்கூட உன்னிடம் இல்லாத ஒன்று அவரிடத்தில் இருக்கிறது—அதுதான் அதிகாரம். அவர் "நில்" என்று சொல்லும்போது எல்லாரும் நிற்கவேண்டும்! அவருடைய அதிகாரம் உன் வல்லமையைவிட மிக மேம்பட்டது.

எதிரி எவ்வளவு பலமுள்ளவனாக இருந்தாலும் அதைப்பற்றி

அக்கறையில்லை. அவனிடம் அதிகபட்சம் இருப்பது வெறும் வல்லமையே. நம்மிடத்தில் அதிகாரம் இருக்கிறது. நம்மிடத்தில் முழுப் பிரபஞ்சத்துக்கும் தலையாகிய தேவனுடைய அதிகாரம் இருக்கிறது. அந்தச் சின்னப்போலீஸ்காரர் நகர அரசாங்கத்தின் பிரதிநிதி. ஆனால் நாம் இந்தப் பிரபஞ்சத்தின் இராஜாவின் பிரதிநிதி! சகோதர சகோதரிகளே, நீங்கள் இந்த அதிகாரத்தை எப்போதாவது அனுபவித்துமகிழ்ந்திருக்கிறீர்களா? பிரச்சினை வரும்போது நீ சுலபமாய் அதை மறந்துவிட்டு பரிதாபத்துக்குரிய ஒரு பிச்சைக்காரனைப்போல செயல்படுகிறாயோ என்று நான் பயப்படுகிறேன். நீ கிறிஸ்துவின் பிரதிநிதி என்பதை மறந்துவிடுகிறாய். சாட்சாத்து கிறிஸ்துவின் பிரதிநிதி! கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரம் உனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எதிரியின் சகல வல்லமையையும் மேற்கொள்ளும் அதிகாரத்தை நமக்குத் தந்திருப்பதாகக் கர்த்தர் சொன்னார். ஆ! இது என்னே இரட்சிப்பு! ஆ! நாம் இதை உணர்த்தறிந்து அனுபவிப்போமாக! கிறிஸ்து உனக்குக் கொடுத்திருக்கும் அதிகாரத்தைப் பிரயோகிக்க முயன்றுபார்.

அங்கு நின்றுகொண்டிருக்கும் அந்தச் சின்னப் போலீஸ் காரருக்கு எல்லாப் போக்குவரத்து நடமாட்டத்தையும் நிறுத்து வதற்குரிய அதிகாரம் உண்டு. ஆனால் நான் அங்கு போய், "நில்" என்று சொன்னால், ஒருவேளை என் உயிரை இழக்கக் கூடும். என்னிடத்தில் ஆதாரம் இல்லை. என்னிடத்தில் சீருடை இல்லை. நீ கிறிஸ்தவனாக இருப்பதால் எதிரியின்மேல் அதிகாரத்தைச் செலுத்தலாம் என்று எண்ணாதே. உனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் ஒரு பிரச்சினை இருக்கிறது. நீ கிறிஸ்துவுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறாயா? நீ உயிர்த்தெழுதலில் வாழ்ந்துகொண்டிருக்கிறாயா? இன்று அந்தச் சின்னப்போலீஸ்காரர் அங்கே நின்று எல்லாக் கட்டளைகளையும் கொடுக்கமுடியும். அவர் கட்டுகிறது எதுவோ அது கட்டப்பட்டிருக்கும். அவர் கட்டவிழ்ப்பது எதுவோ அது கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். ஆனால் அதே நபர் தன் சீருடை இல்லாமல் நாளைக்கு அங்கு போய் நின்றால், அவரால் ஒன்றுமே செய்யமுடியாது. யாரும் அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியமாட்டார்கள். அவருடைய உயிருக்கே ஆபத்து நேரிடலாம். அவர் சீருடையில் இருக்கும்போது போக்குவரத்து நடமாட்டம் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். ஆனால் அவர் சீருடையில் இல்லாதபோது போக்குவரத்து நடமாட்டத்துக்குக் கட்டளைகொடுப்பது அர்த்தமற்றது. அவர்களை சமாளிக்கமுடியாது. நீ ஒரு கிறிஸ்தவன். ஆனால் நீ எங்கே நின்றுகொண்டிருக்கிறாய்? நீ எங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? நீ எங்கே நடந்துகொண்டிருக்கிறாய்? நீ கிறிஸ்துவுக்குள்

நடந்துகொண்டிருக்கிறாயா? அல்லது உன் ஜென்மசுபாவ ஜீவனில் நடந்துகொண்டிருக்கிறாயா? நீ உன்னில்தானே இருந்தால், உன் ஜென்மசுபாவ ஜீவனில் இருந்தால், ஆதாரத்தை இழந்துவிட்டாய், உன்னிடம் சீருடை இல்லை, உனக்கு எந்த அதிகாரமும் இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் தன் நாட்களில் அநேக அசுத்த ஆவிகளைத் துரத்தினார் (அப். 16:18; 19:12). அவர் அசுத்த ஆவிகளை நோக்கிப் பேசி, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் புறப்பட்டுப் போகும்படி அவைகளுக்குக் கட்டளைகொடுத்தார். ஆனால் அதே நாமத்தில் அதே காரியத்தைச் செய்வதற்கு மற்றவர்கள், ஸ்கேவாவின் ஏழு குமாரர்கள், எப்படி முயன்றார்கள் என்று உங்களுக்கு நினைவிருக்கும். அசுத்த ஆவிகள் விட்டோடுவதற்குப்பதிலாக, அவர்கள்மேல் பாய்ந்து, அவர்களைக் கடுமையாய்த் தாக்க, அவர்கள் நிர்வாணிகளும், காயப்பட்டவர்களுமாகி ஓடிப்போனார்கள் (அப். 19:13-16). அவர்களிடத்தில் எந்த ஆதாரமும் இல்லை; அவர்களிடத்தில் எந்த அதிகாரமும் இல்லை. அசுத்த ஆவிகளுக்குப் பவுலைத் தெரியும். எனவே அவைகள் பவுலுக்குக் கீழ்ப்படிந்தன; ஆனால் அந்த மனிதர்களுக்குக் கீழ்ப்படியவில்லை. அதிகாரம் அதைச் செலுத்துகிற மனிதனைப் பொறுத்தது.

இரும்பு எங்கிருந்து வருகிறது என்று நாம் உணரவேண்டும். அது கற்களிலிருந்து வருகிறது. இந்தக் கற்கள் எங்கிருக்கின்றன? கற்கள் மலையில் இருக்கின்றன; கற்கள் உயிர்த்தெழுதலில் இருக்கின்றன. நீ இன்னும் ஒரு களிமண் துண்டின் நிலைமையில் இருக்கும்போது, ஒருபோதும் அதிகாரத்தை உரிமைகொண்டாட முடியாது. களிமண்ணான ஜென்மசுபாவ மனிதனாக இருக்கும் வரை உனக்கு எந்த ஆதாரமும், எந்த உரிமையும் இல்லை; உன்னிடத்தில் எந்த இரும்பும் இல்லை. ஆனால் நீ ஒரு கல்லாக இருக்கும்போது, கிறிஸ்துவுக்குள் வாழும்போது, உயிர்த்தெழுதலில் வாழும் போது, உன்னிடத்தில் தானாகவே அதிகாரம் இருக்கும். நீ அதைக் கேட்கவேண்டிய தேவையில்லை; அதை அப்படியே உரிமையுடன் எடுத்துக்கொண்டு பிரயோகிக்கலாம். "நான் கிறிஸ்துவுக்குள் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். பரலோகத்தின் அதிகாரம் எனக்கு உண்டு. நான் அதைப் பயன்படுத்தப் போகிறேன்," என்று நீ சொல்லலாம். இது நிஜமாகவே கிரியை செய்கிறது என்று நான் உனக்குச் சொல்கிறேன்.

"பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டுவிர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்தில் நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும்," என்று கர்த்தர் கூறினார் (மத். 18:18). இதுதான் அதிகாரம். ஆனால் நினைவில் வைத்துக்கொள்: நீ

உயிர்த்தெழுதலில் இருக்கவேண்டும். உன்னிடத்தில் உயிர்த் தெழுதலின் ஆதாரம் இருக்கவேண்டும். இது உயிர்த்தெழுதலுடன் தொடர்புடைய ஒன்று. அப்போது உன்னிடம் இராஜ்ஜியம் இருக்கும், உன்னிடம் குன்றுகள் இருக்கும். இப்படித்தான் இராஜ்ஜியம் தோன்றுகிறது. நாம் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப் பையும், அதிகாரத்தையும் உணர்ந்துகொள்வதால், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பையும், அதிகாரத்தையும் நாம் கையாளலாம். நம்மிடம் மலைகளும், இராஜ்ஜியமும், தெய்வீக அரசாங்கமும், தேவனுடைய அதிகாரமும் இருக்கின்றன.

வாசல்களின் தாழ்ப்பாள்கள் இரும்பாலும், செம்பாலும் ஆனவை என்று உபாகமம் 33:25-ல் சொல்லப்பட்டுள்ளது. இந்த வாசல்கள் நமது பாதுகாப்புக்காக, நமது தற்காப்புக்காக, நமது பாதுகாவலுக்காக இருக்கின்றன. கர்த்தருடைய அதிகாரத்தையும், கர்த்தருடைய நியாயத்தீர்ப்பையும் நம்மால் பயன்படுத்தமுடிந்தால், நமக்குப் பாதுகாப்பும், பாதுகாவலும் உண்டு. நம் கதவுகளுக்கு கர்த்தருடைய அதிகாரமும், நியாயத்தீர்ப்பும் தாழ்ப்பாள்களாக இருக்கும். கர்த்தருடைய அதிகாரத்தைக் கையாளுவதைக்குறித்து கொஞ்சமாவது அறிந்திருக்கிற விசுவாசிகளே மிகப் பாதுகாப் பானவர்கள், மிக உறுதியானவர்கள். அவர்களிடத்தில் பலம் இருக்கிறது. ஏனென்றால் அவர்களிடத்தில் அதிகாரம் இருக்கிறது. எனவே அவர்களிடத்தில் பாதுகாப்பும், பாதுகாவலும் இருக்கின்றன. ஆகையால் இளைப்பாறுதல் இருக்கிறது.

தேவனுடைய மாளிகை எப்போதும் இந்த வகையான கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கிறது. அவர்கள் மாளிகைக்கான கட்டுமானப்பொருட்கள் மட்டும் இல்லை, வீட்டுக்கான கற்கள் மட்டும் இல்லை. மாறாக அவர்களே இசைவாய்க் கட்டப்பட்ட வீடு. இந்த வகை விசுவாசிகளிடத்தில் தேவனுடைய அதிகாரம், அதாவது தெய்வீக அரசாங்கம், இருக்கிறது; ஆகையால் அவர்களோடு தேவனுடைய இராஜ்ஜியம், மலைகள், அல்லது குன்றுகள் இருக்கின்றன. முதல் நிலையிலிருந்து இரண்டாவது நிலை வழியாக மூன்றாம் நிலைக்கும், நான்காம் நிலைக்கும் நாம் படிப்படியாக வளரவேண்டும். முதல் நிலையில் கிறிஸ்துவை ஜீவத்தண்ணீராக அனுபவித்துமகிழ்வதற்கு அவரை எப்படிப் பிரயோகிக்க வேண்டும் என்று நாம் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டாவது நிலையில் அவரைத் திடஉணவாகப் பிரயோகிப் பதற்கும்கூட நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்து நாள் முழுவதும் நமக்குத் தேனாக, பாலாக மிகவும் இனிமையானவ ராகவும், ஐசுவரிய மானவராகவும் இருக்கும் அளவுக்கு அவரை அனுபவித்து மகிழ நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அப்போது நாம் முதிர்ச்சி யடைந்திருப்போம். கர்த்தருடைய அதிகாரத்தையும்,

நியாயத்தீர்ப்பையும் உரிமைகொண்டாடுவதற்குத் தேவையான ஆதாரத்தைப் பெறக்கூடிய இடத்துக்கு நாம் வருவோம்.

நமக்கு அதிகாரம் இருக்கும்போது நாம் வேறு அநேகக் காரியங்களுடன் இடைப்பட வேண்டிய அவசியமில்லை. அநேகக் காரியங்களைப்பற்றி ஜெபிக்கக்கூடத் தேவையில்லை. இந்தக் காரியங்களின்மேல் அதிகாரத்தைச் செலுத்துவதற்கு நமக்கு உரிமை உண்டு. போக்குவரத்து வாகனங்கள் போலீஸ்காரரை நெருங்கிவரும்போது, அவர் நகர மேயரைக் கூப்பிட்டு, அந்த வாகனங்களை நிறுத்துவதற்கு அவர் ஏதாவது செய்யவேண்டும் என்று அவரைக் கேட்கவேண்டிய அவசியமுண்டா? இது நகைப்புக்குரியது! இதைச் செய்வதற்குப் போலீஸ்காரருக்கு அதிகாரம் உண்டு. இதைப்போலவே நாம் உதவிக்காக தேவனைக் கூப்பிடவேண்டிய அவசியமில்லை. நாம் நம் ஆதாரத்தை எடுத்துக் கொண்டு நம் அதிகாரத்தைப் பயன்படுத்தலாம், பயன்படுத்த வேண்டும்.

ஆனால் ஒரு விஷயத்தைத் திரும்பவும்சொல்கிறேன்: ஓரளவு ஆவிக்குரிய முதிர்ச்சி இல்லாமல் நம்மால் இதைச் செய்யமுடியாது. இந்த அதிகாரத்தை உரிமைகொண்டாடுவதற்கான ஆதாரம் அப்போஸ்தலனாகிய பவுலிடத்தில் இருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. கொரிந்து சபையில் ஒரு சகோதரனைப்பற்றி ஒரு குறிப்பிட்ட பிரச்சினை எழுந்தபோது அப்போஸ்தலனால் அதைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அவர் அவனைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நியாயந்தீர்த்து, சாத்தானின் கரங்களில் ஒப்புக்கொடுத்ததாகக் கூறினார் (*1* கொரி. *5:3-5*). அவர் தம் உரிமையைப் பயன்படுத்தினார், அவர் அதிகாரத்தை எடுத்துக் கொண்டார். நாமும் அப்படிச்செய்ய விரும்பினால், நம்மிடத்தில் பவுலைப்போல ஜீவனின் முதிர்ச்சி இருக்கவேண்டும்.

சகோதர சகோதரிகளே, ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங் களையுடைய சகலத்தையும் உள்ளடக்கிய இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவை எப்படிப் பிரயோகிக்கவேண்டும் என்று நாம் ஒவ்வொருநாளும் கற்றுக்கொள்ளும்படிக்கு, நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். ஜீவத்தண்ணீரிலிருந்து இரும்பு, செம்புவரை நாம் அவரை அனுபவிக்க வேண்டும்.

கிறிஸ்துவின் ஐசுவரியங்களில் இன்னும் அநேகக் காரியங்கள் இருக்கின்றன. இந்த அதிகாரங்களில் சில குறிப்புகளை மட்டுமே நான் உங்களுக்குத் தந்திருக்கிறேன். "நான் அவர்களுக்குக் கீர்த்தி பொருந்திய ஒரு நாற்றை எழும்பப்பண்ணுவேன்," என்ற வசனத்தை நாம் எசேக்கியேல் *34:29*-ல் வாசித்தோம். கிறிஸ்து கீர்த்திபொருந்திய ஒரு நாற்று. அதின் பெயர் நமக்குத் தெரியாது. கிறிஸ்து விசேஷமான இன்னொரு செடி. ஆ! கிறிஸ்து அளவற்ற

ஐசுவரியம் உள்ளவர்! அவர் ஒருபோதும் தீர்ந்துபோகாதவர். கிறிஸ்துவைக் குறிக்கிற வேறு பலவகையான செடிகளும் வேதத்திலுள்ளன. உன்னதப்பாட்டுகளின் இரண்டாம் அதிகாரம் கிச்சிலி மரத்தைப்பற்றிப் பேசுகிறது. கிறிஸ்து ஒரு கிச்சிலி மரம். கிறிஸ்துவை உருவகப்படுத்துகிற நாம் அனுபவிப்பதற்காக அவருடைய ஐசுவரியங்களின் பல்வேறு அம்சங்களை வெளிப்படுத்துகிற, அநேகச் செடிகள் வேதத்தில் இருக்கின்றன. யாத்திராகமம் 30ஆம் அதிகாரம், அபிஷேகதைலமும் தூபமும் தயாரிக்கப்பட்ட செடிகளின்பட்டியலைத் தருகிறது. வெள்ளைப்போளம், சுகந்த கருவப்பட்டை, சுகந்த வசம்பு, இலவங்கப்பட்டை (வசனம் 23, 24), சுத்த வெள்ளைப்போளம், குங்கிலியம், அல்பான் பிசின் எல்லாம் சுகந்தவர்க்கங்கள்—சுத்தமான சாம்பிராணி (வசனம் 34). இந்தச் செடிகள் மிகவும் அர்த்தமுள்ளவை, மிக இனிமையானவை. ஆ, எவ்வளவு ஐசுவரியங்கள்! ஆ, தீர்ந்துபோகாத ஐசுவரியங்கள்!

இந்தத் தேசம் மெய்யாகவே நல்ல தேசம், மிக மேன்மையான நல்ல தேசம். குறிப்பாக அதின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்கள் நல்லவை. இந்தத் துண்டு தேசம் எவ்வளவு செழிப்பானது! இது சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம். இப்பேர்ப்பட்ட மகிமையான, சகலத்தையும் உள்ளடக்கியவரை அனுபவிக்க, ருசிக்க, பிரயோகிக்க நாம் பிரயாசப்படுவோம். அவர் நமக்குக் கிருபை பாராட்டுவாராக.

அதிகாரம் ஒன்பது

தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி

I. ஆட்டுக்குட்டி, மன்னா, பெட்டி, கூடாரம்—இவைகளால்

எபேசியர் 3:17-18: *"விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேருன்றி, நிலைபெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடுங் கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து,"*

இந்த இரண்டு வசனங்களில் நாம் அநேகக் காரியங்களை நன்றாகக் கவனித்து, அவைகளை நினைவில்கொள்ள வேண்டும். 17ஆம் வசனத்திலுள்ள "வாசமாயிருக்கவும்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள். இது ஒரு பெரிய வார்த்தை, கனமான வார்த்தை. "வீடு," "குடியிருப்பு" என்ற வார்த்தைக்கு மூலபாஷையில் என்ன வேரோ, அதே வேர்தான் "வாசமாயிரு" என்ற வார்த்தைக்கும் உண்டு. கிரேக்க பாஷையிலுள்ள மூல வார்த்தையை "தம் வீட்டை அமைக்கவும்" என்று மொழிபெயர்க்க ஆசைப்படுகிறோம். இது "வாசமாயிரு" என்பதைவிட ஆழமான, நிறைவான பொருளைத் தருகிறது. நாம் உணர்ந்துகொள்ள வல்லவர்களாகும்படிக்கு கிறிஸ்து நம் இருதயங்களில் தம் வீட்டை அமைக்க விரும்புகிறார். இப்போது கவனியுங்கள்: வெறுமனே உணர்ந்துகொள்ள இல்லை, மாறாக உணர்ந்துகொள்ள "வல்லவர்களாகும்படிக்கு." இதுவும்கூட ஒரு பலமான, கனமான வார்த்தையாகும். கிரேக்க மொழியில் இதன் பொருள் "நிறைவான வல்லமையைக்கொண்டிரு" என்பதே. நாம் இந்த வசனத்தை, "உணர்ந்துகொள்வதற்கான நிறைவான வல்லமையுடையவர்களாகவும்..." என்று மொழிபெயர்க்கலாம். இப்போது "உணர்ந்துகொள்ள" என்ற வார்த்தையைக் கவனியுங்கள், வெறுமனே அறிந்துகொள்வதோ அல்லது புரிந்து கொள்வதோ இல்லை. மாறாக அறிவதின்மூலமாக ஏதோவொன்றைச் சுதந்தரித்துக் கொள்வது, புரிந்துகொள்வதின்மூலமாக ஏதோ வொன்றைப் பெற்றுக்கொள்வது. இதுவே உணர்ந்துகொள்ளுதல். நாம் எதை உணர்ந்துகொள்ள வேண்டும்? கிறிஸ்துவின் விசாலத்தை, கிறிஸ்துவின் எல்லையற்ற பரிமாணத்தை, அகலம், நீளம், உயரம், ஆழம் ஆகியவைகளை உணரவேண்டும். அடுத்து இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவை சகல பரிசுத்தவான்களோடு சேர்ந்து உணரவேண்டும். இப்பேர்ப்பட்ட எல்லையற்றவரை ஒரு தனிநபர்

உணர்ந்துகொள்வது என்பது அசாத்தியம். இது சகல பரிசுத்த வான்களோடு சேர்ந்து செய்யப்படவேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், கிறிஸ்து தம் வீட்டை நம் இருதயங்களில் அமைக்க விரும்புகிறார். அப்போது கிறிஸ்துவின் எல்லையற்ற விசாலத்தைச் சகல பரிசுத்தவான்களோடுங்கூடச் சேர்ந்து உணர்ந்துகொள்ளவும், அடையவும் நமக்கு முழு வல்லமை இருக்கும்.

> **யாத்திராகமம் 33:14, 15:** "அதற்கு என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும். நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன் என்றார். அப்பொழுது அவன் அவரை நோக்கி; உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால் எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்."

இங்கு முதல் குறிப்பு என்னவென்றால் தம் சமுகம் மோசே யுடனும், இஸ்ரவேல் மக்களுடனும் செல்லும் என்று கர்த்தர் வாக்குத்தத்தம்பண்ணினார். இரண்டாவது குறிப்பு என்ன வென்றால் கர்த்தர் அவனுக்கு இளைப்பாறுதல் தருவதாக வாக்குத்தத்தம்பண்ணினார். கர்த்தர் இங்கு குறிப்பிடுகிற இளைப்பாறுதல் நல்ல தேசத்தில் இருக்கிறது.

> **உபாகமம் 12:10:** "நீங்கள் யோர்தானைக் கடந்துபோய், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தில் குடியேறும்போதும், சுற்றிலும் இருக்கிற உங்கள் சத்துருக்களையெல்லாம் அவர் விலக்கி, உங்களை இளைப்பாறப்பண்ணுகிறதினால் நீங்கள் சுகமாய் வசித்திருக்கும்போதும்..."

> **உபாகமம் 25:19:** "உன் தேவனாகிய கர்த்தர் நீ சுதந்தரித்துக்கொள்ள உனக்குக் கொடுக்கும் தேசத்தின் சுற்றுப்புறத்தாராகிய உன்னுடைய சத்துருக்களையெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் விலக்கி உன்னை இளைப்பாறப்பண்ணும்போது..."

இந்த இரண்டு வசனங்களில், கர்த்தர் இளைப்பாறுதலைக் குறிக்கும்போது அவர் தேசத்தையே குறிப்பிடுகிறார் என்று பார்க்கிறோம். தேசமே இளைப்பாறுதல். தேசத்தைச் சுதந்தரித்து அங்கு வாசம்பண்ணுவது என்பது இளைப்பாறுதலில் இருப்ப தாகும்.

> **யாத்திராகமம் 40:1, 2:** "கர்த்தர் மோசேயை நோக்கி: நீ முதலாம் மாதம் முதல் தேதியில் ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தை ஸ்தாபனம்பண்ணு."

முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலத்தை ஸ்தாபனம் பண்ணவேண்டும் என்று கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட் டார்.

இது முற்றிலும் ஒரு புதிய ஆரம்பத்தைக் குறிக்கிறது.

> **யாத்திராகமம் 40:17, 21, 34, 35:** "இரண்டாம் வருஷம் முதலாம் மாதம் முதல் தேதியில் வாசஸ்தலம் ஸ்தாபனம் பண்ணப்பட்டது. பெட்டியை வாசஸ்தலத்துக்குள்ளே கொண்டுபோய், மறைவின் திரைச்சீலையை தொங்கவைத்து, சாட்சிப் பெட்டியை மறைத்துவைத்தான். அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது; கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. மேகம் அதின்மேல் தங்கி, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பின தினால், மோசே ஆசரிப்புக் கூடாரத்துக்குள் பிரவேசிக்கக் கூடாமல் இருந்தது."

வாசஸ்தலம் ஸ்தாபனம்பண்ணப்பட்ட உடனேயே, கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. கர்த்தருடைய மகிமை என்றால் என்ன? மனுக்குலத்தின் கண்களுக்குமுன்பாக வெளியரங்கமாக்கப் பட்ட கர்த்தருடைய பிரசன்னமே மகிமை. மனிதக் கண்கள், இஸ்ரவேல் மக்களின் கண்கள், அந்நேரத்தில் அவருடைய மகிமையில் தேவனுடைய பிரசன்னத்தைக் கண்டன.

கானான் தேசத்தின் நன்மையை, அதின் அளவுகடந்த நன்மையை, ஓரளவு பார்த்தோம்; அது எப்படி சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாக இருக்கிறது என்றும் பார்த்தோம். அதின் ஐசுவரியங்களை நாம் முழுவதும் பார்த்துத் தீர்த்துவிடவில்லை. ஆனால் அதைப் பாராட்டுவதற்குப் போதுமான அளவுக்குப் பார்த்தோம் என்று நான் விசுவாசிக்கிறேன். நாம் இப்போது அந்தத் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கான வழியைப் பார்க்கவேண்டும். எப்படி நுழைவதென்றும், எப்படி அனுபவித்து மகிழ்வதென்றும் நாம் பார்க்கவேண்டும்.

ஒரு கூட்டு விஷயம்

முதலாவது, இந்தத் தேசத்தைச் சுதந்தரிப்பது ஒரு தனி நபரின் வேலையில்லை. ஒருவன் தனிமனிதனாக இதைச் சுதந்தரிப்பது என்பது முற்றிலும் சாத்தியம் இல்லை. இதை நாம் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை, நம்மால் தனிநபர்களாக ஒருபோதும் சுதந்தரிக்கமுடியாது. ஒருக்காலும் முடியாது! சகோதர சகோதரிகளே, நாம் கனவுகாண வேண்டாம். இப்பேர்ப்பட்ட கனவுகள் ஒருபோதும் நிறைவேறாது. இது கிறிஸ்துவினுடைய சரீரத்தின் வேலை; இதை சகல பரிசுத்தவான்களோடுங்கூட சேர்ந்து உணர்ந்துகொள்ளவேண்டும். கிறிஸ்து மிகப்பெரியவர்; அவருடைய விசாலம் எல்லையற்றது; அவருடைய ஐசுவரியங்கள் ஆராய்ந்துபார்க்க முடியாதவை. இந்தக் கோட்பாட்டைக் கர்த்தர்

உறுதியாக நிலைநிறுத்துகிறார். நல்ல தேசத்துக்குள் நுழைவதும், அதைச் சுதந்தரிப்பதும் தனிநபர்களுக்குரியது இல்லை. மாறாக இது கூட்டு சரீரத்துக்குரியது. இஸ்ரவேல் மக்கள் ஒவ்வொருவராக, படிப்படியாக, தனித்தனியாக, தனிநபராக யோர்தானைக் கடந்து தேசத்துக்குள் நுழையவேண்டும் என்று கர்த்தர் ஒருபோதும் அவர்களிடம் கேட்கவில்லை. ஒருவன் இந்த மாதம் நுழைய வேண்டும். இன்னொருவன் அடுத்த மாதம், இன்னும் வேறொருவன் அதற்கடுத்த மாதம்... தேவனுடைய எண்ணம் ஒருபோதும் இப்படி இருந்ததில்லை. இது சாத்தியம் இல்லை. இது தெய்வீகக் கோட்பாடுக்கு முரணானது. கானான் தேசம் ஒரு கூட்டு சரீரத்தால் சுதந்தரிக்கப்பட வேண்டும். தனிநபராக இல்லை, கூட்டாகவே உள்ளே நுழையவேண்டும்.

இந்தப் பக்கங்களை வாசித்துக்கொண்டிருக்கும்போதே, "நான் இந்தத் தேசத்துக்குள் நுழைவது எப்படி?" என்று யோசிக்க ஆரம்பித்திருப்பாய் என்று நான் எண்ணுகிறேன். தனிநபராக நீ ஒருபோதும் நுழையமுடியாது. இந்தக் காரியம் உன் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். இதுவல்ல வழி. நீ இந்தத் தேசத்துக்குள் நுழைய விரும்பினால், கூட்டு சரீரத்தின் ஒரு பகுதியாகவே நீ நுழையவேண்டும்.

ஆட்டுக்குட்டி

இஸ்ரவேல் மக்கள் ஆரம்பத்திலேயே பஸ்கா ஆட்டுக் குட்டியை அனுபவித்துமகிழ்ந்தார்கள் (யாத். 12); இந்தப் பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் என்று நமக்குத் தெரியும் (1 கொரி. 5:7). அவர்கள் இன்னும் எகிப்து தேசத்தில் இருக்கும்போதே, கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்ந்தார்கள். எனினும் கானான் தேசமும்கூட கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம்தான். ஆட்டுக்குட்டி கிறிஸ்துவே, தேசமும் கிறிஸ்துவே. அப்படியானால் இரண்டு கிறிஸ்துகள் இருக்கிறார்கள்போல் தோன்றுகிறது: ஒரு சின்ன கிறிஸ்து, ஒரு பெரிய கிறிஸ்து. பஸ்கா ஆட்டுக்குட்டியைப்போன்ற ஒரு சின்ன கிறிஸ்து. கானான் தேசத்தைப்போன்ற ஒரு பெரிய கிறிஸ்து. நாம் இந்தச் சின்னக் கிறிஸ்துவை அனுபவித்துக் கொண்டிருக்கும் போதே, ஒரு பெரிய கிறிஸ்து நமக்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிறார்போல் தோன்றுகிறது. இப்பேர்ப்பட்டவரை நாம் அனுபவித்துமகிழவேண்டும் என்ற இலக்கை நோக்கி நாம் முன்னேறிச்செல்லவேண்டும். இது உண்மை இல்லையா? நான் இளைஞனாக இருந்தபோது இப்படித்தான் தோன்றியது. என்னிடத்தில் ஏற்கெனவே ஏதோவொன்று இருந்தது. ஏனெனில், நான் இந்தக் கிறிஸ் துவைக் கொண்டிருந்தேன். ஆனால்

இன்னொரு வகையில் அவரைப் பெறும்படிக்கு நான் இன்னும் முன்னேறிச்செல்ல வேண்டியிருந்தது. அப்படியானால் இரண்டு கிறிஸ்துகள் இருக்கிறார்களா? அல்லது ஒரே ஒருவர்தானா? நான் ஒரு விநோதமான கேள்வியைக் கேட்பதுபோல் தோன்றுகிறது. உங்களிடம் ஏற்கெனவே கிறிஸ்து இருக்கிறாரா? இருக்கிறார் என்று நான் விசுவாசிக்கிறேன். அப்படியானால் அவரைப் பெறுவதற்கு நீங்கள் ஏன் இன்னும் பிரயாசப்படுகிறீர்கள்? நம்மிடம் கிறிஸ்து இருக்கிறார் என்று சொன்னாலும் நாம் இன்னும் அவரை அடையவேண்டியிருக்கிறது. நாம் அவரைப் பெற்றிருக்கிறோம் என்று சொன்னாலும் அவர் நமக்கு இன்னும் தூரமாகவே இருக்கிறார். அவர் நம்மிடத்தில் இல்லையென்போமானால் அவரை அடையும்படிக்கு நம்மால் ஒருபோதும் மேற்கொண்டு செல்லமுடியாது என்பது தெளிவு. இந்தக் கேள்விகள் இந்தச் செய்திகளின் முக்கியமான விஷயத்தை ஆழமாகத் தொடுகின்றன.

முதன்முதலாக நாம் கிறிஸ்துவை ஒரு சின்ன ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ வேண்டும் என்று உணரவேண்டும். கிறிஸ்துவே நம் மீட்புக்கான ஆட்டுக்குட்டி. சகலத்தையும் உள்ளடக்கியவராக அவரைப் பெற்றுக்கொள்வதற்குமுன்பு நாம் முதலாவது அவரால் மீட்கப்படவேண்டும். நாம் அவரைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் இந்த அதிகாரத்தில் யாத்திராகமம் முதல் பாகத்திலிருந்து ஆரம்பிக்கிறோம். இதுவே நாம் கானான் தேசத்துக்குள் நுழைவதற்காக ஆரம்பிக்கவேண்டிய இடம். நமக்குப் பஸ்கா வேண்டும். "இதோ தேவ ஆட்டுக்குட்டி"—இது யோவான் சுவிசேஷத்தின் தொடக்கத்தில் இருக்கிறது. ஆனால், புத்தகத்தின் முடிவில் கிறிஸ்து தம் சீடர்களால் சுதந்தரிக்கப்படுவதற்காக எல்லையற்றவராக இருக்கிறார். தொடக்கத்தில் யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக மக்களக்கு அறிமுகம்செய்கிறார். ஆனால் முடிவில், கிறிஸ்து இடத்தாலும் நேரத்தாலும் மட்டுப்படுத்தப் படமுடியாதவராயிருக்கிறார். அந்த உயிர்த்தெழுந்தவரை எதுவும் மட்டுப்படுத்த முடியாது. எனினும், அவர் நாம் அனுபவித்துமகிழ்வதற்காகவே இருக்கிறார். கிறிஸ்துவை மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியாக நாம் அனுபவிக்க வேண்டும். பின்னர் நாம் அவரை மட்டற்ற கிறிஸ்துவாகப் பெறும்படிக்கு முன்னேறிச்செல்லலாம்.

உண்மையில், பஸ்காவில் நமக்கு ஆட்டுக்குட்டி மட்டும் இல்லை, புளிப்பில்லா அப்பமும், கசப்பான கீரைகளும் இருக்கின்றன *(யாத். 12:8)*. இங்கு திரும்பவும் இரண்டு வகையான ஜீவன்கள் இருக்கின்றன. ஆட்டுக்குட்டி மிருக ஜீவனுக்குரியது. புளிப்பில்லா அப்பமும் கசப்பான கீரைகளும் தாவர

ஜீவனுக்குரியவை. நீ இரட்சிக்கப்பட்ட அந்தக் கணப்பொழுதில் உனக்குத் தெரியுமோ தெரியாதோ நீ கிறிஸ்துவை இரண்டு வகையான ஜீவன்களாக அனுபவித்தாய். நீ அவரை மீட்கிற ஆட்டுக்குட்டியாகவும், பிறப்பிக்கிற பெருகுகிற ஜீவனாகவும் அனுபவித்தாய். நீ இதை எப்போதாவது கவனித்திருக்கிறாயா? அப்படியானால் வேறொரு காரியத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (இந்த நல்ல தேசத்தைப்பற்றிய விஷயத்தை ஒருபோதும் பேசித் தீர்க்கமுடியாது. இங்கு சொல்லப்பட்டுள்ள எதையுமே திரும்பச் சொல்லாமல்கூட இந்தப் பொருளைப்பற்றிய செய்திகளால் இன்னொரு புத்தகத்தை நிரப்பிவிடலாம்.) யோவான் 6ஆம் அதிகாரத்தில் இந்த இரண்டு ஜீவன்களையும் கர்த்தராகிய இயேசு ஒன்றாக இணைத்தார். "நானே ஜீவ அப்பம்" என்று அவர் சொன்னார். அப்பம் என்றால் என்ன? இது கோதுமை அல்லது பார்லியால் ஆன ஒன்று. இது தாவர ஜீவனுக்குரிய ஒன்று. ஆனால் கர்த்தர் இப்படி அறிவித்தபோது, மக்களால் அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் அவர், "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு...என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது. என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது," என்று சொன்னார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் ஜீவஅப்பம் அவர் மாம்சமே. அப்பம் தாவர ஜீவன். மாம்சம் மிருக ஜீவன். இந்த அதிகாரத்தில் கர்த்தர்தாமே இந்த இரண்டு காரியங்களையும் ஒன்றாகச் சேர்த்து இணைக்கிறார்.

ஆகையால் சகோதர சகோதரிகளே, நாம் கிறிஸ்துவை மீட்கிற ஆட்டுக்குட்டியாக, பிறப்பிக்கிற வல்லமையும் பெருகுகிற பலமும் கொண்டவராக அனுபவித்துமகிழ்வதில் ஆரம்பிக்கவேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியைப் புளிப்பில்லாத அப்பத்தோடும், கசப்பான கீரையோடும்கூட நாம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

மன்னா

பஸ்காவைத் தொடர்ந்து, கிறிஸ்துவை நாம் மன்னவாக அனுபவிக்கிறோம். அவரை ஆட்டுக்குட்டியாக அனுபவித்து மகிழ்ந்தபின்பு, நம் அன்றாட உணவாக அவரை அனுபவித்து மகிழ்வதற்கு நாம் முன்னேறுகிறோம். மன்னா தாவர ஜீவனுக்குரியதா அல்லது மிருக ஜீவனுக்குரியதா? நாம் வேத வாக்கியங்களைப் பார்ப்போம்.

> **எண்ணாகமம் 11:7-9:** "அந்த மன்னா கொத்துமல்லி விதையம்மாத்திரமும், அதின் நிறம் முத்துப்போலவும் இருந்தது. ஜனங்கள் போய் அதைப் பொறுக்கிக்கொண்டு வந்து ஏந்திரங்களில் அரைத்தாவது உரல்களில் இடித்தாவது,

பானைகளில் சமைப்பார்கள்; அதை அப்பங்களுமாகச் சுடுவார்கள். அதின் ருசி புது ஒலிவ எண்ணெயின் ருசிபோலிருந்தது. இரவிலே பாளயத்தின்மேல் பனி பெய்யும்போது மன்னாவும் அதின்மேல் விழும்."

யாத்திராகமம் 16:31: "இஸ்ரவேல் வம்சத்தார் அதற்கு மன்னா என்று பேரிட்டார்கள். அது கொத்துமல்லி அளவாயும் வெண்மை நிறமாயும் இருந்தது. அதின் ருசி தேனிட்ட பணிகாரத்துக்கு ஒப்பாயிருந்தது.

மன்னா ஒருவகையான விதையைப்போன்றது என்றும், அதின் ருசி புது எண்ணெய் மற்றும் தேனின் ருசியைப் போன்றது என்றும் நாம் இங்கு வாசித்தோம். எனவே இங்கு மறுபடியும் இரண்டு ஜீவன்கள் இரண்டறக் கலந்திருக்கின்றன. மன்னாவின் தோற்றம் முத்துப் போலிருந்தது என்ற காரியத்தையும் இந்த இடத்தில் கவனியுங்கள். தேவாலயத்தின் கட்டுமானப்பொருட்களுள் ஒன்று முத்து என்று வெளிப்படுத்தின விசேஷம் 21-ல் நாம் பார்க்கிறோம். ஆகையால் மன்னா முத்து என்ற வகையில் தேவாலயத்தின் கட்டுமானப் பொருளாகும்படி மறுரூபமாக்கப்பட்ட ஒன்றுக்கு முன்னடையாளம். ஆதியாகமம் 2ஆம் அதிகாரம் 12ஆம் வசனத்தில் பிதோலாகு என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பத்தியில் ஜீவ விருட்சம் அறிமுகம்செய்யப்படுகிறது. பின்னர் ஒரு நதி அறிமுகம்செய்யப்படுகிறது. அந்த நதியின் ஓட்டத் தில் பலவிதமான விலையேறப்பெற்ற பொருட்கள் என்னவென் றால் நாம் ஜீவ விருட்சத்தில் புசித்து, ஜீவத் தண்ணீரைக் குடிக்கும்போது, தேவனுடைய மாளிகைக்குத் தேவையான மறுரூபடைந்த பொருளாகிய முத்து உற்பத்தியாகும்.

அப்படியானால் மன்னா தாவர ஜீவனின் சுபாவம், மிருக ஜீவனின் சுபாவம், மறுரூபமடைந்த ஜீவனின் சுபாவம் ஆகிய சுபாவங்களையெல்லாம் கொண்ட ஒரு பொருள். கிறிஸ்துவின் இந்த அம்சத்தை நாம் அனுபவித்துமகிழ வேண்டும். நாம் அவரைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக புளிப்பில்லா அப்பத் தோடும், கசப்பான கீரையோடும் அனுபவித்துமகிழவேண்டும். நாம் அவரைத் தாவர ஜீவன், மிருக ஜீவன், மறுரூபமடைந்த சுபாவம் ஆகியவைகளை உள்ளடக்கிய மன்னாவாகத் தொடர்ந்து அனுபவித்துமகிழவேண்டும். கிறிஸ்துவை நம் அன்றாட மன்னாவாக நாம் உட்கொள்ளும்போது, தேவ னுடைய மாளிகைக்கேற்ற கட்டுமானப்பொருளாக நாம் மறுரூபமாக்கப் படுவோம்.

ஆனால் இது போதுமா? போதாது. இன்னும் இருக்கிறது. தேசத்துக்குள் நுழைவதற்கான வழி யாத்திராகமம் பன்னிரண் டாம் அதிகாரத்தில் ஆரம்பித்து, யோசுவாவின் கடைசி

அதிகாரம்வரை தொடர்ந்துசெல்கிறது. நாம் இந்தப் பகுதிகளை முழுமையாய் வாசிக்கவேண்டும். தெளிவாக அவைகளைப் புரிந்துகொள்ளவேண்டும்; அப்போது தேசத்தைச் சுதந்தரிப் பதற்கான வழி நமக்குக் கிடைக்கும்.

பெட்டி

கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவித்து மகிழ்வதில் தொடங்கி, பரலோகத்திலிருந்து வரும் மன்னவாக நாள்தோறும் தொடர்ந்து அனுபவிப்பது வெறும் ஆரம்பம் தான். கூடாரத்தில் ஊனுருக்கொண்டதும், கூடாரத்தால் மூடப்பட்டதுமான பெட்டியாக அவரை அனுபவிக்குமாறு முன்னேறிச்செல்ல வேண்டும் (யாத். 25:10-22). பெட்டி என்றால் என்ன? பெட்டி தேவனுடைய சாட்சியாகும். சாதாரணமாகச் சொல்வதானால், தேவனுடைய சாட்சி என்பது தேவன் வெளியரங்கமாவதும், தேவனுடைய வெளியாக்கமுமாகும். பெட்டிக்குள் பத்துக் கற்பனைப் பலகைகள் இருந்தன. பத்துக் கற்பனைகள் என்றால் என்ன? பத்துக் கற்பனைகள் தேவனுடைய கண்டிப்பான கோரிக்கைகள் என்பதுதான் பத்துக் கற்பனைகளைப்பற்றி பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு இருக்கக்கூடிய எண்ணம். நீ இதைச் செய்யவேண்டும். நீ அதைச் செய்யவேண்டும். நீ இதைச் செய்யக்கூடாது, நீ அதைச் செய்யக்கூடாது. பொதுவான கிறிஸ்தவப் போதனையினால் இப்பேர்ப்பட்ட ஒரு கருத்துதான் நமக்குள் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பத்துக் கற்பனைகளின் உள்ளார்ந்த பொருள் என்ன? தோற்றத்தில் அவைகள் பிரமாணங்கள்; ஆனால் அவைகளின் முதன்மையான உட்கருத்து அவைகள் பிரமாணங்கள் என்பதல்ல; அவைகள் பிரமாணங்கள் என்பது இரண்டாம் பட்சமே. அவைகள் தேவனுடைய வெளியாக்கம் என்பதுதான் முதன்மையான உட்கருத்து. பத்துக் கற்பனைகள் தேவனுடைய வெளியரங்க மாயிருக்கின்றன.

தேவன் எப்படிப்பட்ட தேவன் என்பதை நாம் கற்பனைகள் மூலம் அறியலாம். நீங்கள் தேவனை ஒருபோதும் கண்டதில்லை, ஆனால் அவரை வருணிக்கும் "பத்து வார்த்தைகள்" இங்கு இருக்கின்றன (யாத். 34:28). முதல் தனிச்சிறப்பு: தேவன் எரிச்சலுள்ள தேவன். இரண்டாவது தனிச்சிறப்பு, அவர் பரிசுத்தமான தேவன். பின்பு மற்ற தனிச்சிறப்புகள் இருக்கின்றன. அவர் அன்பின் தேவன். அவர் நீதியுள்ள தேவன். அவர் உண்மையுள்ள தேவன். இப்படிப் பல. இவ்வாறு பத்துக் கற்பனைகள் மறைவான தேவனின் வருணனையாக, வெளிப்படுத்துதலாக, வெளியரங்கமாக இருக்கின்றன. அவைகள்

அதிசனமான தேவனைப்பற்றிய ஒரு கருத்தை உங்களுக்குத் தருகின்றன. அவர் எப்படிப்பட்ட தேவன் என்று அவைகள் உங்களுக்குக் காண்பிக்கின்றன. அவர் எரிச்சலுள்ள தேவன், அவர் பரிசுத்தமான தேவன். அவர் அன்பின் தேவன், அவர் நீதியுள்ள தேவன், அவர் உண்மையுள்ள தேவன். இந்தப் பத்துக் கற்பனைகளால் நீங்கள் அவருடைய சுபாவத்தைப் பகுத்துணரலாம். இந்தப் பத்துக் கற்பனைகளுக்கு, பிரமாணங்கள் என்ற வகையில், அளவுக்கு அதிகமான கவனத்தைச் செலுத்தாதீர். அது இரண்டாம் பட்சமே. அவைகள் மகிமையான, ஆனால் அதிசனமான தேவனுடைய வருணனை, வெளியாக்கம், சாட்சி என்பதுதான் முதன்மையான உட்கருத்து என்பதை நாம் உணரவேண்டும்.

இந்தப் பத்துக் கற்பனைகள் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தன. தேவன் தம்மைக் கிறிஸ்துவுக்குள் வைத்தார் என்பதுதான் இதன் உட்கருத்து. பத்துக் கற்பனைகள் தேவனுடைய சாட்சியாகும். சாட்சிப் பெட்டி கிறிஸ்துவாவார். ஆகையால் தேவனுடைய பரிபூரணம் கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது.

பெட்டி இரண்டு சுபாவங்களைக்கொண்ட கிறிஸ்துவுக்குத் தெளிவான அடையாளமாக இருக்கிறது. அது மரத்தால் செய்யப்பட்டிருந்தது. மரம் பொன்னால் மூடப்பட்டிருந்தது. மரம், மனித சுபாவம்; பொன் தெய்வீக சுபாவம்; இது தெய்வீக சுபாவத்துடன் இரண்டறக் கலந்த மாம்சத்திலிருந்த கிறிஸ்துவின் சித்திரமாகும். அவரிடத்தில் மனிதனின் சுபாவமும், அதே நேரத்தில் தேவனின் சுபாவமும் இருக்கின்றன—மனித சுபாவம், தெய்வீக சுபாவம். அவரே பெட்டி. ஆனால், அவருக்குள் தேவன்தாமே இருக்கிறார். பத்துக் கட்டளைகள் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்ததைப்போலவே, தேவன் என்னவாக இருக்கிறாரோ, அவைகளனைத்தும் கிறிஸ்துவுக்குள் வைக்கப்பட்டிருந்தன. பெட்டி "சாட்சிப் பெட்டி" என்று அழைக்கப்பட்டதைப்போலவே, கிறிஸ்துவும் தேவனுடைய வெளியரங்கமாகவும், சாட்சியாகவும் இருக்கிறார். இது பஸ்கா ஆட்டுக்குட்டியைவிட, அனுதின மன்னாவைவிட அதிகமான ஒன்று என்பதைக் கவனியுங்கள். இது திடமானது, பூரணமானது, நிறைவானது, இதுவே தேவனுடைய வெளியரங்கம், தேவனுடைய வெளியாக்கம், தேவனுடைய சாட்சி. தேவன் எப்படிப்பட்டவர் என்று பஸ்கா ஆட்டுக்குட்டியின்மூலமாக உங்களால் உணரமுடியுமா? ஆம், ஒருவேளை ஓரளவு பார்க்கலாம். தேவனுடைய சுபாவம் என்ன என்று அனுதின மன்னாவின்மூலம் உங்களால் உணரமுடியுமா? அது சற்றுக் கடினம். உங்களால் எதையுமே பார்க்கமுடியாது என்று நான் சொல்லவில்லை. உங்களால் எதையும் அதிகமாகப் பார்ககமுடியாது என்றுதான் சொல்கிறேன். இப்போது பெட்டிக்கு வாருங்கள். இதை ஆழ்ந்து

சிந்தித்துப்பாருங்கள். இதை வாசியுங்கள், உடனே நீங்கள் தேவனைப்பற்றி ஏதோவொன்றை அறிகிறீர்கள். தேவன் எரிச்சலுள்ளவர்; தேவன் அன்பாக இருக்கிறார்; தேவன் பரிசுத்தமாக இருக்கிறார்; தேவன் நீதியாக இருக்கிறார்; தேவன் உண்மையுள்ளவர். மறைவான தேவன் எப்படிப்பட்டவர் என்பதைப் பெட்டியின்மூலமாக நீங்கள் உடனடியாக உணர்ந்துகொள்ளலாம்.

ஆனால், நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். உங்களால் பெட்டியைச் சாப்பிடமுடியுமா? உங்களால் பெட்டியைக் குடிக்க முடியுமா? முடியாது; ஆனால் இது கிறிஸ்துவின் இன்னோர் அம்சம். கிறிஸ்துவின் நிறைவான அம்சம். கிறிஸ்து அதிசயமான தேவனின் வெளியாக்கம், வெளியரங்கம், சாட்சி. நாம் கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும், அனுதின மன்னாவாகவும் அனுபவித்துமகிழ்வதைப்போலவே, இந்தக் கிறிஸ்துவை, (இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு நீங்கள் என்னை அனுமதித்தால்) இந்தப் பெரிய கிறிஸ்துவை, நாம் நம் மையமாகவும் கொண்டிருக்க வேண்டும். தேவனுடைய வெளியாக்கமும், வெளியரங்கமும், சாட்சியுமாகிய கிறிஸ்துவை, அதாவது சாட்சிப்பெட்டியையே நம் மையமாகக் கொண்டிருக்க வேண்டும். இது மெய்யாகவே கூடுதலானது. நாம் ஆட்டுக்குட்டியை நம் மீட்பராகவும், அனுதின மன்னாவை நம் உணவாகவும் மட்டும் இல்லை, சாட்சிப்பெட்டியை நம் மையமாகவும் கொண்டிருக்க வேண்டும்.

சகோதர சகோதரிகளே, இதை மீண்டும் சொல்வதற்கு என்னை அனுமதியுங்கள். உங்களில் சிலரால் இதைப்புரிந்துகொள்ள முடியாமல்போய்விடுமோ என்று நான் பயப்படுகிறேன். கிறிஸ்துவை உங்கள் அனுதின மன்னாவாக நீங்கள் அனுபவித்து மகிழ்கிறீர்களா? அது நல்லது. ஆனால் அது போதாது. அவரை நாம் நம் மையமாகக் கொண்டிருக்க வேண்டும். மையம் எது? தேவனுடைய வெளியாக்கமே, வெளியரங்கமே, சாட்சியே மையம். இப்போர்ப்பட்ட மையம் நம்மிடையே இருக்கிறதா? மெய்யாகவே இதுவே நம் கூட்டத்தின், சபை வாழ்க்கையின் மையமாக இருக்கிறதா? மக்கள் நம்மிடத்தில் வரும்போது, தேவனுடைய வெளியாக்கம் நம் நடுவில் இருக்கிறது என்று அவர்களால் உணர முடியுமா? மக்கள் நம்மிடத்தில் வரும்போது, நாம் வெறுமனே மீட்கப்பட்டவர்களென்றும், கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்கிறவர்களென்றும் மட்டும் அவர்கள் உணர்ந்தால் அது போதவே போதாது. நாம் கிறிஸ்துவைத் தினம்தினம் அனுதின மன்னாவாகப் புசிக்கிறோம் என்று மட்டும் அவர்கள் உணர்ந்தால், இதுவும்கூட குறியைத் தவறவிடுவதுதான். நம்மிடையே, நம் நடுவில், எரிச்சலுள்ள தேவனுடைய, அன்பின் தேவனுடைய,

பரிசுத்தத்தின் தேவ னுடைய, நீதியின் தேவனுடைய, உத்தமத்தின் தேவனுடைய வெளியரங்கம் இருக்கிறது என்ற எண்ணத்தை அவர்கள் மனதில் ஏற்படுத்த நம்மால் முடியவேண்டும். இப்பேர்ப்பட்ட மையம் நம்மிடையே இருக்கிறதா, இல்லையா? மக்கள் நம்மிடத்தில் வரும்போது, தேவனுடைய வெளியரங்கம், வெளியாக்கம், வரையறை, விளக்கம் இங்கு இருக்கிறது என்று அவர்கள் உணர்கிறார்களா? நாமே தேவனுடைய சாட்சிகள் என்றும், தேவன் எரிச்சலுள்ள தேவன், பரிசுத்தமுள்ள தேவன், அன்பின் தேவன், நீதியுள்ள தேவன், உண்மையுள்ள தேவன் என்று கிறிஸ்துவை நாம் அனுபவிக்கும் அனுபவத்தின் நிஜத்திலிருந்து நாம் சாட்சிபகர்கிறோம் என்றும் அவர்கள் உணர்கி றார்களா? இந்த சாட்சியை நாம் நம் மையமாகக் கொண்டிருக்க வேண்டும்.

தேசத்தைச் சுதந்தரிப்பது என்பது சுலபமான காரியம் இல்லை. ஆட்டுக்குட்டியை அனுபவித்துமகிழ்ந்து, சிவந்த சமுத்திரத்தைக் கடந்த உடனே தேசத்துக்குள் நுழைந்துவிடலாம் என்று நினைக்கிறீர்களா? இல்லை. யாத்திராகமம் 12, 13, 14ஆம் அதிகாரங்களுக்குப்பின், பஸ்காவுக்குப்பின், சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபின், அடையவேண்டிய அனுபவங்கள் இன்னும் பல இருக்கின்றன. யாத்திராகமத்தின் மீதமுள்ள பகுதி, லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா ஆகியவைகளெல்லாம் இன்னும் நமக்குமுன்பாக இருக்கின்றன. தேசத்துக்குள் செல்வதற்குமுன்பு இடைப்பட வேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றன. அனுபவிக்கவேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றன, சுதந்தரிக்கவேண்டிய காரியங்கள் இன்னும் பல இருக்கின்றன.

பெட்டியின் முழு அர்த்தத்தை நாம் பார்க்கவேண்டும். கட்டளை களுக்குப் பிரமாணங்கள் என்ற ஓர் அம்சம் உண்டு என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் நாம் அந்த அம்சத்தைப்பற்றி இங்கே பேசமுடியாது. ஆனால் அதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால் பத்துக் கட்டளைகள் அதரிசனமான தேவனுடைய வரையறையாக, விளக்கவுரையாக, பொருள் விளக்கமாக இருக்கின்றன. இந்தப் பொருள் விளக்கம், இந்த விளக்கவுரை இயேசுகிறிஸ்துவில், அந்தத் தேவ-மனிதரில், தெய்வீக மற்றும் மனித சுபாவங்களுடன் மனுவுரு வெடுத்தவரில், இருக்கிறது. அவரே தேவனுடைய விளக்கம், அவரே தேவனுடைய வெளியரங்கம், அவர் தேவனே. அவரே நம் மையமாக இருக்கவேண்டும். அவரே தேவனுடைய வெளியாக்கம், தேவனுடைய சாட்சி. நாம் அவரை நம் மையமாகக் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்துவில் வெளியரங்கமாக்கப்பட்ட தேவனையன்றி

வேறொன்றைப்பற்றியும் நாம் சாட்சிபகரக்கூடாது.

கூடாரம்

இந்தப் பெட்டி கூடாரத்துக்குள் ஊனுருக்கொண்டிருக்கிறது. பத்துக் கட்டளைகள் பெட்டிக்குள் ஊனுருக்கொண்டிருக்கின்றன. பெட்டி கூடாரத்துக்குள் ஊனுருக்கொண்டிருக்கிறது (யாத். 40:20-21). அப்படியானால் கூடாரம் என்றால் என்ன? கூடாரம் பெட்டியின் விரிவாக்கம், பெட்டியின் பெருக்கம். பெட்டி மரத்தால் செய்யப்பட்டது, மரம் பொன்னால் மூடப்பட்டிருந்தது. கூடாரத்தின் பெரும்பான்மையான பகுதியும் அதே வகையான கட்டுமானப் பொருள்களாலேயே ஆக்கப்பட்டிருந்தது—அதாவது பொன்னினால் மூடப்பட்ட மரம் (யாத். 26:15-30). ஆகையால் கூடாரம் பெட்டியின் விரிவாக்கம். வேறு வார்த்தைகளில் சொன்னால், விரிவாக்கப்பட்ட பெட்டியே கூடாரமாகிறது. கூடாரம் அதே கட்டுமானப்பொருட்களால், அதே உருவத்தில் செய்யப்பட்டிருக் கிறது. அது அதிகமான கிறிஸ்துவைக்கொண்டு கட்டியமைக்கப் பட்டு, அவரைத் தன்னுள் கொண்டிருக்கிறது.

கூடாரத்தில் கிறிஸ்துவைப்பற்றி நாம் கொஞ்சம் அதிகமாகப் பார்ப்போம். கூடாரத்தின்மேல் நான்கு அடுக்குகளாலான மூடுதிரைகள் இருந்தன என்று நாம் வாசிக்கிறோம் (யாத். 26:1-14). கிறிஸ்து சிருஷ்டிகளுள் ஒருவரானார் என்பதுதான் இதன் பொருள். ஏனென்றால், நான்கு என்ற எண் சிருஷ்டிகளைக் குறிக்கிறது. வெவ்வேறு விதமான மூடுதிரைகளால் ஆன இந்த நான்கு அடுக்குகள் யாவை? மிகப்புறம்பான மூடுதிரை தகசுத் தோலால் ஆனது. இது மழை, காற்று, வெயில் ஆகியவைகளுக்கு எதிரான பலமான பாதுகாப்பு. தகசுத் தோலுக்குக்கீழே சிவப்புநிற செம்மறி ஆட்டுக்கடாவின் தோல்களாலான மூடுதிரை இருக்கிறது. கிறிஸ்து நம் பாவங்களுக்காக மரித்து, தம் இரத்தத்தைச் சிந்தினார் என்று இது குறிக்கிறது. அதற்குக்கீழே வெள்ளாட்டு உரோமத்தாலான மூடுதிரைகள் இருக்கின்றன. கிறிஸ்து நமக்காகப் பாவமானார் என்பதை இது குறிக்கிறது. மிக உள்ளான திரை மிக ஆழமான, மிக நேர்த்தியான மிகவும் மகிமையான பஞ்சுநூலால் நெய்யப்பட்டிருந்தது. அவைகளில் கேரூபின்கள் பின்னல் வேலையாகத் தைக்கப்பட்டிருந்தன. இந்த மூடுதிரைகளெல்லாம் அர்த்தம் நிறைந்தவைகள். இவைகளுக்கு அதிகமான விளக்கம் தேவைப்படுகிறது. இவைகளெல்லாம் கிறிஸ்துவுடன் தொடர்புடையவைகள்.

உள்ளிருந்து, நீங்கள் அவருடைய மகிமையைக் காண்கிறீர்கள். ஆ, கிறிஸ்து உள்ளிருந்து எவ்வளவு மகிமையாயிருக்கிறார்! வெளியேயிருந்து நீங்கள் அவருடைய பணிவையும், அவருடைய

தாழ்மையையும், அவருடைய எளிமையையும் காண்கிறீர்கள். நீங்கள் அவருடைய பலத்தையும், அவருடைய சகிப்புத்தன்மையையும் காண்கிறீர்கள். ஆனால் அங்கு எந்த அழகும் இல்லை. இதுதான் மற்றவர்களால் அசட்டைபண்ணப்பட்ட, தாழ்மையான மனிதராகிய இயேசு. ஆனால் உள்ளே அவர் மகிமையான கிறிஸ்து.

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவால் மூடப்பட்டிருக்கிறோம்! கூடாரத்தின் பரிமாணத்தின்படி, மூடுதிரைகள் செய்வதற்குப் பத்து தொங்குதிரைகள் தேவைப்பட்டன. ஆகையால் நேர்த்தியான பஞ்சுநூலாலான மிக உள்ளான மூடுதிரை பத்து தொங்கு திரைகளால் செய்யப்பட்டது. ஆனால் வெள்ளாட்டு உரோமத்தாலான மூடுதிரைகள், பதினொரு தொங்குதிரைகளால் ஆனவை. அது ஐந்து கூட்டல் ஐந்து இல்லை, மாறாக ஐந்து கூட்டல் ஆறு. ஆறு ஒரு நல்ல எண் அல்ல. ஆறு மனிதனைக் குறிக்கிறது; பாவத்துடன் தொடர்புடையது. இவ்வாறு கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டார் என்று இது குறிக்கிறது. மிக உள்ளான அடுக்கு மகிமையான கிறிஸ்து. இரண்டாவது மூடுதிரை நமக்காகப் பாவமாக்கப்பட்ட கிறிஸ்து; மூன்றாவது மூடுதிரை தம் இரத்தத்தைச் சிந்தி நமக்காக மரித்த கிறிஸ்து; நான்காவதும், மிகப் புறம்பானதுமான மூடுதிரை தாழ்வுற்ற மனிதனாவதற்காகத் தம்மையே தாழ்த்தின கிறிஸ்து. இந்தக் கிறிஸ்து, இந்த நான்குமடங்கு கிறிஸ்து, நம்மை மூடுகிறார். என்னே மூடுதிரை! என்னே பாதுகாப்பு! என்னே காப்புறுதி!

இந்தக் கூடாரத்தில் கிறிஸ்து அநேகப் பலகைகளுடன் இணைக்கப்பட்டிருக்கிறார். மனித அவயவங்களாகிய நாம் தாம் மரப்பலகைகள், நீ ஒரு மரப்பலகை, நான் இன்னொரு மரப்பலகை. எல்லாப் பலகைகளும் பொன்னில் ஒன்றிணைக் கப்பட்டிருப்பதுப் போல, கிறிஸ்துவும் நம்முடன் இணைந்து நம்மெல்லாரையும் தெய்வீக சுபாவத்தில் ஒன்றிணைத்துக் கொண்டிருக்கிறார். பெட்டி, கிறிஸ்துவாகிய இப்பேர்ப்பட்ட கூடாரத்தில் ஊனுருக்கொண்டிருக்கிறது. குறைந்தது நாற்பத்தெட்டு பலகைகளாவது இருந்தன. எல்லாம் பொன்னினால் மூடப்பட்டிருந்தன. பொன் வளையங்களைக்கொண்டும், தாழ்ப்பாள்களைக்கொண்டும் ஒன்றாக இணைக்கப்படிருந்தன (யாத். 26:26-29). நாம் பொன்னை எடுத்துவிட்டால், நாற்பத்தெட்டு பலகைகளும் தனித்தனியாக விழுந்துவிடும்; ஒரு பலகைகூட இன்னொரு பலகையுடன் இணைந்திருக்க முடியாது. நாம் மாம்சத்தில் இணைக்கப்பட்டிருக்க வில்லை; நாம் ஒருபோதும் மாம்சத்தில் இணைக்கப்படவும் முடியாது. தெய்வீக சுபாவமே நம்மை இணைக்கிறது. பொன்தான் இணைப்பு, பொன்தான் நம்மிடையேயுள்ள ஒற்றுமை. பொன்

இல்லையென்றால் நாம் தனித்தனியாகச் சிதறிவிடுவோம். நான் உன்னுடன் ஒத்துப்போகமாட்டேன்; நீ என்னுடன் ஒத்துப்போக மாட்டாய். ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், பொன் உன்னை மூடுகிறது; பொன் என்னையும் மூடுகிறது. உன்மேல் சில பொன் வளையங்கள் இருக்கின்றன; என்மேல் ஒரு பொன் தாழ்ப்பாள் இருக்கிறது. நம்மைப் பிரிப்பது சாத்தியம் இல்லை. நீ ஓடிவிட வேண்டும் என்று விரும்பினாலுங்கூட உன்னால் ஓடமுடியாது. நீ கட்டப்பட்டிருக்கிறாய். நீயும், நானும் ஒன்றாகக் கட்டப் பட்டிருக்கிறோம். எனவே நம்மை ஒருபோதும் பிரிக்கமுடியாது. நாம் நம் இயற்கையான பிறவிக்குணத்தின்படி கட்டப்படவில்லை. இயற்கையாகச் சொல்வதென்றால், என்னால் உன்னுடன் ஒருபோதும் ஒத்துப்போக முடியாது. இயல்பாகவே நாம் ஒருவரோடொருவர் இணையக்கூடியவர்களாக இருந்தபோதும், அது உண்மையான அல்லது நிலையான இணைப்பு இல்லை. ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், தேவனுடைய சுபாவத்தினால், தெய்வீகமான ஒன்றால், கலைக்கமுடியாத மெய்யான இணைப்பில் நாம் கட்டப்பட்டிருக்கிறோம். நாம் பொன்னினால் கட்டப்பட்டது மட்டுமல்ல, பொன்னினால் மூடப்பட்டும் இருக்கிறோம், பொன்னினால் காப்புறுதிசெய்யப்பட்டும் இருக்கிறோம். இந்தப் பொன் தேவனே.

ஒருநாள் என் அறையில், "நீ எவ்வளவு துரதிருஷ்ட வசமானவன், நீ தெய்வீக சுபாவத்தால் சிறைப்படுத்தப் பட்டிருக்கிறாய். உன்னால் தப்பித்துக்கொள்ளமுடியாது. நீ ஒருவேளை முயற்சிசெய்யலாம். ஆனால் பொன்னான இந்தக் குழுவிலிருந்து உன்னால் ஒருபோதும் வெளியேற முடியாது," என்று எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். இதுவே ஒற்றுமை. சகோதர சகோதரிகளே, இப்பேர்ப்பட்ட ஒற்றுமை நம்மிடையே இருக்கவேண்டும். அப்போதுதான் தேசத்துக்குள் நுழைவதற்கான தகுதியும், பலமும் நமக்கு இருக்கும். ஒருவரிடமிருந்து ஒருவர் நம்மால் தப்பித்துக்கொள்ள முடிந்தால், ஒருவரைவிட்டு ஒருவர் நம்மைப் பிரித்துக்கொள்ள முடிந்தால், நல்ல தேசத்துக்குள் போவதற்கான வழியே இல்லை. நமக்கு பெட்டியின் ஊனுருவான இந்தக் கூடாரம் வேண்டும். பெட்டிக்கான கூடாரமாக நாம் இந்தத் தெய்வீக சுபாவத்தில் ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கவேண்டும். கிறிஸ்து வாகிய பெட்டி நமக்குள்ளே நம் மையமாக இருக்கிறார். பெட்டியை உள்ளடக்கிய கூடாரம், பெட்டியின் பெரிதாக்க மாக இருப்பதைப்போல நாமும் இந்தக் கிறிஸ்துவின் பெரிதாக்கமாக இருக்கிறோம்.

நாம் கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும், அனுதின மன்னாவாகவும், கூடாரத்துக்குள் ஊனுருக்கொண்டிருக்கிற

பெட்டியாகவும் எப்படி அனுபவித்துமகிழ்வது என்று பார்த்தோம். இவைகளெல்லாம் தேசத்துக்குள் நுழைவதற்கான நம் தகுதிகளாகும்.

அதிகாரம் பத்து

தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி

II. பலிகளாலும், ஆசாரியத்துவத்தாலும்

வேத வாசிப்பு: லேவி. 1:1-3; 2:1; 3:1; 4:2, 3; 5:5, 6; 8:1-13; யாத். 40:17, 21

தேசத்துக்குள் நுழைந்து, சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைச் சுதந்தரித்துக்கொள்ளும் வழியை நாம் பார்க்க ஆரம்பித்திருக்கிறோம். இப்பேர்ப்பட்டவரை நாம் சுதந்தரிக்க விரும்பினால், முதலில் நாம் அவரைக் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவித்துமகிழ்வதில் ஆரம்பிக்கவேண்டும் என்று சுட்டிக் காட்டினோம். இஸ்ரவேல் மக்கள் கிறிஸ்துவின் முன்னடை யாளங்களை அனுபவித்துமகிழ ஆரம்பித்தார்கள். முதலாவது பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஆரம்பித்தார்கள். இதுதான் நாமெல்லாரும் ஆரம்பிக்கவேண்டிய இடம். பின்பு அவர்கள் அவரைப் பரலோக மன்னாவாக அனுபவித்துமகிழ்ந்தார்கள். பின்பு ஜீவத்தண்ணீர் ஓடுகிற கன்மலையாக அனுபவித்துமகிழ்ந்தார்கள். இவைக ளெல்லாம் கிறிஸ்துவுக்கு முன்னடை யாளங்கள். ஆனால் அவைகள் ஆரம்ப அடையாளங்களே; அவைகள் மிக ஆழமானவைகளோ, வளமானவைகளோ இல்லை. நம்மைப் பொறுத்தவரை, அவைகள் மிகப்போது மானவைகளாக இருக்கக்கூடும், ஆனால் அவைகள் வெறும் ஆரம்பம்தான் என்று நாம் உணரவேண்டும்.

பெட்டியையும், அதற்குள்ளிருக்கும் தேவனுடைய சாட்சி யையும் நாம் பார்த்தோம். பெட்டி, கிறிஸ்துவுக்கு இன்னொரு முன்னடையாளம். இது அதிகத்திடமானது, நிறைவானது. பெட்டியை ஆட்டுக்குட்டியுடன் அல்லது மன்னாவுடன் அல்லது ஜீவத்தண்ணீர் ஓடுகிற கன்மலையுடன் ஒப்பிட்டால், இதில் எவ்வளவு முன்னேற்றம் இருக்கிறது என்று நீங்கள் காணலாம். பெட்டி, கிறிஸ்துவை இன்னும் அதிகமாக வெளி யரங்கமாக்கு கிறது. பஸ்கா ஆட்டுக்குட்டியில் கிறிஸ்துவை மீட்பவராக மட்டுமே உணரலாம்; சிலுவையில் நம் பாவங்களுக்காகத் தம் இரத்தத்தைச் சிந்தி மரித்தவராக மட்டுமே உணரலாம். மன்னா அதிலிருந்து ஒருபடி முன்னேற்றம்; மெய்யாகவே, அது ஒரு நல்ல அனுபவம். அதில் நீங்கள் தாவர ஜீவனையும், மிருக ஜீவனையும் சுவைக்கிறீர்கள்; அதே நேரத்தில் தேவனுடைய கட்டிடத்திற்காக

மறுரூபமாக்கப்பட்ட கட்டுமானப்பொருட்களாக, முத்துக்குரிய ஏதோவொன்றையும் நீங்கள் தொடுகிறீர்கள். இவைகளெல்லாம் உண்மையில் நல்ல அனுபவங்களே; எனினும் இவைகள் பெட்டிக்கு நிகரானவை இல்லை. பெட்டியின் அனுபவம் நாம் இதுவரை அனுபவித்ததைவிட அதிகத் திடமானது; பெட்டிக்குள் இருப்பவைகள் ஒப்பிடமுடியாத அளவுக்கு அதிக நிறைவான வைகள். அதற்குள் நீங்கள் ஏதோவொன்றை வாசிக்கலாம். அங்கு தேவனைப்பற்றி ஏதோவொன்று எழுதப்பட்டிருக்கிறது. பெட்டிக்குள் இருப்பவைகளிலிருந்து நீங்கள் தேவனுடைய சுபாவத்தை அறியலாம்.

பெட்டியுடன் அதின் ஊனுருவும், பெருக்கமும், பெரி தாக்கமுமான கூடாரம் இருக்கிறது. கூடாரம் கிறிஸ்துவின் பெரிதாக்கமும், வெளிப்படுத்துதலுமாகும். ஏனென்றால் கூடாரத்தின் பெரும்பாலான பகுதி அப்படியே பெட்டியின் சுபாவத்தையே கொண்டிருக்கிறது. பெட்டி மரத்தால் செய்யப் பட்டு, பொன்னால் மூடப்பட்டிருந்தது. அதுபோல, கூடாரமும் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்டிருந்தது. ஒரேவிதமான கட்டுமானப்பொருட்கள். ஆனால், ஆசரிப்புக் கூடாரம் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையாக அவருடைய பெரிதாக்கமாகவும், பெருக்கமாகவும் இருக்கிறது என்று நம்மால் எப்படி உணரமுடியும்? ஏனென்றால், அது நாற்பத்தெட்டு மரப் பலகைகளால் தொகுக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அது அநேகப் பலகைகளைக்கொண்டு கட்டியமைக்கப்பட்டிருந்தது. இந்த அநேகப் பலகைகள் சரீரத்திலுள்ள அநேக அவயவங்களுக்கு அடையாளங்களாக இருக்கின்றன. சபையில் அநேக அவயவங்கள் தெய்வீகப் பொன்னினால் ஒன்றாகச் சேர்த்துக்கட்டப்பட்டு, மூடப்பட்டிருப்பதின்மூலம் ஒன்றாகக் கட்டியெழுப்பப்படுகிறார்கள். அவர்கள் பொன்னில் ஒன்றாக இருக்கிறார்கள். அவர்கள் பொன்னால் மூடப்பட்டிருக்கிறார்கள்; பொன் வளையங்களாலும், சட்டங்களாலும் அவர்கள் ஒருவரோடொருவர் இணைக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் பொன்னைவிட்டு வெளியே வந்துவிட்டால், தனித்தனித் துண்டுகளாகச் சிதறிவிடுகிறார்கள்; ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து தனித்தனியாகிவிடுகிறார்கள்; மனித சுபாவத்தில் அவர்கள் தனித்தனி துண்டுகள்; ஆனால் தெய்வீக சுபாவத்தில், மூவொரு தேவனில், அவர்கள் ஒன்றாக இருக்கிறார்கள். கூடாரம் நான்கு அடுக்கு மூடுதிரைகளால் மூடப் பட்டிருந்ததைப்போல, அவர்களெல்லாரும் நான்குமடங்கு கிறிஸ்துவால் மூடப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பெரிதாக்கமும், கிறிஸ்துவின் வெளியாக்கமுமாகிய சபை இப்பேர்ப்பட்ட மூடுதலின்கீழ் இருக்கிறது. இந்த நாற்பத்தெட்டு

பலகைகளும் வெள்ளிப் பாதங்கள் அல்லது ஆதாரங்கள்மேல் நிற்கின்றன. இதன் பொருள் என்னவென்றால் கிறிஸ்துவின் மீட்புதான் அவைகளுக்கு ஆதாரம். அவைகள் இந்த ஆதாரத் தின்மேல் நிற்கின்றன. அவைகள் தெய்வீகப் பொன்னால் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டு, மூடப்பட்டு அதின்மேல் நான்குமடங்கு கிறிஸ்துவால் மூடப்பட்டிருக்கின்றன. இதுவே சபை, கிறிஸ்துவின் பெருக்கம், வெளிப்படுத்துதல்.

பஸ்கா ஆட்டுக்குட்டி, மன்னா, ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுகிற கன்மலை ஆகியவைகளைவிட இது அதிகம் என்று நம்மால் உணரமுடியும். இதோ, இங்கே திடமான ஒன்று இருக்கிறது. தேவனுடைய சாட்சியை உள்ளேயும், அவருடைய பெரிதாக்கத்தை அவருடைய உண்மையான வெளியாக்கமாக வெளியேயும் கொண்டுள்ள கிறிஸ்து இங்கு இருக்கிறார். இந்தக் கிறிஸ்துவே தேசத்தைச் சுதந்தரிக்கப்போகிறவர்களின் மையம். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை நாம் சுதந்தரிக்க வேண்டுமென்றால் இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவை, தம்மில் தாமே சாட்சியையுடைய கிறிஸ்துவை, தேவனுடைய வெளியரங்கமும், விளக்கமுமாகிய கிறிஸ்துவை, நாம் மையமாகக் கொண்டிருக்கவேண்டும். நாம் இந்தக் கிறிஸ்துவின் பெரிதாக்கமாகவும், இந்தக் கிறிஸ்துவுக் கான கூடாரமாகவும், இந்தக் கிறிஸ்துவின் வெளியாக்கமாகவும் இருக்கவேண்டும். நாம் இப்பேர்ப்பட்ட மையத்தைக் கொண்டிருக்க வேண்டும். நாம் இப்பேர்ப்பட்ட பெரிதாக்கமாக இருக்கவேண்டும். இதுவே நாம் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் வழி. கிறிஸ்துவைப்பற்றிய அனுபவங்கள் நமக்கு ஏராளமாக இருக்கின்றன என்பதல்ல இதன் பொருள். மாறாக நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழும்மகிழ்ச்சி எப்போதும் பெருகிக்கொண்டே, பெரிதாகிக்கொண்டேபோகிறது என்பதே இதன் பொருள்.

ஓர் ஆட்டுக்குட்டியை அனுபவித்துமகிழ்வதில் ஆரம்பிக் கிறோம். அது ஒரு சின்ன ஆட்டுக்குட்டி என்று சொல்லவேண்டும். அது பரிபூரணமானது, முழுமையானது; ஆனால் அது சிறியது. பின்னர் கிறிஸ்துவை அனுதினமன்னாவாகவும், நம் நிறைவான உணவாகவும், ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுகிற கன்மலையாகவும் அனுபவித்துமகிழ்வதற்குக் கற்றுக்கொள்கிறோம். கிறிஸ்து நமக்கு இன்னும் அதிகமானவராகிறார். பின்பு கிறிஸ்துவைத் தேவனுடைய சாட்சியாகவும், தேவனுடைய வெளியரங்கமாகவும், விளக்கமா கவும் அனுபவிக்கஆரம்பிக்கிறோம். இது முழு அளவுக்கும், இன்னும் அதிகத்திடமாகவும் கிறிஸ்து நம்மில் உருவாக் கப்படுகிறார். மக்கள் நம்மிடம் வரும்போது இதுவே நம் மையம் என்று அவர்கள் உணர்கிறார்கள்; தேவனுடைய சுபாவத்தையே

அவர்கள் வாசிக்கிறார்கள். நாம் தேவனுடைய பெரிதாக்கமும், அவருடைய நிறைவும், அவருடைய சரீரமும் ஆகிறோம். இதுவே நம் அனுபவமும் நம் சாட்சியுமாயிருக்க வேண்டும்.

மகிமையினால் நிறைந்த கூடாரம்

நாம் பெட்யை நம் மையமாகக் கொண்டிருக்கும்போது, இந்தப் பெட்டியின் ஊனுருவான கூடாரமாக ஒன்றாகக் கட்டப்படும் போதும், தேவனுடைய மகிமை இறங்கிவந்து கூடாரம் முழுவதை யும் நிரப்புகிறது. நாம் எப்போது இந்த சாட்சியைக் கொண்டிருக்கி றோமோ, எப்போது கிறிஸ்துவைப் பெட்டியாகவும் தேவனின் வெளியரங்கமாகவும் அனுபவிக்கிறோமோ, எப்போது பெட்டியின் வெளியாக்கமாகவும், கிறிஸ்துவின் பெரிதாக்கமாகவும் மாறுகிறோ மோ, அப்போது தான் நாம் தேவனுடைய மகிமையால் நிரப்பப் படுவோம். அதுவரை நிரப்பப்பட முடியாது. கிறிஸ்துவை நாம் இப்படி அனுபவிக்கவேண்டும். அவர் தேவனுடைய வெளியாக்கம்; நாம் அவருடைய வெளியாக்கமாக இருக்கவேண்டும். அப்போது தேவனுடைய மகிமை நம்மை நிரப்பும். நாம் எப்போதெல்லாம் இந்தக் கட்டத்தை எட்டுகிறோமோ அப்போதெல்லாம் தேவனுடைய மகிமை நம்மோடு இருக்கும். நாம் எப்போது கூடுகிறோம் அல்லது எப்படிக் கூடுகிறோம் என்பது ஒரு பொருட்டேயில்லை; சம்பிரதாயமாகக் கூடுகிறோமா சம்பிரதாயமில்லாமல் கூடுகிறோமா என்பது ஒரு பொருட்டல்ல. தேவனுடைய மகிமை நம்மோடு இருக்கும். மகிமை என்றால் என்ன? நாம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி தேவனுடைய பிரசன்னத்தை மனிதன் தன் உணர்வினால் உணர்ந்தறிவதே மகிமை. நீ தேவனுடைய பிரசன்னத்தை எப்போது உணர்கிறாயோ அதுவே மகிமை. இந்த மகிமை எங்கிருக்கிறது? எங்கே பெட்டி மையமாக இருக்கிறதோ, எங்கே கூடாரம் பெட்டியின் விரிவாக்கமாகவும், ஊனுருவாகவும் கட்டியெழுப்பப்படுகிறதோ அங்கே மகிமை இருக்கிறது.

ஒரு மின்சார ஒளிவிளக்கின்மூலம் தேவனுடைய மகிமையை விளக்கிக்காட்டலாம். மின்விளக்கு மின்சாரத்தின் மகிமையை வெளிக்காட்டுவதற்கான ஒரு பாத்திரம். இந்த மின்விளக்கு மின்சாரத்துடன் இணைக்கப்படாவிட்டால், அதற்கு மகிமை இருக்காது. சொல்லப்போனால் அதற்கு அர்த்தமே இல்லை. ஆனால் எல்லாம் ஒழுங்காக இருந்தது, மின்சாரத்தை இயக்கிவிடும்போது மகிமை மின்விளக்கை நிரப்புகிறது. எல்லாரும் அதைப் பார்க்கலாம். எல்லாரும் மகிமையை உணரலாம், அறியலாம்.

நாம் இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவைத் தேவனுடைய வெளி யரங்கமாகக் கொண்டிருந்து, இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவின் வெளியாக்கமாக நாம் இருக்கக்கூடிய நிலையை எட்டும்போது,

நாம் எப்போதெல்லாம் கூடிவருகிறோமோ அப்போதெல்லாம் தேவனுடைய மகிமை நம்மை நிரப்பும். மக்களால் அதை உணரமுடியும். தேவனுடைய மெய்யான வெளியாக்கத்தை அவர்களால் உணரமுடியும். ஏனென்றால், தேவன் நம்மிடையே மகிமைப்படுகிறார். நாம் இந்த நிலையை அடையும்வரை, இப்பேர்ப்பட்ட நிஜம் இருக்காது. கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக எடுத்துக்கொள்ளும்போது இப்பேர்ப்பட்ட மகிமையின் வெளியாக்கம் அங்கில்லை. அனுதின மன்னாவாகவும், ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுகிற கன்மலையாகவும் நாம் அவரை அனுபவித்துமகிழும்போதுகூட ஷெக்கினா மகிமை அங்கில்லை. ஒருநாள் உடன்படிக்கைப் பெட்டி கூடாரத்துக்குள் வைக்கப்படுகிறது, கூடாரம் வெள்ளிப்பாதங்களின்மேல் நிறுத்தப்பட்டு நான்கு அடுக்கு மூடுதிரைகளால் மூடப்படுகிறது. அப்போது தேவனுடைய மகிமை இறங்குகிறது. அதுவரை தேவனுடைய மகிமை இறங்காது.

இது கிறிஸ்துவினுடைய மெய்யான வெளியாக்கத்தின் ஒரு தெளிவான சித்திரம். கிறிஸ்துவின் பெரிதாக்கமே கிறிஸ்துவின் மெய்யான வெளியாக்கம். கிறிஸ்து தேவனுடைய வெளியரங்கமாக நம்முடன் இரண்டறக்கலப்பதே இந்த வெளியாக்கம். இது சின்ன பஸ்கா ஆட்டுக்குட்டியும் இல்லை, அனுதின மன்னாவும், கன்மலையுமான கிறிஸ்துவும் இல்லை; மாறாக நம்மிடையே மையமாக உள்ள தேவனுடைய வெளியரங்கமான கிறிஸ்து, நம்முடன் இரண்டறக்கலந்த கிறிஸ்து, நமக்குள் பெரிதாக்கப்பட்ட கிறிஸ்து, நம்மிடையே பெருகிய கிறிஸ்து. நாமெல்லாரும் கிறிஸ்துவின் சுபாவத்தால் பூர்த்தியாய் நிரப்பப்பட்டு, அவரில் ஒன்றாகச்சேர்த்துக் கட்டியெழுப்பப்பட்டுள்ளோம். கிறிஸ்துவுக்குத் தெய்வீக சுபாவம், மனித சுபாவம் என்ற இரண்டு சுபாவங்கள் உண்டு; நமக்கும் இரண்டு சுபாவங்கள் உண்டு. நாம் மனித சுபாவமுடைய வர்கள், ஆனால் தெய்வீக சுபாவத்தால் மூடப்பட்டிருக்கிறோம். அவர் தேவ-மனிதர். நாம் தேவ-மனிதர்கள். அவர் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்ட பெட்டி, நாம் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்ட பலகைகள். எண்ணிக்கையில் நாம் வித்தியாசமானவர்கள், ஆனால் சுபாவத்தில் நாம் ஒன்றாகவே இருக்கிறோம். கிறிஸ்து தேவனுடைய வெளியரங்கம், பொன்னால் ஒன்றாகச் சேர்த்துக் கூட்டப்பட்டுள்ள இந்தப் பலகைகள் எல்லாம் கிறிஸ்துவின் வெளியாக்கம். நாம் இந்த நிலையை அடையும்போது தேவனுடைய மகிமை இறங்கி வந்து நம்மை நிரப்புகிறது. இதுவே சாட்சி. நாம் வேறொன்றைப் பற்றியும் சாட்சிபகராமல் தேவனுடைய வெளியரங்கமாயிருக்கிற கிறிஸ்துவை, நம் மூலம் பெரிதாக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவை,

அதன்மூலம் தேவனுடைய மகிமையால் நம்மை நிரப்புகிற கிறிஸ்துவைப்பற்றியே சாட்சிபகர்கிறோம்.

இந்தக் கருத்தை விளக்கிக்காட்டுவதற்காக எண்ணற்ற நிகழ்ச்சிகளை என்னால் கூறமுடியும். இப்பேர்ப்பட்ட மகிமையை, அற்புதமான மகிமையை, அநேக வேளைகளில் நான் அனுபவித்திருக்கிறேன். இப்பேர்ப்பட்ட நிலையை அடைந்த ஒரு கூட்டம் விசுவாசிகளுடன் நான் இருந்த அநேக வேளைகளில் மகிமை இறங்கி வந்திருக்கிறது. எல்லாருக்கும் இது தெரியும். கிறிஸ்துவை வெறும் பஸ்கா ஆட்டுக்குட்டியாகவும், மன்னாவாகவும் மட்டும் அனுபவிக்காமல் இப்படி ஒன்றாகச் சேர்ந்து நிறைவாகவும், திடமாகவும் அனுபவிக்கும்போது நம்மிடையே எப்போதும் மகிமை இருக்கும்.

பலிகள்

ஆனால், இதோடு எல்லாம் முடிந்துவிடவில்லை. கதை இதோடு முடியவில்லை. நம்மிடம் இது இருந்தாலும்கூட, அந்த நல்ல தேசத்துக்குள் நுழைவதற்கு நாம் இன்னும் தகுதியுடையவர்களாக வில்லை. இதைவிட இன்னும் அதிகமாக நாம் கொண்டிருக்க வேண்டும். யாத்திராகமம் 12ஆம் அதிகாரத்தில் கிறிஸ்துவை மீட்கும் ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்வதில் நாம் தொடங்கினோம். அதைத் தொடர்ந்து அவரை அனுதின மன்னாவாகவும், ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுகிற கன்மலையாகவும் அனுபவித்துமகிழ்வதென்றால் என்ன என்றும் நாம் ஏற்கெனவே பார்த்தோம். கிறிஸ்துவை உடன்படிக்கைப் பெட்டியாகவும், ஜீவனுள்ள தேவனின் வெளியரங்கமாகவும் அனுபவித்துமகிழ்வதைப்பற்றியும் நாம் பார்த்தோம். தேவனுடைய மகிமை நம்மை நிரப்புமாறு நாம் கிறிஸ்துவின் வெளியாக்கமாகவும், பெரிதாக்கமாகவும் இருப்பதைப்பற்றியும் நாம் பார்த்தோம். யாத்திராகமத்தை நாம் முடித்துவிட்டோம். நாம் இப்போது அடுத்த புத்தகமாகிய லேவியராகமத்துக்கு வருகிறோம்.

கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டபின்பு, பலிகளைப்பற்றிப் பார்க்க வேண்டும். பல வகையான பலிகள் எல்லாவற்றிலும் கிறிஸ்து நமக்கு எவ்வளவு ஐசுவரியமானவராயிருக்கிறார்! ஒருவேளை நீங்கள், "ஓ, கிறிஸ்துவைப்பற்றி ஏற்கெனவே இவ்வளவு பார்த்துவிட்டோம்; இது போதும்!" என்று சொல்லக்கூடும். இல்லை! போதாது. நாம் இன்னும் தொடர்ந்து செல்லவேண்டும். இன்னும் அதிகமான காரியங்கள் இருக்கின்றன. கூடாரம் ஸ்தாபிக்கப்பட்டாயிற்று. ஆனால் நாம் எப்படி இந்தக் கூடாரத்துடன் தொடர்பு கொள்ளக்கூடும்? இதோ இங்கு சாட்சி இருக்கிறது, இங்கு தேவனின் வெளியரங்கம் இருக்கிறது, இங்கு கிறிஸ்துவின்

வெளியாக்கம் இருக்கிறது. ஆனால் இவைகளை நாம் எப்படித் தொடர்புகொள்வது? இந்தச் சாட்சியை நம்மில்தாமே நாம் தொடர்புகொள்ள முடியாது. ஒருபோதும் முடியாது. அங்கு ஒரு நுழைவாயில் இருக்கிறது. ஆனால் நாம் இந்த நுழைவாயிலை நெருங்கு வதற்கும், கூடாரத்தோடு தொடர்புகொள்வதற்கும் ஒரேவொரு நேர்த்தியான வழிதான் உண்டு—பலிகளே அந்த வழி. பலிகளில்லாமல் கூடாரத்தோடு தொடர்புகொண்டால் அதன் விளைவு உடனடி மரணம். இந்தக் கூடாரத்தோடு தொடர்பு கொள்ள வரும்போது, நாம் சில பலிகளைக் கொண்டுவர வேண்டும். ஆ, கிறிஸ்து எவ்வளவு ஐசுவரியமானவர்! ஒருபக்கம் அவர் தேவனின் வெளியரங்கம். இன்னொரு பக்கம் அவரே நாம் தேவனைத் தொடர்புகொள்வதற்கான வழி. அவரே பலிகள். அவரே தேவனுடைய வெளியரங் கத்தைத் தொடர்புகொள்வதற்கான வழிமுறைகளாகவும் இருக்கிறார். அவரே தேவனுடைய வெளியரங்கம். அவரே எல்லாமுமாயிருக்கிறார்.

என்னென்ன பலிகள் இருக்கின்றன? ஐந்துவிதமான பலிகள் உள்ளன. சர்வாங்க தகனபலி, போஜனபலி, சமாதானபலி, பாவநிவாரணபலி, குற்றநிவாரணபலி. இவைகளெல்லாம் கிறிஸ்துவே. எப்போதெல்லாம் நாம் சாட்சியுடன் இடைப்படுகிறோமோ, எப்போதெல்லாம் கிறிஸ்துவின் வெளி யாக்கத்தோடு நாம் தொடர்புகொள்கிறோமோ, அப்போதெல்லாம் நாம் கிறிஸ்துவை இன்னொருதடவை பலியாகச் செலுத்தவேண்டும். நாம் கிறிஸ்துவை இன்னொருதடவைப் பிரயோகிக்கவேண்டும். சிலவேளைகளில் நாம் அவரைக் குற்றநிவாரண பலியாகப் பிரயோகிக்கவேண்டும், சில வேளைகளில் பாவநிவாரண பலியாகப் பிரயோக்கவேண்டும், சிலவேளைகளில் போஜனபலியாகப் பிரயோகிக்கவேண்டும், சிலவேளைகளில் சமாதானபலியாகப் பிரயோகிக்கவேண்டும், சிலவேளைகளில் இன்னும் அதிகமாக சர்வாங்க தகனபலியாகப் பிரயோகிக்க வேண்டும்.

நாம் கிறிஸ்துவைக் குற்றநிவாரண பலியாக எப்போது பிரயோகிக்க வேண்டும்? இது மிகத்தெளிவாக இருக்கிறது. இதை இப்படி விளக்கிக்காட்டலாம். ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் அந்தக் கூட்டத்துக்கு வருகிறீர்கள். கிறிஸ்துவைத் தன் மையமாகக்கொண்ட கூடாரத்தோடு தொடர்புகொள்ள வருகிறீர்கள். ஆனால் நீங்கள் ஏதோதவறு செய்திருக்கிறீர்கள் என்ற உறுத்துதல் உங்கள் இருதயத்தில் இருக்கிறது. ஒருவேளை ஒரு சகோதரனோடு உங்கள் உறவு தவறாக இருக்கக்கூடும். ஆம், இன்று நீங்கள் அவரைப் பார்த்தீர்கள், பார்த்து சிரிக்கவும் செய்தீர்கள். ஆனால் அந்த

வகையான சிரிப்பு வெறுப்பின் வெளியாக்கம். கூடாரத்தோடும், சாட்சியோடும் நீங்கள் தொடர்புகொள்ள வரும்போது பரிசுத்த ஆவி உங்கள் குற்றத்தை உங்களுக்கு உணர்த்துகிறார்—நீ பாவம்செய்திருக்கிறாய். நீ குற்றம்புரிந்திருக்கிறாய். உன் சகோதரனை நேசிக்கவேண்டும் என்று கர்த்தர் உனக்குச் சொல்லியிருக்கிறார்; ஆனால் நீ அவனை மாய்மாலமாக நேசித்தாய். நீ அவனைப் பார்த்து வெறுப்புடன் சிரித்தாய். இவ்வாறு கிறிஸ்துவைக் குற்றநிவாரண பலியாக நீ பிரயோகிக்க வேண்டும்.

அநேக வேளைகளில் நீ உண்மையைச் சொல்லலாம், ஆனால் கொஞ்சம் பொய்யும் கலந்துசொல்வாய். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், உண்மையைக் கொஞ்சம் சேர்த்து பொய்சொல் கிறாய். சிலவேளைகளில் ஒரு சகோதரனிடத்தில் இன்னொரு சகோதரனுடைய நிலையைப்பற்றி நான் கேட்பதுண்டு. அந்தச் சகோதரன் நன்றாக இருக்கிறான் என்று இந்தச் சகோதரன் பதில்சொல்கிறான். ஒரு வகையில், அவனுடைய தொனியி லிருந்தும், ஆவியின் உணர்வின் மூலமும், அது அப்பட்டமான பொய் என்று என்னால் கண்டு பிடிக்கமுடியும். "நீ ஒரு குறிப்பிட்ட சகோதரனை நேசிக்கிறாயா," என்று நான் உன்னைக்கேட்டால், "தேவனுடைய கிருபையால் நான் அவனை நேசிக்கிறேன்," என்று நீ பதில் சொல்லக்கூடும். அப்படியானால் நீ அவனை நேசிக்க வில்லை என்று எனக்குத் தெரியும். "நீ ஒரு நல்ல சகோதரனா?" என்று நான் உன்னைக் கேட்டால், "நான் அவ்வளவு நல்லவன் இல்லை," என்று நீ பதில்சொல்லக்கூடும். நீ மிகவும் தாழ்மையாகவும், நேர்மையாகவும் இருப்பதுபோல் தோன்று கிறது. ஆனால் உன் இருதயத்தில் நீதான் மிகச்சிறந்த சகோதரன் என்று சொல்லிக்கொண்டிருக்கிறாய். ஆ, சகோதர சகோதரிகளே, நாம் எல்லா நேரமும் குற்றங்கள் செய்துகொண்டே இருக்கிறோம்!

நாம் எவ்வளவு சுயநலவாதிகள்! நாம் எந்த அளவுக்கு சுயநல வாதிகள் என்றால், கூட்டங்களுக்கு வரும்போது நாம் மிகச் சிறந்த இருக்கையையே தேர்ந்தெடுக்கிறோம். இங்கு அமெரிக்காவில் உங்களுக்குத் தனித்தனி இருக்கைகள் இருக்கின்றன, எனவே இங்கு சுயநலத்திற்கு இடமில்லை. ஆனால் பார்மோசாவில் நீண்ட பெஞ்சுகள் தான் இருக்கின்றன. வழக்கமான கூட்டங்கள் நடக்கும்போது நான்குபேர் உட்காரக்கூடிய அளவுக்கு அந்த பெஞ்சுகள் நீளமானவை. ஆனால் மாநாடு நடைபெறும்போது அந்த பெஞ்சில் ஐந்துபேர் உட்காருவதற்கு ஏதுவாக எவ்வளவு நெருக்கமாக உட்காரமுடியுமோ அவ்வளவு நெருக்கமாக உட்காரும்படி சகோதர சகோதரிகளை வேண்டிக்கொள்கிறார்கள். ஆனால் சிலர் என்னசெய்வார்கள் என்றால் இதைத்

தெரிந்துகொண்டு காலைப் பரக்கவிரித்து உட்கார்ந்துகொண்டு பெஞ்சிலுள்ள நான்கில் ஒரு பாகத்தை ஆக்கிரமித்துக்கொள்வார்கள்; இவ்வாறு மற்றவர்களைக் குறைவான இடத்திலே உட்காரும் கட்டாயத்திற்கு உட்படுத்துகிறார்கள். கர்த்தருடைய கூடாரத்தையும், சாட்சியையும் தொடர்புகொள்வதற்கு இது எப்பேர்ப்பட்ட வழி! நாம் எவ்வளவு பாவமுள்ளவர்கள்! கர்த்தரை நம் குற்றநிவாரண பலியாக நாம் எவ்வளவாய்ப் பிரயோகிக்க வேண்டியுள்ளது!

சகோதர சகோதரிகளே, கர்த்தருக்குமுன்பு நாம் உண்மையும், நேர்மையுமானவர்களென்றால் நாம் இந்தக் கூடாரத்தோடும், இந்த சாட்சியோடும் தொடர்புகொள்ள வரும்போது நம் பாவத்தன்மையையும்! நம் சகல குற்றங்களையும், மீறுதல்களையும் நாம் உணர்ந்துகொள்ளுமாறு அவருடைய ஆவியானவர் கண்டித்து உணர்த்துவார் என்று நான் விசுவாசிக்கிறேன். நாம் என்ன செய்திருக்கிறோம் என்று நாம் உணர்வோம். "கர்த்தாவே, என்னை மன்னியும். என்னைக்கழுவும். சிலுவையில் நீர் என் மீட்பராக மரித்தீர், எனவே இன்னொருமுறை நான் உம்மை என் குற்ற நிவாரண பலியாகப் பிரயோகிக்கிறேன்," என்று நாம் கூறுவோம். ஆ, இது அற்புதமானது! எப்போதெல்லாம் நாம் கிறிஸ்துவை இப்படிப் பிரயோகிக்கிறோமோ, அப்போதெல்லாம் உடனடியாக நாம் மன்னிக்கப்பட்டுவிட்டோம், கழுவப்பட்டுவிட்டோம் என்று உணர்கிறோம். நம் மனச்சாட்சியில் நமக்குச் சமாதானம் ஏற்படுகிறது, கர்த்தரோடும், அவருடைய சரீரத்தோடும் நமக்கு நல்ல ஐக்கியம் ஏற்படுகிறது. இதுவே கிறிஸ்துவை நம் குற்ற நிவாரண பலியாகப் பிரயோகிப்பதாகும். உங்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் உண்டா?

எப்போதெல்லாம் நான் என்னை ஊழியத்துக்காக ஆயத்தப்படுத்துகிறேனோ, அப்போதெல்லாம், "கர்த்தாவே, என்னை இன்னொருமுறை கழுவிச்சுத்திகரியும்," என்று நான் கர்த்தரிடம் கேட்கவேண்டியுள்ளது. இதற்கு விதிவிலக்கே இல்லை. இல்லையென்றால் என் மனச்சாட்சியில் உள்ள ஆக்கினைத் தீர்ப்பினால் என்னிடம் அபிஷேம் இருக்காது, ஜீவனுள்ள முறையில் என்னால் ஊழியமும் செய்யமுடியாது. என் மனச்சாட்சி பரிசுத்தமாக இருப்பதற்காகவும், நான் சமாதானமாக இருப்பதற்காகவும் எல்லாநேரமும் கிறிஸ்துவை என் குற்ற நிவாரண பலியாகப் பிரயோகிக்கவேண்டும். அப்போதுதான் தேவனுடைய அபிஷேகத்துக்கு உரிமைகோர எனக்குத் தைரியம் இருக்கும். எங்கே இரத்தம் கழுவுகிறதோ அங்கே அபிஷேகம் வரும். தைலத்தின் அபிஷேகம் எப்போதும் இரத்தத்தின் சுத்திகரித்தலைத் தொடர்ந்தே வருகிறது. பரிசுத்த ஆவியின்

கிரியையை, அதாவது அபிஷேகத்தை, உரிமைகோர நமக்கு இரத்தம் என்ற ஆதாரம் இருக்கிறது. அப்போது ஜீவனுள்ள முறையில் நம்மால் ஊழியம்செய்யமுடியும். கிறிஸ்துவை என் குற்றநிவாரண பலியாக நான் பிரயோகிக்கும்போது நான் எவ்வளவு குற்றம்புரிந்திருக்கிறேன் என்பது ஒரு பொருட்டேயில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவரை என் குற்றநிவாரண பலியாக நான் பிரயோகிக்கும்போது நான் எவ்வளவு குற்றம்புரிந்திருந்தாலும் சரி, நான் மன்னிக்கப்பட்டு விடுகிறேன். நான் கழுவிச் சுத்திகரிக்கப்படுகிறேன். எப்போதெல்லாம் நான் ஊழியம்செய்ய வருகிறேனோ, எப்போதெல்லாம் நான் பணிவிடைசெய்ய வருகிறேனோ, இன்னும் சொல்லப்போனால், எப்போதெல்லாம் நான் சில சகோதரர்களைத் தொடர்புகொள்கிறேனோ, அப்போதெல்லாம், "கர்த்தாவே, என்னை மன்னியும், என்னை இன்னொருமுறைக் கழுவிச்சுத்திகரியும், நான் உம்மை என் குற்றநிவாரண பலியாகப் பிரயோகிக்கிறேன்," என்று நான் சொல்லவேண்டியுள்ளது.

சிலவேளைகளில் நாம் குற்றமே செய்யாததுபோல தோன்றுகிறது. கர்த்தர் நம்மைப் பாதுகாப்பதால் நாள் முழுவதும் எந்தத் தவறும் செய்யாமல் அவருடைய பிரசன்னத்தில் நாம் பாதுகாக்கப்படுகிறோம். இது சாத்தியமே, நாம் தவறு செய்திருப்பதாக உணர்வதில்லை. ஆனால் நம்மிடத்தில் ஓர் ஆழமான உணர்ச்சி இருக்கிறது. அது மிகவும் விநோதமானது. "கர்த்தாவே, நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நாள் முழுவதும் நீர் என்னைப் பாதுகாத்தீர்; உம் பாதுகாப்பினால் நான் எந்தத் தவறும் செய்யவில்லை," என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கும் போதே, பாவமான ஏதோவொன்று நமக்குள் இருக்கிறது என்ற ஆழமான உணர்ச்சி நம்மிடம் ஏற்படுகிறது. குற்றங்களைவிட அதிக பாவமான ஏதோவொன்று நமக்குள் இருக்கிறது என்று நாம் ஆழத்தில் உணர்கிறோம். இதுதான் பாவம், இதுதான் பாவ சுபாவம். நாம் இரட்சிக்கப்பட்டிருந்தாலும்கூட, கர்த்தரிடத்திலும் மற்ற எல்லாரிடத்திலும் நமக்கு சமாதானம் இருந்தாலும்கூட நமக்குள் பாவ சுபாவம் இருக்கிறது. இந்தப் பாவம்தான் ரோமர் 5, 6, 7, 8ஆம் அதிகாரங்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. பாவம் நமக்குள் வாசமாயிருக்கிறது. நான் பாவங்கள் என்று பன்மையில் பேசவில்லை; மாறாக பாவத்தைப்பற்றி, பாவம் என்று ஒருமையில் பேசுகிறேன். நான் எதைச் செய்கிறேனோ அதைச் செய்வதை நான் வெறுக்கிறேன். அதைச் செய்வது நான் இல்லை; எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அதைச் செய்கிறது. எனக்குள் பாவம் எனப்படும் தீமையான, ஆனால் வல்லமையுள்ள வாழ்கின்ற ஒரு காரியம்

இருக்கிறது. அது என்னை மேற்கொண்டு ஜெயிக்கமுடியும்; அது என்னைத் தோற்கடிக்க முடியும்; அது என்னை, நான் விரும்பாமல் வெறுக்கிற காரியங்களைச் செய்யவைக்கமுடியும். இது வாழ்கின்ற ஒரு சுபாவம்; இது பொல்லாங்கனின் சுபாவம். இதற்கு ஒரு பலி உண்டு—அது பாவநிவாரண பலி.

ஒரு மனிதன் ஒரு வங்கியைக் கொள்ளையடித்துவிட்டான் என்ற செய்தியை ஒரு நாள் நான் செய்தித்தாளில் வாசித்துக் கொண்டிருந்தேன். உடனே நான், "கர்த்தாவே, உம் இரக்கத்தாலும், கிருபையாலும் நான் இப்பேர்ப்பட்ட காரியத்தை ஒருபோதும் செய்ததேயில்லை. நான் மற்றவர்களை ஒருபோதும் கொள்ளையடித்ததில்லை. எனவே நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன்," என்று சொன்னேன். ஆனால் எனக்குள்ளே மிக ஆழத்தில் நான் இப்படிச் சொல்லக்கூடாது என்ற ஓர் உணர்வு இருந்தது. ஏனென்றால், கொள்ளையடிக்கும் தன்மை என்னில் இருக்கிறது. உண்மையில், கொள்ளையடிக்கும் *செயலை* நான் செய்யவில்லை. ஆனால் கொள்ளையடிக்கும் *சுபாவம்* என்னிடம் இருக்கிறது. ஒருபக்கம், "கர்த்தாவே, நீர் என்னைப் பாதுகாத்ததால் மற்றவர்களைக் கொள்ளையடிக்கும் செயலில் நான் ஈடுபடவில்லை. எனவே நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன்," என்று நான் சொல்லலாம். ஆனால் இன்னொருபக்கம், "கர்த்தாவே, என்னிடம் பாவ சுபாவம் இருக்கிறது, கொள்ளையடிக்கும் சுபாவம் இருக்கிறது. ஆனால், நீரே என் பாவநிவாரண பலி. புறம்பே என்னிடம் எந்தக் குற்றமும் இல்லாவிட்டாலும்கூட, உள்ளே என்னிடம் பாவ சுபாவம் இருக்கிறது. நான் இப்போது உம்மை என் குற்றநிவாரண பலியாகப் பிரயோகிக்க வேண்டிய தேவை இல்லாவிட்டாலும், என் பாவநிவாரண பலியாக நீர் எனக்கு தேவைப்படுகிறீர்," என்று நான் சொல்லவேண்டும்.

சகோதர சகோதரிகளே, விழுந்துபோன சிருஷ்டிகளான நாம் எப்போதெல்லாம் கர்த்தருடைய சாட்சியைத் தொடுகிறோமோ, அப்போதெல்லாம் நாம் கிறிஸ்துவைக் குறைந்த பட்சம் பாவநிவாரண பலியாகவாவது பிரயோகிக்கவேண்டும். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரைத் தொடர்புகொள்வதற்கு பாவநிவாரண பலியைச் செலுத்தவேண்டியிருந்தது என்று நாம் வேதத்தில் பார்க்கிறோம். "நான் எவ்வளவு நல்லவன்" என்று நீ உணர்கிறாய் என்பதைப்பற்றிக் கவலையே இல்லை. நீ இன்னும் பாவ சுபாவத்தில் இருப்பதால், கிறிஸ்துவைப் பாவநிவாரண பலியாக நீ இன்னும் பிரயோகிக்க வேண்டும் என்று நீ உணரவேண்டும்.

கர்த்தர் சமாதான பலியாகவும் இருப்பதால் அவரைத் துதியுங்கள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணப்பொழுதும் நாம் அவரை நம் குற்றநிவாரண பலியாகவும், நம் பாவ நிவாரண

பலியாகவும் அனுபவித்துமகிழும்போது அவரை நம் சமாதான பலியாகவும்கூட நாம் அனுபவித்துமகிழ்கிறோம். அவர்மூலமாகவும், அவரிலும் நாம் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். நம் சகோதர சகோதரிகளிடத்திலும் சமாதானம் பெற்றிருக்கிறோம். கிறிஸ்துவே நம் சமாதானம். அவரைத் தேவனிடத்திலும், மனிதர்களிடத்திலும் நம் சமாதானமாக நாம் அனுபவித்துமகிழ்கிறோம். அவர் அவ்வளவு இனிமையானவர்; அவர் அவ்வளவு திருப்தியாக்குகிறவர்; நாமெல்லாரும் அவரைத் தேவனுடைய பிரசன்னத்தில் அனுபவித்துமகிழலாம்; தேவனோடு சேர்ந்து அனுபவித்துமகிழலாம். இதுவே சமாதான பலியாகிய கிறிஸ்து.

சிலவேளைகளில் நாம் கிறிஸ்துவைப் போஜனபலியாகப் பிரயோகிக்க வேண்டும். அநேக வேளைகளில் நாம் அவரைக் குற்றநிவாரண பலியாகவும், பாவநிவாரண பலியாகவும் பிரயோகித்து அனுபவித்தபின்பு, தொடர்ந்து அவரைப் போஜன பலியாகவும் நாம் பிரயோகிக்கிறோம். நாம் கிறிஸ்துவையே அனுபவித்துமகிழ்கிறோம். அவர் இந்தப் பூமியில் வாழ்ந்த வாழ்க்கையை நாம் அனுபவித்துமகிழ்கிறோம்—அவர் எவ்வளவு பூரணமானவர், எவ்வளவு நேர்த்தியானவர், எவ்வளவு பரிசுத்தமானவர், எவ்வளவு ஆவிக்குரியவர்; நாம் அவரை இப்பேர்ப்பட்டவராக அனுபவித்துமகிழ்கிறோம். "கர்த்தாவே, நாங்கள் உம்மைத் தேவனுக்கு உகந்த போஜன பலியாக அனுபவித்து மகிழ்கிறோம்," என்று நாம் கூறுகிறோம். கிறிஸ்துவைப் போஜன பலியாகச் செலுத்துவதற்கு இதுவே வழி.

அநேக வேளைகளில் கிறிஸ்துவை சர்வாங்க தகனபலி யாகவும் நாம் பிரயோகிக்க வேண்டும். "கர்த்தாவே, நீர் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கும், அவரைத் திருப்திப்படுத்துவதற்கும், முற்றிலும் தேவனுக்காகவே வாழ்வதற்கும் உம்மையே முழுவதும் எவ்வளவாய்ப் பலியாக்கினீர் என்று நான் உணர்கிறேன். நான் உம்மை இப்பேர்ப்பட்டவராக அனுபவித்துமகிழ்கிறேன்," என்று சொல்லவேண்டும். அநேக வேளைகளில் கர்த்தருடைய பந்தியில் நமக்கு இப்பேர்ப்பட்ட அனுபவம் ஏற்படுகிறது. நாம் கிறிஸ்துவைப் போஜன பலியாகவும் சர்வாங்க தகனபலியாகவும் பிரயோகிக்கிறோம். கர்த்தர் இங்கு வாழ்ந்த அவருடைய அற்புதமான வாழ்க்கையைப் பார்க்கிறோம். பன்னிரண்டு வயதுடையவராயிருந்தபோது அவரைப் பார்க்கிறோம். நாசரேத்தில் அந்த ஏழைக் குடும்பத்தில் தச்சனாக அவரைப் பார்க்கிறோம். தேவனுக்காக அவர் ஊழியம்செய்ய வந்தபோது எப்படிச் செயல்பட்டார் என்றும், மற்றவர்களுக்கு முன்பாக எப்படி நடந்துகொண்டார் என்றும், அவர்களை அவர் எவ்வளவு அன்பாக, எவ்வளவு சாந்தமாக, எவ்வளவு தாழ்மையாக, எவ்வளவு

பரிசுத்தமாக நடத்தினார் என்றும் நாம் பார்க்கிறோம். நாம் அவரைத் தேவனுடைய திருப்திக்காக நம் அனுபவமகிழ்ச்சியாகவும், நம் போஜன பலியாகவும், நம் சர்வாங்க தகன பலியாகவும் பிரயோகிக்கிறோம். "நீர் இந்தப் பூமியில் முற்றிலும் தேவனுக்காகவே வாழ்ந்தீர். நீரே சர்வாங்க தகனபலி. இங்கு உம் பந்தியில் மட்டும் இல்லை, நாள் முழுவதும் உம்மை என் அனுபவ மகிழ்ச்சியாகவும், தேவனுடைய திருப்தியாகவும் பிரயோகிக் கிறேன். சிலசமயம் காலையில், சிலசமயம் மாலையில் நான் உம்மை என் போஜன பலியாகவும், சர்வாங்க தகன பலியாகவும் அனுபவித்துமகிழ்கிறேன்," என்று நாம் கர்த்தரிடத்தில் சொல்லலாம்.

அவரே நாம் அனுபவித்துமகிழ்வதற்கான எல்லாவிதமான பலிகளாகவும் இருப்பதற்காகக் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நீங்களும் நானும் கிறிஸ்துவை எவ்வளவு அதிகமாகக் குற்றநிவாரண பலியாகவும், பாவநிவாரண பலியாகவும், சமாதான பலியாகவும், போஜன பலியாகவும், சர்வாங்க தகனபலியாகவும் பிரயோகிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கூடாரத்தில் இருப்பதாக உணர்கிறோம். இப்படி நாம் கிறிஸ்துவை எவ்வளவு அதிகமாகப் பிரயோகிக்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் தேவனுடைய மகிமையான பிரசன்னத்தில் இருப்பதாக உணர்கிறோம். இது வெறும் உபதேசமல்ல; மாறாக மிகவும் நிஜமான ஒன்று. இதை நிரூபிக்கமுடியும். இதை அனுபவிக்கமுடியும். நமக்கு இத்தகைய அனுபவங்கள் இல்லையென்றால், நம்மிடம் ஏதோ தவறு இருக்கிறது.

கிறிஸ்துவை நாம் எவ்வளவு அதிகமாக அனுபவிக்க வேண்டியிருக்கிறது என்று இப்போது நீங்கள் பார்க்கிறீர்கள். நாம் அவரைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக, மன்னாவாக, கன்மலையாக, பெட்டியை உள்ளடக்கிய கூடாரமாக, குற்றநிவாரண பலியாக, பாவநிவாரண பலியாக, சமாதான பலியாக, போஜன பலியாக, சர்வாங்க தகனபலியாக அனுபவிக்க வேண்டும். இப்படி நாம் கிறிஸ்துவை மணிதோறும், கணந்தோறும் அனுபவித்து பிரயோகிக்கவேண்டும். அப்போது நாம் முன்னேறிச்சென்று சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைச் சுதந்தரித்துக்கொள்வதற்குத் தகுதியடைவோம், திறமையடைவோம், பலப்படுவோம். இந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கும் காரியம் திடீரென்று அல்லது திடுதிப்பென்று உடனடியாக நடக்கிற ஒரு காரியம் இல்லை. இது படிப்படியாக நடைபெறுகிற ஒரு வழிமுறை. முதலாவது நாம் அவரை ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்கிறோம்; பின்பு நாம் அவரை மன்னாவாக, கன்மலையாக, பெட்டியையுடைய கூடாரமாக அனுபவித்துமகிழவேண்டும்; பின்பு நாள்தோறும்,

நொடிதோறும், கணந்தோறும், நாம் அவரைப் பல்வேறு வகையான பலிகளாக அனுபவித்துமகிழவேண்டும். இதன்பிறகு, சகலத்தையும் உள்ளடக்கிய அந்தத் தேசத்தைச் சுதந்தரிக்கத் தகுதியும், முதிர்ச்சியும் உடையவர்களாக நாம் இருப்போம். ஆனால், இதைத் தொடர்ந்து இன்னும் அதிகமான காரியங்கள் இருக்கின்றன.

ஆசாரியத்துவம்

லேவியராகமத்தின் முதல் பகுதியில் பலிகளை அடுத்து, ஆசாரியத்துவம் அறிமுகம்செய்யப்படுகிறது. ஆரோனும் அவனுடைய குமாரர்களும் தேவனுக்கு ஆசாரியர்களாகப் பணிவிடைசெய்வதற்கு அலங்கரித்து, உடுத்தி, தகுதிப்படுத்தப்பட்டார்கள். நாம் கிறிஸ்துவை நம் ஆரோனாக, கிறிஸ்துவை நம் பிரதான ஆசாரியராகக் கொண்டிருக்க வேண்டும். நம்மிடம் இது இருக்கவேண்டும். நாமெல்லாரும் அவருடைய குமாரர்களாக, அதாவது கர்த்தருக்குப் பணிவிடைசெய்யும் ஆசாரியர்களாக இருக்கவேண்டும். இது சற்று அதிகமாக அனுபவித்துமகிழ்வதாகும். சற்று அதிகமாக அனுபவிப்பதும், பிரயோகிப்பதுமாகும். நீங்கள் கர்த்தரை அனுபவித்துமகிழ்வதற்காகக் கூட்டத்துக்கு வரும்போது, நீங்கள் பணிவிடைசெய்கிறீர்களா, நீங்கள் செயல்படுகிறீர்களா, நீங்கள் ஊழியம் செய்கிறீர்களா? "சகோதரரே, நான் ஊழியக்காரன் இல்லை; எனவே நான் ஊழியம்செய்வதில்லை. நீங்கள்தான் ஊழியக்காரர்," என்று நீங்கள் ஒருவேளை பதிலளிக்கக்கூடும். நீங்கள், "நான் ஊழியக்காரன் இல்லை," என்று சொன்னால், நான் "நானும் ஊழியக்காரன் இல்லை," என்று சொல்வேன். நீ என்னவாக இருக்கிறாயோ நானும் அவ்வாறே இருக்கிறேன். நீ ஒரு சகோதரன் என்றால் நானும் ஒரு சகோதரன்தான். ஆனால் சகோதர சகோதரிகளே, நீங்கள் ஊழியம்செய்ய வேண்டும் என்று உணரவேண்டும். நாமெல்லாரும் ஊழியம்செய்ய வேண்டும். நீங்கள் எதை ஊழியம்செய்யவேண்டும்? அது உங்களுக்குத் தெரியும். நீங்கள் கர்த்தருக்கு உண்மையும் உத்தமமுமாக இருந்தால், நீங்கள் எதைப் பரிமாறி ஊழியஞ்செய்யவேண்டும் என்று நீங்கள் அறிவீர்கள். நீ ஓர் ஆசாரியன்.

நீங்கள் ஆசாரியர்களாகப் பணிவிடைசெய்யாவிட்டால் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை உங்களால் ஒருபோதும் சுதந்தரிக்க முடியாது. அந்த நல்ல தேசத்துக்குள் நுழைய வேண்டுமென்றால் நீ ஆசாரியனாக இருக்க வேண்டும். தேசத்தில் நுழைவதற்கான நுழைவுரிமை கிடைப்பதற்குமுன் கர்த்தருடைய பிள்ளைகளிடையே ஓர் ஆசாரியக் கூட்டம் இருக்கவேண்டும். இஸ்ரவேல் மக்களில் அநேகர் ஆசாரியர்கள் இல்லையே என்று

ஒருவேளை நீங்கள் சொல்லக் கூடும். ஆனால் அவர்களெல்லாரும் ஆசாரியக்கூட்டத்தால் பயனடைந்தார்கள் என்று நீங்கள் நிச்சயமாக ஒத்துக் கொள்ளத்தான்செய்வீர்கள். எப்படியோ அவர்களிடையே ஓர் ஆசாரியக்கூட்டம் இருந்தது; நம்மிடையேயும் ஓர் ஆசாரியக் கூட்டம் இருக்கவேண்டும்.

ஆசாரியன் என்றால் என்ன? இன்று ஊழியக்காரர்கள், பாஸ்டர்கள், பிரசங்கிமார்கள் என்றழைக்கப்படுகிறவர்கள்தாம் தேவனுடைய பிள்ளைகளிடையே இருக்கும் ஆசாரியர்கள் என்று தயவுசெய்து எண்ணிவிடாதீர்கள். அவர்களில் அநேகர் உண்மையான ஆசாரியர்கள் இல்லை என்று நான் நினைக்கிறேன். இன்று ஆசாரியர்கள் யார்? கிறிஸ்துவை வெளியரங்க மாக்குவதற்குக் கிறிஸ்துவாலும், கிறிஸ்துவிலும் வாழ்கிறவர்களே ஆசாரியர்கள். நீ என்ன செய்கிறாய், அல்லது உன் வேலை என்ன என்பது ஒரு பொருட்டல்ல. நீ பள்ளி ஆசிரியராகவோ, தொழிலதிபராகவோ, மருத்துவராகவோ, தாதியாகவோ, மாணவனாகவோ அல்லது சாதாரணக் குடும்பப் பெண்ணாகவோ இருக்கலாம். ஆனால் அத்தியாவசியமான அடிப்படைக் காரியம் என்னவென்றால் நீ கிறிஸ்துவில் வாழ்கிறாய், கிறிஸ்துவில் நடக்கிறாய், கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறாய். கிறிஸ்துவை அனுபவிக்கிறாய், உன் முழு வாழ்க்கைக்கும் கிறிஸ்துவைப் பிரயோகிக்கிறாய். இதுவே உன்னை ஆசாரியனாக்குகிறது. ஆரோனின் குமாரர்கள் மோசேயிடம் கொண்டுவரப்பட்டதை நினைத்துப்பாருங்கள். மோசே என்னசெய்தார்? அவர்களுடைய வஸ்திரங்களைக் கழற்றிவிட்டு, ஆசாரியர்களுக்குரிய அங்கிகளை அவர்களுக்கு உடுத்தினார். ஆசாரியர்களுக்குரிய அங்கிகள் என்றால் என்ன? கிறிஸ்துவை வெளியரங்கமாக்குவதே. உங்கள்மேல் வெளியரங்கமாகும் கிறிஸ்துவே ஆசாரியனின் அங்கி. ஆசாரியர்கள் எதைச் சாப்பிடுகிறார்களோ அது கிறிஸ்துவைக் குறிக்கிறது, அவர்கள் எதை உடுத்துகிறார்களோ அது கிறிஸ்துவைக் குறிக்கிறது, அவர்களுடைய முழு வாழ்க்கையும் கிறிஸ்துவைக் குறிக்கிறது, ஆசாரியனாக இருப்பதற்கு நீ கிறிஸ்துவுக்குள் வாழவேண்டும், கிறிஸ்துவைக் கொண்டு பணிவிடைசெய்யவேண்டும். நீ பள்ளியில் பாடம் கற்பிக்கும் போது, கிறிஸ்துவுக்குள் கற்பிக்கிறாய்; நீ வியாபாரம் செய்யும் போது, கிறிஸ்துவுக்குள் வியாபாரம் செய்கிறாய்; நீ உன் வீட்டைப் பராமரிக்கும்போது, அதைக் கிறிஸ்துவுக்குள் செய்கிறாய். நீ ஆசாரியனின் அங்கியில் இருக்கிறாய்.

சமீபத்தில் ஒரு சகோதரி தூரமான ஒரு நகரத்திலிருந்து எங்களைப் பார்க்க வந்தாள். அவள் தான் வந்துசேரும் நேரத்தையும், வரக்கூடிய விமானத்தின் எண்ணையும் குறிப்பிட்டு

எங்களுக்கு ஒரு தந்தி அனுப்பினாள். ஆனால் எங்களில் யாருக்கும் அவளைத் தெரியாது. நாங்கள் யாருமே அதற்குமுன் அவளைச் சந்தித்ததில்லை. அது விடுமுறை காலமானதால் அது சூழ்நிலையை இன்னும் கொஞ்சம் சிக்கலாக்கிற்று. எனவே விமான நிலையத்தில் பிரயாணிகளின் கூட்ட நெரிசல் அதிகமாக இருந்தது. சகோதரர்கள் இந்த விஷயத்தைப்பற்றி அதிகக் கவலைப்பட்டார்கள். என்னிடம் வந்து, "சகோதரரே, அந்தச் சகோதரியை நம்மால் எப்படி அடையாளம் காணமுடியும்? அவளால் நம்மை எப்படி அடையாளம் காணமுடியும்?" என்று கேட்டார்கள். "சமாதானமாக இருங்கள், நிச்சயம் சில அடையாளங்கள் இருக்கும். நாம் அவளைக் கண்டுகொள்வோம்," என்று நான் சொன்னேன். விமானம் வந்துசேர்ந்த பின்பு, பயணிகள் விமானத்திலிருந்து இறங்கத் தொடங்கினார்கள். நாங்கள் நுழைவாயிலில் காத்துக் கொண்டிருந்தோம். அநேகப் பெண்மணிகள் கடந்துசென்றார்கள்...இன்னும் பலரும் கடந்துசென்றார்கள். அவர்கள் எங்களைக் கடந்துசென்றுகொண்டிருக்கையில் நான் ஒரு சகோதரனிடம், "இது அவளில்லை...இதுவும் இல்லை... இல்லை...இதுவும் இல்லை. இல்லை," என்று சொன்னேன். இன்னொரு பெண்மணி வந்துகொண்டிருந்தாள், உடனே நான் அந்தச் சகோதரனிடம், "இதுதான் அவள். இதுதான் அவளாக இருக்கவேண்டும். முன்னேபோய் அவளிடம் பேசுங்கள்," என்று சொன்னேன், இந்தப் பெண்மணி எங்களைப் பார்த்து புன்னகைசெய்தாள், அவள்தான் நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பெண்மணி. அவளுடைய ஆசாரிய அங்கியிலிருந்து நான் அவளை அடையாளம் கண்டுகொண்டேன்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன்பு இன்னொரு சகோதரி ஷங்காயிலிருந்து படகுமூலம் வடசீனாவிலிருந்த எங்களைச் சந்திக்க வந்தாள். அவள் பயணம்செய்த கப்பல் துறை முகத்தில் கப்பல் நிறுத்தும் இடத்திற்கு வரமுடியவில்லை. எனவே சிறிய படகுகள் கப்பலுக்குச் சென்று விருந்தினர்களைக் கரைக்குக் கொண்டுவர வேண்டியிருந்தது. திரளான நண்பர்களும், உறவினர்களும் கரையில் நின்று சத்தமிட்டபடி அவர்களுக்குத் தெரிந்தவர்களை வரவேற்றுக்கொண்டிருந்தார்கள். ஆனால், நாங்கள் இந்தச் சகோதரியை ஒருபோதும் பார்த்ததேயில்லை; எங்களுக்கு அந்தச் சகோதரியைத் தெரியாது. வந்து போகக்கூடிய எல்லாரையும் பார்த்துக்கொண்டேயிருந்தோம். கரைக்கு வந்து சேர்ந்த ஒவ்வொரு படகையும் உன்னிப்பாய்ப் பார்த்துத் தேடினோம். ஆனால் நாங்கள் தேடிக்கொண்டிருந்த சகோதரியை எங்களால் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. கடைசியாக, ஒரு பெண்மணியைச் சுமந்தபடி ஒரு படகு வந்தது. அவள் எங்கள் கண்ணுக் கெட்டிய

தூரத்துக்கு வந்தபோது, 'இவள்தான் அந்தப் பெண்மணி' என்று நாங்களெல்லாரும் சொன்னோம். நாங்கள் சொன்னது சரிதான். எங்களால் எப்படி இதைச் சொல்லமுடிந்தது? ஒரு குறிப்பிட்ட வகையான வெளியரங்கத்தினால் தான். என்னால் அந்த அடையாளங்களை விளக்கமுடியாது. ஆனால் அவைகளை என்னால் உணரமுடியும், அவைகளை என்னால் அறியமுடியும்.

இதுபோன்ற அநேக நிகழ்ச்சிகள் உள்ளன. நீ ஓர் ஆசாரியன் என்றால் உன்னைப்பற்றி ஏதோவொன்று இருக்கிறது; இது சாதாரணமானது இல்லை; உன்னிடம் தனித்தன்மையாய்ந்த, வேறுபடுத்திக்காட்டுகிற, தெளிவாகத் தெரிகிற குணாம்சங்கள் இருக்கின்றன. நீ கிறிஸ்துவைத் தரித்திருக்கிறாய், நீ கிறிஸ்துவை உடுத்தியிருக்கிறாய், நீ கிறிஸ்துவால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறாய்; கிறிஸ்துவே உன் அங்கி. கிறிஸ்துவை நீ இப்படியாக அனுபவிக்கவேண்டும்; அப்போது நீ ஆசாரியனாக இருப்பாய். நீ எதைக் கையாண்டாலும் அதைக் கிறிஸ்துவைக்கொண்டு கையாளுவாய்; நீ எதைச் செய்தாலும் அதைக் கிறிஸ்துவைக் கொண்டு செய்வாய். நீ கிறிஸ்துவை வெளியரங்கமாக்குவாய். நீ ஒரு சகோதரியென்றால், நாள் முழுவதும் கிறிஸ்துவைக் கையாண்டால், கர்த்தருக்கு நீ எவ்வளவாய் ஊழியம்செய்யமுடியும் என்று சிந்தித்துப்பார். மக்கள் கிறிஸ்துவை அறிவதற்கு நீ அவர்களுக்கு உதவிசெய்வாய்; நீ உன் குடும்பத்துக்கு கிறிஸ்துவைப் பரிமாறுவாய். நீ கூட்டங்களுக்கு வரும்போது உன்னால் அநேகக் காரியங்களைப் பரிமாறமுடியும். இருக்கைகளை நீ சுத்தப்படுத்துகிறாயோ அல்லது ஒழுங்குபடுத்துகிறாயோ அல்லது கூட்டத்துக்காக ஜெபிப்பதற்கு இரண்டு அல்லது மூன்று சகோதரிகளுடன் சேர்ந்து முழங்கால்படியிடுகிறாயோ— இவைகளெல்லாம் ஊழியமே, கிறிஸ்துவுக்குள்ளும், கிறிஸ்துவைக் கொண்டும், கிறிஸ்துவாலும் நிறைவேற்றுகிற ஊழியம், விசேஷக் கூட்டங்களுக்கு வரப்போகிற விருந்தினர்களுக்காக ஒருவேளை நீ கொஞ்சம் உணவைத் தயாரிக்கலாம். அதுவும்கூட ஆவியானவரால் நிறைந்த ஊழியமே. பந்தி பரிமாறுகிறவர்கள் பரிசுத்த ஆவியால் நிறைந்திருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் கூறப்பட்டிருக்கிறது. உணவு தயாரிக்கிற விஷயத்தைக் கையாளுவது சுலபமான காரியம் இல்லை. கிறிஸ்துவைப் பிரயோகிப்பதற்கும், கிறிஸ்துவைப் பரிமாறுவதற்கும் இது ஒரு மிக அருமையான வாய்ப்பாகும்.

ஆசாரியர்கள் நிறைவேற்றுவதற்கு அநேக ஊழியங்கள் உள்ளன. நீ வந்து சாதாரணமாகக் கூட்டத்தில் உட்காருகிறாய்; கூட்டத்தில் வெளிப்படையாக ஒரு சுறுசுறுப்பான பங்கு எடுக்காமல் இருந்தாலும்கூட ஒவ்வொரு கணப்பொழுதும்

வல்லமையான மேலோங்கிநிற்கும் ஓர் ஊழியத்தை நீ செய்ய முடியும். 1946இலிருந்து 1948வரையிலான காலக்கட்டத்தில் ஷங்காயில் பெரும்பாலான செய்திகளை நான் கொடுத்தேன். நான் செய்திகளை பேசும்போதெல்லாம் சில சகோதர சகோதரிகள்—கொஞ்சப்பேரல்ல, ஒருவேளை நூறு அல்லது இருநூறுபேர் அங்கிருக்கலாம்—உட்கார்ந்து ஊழியம்செய்துகொண்டிருந்தார்கள் என்று என்னால் கூறமுடியும். அவர்கள் தங்கள் ஆவியின்மூலம், ஜெபிக்கும் ஆவியின்மூலம், பெற்றுக்கொள்ளும் ஆவியின்மூலம் ஊழியம் செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் ஆவியினால் என் செய்தியை வெளியே கொண்டுவருவதற்கு அங்கு உட்கார்ந்திருந்தார்கள். அதுதான் அவர்கள் ஊழியம், அது மிகவும் வீரியமுள்ளதாகவும், மதிப்புமிக்கதாகவும் இருந்தது. அந்தக் கூடுமிடத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்தார்கள். ஆனால் அவர்கள் என் ஆதரவாளர்கள், என் உதவியாளர்கள், அவர்கள் என்னோடு அவ்வளவாய் ஒன்றித்திருந்தார்கள். அவர்கள் இல்லாமல் என்னால் இவ்வளவு விடுதலையோடு ஜீவனுள்ள முறையில் ஊழியஞ்செய்திருக்கமுடியாது.

ஒருமுறை அவிசுவாசிகளுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு சில சிறப்புக் கூட்டங்களை ஒழுங்குசெய்தோம். இரட்சிக்கப்படாத தங்கள் நண்பர்களுக்காக இருக்கைகளை ஒதுக்கிவைத்துவிடுவது மிக நல்லது என்று எல்லா சகோதர சகோதரிகளும் கருதினார்கள்; எனவே, அவர்கள் இன்னோர் அறைக்குச் சென்றுவிட்டார்கள். இதனால் அரங்கம் முழுவதும், குறிப்பாக முன்வரிசையில், அவிசுவாசிகளே நிரம்பியிருந் தார்கள். ஊழியஞ்செய்வதற்கு நான் எழுந்தபோது முழு அரங்கத்திலும் ஒரு கண்ணோட்டமிட்டேன். அப்படிப் பார்த்தபோது எனக்கு ஒரு பெரிய அதிர்ச்சி உண்டாயிற்று. ஓர் ஆதரவாளர்கூட, ஓர் உதவியாளர்கூட, அங்கு இல்லை. நான் மட்டுமே, நானாகவே, யுத்தம்செய்ய வேண்டியிருந்தது. அந்த அவிசுவாசிகள், பிசாசின் குமாரர்கள், எல்லாருடைய கனமும் அளவுக்கதிகமான சுமையாயிருந்தது. அவைகள் என்னைச் சுற்றிக் சூழ்ந்துகொண்டன, அவர்களுடைய பாவங்கள் எனக்கெதிராக எழுந்தன. அடுத்த நாள் சகோதர சகோதரிகளிடம், "கூடாது, கூடாது, நீங்கள் ஒருபோதும் அப்படிச் செய்யக் கூடாது! குறைந்தது இருநூறுபேராவது எனக்கு ஆதரவளிக்க அங்கு இருக்கவேண்டும். தன்னந்தனியாக நூற்றுக்கணக்கான மக்களுடன் என்னால் யுத்தம்செய்யமுடியாது. நீங்கள் திரும்பி வரவேண்டும். ஜெபிப்பதற்கும், பெற்றுக்கொள்வதற்கும் எல்லா மக்களோடும் சேர்ந்து நீங்களும் உட்காரவேண்டும்," என்று நான் கூறினேன்.

இப்பேர்ப்பட்ட ஆதரவளிக்கும் ஆவி இருக்கும்போது என்னே

தைரியமும், என்னே அதிகாரமும் இருக்கின்றன! எல்லாரும் கீழ்ப்படுத்தப்படுகிறார்கள், என்னால் இல்லை, மாறாக சரீரத்தினால், ஆசாரியத்துவத்தினால். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு தனியாக நிற்கவில்லை. மாறாக பதினொருவரோடுங்கூட நின்றார். அவருடைய தைரியத்தைப் பாருங்கள். அவருடைய அதிகாரத்தை பாருங்கள். மேலோங்கி நிற்கும் விளைவுகளைப் பாருங்கள்.

ஒரு வருடம் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட ஒரு பெரிய மாநாட்டை போர்மோசாவில் நடத்தினோம். அந்தக் கூட்டத்தை நான் நேராகப் பார்த்தபோது ஒரு பெரிய பாரம் என்மேல் வந்தது. ஆழமான பாரம் உண்டாயிற்று. "நீங்களெல்லாரும் என்னோடு மேடைக்கு வரவேண்டும்," என்று மூப்பர்களிடம் சொன்னேன். இவ்வாறு நாங்கள் கூட்டங்களுக்கு வந்தபோது அவர்களெல்லாரும் மேடைக்கு வந்தார்கள். செய்திகளைக் கொடுப்பதற்காக நான் எழுந்து நின்றபோது, "ஆமென்! ஆமென்!" என்ற உரத்த முழக்கம் அங்கு உண்டாயிற்று. அவர்கள் எனக்கு ஆதரவளித்தார்கள், அவர்கள் எனக்கு உதவிசெய்தார்கள். எனக்கு மிகுந்த தைரியம் உண்டாயிற்று, முழுக் கூட்டத்தையும் கீழ்ப்படுத்தி ஜெயிக்கமுடிந்தது. இப்படிப்பட்ட சுற்றுச்சூழல் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும், கர்த்தர்மேலுள்ள அன்பையும் கிளர்ந்தெழுப்பண்ணுகிறது. இதுவே ஊழியம். சகோதர சகோதரிகளே, சத்துருவை நம்மால் ஒருபோதும் முட்டாளாக்க முடியாது. நம் மனச்சாட்சியை நம்மால் ஒருபோதும் முட்டாளாக்க முடியாது. கர்த்தரை நம்மால் ஒருபோதும் முட்டாளாக்க முடியாது. மேடையிலிருந்த அந்த மூப்பர்கள் ஆசாரியர்களாக இல்லாதிருந்தால், அவர்கள் உலகப்பிரகாரமான மக்களாக இருந்திருந்தால், இப்படிப்பட்ட முறையில் அவர்கள், "ஆமென்" என்று கூறுவது சாத்தியமாக இருந்திருக்காது. அவர்கள் மனச்சாட்சியில் சமாதானம் இருந்திருக்காது. மென்மையாகவும், பலவீனமாகவும் அவர்கள் "ஆமென்" சொல்லியிருக்கக்கூடும். ஆனால் அது அர்த்தமற்றது; அதில் எந்த ஆதரவும் இல்லை. ஆனால் அவர்கள் கர்த்தரைக் கிறிஸ்துவில் சேவித்துக்கொண்டிருந்தார்கள்; அவர்கள் கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு, கிறிஸ்துவால் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஆகையால் அவர்களிடம் மிகுந்த தைரியமிருந்தது. ஒரு சகோதரன் ஊழியஞ்செய்வதற்கான சந்தர்ப்பம் வந்தபோது, "நாமும் அவரோடுகூட ஒரு சேனையாக மேடைக்குச் செல்வோம்," என்று அவர்களால் சொல்லமுடிந்தது. வெறுமனே ஒரேவொரு சகோதரன் மட்டும் ஊழியஞ்செய்யவில்லை. மாறாக, ஒரு குழுவே, ஒரு சேனையே ஊழியஞ்செய்தது. அவர் பேசியபோது அவர்களெல்லாரும் பலமான ஆவியுடன் "ஆமென்" சொல்லி எதிரியை விரட்டினார்கள். எதிரிக்கு அங்கு

இடமில்லை, அங்கிருந்த மக்கள் திரளையும் கர்த்தர் வென்று கைப்பற்றிக்கொண்டார். உங்களுக்கு இப்படிப்பட்ட அனுபவம் இருந்தால், அல்லது நீங்கள் இப்படிப்பட்ட கூட்டத்தில் இருந்திருந்தால் நான் சொல்வது நிஜம் என்று உங்களால் சாட்சிபகர முடியும்.

சகோதர சகோதரிகளே, இதுதான் உண்மையான ஊழியம். இவைகளெல்லாம் நீங்கள் எவ்வளவாய்க் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறீர்கள், கிறிஸ்துவுக்குள் நடக்கிறீர்கள், கிறிஸ்துவை உங்கள் உணவாக, உங்கள் உடையாக, உங்கள் எல்லாமுமாக எடுக்கிறீர்கள் என்பதையே சார்ந்திருக்கிறது.

நாம் இப்போது லேவியராகமத்தைப் பார்த்து முடித்து விட்டோம். கிறிஸ்துவுக்குரிய எத்தனை காரியங்களை நாம் அனுபவிக்க வேண்டியிருக்கிறது! அவர் எவ்வளவு ஐசுவரிய மானவர்; எவ்வளவு அற்புதமான ஐசுவரியசம்பன்னர்! அவரை மேன்மேலும் நாம் அனுபவிக்கவேண்டும். நம்மிடம் இப்போது கூடாரத்தையுடைய பெட்டி மட்டும் இல்லை, பலிகளும் ஆசாரியக்கூட்டமும்கூட இருக்கின்றன. நல்ல தேசத்துக்குள் நுழைவதற்கு நாம் அதிகத் தகுதியுடையவர்க ளாக இருக்கிறோம். ஆனால் நாம் பெருமைப்படக்கூடாது. இவைகளெல்லாவற்றையும் நாம் ஒவ்வொரு நாளும் நடைமுறைப் பயிற்சிசெய்யவேண்டும். நிஜமாக அவைகளை அனுபவிக்கவேண்டும். கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக, பஸ்கா விருந்தாக, அனுதின மன்னாவாக, ஜீவத்தண்ணீர் ஓடும் கன்மலையாக, கூடாரத்தோடுகூடிய பெட்டியாக, பலவிதமான பலிகளாக, மெய்யான ஆசாரியக் கூட்டத்தின் பணிமுட்டுகளாக, நிரப்பீடாக அனுபவித்துமகிழ்வதின் மூலம் அந்த நல்ல தேசத்துக்குள் நுழைவதற்கு நாம் தகுதி பெறுகிறோம்.

அதிகாரம் பதினொன்று

தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி

III. கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகள்மூலம்

வேத வாசிப்பு: யாத். 40:36-38; லேவி. 8:7, 8, 10-12, 30; 20:26; 26:46

எண்ணாகமத்திற்குப் போவதற்குமுன் யாத்திராகமம், லேவியராகமம் ஆகிய இரண்டு புத்தகங்களிலும் நாம் இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பார்க்கவேண்டும். கிறிஸ் துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்வதில் தொடங்கி, அவரை அனுபவித்துமகிழ்வதில் படிப்படியாக அதிகரித்துக்கொண்டு போவதே நல்ல தேசத்துக்குள் நுழைவதற்கான வழி என்று நாம் பார்த்தோம். ஆனால் நம் அனுபவத்தில் அதைவிட நமக்கு இன்னும் அதிக இன்றியமையாத ஒரு காரியம் இருக்கிறது; அதுவே கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகள், கட்டுப்படுத்தும் அம்சங்கள். தேசத்தைச் சுதந்தரிப்பது, அதாவது சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் நுழைவது—இதை ஒரு தனி மனிதன் சாதிக்கமுடியாது. மாறாக ஒரு கூட்டம் மக்களே இதைச் சாதிக்கமுடியும். இது மிகத்தெளிவாக இருக்கிறது. எனினும், மக்கள் கூட்டம் ஒன்றைக் கட்டுப்படுத்துவதற்கு சில அடிப்படைக் கோட்பாடுகள் தேவை. அங்கு ஒழுங்குக் கிரமம் இருக்கவேண்டும். ஒரு கூட்டு சரீரத்தில், காரியங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். கட்டுப்படுத்துவதற்கு எந்த அடிப்படைக் கோட்பாடும் இல்லையென்றால் ஒழுங்கீனமும், குழப்பமுமே ஆளுகைசெய்யும். ஒழுங்கீனமும், குழப்பமும் எதிரியோடு உறவு உடையவைகள். நம்மிடம் ஒழுங்கு இல்லையென்றால், நாம் நாசமாகி, சாத்தானுடன் இணைக்கப் பட்டுவிட்டோம் என்று பொருள். எனவே, நாம் நல்ல தேசத் துக்குள் நுழைவது சாத்தியம் இல்லை. கர்த்தருடைய பிள்ளைக ளிடையே ஒழுங்கைப் பராமரிப்பதற்கு, கட்டுப்படுத்தும் சில அடிப்படைக் கோட்பாடுகள், கட்டுப்படுத்தும் சில அம்சங்கள், இருக்கவேண்டும். யாத்திராகமம், லேவியராகமம் ஆகிய இரண்டு புத்தகங்களிலும் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதி லுள்ள பல்வேறு காரியங்களை மட்டும் நாம் பார்க்கவில்லை; மாறாக, தேவன் தம் மக்களிடையில் நியமித்திருந்த கட்டுப்படுத்தும்

அடிப்படைக் கோட்பாடுகளையும் பார்க்கிறோம். குறைந்தது மூன்று முக்கியமான, இன்றியமையாத கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகள் அல்லது அம்சங்கள் இருக்கின்றன.

கர்த்தருடைய பிரசன்னம்

மேக ஸ்தம்பத்திலும், அக்கினி ஸ்தம்பத்திலும் உள்ள கர்த்தருடைய பிரசன்னமே கட்டுப்படுத்தும் முதலாவது அடிப்படைக் கோட்பாடாகும். வெறுமனே மேக ஸ்தம்பம், அக்கினி ஸ்தம்பம் என்று நான் சொல்லவில்லை. மாறாக, மேக ஸ்தம்பத்திலும், அக்கினி ஸ்தம்பத்திலும் உள்ள கர்த்தருடைய பிரசன்னம் என்று சொல்லுகிறேன். இந்த ஸ்தம்பங்களில், கர்த்தருடைய பிரசன்னமே கட்டுப்படுத்தும் முதலாவது அடிப்படைக் கோட்பாடு. இந்த அம்சம் கர்த்தருடைய மக்களின் கூடுதலோடும், நடவடிக்கையோடும் அல்லது போக்குவரத்தோடும் தொடர்புடையது. கர்த்தருடைய மக்கள் எப்போது, எப்படி, எங்கே போகவேண்டும், செயல்பட வேண்டும் என்பது மேக ஸ்தம்பத்திலும், அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்ட கர்த்தருடைய பிரசன்னத்தைச் சார்ந்திருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் தேசத்தைச் சுதந்தரிக்குமாறு தொடர்ந்து சென்றால், நாம் அதைக் கர்த்தருடைய பிரசன்னத்தினாலேதான் செய்யவேண்டும். கர்த்தடைய பிரசன்னம் நம்மோடு வருமென்றால், நாம் தேசத்துக்குள் நுழைந்து, அதை அனுபவித்து மகிழலாம். கர்த்தர் மோசேக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தரு வேன்" (யாத். 33:14). தேவன் தம் பிரசன்னத்தினால் தம் மக்களைத் தேசத்தைச் சுதந்தரிக்கச்செய்வார் என்பதே இதன் பொருள். எனவே, மோசே கர்த்தரிடம், "உம்முடைய சமுகம் என்னோடேகூடச் செல்லாமற்போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டுபோகாதிரும்," என்று சொன்னார். கர்த்தருடைய பிரசன்னம் தன்னோடே செல்லவேண்டும் என்று மோசே வற்புறுத்தினான்; இல்லையென்றால் அவன் போகமாட்டேன் என்று மறுத்துவிட்டான்.

"என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்." இது முற்றிலும் வித்தையான ஒரு வார்த்தை. பிரசன்னம் செல்லும். இதன் பொருள் அவர்கூடச் சொல்வார் என்பதல்ல. அவர் செல்வார் என்பது ஒரு காரியம்; அவருடைய பிரசன்னம் செல்லும் என்பது இன்னொரு காரியம். இந்த வித்தியாசத்தை நீங்கள் உணர்கிறீர்களா?

ஒரு நிகழ்ச்சியின்மூலம் நான் இதை விளக்கிக்காட்டுகிறேன். ஒன்றாகச் சேர்ந்து கர்த்தரை சேவிக்கிறவர்களாகிய நாங்கள் நான்கு

அல்லது ஐந்துபேர் ஒரு சமயம் ஓரிடத்திற்குப் போய்க்கொண்டிருந்தோம். நாங்கள் எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்தே பயணம்செய்தோம். எனினும், அந்நேரத்தில், ஒரு சகோதரர் எங்களிடத்தில் சந்தோஷமாக இல்லை. ஆனாலும் வேறு வழியில்லாமல் அவர் எங்களோடு வரவேண்டியிருந்தது. நாங்கள் எல்லாரும் ஒரே இரயிலில்தான் பயணம்செய்தோம். இந்தச் சகோதரரைத்தவிர மற்றவர்களெல்லாரும் முதல் பெட்டியில் உட்கார்ந்தோம், இவர் மட்டும் தனியாகப் போய் இரண்டாவது பெட்டியில் உட்கார்ந்தார். இவர் எங்களோடு வந்தார், ஆனால் இவருடைய பிரசன்னம் எங்களோடு வரவில்லை. இவர் எங்களோடு புறப்பட்டார், இவர் எங்களோடு பயணம்செய்தார், இவர் எங்களோடு வந்தடைந்தார். ஆனால் இவருடைய பிரசன்னம் எங்களோடு இல்லை. சகோதரர்கள் எங்களை வரவேற்க வந்தபோது, இவரும் எங்களோடு இருந்தார். அந்த இடத்திற்கு நாங்கள் போனபோது, இவரும் எங்களோடு எல்லா நேரமும் இருந்தார். இவர் எங்களோடு இருந்தார். ஆனால் இவருடைய பிரசன்னம் எங்களோடு இருக்கவில்லை. இது மெய்யாகவே விநோதமானது.

சகோதர சகோதரிகளே! அநேக வேளைகளில் கர்த்தர் உங்களோடு வருவார். ஆனால் அவருடைய பிரசன்னம் கூடவராது. அநேக வேளைகளில் கர்த்தர் உண்மையாகவே உங்களுக்கு உதவுவார். ஆனால், அவர் உங்களிடத்தில் சந்தோஷமாயில்லை என்பது நிச்சயம். நீங்கள் அவருடைய உதவியைப் பெறுவீர்கள். ஆனால், அவருடைய பிரசன்னத்தை இழந்துவிடுவீர்கள். நீங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்துக்கு அவர் உங்களைக் கொண்டுசெல்வார்; அவர் உங்களை ஆசீர்வதிப்பார், ஆனால் உங்கள் பயணம் முழுவதும் நீங்கள் தேவ பிரசன்னத்தை உணரமாட்டீர்கள். அவர் உங்களோடுகூட வருவார், ஆனால் அவருடைய பிரசன்னம் கூடவராது.

ஆ! இது ஓர் ஏட்டுப்படிப்பு இல்லை, மாறாக நம் உண்மையான அனுபவம்! கடந்த காலங்களில் கர்த்தருக்கு ஊழியம்செய்து கொண்டிருந்த அநேக வேளைகளில் நான் அவருடைய உதவியை உணர்ந்திருக்கிறேன். கர்த்தர் எனக்கு உதவிசெய்துதான் ஆகவேண்டும்; அவர் தம் நிமித்தமாவது எனக்குக் கட்டாயம் உதவிசெய்தாகவேண்டும். ஆனால் அநேக வேளைகளில் கர்த்தருடைய பிரசன்னம் என்னோடு இருக்கவில்லை என்று என்னால் சொல்லமுடியும். ஏனென்றால் அவர் என்னிடத்தில் சந்தோஷமாக இல்லை. அவர் என்னோடு செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அவர் சந்தோஷமாக இல்லை. நான் முதல் பெட்டியில் உட்கார்ந்திருந்தேன். அவரோ இரண்டாவது பெட்டியில் உட்கார்ந்திருந்தார். அவர் என்னோடு வந்தார். ஆனால் நான்

அவருடைய மன வருத்தத்தை அறியும்படிக்கு, அவர் தம் பிரசன்னத்தை எடுத்துவிட்டார்.

சகோதர சகோதரிகளே, நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும். கர்த்தர் உங்களுக்கு உதவிசெய்தாலே போதும் என்று ஒருபோதும் எண்ணிவிடாதீர்கள். இல்லை! இல்லை! கர்த்தருடைய பிரசன்னம் நம்மிடம் இருக்கவேண்டும். "கர்த்தாவே, நீர் உம் பிரசன்னத்தை எனக்குத் தராவிட்டால் நான் உம்மோடு இங்கேயே தங்கிவிடுவேன். உம் பிரசன்னம் என்னோடு செல்லாவிட்டால், நான் போகமாட்டேன். உம் உதவியல்ல, உம் பிரசன்னமே என்னைக் கட்டுப்படுத்த வேண்டும்," என்று ஜெபிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். இதைவிட இன்னும் மேலாக, "கர்த்தாவே, நான் உம் உதவியை விரும்பவில்லை, மாறாக உம் பிரசன்னத்தையே விரும்புகிறேன். கர்த்தாவே, உம் பிரசன்னம் என்னிடம் இருக்க வேண்டும். உம் உதவி இல்லாமல் என்னால் சமாளிக்கமுடியும். ஆனால், உம் பிரசன்னம் இல்லாமல் என்னால் எதுவும் செய்யமுடியாது," என்று நாம் ஜெபிக்கவேண்டும். இப்படி உங்களால் கர்த்தரிடம் சொல்ல முடியுமா?

அநேக சகோதர சகோதரிகள் என்னிடம் வந்து, "சகோதரரே, கர்த்தர் மெய்யாகவே எனக்கு உதவுசெய்திருக்கிறார்," என்று சொல்கிறார்கள். நான் எப்போதும் அவர்களிடம், "நீங்கள் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்கிறீர்களா? நீங்கள் அவருடைய உதவியைப் பெற்றிருக்கிறீர்கள். நல்லது. ஆனால் நீங்கள் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்திருக்கிறீர்களா?" என்று கேட்க ஆசைப்படுகிறேன். அநேகர் கர்த்தருடைய உதவியைப் பெறுகிறார்கள். ஆனால் வெகு சிலரிடமே கர்த்த ருடைய பிரசன்னம் இருக்கிறது. அவருடைய உதவியல்ல, அவருடைய பிரசன்னமே கட்டுப்படுத்தும் அம்சம்.

சில கிறிஸ்தவ வேலையாட்கள் என்னிடம், "சகோதரரே, கர்த்தர் எங்களுக்கு உதவிசெய்திருக்கிறார் என்று நீங்கள் உணரவில்லை யா? கர்த்தர் எங்களை ஆசீர்வதித்திருக்கிறார் என்று நீங்கள் விசுவாசிக்கவில்லையா?" என்று கேட்டதுண்டு. "சந்தேகமே இல்லை. கர்த்தர் உங்களையும், என்னையும் ஆசீர்வதித்திருக்கிறார். ஆனால் சிறிது நேரம் நாமெல்லாரும் கர்த்தருக்குமுன்பாக அமைதியாக இருப்போம்," என்று பதில்சொன்னேன். சிறிது நேரத்திற்குப்பின், "சகோதரனே, கர்த்தருடைய பிரசன்னம் உன்னோடு இருப்பதாக மிக ஆழமான உணர்வில் நீ உணர்கி றாயா? நீ கர்த்தருக்காகப் பிரயாசப்பட்டிருக்கிறாய் என்று எனக்குத் தெரியும்; கர்த்தர் உனக்கு உதவிசெய்திருக்கிறார் என்றும், உன்னை ஆசீர்வதித்திருக்கிறார் என்றும் எனக்குத் தெரியும். ஆனால் உன் ஆள்தத்துவத்தின் மிகஆழமான பகுதியில் கர்த்தர் உன்னோடு

இருக்கிறார் என்று நீ உணர்கிறாயா? கர்த்தருடைய முகம் உன்னை நோக்கிப் புன்முறுவல்பூத்தவண்ணமாய் இருப் பதையும், அவருடைய புன்சிரிப்பு உனக்குள் இருப்பதையும் நீ எப்போதும் உணர்கிறாயா? இது உன்னிடத்தில் இருக்கிறதா? என்று கேட்டிருக்கிறேன். இவை மிருதுவான, ஆனால் இருதயத்தை ஆராய்ந்துபார்க்கிற வார்த்தைகள். கர்த்தருடைய வேலைக்காரன் என்ற முறையில் பெரும்பாலானவர்களால் பொய்சொல்லமுடியாது; அவர்கள் உண்மையைச் சொல்ல வேண்டும். இறுதியாக இப்படிப் பட்ட சகோதரர்கள், "கொஞ்சக் காலமாக, கர்த்தருடனான என் ஐக்கியத்தை நான் இழந்து விட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும்," என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னர் நான் அவர்களிடம், "சகோதரனே, இது என்ன? உங்களைக் கட்டுப்படுத்தி ஆள்வது எது? கர்த்தருடைய உதவியா? அல்லது அவருடைய பிரசன்னமா? கர்த்தருடைய ஆசீர்வாதமா? அல்லது அவருடைய புன்சிரிப்பா?" என்று கேட்டேன்.

சகோதர சகோதரிகளே! "கர்த்தாவே, உம் புன்முறுவல் பூக்கும் உம் பிரசன்னத்தைத்தவிர வேறெதுவும் என்னைத் திருப்திப் படுத்தாது. உம் மகிமையான முகத்தின் புன் சிரிப்பைத்தவிர வேறெதையும் நான் விரும்பவில்லை. இது என்னிடம் இருக்கும்வரை, வானம் கீழே இறங்கிவந்தாலும் சரி அல்லது பூமி பிளந்து சிதறினாலும் சரி, அதைப்பற்றி எனக்குக் கவலை யில்லை. முழு உலகமும் எனக்கெதிராக எழும்பினாலும்கூட உம் புன்சிரிப்பு என்னை நோக்கி இருக்கும்வரை என்னால் உம்மைத் துதிக்கமுடியும். எல்லாம் நன்றாகவே இருக்கின்றன," என்று கண்கள் கண்ணீரால் நிறைந்தாலும் ஒவ்வொரு நாளும் நாம் கர்த்தரிடம் சொல்லவேண்டும். "என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்," என்று கர்த்தர் சொன்னார். என்னே பொக்கிஷம்! பிரசன்னம், அதாவது கர்த்தருடைய புன்சிரிப்பு—இதுவே கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடு. கர்த்தரிடமிருந்து எதையாவது பெறுவதால், அவருடைய பிரசன்னத்தை இழக்க நேரிடு மானால், அப்படிப் பெறுவதைக்குறித்து நாம் பயப்பட வேண்டும். இது உண்மையாகவே பயப்படத்தக்க காரியம். கர்த்தரே உங்களுக்கு ஏதாவதொன்றைக் கொடுக்கக்கூடும். ஆனால் அவர் உங்களுக்கு எதைக் கொடுக்கிறாரோ, அதுவே அவருடைய பிரசன்னத்தை உங்களிடமிருந்து திருடிக்கொள்ளும். அவர் உங்களுக்கு உதவிசெய்வார். அவர் உங்களை ஆசீர்வதிப்பார். எனினும் அந்த உதவியே, அந்த ஆசீர்வாதமே, அவருடைய பிரசன்னத்திலிருந்து உங்களைத் தூரமாக்கிவிடும். கர்த்தருடைய பிரசன்னத்தால் மட்டும் காக்கப்படவும், ஆளப்படவும், கட்டுப்படுத்தப்படவும், வழிநடத்தப்படவும் நாம்

கற்றுக்கொள்ளவேண்டும். நாம் அவருடைய நேரடியான பிரசன்னத்தைத்தவிர வேறெதையும் விரும்பவில்லை என்று கர்த்தரிடம் சொல்லவேண்டும். பிறர்மூலமாகக் கைமாறிவரும் அவருடைய பிரசன்னம் நமக்கு வேண்டாம். அநேக வேளைகளில், உங்களிடம் இருக்கும் கர்த்தருடைய பிரசன்னம் பிறர்மூலமாகக் கைமாறி வந்த பிரசன்னம்தான் என்பதை நீங்கள் அறியவேண்டும்; இது நேரடியானதல்ல; கைமாறிவந்த பிரசன்னம். பிறர்மூலம் கைமாறி வராத, நேரடியான கர்த்தருடைய பிரசன்னத்தால் கட்டுப்படுத்தப்பட முயன்று பார்.

இது நீங்கள் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கான நிபந்தனையும், தகுதியும் மட்டும் இல்லை, வல்லமையுமாகும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவையும், அவருடைய பரிபூரணத்தையும் அடைவதற்கு கர்த்தருடைய நேரடியான பிரசன்னம் உங்களைச் சத்துவத்தால் பலப்படுத்தும். ஆ, கர்த்தருடைய நேரடியான பிரசன்னத்தில்தான் என்னே வல்லமை! என்னே பலம்! இது நிச்சயமாக உபதேசத்தைப்பற்றிய காரியம் இல்லை, மாறாக நம் மிக உள்ளான அனுபவத்தைப்பற்றிய காரியம்.

"என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும்." கர்த்தர் மிக அற்புதமானவர், மிகவும் மகிமையானவர், மிகவும் புதிரானவர்! ஆனால் அவர் எந்த வகையில் தம் பிரசன்னத்தைக் காட்டுகிறார்? அவருடைய பிரசன்னத்தை நாம் எப்படி உணர்கிறோம்? பண்டைய நாட்களில், அவருடைய பிரசன்னம் எப்போதும் பகலிலே மேக ஸ்தம்பத்திலும், இரவிலே அக்கினி ஸ்தம்பத்திலும் இருந்தது. சூரியன் பிரகாசிக்கும் பகல் வேளையில் மேகம் இருந்தது; இரவின் இருளில் அக்கினி இருந்தது. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வெளிப்படுத்தப் பட்ட அவருடைய பிரசன்னம் பகலில் மேகமாகவும், இரவில் அக்கினியாகவும் இருந்தது.

மேகம், அக்கினி ஆகிய இரண்டு காரியங்களுக்கும் என்ன பொருள்? மேகம் ஆவியானவருக்கு அடையாளம் என்று வேதத்திலுள்ள பல பத்திகள் சுட்டிக்காட்டுகின்றன. நம் அனுபவத்தில் பரிசுத்தஆவி சில சமயங்களில் மேகத்தைப் போன்றவர். கர்த்தருடைய பிரசன்னம் ஆவியானவரில் இருக்கிறது. கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு இருக்கிறது என்று அநேக வேளைகளில் நமக்குத் தெரியும். இது நமக்கு எப்படித் தெரியும்? ஏனென்றால், இதை நாம் ஆவியானவரில் உணர்கிறோம். நம்மில் பெரும்பாலோருக்கு இப்படிப்பட்ட அனுபவங்கள் உண்டு என்று நான் விசுவாசிக்கிறேன். கர்த்தருடைய பிரசன்னத்தை நாம் ஆவியானவரில் அனுபவித்திருக்கிறோம். இது உண்மையில் புத்திக்கு எட்டாத புதிர். "கர்த்தருடைய பிரசன்னத்தை ஆவியானவரில் நீங்கள் எப்படி

அனுபவிக்கமுடியும்?" என்று நீங்கள் என்னைக் கேட்டால், "இதை நான் அனுபவிக்கிறேன், இதை நான் உணர்கிறேன்," என்று மட்டுமே என்னால் பதில்சொல்லமுடியும். கர்த்தர் ஆவியானவரில் இருக்கிறார். அவருடைய பிரசன்னத்தை நான் ஆவியானவரில் உணர்கிறேன். நிஜம் ஆவியானவரில் இருக்கிறது. ஆவியானவர் மெய்யாகவே ஒரு மேகத்தைப்போன்றவர் என்று சில வேளைகளில் நான் ஒருவாறாகக் கிரகித்துக்கொள்ள அவர் அருள்கிறார்; சில உணர்ச்சிகளையும் அவர் நமக்குத் தருகிறார். ஒருவேளை இது நம் பலவீனத்தினிமித்தம் இருக்கக்கூடும்; அல்லது நம்மை உற்சாகமூட்டுவதும், உறுதிப்படுத்துவதும் அவசியம் என்று கர்த்தர் நினைக்கக்கூடும்.

பரிசுத்த ஆவி ஊற்றப்படுவதைப்பற்றி 1935இல் ஒரு செய்தி கொடுத்துக்கொண்டிருந்தேன். அந்தச் செய்தியைக் கொடுத்துக் கொண்டிருந்தபோது, பாதியிலே திடீரென்று ஒரு மேகம் என்னைச் சூழ்வதுபோன்ற ஓர் உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் ஒரு மேகத்தில் இருப்பதுபோல் எனக்குத் தோன்றியது. உடனே கூட்டத்தில் ஒரு நிச்சயமான திருப்பம் ஏற்பட்டது. என் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுவதைப்போல் இருந்தன. முழுக் கூட்டமும் ஆச்சரியத்தால் ஸ்தம்பித்துப்போனது. உங்களிடம் இப்படிப்பட்ட அனுபவம் இருக்கும்போது, நீங்கள் எதையும் உங்கள் மனதிலிருந்து பேச வேண்டியதில்லை. வார்த்தைகள் ஆவியானவரிடமிருந்து பாய்ந்தோடுகின்றன.

அதுவே மேக ஸ்தம்பத்திலுள்ள கர்த்தருடைய பிரசன்னம். இதை இப்படியாக உங்களால் உணரமுடியும். இது ஒருவகை வழிநடத்துதலாகவும், உற்சாகமாகவும் வருகிறது. கர்த்தருக்காக ஒரு பாரம் உங்களுக்குள் ஏற்படுகிறது. கர்த்தர், ஆவியானவரிலுள்ள தம் பிரசன்னத்தை நீங்கள் உணரும்படிக்கு, உங்களுக்கு இப்படிப்பட்ட உற்சாகத்தைத் தருகிறார். இருந்தபோதும், இது கர்த்தர் நமக்கு அருளின விசேஷமான அனுபவம். ஆவியான வரிலுள்ள கர்த்தருடைய பிரசன்னத்தை நாம் ஒவ்வொருநாளும் இயல்பாகவும், சாதாரணமாகவும் அனுபவிக்கலாம்.

அக்கினி ஸ்தம்பத்தின் பொருள் என்ன? இரவு நேரத்தில், இருளில், நமக்கு அக்கினி தேவை. ஆனால், மேகத்துக்கு என்ன பொருளோ அதே பொருள்தான் அக்கினிக்கும். மேகமே அக்கினி, அக்கினியே மேகம். சூரியன் பிரகாசிக்கும்போது, கர்த்தருடைய பிரசன்னம் மேகத்தின் தோற்றத்தை எடுத்துக்கொள்கிறது; இருள் வரும்போது, கர்த்தருடைய பிரசன்னம் அக்கினியின் தோற்றத்தை எடுத்துக்கொள்கிறது. இது வித்தியாசமான தோற்றங்களையுடைய ஒரே பொருள். அப்படியானால் அக்கினி எதைக் குறிக்கிறது?

இது, வார்த்தையைக் குறிக்கிறது. மேகம் ஆவியானவர், அக்கினி வார்த்தை. சூரியன் பிரசாசித்துக்கொண்டிருக்கும்போது, நீங்கள் ஆவியானவரில் மிகத்தெளிவாக இருக்கிறீர்கள்; உங்களால் மேகத்தைச் சுலபமாகப் பின்பற்றமுடியும். ஆனால், அநேக வேளைகள் இரவைப்போலவே இருக்கின்றன; நீங்கள் இருளில் இருக்கிறீர்கள். உங்கள் ஆவியை உங்களால் நம்பமுடியாது. உங்கள் ஆவி பெரிதும் கலங்கிப்போய் இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் நீங்கள் வார்த்தையை நம்பவேண்டும். வார்த்தை அக்கினியைப் போன்றது; எரிகிறது, எரிக்கிறது, ஒளிவீசுகிறது, பிரகாசிப்பிக்கிறது. "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது," என்று சங்கீதம் *119:105* கூறுகிறது. வானம் மிகத்தெளிவாக இருக்கும்போதும், எல்லாம் மிகப்பிரகாசமாக இருக்கும் போதும், மேகம் போதுமானது. ஆனால் இருள் வானத்தை மூடியிருக்கும்போது, 'எது மேகம், எது மேகம் இல்லை,' என்று உங்களால் நிதானித்து அறியமுடியாது. அப்போது நீங்கள் அக்கினியைப் பின்பற்ற வேண்டும். சில சமயங்களில் உங்கள் வானம், உங்கள் பகல், மிக மிகத்தெளிவாக இருக்கிறது. சூரிய ஒளி பிரகாசமாகவும், பலமாகவும் இருக்கிறது. ஆவியானவர் எந்தத் திசையில் போய்க்கொண்டிருக்கிறார் என்று நீங்கள் பிசகில்லாமல் காணமுடியும்; கண்டு, அதற்கேற்ப அவரைப் பின்பற்றமுடியும். ஆனால் பல வேளைகளில், நீங்கள் இருளில் இருக்கக்கூடும், இரவில் இருக்கக்கூடும். நேற்று நீங்கள் மிகத்தெளிவாக இருந்தீர்கள். ஆனால் இன்று நீங்கள் மிகவும் இருண்டிருக்கிறீர்கள்; குழம்பியிருக்கிறீர்கள், கலங்கியிருக்கிறீர்கள். ஆனால், கவலைப்படவேண்டாம். உங்களிடம் வார்த்தை இருக்கிறது. வார்த்தையைப் பின்பற்றுங்கள். வார்த்தையே அக்கினி, எரிகிற அக்கினி, பிரகாசமான வெளிச்சம். நீங்கள் இருளில் இருக்கும் போது, இந்த வெளிச்சத்தைப் பின்பற்றலாம். ஏனென்றால் கர்த்தருடைய பிரசன்னம் அக்கினியில் இருக்கிறது.

அநேக வேளைகளில் சகோதரர்கள் என்னிடம், "சகோதரரே, நான் இப்போது இருளில் இருக்கிறேன்," என்று கூறியிருக்கிறார்கள். "கர்த்தருக்கு ஸ்தோத்திரம். இதுவே நீங்கள் வார்த்தையை எடுத்துக்கொள்வதற்கான சரியான நேரம். நீங்கள் இருளில் இல்லையென்றால், வார்த்தையில் இருக்கும் கர்த்தரை அனுபவிப்பதற்கு உங்களுக்கு எந்த வாய்ப்பும் கிடைத்திருக்காது. இயல்பான முறையில் அவருடைய வார்த்தையை எடுத்துக் கொள்ளுங்கள்," என்று நான் பதில் சொல்லியிருக்கிறேன். நாம் இருளில் இருக்கும்போது, அவருடைய வார்த்தையில் இருக்கும் கிறிஸ்துவை அனுபவிப்பது எவ்வளவு நன்றாக இருக்கிறது!

கர்த்தருடைய பிரசன்னம் எப்போதும் இரண்டு காரியங் களில் இருக்கிறது: ஒன்று ஆவியானவரில் இருக்கிறது அல்லது வார்த்தையில் இருக்கிறது. நீங்கள் தெளிவாக இருக்கும்போது, அவர் ஆவியானவரில் இருக்கிறார் என்று உங்களால் உணரமுடியும். நீங்கள் இருளில் இருக்கும்போது, அவரை வார்த்தையில் காணலாம். அவர் எப்போதும் ஆவியானவரிலும், வார்த்தையிலும் இருக்கிறார். நீங்கள் இன்று தெளிவாக இருக்கிறீர்களா? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அப்படியானால் நீங்கள் கர்த்தரை ஆவியானவரில் உணர்வீர்கள். நீங்கள் இருளில் இருக்கிறீர்களா? இப்போதும் நீங்கள் அவரைத் துதிக்கலாம். ஏனென்றால், நீங்கள் அவரை அவருடைய வார்த்தையில் காணலாம். பல வேளைகளில், நாம் ஒளிநிறைந்த பகலில் இருக்கிறோம், வேறு பலவேளைகளில் நாம் இருள்நிறைந்த இரவில் இருக்கிறோம். ஆனால், நாம் கவலைப்பட வேண்டிய தில்லை. பகலில், தெளிவாக இருக்கும்போது, நம்மிடம் ஆவியா னவர் மேகத்தைப்போல் இருக்கிறார்; இரவில், இருளாக இருக்கும் போது, நம்மிடம் வார்த்தை அக்கினியைப்போல் இருக்கிறது. ஆவியான வரிலும், வார்த்தையிலும் உள்ள அவருடைய பிரசன்னத்தின் மூலம் நாம் கர்த்தரைப் பின்பற்றலாம்.

ஊரிம், தும்மிம் ஆகியவைகளையுடைய ஆசாரியத்துவம்

ஊரிம், தும்மிம் ஆகியவைகளோடு உள்ள அபிஷேகத்தைக் கொண்ட ஆசாரியத்துவமே கட்டுப்படுத்துகிற இரண்டாவது அடிப்படைக் கோட்பாடு. ஆசாரியத்துவம் என்றால் என்ன? இது ஓர் அற்புதமான, மகிமையான காரியம். இந்த ஆசாரியத்துவத்தில் கர்த்தருடனான ஐக்கியமும், அவருடைய பிரசன்னத்தில் வாழும் வாழ்க்கையும், செய்யும் பணிவிடையும் அடங்கியிருக்கின்றன. கர்த்தருடன் நிலையான ஐக்கியத்தில் இருக்கிற ஒரு கூட்டம் மக்களே இந்த ஆசாரியத்துவம். அவர்கள் தொடர்ச்சியாய்க் கர்த்தருடன் கலந்துறவாடுகிறார்கள்; தொடர்ச்சியாய் அவருடைய பிரசன்னத்தில் பணிவிடைசெய்கிறார்கள். அவர்கள் இப்படித்தான் வாழ்கிறார்கள், நடக்கிறார்கள், எல்லாவற்றையும் செய்கிறார்கள். நாம் கர்த்தருடன் ஐக்கியம்கொண்டிருக்கும்போது, நாம் கர்த்தருடன் நாள்தோறும், கணந்தோறும் கலந்துறவாடும்போது, நாம் இந்த ஜீவனுள்ள ஐக்கியத்தில் வாழும்போது, பணிவிடைசெய்யும்போது, செயல்படும்போது நாமே ஆசாரியத்துவம்.

நாம் ஆசாரியத்துவத்தை இழந்துவிட்டால், கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்டுபாடுகளில் ஒன்றை இழந்துவிடுகிறோம். கட்டுப்படுத்தும் இந்த அடிப்படைக் கோட்பாடு

வழிநடத்துதலுக்காக இல்லை, மாறாக நியாயத்தீர்ப்புக்காக. அக்கினி ஸ்தம்பத்திலும், மேகஸ்தம்பத்திலும் இருக்கிற கர்த்தருடைய பிரசன்னம் வழிநடத்துதலுக்காக. ஆனால் ஊரிம், தும்மிம் ஆகியவைகளைக்கொண்ட அபிஷேகத்திலுள்ள ஆசாரியத்துவம் நியாயத்தீர்ப்புக்காக.

இதை நாம் இப்படி விளக்கிச்சொல்லலாம். இரண்டு சகோதரர்கள் ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் என்னசெய்வோம்? நாம் தேவனுடைய பிள்ளைகள், நாம் தேவனுடைய மக்கள். ஆனால் இப்படிப்பட்ட சுபாவத்தின் சிறிதளவு நமக்குள் இருக்கத்தான் செய்கிறது. நாம் எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்கமுடியும்? நாம் எப்படி சரியான தீர்ப்புக்கு வரமுடியும்? ஒரு கூட்டத்தைக் கூட்டி ஓட்டுப் போட்டு காரியத்தைத் தீர்மானிக்கலாமா? நிச்சயமாகக் கூடாது. இப்படிப்பட்ட பிரச்சினைகள் எல்லாம் ஆசாரியத்துவத்தால் மட்டுமே தீர்க்கப்படமுடியும்! இந்த ஆசாரியத்துவத்துக்குக் கர்த்தருடைய பிள்ளைகள் ஒரு கூட்டம் வேண்டும். அவர்கள் எங்கே இருந்தாலும் அல்லது அவர்கள் என்ன செய்துகொண்டிருந்தாலும் சரி. அவர்கள் எப்போதும் கர்த்தருடன் ஐக்கியத்தில் இருப்பவர்கள்; அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தில் அவரை சேவிப்பவர்கள்; அவர்கள் தொடர்ச்சியாய் அவருக்கு முன்பாக வாழ்பவர்கள்; இப்படிப்பட்ட கூட்டம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின்கீழ் இருக்கிறது; இவர்க ளிடம் ஊரிம், தும்மிம் இருக்கிறது. இதனால் அவர்களால் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பையும், தீர்மானத்தையும் அடையமுடியும். அவ்வப்போது எழக்கூடிய எந்தக் காரியத்தையும், ஆசாரியத்துவத்தை உடைய இவர்களால் ஊரிம், தும்மிம் ஆகியவைகளால் தீர்க்கவும், தீர்மானிக்கவும் முடியும்.

ஆசாரியத்துவத்தில் மூன்று காரியங்கள் அடங்கியிருக்கின்றன: கர்த்தருடனான கலந்துறவாடுதல் அல்லது ஐக்கியம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம், ஊரிம் தும்மிம். கடைசிக் காரியமான ஊரிம் தும்மிமைப்பற்றி இங்கு சுருக்கமாக மட்டுமே பேசமுடியும். எபிரேய மொழியில் ஊரிம் என்றால் வெளிச்சம் என்று பொருள்; தும்மிம் என்றால் பூரணம் அல்லது முழுமை என்று பொருள். சுமார் முப்பது ஆண்டுகளுக்குமுன்பு, எபிரேய எழுத்தாளர் ஒருவர் எழுதிய ஒரு கட்டுரையைப் படித்தேன். தும்மிம் என்பது எபிரேய மொழியிலுள்ள நான்கு எழுத்துகள் பொறிக்கப்பட்ட ஒரு விலையேறப்பெற்ற கல் என்று அவர் அதில் எழுதியிருந்தார். பிரதான ஆசாரியர்களின் மார்ப்பதக்கத்தில், இஸ்ரவேல் கோத்திரங்களின் பன்னிரண்டு பெயர்கள் பொறிக்கப்பட்ட பன்னிரண்டு கற்கள் இருந்தன. எபிரேய மொழியிலுள்ள

இருபத்திரண்டு எழுத்துக்களில் பதினெட்டு எழுத்துக்கள் மட்டுமே இந்தப் பன்னிரண்டு கோத்திரங்களின் பெயர்களில் இருக்கின்றன. ஆகையால் பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கத்தில் நான்கு எழுத்துக்கள் குறைவுபட்டன. எனினும், இந்த நான்கு எழுத்துக்கள் தும்மிம் என்ற கல்லின்மேல் பொறிக்கப்பட்டிருந்தன. இந்தக் கல் மார்ப்பதகத்தில் வைக்கப்பட்டபோது, அங்கு பூரணம் இருந்தது. அங்கு முழுமை இருந்தது. அங்கு அப்போது மொத்த எழுத்துக்கள் இருபத்திரண்டும் இருந்தன. ஊரிம் என்பது வெளிச்சம் கொடுப்பதற்காக மார்ப்பதக்கத்தில் வைக்கப்பட்ட ஒரு கல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே ஊரிம், தும்மிம் என்பவைகளின் பொருள் வெளிச்சம், பூரணம் என்பதாகும்.

இந்த ஊரிம், தும்மிம் என்பவைகள் எப்படிப் பயன் படுத்தப்பட்டன? இஸ்ரவேல் மக்களிடையே எப்போதெல்லாம் ஒரு பிரச்சினை அல்லது கேள்வி எழுந்ததோ அப்போதெல்லாம் பிரதான ஆசாரியன் மார்ப்பதக்கத்தின் உதவியால் பதில் பெறுதற்குப் பிரச்சினையைக் கர்த்தரிடத்தில் கொண்டுவந்தான். பிரதான ஆசாரியர்கள் கர்த்தருக்கு முன்பாகச் சென்றபோது, மார்ப்பதக்கத்தில் இருந்த சில குறிப்பிட்ட எழுத்துக்களுக் குரிய கற்கள் சுடர்வீசின; வேறு சில சமயங்களில், வேறு சில எழுத்துக்களுக்குரிய கற்கள் சுடர்வீசின என்று அந்தக் கட்டுரையில் எபிரேய எழுத்தாளர் கூறுகிறார். பிரதான ஆசாரியன் வெவ்வேறு கற்கள் சுடர்வீசியதற்கேற்ப, அந்தக் கற்களிலிருந்த எல்லா எழுத்துக்களையும் குறித்துக்கொண்டான். இப்படிக் குறித்துக்கொண்டதால் வார்த்தைகள் உருவாயின; பின்னர் வாக்கியங்கள் உருவாயின. இறுதியாக, அவன் கர்த்தரிடமிருந்து ஒரு முழுமையான செய்தியை அல்லது தீர்ப்பைப் பெற்றுக் கொண்டான். இப்படித்தான் எல்லா இஸ்ரவேல் மக்களிடையே யிருந்தும், ஆகான் தன் பாவத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்டான் (யோசுவா 7) என்று அந்தக் கட்டுரை கூறுகிறது.

இவ்வாறு கர்த்தருடைய மக்கள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற் கான கட்டுப்படுத்துகிற அடிப்படைக் கோட்பாடு என்ன? அது என்னவென்றால், கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரையும் மார்பில் ஏந்தி அவர்களைக் கர்த்தருக்கு முன்பாகக் கொண்டுவருகிற ஆசாரியத்துவம் அவர்களிடையே இருக்கவேண்டும். ஆசாரியத்துவம் அவர்கள் எல்லாரையும் அன்போடு கர்த்தருடைய பிரசன்னத்துக்குக் கொண்டுவந்து, அங்கு அவர்களை எழுத்துக்களாக வாசிக்க வேண்டும். இவ்வாறு, வேத வெளிச்சத்தின் உதவியோடு, ஆசாரியத்துவம் கர்த்தருடைய மனதை அறிந்து, அவருடைய பிள்ளைகளின் சூழ்நிலையைப் பற்றி சில வார்த்தைகளைப் பெற்றுக்கொள்ளும்.

இப்போது, ஒருவரோடொருவர் சண்டைபோட்டுக்கொண்டிருக்கும் சகோதரர்களைப்பற்றிய விஷயத்திற்கான பதில் நம்மிடம் இருக்கிறது. நாம் அவர்களிடம், "சகோதரர்களே, கொஞ்ச நேரம் அமைதியாயிருங்கள். நாம் கர்த்தரிடத்தில் போவோம்," என்று சொல்லலாம். பின்னர் நாம் இந்தப் பிரச்சினையைக் கர்த்தரிடத்தில் கொண்டுவந்து, வேத வெளிச்சத்தின் உதவியோடு தேவனுடைய பிரசன்னத்தில் இந்த சகோதரர்களை வாசிப்போம். இதுவே, ஊரிம் தும்மிம் பதிக்கப்பட்ட மார்ப்பதக்கத்தையுடைய ஆசாரியத்துவத்தை நடைமுறைப்பயிற்சி செய்வதாகும். இதன்மூலம், இந்தக்காரியத்தில் நாம் என்ன தீர்மானம் எடுக்கவேண்டும் என்பதைப்பற்றி கர்த்தருடைய எழுத்துக்களை, வார்த்தைகளை, செய்தியை நாம் பெறலாம்.

அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களை எப்படி எழுதினார்கள் என்று உங்களுக்குத் தெரியுமா? இப்படித்தான் எழுதினார்கள். பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதின முதல் நிருபம் ஒரு நல்ல எடுத்துக்காட்டு. பிரிவினைகள், ஒழுங்குக் கட்டுப்பாடு, திருமணம், உயிர்த்தெழுதலைப்பற்றிய உபதேசம் என்று அநேகப் பிரச்சினைகளை பவுல் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஏறக்குறைய எல்லா வகையான, எல்லா மாதிரியான பிரச்சினைகளும் அங்கிருந்தன. அவர் என்னசெய்தார்? அவர் அந்தச் சபையிலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும், எல்லாச் சகோதர சகோதரிகளையும் தம் இருதயத்தில் சுமந்தபடி கர்த்தரித்தில் கொண்டுவந்தார்; அங்கு கர்த்தருடைய பிரசன்னத்தில், வேத வெளிச்சத்தின் உதவியுடன், அவர்களை வாசித்தார். இது உண்மையில்லையா? அவர் அவர்களை வார்த்தையின் வெளிச்சத்தில் அங்கு வாசித்தபோது, சூழ்நிலையின் தன்மையையும், பதிலையும் அவர் உணர்ந்துகொண்டார். அவர் கர்த்தரிடமிருந்து ஒரு தீர்ப்பை, ஒரு தீர்மானத்தைப் பெற்றுக்கொண்டார்; எனவே அவர் கொரிந்தியர்களுக்கு முதல் நிருபத்தை எழுதினார். எல்லா நிருபங்களையும் பாருங்கள். அப்போஸ்தலர்கள் எழுதின புத்தகங்கள் எல்லாம் இப்படித்தான் எழுதப்பட்டன. அவர்கள் தங்கள் அறைகளில் உட்கார்ந்துகொண்டு, வாசித்துக்கொண்டு காரண காரியங்களை அலசிப்பார்த்து பின்னர் எழுதவில்லை. இல்லை! கர்த்தரிடமிருந்து ஒரு பதில், ஒரு வார்த்தை, வேண்டும் என்கிற சூழ்நிலைகள் கர்த்தருடைய பிள்ளைகளிடையே எப்போதும் இருந்தன. பின்னர் அப்போஸ்தலர்கள் ஆசாரியர்களாகத் தங்கள் ஆசாரியத்துவ ஊழியத்தை நிறைவேற்றி கர்த்தருடைய பிள்ளைகளின் இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தேவனுடைய பிரசன்னத்துக்குள் கொண்டு வந்தார்கள். கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் விசுவாசிகளை

ஒருவர்பின் ஒருவராக வாசித்து, பிரச்சினையை அவருடைய பிரசன்னத்தில் படித்தார்கள். இவ்வாறு, அவர்கள் வெளிச்சத்தைப் பெற்றார்கள். அவர்கள் கர்த்தரிடமிருந்து வார்த்தைகளை, வாக்கியங்களை, நினைவுகளை, பெற்றார்கள். பின்னர், அவர்கள் கடிதம் எழுதி கர்த்தருடைய மனதைப் பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இது கட்டுப்படுத்தும் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று. கட்டுப்படுத்தும் முதல் அடிப்படைக் கோட்பாடு மேக ஸ்தம்பத்திலும், அக்கினி ஸ்தம்பத்திலும் இருக்கிறது. இரண்டாவது கோட்பாடு, ஊரிம் தும்மிம் என்ற இரண்டு வித்தியாசமான காரியங்களைக்கொண்ட அபிஷேகத்தின்கீழான ஆசாரியத்துவம்.

சகோதர சகோதரிகளே, நீங்கள் உங்களுக்கு மற்றவர்களுடன் இருக்கிற சில பிரச்சினைகளை என்னிடம் சொல்லவந்தால், நான் என்ன செய்யவேண்டும்? உங்களையும், மற்றவர்களையும் கர்த்தரிடத்தில் கொண்டுவருவதற்கு நான் என் ஆவியை இயக்கவேண்டும். உங்களையும், மற்ற சகோதர சகோதரிகளையும் அன்போடு என் இருதயத்தில், அதாவது என் மார்பில், போட்டுக்கொள்ள வேண்டும். உங்கள் எல்லாரையும் நான் கர்த்தரிடத்தில் கொண்டுவந்து, "கர்த்தாவே, இதோ இங்கு சில அன்பான பரிசுத்தவான்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பிரகாசமாக்கும். உம் ஒளியை எனக்குத்தாரும்," என்று கேட்கவேண்டும். நான் உங்களை வாசிக்கவேண்டும். நான் உங்கள் மனங்களையும், உங்கள் உணர்ச்சிகளையும் வாசிக்கவேண்டும். நான் உங்கள் நினைவுகளையும், உங்கள் உள்நோக்கங்களையும், உங்கள் செயல்களையும் வாசிக்க வேண்டும். நான் உங்கள் பிரச்சினையையும், உங்களோடு தொடர்புடைய அநேகக் காரியங்களையும் வார்த்தையின் வெளிச்சத்தில் வாசிக்கவேண்டும். ஒவ்வொரு எழுத்தாக வாசித்தபின், படிப்படியாக எனக்கு ஒரு வார்த்தை கிடைக்கும், பின்பு இன்னொரு வார்த்தை கிடைக்கும். இறுதியாக ஒரு வாக்கியம் கிடைக்கும், பின்பு ஒரு செய்தி கிடைக்கும். கர்த்தரிடமிருந்து ஏதோவொன்றை நான் பெற்றுக்கொள்வேன். உங்களைப்பற்றிய கர்த்தருடைய மனம் என்ன, உங்களைப்பற்றிய அவருடைய எண்ணம் என்ன என்று நான் அறிந்துகொள்வேன்.

வழிநடத்தும் சகோதரர்களாகிய நீங்கள் சபையில் பல்வேறு விதமான பிரச்சினைகளைச் சந்திக்கிறீர்கள். இந்த ஆசாரிய ஊழியத்தை நடைமுறைப்படுத்த இவைகளெல்லாம் உங்களுக்கு நல்ல வாய்ப்பைத் தருகின்றன. சில வேளைகளில், ஒரு சகோதரன் தன் தகப்பனோடு தனக்கிருக்கும் பிரச்சினையைப் பகிர்ந்துகொள்ள உங்களிடம் வருவான். அவனுடைய தகப்பனாரும்

கர்த்தருக்குள்ளான ஒரு சகோதரர் தான். அவன் தான் என்ன செய்யவேண்டும் என்று உங்களைக்கேட்பான். அடுத்த நாள், ஒரு சகோதரி தன் மாமியாரோடு தனக்கிருக்கும் ஒரு பிரச்சினையைச் சொல்லிக்கொண்டு உங்களிடத்தில் வரலாம். அந்த மாமியாரும்கூட சபையில் உள்ள ஒரு சகோதரிதான். நீங்கள் என்ன செய்வீர்கள்? "நீதிமன்றத்துக்குப்போய், நீதிபதியைப் பாருங்கள்," என்று நீங்கள் அவர்களிடம் சொல்வீர்களா? நிச்சயமாக உங்களால் அப்படிச் செய்யமுடியாது. நாம் இப்போது காட்டியதுதான் ஒரே வழி. உங்களிடம் ஓர் இருதயம் இருக்கவேண்டும்; உங்களிடம் ஒரு மார்பு இருக்கவேண்டும்; உங்களிடம் அன்பு இருக்கவேண்டும். அவர்களை உங்கள் இருதயத்தின்மேல் போட்டுக்கொண்டு, இவ்வாறு அவர்களைக் கர்த்தரிடம் கொண்டுவாருங்கள். உங்கள் ஆவியை இயக்கி, அவர்களைக் கர்த்தருக்குமுன்பாக வாசியுங்கள். முதலாவது தகப்பனை வாசியுங்கள்; பின்பு மகனை வாசியுங்கள், அவர்களுடைய பழக்க வழக்கங்களை, அவர்களுடைய தேசீயத்தன்மைகளை, அவர்களுடைய பண்புகளை, அவர்களுடைய எண்ணங்களை, அவர்களுடைய கல்வியறிவை உங்கள் எண்ணத்தின்படி வாசிக்காமல், வார்த்தையின் வெளிச்சத்தில் வாசியுங்கள். இந்தக் காரியங்களையெல்லாம் வாசியுங்கள். வாசித்தபின்பு, வாக்கியங்களையும், மொழியையும், ஒவ்வொரு குறிப்பாக நீங்கள் அவரிடமிருந்து பெறுவீர்கள். கர்த்தருடைய மனதை உங்களுக்கு வெளிப்படுத்தும் வார்த்தையை நீங்கள் அவரிடமிருந்து பெறுவீர்கள். பின்பு மகனிடமும், தகப்பனிடமும் உங்களால் பேசமுடியும். சகோதரியிடமும், அவளுடைய மாமியாரிடமும் அப்படியேசெய்யுங்கள். அவர்களிடம், "இதுவே கர்த்தருடைய மனம். இதைப்பற்றி ஜெபியுங்கள்," என்று உங்களால் சொல்லமுடியும். கர்த்தரிடமிருந்து தீர்ப்பையும், தீர்மானத்தையும் பெறுவீர்கள். இதுவே கர்த்தருடைய மக்களுக்கான நீதிமன்றம். நமக்கு இப்படிப்பட்ட நீதிமன்றம் தேவை. பரலோக உச்ச நீதிமன்றத்தின் உள்ளூர் பிரதிநிதித்துவம் நமக்குத் தேவை. ஊரிம் தும்மிம் ஆகியவைகளைக்கொண்ட பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின்கீழ் உள்ள ஆசாரியத்துவமே நீதிமன்றம்.

ஒரு கூட்டம் தேவபிள்ளைகள் கூட்டாகக் கர்த்தருக்குப் பணிவிடை செய்வதற்கு ஒருங்கிணைந்திருப்பது ஒரு சிறிய காரியம் இல்லை. இது அவ்வளவு எளிதல்ல. உங்கள் குடும்பத்தையே பாருங்கள். உங்களுடைய எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஒருவகையான குடும்ப நீதிமன்றம் உங்களிடம் இல்லையா? சபையில் குடும்ப நீதிமன்றம் என்றால் என்ன? பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின்கீழ், வார்த்தையின்

வெளிச்சத்தில் எல்லா சகோதர சகோதரிகளையும் வாசிப்பதில் கர்த்தரோடு கொள்ளும் ஐக்கியமே, ஆசாரியத்துவமே, குடும்ப நீதிமன்றம். இப்படி நம் எல்லா விவகாரங்களுக்கான தீர்ப்பைப் பெறுகிறோம்; தீர்மானங்களை எடுக்கிறோம். நம் எல்லாப் பிரச்சினைகளும், கேள்விகளும் இப்படித் தீர்க்கப்படுகின்றன; தர்க்கம்பண்ணுவதால் இல்லை; ஆலோசிப்பதாலோ, காரண காரியங்களை அலசிப்பார்ப்பதாலோ, ஓர் அரசியல்வாதியைப்போல அல்லது பூமிக்குரிய நீதிபதியைப்போல ஏற்பாடுசெய்வதாலோ தீர்க்கப்படுவதில்லை. ஐக்கியத்தினாலும், அபிஷேகத்தினாலும், விசுவாசிகளின் சுற்றுச்சூழ்நிலைகளையும், தன்மைகளையும், அனுதின வாழ்க்கையையும் கர்த்தருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் அன்பினால் வாசிப்பதாலுமே அது தீர்க்கப்படும்.

பரிசுத்த வாழ்வின் ஒழுங்குமுறைகள்

கட்டுப்படுத்தும் முன்றாவது அடிப்படைக் கோட்பாடு, பரிசுத்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகள். இந்த ஒழுங்கு முறைகள் யாவை? லேவியராகமத்தில் பலிகளும், ஆசாரியத்துவமும், பல்வேறு ஒழுங்குமுறைகளும் இருக்கின்றன. லேவியராகமத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்; முதல் அதிகாரத்திலிருந்து ஏழாம் அதிகாரம்வரை பலிகளைப்பற்றிப் பேசுகிற முதல் பகுதி; எட்டாம் அதிகாரத்திலிருந்து பத்தாம் அதிகாரம்வரை ஆசாரியத்துவத்தைப் பற்றிப் பேசுகிற இரண்டாவது பகுதி; பதினோராம் அதிகாரத்தி லிருந்து புத்தகத்தின் கடைசிவரை அநேக ஒழுங்குமுறைகளைப் பற்றிப் பேசுகிற மூன்றாவது பகுதி. பரிசுத்த வாழ்வைப்பற்றி, பரிசுத்த வாழ்க்கையைப்பற்றி எல்லா வகையான ஒழுங்கு முறைகளும் அங்கு இருக்கின்றன. அவைகள் அனைத்தையும் நாம் இப்போது விரிவாகப் பார்க்கமுடியாது. நாம் விரிவாகப் பார்த்தால், அவைகள் எவ்வளவு சுவாரஸ்யமானவை, எவ்வளவு இனிமையானவை, எவ்வளவு பொருள்பொதிந்தவை என்று நம்மால் பார்க்கமுடியும். எது சுத்தமானது எது அசுத்தமானது, எது பொதுவான உலகப்பிரகாரமான காரியங்களிலிருந்து வேறுபிரிக்கப்பட்டது எது வேறுபிரிக்கப்பட்ட தல்ல, எப்படி நடக்கவேண்டும் எப்படி நடக்கக்கூடாது ஆகியவைகளைப்பற்றி அங்கு அநேக ஒழுங்குமுறைகள் இருக்கின்றன. இவையனைத்தும் பரிசுத்த வாழ்வுக்கான ஒழுங்குமுறைகள்.

இதை எளிமையாகப் புரிந்துகொள்வதற்காக, இந்த ஒழுங்கு முறைகளை மூன்று சிறிய அடிப்படைக் கோட்பாடுகளாகச் சுருக்கிவிடலாம். முதல் கோட்பாடு, நாம் கர்த்தருக்குச் சொந்தமான மக்கள். இது நம்மை ஒழுங்குபடுத்தவேண்டிய ஒரு சிறிய அடிப்படைக் கோட்பாடு. நீங்கள் கர்த்தருக்குச் சொந்தம், நீங்கள்

கர்த்தருடைய மக்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இதை நினைவில் வைத்துக்கொண்டால், அநேகக் காரியங்களிலிருந்து பாதுகாக்கப்படுவீர்கள். நீங்கள் கர்த்தருடைய மக்கள் என்று நினைக்கும்போது, உங்களால் ஒரு திரை அரங்குக்குப் போகமுடியும் என்று நினைக்கிறீர்களா? அந்த நினைவு உங்களைத் திரை அரங்குக்குப் போகவிடாமல் ஒதுங்கச்செய்யும். நீங்கள் ஒருவருடன் சண்டைபோடமுடியும் என்றும், அதேநேரத்தில் நீங்கள் கர்த்தருக்குச் சொந்தம் என்று நினைக்கமுடியும் என்றும் எண்ணுகிறீர்களா? முயன்றுபாருங்கள். உங்கள் சண்டை என்னவாகும் என்று நீங்கள் காண்பீர்கள்.

ஒருமுறை ஒரு தூரகிழக்குத் தேசத்தில் பயணம்செய்வதற்கு ஒரு ரிக்ஷாக்காரரை அமர்த்தினேன். ஐந்து ரூபாய் கட்டணம் என்று முதலில் அவர் என்னிடம் கூறினார். நானும் அதற்கு ஒப்புக்கொண்டேன். நான் போய்ச் சேரவேண்டிய இடத்தை அடைந்தபோது, ஒரேவொரு பத்து ரூபாய்த்தாள் மட்டுமே என்னிடம் இருந்ததைப் பார்த்தேன்; எனவே பத்து ரூபாயை அவரிடம் கொடுத்துவிட்டு, சில்லறைக்காகக் காத்திருந்தேன். அவர் பையில் தடவிப்பார்த்துவிட்டு, இறுதியில், "வருந்துகிறேன், உங்களுக்குத் திருப்பித்தர என்னிடம் நான்கு ரூபாய் மட்டுமே இருக்கிறது," என்று சொன்னார். இது அவருடைய தந்திரம். நான் அவருடன் சண்டைபோட ஆரம்பித்தேன். ஆனால், நான் தேவனுடைய பிள்ளை என்று திடீரென்று நினைவுகூர்ந்தேன். இந்த சாதாரண நினைப்பே அதை விட்டுவிடச்செய்தது. "சரி, சரி, மறந்து விடு; ஒரு ரூபாய்தானே, பரவாயில்லை," என்று சொன்னேன். தேவனுடைய பிள்ளையாகிய நான் எப்படி ஒரு ரிக்ஷாக் காருடன் தர்க்கிக்கலாம்? அது கர்த்தருடைய நாமத்துக்கு அவமானம்.

நீங்கள் எப்போதெல்லாம் ஒரு காரியத்தைச் செய்யப் போகிறீர்களோ, அப்போதெல்லாம் நீங்கள் கர்த்தருடைய பிள்ளை என்பதை நினைவுகூர வேண்டும். இது மிகவும் சட்டரீதியானது என்று சொல்லாதீர்கள். நீங்களும் நானும் இப்படிப்பட்ட வகையில் சட்டரீதியாகத்தான் இருக்கவேண்டும். சிலவேளைகளில் சகோதரிகள், குறிப்பாக தூரகிழக்குத் தேசத்தில் உள்ள சகோதரிகள், உண்மையாகவே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஏற்றது என்று சொல்லமுடியாத ஆடைகளைத் தரிக்கிறார்கள். அவர்கள் தாங்கள் கர்த்தருக்குச் சொந்தம் என்று மட்டும் நினைவுகூர்ந்தால், அந்த நினைப்பே அவர்கள் இப்படி உடுத்தாதவாறு அவர்களை விலக்கிக் காத்துக்கொள்ளும். தாங்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்பதைச் சுலபமாக மறந்துவிட்டு, பிசாசின் மக்களைப்போல உடுத்த ஆரம்பிக்கிறார்கள். நாம் கர்த்தருடைய மக்கள் என்று நினைவு

கூர்வதே, ஒழுங்குமுறைகளின் முதலாவது சிறிய அடிப்படைக் கோட்பாடு.

இரண்டாவது சிறிய கோட்பாடு என்னவென்றால், நாம் இந்த உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம். "நான் உங்களை மற்ற மக்களைவிட்டுப் பிரித்தெடுத்தேன்," என்று கர்த்தர் சொன்னார். இந்த உலகத்திலுள்ள மற்ற மக்களிலிருந்து கர்த்தர் நம்மைப் பிரித் தெடுத்திருக்கிறார். அவர்கள் செய்பவைகளை நம்மால் செய்யமுடியாது. அவர்கள் பேசுபவைகளை நம்மால் பேசமுடியாது. அவர்கள் வைத்திருப்பவைகளை நம்மால் வைத்துக்கொள்ளமுடியாது. அநேக வேளைகளில் நான் கடைக்குச் சென்றிருக்கிறேன், ஆனால் என்னால் எதையும் வாங்கமுடிய வில்லை. என்னால் செய்யமுடிந்ததெல்லாம், தலையை ஆட்டி, "இல்லை, இல்லை, இங்கு எனக்கு எதுவுமே இல்லை. நான் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறேன்," என்று சொல்வதுதான்.

சியாட்டிலிலிருந்து சான்பிரான்சிஸ்கோவரை, இன்னும் சொல்லப்போனால், லாஸ் ஏஞ்சலஸ்வரை, ஒரு ஜோடி காலணி வாங்க நான் முயன்றுகொண்டிருக்கிறேன். விசித்திரமான, நவீனமான நாகரீகங்களில் அநேக வகைகள் இருக்கின்றன. ஆனால் தேவனுடைய பிள்ளைக்கேற்ற ஒரு ஜோடி காலணியைக் கண்டுபிடிப்பது சற்றுக் கடினமாக உள்ளது. நான் பார்க்கிற வகைகளில் ஏதாவது ஒன்றை வாங்கினால், கர்த்தருடைய பிள்ளைகளுக்கு முன்னால் நின்று, அவர்களுக்குப் பணிவிடைசெய்ய முடியாதோ என்று நான் பயப்படுகிறேன். ஆ, பொருள்கள், இந்தக் கடைகள் விற்றுக்கொண்டிருக்கிற உலகப்பிரகாரமான பொருள்கள்! உலகப்பிரகாரமான மக்களுக்கெல்லாம் மனமாற்றம் ஏற்பட்டால், மனமாற்றம் ஏற்பட்டபின்பு தாங்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்றும், இந்த உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவர்கள் என்றும் நினைவுகூர்ந்தால், எல்லாக் கடைகளையும் கண்டிப்பாக மூடவேண்டியிருக்கும். அவர்களுக்கு எந்த வியாபாரமும் இருக்காது. பெரும்பாலான மக்களுக்கு இன்னும் மனமாற்றம் ஏற்படவில்லை என்பது வருந்தத்தக்கது, ஆனால் கர்த்தரால் மனமாற்றப்பட்டிருக்கிறவர்கள் இந்த உலகத்திலிருந்து இன்னும் பிரிக்கப்படாமலிருப்பதுதான் மிகப்பெரிய பரிதாபம். குறைந்தபட்சம், கர்த்தரால் மனமாற்றப்பட்டிருக்கிற நாமாவது இந்த உலகத்திலிருந்து கர்த்தரால் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிற மக்கள் என்று நினைவுகூர வேண்டும். இதுவும் நம்மைக் கட்டுப்படுத்தவேண்டிய அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று. இது மிகவும் சட்டரீதியானது என்று சொல்லாதீர்கள். நாம் மிகவும் சட்டரீதியாக இருக்கவேண்டும்.

கர்த்தர் பரிசுத்தர்; எனவே நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பதே மூன்றாவது சிறிய அடிப்படைக் கோட்பாடு. கர்த்தர் மற்ற எல்லாக் காரியங்களிலிருந்தும் பிரிந்திருப்பவர், வித்தியாசமானவர்; எனவே நாமும் மற்ற எல்லாக் காரியங்களி லிருந்தும் சுத்திகரிக்கப்பட வேண்டும். அவர் பரிசுத்தராக இருக்கிற தைப்போல, நாமும் எல்லாக் காரியங்களிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டும்.

இந்த மூன்று சிறிய அடிப்படைக் கோட்பாடுகளும் சேர்ந்து, கட்டுப்படுத்தும் பெரிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை உருவாக்குகின்றன. இவைகளே பரிசுத்த வாழ்வின் ஒழுங்கு முறைகள். அவைகள் என்ன? முதலாவது, நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்று நினைவுகூருங்கள்; இரண்டாவது, நீங்கள் இந்த உலகத்தைவிட்டுப் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள் என்று நினைவுகூருங்கள்; மூன்றாவது, உங்கள் தேவன் பரிசுத்தமான தேவன், எனவே அவர் பரிசுத்தராயிருப்பதைப்போல நீங்களும் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்று நினைவுகூருங்கள். இந்த மூன்று ஒழுங்குமுறைகளும் நம் வாழ்விலுள்ள அனைத்தையும் கட்டுப்படுத்தவேண்டும்.

முடிவாக, ஒரு கூட்டமான நமக்குக் கர்த்தருடைய பிரசன்னம் ஒரு வழிநடத்துதலாக இருக்கிறது. நாம் போக வேண்டுமா அல்லது தங்கவேண்டுமா என்பதைக் கர்த்தருடைய பிரசன்னத்தின்மூலம் நாம் அறியலாம். கர்த்தருடைய பிரசன்னத்தைத்தவிர வேறொன்றினாலும் நாம் வழிநடத்தப்படக்கூடாது. இதுவே கட்டுப்படுத்தும் முதலாவது அடிப்படைக் கோட்பாடு. பின்பு, நம்மிடையே ஏதாவது பிரச்சினை இருந்தால், புறம்பான வழியில் நாம் எந்தத் தீர்வையும் தேடவேண்டிய தேவையில்லை. நமக்கு ஆசாரியத்துவம் என்னும் நீதிமன்றம் உண்டு. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின்கீழ் கர்த்தரோடுள்ள நம்முடைய ஐக்கியத்தின் மூலமும், வார்த்தையின் வெளிச்சத்தில் எல்லா சகோதர சகோதரி களையும் அன்போடு படிப்பதின்மூலமும், தேவையான தீர்ப்பையும், சரியான தீர்மானத்தையும் நாம் அடையலாம். இதுவே கட்டுப்படுத்தும் இரண்டாவது அடிப்படைக் கோட்பாடு. நம் அன்றாட வாழ்வையும், அன்றாட நடவடிக்கைகளையும் பொறுத்தவரை, நாம் கர்த்தருடைய பிள்ளைகள் என்றும், நாம் இந்த உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம் என்றும், கர்த்தர் பரிசுத்தராயிருப்பதைப்போல நாமும் பரிசுத்தமாக இருக்கவேண்டும் என்றும் நாம் நினைக்கிற நினைப்பே நம்மை ஆளவேண்டும். இதுவே கட்டுப்படுத்தும் மூன்றாவது அடிப்படைக் கோட்பாடு. இந்த அடிப்படைக் கோட்பாடுகளால் நாம் ஆளப்பட்டால், அந்த நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கச் செல்வதற்கு

நாம் ஆயத்தமானவர்களும், தகுதியானவர்களுமாயிருப்போம்; சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் நுழைவதற்கு நமக்குத் திறன் கிடைக்கும்.

அதிகாரம் பன்னிரண்டு

தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி

IV. சேனையை உருவாக்குவதால்

வேத வாசிப்பு: எண். 1:1-4, 17, 18, 52, 53; 2:1, 2; 4:4; 8:23-26; 26:1, 2, 52-56, 63-65

நல்ல தேசத்துக்குள் நுழைவதைக்குறித்த அநேகக் காரியங்களை நாம் பார்த்தோம். அவைகளெல்லாம் கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்வதோடு தொடர்புடையவைகள்; கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்வதில் தொடங்கி, பலிகளும் ஆசாரியத்துவமுமுடைய கூடாரமாக விரிவடைந்த பெட்டியாக அவரை அனுபவித்துமகிழ்வதுவரை உள்ள காரியங்களோடு தொடர்புடையவைகள். நம் அனுபவத்தில் இந்த நிலையை எட்டும்போது நாம் ஓரளவுக்கு முதிர்ச்சியடைந்திருக்கிறோம்; அப்போது சில பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் இருப் போம். இந்தக் கட்டத்தில்தான் நம்மால் ஆசாரியத்துவத்தில் இயங்கமுடிகிறது. இதன் பொருள் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நம்மால் தேவனைச் சேவிக்கமுடியும்.

யாத்திராகமத்திலிருந்து எண்ணாகமம்வரை

யாத்திராகமத்தில் எல்லாம் முன்னேறுகிற நிலையில் வழங்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் மக்கள் கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்வதில் தொடங்கி ஒருநாள் அவர்களிடையே கூடாரம் நிறுவப்படும்வரைக்கும் தொடர்ந்து சென்றார்கள். அப்போது தான் அவர்கள் கிறிஸ்துவைத் தேவனுடைய சாட்சியாக அனுபவித்துமகிழ்ந் தார்கள், அந்தக் கட்டத்தில் அவர்கள் ஆசாரியர்களாக தேவனுக்காகப் பொறுப்புகளை ஏற்கமுடிந்தது. இதுதான் யாத்திராகமம்.

யாத்திராகமத்தைத் தொடர்ந்து நாம் லேவியராகமத்துக்கு வருகிறோம்; அங்கு கிறிஸ்து நாம் அனுபவித்துமகிழ்வ தற்கான அநேகப் பலிகளாக இருப்பதைப் பார்க்கிறோம். தேவ மக்கள் கிறிஸ்துவை இதுவரை அனுபவித்ததைவிட இன்னும் நிறைவாக அனுபவித்துமகிழலாம். அப்போது ஆசாரியத்துவத்தின் முழுப் பொறுப்பையும் அவர்களால் சுமக்கமுடியும்; பரிசுத்த வாழ்க்கையைப்பற்றிய சகல தெய்வீக ஒழுங்குமுறைகளையும் அவர்களால் உணரமுடியும். லேவியராகமத்தில் மூன்று பகுதிகள்

இருக்கின்றன என்று நாம் பார்த்தோம்; முதல் பகுதி பலிகளைப் பற்றிப் பேசுகிறது. இரண்டாவது பகுதி ஆசாரியத்துவத்தைப்பற்றிப் பேசுகிறது. மூன்றாவது பகுதி பரிசுத்த வாழ்க்கையின் தெய்வீகக் கோட்பாடுகளைப்பற்றிப் பேசுகிறது.

லேவியராகமத்துக்குப்பிறகு எண்ணாகமத்துக்கு வருகிறோம். எண்ணாகமம் முழுக்க முழுக்க இஸ்ரவேல் மக்கள் எண்ணப்படுவதையும், அவர்கள் அலைந்து திரிவதையும்பற்றிய புத்தகம் என்று வேதாகமத்தின் இந்தப் பகுதியைப்பற்றிய பெரும்பாலான விரிவுரைகளும், விளக்கவுரைகளும் தெரிவிக்கின்றன. வெளித்தோற்றத்தில் இது உண்மைதான். ஆனால், சாராம்சத்தில் இது உண்மையில்லை. இந்த அம்சம் இந்தப்புத்தகத்தில் இருந்தபோதும் பிரதானமாகவும், ஆவிக்குரியரீதியிலும் இது மகிமையான நிகழ்ச்சிகளின் புத்தகம். இது தெய்வீக சேனை உருவாக்கப்படுவதைப்பற்றிப் பேசுகிற புத்தகம். யாத்திராகமத்திலும் லேவியராகமத்திலும் கூறப்பட்டுள்ள அனுபவங்கள் வழியாக இந்தக் கட்டத்துக்கு வரும்போது மட்டுமே தேவமக்கள் தேவனுக்காக யுத்தம்செய்யும் ஒரு சேனையாக உருவாக்கப்படுவது சாத்திய மாகிறது. கர்த்தருடைய ஒரு கூட்டம் பிள்ளைகள் இந்தப் பூமியில் கர்த்தருக்காக ஒரு சேனையாக உருவாக்கப்படமுடியும் என்பது மெய்யாகவே மகிமையானது. இந்த மக்கள்தான் தேசத்தைச் சுதந்தரிக்கப்போகிற மக்கள் என்பது இன்னும் மகிமையானது. தேவனுக்காக யுத்தம்செய்கிற மக்களே தேசத்தைச் சுதந்தரித்துப் பங்கிடப்போகும் மக்கள்.

எண்ணாகமத்தில் இஸ்ரவேல் மக்கள் இரண்டுமுறை எண்ணப்பட்டார்கள். முதல்முறை யுத்தம்செய்யும் ஒரு சேனையாக உருவாக்கப்படுவதற்காக அவர்கள் எண்ணப்பட்டார்கள். இரண்டாவதுமுறை யுத்தத்துக்கான சேனையாக மட்டுமல்லை, நல்ல தேசத்தைச் சுதந்தரித்து அதைப்பங்கிடுகிற மக்களாகவும் அவர்கள் எண்ணப்பட்டார்கள். யுத்தத்தைச் செய்கிறவர்களே தேசத்தைப் பங்கிடுகிறவர்கள். ஆகையால் இந்தப் புத்தகத்தில் எண்ணப்படுவதையும், அலைந்துதிரிவதையும் மட்டும் பார்க்கவில்லை. மாறாக ஒரு சேனையாக உருவாக்கப்படுவதும் நல்ல தேசத்தைச் சுதந்தரிப்பதற்காக முன்குறிக்கப்படுவதுமான மகிமையான உண்மையையும் நாம் காணலாம்.

ஆட்டுக்குட்டியிலிருந்து சேனைவரை— சரிபார்க்கும் பட்டியல்

அப்படியானால் நல்ல தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு வழி என்ன? அது அவ்வளவு எளிதல்ல. தேசத்தைச் சுதந்தரிப்பதற்கான படிகளைப் பட்டியலிட்டுத் திரும்பிப்பார்ப்போம். முதன்முதலாகக்

கிறிஸ்துவை மீட்கும் ஆட்டுக்குட்டியாக நாம் அனுபவித்து மகிழவேண்டும். கிறிஸ்துவை நம் இரட்சகராகப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய நியாயத்தீர்ப்பை நாம் கடக்கவேண்டும். இதுதான் முதல் படி. நாம் இதைச் செய்திருந்தால் நாம் இங்கு ஒரு 'டிக்' அடித்துக்கொள்ளலாம்: முதல் படியைக் கடந்துவிட்டோம். இரண்டாவது படி என்ன? நாம் எகிப்திலிருந்து வெளியே வந்து கிறிஸ்துவை நம் அனுதின மன்னாவாக, நம் அனுதின ஜீவநிரப்பீடாக, அனுபவித்துமகிழவேண்டும். நிச்சயமாகத் தண்ணீர் குடிக்காமல் நம்மால் உணவை உட்கொள்ளமுடியாது; எனவே, கிறிஸ்துவை மன்னாவாக அனுபவித்துமகிழும்போதே அவரை ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடுகிற கன்மலையாகவும் அனுபவித்து மகிழவேண்டும். நாம் மன்னாவை அனுபவித்து மகிழ்கிறோம், ஜீவத்தண்ணீருள்ள கன்மலையையும் அனுபவித்து மகிழ்கிறோம். இப்பேர்ப்பட்ட அனுபவம் உங்களுக்கு நாள்தோறும் இருக்கிறதா? இப்பேர்ப்பட்ட அனுபவம் உங்களுக்கு உண்டு என்று உங்களில் அநேகரால் தைரியமாகக் கூறமுடியும். கிறிஸ்துவை உங்கள் உணவாகவும், உங்கள் பானமாகவும் ஒவ்வொரு நாளும் நீங்கள் அனுபவித்துமகிழ்கிறீர்கள். இல்லையென்றால் உங்களால் ஒரு கிறிஸ்தவனாக வாழ முடியாது, உங்களால் தொடர்ந்து செல்லமுடியாது, உங்கள் வாழ்க்கையைப் பராமரிக்க முடியாது. கிறிஸ்துவை நம் அனுதின உணவாகவும், நம் ஜீவத் தண்ணீராகவும் நாம் ஒவ்வொருநாளும் அனுபவித்து மகிழவேண்டும். புசிப்பதற்கும் குடிப்பதற்கும் நம்மிடம் ஏதோவொன்று இருக்கவேண்டும். காலையில் நாம் ஒருவரையொருவர் சந்திக்கும்போதெல்லாம் "காலை வணக்கம்" என்று வாழ்த்துவதற்குப்பதிலாக "நீ சாப்பிட்டாயா?" என்று கேட்கவேண்டும். இப்பேர்ப்பட்ட வாழ்த்துதலை நான் விரும்புகிறேன். சகோதரனே, இன்று காலையில் நீ ஏதாவது கொஞ்சம் புசித்தாயா? சகோதரியே, இன்று காலையில் நீ ஏதாவது கொஞ்சம் குடித்தாயா? "இன்று மூன்று வேளையும் நல்ல சாப்பாடு சாப்பிட்டேன்," என்று உங்களில் சிலர் பதிலளிக்கலாம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஒவ்வொரு நாளும் நாம் கிறிஸ்துவைப் புசித்து, அவரால் வளர்ந்துகொண்டிருக்கிறோம் என்று நாம் மக்களிடம் சொல்லவேண்டும். நாம் கிறிஸ்துவைப் புசிக்கிறோம், நாம் கிறிஸ்துவைக் குடிக்கிறோம். இந்த அனுபவம் நமக்கு இருந்தால் இதையும்கூட நாம் 'டிக்' அடித்துவிடலாம்.

இப்போது நாம் மூன்றாவது படிக்கு வருகிறோம். நீங்கள் வாழ்கிற இடத்தில் உங்களுக்கு ஒரு கூடாரம் இருக்கிறதா? நீங்கள் கிறிஸ்துவை மையமாக, அதாவது உங்களிடையே தேவனுடைய சாட்சியாக அனுபவித்துமகிழ்கிறீர்களா? கிறிஸ்துவைத்

தேவனுடைய வெளியரங்கமாகவும், விளக்கமாகவும் திடமான முறையில் நீங்கள் மெய்யாகவே அனுபவிக்கிறீர்களா? கிறிஸ்துவின் விரிவாக்கமாகிய கூடாரத்தை உங்களிடையே அவருடைய உண்மையான வெளியாக்கமாக நீங்கள் அனுபவிக்கிறீர்களா? நீங்கள் வாழ்கிற ஊரில் உங்களுக்கு இந்த அனுபவம் உண்டா? இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவையுடைய கூடாரம் உங்களிடம் இருக்கிறதா? ஆட்டுக்குட்டியாகவோ அல்லது அனுதின மன்னாவாகவோ மட்டும் இல்லை. மாறாக தேவனுடைய சாட்சியாக கிறிஸ்து. அல்லது இந்தக் கட்டத்தில் ஏதாவது கொஞ்சம் பிரச்சினை இருக்கிறதா? வேறு வார்த்தைகளில் சொல்வதானால் கிறிஸ்துவைத் தேவனுடைய வெளியரங்கமாகவும், கிறிஸ்துவின் பெருக்கமாகிய சபையை அவருடைய உண்மையான வெளியாக்கமாகவும் அனுபவிக்கிற ஒரு கூட்டம் மக்கள் உங்கள் நகரத்தில் இருக்கிறார்களா? உங்கள் பதில் என்ன? ஒருவேளை சிலர் இவைகளை அனுபவிக்க ஆரம்பித்திருக்கக்கூடும். அப்படியானால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஒருவேளை இப்படிப்பட்ட அனுபவங்கள் எதுவுமே இல்லை என்று பலர் அறிக்கை செய்யவேண்டியிருக்கும்.

நிச்சயமாக முதல்படியை எளிதாகக் கடந்துவிடுகிறோம். இரண்டாவது படியைப் பொறுத்தவரையில் கொஞ்சம் சந்தேகம் இருக்கக்கூடும். எனினும் மூன்றாவது படியைப் பொறுத்தவரையில் பெரிய பிரச்சினை இருக்கிறது. கூடாரத்தையுடைய பெட்டியின் அனுபவம் மெய்யாகவே அபூர்வம் தான். அப்படியானால் நாம் என்ன செய்யலாம்? சகோதர சகோதரிகளே, நாம் ஜெபிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நகரத்தில் சேர்ந்துவாழ்கிற நீங்கள் இந்தக் காரியத்துக்காக ஜெபிப்பதற்குக் கூடிவரவேண்டும். தேவனுடைய சாட்சியாகவே உள்ள கிறிஸ்துவை உங்கள் மையமாகவும், அவருடைய பெரிதாக்கமாகிய சபையை அவருடைய வெளியாக்கமாகவும், கர்த்தர் உங்களுக்கு வெளிப்படுத்துமாறும், அது உங்கள் அனுபவமாகுமாறும் ஜெபியுங்கள். இது உங்கள் மனதில் சேமித்துவைக்கப்பட வேண்டிய போதனை இல்லை. கர்த்தருக்குமுன்பாக உங்கள் உண்மையான நிலையை உணர்ந்து இந்த விஷயத்தைப்பற்றி அவரிடத்தில் விசாரிக்க வேண்டும். நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கே ஓர் ஆவிக்குரிய கூடாரம் எழுப்பப்படுவதற்கும், ஒரு புதிய தொடக்கம் ஏற்படுவதற்கும் நீங்கள் ஜெபிக்கவேண்டும். இது சிறிய காரியம் இல்லை; இது முற்றிலும் ஒரு புதிய ஆரம்பம். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் உங்களிடையே புதிதாக ஏதோவொன்று தொடங்கப்பட வேண்டும். முந்தைய காலத்தில் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக, மன்னாவாக அதிகபட்சம் ஜீவத்தண்ணீர் ஓடும் கன்மலையாக அனுபவித்து மகிழ்ந்திருக்கிறீர்கள். இப்போது ஒரு புதிய வழியில்,

ஒரு புதிய கட்டத்தில், நீங்கள் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ வேண்டும். அப்போது ஆவியானவரின் புதிய ஆரம்பம் உங்களிடையே தோன்றும். "இரண்டாம் வருடத்தின் முதலாம் மாதம் முதல் தேதிக்கு" (யாத். 40:2) நீங்கள் வரவேண்டும். அப்போது கூடாரம், அதாவது சபை, நிறுவப்படும். இது இரண்டாம் கட்டத்திலுள்ள புதிய தொடக்கம். நீங்கள் முதல் கட்டத்திலுள்ள முதல் வருடத்தில் ஏற்கெனவே தொடங்கி விட்டீர்கள். இப்போது இரண்டாம் கட்டத்திலுள்ள இரண்டாம் வருடத்தை நீங்கள் ஆரம்பிக்கவேண்டும். கிறிஸ்துவை உங்கள் மையமாகவும், கூடாரத்தை உங்கள் வட்டாரத்தில் எழுப்பப்பட்ட அவருடைய வெளியாக்கமாகவும் இருக்குமாறு நீங்கள் தொடர்ந்து செல்லவேண்டும்.

இப்போது நாம் நான்காவது படிக்கு வருகிறோம். நம்மிடம் இங்கு கூடாரம் இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன்பிறகு, கிறிஸ்துவை இன்னும் செழிப்பாக அனுபவிக்க நாம் தொடர்ந்து செல்லவேண்டும். அவரை குற்றநிவாரண பலி, பாவநிவாரண பலி, சமாதான பலி, போஜன பலி, சர்வாங்க தகனபலி என்ற எல்லாப் பலிகளாகவும் அனுபவிக்கவேண்டும்.

ஐந்தாவது படி கிறிஸ்துவைப் பிரதான ஆசாரியராக அனுபவிப்பதாகும். அப்போது நாம் ஆசாரியத்துவத்தை ஏற்கமுடியும். இதைப்பற்றி உங்கள் நிலை என்ன? உங்கள் ஊரில் உங்களிடம் உண்மையான ஆசாரியத்துவம் உண்டு என்று உங்களால் கூறமுடியுமா? ஒருவேளை இதுவரை பார்த்த எல்லாக் காரியங்களையும் உங்களால் 'டிக்' அடிக்கமுடியலாம். ஆனால் ஆசாரியத்துவம் என்ற இந்த விஷயத்தை உங்களால் 'டிக்' அடிக்கமுடியுமா? இது மற்றவைகளைவிடச் சற்று ஆழமான அனுபவம்.

வேதவாக்கியங்களில் பரிசுத்த ஆவியின் எண்ண ஓட்டம் அல்லது போக்கு எப்போதும் முற்போக்காகவே போகிறது. எப்போதும் முன்னேறிக்கொண்டே செல்கிறது. முதல் காரியத்திலிருந்து இரண்டாவது, பின்பு மூன்றாவது, பின்பு நான்காவது, இப்போது ஐந்தாவது என்று இப்படி சீராக முன்னேறுகிறது, சீராகத் திடமாகிறது, சீராக ஆழமடைகிறது. ஆனால், உங்களில் பெரும்பாலோர் கர்த்தருக்குமுன்பாக நேர்மையாகப் பேசுவீர்களென்றால் இந்த ஐந்தாவது காரியத்தைக் கடப்பது சற்றுக் கடினம் என்று நீங்கள் அறிக்கை செய்துதான் ஆக வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளுக்குள் பெரும்பாலான குழுக்கள் ஆசாரியத்துவத்தை உணர்ந்து அடைந்ததாக இல்லை. உங்கள் நகரத்தில் ஆசாரியத்துவம் இருக்கிறதா? இந்தக் காரியங்களையெல்லாம் ஒவ்வொன்றாகச் சிந்தித்துப் பார்க்கக்

கொஞ்ச நேரம் செலவழியுங்கள். அப்போது நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

ஆசாரியத்துவத்தை ஏற்கும் அளவுக்குக் கிறிஸ்துவைப் பிரதான ஆசாரியராக அனுபவித்துமகிழும் கட்டத்தை எட்டிய கர்த்தருடைய மக்கள் கூட்டத்தை இந்தக் காலத்தில் காண்பது மிக அரிதுதான். நம் ஜெபங்களில், "கர்த்தாவே, நீரே எங்கள் பிரதான ஆசாரியர்," என்று நாம் கூறுகிறோம். ஆனால் இவைகள் வெறும் வார்த்தைகளே; நமக்கு இந்த அனுபவம் இல்லை. கிறிஸ்துவைப் பிரதான ஆசாரியராக நாம் இன்னும் அந்த அளவுக்கு அனுபவிக்கவில்லை; எனவே ஆசாரியத்துவத்தை நம்மால் ஏற்கமுடியவில்லை. தேவனையும், நம்மையும் பொறுத்தவரை ஆசாரியத்துவத்தின் பொருள் என்னவென்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

நாம் இப்போது ஆறாவது காரியத்துக்கு வருகிறோம். நாம் ஒரு சேனையாக உருவாக்கப்பட வேண்டும். இது இன்னும் ஒரு படி கூடுதலான முன்னேற்றம். இந்தப் பூமியில் கர்த்தருக்காக யுத்தம் செய்வதற்குக் கர்த்தருடைய ஒரு கூட்டம் பிள்ளைகளாகிய நாம் ஒரு சேனையாக உருவாக்கப்பட வேண்டும். ஆ! இது மிகப்பெரியது. இது உங்களில் அச்சத்தை உண்டாக்குமென்றால் நீங்கள் திரும்பிச் சென்றுவிடக்கூடும். இது மெய்யாகவே உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயம்.

சகோதர சகோதரிகளே, இந்தக் காரியங்களையெல்லாம் மிகச் சிரத்தையுடன் எடுத்துக்கொள்ளவேண்டும். "கர்த்தாவே, உம்மைத் தேவனுடைய சாட்சியாகிய பெட்டியாகவும், அதின் விரிவாக்கத்தை உம் வெளியாக்கமாகவும் அனுபவிப்பதைப் பற்றி எங்களுக்கு ஏதாவது தெரியுமா?" என்று நீங்கள் சேர்ந்து ஜெபிக்கவேண்டும். கர்த்தரிடம் விசாரித்து இந்த அம்சத்தில் கிறிஸ்துவைப் பிரயோகிக்க அவருடைய கிருபையால் கற்றுக் கொள்ளுங்கள். பின்பு, "உம் மக்களிடையே ஆசாரியத் துவத்தை ஏற்குமாறு உம்மைப் பிரதான ஆசாரியராக அனுபவித்த அனுபவம் எங்களுக்குக் கொஞ்சமாவது உண்டா?" என்று கர்த்தரிடம் கேளுங்கள். கர்த்தருடைய கிருபையினால் இதைக் கற்று, அனுபவியுங்கள். கிறிஸ்துவை ஆசாரியத்துவ வாழ்க்கையாகப் பிரயோகியுங்கள்.

சேனைக்கான தகுதிகள்

ஆசாரியத்துவத்தைத் தொடர்ந்து சேனை உருவாக்கப்பட வேண்டும். ஆசாரியத்துவத்தை ஏற்றதின்மூலம் இந்தப் பூமியில் கர்த்தருடைய நலனுக்காக யுத்தம்செய்யும் ஓர் ஆவிக்குரிய சேனையாக நாம் உருவாக முடியும். எனினும், இப்படிப்பட்ட

சேனையாக உருவாக்கப்படுவதற்கு நமக்குச் சில தகுதிகள் தேவைப்படுகின்றன. ஒவ்வொருவனும் சேனையாக உருவாக்கப்பட முதலாவது எல்லாரும் தன்தன் வம்சாவளியை அதாவது வம்சவரலாறைக் கொடுக்க வேண்டும்—சரீரப்பிரகாரமான வம்ச வரலாறு இல்லை, மாறாக ஆவிக்குரிய வம்சவரலாறு. சரீரப்பிரகாரமான வம்சவரலாறு எதுவும் போதாது. நமக்கு ஆவிக்குரிய வம்சவரலாறு இருந்தாகவேண்டும். இஸ்ரவேல் மக்கள் தங்கள் வம்சாவளியைக் கூறவேண்டியிருந்தது. அவர்களுடைய தகப்பன் யார், அவர்கள் எந்தக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள், எந்த வம்சத்தைச் சார்ந்தவர்கள் என்று அவர்கள் அறிவிக்கவேண்டியிருந்தது. அப்படி அவர்களால் அறிவிக்க முடியவில்லையென்றால், அவர்களால் தங்கள் வம்சாவளியைத் தெரிவிக்கமுடியவில்லையென்றால், அவர்கள் பின்னால் தள்ளிநிற்க வேண்டும்; அவர்களைச் சேனையாக உருவாக்கமுடியாது. உங்களுக்கு ஆவிக்குரிய வாழ்க்கை இருக்கவேண்டும். நீங்கள் மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா? அப்படியானால் உங்கள் வம்சாவளியைக் கூறுங்கள். குறைந்தது உங்கள் தகப்பனாருடைய பெயரையாவது கூறவேண்டும். இதன் பொருள் என்னவென்றால் நீங்கள் உங்கள் மறுபிறப்பைச் சரிபார்க்க வேண்டும். உங்களிடம் ஆவிக்குரிய ஜீவன் இருக்கிறது என்ற நிச்சயம் உங்களுக்கு உண்டா? நீ உண்மையான இஸ்ரவேலனா? நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம் என்ற முழு நிச்சயம் நமக்கு இருக்கவேண்டும்.

சமீபத்தில் ஒரு வாலிப சகோதரனுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். "உன் வயது என்ன?" என்று நான் அவனைக் கேட்டேன். "பதின்மூன்று வயதாகிறது," என்று அவன் பதிலுரைத்தான். பின்பு, "நீ எப்போது இரட்சிக்கப் பட்டாய்?" என்று அவனைக் கேட்டேன். "நான் ஒன்பது வயதில் இரட்சிக்கப்பட்டேன்," என்று அவன் பதில் சொன்னான். "நீ இரட்சிக்கப்பட்டாய் என்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன். "ஏனென்றால் நான் பரிசுத்த ஆவியானவரைச் சந்தித்தேன், நான் ஒன்பது வயதில் பரிசுத்த ஆவியானவரைச் சந்தித்தேன்," என்று சொன்னான். அவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் என்பதை நிருபிப்பதற்கு ஆவிக்குரிய வம்சாவளியென்று ஒன்றை அவனால் கொடுக்க முடிந்தது. ஓர் உண்மையான இஸ்ரவேலனுடைய ஜீவன் அவனிடம் இருந்தது. அவனிடம் ஆரம்பம் இருந்தது. இதுவே சேனை உருவாக்கப்படுவதற்கான முதல் நிபந்தனை.

இப்போது இரண்டாவது தகுதிக்கு வருவோம். உங்களிடம் பிறப்பு இருக்கிறது. உங்களிடம் ஜீவன் இருக்கிறது. ஆனால் உங்களுக்குக் குறிப்பிட்ட அளவுக்கு வளர்ச்சி வேண்டும். நீ

இருபது வயதுடையவனாக இருக்கவேண்டும் (எண். 1:3). ஒரு போர்வீரன் முதிர்ச்சியடைந்த ஜீவனை உடையவனாக இருக்கவேண்டும். குழந்தைகளைப் போருக்கு அனுப்பமுடியாது. நாம் ஆவிக்குரியரீதியில் இருபது வயதுக்குரிய முதிர்ச்சியை அடைந்திருக்கவேண்டும். இதுவே ஆவிக்குரிய ஜீவனின் வளர்ச்சியும், முதிர்ச்சியும் ஆகும். உண்மையாகவே முதிர்ச்சியடைந்தவர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்துக்காகப் போர் புரிவதற்காக நிற்கக்கூடியவர்கள், சிலராவது உங்களிடையே இருக்கிறார்கள் என்று உங்களால் கூறமுடியுமா? அநேக இடங்களில் அநேகக் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களெல்லாரும் குழந்தைகளைப்போல் ஆவிக்குரிய காரியங்களுடன் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மிக இளையவர்கள். அவர்களால் தங்கள் வம்சாவளியைக் கூறமுடியும், ஆனால் அவர்கள் வளரவில்லை. காரியத்தை இன்னும் மோசமாக்குவது, அவர்கள் பாலகர்களாக இருந்த போதும், அவர்களுடைய மதிப்பீட்டில் அவர்கள்தான் மிகப் பெரியவர்கள்.

ஒருநாள், ஒரு சகோதரருடைய பேத்தி என்னிடம், "என்னைக் 'குழந்தை' என்று கூப்பிடாதீர்கள். நான் பெரிய ஆள்!" என்றாள். அவளுக்கு மூன்று வயதுதான் இருக்கும். ஆனாலும் தான் பெரிய ஆள் என்று அவள் நினைக்க விரும்பினாள். இப்படிப்பட்ட குழந்தையைப் போருக்கு அனுப்பமுடியுமா? இது கேலிக்குரியது! நாம் ஆவிக் குரிய ஜீவனில் வளரவேண்டும். தேவனுடைய இராஜ்ஜியத்துக் காகவும், தேவனுடைய சாட்சிக்காகவும் போர்புரியும் சேனையாக உருவாக்கப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு நாம் வளர வேண்டும்.

இது ஏதோ வெறும் போதனை இல்லை என்று மறுபடியும் சொல்ல என்னை அனுமதியுங்கள். இந்த விஷயத்தைப்பற்றி நீங்கள் ஜெபிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தரத்திற்கு நீங்கள் வளரவேண்டும் என்பதற்காக ஜெபியுங்கள்; அதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். தரத்தை ஒருபோதும் குறைக்கமுடியாது. நாம்தான் தரத்துக்கு வளரவேண்டும். வளரவேண்டும் என்றுதான் கூறுகிறேன்; வயதாக வேண்டும் என்று கூறவில்லை. உங்களுக்கு வயதாவிட்டதென்றால், உங்களை வெளியே அனுப்பிவிடுவார்கள். ஆவிக்குரிய பணியிலிருந்து நீங்கள் ஓய்வுபெற்றுவிடுவீர்கள். நீங்கள் முன்னேறத்தான் வேண்டும்; நீங்கள் ஒருபோதும் சீரழியக் கூடாது. இருபது வயதுமுதல் அறுபது வயதுவரை நீங்கள் சேனையில் நிற்கவேண்டும். நீங்கள் அனுபவம் நிறைந்தவர்களாகவும், ஆனால் சீர்குலைவுக்கு இடங்கொடுக்காதவர்களாகவும் இருக்க வேண்டும். சிலர் மெய்யாகவே இதுவரை வளரவேயில்லை. ஆனால் அவர்களுக்கு ஏற்கெனவே வயதாகிவிட்டது. அவர்கள்

வயதான இளைஞர்கள். சேனையாக உருவாக்கப்படுவதற்கு ஜீவனின் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு நாம் வளரவேண்டும். இதுவே இரண்டாவது தகுதி.

மூன்றாவது இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் தங்கள்தங்கள் குடும்பத்தின்படி தங்கள் தங்கள் கொடியின்கீழ் இருக்கவேண்டும். இதன் பொருள் என்னவென்றால் அவர்கள் தங்கள் விருப்பத்தின்படி எதையும் தெரிந்தெடுக்கமுடியாது. நீங்கள் சான்பிரான்சிஸ்கோவைச் சார்ந்தவர்கள் என்றால் சான் பிரான்சிஸ்கோ என்ற கொடியின்கீழ் தரித்திருக்கவேண்டும். நீங்கள் லாஸ் ஏஞ்செலஸைச் சார்ந்தவர்கள் என்றால், லாஸ் ஏஞ்செலஸ் என்ற கொடியின்கீழ் தரித்திருக்க வேண்டும். உங்கள் விருப்பத்தின்படி நீங்கள் எதையும் தெரிந்தெடுக்க முடியாது. ஒருவேளை நீங்கள் லாஸ் ஏஞ்செலலில் பிறந்திருக்கலாம். ஆனால் அந்த நகரத்திலுள்ள சகோதர சகோதரிக ளுடன் நீங்கள் சந்தோஷமாக இல்லை. அந்த நகரத்தை விட்டுப் போக விரும்புகிறீர்கள். சான் பிரான்சிஸ்கோ நகரத்தி லுள்ள சகோதர சகோதரிகளுடன் அதிக சந்தோஷமாக இருக்கலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் "திரும்பிப் போ; உன் தகப்பனுடைய வீட்டுக்குத் திரும்பு. உன் வீட்டாருடைய கொடிக்குத் திரும்பு," என்று கர்த்தர் கூறுகிறார். இதன் பொருள் என்னவென்றால் உங்கள் தனிப்பட்ட சுவைகள், உங்கள் தனிப்பட்ட விருப்பங்கள், உங்கள் தனிப்பிட்ட தெரிந்தெடுப்புகள் எல்லாவற்றையும் நீங்கள் கைவிட்டுவிட வேண்டும். தேவ மக்களிடையே தனிப்பட்ட தெரிந்தெடுப்பு கிடையாது. "நான் யூதா கோத்திரத்தைச் சார்ந்தவன். ஆனால் இந்தக் கோத்திரத்தை நான் விரும்பவில்லை. பென்யமீன் கோத்திரத்தை நான் விரும்புகிறேன்," என்று சொல்லமுடியாது. நாம் யூதாவின் கொடியின்கீழ் நிலைத்திருக்கவேண்டும். என் சொந்த ஆசை மட்டுப்படுத்தப்பட வேண்டும்.

இன்று கர்த்தருடைய பிள்ளைகளிடையே இருக்கும் சூழ்நிலையைப் பாருங்கள். எவ்வளவு குழப்பம்! யூதா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் பென்யமீன் கொடியின்கீழ் வந்திருக்கிறார்கள், பென்யமீன் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மனாசே கோத்திரத்துக்குப் போயிருக்கிறார்கள். எல்லாம் ஓர் அலங்கோலமான நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் சேனையை உருவாக்குவது சாத்தியமேயில்லை. நமக்கு ஜீவன் இருக்கவேண்டும். நமக்கு வளர்ச்சி இருக்க வேண்டும். நாம் நம் பிதாவின் வீட்டாருடைய கொடியால் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இது நாம் கற்றுக்கொள்ள வேண்டிய கண்டிப்பான பாடம்.

நான்காவது, நாம் ஒழுங்குக்கிரமமாக இருக்கவேண்டும்.

இஸ்ரவேல் மக்களின் சித்திரத்தைப் பாருங்கள். நடுவில் பெட்டியும், அதின் பெரிதாக்கமாகிய கூடாரமும் இருந்தன. கூடாரத்தைச்சுற்றி லேவியர்கள் குடும்பம் குடும்பமாகப் பாளயமிறங்கியிருந்தார்கள். அதன்பின் அவர்களுக்கு வெளியே, அவர்களைச்சுற்றி மற்ற பன்னிரண்டு கோத்திரங்களும் அவரவர் இடங்களில் பாளயமிறங்கியிருந்தார்கள். அவர்கள் ஒழுங்குக்கிரமத்தைக் கடைப்பிடித்தார்கள். ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஓர் இடமிருந்தது. சில கோத்திரங்கள் கிழக்குத் திசையில் பாளயமிறங்க வேண்டும், சில கோத் திரங்கள் தென் திசையில் பாளயமிறங்கவேண்டும், இன்னும் சிலர் மேற்குத் திசையிலும், மற்றவர்கள் வடக்குத் திசையிலும் பாளயமிறங்க வேண்டும். கர்த்தருடைய ஒழுங்குக்கிரமம் பணிந்தடங்குகிற விஷயத்தோடு சம்பந்தப்பட்டது. நாம் ஒழுங்குக்கிரமத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்றால், பணிந்தடங்குதல் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் யாராவது ஒருவருக்குப் பணிந்தடங்க வேண்டும்; இல்லையென்றால், சேனை உருவாக்கப்படக் கூடிய சாத்தியமே இல்லை. தேவனுடைய இராஜ்ஜியத் துக்காகப் போர்புரிவதற்கு அவருடைய சேனையாக உருவாக்கப்படுவதற்காக நாம் ஜீவனில் வளரும்போது, தானாகவே பணிந்தடங்குவோம். நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் பணிந்தடங்குவோம். நம்மிடையே ஒரு தெய்வீக ஒழுங்குக் கிரமம் இருக்கும்; எனவே ஒரு சேனை உருவாக்கப்படும்.

இதுவே நாம் நல்ல தேசமாகிய சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைச் சுதந்தரிப்பதற்கான வழி. வேறு வழியே இல்லை. கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதுதான் ஒரே வழி. கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாகவும், மன்னாவாகவும், ஜீவத்தண்ணீர் ஓடும் கன்மலையாகவும், கூடாரத்தையுடைய பெட்டியாகவும், பலிகளாகவும், நாம் ஆசாரியத்துவத்தை ஏற்பதற்கு அவரை ஆசாரியராகவும் அனுபவித்து மகிழவேண்டும். கடைசியாக சேனையாக உருவாக்கப்படுமாறு நாம் வளரவேண்டும்.

ஐந்தாவது தகுதி, நாம் எப்போதும் பசுமையாகவும் இளமையாகவும் இருக்கவேண்டும். வயதாகத் தொடங்கும் போதெல்லாம் நாம் மீண்டும் புதிதாக்கப்படவேண்டும். இரண்டாவதுமுறை எண்ணித் தொகைபார்த்த சமயத்தில், முதல்முறை எண்ணித் தொகைபார்த்த சமயத்தில் இருந்த வர்களுக்கு வயதாகிவிட்டது. எனவே அவர்கள் மறுபடியும் எண்ணப்பட வேண்டும். வயதானவர்கள் இறந்துவிட்டார்கள். புதியவர்கள் வந்துவிட்டார்கள். தொடர்ந்து இளமையாகவும், பசுமையாகவும் இருக்கிறவர்களே தேவனுடைய மக்களிடையில் ஒரு சேனையாக உருவாக்கப்பட்டு, நல்ல தேசத்தைப் பங்கிடமுடியும்.

உண்மையில் இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் சேனையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. தகுதியில்லாதவர்களும் இருந்தார்கள். ஏனென்றால் அவர்கள் பெண்கள். வேதத்தில் பெண் என்பதற்குப் "பெலவீன பாண்டம்" (1 பேதுரு 3:7) என்று பொருள். அவர்கள் கர்த்தருடைய மக்களிடையேயுள்ள பலவீனமானவர்களுக்கு முன்னடையாளம். இருபது வயதுக்குக் குறைவானவர்களும் இருந்தார்கள். அவர்கள் முதிர்ச்சி அடையாதவர்கள். சேனையில் சேருவதற்கு எல்லாரும் தகுதி பெற்று விடுவதில்லை. உங்களிடையேயுள்ள எல்லா சகோதர சகோதரிகளும் சேனையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று எதிர்பார்க்காதீர்கள். ஒருவேளை இரண்டு அல்லது மூன்றுபேர், நான்கு அல்லது ஐந்துபேர், ஒன்பது அல்லது பத்துப்பேரே சேர்த்துக்கொள்ளப்படக்கூடும். மையக் கருவாக ஒரு சிறு குழுவே இருக்கக்கூடும். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், உண்மையாகவே, ஜீவனில் வளர்ந்த ஒரு சிலராவது இருக்கும்வரை சேனையாக உருவாக்கப்படுவதற்கான தளத்தை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம். "கர்த்தாவே, உமக்காகப் போர்புரிவதற்கு இந்த நகரத்தில் நாங்கள் சேனையாக இருக்கிறோம்," என்று நீங்கள் கர்த்தரிடம் சொல்லலாம்.

ஆயினும், நாம் சேனையாக உருவாக்கப்படுவதற்குமுன்பு நாம் முதலாவது ஆசாரியத்துவத்தை ஏற்கவேண்டும் என்ற விஷயத்தில் தெளிவாக இருக்கவேண்டும். சித்திரத்தைப் பாருங்கள். நடுவில் ஆசாரியத்துவத்தையுடைய பெட்டி இருக்கிறது. பின்பு, கூடாரத்தைச் சுற்றி ஆசாரியத்துவம் இருக்கிறது. அடுத்து ஆசாரியத்துவத்தைச்சுற்றி சேனை இருக்கிறது. நாம் மையத்திலிருந்து சுற்றுவட்டத்துக்குச் செல்லவேண்டும். கர்த்தருடனான ஐக்கியத்தை எப்படிக் காத்துக்கொள்ளவேண்டும் என்று தெரியாவிட்டால் நம்மால் போரிடமுடியாது. ஆவிக்குரிய யுத்தம் எப்போதும் ஆவிக்குரிய ஐக்கியத்தையே சார்ந்திருக்கிறது. ஆசாரியத்துவத்தைப் பராமரிப்பதின்மூலம் நம்மால் போர்புரிய முடியும். கர்த்தருடனான நம் ஐக்கியத்தை நாம் இழந்துவிட்டால் நம்மால் எதிரியை ஒன்றும் செய்யமுடியாது; நாம் தோற்றுப் போவோம்.

எண்ணாகமம் 4:4, 31, 34, 38, 42-ல் கூறப்பட்டுள்ள "பணிவிடை" என்ற வார்த்தை ஆசாரியத்துவத்தின் பணிவிடையோடு தொடர்புடையது. எபிரேய மொழியில் "பணிவிடை" என்ற இதே வார்த்தைதான் எண்ணாகமம் 26:2-ல் "யுத்தம்" என்று கூறப்பட்டுள்ளது. இது சேனையின் யுத்தத்தோடு தொடர்புடையது. ஆசாரியர்கள் கூடாரத்தில் தங்கள் பணிவிடையைச் செய்யவேண்டும். ஆனால், அவர்களுடைய

பணிவிடை, யுத்தம் என்று குறிப்பிடப்படுகிறது. அவர்கள் பணிவிடை செய்துகொண்டிருக்கும்போது, யுத்தம் செய்துகொண்டிருக்கிறார்கள். வேறுவார்த்தைகளில் சொன்னால், ஆசாரியத்துவத்தின் பணிவிடையே யுத்தம். நிஜமாகவே இன்று நாம் ஆசாரியத்துவத்தில் இருந்தால், அதே நேரத்தில் நாம் சேனையாகவும் இருப்போம். ஆசாரியத்துவத்துக்கு வெளியே இருப்பதென்றால் சேனைக்கு வெளியே இருப்பதாகும். ஆசாரியத்துவத்தைப் பராமரிப்பது யுத்தத்தைப் பராமரிப்பதாகும். சேனை எப்போதும் ஆசாரியத்துவத்தாலேயே காக்கப்படுகிறது.

நம்மிடம் ஆவிக்குரிய வம்சாவளி இருக்கிறதா? நம்மிடம் போதுமான அளவுக்கு ஆவிக்குரிய ஜீவனின் வளர்ச்சி இருக்கிறதா? கர்த்தருடைய பிள்ளைகளிடையே நம் தனிப்பட்ட சுவைகளுக்கும், நம் தனிப்பட்ட ஆசைகளுக்கும், நம் தனிப்பட்ட தெரிந்தெடுப்புகளுக்கும் விதிக்கப்படும் கட்டுப்பாட்டை நாம் ஏற்றுக்கொள்கிறோமா? "ஆம்" என்று நம்மால் பதிலுரைக்க முடியுமென்றால் பணிந்தடங்கி நாம் ஒழுங்குக் கிரமத்தைக் காத்துக்கொள்ளவேண்டும், நாம் எப்போதும் பசுமையாகவும் இருக்கவேண்டும். அப்போது ஆசாரியத்துவத்தை ஏற்பதற்கான திறனைப் பெற்று, ஒரு சேனையாகவும் நாம் உருவாக்கப்படுவோம்.

சகோதர சகோதரிகளே, நாம் எவ்வளவு குறைவுள்ளவர்கள்! ஒவ்வொரு தகுதியாக நாம் சரிபார்க்கையில், ஆசாரியத் துவத்தைப் பற்றிய ஐந்தாவது காரியத்துக்கு வரும்போது நம்மால் அதைக் கடக்கமுடியாது என்று தோன்றுகிறது. ஐந்தாவது தகுதியையே நம்மால் தாண்டிப்போக முடியாவிட்டால், நிச்சயமாக ஆறாவது தகுதியைத் தாண்டவே முடியாது. நாம் ஜெபிக்கவேண்டும். கிறிஸ்துவைப் பிரதான ஆசாரியராகப் பிரயோகிக்க நாம் பிரயாசப்பட வேண்டும். ஆசாரியத்துவத்தை ஏற்க நாம் கற்றுக் கொள்ளவேண்டும். அப்போது தேவனுடைய இராஜ்ஜியத்துக்காகப் போர்புரியும் கர்த்தருடைய சேனையாக உருவாக்கப்படுவதில் நாம் சற்று முன்னேறிச் செல்லலாம்.

இன்னொரு விஷயத்தையும் நாம் கவனிக்கவேண்டும். சேனையில் பணிவிடை செய்வதற்கான தகுதி இருபது வயது; ஆனால் ஆசாரியத்துவத்துக்கான தகுதி முப்பது வயது. சேனையில் பணிவிடைசெய்யும் காலம் இருபது வயதிலிருந்து அறுபது வயதுவரை; ஆனால் ஆசாரியத்துவத்தின் காலம் முப்பதிலிருந்து ஐம்பதுவரை, சேனை, ஆசாரியத்துவம் ஆகிய இரண்டிலும் எந்த விதமான சிதைவுமின்றி நிறைவான வளர்ச்சி இருக்கவேண்டும். ஆசாரியத்துவம், சேனை ஆகிய இரண்டுமே ஜீவனில் வளர்கிற வளர்ச்சியையே சார்ந்திருக்கின்றன. இந்தக் காரியத்தை நாம்

சிரத்தையுடன் எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் வளரவேண்டும்; இல்லையென்றால் நம்மிடையே ஆசாரியத்துவமும் இருக்காது; சேனையும் இருக்காது. கர்த்தருடைய பிள்ளைகள் எவ்வளவாய் வளரவேண்டியிருக்கிறது! கர்த்தர் நம் கண்களைத் திறந்து ஜீவனின் வளர்ச்சி நமக்கு எவ்வளவாய்த் தேவைப்படுகிறது என்று காண்பிப்பாராக. ஒரு குறிப்பிட்ட தரத்துக்கு வளர்வதால் மட்டுமே ஆசாரியத்துவத்தின் பொறுப்பை நம்மால் ஏற்க முடியும், சேனையாக நாம் உருவாக்கப்படமுடியும். அப்போது மட்டுமே பெட்டியை மையமாகவும், கூடாரத்தை அதின் பெரிதாக்கமாகவும் உடைய மக்களாக நாம் ஆவிக்குரிய ரீதியில் ஒழுங்கமைக்கப்பட முடியும். அப்போது மட்டுமே எல்லாரும் பணிந்தடங்கு கிறவர்களாக ஒழுங்குக்கிரமமாகக் காக்கப்படமுடியும். இது ஓர் அழகான சித்திரம். அப்போது யோர்தான் நதியைக் கடந்து தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு நாம் தயாராக இருப்போம்.

சகலத்தையும் உள்ளடக்கிய தேசத்தைப்பற்றி, சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைப்பற்றி, நாம் அதிகமாகப் பேசிக் கொண்டேயிருக்கிறோம். இதுவே அதைச் சுதந்தரிப்பதற்கான வழி; இதுவே உள்ளே நுழைவதற்கான வழி. யாத்திராகமம், லேவிய ராகமம், எண்ணாகமம் ஆகிய இந்த மூன்று புத்தகங்களிலுள்ள எல்லாச் சம்பவங்களும் நல்ல தேசத்தைச் சுதந்தரிப்பதற்கான படிகளுடன் இடைப்படுகின்றன. ஆறு படிகள் இருக்கின்றன என்று நாம் சொல்லலாம். மற்ற படிகளுடன் ஒப்பிடும்போது முதல் இரண்டு படிகளைக் கடப்பது சற்று எளிது. பெட்டியையுடைய கூடாரம் மையமாக இருப்பது, பலிகள், ஆசாரியத்துவம், சேனை உருவாக்கப்படுதல் ஆகிய இந்தக் கடைசி நான்கு காரியங்கள் பெரும் பிரச்சினையைத் தருகின்றன. ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும்படி, அதாவது கிறிஸ்துவை ஆட்டுக் குட்டியாக அனுபவிப்பதில் தொடங்கி ஆசாரியத்துவம், சேனைவரை தொடர்ந்து செல்லும்படி நாம் ஜெபித்து, கர்த்தருக்கு முன்பாகக் கிளர்ந்தெழப்பண்ணப்படுவோமாக.

அதிகாரம் பதின்மூன்று

தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி

V. எதிர்க்கும் காரணிகள்

வேத வாசிப்பு: லேவி. 10:1-3; எண். 12:1, 2, 9, 10, 15; 13:25—14:10; 16:1-3, 12-14; 21:5, 6; 25:1-5; 26:63-65; 1 கொரி. 10:1-6; எபி. 4:11

இந்த அதிகாரத்தில் தேசத்தைச் சுதந்தரிப்பது எப்படி என்பதை நேர்மறையான அம்சத்துக்குப் பதிலாக, எதிர்மறையான அம்சத்திலிருந்து பார்ப்போம். இது நமக்கு மிகஉதவியாக இருக்கும்.

சுயாதீனமும், தனித்துவமும்

கர்த்தருடைய மக்கள் தனிநபர்களாக அல்ல, மாறாகக் கூட்ட மாகத்தான் தேசத்தைச் சுதந்தரிக்கமுடியும் என்று நாம் பார்த்தோம். இதன் பொருள் என்னவென்றால், ஒருவன் தனிநபராக இந்தத் தேசத்துக்குள் நுழையமுடியாது. இது அவனுடைய வேலையில்லை. இது ஒரு கூட்டு சரீரத்தின் வேலை. இதை நாம் மிகத்தெளிவாகப் பார்த்தோம். கர்த்தருடைய மக்கள் இந்த நல்ல தேசத்துக்குள் நுழையவேண்டுமென்றால் அவர்களிடம் கூடாரம் இருக்க வேண்டும் என்று நான் உங்களுக்கு இன்னொருமுறை நினைப் பூட்ட விரும்புகிறேன். இஸ்ரவேல் மக்கள் தங்களிடையே ஸ்தாபித்த முதல் காரியம் கூடாரம். தேசத்துக்குள் நுழைவது ஒரு கூட்டு விஷயம், அது ஒரு தனிமனித விவகாரமல்ல என்று இந்த நிகழ்ச்சி சித்திரிக்கிறது. நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கவேண்டு மென்றால் நாம் கட்டியெழுப்பப்பட வேண்டும், நாமெல்லாரும் கூடாரமாக ஒரே சரீரத்துக்குள்ளாக இணைக்கப்பட வேண்டும்.

கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிற காரியம் படிப்படியான ஒரு முன்னேற்றம். அது தொடர்ச்சியான வளர்ச்சி என்று மிகத் தெளிவாகப் பார்த்தோம். ஓர் ஆரம்பம் இருக்கிறது, ஒரு வழிமுறையும் இருக்கிறது; மேம்படுவதற்கும், முன்னேறுவதற்கும் ஒரு வழி இருக்கிறது. கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்வதில் முதலாவது தொடங்கினோம். அவரைத் தொடர்ந்து அனுபவித்துக்கொண்டே சென்று கிறிஸ்து நமக்குச் சாட்சிப்பெட்டியாகவும், கூடாரம் அதின் பெருக்கமாகவும் இருக்கக்கூடிய இடத்தை வந்தடைகிறோம். பெட்டியின் இந்தப்

பெருக்கமும், இந்தப் பெரிதாக்கமும் கிறிஸ்துவுடன் இரண்டறக் கலந்து, தெய்வீக சுபாவத்தில் ஒன்றாகக் கட்டியெழுப்பப்பட்ட ஒரு கூட்டம் மக்களே. அவர்கள் தேவனுடைய வெளியரங்கமும், சாட்சியுமாகிய கிறிஸ்துவின் உண்மையான வெளியாக்குதலாக ஒரே சரீரத்துக்குள் கட்டப்படுகிறார்கள். கிறிஸ்துவைத் தொடர்ந்து அனுபவித்துமகிழ்ந்து கொண்டிருக்கிற இந்த மக்கள் இந்தக் கட்டத்தில் ஒன்றாகிவிட்டார்கள் என்கிற விஷயத்தில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். அவர்கள் இனிமேலும் ஏதோ தனிநபர்கள் இல்லை; கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்ததால் அவர்கள் ஒரே சரீரமாகிவிட்டார்கள். தொடக்கத்தில் நாம் கிறிஸ்துவைத் தனித்தனியாகவும், ஒருவருக்கொருவர் தொடர்பில்லாமலும் அனுபவித்துமகிழ்வதுபோல் தோன்றுகிறது. நீங்கள் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்கிறீர்கள். நானும் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக அனுபவித்து மகிழ்கிறேன். நீங்கள் கிறிஸ்துவை உங்கள் வீட்டில் அனுபவித்துமகிழ்கிறீர்கள். நானும் கிறிஸ்துவை என் வீட்டில் அனுபவித்துமகிழ்கிறேன். நாமெல்லாரும் எங்கே இருக்கிறோமோ அங்கேயே கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறோம். ஆனால், கூடாரம் நம்மிடையே எழுப்பப்பட்டு நாம் கிறிஸ்துவை மென்மேலும் அனுபவிப்பதால் அவருடைய வெளிக்காட்டுதலாக மாறும் கட்டத்தை எட்டும்போது அதற்கு மேலும் நம்மால் பிரிந்திருக்கமுடியாது. நாம் ஒன்றாகக் கூடவேண்டும், ஒன்றாக இணையவேண்டும், ஒரே சரீரமாக ஒன்றாகக் கட்டியெழுப்பப்படவேண்டும். நாற்பத்தெட்டு பலகைகளையும் ஒருபோதும் பிரிக்கமுடியாது. பிரிக்கவேண்டுமானால் அவைகளிடையே உள்ளடக்கமாக பெட்டி இருக்க முடியாது. கிறிஸ்துவின் சாட்சியாகப் பெட்டி இருப்பதற்கு எந்த இடமும் இருக்காது.

கர்த்தருடைய ஒரு கூட்டம் மக்களாகிய நாம் கிறிஸ்துவை மீட்கும் ஆட்டுக்குட்டியாகவும், அனுதின மன்னாவாகவும் அனுபவித்துமகிழ்வதைவிட இன்னும் அதிகத் திடமான முறையில் அவரை அனுபவித்துமகிழ விரும்பினால், தேவனுடைய சாட்சியாக அவரை அனுபவித்துமகிழ விரும்பினால் கிறிஸ்துவினுடைய பரிபூரணத்தின் மூடுகையின்கீழ் கூடாரமாக ஒரே சரீரத்துக்குள் நாம் ஒன்றாகக் கட்டியெழுப்பப்பட வேண்டும். நாம் ஒன்றாக இருக்கவேண்டும். இந்தக் கட்டத்தில் கர்த்தருடைய பிள்ளைகளிடையே ஒருமை என்று சொல்லும்படியாக ஏதாவது இருக்க வேண்டும். கூடாரம் பெட்டியின் பெரிதாக்கமாக இருப்பதே இந்த ஒருமை. நாமாகவே, தன்னந்தனியாக, ஒற்றையாக, ஒன்றியாக ஒருபோதும் வெகுதூரம் செல்லமுடியாது. கிறிஸ்துவை நம் மீட்பராகப் பெற்றுக்கொள்ளலாம், அவரை நாள்தோறும் நம்

மன்னாவாக சிறிதளவு அனுபவித்துமகிழலாம், ஜீவ நீரோடை பாய்ந்தோடுகிற கன்மலையாகவும்கூட நாம் அவரை அனுபவித்து மகிழலாம். மெய்யாகவே தனிநபர்களாக நாம் கிறிஸ்துவை இந்த அளவுக்கு அனுபவித்துமகிழலாம். ஆனால் இதைவிட இன்னும் அதிகமாக நாம் ஒருபோதும் செல்லமுடியாது. கிறிஸ்துவை இன்னும் திடமான வகையில் நாம் அனுபவித்துமகிழமுடியாது. அவரைத் தேவனுடைய சாட்சிப்பெட்டியாக நாம் ஒருபோதும் அனுபவித்துமகிழமுடியாது. தேசத்தைப்பற்றிச் சொல்லவேண்டிய தேவையே இல்லை. பெட்டியைத் தேசத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். பெட்டி எவ்வளவு பெரியதென்றும், தேசம் எவ்வளவு மகாபெரிய தென்றும் சிந்தித்துப்பாருங்கள். மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. தேசம் ஆராய்ந்துபார்க்கமுடியாத அளவுக்குப் பெரியது. அளவிடமுடியாத அளவுக்குப்பெரியது. தேசத்தின் பரிமாணங்களே கிறிஸ்துவின் நீளம், அகலம், உயரம், ஆழம்! நாம் கிறிஸ்துவைப் பெட்டியாக அனுபவித்துமகிழ முடியவில்லை என்றால் அவரைத் தேசமாக ஒருபோதும் அனுபவித்துமகிழமுடியாது என்பது நிச்சயம். தேவ மக்களோடு நாம் ஒன்றாகக் கட்டியெழுப்பப்படும் போதுதான் கிறிஸ்துவை நாம் பெட்டியாக அனுபவிக்கமுடியும். நாம் ஒரு தனிப்பலகையாக ஒருபோதும் தொடர்ந்து செல்லமுடியாது.

கர்த்தருடைய கட்டிடத்தில் எல்லா எண்களும், பரிமாணங்களும் எப்போதும் ஐந்து, மூன்று என்ற எண்களுடன் தொடர்புடையனவாய் இருக்கின்றன. இது வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள நோவாவின் பேழை, கூடாரம், சாலமோன் கட்டிய தேவாலயம், எசேக்கியேல் புத்தகத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள தேவாலயம் ஆகிய தேவனுடைய எல்லாக் கட்டுமானப்பணியிலும் உண்மையாக இருக்கிறது. எல்லாக் கட்டிடங்களிலும் ஐந்து, மூன்று என்ற அடிப்படை எண்கள் அடங்கியிருக்கின்றன. இது ஏன்? ஏனென்றால் மூன்று என்ற எண் உயிர்த்தெழுதலிலுள்ள மூவொரு தேவனைக் குறிக்கிறது. ஐந்து என்ற எண் சிருஷ்டிப்புகளின் எண்ணாகிய நான்கு கூட்டல் சிருஷ்டிகரின் எண்ணாகிய ஒன்று. சிருஷ்டிப்புகள் கூட்டல் சிருஷ்டிகர் சமம் ஐந்து. மனிதனையும் தேவனையும் கூட்டினால் பெறுவது பொறுப்பைச் சுமப்பதற்கான தேவ-மனிதன். ஆகையால், ஐந்து என்ற எண் பொறுப்பைச் சுமப்பதற்காக ஒன்றாக இருக்கும் தேவனையும் மனிதனையும், மனிதனையும் தேவனையும் குறிக்கிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் எல்லாப் பரிமாணங்களிலும் ஐந்து, மூன்று என்ற இரண்டு எண்களையும் பார்க்கிறோம். இது தேவனுடைய கட்டிடம் உயிர்த்தெழுதலிலுள்ள மூவொரு தேவன் மனிதனோடு இரண்டறக் கலப்பதினால் கட்டியமைக்கப்படுகிறது

என்பதைக் குறிக்கிறது. இப்போது கவனியுங்கள்: பலகை களின் அகலம் மூன்று முழம் இல்லை, மாறாக ஒன்றரை முழம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் மூன்றில் பாதி. இது மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் பொருள் என்னவென்றால், நீ ஒரு முழுமையான மனிதன் இல்லை; நீ வெறும் பாதிதான். நீ இன்னொருவனோடு இணைக்கப்பட வேண்டும். கர்த்தராகிய இயேசு தம் சீடர்களை எப்போதும் இரண்டிரண்டு பேராகவே அனுப்பினார். சவுலும், பர்னபாவும் தனித்தனியாக அல்ல, மாறாக ஒன்றாகவே அனுப்பப்பட்டார்கள். பேதுருவும், யோவானும் ஒன்றாகவே சேவித்தார்கள். எப்போதும் இரண்டிரண்டுபேராகவே சென்றார்கள். நீ மட்டும் தனியாகச் செல்வாயென்றால் நீ வெறும் பாதிதான்.

எடுத்துக்காட்டாக, ஒரு சகோதரன் கூட்டத்துக்கு வரும் போது அவன் வெறும் பாதிதான் என்று நாம் கூறலாம். ஒருசில நிமிடங்களுக்குப்பிறகு அவனைத் தொடர்ந்து அவன் மனைவி வரும்போது அவள் இன்னொரு பாதி. அவர்கள் ஒன்றாக உட்காரும்போது முழுமையைப் பார்க்கிறோம்.

நீ ஒரு முழுமையான அலகு இல்லை, நீ ஒரு பாதி மட்டுமே என்பது உன் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். நீ சரீரத்தில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நீ ஒருபோதும் ஒரு தனிமனி தனாக மட்டுமே இருக்கமுடியாது. நீ தனித் துவமுடையவனாக இருந்தால் கெட்டுப்போவாய். இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்வது இன்று சற்றுக் கடினம் தான். சுயாதீனத்தையும், தனித்துவத்தையும் அதிகமாக வலியுறுத்திப் பேசுகிறார்கள். இதனால் கர்த்தருடைய பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தேவனுடைய மக்கள் என்ற வகையில் நாம் ஒருபோதும் சுயாதீனமாக இருக்கமுடியாது. நாம் சுயாதீனமாக இருக்கிறோமென்றால் ஆவிக்குரிய தற்கொலை செய்கிறோம் என்று பொருள்.

என் செவி என் சரீரத்தைப் பார்த்து, "நான் உன்னுடன் இணைக்கப்பட விரும்பவில்லை. நான் தனியாகவும், சுயாதீன மாகவும் இருக்க விரும்புகிறேன்," என்று கூறுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதின் சுயாதீனத்தால் ஏற்படக்கூடிய விளைவு என்னவாக இருக்கும்? அதன் விளைவு, செவிக்கு மரணம். கர்த்தருடைய சரீரத்தின் அவயவம் என்றமுறையில் ஏட்டளவில் இல்லை, மாறாக உண்மையாகவும், நடைமுறையிலும் நாம் பிறருடன் இணைந்து ஒன்றாயிருக்கவேண்டும். இந்தச் செவி ஒரு துண்டுத் தோலுடன் இணைந்திருக்க வேண்டும், இந்தத் துண்டுத் தோல் இன்னொரு பகுதியுடன் இணைந்திருக்க வேண்டும்; இந்தப் பகுதி இன்னொரு பகுதியுடன் இணைந்திருக்க

வேண்டும். இவ்வாறு ஒரு சரீரமாகும்வரை எல்லாப்பகுதிகளும் ஒன்றோடொன்று இணையவேண்டும். எந்தப்பகுதியும் மற்றப் பகுதிகளுடன் சேராமல் சுயாதீனமாக இருக்கமுடியாது. இந்த நிஜத்தை நாம் பார்க்கவேண்டும். இது ஒரு நயமான எண்ணமோ அல்லது போதனையோ இல்லை. மாறாக இது ஒரு நிஜம்.

இந்தக் கோட்பாட்டை நடைமுறைரீதியில் நமக்குப் பிரயோகிக்க நாம் முயன்றுபார்ப்போம். நீ கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஓர் அவயவம். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாக மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருப்பதால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! நடைமுறையில் நீ யாருடன் ஒன்றாய் இணைக்கப்பட்டிருக்கிறாய் என்று உன்னால் கூற முடியுமா? "நான் இந்தச் சகோதரனுடன் அல்லது இந்த இந்தச் சகோதரர்களுடன் நிஜமாகவே ஒன்றாக இருக்கிறேன். இவர்களுடன் உள்ளார்ந்தவிதத்திலும், நடை முறையிலும் ஒன்றாக இருக்கிறேன்," என்று ஒரு சகோதரனையோ அல்லது சில சகோதரர்களையோ உன்னால் குறிப்பிடமுடியுமா? நான் சரீரத்தின் தலையுடன் இணைக்கப்பட்டிருக்கிறேன் என்று ஒருவேளை நீ பதில்சொல்வாய். என் பாதம் இப்படிப் பதில் சொன்னால் அது தவறான இடத்தில்தான் இருக்கவேண்டும். அது என் சரீரத்தின் கீழ்முனையிலிருந்து எடுக்கப்பட்டு நேரடியாக என் தலையோடு இணைக்கப்படவேண்டும். ஆனால், தேவனுடைய ஒழுங்கு அது இல்லை. கர்த்தர் தம்முடன் ஒரு ஜோடியாகச் செல்வதற்குப் பேதுருவை அழைக்கவில்லை. கிறிஸ்துவுடன் ஜோடியாகச் செல்வதற்கு தேவன் பவுலைக் கூப்பிடவில்லை. கிறிஸ்துவோடு மட்டும் இல்லை வேறொருவரோடும், அதாவது தலையோடு மட்டும் இல்லை வேறு அவயவங்களோடும், நீ இணைக்கப்பட வேண்டும்.

நான் போகுமிடமெல்லாம், கூடுமானால், இந்த விஷயத்தைப்பற்றிப் பேசுகிறேன். ஆனால் ஒருவராவது, "சகோதரனே, கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறேன். நான் நிச்சயமாகவும், நடைமுறையிலும் ஒரு குறிப்பிட்ட சகோதர னுடன் இணைக்கப்பட்டிருக்கிறேன்," என்று கூறுவதைக் கேட்பது அரிதாயிருக்கிறது. நீ சிகாகோவில் வாழ்ந்துகொண் டிருந்தால், சிகாகோவிலுள்ள எல்லாப் பரிசுத்தவான்களுடனும் நீ இணைக்கப்பட்டிருக்கிறாய் என்று உன்னால் கூறமுடியாது. நடை முறையில் நீ இணைக்கப்படவில்லை. நீ இப்படிக் கூறுவாய் என்றால் இதன் பொருள், நீ யாருடனும் இணைக்கப்படவில்லை. குறிப்பிட்ட சகோதர சகோதரிகளுடன் நாம் நிச்சயமாக இணைக்கப்பட்டு, நடைமுறையில் கட்டப் படவேண்டும்.

நாற்பத்தெட்டு பலகைகளையுடைய கூடாரம் நம்மிடம் இங்கு இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்; முதல் பலகையைப்

பார்த்து, "நீ யாருடன் இணைக்கப்பட்டிருக் கிறாய்?" என்று கேட்டால், "நான் பலகை எண் இரண்டுடன் இணைக்கப் பட்டிருக்கிறேன்," என்று எந்தத் தயக்கமுமின்றி அது பதிலுரைக்கும். அது மெய்யாகவே அப்படி இணைக்கப் பட்டிருப்பதை நாம் தெளிவாகப் பார்க்கமுடியும். பின்பு பலகை எண் இரண்டிடம், "நீ யாருடன் இணைக்கப் பட்டிருக்கிறாய்?" என்று கேட்டால், உடனே அது, "ஒருபக்கம் பலகை எண் ஒன்றுடன் நான் இணைக்கப்பட்டிருக்கிறேன். மறுபக்கம் பலகை எண் மூன்றுடன் நான் இணைக்கப்பட்டிருக்கிறேன்," என்று பதிலுரைக்கும். அது தான் இணைக்கப்பட்டிருக்கிற திட்டவட்டமான பலகைகளைப் பெயரிட்டுக் கூறமுடியும். ஆகையால், அவைகளெல்லாம் தேவனுடைய வாசஸ்தலத்தை உருவாக்குவதற்கு ஒன்றாகத் தொகுத்தமைக்கப்பட்டிருக்கின்றன.

சகோதர சகோதரிகளே, குறிப்பிட்ட சகோதர சகோதரிக ளுடன் நிச்சயமாகவும், நடைமுறையிலும் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள், ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருக்கிறீர்கள் என்று உங்களால் பதிலுரைக்க முடியுமானால், அது அற்புதங்களுக்கெல்லாம் அற்புதம். அப்படியானால் உண்மையாகவே கர்த்தரைத் துதிக்கலாம். கர்த்தர் உங்கள் ஊரை அதிகமாக ஆசீர்வதிப்பாராக.

கடந்த முப்பது வருடங்களாகக் கர்த்தருடைய கிருபையால் நான் உண்மையாகவே மற்ற சகோதர சகோதரிகளுடன் இணைக்கப்பட்டிருக்கிறேன் என்று என்னால் சாட்சிபகர முடியும். நான் யாருடன் இணைக்கப்பட்டிருக்கிறேன் என்று நீங்கள் என்னைக் கேட்பதாக இருந்தால் அல்லது சாத்தான் என்னைக் கேட்பதாக இருந்தால் குறிப்பிட்ட சில சகோதர சகோதரிகளை என்னால் உடனே சுட்டிக்காட்டமுடியும். உண்மையாகவே, நிச்சயமாகவே, கர்த்தருக்குள் அந்தச் சகோதர சகோதரிகளுடன் நடைமுறையில் நான் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறேன் என்று என்னால் கூறமுடியும். ஆ, இது எதிரியை அச்சுறுத்துகிறது! அவன் இதை எவ்வளவாய் வெறுக்கிறான்! எங்கு இரண்டு அல்லது மூன்றுபேர் உண்மையாகவே ஒன்றாக இணைந்திருக்கிறார்களோ அது இந்த முழுப் பிரபஞ்சத்துக்கும் ஓர் அதிசயம், ஒரு சாட்சி. உண்மையாகவே ஒன்றாக இணைக்கப்பட்ட இரண்டுபேரை ஒருபோதும் பிரிக்கமுடியாது; அவர்களால் மறுபடியும் தனித்தனி நபர்களாக ஒருபோதும் செயல்பட முடியாது.

ஆ, நாம் இந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளவேண்டும். இதுவே நல்ல தேசத்தைச் சுதந்தரிக்கும் வழி. இதுவே கிறிஸ்துவின் சகலத்தையும் உள்ளடக்கிய ஐசுவரியத்துக்குள் நுழையும் வழி. நீ தன்னந்தனியாகக் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதில் இதற்குமேல் ஒருபோதும் போகமுடியாது என்பதை நீ

அறியவேண்டும். அதிகபட்சம் நீ அவரை ஆட்டுக்குட்டியாக, மன்னாவாக, கன்மலையாக அனுபவித்துமகிழலாம். அவ்வளவுதான். இதோடு உன் காரியம் முடிந்துவிட்டது. நீ அவரை இன்னும் அதிகமாக அனுபவித்துமகிழவிரும்பினால் நீ ஒரு பலகையாக இருக்கவேண்டும். ஒன்றாகச் சேர்த்திணைக்கப்பட்ட அநேகப் பலகைகளுள் ஒரு பலகையாக நீ இருக்கவேண்டும். நீ கூடாரத்தில் இணைக்கப்படவில்லை என்றால், கிறிஸ்துவைப் பெட்டியாகவும் தேவனுடைய சாட்சியாகவும், கூடாரத்தை அவருடைய பெரிதாக்கமாகவும் நீ எப்படி அனுபவித்து மகிழமுடியும்? நீ கூடாரத்துக்குள் கட்டப்படவில்லையென்றால் நீ வெட்டப்பட்டுவிடுவாய். நீ ஒதுக்கிவைக்கப்பட்டுவிடுவாய். கிறிஸ்துவை இன்னும் அதிகமாகவும், திடமாகவும் அனுபவித்து மகிழும் விஷயத்தில் உனக்கு எந்தச் சம்பந்தமும் இல்லை. கூடாரம் இஸ்ரவேல் மக்களிடையே நிறுவப்பட்டபோது கர்த்தர் தூரமாகப் பரலோகத்தில் இருக்கவில்லை; அவர் வனாந்தரத்திலும் இருக்கவில்லை; அவர் கூடாரத்தில், சந்திக்கும் கூடாரத்தில், காணப்பட்டார். ஆவிக்குரிய நிஜத்தில் இன்று அவருக்குள்ளான பரிசுத்த வான்கள் அவருடைய வாசஸ்தலமாக நடைமுறையில் சேர்த்துக் கட்டியெழுப்பப்படுவதில் அவர் காணப்படுகிறார். நீங்கள் அவரைப் பெட்டியாக அனுபவித்துமகிழ விரும்பினால், நீங்கள் கூடாரத்துடன் இணைக்கப்பட்ட பலகைகளாக இருக்கவேண்டும். அவர் ஆட்டுக்குட்டி மட்டும் இல்லை; இன்று அவரே பெட்டி. அவர் ஒரு சிறு துண்டு மன்னா மட்டும் இல்லை; இன்று அவரே பெட்டி. அவர் பெட்டியாக எங்கிருக்கிறார்? கூடாரத்தில் இருக்கிறார்.

அநேகக் கிறிஸ்தவர்கள் ஒருபோதும் கூடாரத்துக்குள் வந்ததே இல்லை; இது மெய்யாகவே வருந்தத்தக்கது. இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் கிறிஸ்துவை ஒரு சிறு துண்டு மன்னாவாக ஒவ்வொருநாளும் அனுபவித்துமகிழ்ந் தார்கள், இன்றும் அவர்கள் அவரை அப்படித்தான் அனுபவித்து மகிழ்கிறார்கள்; அதைவிட ஒன்றும் அதிகமாக இல்லை. இதில் அவர்கள் திருப்தியடைந்துவிடுகிறார்கள். எனினும், அவர்களுடைய ஆழத்தில் அவர்கள் திருப்தியாக இல்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்பு அவர்கள் கிறிஸ்துவை மன்னாவாக அனுபவித்து மகிழ்ந்தபோது உண்மையாகவே திருப்தியடைந்தார்கள். ஆனால் இன்று திருப்தியாக இல்லை. இருபது ஆண்டுகளுக்குமுன்பு அவர்கள் மிகவும் புத்துணர்ச்சியுடன் இருந்தார்கள்; அவர்கள் கிறிஸ்துவுக்குள் புதிதான ஜீவனில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். ஆனால், இன்று நீங்கள் அவர்களைச் சந்தித்தால் அவர்கள் முழுவதும் பழைமை நிறைந்தவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள்

முகங்களில் சுருக்கங்கள் நிறைந்திருக்கின்றன. "ஆ, கர்த்தர் அனுதின மன்னாவாக ஒவ்வொரு நாளும் எனக்கு எவ்வளவு நல்லவராக இருக்கிறார்," என்று இன்னும் அதே பழைய கதையையே பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதைச் சொல்லும்போதே நீங்கள் பழைமையின் வாசனையை முகரலாம், சுருக்கங்களையும் காணலாம். ஆம், அவர்கள் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறார்கள். இது மிகவும் நல்லது; ஆனால் இது மிகப் பழைமையானது. இப்போது இது இனிமையாக இல்லை, பசுமையாக இல்லை.

சகோதர சகோதரிகளே, நீங்களும் நானும் முன்னேறிச் செல்ல வேண்டும்; கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதில் நாம் கொஞ்சம் முன்னேறவேண்டும். நாம் ஜீவனிலும், ஆவியிலும் புதிதாக இருக்க வேண்டும். கிறிஸ்துவை அனுபவிப்பதில் எப்போதும் ஆழமாகிக் கொண்டேபோகும், செழிப்பாகிக்கொண்டேபோகும் நம் அனுபவத்தில் பசுமையும், இனிமையும் இருக்கவேண்டும். கிறிஸ்துவைப் பெட்டியாக அனுபவித்துமகிழ்ந்தபடி நாம் இங்கேயேகூடத் தங்கிவிட்டால், இரண்டு ஆண்டுகளுக்குப்பிறகு, "நாங்கள் கிறிஸ்துவை இப்படி எவ்வளவாய் அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறோம்," என்று சொன்னாலும், நீங்கள் பழைமையை உணர்வீர்கள். வருகிற ஆண்டுகளில் கிறிஸ்து தேவனுடைய சாட்சி, தேவனுடைய விளக்கம், தேவனுடைய வெளியரங்கம் என்று தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தால், நாம் பழையதாகிவிட்டோம் என்று நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள். நீங்கள் சுகந்த வாசனையை உணரமாட்டீர்கள். மாறாக அழுகின துர்நாற்றத்தை முகர்வீர்கள். இரண்டு வயதான சிறு குழந்தைகள் உங்களிடம் வந்து, "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்கும்போது நீங்கள் உண்மையாகவே சந்தோஷப்படுவீர்கள். அவர்களுடைய வார்த்தைகளில் ஜீவனின் பசுமையும், புதுமையும் இருக் கின்றன. ஆனால் அதே வார்த்தைகள் இருபத்திரண்டு வயதானவனுடைய வாயிலிருந்து வரும்போது, அவைகள் பழைமையானதாக இருக்கின்றன. அவர்களுடைய வார்த்தைகளில் பசுமையும், புதுமையும் இல்லை.

நாம் கொஞ்சம் முன்னேறிச் செல்லவேண்டும். நம் தற்போதைய நிலையில் நாம் திருப்தியடைந்துவிடக்கூடாது. நாம் அனுபவித்துமகிழ்வதற்குக் கிறிஸ்துவுக்குரியவைகள் நமக்குமுன் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. ஆனால் இந்தக் கட்டத்தில், கிறிஸ்துவைத் தேவனுடைய சாட்சிப் பெட்டியாக நீ அனுபவித்துமகிழவிரும்பினால், நீ ஒரு தனிமனிதனாக இருக்கும்வரை இது சாத்தியம் இல்லை. உன் கதை முடிந்து விட்டது. நீ முடிவுக்கு வந்துவிட்டாய். நீ கீழ்ப்படுத்தப்பட

வேண்டும். அப்போது, "கர்த்தாவே, இதோ அடியேன். உம் பிள்ளைகளுள் சிலருடன் நான் இணைக்கப்படவேண்டும், சேர்க்கப்பட வேண்டும். நான் யாருடன் இணைக்கப்படவேண்டும் என்று எனக்குக் காண்பியும்; இணைக்கப்படுவதற்கு என்னை நீர் நடத்தும். நான் இந்த நகரத்தில் இருக்கிறேன்; நான் புதிய எருசலேமில் இல்லை. இந்த ஊரில், இந்த யுகத்தில் நிச்சயமாகவும், நடைமுறை யிலும் நான் யாருடன் இணைக்கப்படவேண்டுமோ, சேர்க்கப்படவேண்டுமோ அவர்களை எனக்குக் காண்பியும்," என்று நீ கூறுவாய். சிலர் தாங்கள் அப்போஸ்தலனாகிய பவுலுடன் அல்லது பேதுருவுடன் இணைக்கப்பட விரும்புவதாகக் கூறலாம். ஆனால் நான் வருத்தப்படுகிறேன். அவர்கள் இப்போது இங்கு இல்லை. கர்த்தர் யாரை இங்கு உன் ஊரில் வைத்திருக்கிறாரோ, அவர்களுடன் நீ இணைக்கப்பட வேண்டும். நீ கீழ்ப்படுத்தப்பட வேண்டும். ஒருவேளை கர்த்தர் உன்னை ஒரு விசித்திரமான சகோதரனுடன் ஒன்றாகக் கொண்டுவந்து, "நீ அவனுடன் இணைக்கப்படவேண்டும்," என்று உன்னிடம் கூறுவார். அவர் உன்னிடம், "இவன் உன் அன்பான சகோதரன், இவனுடன் நீ இணைக்கப்பட வேண்டும்," என்று கூறுவார். நீ ஒருவேளை கர்த்தரிடம், "கர்த்தாவே, இவன் மிகவும் விசித்திரமானவன். நான் இவனை ஏற்றுக்கொள்ளமுடியாது," என்று பதில்கூறுவாய். ஆனால் கர்த்தர், "இவனுடன்தான் நீ இணைக்கப்படவேண்டும். நீ தெரிந்தெடுப்பதற்கு வழியில்லை. இப்போது போய் அவனை ஏற்றுக்கொள்," என்று மறுமொழி கூறுவார். பாடத்தைக் கற்றுக்கொள். இதுவே மிகப்பெரிய ஆசீர்வாதம், கர்த்தருடைய உண்மையான கட்டிடத்தைக் கட்டுவதற்கு இதுவே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம்.

கர்த்தருடைய பிள்ளைகளிடையேயுள்ள தற்போதைய நிலைமையை நான் வெறுக்கிறேன். ஒருவன் இன்னொருவ னுக்குப் பணிந்தடங்குவது அரிதான ஒரு காரியம்போல் தோன்றுகிறது. பணிந்தடங்குதல் இல்லை; எனவே, கட்டிடமும் இல்லை. கூடாரம் எழுப்பப்படும்போதெல்லாம் உடனே தேவனுடைய மகிமை அந்த இடத்தை நிரப்பும். இன்று கர்த்தருடைய பிள்ளைகளென்று தங்களை அழைத்துக்கொள்கிற அநேகக் குழுக்கள் இருக்கின்றன. ஆனால், தேவனுடைய மகிமையை நாம் ஒருபோதும் பார்ப்பதில்லை; இது ஏன்? ஏனென்றால், அங்கு கட்டிடம் இல்லை. உண்மையான ஒற்றுமை இல்லை; உண்மையான ஒருமைப்பாடு இல்லை. நீ தொடர்ந்து கர்த்தருடைய பிள்ளைகளுடன் கூடிவந்து கொண்டிருக்கலாம். எனினும், நீ யாரோடும் ஒருபோதும் இணைக்கப்படாமல் இருக்கமுடியும். நீ கூடி வருகிறாய், கூடிவருகிறாய், கூடிவருகிறாய். ஆனால் நீ ஒரு தனித்துவ

மனிதன். வெறுமனே ஒரு தனி மனிதன் இல்லை, மாறாக தனித்துவ மனிதன். உனக்கும் மற்றவர்களுக்குமிடையே எந்தக் கட்டுதலும் நடைபெறவில்லை; எனவே இதற்குமேல் கர்த்தரை அனுபவிக்கவோ அல்லது அனுபவித்துமகிழவோ உன்னால் ஒருபோதும் முடியாது. கர்த்தரை இன்னும் அதிகமாக அனுபவிக்கக் கூடிய விஷயத்தில் நீ ஒரு முடிவுக்கு வந்துவிட்டாய். நீ அழிந்து விடுவாய் என்று நான் கூறவில்லை. ஆனால் கர்த்தரை அனுபவிக்கக்கூடிய விஷயத்தைப் பொறுத்தவரையில் நீ மற்றவர்களுடன் இணைக்கப்பட விரும்பாதவரை இதற்குமேல் நீ போக முடியாது. நீ மற்றவர்களுடன் இணைக்கப்படுவாயானால் உனக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்குமிடையே ஒரு கட்டுதல் இருக்கும், உன் ஊரில் கூடாரம் உருவாகும். கிறிஸ்துவைச் சற்று அதிகமான, திடமான முறையில் அதாவது கூடாரத்துக்குள் இருக்கும் பெட்டியாக நீ அனுபவித்து மகிழ்வாய்.

நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல் கூடாரத்தைத் தொடர்ந்து உடனடியாக ஆசாரியத்துவத்துக்கு வருகிறோம். ஆசாரியத்துவம் ஒரு தனி மனிதனுடைய ஊழியமோ அல்லது பணிவிடையோ இல்லை. மாறாக அது சரீரத்தின் பணிவிடை. எந்த ஒரு தனிமனிதனும் தனியாக ஆசாரியனாக இருக்க முடியாது—பழைய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட ஆசாரியத்துவம் இல்லை. ஆசாரியத்துவம் என்பதின் பொருள் தனித்துவம் இல்லை. மாறாக, கூட்டான சரீரம். உன்னைத் தனிப்பட்ட முறையில் எடுத்துக்கொண்டால், உன்னிடம் ஆசாரியத்துவம் இல்லை. நீயாகவே, "நான் ஓர் ஆசாரியன்," என்று ஒருபோதும் கூறமுடியாது. நீ உன் சகோதர சகோதரிகளுடன் ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தால், "நாங்கள் ஆசாரியர்கள்," என்று நீங்கள் கூறலாம். ஆனால் நீங்கள் பிரிந்து, வெறுமனே பல தனிநபர்களாக மட்டுமே இருந்தால், "நாங்களே ஆசாரியர்கள்," என்று நீங்கள் ஒருபோதும் கூறமுடியாது. நிஜத்தின் சித்திரமாகிய பழைய ஏற்பாட்டைப் பாருங்கள். ஒரு மனிதன்கூட தானாக, தனியொரு வனாக ஆசாரியனாகச் செயல்பட முடியவில்லை. ஆசாரியத்துவம் என்பது ஒரு சரீரம்.

பின்னர் நாம் சேனைக்கு வருகிறோம். நீ மட்டுமே ஒரு சேனையாகிவிட முடியுமா? நிச்சயமாக முடியாது. பிரிந்திருக்கும் சில தனிநபர்களும்கூட சேனையாகிவிட முடியாது. ஒன்றாக உருவாக்கப்பட்டு, ஒன்றாகச் செயல்படுகிற ஒரு கூட்டம் மக்களைக் கொண்டுதான் ஒரு சேனை கட்டியமைக்கப்பட வேண்டும். எங்கே இரண்டு அல்லது மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தில் கூடிவருகிறார்களோ அது போதுமானது என்று சிலர் இன்று சாதிக்கிறார்கள். ஆனால் ஒரு சேனையை உருவாக்குவதற்கு

இரண்டு அல்லது மூன்றுபேர் போதுமான எண்ணிக்கைதானா? சேனையை உருவாக்கப் பெருந்திரளான மக்கள் தேவை. எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அவ்வளவு நல்லது.

இரண்டு அல்லது மூன்று சகோதர சகோதரிகளிடையே மட்டுமே பேசுவதற்கு என்னை அழைத்தாலும் நான் மகிழ்ச்சியோடு அதைச் செய்வேன். ஆயினும் அப்படி நான் செய்தால் கொஞ்ச நேரத்தில் நான் எல்லாவற்றையும் பேசி முடித்துவிடுவேன்; அதன்பிறகு பேசுவதற்கு என்னிடம் வேறு எதுவும் இருக்காது. ஆனால் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கான மக்கள் நிறைந்த ஒரு கூட்டத்தை நீங்கள் என்னிடம் தருவீர்களென்றால், நிறுத்தாமல் மணிக்கணக்காக என்னால் பேசமுடியும்.

இரண்டு அல்லது மூன்று போதாது. போதுமான அளவுக்கு சகோதர சகோதரிகள் நம்மிடம் இருக்கவேண்டும். எவ்வளவு அதிகமாக இருக்கிறார்களோ அவ்வளவு நல்லது. இரண்டு அல்லது மூன்றுபேரோடு ஒருபோதும் திருப்தியடைந்து விடாதீர்கள். கர்த்தருக்குள்ளான சகோதரர்களுடன் நாம் இணைக்கப்பட வேண்டும்; தேவ மக்களோடு நாம் இணைக்கப்பட வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகள் இன்று உலகில் ஏன் முதல் தேசமாக இருக்கிறது? அது ஏன் மிகப் பலம்வாய்ந்த தேசமாக இருக்கிறது? ஏனென்றால் அதில் ஐக்கியப்பட்ட ஐம்பது மாநிலங்கள் இருக்கின்றன. மிசௌரி, அயோவா, இலினோயிஸ் போன்ற இரண்டு அல்லது மூன்று மாநிலங்கள் மட்டுமே இருந்தால் தேசம் எவ்வளவு பலவீன மாக இருக்கும்! ஆனால் ஒரே அரசாங்கத்தின்கீழ் ஐக்கியமாக இணைக்கப்பட்ட ஐம்பது மாநிலங்கள் இருக்கின்றன. எனவே இது ஒரு வல்லரசாக இருக்கிறது.

ஆ! தந்திரமான எதிரி தேவனுடைய சேனையை எவ்வளவாய் அழிக்க விரும்புகிறான்! தேவனுடைய பிள்ளைகள் திரளா யிருக்கிறார்கள். ஆனால் ஒரு சேனைதான் இல்லை. எந்த இடத்திலாவது தேவனுடைய பிள்ளைகளிடையே ஒரு சேனை உருவாகியிருப்பதைக் காண்பது மெய்யாகவே கடினம்தான்; ஆகையால் அவர்கள் மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகள் பலமாக இருக்கின்றன. ஏனென்றால் அது ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கிறிஸ்தவர்களின் நிலை என்ன? ஒரு நகரத்தில் அல்லது ஒரு வட்டாரத்திலுள்ள கர்த்தருடைய பிள்ளைகளிடையேயுள்ள சூழ்நிலையைக் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். முழு தேசத்தைப்பற்றியோ, உலகத்தைப்பற்றியோ பேசவே வேண்டாம். இது ஒரு பரிதாபம்! இது ஓர் அவமானம்! எந்த ஒற்றுமையும் இல்லை; எந்த உருவாக்குதலும் இல்லை. இன்னும் சொல்லப்போனால் சிலர் எல்லாவிதமான ஒற்றுமை யையும், உருவாக்குதலையும்

எதிர்க்கிறார்கள். மனித உரு வாக்குதலைப்பற்றியோ அல்லது நிறுவனத்தைக் குறித்தோ நான் பேசவில்லை. மாறாக தெய்வீகக் கட்டிடத்தைப்பற்றி, தேவனுடைய பிள்ளைகளிடையே உள்ள மெய்யான நடை முறைக்குரிய ஒற்றுமையைப்பற்றி பேசுகிறேன். "ஆ, நாம் இரண்டு அல்லது மூன்று பேர் இந்த இடத்தில், இரண்டு அல்லது மூன்றுபேர் அந்த இடத்தில் என்று இரண்டு அல்லது மூன்றுபேர் ஒன்றாகக் கூடிவர முடியுமானால் அது மெய்யாகவே நல்லது, அது போதுமானது," என்று அநேகக் கிறிஸ்தவர்கள் அநேக இடங்களில் பேசுவதை நாம் கேட்டிருக்கிறோம். சகோதர சகோதரிகளே, இது போதாது! இதை நாம் எதிர்க்கிறோம். நாம் கர்த்தருடைய மக்களுடன் ஒரு சேனையாக இணைக்கப்பட வேண்டும். நாம் போர்புரிய வேண்டும், வெறும் இரண்டு அல்லது மூன்றுபேர் அல்ல; கர்த்தருடைய ஒரு கூட்டம் பிள்ளைகள், நிறையப் பேர், போதுமான எண்ணிக்கையில் போர்புரிய வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளோடு ஒற்றுமையைக் காத்துக் கொள்வதற்காக நீங்கள் ஒரு விலைக்கிரயம்செலுத்தவேண்டுமென்று நான் உங்களைக் கர்த்தருக்குள் வேண்டிக்கொள்கிறேன். உங்கள் கருத்துகளையெல்லாம் கைவிடுங்கள். கர்த்தருடைய மக்கள் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை அடையாளம் கண்டு அங்கீகரித்தால், அவர்களுக்கு கிறிஸ்துவின் ஓர் உண்மையான வெளிக்காட்டுதலாகும் விருப்பம் இருந்தால் அது போதுமானது. இதற்காக நான் என்ன விலைக்கிரயம் வேண்டுமானாலும் கொடுக்கவேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவையும், அவருக்கான மெய்யான வெளிக்காட்டுதலையும்தவிர வேறு எதிலும் நாம் பிடிவாதமாக இருக்கக்கூடாது. கர்த்தருடைய பிள்ளைகளுடன் நாம் இணைவோமாக. நாம் ஒரு பலமான சேனையாக உருவாகுவோமாக.

இந்தக் காரியம் எனக்குள் ஒரு பெரிய பாரமாக இருக் கிறது. எவ்வளவு பாரமாக இருக்கிறது என்றால், சில சமயங்களில் நான் என்னையே இழந்துவிடுகிறேன். இதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தெரியாது; என் மனம் முழுவதும், என் ஆள்தத்துவம் முழுவது, இந்தக் காரியத்தால் நிறைந்திருக்கிறது. சகோதர சகோதரிகளே, கர்த்தர் இந்தக் காரியங்களை மீட்டுத்திருப்புமாறு நாம் அவருடன் எவ்வளவாய் ஒத்துழைக்கவேண்டியிருக்கிறது! இன்று கர்த்தருக்காகப் போர்புரிவதற்கு அவர்தாமே நடைமுறைரீதியில் ஒரு சேனையாக நம்மை உருவாக்கு வாராக. சாத்தானுடன் செய்யும் போராட்டத்தைப்பற்றி அவ்வளவு நாசுக்காகப் பேசி விடாதீர்கள். இதோ, யுத்தம் உங்களுக்குமுன்பாக இருக்கிறது. இதுவே யுத்தம்! இங்கே இருக்கிறது யுத்தம்! நீங்கள்

இதைப் போராடியாக வேண்டும். ஆனால் தனியாக இல்லை.

போரிடப்போகுமுன்பு நாம் பிறருடன் சேர்ந்து அமைக்கப் படவேண்டும். அமைக்கப்படுவதற்கு நாம் பணிந்தடங்க வேண்டும். பிறருக்குப் பணிந்தடங்குவதால் நாம் இதைத் தொடங்கவேண்டும். நாம் பணிந்தடங்க முடியவில்லையென் றால் நாம் ஒருபோதும் அணியாக அமைக்கப்படமுடியாது. நாம் ஒருபோதும் கட்டியெழுப்பப்படமுடியாது. பணிந் தடங்குதல்! கர்த்தருடைய பிள்ளைகளிடையேயுள்ள மிகப்பெரிய தேவை பணிந்தடங்குவதே. இந்தக் காலம் மெய்யாகவே கலகத்தின் காலம். அகில உலகமும் கலகத்தால் நிறைந்திருக்கிறது. குடும்பத்தில், பள்ளியில், சமுதாயத்தில், அரசாங்கத்தில் எல்லாரும் கலகம்செய்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாகிய நீங்களும் நானும், தேவனுடைய இராஜ்ஜியத் துக்காகப் போர்புரியும் சேனையாக அமைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் நீங்களும் நானும் பணிந்தடங்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அகில உலகத்தின் போக்கிற்கு மாறாக பணிந்தடங்குதல் என்ற பாடத்தை நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களுக்குப் பணிந்தடங்கி, "ஆம்" என்று கூறக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் "தலையாட்டி பொம்மைகளாக" இருக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. மாறாக நாம் மற்றவர்களுக்கு "இல்லை" என்று கூறாமல், "ஆம்" என்று கூறக் கற்றுக்கொள்ளவேண்டும். "இல்லை" என்று கூறுவது மக்களுக்கு இன்று எளிதாக இருக்கிறது. அவர்கள் எல்லாருக்கும், எல்லாவற்றுக்கும் "இல்லை" என்று கூறுகிறார்கள். பலவேளைகளில் சிறு குழந்தைகள் பேசுவதற்குக் கற்றுக்கொள்ளும் முதல் வார்த்தையே "இல்லை" என்பது போலத் தோன்றுகிறது. ஆனால் நாம் முழு இருதயத்தோடும் சொல்லாமல், வெறும் வாயால் மட்டுமே பொய்யாக "ஆம்" என்று சொல்லக்கூடாது. நம் "ஆம்" உண்மையுள்ள இருதயத்திலிருந்து வரும் பணிந்தடங்குதலோடு "ஆம்" ஆக இருக்கவேண்டும். "ஆம், சகோதரரே!" "ஆம், சகோதரியே!" நீங்கள் அவர்களுக்குப் பணிந்தடங்கி, "ஆம்" என்று கூறக் கற்றுக் கொள்ளுங்கள். ஆ! கர்த்தர்தாமே நம்மை விடுவிப்பாராக.

பெரும்பாலான பெரிய நகரங்களில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் சேனை எங்கே? கூடாரம் எங்கே? ஆசாரியத்துவம் எங்கே? இது ஒரு பரிதாபம். கர்த்தரால் என்ன செய்யமுடியும்? ஒற்றுமை இல்லை, ஒருமைப்பாடு இல்லை, பணிந்தடங்குதல் இல்லை, அணி யமைப்பு இல்லை, கட்டியெழுப்புதல் இல்லை, கூடாரம் இல்லை, ஆசாரியத்துவம் இல்லை, சேனை இல்லை. இந்தப் பூமியில் கர்த்தருக்கு உண்மையான வாசஸ்தலம் இல்லை. கர்த்தருக்கு உண்மையான

பணிவிடை இல்லை; ஏனென்றால் ஆசாரியத்துவம் இல்லை. தேவனுடைய இராஜ்ஜியத்துக்காக உண்மையான யுத்தம் இல்லை. ஏனென்றால் உண்மையான சேனை இல்லை. இந்தக் காரியங்களை மீட்டுத்திருப்புவதற் காகவே நாம் இங்கிருக்கிறோம்.

பணிந்தடங்குவதின்மூலம் நாம் ஒரு சேனையாக உருவாக்கப்பட வேண்டும். சேனை எப்போதும் ஆசாரியத்துவத்தின்கீழ் இருக்கிறது. ஆசாரியத்துவம் எப்போதும் கூடாரத்தோடு சேர்ந்துசெல்கிறது. இந்த மூன்று காரியங்களும் எப்போதும் சேர்ந்தேசெல்கின்றன. கூடாரம் இருக்கும்போது ஆசாரியர்களின் கூட்டம் இருக்கிறது. பின்பு ஆசாரியர்களின் கூட்டத்தைச்சுற்றி மக்களின் சேனை இருக்கிறது. இதுவே நாம் அனுபவிக்கவேண்டிய நிஜத்தின் சித்திரம்—கூடாரம், ஆசாரியத்துவம், சேனை. கூடாரம் இல்லையென்றால் ஆசாரியத்துவமும் இல்லை. ஆசாரியத்துவம் இல்லாமல் மக்களின் சேனையும் இல்லை. சேனை ஆசாரியத்துவத்தைச் சார்ந்திருக்கிறது, ஆசாரியத்துவம் கூடாரத்துடன் தொடர்புடையது. கூடாரம் என்றால் என்ன? கர்த்தருடைய பிரசன்னம் அவருடைய மக்களிடையே இருக்கும் இடமே கூடாரம். கூடாரம் இல்லையென்றால், கர்த்தருடைய பிரசன்னம் இல்லை. கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடிருக்கமுடியாது, நம்மோடு வரமுடியாது. கர்த்தருடைய பிரசன்னம் நம்மோடு செல்லும் என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணினார். ஆனால், அவருடைய பிரசன்னம் எங்கு வாசமாயிருக்கிறது என்பதைப்பற்றி நாம் தெளிவாக இருக்கவேண்டும். அவருடைய பிரசன்னம் கூடாரத்தில் வாசமாயிருக்கிறது. நம்மிடம் கூடாரம் இருக்குமென்றால் அவருடைய பிரசன்னமும் நம்மோடு வாசமாயிருக்கும். நம்மிடம் கூடாரம் இல்லையென்றால் நம் கதை முடிந்தது; கர்த்தருடைய பிரசன்னம் போய்விட்டது.

கூடாரம், ஆசாரியத்துவம், சேனை! சகோதர, சகோதரி களே உங்களிடையே இவை இருக்கின்றனவா? இல்லை யென்றால் உங்களுக்குத் தகுதியில்லை; நீங்கள் இன்னும் குறைவுள்ளவர்கள். தேசத்தைச் சுதந்தரிக்க உங்களால் தொடர்ந்து போகமுடியாது. இப்படிப்பட்ட தகுதியுடையவர்களாக நாம் ஆயத்தமாக்கப்பட வேண்டும். கூடாரம், ஆசாரியத்துவம், சேனை ஆகிய இவைகளின் முழு அனுபவத்தில் நாம் இருக்கவேண்டும். இந்தக் காரியங்களில் தனி நபருக்குரியது என்கிற எதுவுமே இல்லை. இவையெல்லாம் ஒரு கூட்டு சரீரத்துடன் தொடர்புடையவை.

அந்நிய அக்கினி

கூடாரம், ஆசாரியத்துவம், சேனை ஆகியவைகளைப்

பராமரிப்பதற்கு, தனித்துவம்தவிர பின்வரும் காரியங்களையும் தவிர்ப்பதற்கு நாம் மிகுந்த ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்; அவை மிகுந்த சேதத்தை விளைவிக்கும். முதலாவது காரியம் அந்நிய அக்கினி. நாம் தேவனுக்கு ஒருபோதும் அந்நிய அக்கினியை ஏறெடுக்கக்கூடாது. அந்நிய அக்கினி என்றால் என்ன? இது நம் ஜென்மசுபாவமான பேரார்வம்; இது நம் ஜென்மசுபாவ உணர்ச்சிகளின் கிளர்ச்சி, நம் இருதயத்தின் ஜென்மசுபாவமான வைராக்கியம்; இது மரணத்தைக் கொண்டுவருவதைத் தவிர்க்கவே முடியாது. இது நம் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கொன்றுவிடுகிறது, ஆசாரியத்துவத்தை அழிக்கிறது. ஆரோனின் இரண்டு குமாரர்களாகிய நாதாபும், அபியுவும் தீமையான நோக்கத்தோடல்ல, மாறாக நல்ல நோக்கத்தோடுதான் அந்நிய அக்கினியை ஏறெடுத்தார்கள். ஆயினும் அது அந்நிய அக்கினிதான். தூபவர்க்கத்திற்கான அக்கினி பலிபீடத்து அக்கினியிலிருந்து எடுக்கப்படவேண்டுமென்றும், அப்போது தான் அந்தத் தூபவர்க்கம் கர்த்தருக்கு ஏற்றதாயிருக்கும் என்றும் கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆனால், அவர்கள் பலிபீடத்து அக்கினியைப் பயன்படுத்தவில்லை; அவர்கள் அந்நிய அக்கினியைப் பயன்படுத்தினார்கள். இதன் பொருள் என்னவென்றால் அவர்களுடைய ஜென்மசுபாவப் பேரார்வமும், அவர்களுடைய ஜென்மசுபாவ வைராக்கியமும் சிலுவையினால் இன்னும் கையாளப்படவில்லை. இது மிக முக்கியமான விஷயம். நாம் சிலுவையினால் கையாளப்பட வேண்டும். நம் ஜென்மசுபாவ வைராக்கியம் சிலுவையினால் மரணத்திற்குட்படுத்தப்பட வேண்டும்.

கலகம்

நாம் தவிர்க்கவேண்டிய இரண்டாவது காரியம் அதிகாரத்துக்கு எதிரான கலகம். மோசேயின் மூத்த சகோதரியாகிய மிரியாமும், மூத்த சகோதரனான ஆரோனும் அந்த நேரத்தில் அதிகாரமாக இருந்த மோசேக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள்; ஆம், மோசே ஒரு காரியத்தைச் செய்தார், அதாவது அவர் ஒரு புறஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்தார். அது நல்லதில்லை. மோசே செய்தது தவறு என்பதில் சந்தேகம் இல்லை. அது அவனது குறைபாடு, மிரியாமும் ஆரோனும் அவரை எதிர்ப்பதற்கு அதைக் காரணமாக எடுத்துக்கொண்டார்கள். எனினும் மோசே என்ன செய்திருந்தாலும் அதை ஒரு பொருட்டாகக் கருதாமல் மிரியாமும், ஆரோனும் அதிகாரத்தை அங்கீகரிக்க வேண்டும். மோசேதான் அந்த அதிகாரம். என்னவானாலும் சரி, அவர்கள் அதிகாரத் துக்கு எதிராகக் கலகம்செய்யக்கூடாது. இதுவே

ஒருமைப் பாட்டையும், ஆசாரியத்துவத்தையும், சேனை உருவாக்கப் படுவதையும் நாசமாக்கக்கூடிய காரியம். நடத்துகிறவன் என்ற முறையில் நாம் நிச்சயமாக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்; ஒருபக்கம் மோசே ஒரு புறஜாதிப் பெண்ணைத் திருமணம் செய்தது அடையாளப்படுத்தும் எந்தக் காரியத்தையும் நாம் செய்யக்கூடாது. மறுபக்கம் அதைவிட முக்கியமாக நீங்களும் நானும் ஒருபோதும் கலகம்செய்யாமலிருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும்.

ஒருவேளை உங்கள் நகரத்தில் ஓர் உள்ளூர் சபை, அதாவது கர்த்தருடைய சரீரத்தின் ஒரு வெளிப்படுத்துதல் இருக்கிறது என்றும் அந்த சபையில் மூன்று அல்லது நான்கு நடத்தும் சகோதரர்கள் இருக்கிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். நம்மில் ஒருவன்கூட நூறு சதவிகிதம் பூரணமானவன் இல்லை என்பதை நீங்கள் உணரவேண்டும். ஒவ்வொருவனிடமும் குறைந்தது ஒரு குறையாவது இருக்கும். உங்கள் கண்கள் மூப்பர்களைநோக்கி அவ்வளவாகத் திறந்திருக்கக் கூடாது; அதற்குப்பதிலாக அவை தேவனுக்கு நேராகத்திறந்திருக்க வேண்டும். மூப்பர்களை ஆராய்ந்துபார்ப்பதற்கு உன் கண்களை நீ அவர்கள்மேல் வைக்காதே. அப்படிச்செய்தால் நீ ஒரு கலகக்காரன். உன்னையே நீ நாசமாக்கிக்கொள்வாய்.

மிரியாமையும், ஆரோனையும் பாருங்கள். மோசேக்கு எதிராக அவர்கள் பேசியது சரியா அல்லது தவறா? இதில் கேள்விக்கே இடம் இல்லை; அவர்கள் பேசியது சரி, மோசே செய்தது தவறு. மோசே கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற வகையில் அவர்கள் குற்றம் சுமத்துவதற்கு இடம் கொடுத்தான். எனினும் மிரியாமும், ஆரோனும் இதை ஒரு காரணமாக எடுத்துக்கொண்டு அதிகாரத்துக்கு எதிராகக் கலகம்செய்தபோது அவர்கள் தங்கள்மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்பை வரவழைத்துக்கொண்டார்கள். உடனே மிரியாம் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டாள். அவள் பின்பு குணமடைந்தாலும் ஆரோனும், மிரியாமும் வனாந்தரத்தி லேயே மரித்தார்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரர்களுக்கு எதிராகக் கலகம் செய்ததின் விளைவாகக் குஷ்டரோகிகளாக மாறிப்போன அநேக மக்களைக் கடந்த காலங்களில் நான் பார்த்திருக்கிறேன். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சரியாகத்தான் இருந் தார்களா? என்னால் அப்படிக் கூறமுடியாது. ஒவ்வொருவரிடத்திலும் குறைந்தது ஒரு குறையாவது உண்டு என்று நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் கர்த்தருடைய ஊழியக்காரரின் குறைகள் நமக்கு ஒரு பரீட்சை. அவை நாம் எங்கிருக் கிறோம்

என்றும், நம் இருதயத்தில் என்ன இருக்கிறது என்றும் பரீட்சித்துப் பார்க்கின்றன. உங்கள் இருதயத்தின் நிலை என்ன? கர்த்தருடைய ஊழியக்காரர்களின் நல்ல காரியங்கள் இல்லை, மாறாக அவர்களுடைய குறைகளாலேயே உங்கள் இருதயம் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

சகோதர சகோதரிகளே, இந்த வார்த்தையை உங்கள் இருதயத்தில் வைத்துக்கொள்ளுங்கள். இது ஓர் எச்சரிக்கை. உங்களைக் கர்த்தருக்குள் நடத்துகிறவர்களுடன் நீங்கள் அவ்வளவு சந்தோஷமாக இருக்காத நேரம் வருமென்று எனக்கு நன்றாகத் தெரியும். இது என்ன? "சபையிலுள்ள நடத்துகிற சகோதரர்கள் என்ன செய்திருக்கிறார்களென்று பாருங்கள்!" என்று நீங்கள் கூறுவீர்கள். இது உங்களுக்கு ஒரு பரீட்சை. நீங்கள் அவர்களைக் குற்றப்படுத்திக் கலகம்செய்தால் குஷ்டரோகியாக மாறிவிடுவீர்கள். அவர்கள் இல்லை, நீதான் அழுக்கானவன். மிரியாமும், ஆரோனும் மரித்ததுபோல, நீங்களும் வனாந்தரத்தில் வழியோரமாக விழுந்து மரிப்பீர்கள்; சகலத்தையும் உள்ளடக்கிய நல்ல தேசத்தைப் பங்கிடுவதற்கு நீங்கள் ஒருபோதும் முன்செல்லமாட்டீர்கள்.

இஸ்ரவேல் மக்களின் பயணத்தின் பிந்தைய காலத்தில் இன்னொரு கூட்டத்தாரும் கலகம்செய்தார்கள். இந்தமுறை இது சற்றுப் பெரிய அளவிலான கலகம். கோராகு என்பவன் சபைக்குப் பிரபுக்களாயிருந்த இருநூற்று ஐம்பதுபேர்களோடு மோசேக்கும், ஆரோனுக்கும் எதிராகக் கலகம்பண்ண எழும்பினான்; அவர்களுடைய கலகத்தினால் அவர்கள் தங்கள்மேல் மட்டும் இல்லை, ஏறக்குறைய முழுச் சபையார்மேலும் மரணத்தை வருவித்துக்கொண்டார்கள். தங்கள் முரட்டாட் டத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான மக்கள் செத்தார்கள். ஒற்றுமை நாசமாக்கப்பட்டது, ஆசாரியத்துவம் நாசமாக்கப் பட்டது, கர்த்தருடைய மக்களின் சேனை நாசமாக்கப்பட்டது. நமக்கு இப்பேர்ப்பட்ட எச்சரிக்கை தேவை.

இன்று கர்த்தருடைய சாட்சிக்காக உங்களில் பலருக்கு அவரை நோக்கி உண்மையான இருதயம் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால், நமக்குள்ளே கலகம்செய்கிற சுபாவம் இருக்கிறது என்பதை நினைவில்கொள்ளவேண்டும். என்றாவது ஒருநாள், முந்தியோ பிந்தியோ, அது பரீட்சிக்கப்படும். நாம் கலகம்செய்தால் ஆவிக்குரியரீதியில் நாம் வெட்டுண்டுபோவோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்கு சாட்சியையும், ஆசாரியத்துவத்தையும், சேனையையும் கொன்றுவிடுவோம்.

அவிசுவாசம்

நாம் தவிர்க்கவேண்டிய மூன்றாவது காரியம் அவிசுவாசம்.

இது நிச்சயமாக நம்மைக் கொன்றுவிடும். கானான் தேசத்தை வேவுபார்க்கச் சென்றவர்கள் எப்படி ஒரு துர்ச்செய்தியைக் கொண்டுவந்தார்கள் என்று உங்களுக்கு நினைவிருக்கும். ஒருபக்கம் தேசம் ஈடற்ற நல்ல தேசம் என்று அவர்கள் சொன்னார்கள். ஆனால், இன்னொரு பக்கம் அந்த தேசத்துக்குள் நுழைவது சாத்தியமேயில்லை என்றும் சொன்னார்கள். "அந்தத் தேசத்திலே இராட்சதர்கள் இருக்கிறார்கள். பட்டணங்கள் அரணிப் பானவைகளும் மிகவும் பெரியவைகளுமாய் இருக்கின்றன," என்று அவர்கள் சொன்னார்கள். இஸ்ரவேலர் களால் அந்தத் தேசத்தை ஒருபோதும் சுதந்தரிக்கமுடியாதென்றும், அப்படிச் சுதந்தரிக்க முயன்றால் அவர்கள் முற்றிலும் முறியடிக்கப்பட்டு, விழுங்கப்பட்டுவிடுவார்கள் என்றும் அவர்கள் ஆணித்தரமாகக் கூறினார்கள்.

பலவேளைகளில் பொல்லாங்கனாகிய எதிரி அதே காரியங் களைத்தான் நமக்குள் பேசுகிறான். அவன், "சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைப்பற்றிப் பேசாதே. அவர் நல்லவர்; அவர் அற்புதமானவர். ஆனால், நீ அவருக்குள் நுழைந்து செல்வது ஒருபோதும் சாத்தியமே இல்லை, முடியவேமுடியாது," என்று கூறுகிறான். நீங்கள் இந்த அதிகாரங்களை யெல்லாம் வாசித்துக் கொண்டிருக்கும்போதே அவன் இந்தக் காரியங்களை உங்கள் செவியில் கிசுகிசுத்துக்கொண்டிருக்கிறானோ என்று நான் பயப்படுகிறேன். "உன்னால் நல்ல தேசத்துக்குள் நுழையமுடியு மென்று ஒருபோதும் எண்ணாதே; இது உன் திறமைக்கு அப்பாற்பட்டது. உன்னால் ஒருபோதும் நுழையமுடியாது." நம்மில் அநேகருக்குள் ஒளிந்துகொண்டிருக்கும் குட்டிப் பிசாசு தன் மரணத்தின் விஷத்தை நமக்குள் செலுத்துவதற்கு ஒரு வாய்ப்புக்காக சும்மா காத்துக்கொண்டிருக்கிறான். அவனை ஒருபோதும் நம்பாதே. "மக்கள் இராட்சதர்கள், பட்டணங்கள் வானளாவிய உயரத்துக்கு அரணிப்பானவைகள். நீ தோற்றுப்போவாய், இது உனக்குத் தெரியும்," என்று அவன் கூறுவான். இதை அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் என்று எபிரேயர் மூன்றாம் அதிகாரம் கூறுகிறது. இது பொல்லாங்கனால் ஆக்கிரமிக்கப்பட்ட இருதயம்; எனவே இது பொல்லாத இருதயம் என்று அழைக்கப்படுகிறது. பொல்லாங்கனிடமிருந்து நம் இருதயத்தை விடுவிக் கும்படி நாம் கர்த்தரிடம் கேட்கவேண்டும். "கர்த்தாவே, நான் ஒரு நல்ல இருதயத்தை, விசுவாசம் நிறைந்த இருதயத்தை, விரும்புகிறேன். என்னால் நல்ல தேசத்துக்குள் நுழைய முடியவில்லை. ஆனால் உம்மால் முடியும்," என்று நாம் ஜெபிக்கவேண்டும். உலகத்தில் இருக்கிறவனிலும் நம்மில் இருக்கிறவர் பெரியவர். என்னால் நுழையமுடியாது, ஆனால்

கிறிஸ்துவால் நுழையமுடியும். அவர் என்னில் இருக்கிறார். அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையில் நமக்கு விசுவாசம் வேண்டும். நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் அல்லது நினைக்கிறதற்கும், நாம் கனவுகாண்கிறதற்கும் அல்லது கற்பனை செய்கிறதற்கும் மிஞ்சி அபரிமிதமாய் செய்யத் தேவன் வல்லவராய் இருக்கிறார். தேவன் அதைச்செய்வார்; தேவன் அதை வாய்க்கச்செய்வார். காலேப், யோசுவா ஆகிய இருவரின் எடுத்துக்காட்டை நாம் பின்பற்றுவோம். விசுவாசம் நிறைந்த இருதயம் அவர்களிடம் இருந்தது. "நாம் உடனே போய் அதைச் சுதந்தரித்துக்கொள்வோம்; நாம் அதை எளிதாய் மேற்கொள்ளலாம்," என்று அவர்களால் மக்களிடம் கூறமுடிந்தது.

சகோதர சகோதரிகளே, எல்லா அவிசுவாசத்தையும் தவிர்ப்பதற்கு நாம் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைப்பற்றி நீங்கள் இவ்வளவு அதிகமாக வாசித்தபின்பும்கூட உங்களில் சிலருக்கு அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் இருக்குமோ என்று நான் மிகுந்த பாரப்படுகிறேன். ஒருவேளை அது இப்போது வெளியரங்கமாகாது. ஆனால் கொஞ்சம் காலத்திற்குப் பிறகு நீ பரீட்சிக்கப்படுவாய். ஒருவேளை நீ தெருவில் நடந்து போய்க்கொண்டிருக்கும்போது ஒருநாள், "இது என்ன! இது யாராலாவது முடியுமா? இப்படிப்பட்ட சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை யாரால் அனுபவித்துமகிழமுடியும்? என்னால் முடியாது. என்னால் ஒருபோதும் முடியவே முடியாது," என்று உனக்குத்தானே நீ சொல்லிக்கொள்வாய். இது அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம். உள்ளதை உள்ளதென்று கூறுங்கள். ஜாக்கிரதையாய் இருங்கள்! விழித்திருங்கள்! அதற்கு எதிராக ஜெபத்தோடு இருங்கள்!

உண்மையில் உங்கள் ஜென்மசுபாவ பலத்தால் நல்ல தேசத்தை உங்களால் ஒருபோதும் அடையமுடியாது. உயிர்த்தெழுதலின் வல்லமையால் மட்டுமே இது சாத்தியம். கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பின அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாக ஆக்கின வல்லமையால் மட்டுமே உங்களை நல்ல தேசத்துக்குள் கொண்டுசெல்ல முடியும். கர்த்தரைத் துதியுங்கள். இந்த வல்லமை நம்மில் இருக்கிறது! உள்ளுறையும் பரிசுத்த ஆவியானவர்மூலமாக இந்த வல்லமை தொடர்ந்து நமக்குள் கடத்தப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நாம் போதுமான அளவுக்குப் பலமானவர்களா? அல்லேலூயா, நாம் போதுமான அளவுக்குப் பலமானவர்கள்—நம்மில் இல்லை, மாறாக அவரில்; மாம் சத்தில் இல்லை, ஆனால் ஆவியானவரில்!

ஆவியானவருக்குள் நாம் இதைச் செய்துமுடிப்போம். சகோதர சகோதரிகளே, இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அல்லேலூயா, இதை நாம் எடுத்துக்கொள்ளவேண்டும். ஒருபோதும் நம்பிக்கையை இழக்காதீர்கள்—அது நம்முடையது! நீங்கள் மிகவும் இளைய வர்கள் என்று ஒருபோதும் எண்ணாதீர்கள். நேற்று நீங்கள் மிகவும் இளையவர்களாக இருந்தீர்கள், ஆனால், இன்று இல்லை. விசுவாசத்தின் முழு நிச்சயத்தோடு விசுவாசியுங்கள். கிறிஸ்து உங்களில் இருக்கிறார். சர்வவல்லமையுள்ள தேவ னோடு நீங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். தேவன் என்னவாக இருக்கிறாரோ, தேவனிடம் என்னவெல்லாம் இருக் கிறதோ, அதையெல்லாம் அவருடைய ஆவியானவர் நாள் தோறும் உங்களுக்குள் கடத்துகிறார். அவர் உங்களுக்காக இதைச் செய்துமுடிப்பார். அவருடன் உள்ள உங்கள் ஐக்கியத்தை நீங்கள் பராமரித்தால் உங்களால் நல்ல தேசத்துக்குள் நுழையமுடியும்.

நாம் போராட வேண்டிய சில யுத்தங்கள் இருக்கும். எதிரிக்கு அது யுத்தம்; உங்களுக்கோ அது ஓர் இளைப்பாறுதல். யுத்தம் அவனுக்கு ஒரு தோல்வி. ஆனால் உங்களுக்கு இரை. யோசுவாவும், காலேப்பும் மக்களைப் பார்த்து, "...நீங்கள் பயப்பட வேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்," என்று சொன்னார்கள். எதிரி நம் இரையாவான். நாம் அவர்களை உண்பதற்குச் செல்லலாம். நாம் யுத்தத்தில் ஈடுபடவில்லை யென்றால் பசியாக இருப்போம். அனுதின மன்னா போதுமானது இல்லை; எதிரியையே எடுத்து விழுங்கிவிடவேண்டும். எதிரி நம் உணவாக இருப்பான், அவனை விழுங்குவது நம் திருப்தியாக இருக்கும். சகோதர சகோதரிகளே, முன்னேறிச் செல்வதற்கும், யுத்தத்தில் ஈடுபடுவதற்கும், எதிரியை விழுங்குவதற்கும் உங்களுக்கும் எனக்கும் ஜீவனுள்ள விசுவாசம் வேண்டும். எவ்வளவு அதிகமாக நீங்கள் விழுங்குகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் திருப்தியாவீர்கள். முறியடிக்கப்பட்ட எதிரிதான் மிகச் சிறப்பான உணவு, மிகச் சுவையான உணவு. யோர்தானைக் கடந்து எரிகோவைக் கைப்பற்றுவோம். முழுப் பட்டணத் தையும் சுவையான பொறியலாக நமக்கு இரையாக்குவோம். நாமெல்லாரும் நிறைவாய்த் திருப்தியடைவோம். அல்லேலூயா! இப்பேர்ப்பட்ட யுத்தத்துக்கு நமக்கு இப்பேர்ப்பட்ட விசுவாசம் வேண்டும்.

உலகப்பிரகாரமான தொடர்புகள்

எதிரி தந்திரமானவன் என்பதை நினைவில்கொள்ளுங்கள். நம்மைத் தடுக்கவும், எதிரிக்கவும் அவன் மிகத் தந்திரமான வழிகளை பயன்படுத்துவான். இஸ்ரவேல் மக்களை உலகத் தோடு இணைப்பதற்கும், அவர்கள் வேசித்தனம்செய் வதற்கும், அவன்

அவர்களுக்கு எதிராக புறவின தீர்க்கதரிசியான பிலேயாமைப் பயன்படுத்தினான். உலகம் எப்போதும் தேவ சேனையை நாசமாக்கும். நாம் ஜெபத்துடன் இருக்க வேண்டும். எல்லா விதமான உலகப்பிரகாரமானத் தொடர்புகளைக்குறித்தும் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும். நம்மை நாசமாக்குவதற்கும் எதிரியால் வேறொன்றையும் செய்யமுடியாதபோது நம்மை வஞ்சிக்கவும், உலகப் பிரகாரமான ஏதாவது ஒன்றுடன் நமக்கு ஒரு பிணைப்பை ஏற்படுத்தவும் அவன் மிகத் தந்திரமாக வருவான். அந்தக் காரியங்கள் நமக்கு உலகப்பிரகாரமானவையாகத் தோன்றாமல் இருக்கலாம்; அவை மிகவும் சட்டப்பூர்வமானவையாகவும், ஒழுங்கானவையாகவும் தோன்றலாம். கர்த்தருடன் உள்ள நிலையான ஐக்கியத்தைக் காப்பதால் மட்டுமே நாம் தப்பித்துக் கொள்ளமுடியும். மதச்சார்ப்புடைய உலகமோ அல்லது மதச்சார்பற்ற உலகமோ, உலகத்தோடு உள்ள பிணைப்பில் நாம் சிக்கிக் கொள்வோம் என்றால் அதில் நாம் வல்லமையற்றவர்களாகி விடுவோம். இதை ஓர் எச்சரிக்கையாக எடுத்துக்கொள்வதற்குக் கர்த்தர்தாமே நமக்குக் கிருபை யருள்வாராக.

முறுமுறுப்பு

மேலும் இஸ்ரவேல் மக்கள் செய்ததுபோல கர்த்தருக்கு எதிராக, ஒருபோதும் முறுமுறுக்காதிருக்கவும் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். நாம் எப்போதும் அவர் துதியைப் பாடவேண்டும். வழி எவ்வளவு கடினமாக இருந்தாலும் பரவாயில்லை, நீ எவ்வளவு கஷ்டத்தைச் சந்தித்தாலும் பரவாயில்லை, எப்போதும் கர்த்தருக்குத் துதி பாடு. இதுவே வெற்றியின் வழி.

இவைகளை நினைவில்கொள்; ஒருபோதும் அந்நிய அக்கினியை ஏறெடுக்காதே, ஒருபோதும் கலகம்செய்யாதே, அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயத்தை விட்டுவிடு, உலகப் பிரகாரமான காரியங்களோடு உள்ள எந்தத் தொடர்பைப் பற்றியும் விழிப்பாக இரு, கர்த்தருக்கு எதிராக ஒருபோதும் முறுமுறுக்காதே. நாம் இப்படிச் செய்தால் முன்னேறிச்சென்று தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளத் தயாராக இருப்போம். நாம் வெற்றி பெறுவோம்.

அதிகாரம் பதினான்கு

நல்ல தேசத்துக்குள் நுழைதல்

வேத வாசிப்பு: யோசு. 1:1-6; 4:1-3, 8, 9; 5:2, 7-9, 10-12, 13-15; 6:1-11, 15, 16, 20; கொலோ. 2:12; 3:1-5; எபே. 6:12, 13; 2 கொரி. 10:3-5

நாம் இப்போது நல்ல தேசத்துக்குள் நுழைவதற்குத் தயாராக இருக்கிறோம். எகிப்தில் நாம் பஸ்கா ஆட்டுக்குட்டியை அனுபவித்துமகிழ்ந்திருக்கிறோம், எகிப்தைவிட்டு வெளியே வந்து சிவந்த சமுத்திரத்தைக் கடந்திருக்கிறோம், கிறிஸ்துவை அனுதின மன்னாவாகவும், பாய்ந்தோடும் நீரோடையையுடைய கன்மலையாகவும் அனுபவித்துமகிழ்ந்திருக்கிறோம், கிறிஸ்துவைத் தேவனுடைய சாட்சியான பெட்டியாக அனுபவித்திருக்கிறோம். இந்தக் கட்டத்தில் கூடாரமாகும்படி அவருடைய பெரிதாக்க மாகவும், வெளியாக்கமாகவும் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டிருக் கிறோம்; நம்மிடம் கூடாரம் இருப்பது மட்டுமின்றி, நாமே கூடார மாகவும் இருக்கிறோம். நாமே கிறிஸ்துவின் விரிவாக்கம், பெருக்கம். நாம் கிறிஸ்துவின் மீட்பு என்ற உறுதியான ஆதாரத்தின்மேல் நின்று, கிறிஸ்துவின் பரிபூரணத்தால் மூடப்பட்டு, ஒன்றாகக் கட்டப்பட்டிருக்கிறோம். நாம் மிகப்பலமாகவும், திடமாகவும் இருக்கிறோம். தேவனுடைய வெளியாக்கமாகிய கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றாக இருக்கிறோம். மேலும், கிறிஸ்துவை சகலவிதமான பலிகளாகவும் மீண்டும் மீண்டும் அனுபவித்துமகிழ்வது எப்படி என்றும் நமக்குத் தெரியும். ஆகையால், நம்மிடம் ஆசாரியத்துவம் இருக்கிறது. நாமே ஆசாரியர்கள். மேலும் நாம் ஆசாரியத்துவத்தின்கீழ் சேனையாக, அதாவது அந்த நல்ல தேசத்துக்காக போர்புரிவதற்கான தெய்வீக சேனையாக உருவாக்கப்பட்டிருக்கிறோம். போர்புரிவதற்கும், எதிரியைத் தோற்கடிப்பதற்கும் நாம் ஆயத்தமாக இருக்கிறோம். கிறிஸ்துவுக்குரிய எல்லாவற்றையும் அனுபவித்துமகிழ்வதின்மூலம் யெகோ வாவின் சேனை தயாராகிவிட்டது.

சகோதர சகோதரிகளே, இந்த எல்லா அனுபவங்களி னூடாய் நாம் கடந்துசென்றபின்பும் இதைவிட இன்னும் மிக அருமையான காரியங்கள் நமக்குமுன் இருக்கின்றன, அதாவது நல்ல தேசம், சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து நமக்குமுன் இருக்கிறார். சின்ன ஆட்டுக்குட்டியில் தொடங்கினோம், இறுதியில் கானான் தேசத்துக்கு, அதாவது சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்கு

வருகிறோம். தேசம் இன்னும் நமக்குமுன்பாக இருக்கிறது! நாம் கிறிஸ் துவை அனுபவித்துமகிழ்ந்திருக்கிறோம், நாம் கிறிஸ்துவைச் சுதந்தரித்திருக்கிறோம், நாம் கிறிஸ்துவையுடையவர்களாக இருக்கிறோம் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை; இன்னும் நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கிறோம். எனினும் நமக்குமுன்பு கிறிஸ்துவுக்குரியவை அதிகமாக இருக்கின்றன. நாம் சுதந்தரிப்பதற்காக இன்னும் பெரிய கிறிஸ்து காத்துக்கொண்டிருக் கிறார். ஏனென்றால், சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவே தேவன் நமக்குமுன் வைத்திருக்கும் இலக்கு. இந்த இலக்குக்குக் குறைவாக நாம் நின்றுவிடக்கூடாது.

கர்த்தருடைய வார்த்தையை எடுத்துக்கொள்ளுவதின்மூலம்

தேசத்துக்குள் நுழைய நாம் தயாராக இருக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நாம் சேனையாக அமைக்கப்பட்டிருக் கிறோம், நாமே இப்போது யெகோவாவின் மகிமையான, தெய்வீக, பரலோக சேனை. நாம் என்ன செய்யலாம்? முதன் முதலாக கர்த்தருடைய வார்த்தையை நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். கர்த்தர் யோசுவாவை நோக்கி, "இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத் துக்குப் போங்கள். உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்," என்று சொன்னார். கர்த்தர் அதை வாக்குத்தத்தம்பண்ணியிருக்கிறார், ஆனால் நாம் அதைச் சுதந்தரிக்கவேண்டும். கர்த்தர் அதைத் தந்திருக்கிறார், ஆனால், நாம் அதை அனுபவிக்க வேண்டும். அது நம் பங்கு, ஆனால், நாம் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். நம்மிடம் விசுவாசம் இருக்கவேண்டும். நம்மிடம் நம்பிக்கை, முழு நிச்சயம் இருக்க வேண்டும். அது தற்போது நம் கைவசம் இல்லை, ஆனால் அவர் நாம் அதை எடுத்துக்கொள்ளும்படிக்குச்செய்வார். நாம் அதைச் சுதந்தரிக்கும்படிச்செய்வார். நாம் அவரை விசுவாசிக்க வேண்டும், நாம் அவருக்கு நம் முழு ஒத்துழைப்பையும் கொடுக்கவேண்டும். நாம் அதைச் செய்வோமா? நாம் இன்றைக்கே எழுந்து தேசத்தைச் சுதந்தரிக்க முன்செல்வோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம், தேசம் நம்முடையது! அதை நாம் எடுத்துக்கொள்வோம். நாளைக்கு இல்லை, மாறாக இன்றைக்கே! "நாளைக்கு" என்று ஒருபோதும் சொல்லாதே. அவிசுவாசத்தில் எப்போதும் நாளை, நாளை, நாளைதான். "நாளை" என்பது எதிரிக்குச் சொந்தமானது. விசுவாசத்தில் நாளை என்பது கிடையாது; எப்போதுமே "இன்றுதான்" உண்டு. "இன்று" என்பது

நம்முடையது. சகோதர சகோதரிகளே, இதை நாம் இன்றைக்கே எடுத்துக்கொள்ளவேண்டும். இதுவே நாம் செய்யவேண்டிய முதல் காரியம். நாம் தேவனுடைய வார்த்தையின்மேல் நிற்கவேண்டும். தேவனுடைய வார்த்தையை நாம் எடுத்துக்கொண்டு தேசத்தைச் சுதந்தரிக்க நாம் முன்னேறிச் செல்லவேண்டும்.

நாம் அடக்கம்பண்ணப்பட்டோம் என்று உணர்வதின்மூலம்

இரண்டாவதாக, இரட்சிக்கப்பட்டிருக்கும் நாம், கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கும் நாம், சிலுவையில் அறையப்பட்டோம் என்று உணரவேண்டும். நாம் மரித்த வர்கள்! நாம் ஏற்கெனவே அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறோம்! இந்த உண்மையை வெளிப்படுத்துகிற ஓர் அருமையான பாடல் இருக்கிறது.

கிறிஸ்துவுடனே அடக்கம்பண்ணப்பட்டேன்,
அவருடனே எழுப்பப்பட்டேன்
நான் செய்வதற்கு என்ன விட்டுவைத்தார்?...

நாம் கிறிஸ்துவுடனே அடக்கம்பண்ணப்பட்டுவிட்டோம்; நம் கதை முடிந்துவிட்டது! "அடக்கம்பண்ணப்பட்டேன்" என்ற வார்த்தை எவ்வளவு பெரிய வார்த்தை என்று நீ உணர்கிறாயா? அதைக் கொட்டை எழுத்துக்களில் எழுதி உன் படுக்கை அறையில் தொங்கவிடுவது நலமாக இருக்கும்—**அடக்கம்பண்ணப்பட்டேன்!** அதே வார்த்தையை உன் சாப்பாட்டு அறையில் தொங்கவிடு, இன்னொன்றை நீ புழங்கும் அறையில் மாட்டிவை. இன்னொன்றை உன் சமையல் அறையில் தொங்கவிடு. எங்கெல்லாம் அறை இருக்கிறதோ அங்கெல்லாம் 'அடக்கம்பண்ணப்பட்டேன்,' 'அடக்கம்பண்ணப்பட்டேன்,' 'அடக்கம்பண்ணப்பட்டேன்!' 'நான் அடக்கம்பண்ணப்பட்டுவிட்டேன்!' இப்படி அலங்கரிக்கப்பட்ட ஒரு வீட்டைப் பார்ப்பது எனக்கு மெய்யாகவே இன்பமாக இருக்கும். அடக்கம்பண்ணப்படுவது என்னே இளைப்பாறுதல்! இதைவிடச் சிறந்த இளைப்பாறுதல் உங்களுக்குக் கிடைக்குமா? இதனால்தான் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதியைக் கடந்து இப்படியாகக் கொண்டுவரப்பட்டார்கள். யோர்தானே அவர்களுடைய அடக்கம்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தைவிட்டு வெளியே வந்தபோது அவர்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தார்கள். இது ஞான ஸ்நானத்துக்கு அடையாளம். இப்போது மறுபடியும் யோர் தானில் அவர்கள் தண்ணீரினூடாய்க் கடந்துசென்றார்கள். இது சிவந்த சமுத்திரத்தை நினைவுகூருதலாகும். நாம் கிறிஸ்துவை நம்

இரட்சகராகப் பெற்றுக்கொண்டபோது சபை நமக்கு ஞானஸ்நானம் தந்தது—நாம் அடக்கம்பண்ணப்பட்டோம், ஆனால் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், அதன் பின்பு கொஞ்சக்காலத்திற்குள் நாம் அதை மறந்து விட்டோம்; நாம் கல்லறையைவிட்டு வெளியே வந்தோம். நாம் உயிரோடு எழுப்பப்பட்டோம் என்று நான் கூறவில்லை, மாறாக நாம் கல்லறையைவிட்டு வெளியே வந்தோம் என்று கூறுகிறேன். சிலர் போராடிக்கொண்டு எகிப்துக்கேகூடத் திரும்பிப் போய்விட்டார்கள். இப்போது நாம் கிறிஸ்துவை இவ்வளவு அதிகமாக அனுபவித்திருக்கிறோம்; நாம் கிறிஸ் துவைத் தேவனுடைய சாட்சியின் மையமாகக் கொண்டிருக்கிறோம்; கிறிஸ்துவின் வெளியாக்கமாகக் கூடாரத்துக்குள் நாம் கட்டியெழுப்பப்பட்டிருக்கிறோம்; ஆசாரியத்துவமும், தேவனுடைய சேனையும் நம்மிடம் இருக்கின்றன; தேசத்தைச் சுதந்தரிக்க நாம் தயாராக இருக்கிறோம்; எனவே நாம் ஏற்கெனவே அடக்கம் பண்ணப்பட்டுவிட்டோம் என்று நமக்கு நினைவுபடுத்தக்கூடிய ஒரு நினைவுச்சின்னத்தை எழுப்பவேண்டும் என்று தேவன் நமக்குக் கூறுகிறார். நாம் அடக்கம் பண்ணப்பட்டுவிட்டோம் என்பதை இந்த நேரத்திலிருந்து ஒருபோதும் மறக்கக்கூடாது.

சிவந்த சமுத்திரமும், யோர்தானும் கிறிஸ்துவின் மரணம் என்னும் ஒரே காரியத்தையே குறிப்பிடுகின்றன. சிவந்த சமுத்திரத்தில் எகிப்திய சேனை அடக்கம்பண்ணப்பட்டது. இந்த உலகத்துக்குரிய அனைத்தும், இந்த உலகத்தின் சகல சக்திகளும், அங்கு அடக்கம்பண்ணப்பட்டன. நீ ஞானஸ்நானத்தில் அடக்கம்பண்ணப்பட்டபோது எத்தனை காரியங்கள், எத்தனை மக்கள் உன்னோடு அடக்கம்பண்ணப்பட்டார்கள் என்று உனக்குத் தெரியுமா? நான் எந்த தேசத்திலிருந்து வருகிறேனோ அந்த தேசத்தில் ஒரு மனிதன் மரித்து அடக்கம்பண்ணப்படும்போது மக்கள் அவனிடமிருந்த எல்லாவற்றையும் அவனோடு அடக்கம்பண்ணினார்கள். அதுபோலவே கர்த்தருடைய பார்வையில் நாம் அடக்கம்பண்ணப்பட்டபோது நாம் நேசித்த எல்லாக் காரியங் களும், நம் உலகமாயிருந்த சகலகாரியங்களும் நம்மோடு அடக்கம் பண்ணப்பட்டன. நம்மை முன்பு அடிமைத்தனத்தில் கட்டிவைத் திருந்த உலகப்பிரகாரமான சகல சேனையும், உலகப்பிரகாரமான சகல சக்திகளும் அடக்கம்பண்ணப்பட்டன. இதுவே சிவந்த சமுத்திரத்தின் நிஜம். இங்கு இப்போது யோர்தான் நதியில் தேவன் அதை இன்னொரு தடவை நமக்கு நினைவுபடுத்த விரும்புகிறார். உலகப் பிரகாரமான சக்திகள் மட்டும் அடக்கம்பண்ணப் படவில்லை. நாமும் அடக்கம்பண்ணப்பட்டோம். நாம் அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறோம்!

யோர்தான் நதியைக் கடப்பது ஓர் அழகான, மகிமையான

சித்திரம். முதலாவது ஆசாரியத்துவத்தோடுகூடிய உடன் படிக்கைப் பெட்டி நதிக்குள் நுழைந்து, அங்கு நதியின் நடுவில் தங்கி நின்றது. இது மிகுந்த பொருள் பொதிந்தது. நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, தேவனுடைய சாட்சியாகிய கர்த்தராகிய கிறிஸ்துவே உடன்படிக்கைப் பெட்டி. கிறிஸ்து ஆசாரியத்துவத் தோடு மரண நதியின் ஆழத்துக்குள்ளே சென்றார். பின்பு எல்லா மக்களும் பின்பற்றிச் சென்றார்கள். எல்லா மக்களும் அந்த நதியின் அடிப்பாகத்துக்குள் சென்று, அதே இடத்தைக் கடந்தார்கள். பின்பு கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரங்களில் கோத்திரத்துக்கு ஒருவராகப் பன்னிரண்டுபேரைத் தேர்ந்தெடுக்கச் சொன்னார். நதியின் அடியில் உடன்படிக்கைப் பெட்டி நின்ற இடத்திலிருந்து ஒவ்வொருவரும் ஒரு கல்லை எடுத்து, அதை யோர்தானின் அக்கரைக்கு, அதாவது நல்ல தேசத்துக்குள், கொண்டு வந்தார்கள். இது உயிர்த்தெழு தலைக் குறிக்கிறது. கானான் தேசத்துக்குள் நுழைந்தவர்கள் எல்லாரும் உயிர்த்தெழுந்தவர்கள். அவர்கள் புதியவர்கள்; அவர்கள் பழையவர்கள் இல்லை. அவர்கள் உயிர்த்தெழுந்தவர்கள், ஜென்ம சுபாவமானவர்கள் இல்லை. உயிர்த்தெழுந்தவர்கள் மட்டுமே சகலத் தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் நுழைந்து, அவரைச் சுதந்தரிக்கமுடியும். ஜென்மசுபாவமான மனிதன் அவரைச் சுதந்தரிக்க முடியாது. உயிர்த்தெழுதல் என்ற ஆதாரத்தின் மேல்தான் கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக நாம் அனுபவித்து மகிழமுடியும். சகோதர சகோதரிகளே, நாம் உயிர்த்தெழுந்தவர்கள்! நாம் அடக்கம்பண்ணப்பட்டு உயிரோடு எழுப்பப்பட்டிருக் கிறோம்! இப்போது நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்.

இந்த உண்மையை அவர்களுக்கு நினைவுபடுத்துவதற்காக யோசுவா வேறொரு காரியத்தையும்செய்தான். அவன் ஒவ்வொரு கோத்திரத்துக்கும் ஒவ்வொரு கல்லாக இன்னும் பன்னிரண்டு கற்களை எடுத்து உடன்படிக்கைப் பெட்டி நின்ற அதே இடத்தில் அவைகளை நாட்டினான். இஸ்ரவேலர் களின் அடக்கத்தை நினைப்பூட்டும் நினைவுச்சின்னமாக அவன் அவைகளைப் புதைத்தான். தேவனுடைய பார்வையில் இஸ்ரவேல் மக்களெல் லாரும் யோர்தான் நதியில் அடக்கம் பண்ணப்பட்டார்கள். இதன் பொருள் என்னவென்றால், தேவனுடைய பார்வையில் நாமெல்லாரும் கிறிஸ்துவின் மரணத்துக்குள் அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறோம்.

இவையனைத்தும் நிறைவேறியபின்பு, உடன்படிக்கைப் பெட்டி ஆசாரியத்துவத்தோடு யோர்தானைவிட்டு வெளியே வந்தது. நாமெல்லாரும் நீக்கப்பட்டபின்பு கிறிஸ்து மரணத்திலிருந்து வெளிப்பட்டார், கிறிஸ்துவே முதலாவது மரணத்துக்குள் நுழைந்தார், ஆனால், கிறிஸ்துவே கடைசியாக மரணத்தைவிட்டு

வெளியே வந்தார். அவர்தாம் முதலாவது உள்ளே சென்றவர், ஆனால் கடைசியாக வெளியே வந்தவர்; நாம் கடைசியாக உள்ளே சென்றவர்கள், ஆனால் முதலாவது வெளியே வந்தவர்கள். கிறிஸ்து மரணத்தை முடித்தார். இந்த மரணத்துக்குள் நாமெல்லாரும் அடங்கியிருக்கிறோம்! நாமெல்லாரும் மரித்தவர்கள்! நாமெல்லாரும் கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம்! "அல்லேலூயா, நாம் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறோம்! நாம் இப்போது உயிர்த்தெழுதல் என்ற தளத்தின்மேல் நிற்கிறோம்! நாம் இப்போது கானானில் இருக்கிறோம்! நாம் இப்போது நல்ல தேசமாகிய கிறிஸ்துவில் இருக்கிறோம்!" என்று நாம் கூறலாம்.

கிறிஸ்துவின் மரணத்தைப் பிரயோகிப்பதின்மூலம்

மூன்றாவதாக, கிறிஸ்துவுடனேகூட நாம் சிலுவையில் அறையப்பட்டோம் என்றும், அடக்கம்பண்ணப்பட்டோம் என்றும் விசுவாசித்து இந்த மரணத்தை நாம் நமக்குப் பிரயோகிக்க வேண்டும். ஆகையால், நாம் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். இதுவே கிறிஸ்துவின் மரணத்தை நம் மாம்சத்தின் மேல் பிரயோகிப்பதாகும். நாம் கிறிஸ்து வுடன் அடக்கம்பண்ணப் பட்டிருக்கிறோம். கிறிஸ்துவுடன் எழுப்பப்பட்டிருக்கிறோம் என்று உணர்ந்தால் நாம் நம் மாம்சத்தை மரணத்துக்கு உட்படுத்த வேண்டும்; கிறிஸ்துவின் மரணத்தை மாம்ச அவயவங்களின்மேல் பிரயோகிக்க வேண்டும். இதுவே விருத்தசேதனம். இதையே நாம் ஒவ்வொருநாளும் பயிற்சிசெய்யவேண்டும். நாம் மரித்து அடக்கம்பண்ணப்பட்டவர்கள் என்ற தளத்தின்மேல் நாள் தோறும் நின்று, கிறிஸ்துவின் மரணத்தை நம் அவயவங்களின்மேல் நாள்தோறும் பிரயோகிக்கவேண்டும். கிறிஸ்துவின் மரணத்தை நம் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் பிரயோகித்தால் மட்டும் போதாது, மாறாக ஒவ்வொரு கணப்பொழுதும் அவருடைய மரணத்தை நம் மாம்ச அவயவங் களின்மேல் பிரயோகித்து அவைகளை மரணத்துக்கு உட்படுத்தவேண்டும். கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டு, கிறிஸ்துவுடனேகூட எழுப்பப்பட்டிருக்கிறோம் என்று கொலோசெயர் இரண்டாம் அதிகாரம் கூறுகிறது. "நம் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் இப்போது மறைந்திருக்கிறது," என்று மூன்றாம் அதிகாரம் கூறுகிறது. இதை ஆதாரமாகக் கொண்டு, "இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்," என்று கொலோசெயர் 3:5 கூறுகிறது. கிறிஸ்துவுடனான நம் அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் நாம் உணர்ந்தால் அவருடைய மரணத்தை நம் மாம்ச அவயவங்களின்மேல் நடைமுறையில் விசுவாசத்தால் பிரயோகிக்க வேண்டும்.

தேசத்தின் விளைபொருளை அனுபவித்துமகிழ்வதின்மூலம்

நான்காவதாக, கிறிஸ்துவுடனே அடக்கம்பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்திருக்கிறோம் என்ற ஆதாரத்தின்மேல் கிறிஸ்துவின் மரணத்தை நம் அவயவங்களின்மேல் பிரயோகித்த வுடனே ஜீவனுக்குரிய ஏதோவொன்றை நாம் அனுபவித்துமகிழ்கிறோம். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவாகிய தேசத்தின் விளைபொருளை நாம் அனுபவித்துமகிழ்கிறோம். மன்னா நின்றுபோய், தேசத்தின் விளைபொருள் அதின் இடத்தை எடுத்துக்கொள்கிறது. பெரிய கிறிஸ்து சிறிய கிறிஸ்துவின் இடத்தை எடுத்துக்கொள்கிறார். இதற்குமுன்பு கொஞ்சம் கிறிஸ்துவை, அதாவது மன்னாவை, நாம் தொடர்ந்து அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருந்தோம். ஆனால், இப்போதோ சிறிய கிறிஸ்து நின்றுவிடுகிறார். இப்போது நாம் பெரிதான, செழிப்பான, நிறைவான கிறிஸ்துவைச் சுவைக் கிறோம். நாம் இப்போது தேசத்தை, அதாவது சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை, அனுபவித்துமகிழ்கிறோம்.

சகோதர சகோதரிகளே, நீங்கள் இப்போது மன்னாவை அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அல்லது தேசத்தை அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? இன்று நீங்கள் எதை அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? நாமெல்லாரும் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், எப்பேர்ப்பட்ட கிறிஸ்துவை? ஒருவேளை சிலர் கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக மட்டுமே அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கலாம். நம்மில் பெரும்பாலானோர் அவரை அனுதின மன்னாவாக அனுபவித்து மகிழ்ந்துகொண்டிருக்கலாம். ஆனால் தேசத்தின் விளைபொருளோ மன்னாவைவிட மிகச் சிறந்தது. உங்கள் அனுபவம் என்ன? இந்தக் கேள்விக்குப் பதில்சொல்வது கடினம் என்று உங்களில் சிலர் சொல்லலாம். சில வேளைகளில் கிறிஸ்துவை மன்னாவாக அனுபவித்துமகிழ்கிறீர்கள், சில வேளைகளில் கிறிஸ்துவை தேசத்தின் விளைபொருளாக அனுபவித்துமகிழ்வதுபோல் தோன்றுகிறது. நீங்கள் அவரைத் தேசத்தின் விளைபொருளாக அனுபவித்துமகிழ்கிறீர்களா இல்லையா என்பது நீங்கள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்களா என்பதையே பெரிதும் சார்ந்திருக்கிறது. நீங்கள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்கள், நீங்கள் இப்போது உயிர்த்தெழுதல் என்ற தளத்தின்மேல் உள்ளீர்கள் என்று நீங்கள் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறீர்கள்?

ஓர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். இன்று அதிகாலையில்

வெகு விநோதமான ஓர் ஆளைச் சந்தித்தேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் உயிர்த்தெழுதலின் ஜீவனை அனுபவிப் பதற்கு இந்தக் குறிப்பிட்ட நபர் எப்போதும் ஒரு காரணமாக இருக்கிறார். கர்த்தர் இந்த நபரைப் படைத்திருக்கிறார், அவருடைய இறையாண்மைவாய்ந்த ஞானத்தின்படி இந்த நபரை என்னிடத்தில் கொண்டுவந்திருக்கிறார். ஏன் இவர் எனக்குத் தேவை என்று அவர் அறிவார். இந்த நபரோடு இடைப்படுவதற்கு அனுதினமும் எனக்கு உயிர்த்தெழுதலின் வல்லமை தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இன்று அதிகாலை இந்த நபர் என்னிடத்தில் மிக நூதனமாக நடந்துகொண்டு என்னை மிகவும் தொந்தரவுபண்ணிவிட்டார் என்று வைத்துக்கொள்வோம். நான் அவர்மேல் அளவுகடந்த விசனமடைந்தேன்; அவர்மேல் கோபம் மூண்டது. ஆனால், என் அறைக்குத் திரும்பியபோது, என் மனச்சாட்சி என்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தது. எனவே நான் கர்த்தரிடத்தில் பாவ அறிக்கைசெய்தேன். "கர்த்தாவே, என்னை மன்னியும், நான் தோற்றுப்போனேன், நான் முறியடிக்கப் பட்டுவிட்டேன். ஆனால் கர்த்தாவே, உம் விலையேறப்பெற்ற இரத்தம் என்னைக் கழுவுவதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன்!" என்று நான் சொன்னேன். இப்படி அறிக்கைசெய்து, மன்னிக்கப் பட்டவுடன், நான் போஷிப்பைப் பெற்றேன். கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை அனுபவித்துமகிழ்ந்தேன். இது எப்படிப்பட்ட அனுபவமகிழ்ச்சி? இது கிறிஸ்துவைச் சிறிதளவு மன்னாவாக அனுபவித்துமகிழ்வதாகும். நான் மன்னாவை அனுபவித்து மகிழ்ந்தேன்.

இன்னொரு நாள் அதே நபர் என்னை மீண்டும் தொந்தரவு பண்ணி, எனக்கு எரிச்சல் மூட்டினார் என்று வைத்துக்கொள் வோம். ஆனால், இந்தத் தடவை உயிர்த்தெழுதலின் தளத்தை எடுத்துக்கொண்டேன். "கர்த்தாவே, நான் உயிர்த்தெழுந்திருக் கிறேன், உயிர்த்தெழுதலின் தளத்தின்மேல் என் ஆவியை இயக்கி, என் அவயவங்களை சாவுக்குள்ளாக்குகிறேன்," என்று சொன்னேன். அப்போது இவர்மேல் கோபப்படுவதற்குப் பதிலாக கர்த்தருக்குள் மிகுந்த மகிழ்ச்சியடைந்தேன். "அல்லேலூயா! கர்த்தாவே, என் அருமையான, விநோதமான சகோதரனுக்காக நான் உம்மைத் துதிக்கிறேன்," என்று என்னால் சொல்லமுடிந்தது. மற்றவர்களுடன் எப்போதும் சினங்கொள்ளும் என் அவயவங்களின்மேல் கர்த்தருடைய மரணத்தைப் பிரயோகித்தேன். நான் கிறிஸ்துவைப் புதிதாக அனுபவித்தேன், அனுபவித்துமகிழ்ந்தேன். இது எப்படிப்பட்ட அனுபவம்? இந்த அனுபவம் கிறிஸ்துவை மன்னாவாக அனுபவிப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இது

கிறிஸ்துவை நல்ல தேசத்தின் விளைபொருளாக அனுபவிப்பதாகும். இரண்டுமே கிறிஸ்தவை அனுபவிப்பதுதான். ஆனால், கிறிஸ்துவை வெவ்வேறு அம்சங்களில் அனுபவிப்பதாகும். முதலாவது, கிறிஸ்துவைச் சிறிதளவு மன்னாவாக அனுபவித்து மகிழ்ந்தோம். இரண்டாவது, அவரைத் தேசத்தின் செழிப்பான விளைபொருளாக அனுபவித்துமகிழ்ந்தோம்.

போர்புரிவதின்மூலம்

நாம் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறோம் என்றும், உயிர்த்தெழுதலின் தளத்தில் உள்ளோம் என்றும், கர்த்தருடைய மரணத்தை நடைமுறையில் நம் அவயவங்கள்மேல் பிரயோகிக்க வேண்டும் என்றும் நினைவில்கொண்டால் மட்டும் போதாது. ஐந்தாவதாக, வானமண்டலங்களில் தீயசக்திகள் உள்ளன என்றும் நாம் நினைவில்கொள்ளவேண்டும். எதிரியோடு உள்ள யுத்தத்தில் நாம் போர்புரிந்தாக வேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் ஒரு பங்கை நாம் அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருந்த போதும், எதிரியும் வானமண்டலங்களிலுள்ள அவனுடைய சேனைகளும் தேசத்தை இன்னும் சட்ட விரோதமாகப் பிடுங்கி ஆக்கிரமித்துக் கொண்டுதானிருக்கின்றன. முழு தேசத்தையும் சுதந்தரித்துக்கொள்வதற்கு நீங்களும் நானும் யுத்தம் செய்தாகவேண்டும். சகோதர சகோதரிகளே, இப்படி நாம் கிறிஸ்துவை அனுபவித்த உடனேயே வானமண்டலங்களிலுள்ள தீய சேனைகள் எவ்வளவு நிஜமானவை என்று நம் ஆவியில் உணர்ந்தறிகிறோம். கிறிஸ்து சகலத்தையும் உள்ளடக்கியவர் என்பதை இந்தத் தீயசேனைகள் கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்து திரையிட்டு மறைக்கின்றன. கிறிஸ்து எந்த அளவுக்குச் சகலத்தையும் உள்ளடக்கியவர் என்பதை கர்த்தருடைய மக்களுள் ஒரு சிலரே உணர்ந்திருக்கின்றனர். வான மண்ட லங்களிலுள்ள தீய சக்திகளின் குற்றச்சாட்டுகளே இதற்குக் காரணம். கிறிஸ்து சகலத்தையும் உள்ளடக்கியவர் என்பதை இன்றுவரை இந்தத் தீய சேனைகள் திரையிட்டு மறைத்துக்கொண்டுதானிருக்கின்றன. ஆகையால், நாம் யுத்தம்செய்தாக வேண்டும். நாம் தீவிரமாய்ப் பங்குகொள்ளவேண்டிய மிக நிஜமான ஓர் ஆவிக்குரிய யுத்தம் உண்டு. சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை அனுபவித்து மகிழ்வதின்மூலம் போரிடுகிற பாரம் நமக்கு உருவாகும். யுத்தத்திற்கான ஒரு பாரம் நமக்கு உருவாகும். இதற்காகத்தான் நாம் ஒரு சேனையாக உருவாக்கப்பட்டிருக்கிறோம். நமக்கு முன்பாக எப்போதும் ஒரு போராட்டம் உண்டு.

இந்தக் கட்டத்தில்தான் கர்த்தராகிய கிறிஸ்துவை யெகோவாவின் சேனையின் அதிபதியாக, மகிமையான சேனை

அதிபதியாக, தரிசிக்கிறோம். அவர் சேனையை முன்னின்று நடத்துவார்; அவர் நமக்கு முன்செல்வார்; அவர் நமக்காக யுத்தம்செய்வார். இப்பேர்ப்பட்ட தரிசனம் நமக்குத் தேவை. இந்தத் தரிசனத்தை யோசுவா எப்படிப் பெறமுடிந்தது? தனக்குமுன்பாக இருந்த யுத்தத்தைப்பற்றி அவன் அளவுகடந்த பாரம் கொண்டதே காரணம். அவனும், இஸ்ரவேல் மக்களும் நல்ல தேசத்தின் விளைபொருட்களை அனுபவித்துமகிழ்ந்ததுமே, எதிரியும் எரிகோவின் பலத்த கோட்டையும் தங்களுக்குமுன்பாக இருந்ததை அவன் உணர்ந்தான். யோசுவாவிடம் சூழ்நிலையைப்பற்றிய தெளிவான கண்ணோட்டம் இருந்தது. அவன் யுத்தத்தைப்பற்றி பாரம் கொண்டான். அதனால் அவன் கர்த்தரிடம் போய் ஜெபித்தான் என்று நான் விசுவாசிக்கிறேன். அந்த வேளையில் கர்த்தர் தம்மைத் தேவனுடைய சேனைகளின் அதிபதியாக யோசுவாவுக்கு வெளிப்படுத்தினார். யோசுவா இப்பேர்ப்பட்ட தரிசனத்தைப் பெற்றான். இதன்மூலம் கர்த்தர் தன்னோடு இருக்கிறார் என்ற விசுவாசத்தையும், பூரண நிச்சயத்தையும் பெற்றான். கர்த்தரே தேவனுடைய சேனையின் அதிபதியாகத் தனக்குமுன்பாகப் போகிறார் என்று எள்ளளவும் ஐயமின்றி அவன் அறிந்திருந்தான். இப்பேர்ப்பட்ட ஒரு பூரண நிச்சயம் நமக்கும் வேண்டும்.

கிறிஸ்து சகலத்தையும் உள்ளடக்கியவர் என்று கொஞ்சம் அனுபவித்துமகிழ்ந்த உடனேயே ஆவிக்குரிய போராட்டத்தின் அவசியத்தை தாங்கள் உணர்ந்திருப்பதாகச் சிலர் தங்கள் சொந்த அனுபவத்திலிருந்து இப்படிச் சாட்சிகூறமுடியும்; எதிரியும், வான மண்டலங்களிலுள்ள அவனுடைய தீயசக்திகளும் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவாகிய நல்லதேசத்தைச் சட்டத்துக்கு விரோதமாகப் பிடுங்கிவைத்துக் கொண்டு, அதைக் கர்த்தருடைய பிள்ளைகளிடமிருந்து திரைபோட்டு மறைப்பதை அவர்கள் கண்டுபிடித்திருக் கிறார்கள். தேசத்தை மூடியிருக்கிற இந்தத் திரையை நீக்குவதற்கு யார் யுத்தம்செய்வார்? கிறிஸ்துவை நாம் இப்படி அனுபவித்துமகிழ்ந்தால் யுத்தத்திற்கான ஒரு பாரத்தோடு நாமாகவே கர்த்தரிடத்துக்குப் போவோம். அப்போதுதான் கர்த்தர் தாம் சேனாதிபதி என்ற தரிசனத்தை நமக்கு அருளு வார். அவர் சேனையின் முன்நின்று, போரிட நமக்குமுன் செல்வார் என்று நமக்குக் காண்பிப்பார். அப்போது பூரண நிச்சயத்தோடு நாம் முன்செல்லமுடியும்.

எப்படிப் போரிடுவது

இப்போது நாம் கடைசிப் படிக்கு வருகிறோம். போர்புரிவது எப்படி? இது மாம்சப்பிரகாரமான ஆயுதங்களைக்கொண்டு போர்புரிகிற யுத்தம் இல்லை. உருவகமாகப் பேசுவதென்றால்,

இந்த யுத்தத்திற்கான நம் ஆயுதங்கள் ஆட்டுக்கடாவின் கொம்புகளாகும். நாம் யுத்தம்செய்யப்போகிறோம். ஆனால் சமாதானத்தின் கருவிகளைக்கொண்டு யுத்தம் செய்யப் போகிறோம். நாம் ஆட்டுக்கடாவின் கொம்புகளோடு போகிறோம். ஒரு யுத்தத்தைச் சமாதானத்தின் ஆயுதங்களைக் கொண்டு செய்வதற்கு ஆட்டுக்கடாவின் கொம்புகள் ஓர் அடையாளமாகும். அவை இரும்பாலான வாள்கள் இல்லை; அவை ஆட்டுக்கடாவின் கொம்புகள். அவைகளால் கொல்லமுடியாது. அவை முற்றிலும் சமாதானத்துக்குரியவை. ஆனால் அவை யுத்தத்திற்கான ஆயுதங்கள். அவை ஊதப்படும் எக்காளங்கள்; அவை சமாதானத்தின் சுவிசேஷத்தைப் பறைசாற்றி முழங்குகின்றன. ஆவிக்குரிய போராட்டத்தைப் போராடுவதற்கு நாம் பயன்படுத்தவேண்டிய ஆயுதம் இதுவே. கிறிஸ்துவைப் பறைசாற்றுவதின்மூலம் நாம் போரிடுகிறோம்.

எப்படி எக்காளத்தை ஊதினார்கள்? எப்படி யுத்தம்பண்ணினார்கள்? இது மெய்யாகவே விந்தையானது. சேனையின் ஒரு பகுதியினர் முன்னால் சென்றனர், அவர்களைப் பின் தொடர்ந்து உடன்படிக்கைப் பெட்டியோடு ஏழு ஆசாரியர்கள் சென்றார்கள். சேனையின் இன்னொரு பகுதியினர் இறுதியில் சென்றார்கள். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், முன்னும் பின்னும் சேனை சென்றது. நடுவில் ஆசாரியர்கள் ஆட்டுக் கடவின் கொம்புகளை ஊதியபடி செல்ல உடன்படிக்கைப் பெட்டி சென்றது. ஆசாரியர்கள் ஆட்டுக்கடாவின் கொம்புகளாலான எக்காளங்களை ஊதிய வண்ணம் உடன்செல்ல அவர்களெல்லாரும் எரிகோ கோட்டையை சுற்றி பீடுநடை போட்டார்கள். இது ஒரு மகிமையான சித்திரம். நகரத்து மக்கள் அவர்களுக்குப் பயந்து நடுங்கி உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் நகரத்து வாயில்களை அடைத்தார்கள். ஒருவனும் வெளியே போகவுமில்லை, ஒருவனும் உள்ளே வரவுமில்லை.

ஒவ்வொரு நாளும் ஆறு லட்சம் மக்களைக்கொண்ட தேவனுடைய சேனை ஆட்டுக்கடாவின் கொம்புகளை ஊதியவண்ணம் பீடுநடைபோட்டு நகரத்தைச் சுற்றி வந்தது. முதலாவது, சேனையின் ஒரு பிரிவு வந்தது; அடுத்து எக்காளம் ஊதியவண்ணம் ஆசாரியர்கள்; அதற்கடுத்து உடன்படிக்கைப் பெட்டி; பிறகு, இறுதியில் மீதி சேனை. அவர்கள் நெருங்கிப் போரிட்டவிதம் இதுதான். ஒருவேளை எரிகோவிலிருந்த சிலர் அவர்களை எள்ளிநகையாடியிருக்கலாம். இப்படி உலகத்துக்கு ஒவ்வாத ஒரு நடவடிக்கையை அவர்கள் ஒருபோதும் கண்டதில்லை. நாளுக்கு ஒருதடவை அவர்கள் நகரத்தைச் சுற்றி வந்தார்கள். ஆறுநாட்களாக அனுதினமும் அப்படியே சுற்றி வந்தார்கள். ஏழாம் நாள் வந்தபோது அவர்களுக்குச் சொல்லப்

பட்டபடி நகரத்தை ஏழுதடவைகள் சுற்றிவந்தார்கள். "நான் சொல்லும் நாள்மட்டும் நீங்கள் ஆர்ப்பரியாமலும், உங்கள் வாயினால் சத்தம் காட்டாமலும் இருங்கள்; உங்கள் வாயி லிருந்து ஒரு பேச்சும் புறப்படவேண்டாம்; ஆர்ப்பரியுங்கள் என்று உங்களுக்கு நான் சொல்லும் நாளிலே ஆர்ப்பரிப்பீர்கள்," என்று யோசுவா மக்களுக்குக் கட்டளையிட்டதை நாம் கவனிக்க வேண்டும். கடைசிச் சுற்றின் முடிவில் ஆட்டுக்கடாவின் கொம்புகள் ஊதப்படும் நீண்ட முழக்கத்தைக் கேட்கும்வரை மக்கள் சத்தமிடவே கூடாது. அவர்கள் அமைதியாக இருக்கவேண்டும். இதன் பொருள் என்ன? நாம் ஜெயக் கிறிஸ்துவை சாட்சிபகரப்போகிறோம் என்றால் நாம் அமைதியாக இருக்கவேண்டிய தருணங்கள் அநேகம் உண்டு. ஆசாரியத்துவம் எக்காளம் முழங்க நாம் காத்திருக்கவேண்டும். நமக்கு ஆசாரியத்துவம் தேவை. ஆசாரியத்துவம் என்றால் என்னவென்று இந்நேரம் உங்களுக்கு விளங்கியிருக்கும். நாம் இலோசாகப் பேசவே கூடாது. "நாங்கள் சபையின் தளத்தில் இருக்கிறோம்! நாங்கள் உள்ளூர் சபை. நாங்கள் அது, நாங்கள் இது," என்றெல்லாம் சொல்லாதீர்கள். இந்தக் காரியங்களையெல்லாம் நீங்கள் இலேசாகப் பேசுவீர்களென்றால், அங்கு ஆசாரியத்துவம் இல்லை. ஆசாரியத்துவம் எக்காளம் முழங்கி ஓசை எழுப்ப நாம் விடவேண்டும். வேறு எந்தக் குரலும் இருக்கக்கூடாது. அப்போது வேளை வரும்போது, அதாவது கர்த்தர் நியமித்த வேளை வரும்போது, நீங்களும் நானும் ஆர்ப்பரிக்கவேண்டும். உரத்த குரலில் நாம் கர்த்தரிடத்தில் ஜெபித்துத் துதிக்கவேண்டும். அப்போது எதிரி நம்முன் விழுவான். இதுவே நாம் யுத்தம்பண்ணும் வழி.

இப்படிப்பட்ட யுத்தம் ஒருவிதமான பிரயாசமா அல்லது ஒருவிதமான இன்பமா? மெய்யாகவே, இது ஒரு பிரயாசம் இல்லை, மாறாக ஓர் இன்பம். சொல்லப்போனால் இது ஓர் இளைப்பாறுதலும், திருப்தியுமாகும். இது ஒரு போர், இது ஒரு யுத்தம், இது ஒரு சண்டை. எனினும் இது ஓர் இன்பம், ஓர் இளைப்பாறுதல், ஒரு திருப்தி. இந்த வழியில்தான் நாம் கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக உடைமையாக்கிக் கொள்கிறோம்.

பிரிந்திருக்கிற தனித்தனி நபர்களாக நீங்களும் நானும் இதை ஒருக்காலும் செய்யமுடியாது என்பதை நாம் நன்றாக நினைவில்கொள்ளவேண்டும். சேனை என்ற தளத்தை நாம் எப்போதும் காத்துகொள்ளவேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவைத் தனிநபர்களாக நாம் ஒருக்காலும் கிரகித்துக் கொள்ளமுடியாது. சகல பரிசுத்தவான்களோடுதான் சகலத்தையும்

உள்ளடக்கிய கிறிஸ்துவின் அகலம், நீளம், உயரம், ஆழம் இன்னதென்று நம்மால் கிரகித்துக்கொள்ள முடியும். நல்ல தேசத்தை உடைமையாக்கிக்கொள்ள வேண்டுமென்றால் பரிசுத்தவான்களோடு ஒன்றாக இணைக்கப்பட்டு தேவனுடைய சேனையாக உருவாக்கப்படவேண்டும்.

மாம்சமும், இரத்தமும் நம் எதிரிகள் இல்லை என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். மக்கள் நம் எதிரி இல்லை, ஆவிக்குரிய சக்திகளும், துரைத்தனங்களும், வான மண்டலங்களிலுள்ள வல்லமைகளுமே நம் எதிரிகள். அநேக மக்கள் நமக்கு எதிராக இருக்கிறார்கள்; நம்மை எதிர்க்கிறார்கள். ஆனால், அவர்கள் நம் எதிரிகள் இல்லை. அவர்கள்மேல் ஆளுகைபுரிகிற தீய சக்திகளும், அவர்களுக்குப் பின்னிருக்கிற தீய வல்லமைகளுமே நம் எதிரிகள். நாம் மக்களோடு யுத்தம்செய்யவில்லை; மாறாக மக்களுக்குப்பின் இருக்கும் தீய சக்திகளோடு யுத்தம்செய்கிறோம். உயிர்த்தெழுதலின் தளத்தை எடுத்துக்கொண்டு அவருக்காக யுத்தம்செய்கிற சேனையாக உருவாக்கப்படுவதில் நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்கள் என்றால் நம்மைப்பற்றிப் பரப்பப்படுகிற துர்ச்செய்திகளுக்கு நாம் தயாராக இருக்கவேண்டும். பலத்த எதிர்ப்பைச் சந்திக்க நாம் ஆயத்தப்படவேண்டும். எரிகோவிலுள்ள எல்லா மக்களும் இஸ்ரவேல் மக்களைப்பற்றிப் பேசுவார்கள். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர்கள் பரப்புகிற செய்திகளையெல்லாம் கேட்கும்போது நாம் களிகூருவோமாக. ஏனென்றால், நாம் வெல்வோம் என்பதற்கு அவைகளெல்லாம் அடையாளங்கள். எதிரிக்குக் கிலிபிடித்திருக்கிறது என்பதற்கும், அவனுடைய படுதோல்விகளை அவன் தவிர்க்கமுடியாது என்பதற்கும் அவைகள் அடையாளங்கள். நிச்சயமாக எரிகோ நம்முன்னால் விழும். அல்லேலூயா! நான் எங்கு போனாலும் ஒருவரும் என்னைப்பற்றிப் பேசவில்லை, யாரும் எந்தத் துர்ச்செய்தியையும் பரப்பவில்லையென்றால், நான் உண்மையாகவே பயப்படுகிறேன். ஆனால் வதந்திகளும், விமரிசனங்களும் மக்களுடைய பேச்சும் இருக்குமென்றால் நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். எவ்வளவு அதிகமாக இப்படிப்பட்ட பேச்சைக் கேட்கிறேனோ, அவ்வளவு அதிகமாக கர்த்தரிடத்துக்குத் திரும்பிவந்து அவரைத் துதிக்கிறேன். "கர்த்தாவே, இதோ அடையாளங்கள்; யுத்தத்தில் ஜெயிப்போம் என்பதற்கு இதோ அடையாளங்கள்!" மூடத்தனமான பேச்சுக்கள், கிறுக்குத்தனமான வதந்திகள், துர்ச்செய்திகள், ஆகியவைகளைக்குறித்து நாம் அஞ்சக்கூடாது. வெற்றி நமதே என்பதற்கு இவைகளெல்லாம் அடையாளங்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நம் எதிரி இந்தப் பூமியில் இல்லை, மாறாக வான

மண்டலங்களில் இருக்கிறான். எனவே நாம் மாம்சப் பிரகாரமான ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது. நாம் மக்களோடு வாக்குவாதம்பண்ணக்கூடாது. அவர்கள் நிலைக்கு இறங்கிவந்து அவர்களுடைய உபாயதந்திரங்களை நாம் கையாளக்கூடாது; கூடவே கூடாது. நம் ஆயுதங்கள் ஆவிக்குரியவை. நம் ஆயுதங்கள் என்ன? ஆட்டுக்கடாவின் கொம்புகளே. எக்காளங்களை ஊதுவோம்; ஆட்டுக்கடாவின் கொம்புகளை நாம் ஊதுவோம், சிலுவையின் வெற்றியை, ஜெயங்கொண்டவரின் வெற்றியை, அறிவிப்போம். கிறிஸ்துவை, நாம் அனுபவித்து மகிழ்கிற கிறிஸ்துவை, எல்லா எதிரிகள்மேலும் ஜெயங்கொண்ட கிறிஸ்துவை, நாம் பறைசாற்ற வேண்டும். இதுவே நம் ஆயுதம். நமக்குத் தெரிந்த வேறு ஆயுதம் இல்லை. கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக உடைமையாக்கிக்கொள்ளும் வழி இதுவே. உண்மையோடும், இளைப்பாறுதலோடும், அனுபவ மகிழ்ச்சியோடும் நல்ல தேசத்தை எடுத்துக்கொள்ளும் வழி இதுவே.

ஒவ்வொரு நகரமாக, ஒவ்வோர் இடமாக, கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக நாம் சுதந்தரித்துக்கொள்ள வேண்டும். ஆனால், அதே வேளையில் நல்ல சமாதானத்தோடும், இளைப்பாறுதலோடும் இருங்கள். கவலைப்படாதீர்கள்—கர்த்தர் யுத்தம்செய்வார். யுத்தம் நம்முடையதல்ல, கர்த்தருடையது. நாம் செய்யவேண்டியதெல்லாம் எக்காளத்தை ஊதுவதுதான். ஏனோதானோவென்று இலேசாகப் பேசாதீர்கள். ஏற்ற வேளையில் நாம் துதித்து ஆர்ப்பரிப்போம். எரிகோவின் மதில்கள் விழும். அதன் கதை முடிந்துவிட்டது. நாம் ஜெயங்கொள்வோம், கைப்பற்றுவோம்.

சகோதர சகோதரிகளே, இதுவே வழி! வெற்றி நமதே! நீங்கள் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நினைவில்கொண்டு, உயிர்த்தெழுதலின் தளத்தை எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் பூமிக்குரிய அவயவங்கள் எல்லா வற்றின்மீதும் கிறிஸ்துவின் மரணத்தைப் பிரயோகியுங்கள். கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கியவராக எல்லாப் பரிசுத்தவான்களோடும் அனுபவித்து மகிழுங்கள். கர்த்தர் என்ன வாகவெல்லாம் இருக்கிறார் என்பதை விசுவாசத்தில் அறிக்கையிடுங்கள், சாட்சிபகருங்கள். அப்பொழுது எதிரி முற்றிலும் முறியடிக்கப்படுவான். அவனுடைய கோட்டை தகர்க்கப்படும், நாம் எதிரியை முறியடித்து இளைப்பாறுதலோடும், திருப்தியோடும், சமாதானமாக தேசத்தை எடுத்துக்கொள்வோம். எதிரி நமக்கு இரையாவான். இப்படிப்பட்ட ஒரு போராட் டத்தில் ஈடுபடுவது நமக்குப் பூரண திருப்தியைத் தரும். யுத்தம் கர்த்தருடையது. வெற்றியை முழங்கி அனுபவித்துமகிழ்வதைத்

தவிர நாம் செய்யவேண்டியது வேறொன்றுமில்லை.

அல்லேலூயா! கிறிஸ்து வென்றார்,
ஒவ்வோர் மூச்சும் சொல்,
மீட்பர் ஜெயங்கொண்டவரே
பாவம், சாவின்மேல்.

அல்லேலூயா! கிறிஸ்து வென்றார்,
எங்கும் கூறிடு,
கர்த்தர் ஜெயங்கொண்டவரே
சத்துருமீது.

அல்லேலூயா! கிறிஸ்து வென்றார்,
துணிந்து செய்வீர்;
இயேசு எங்கு அனுப்பினும்
ஜெபத்தில் செல்வீர்.

அல்லேலூயா! கிறிஸ்து வென்றார்,
வழி திறப்பார்.
குன்றவேண்டாம் உந்தன் பார்வை
தோல்வி, பயத்தால்!

அல்லேலூயா! கிறிஸ்து வென்றார்,
சீக்கிரம் சொல்வார்:
"வென்றோரே, என்னிடம் வாரீர்,
வேந்தரைச் சேரீர்."

அதிகாரம் பதினைந்து

தேசத்தில் வாழ்க்கை

வேத வாசிப்பு: உபா. 12:1-18, 20-21, 26-27; 14:22-23; 16:16-17

நாம் ஏற்கெனவே தேசத்தை உடைமையாக்கிக்கொண்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்; நாம் அதில் நுழைந்துவிட்டோம், எல்லா எதிரிகளையும் முறியடித்து, கீழ்ப்படுத்திவிட்டோம். நாம் தேசத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இப்போது தேசத்தில் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழவேண்டும் என்று நாம் கண்டறியவேண்டும்.

முதலாவது, நாம் தேசத்தைப்பற்றிச் சிறிதளவு பார்த்தோம். அது நல்ல தேசம்; மிக நல்ல தேசம். முதலாவது, அது விசாலத்தில் சிறந்தது; இரண்டாவது, அது ஏற்றத்தில் சிறந்தது; மூன்றாவது, அது வளங்களில் சிறந்தது. இப்படி மூன்று காரியங்கள். ஐசுவரியங்களின் விவரங்களை நாம் பார்த்தோம்: நீர் வளமிக்கது, தாவர, ஊன் உணவு வகைகள் நிறைந்தது, கனிமவளம் நிறைந்தது, கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவிப்பதில் தொடங்கி, அவரை மேன்மேலும் அனுபவித்து தேசத்துக்குள் நுழைவதற்கும், அதைச் சுதந்தரிப்பதற்கும் என்ன வழி என்பதையும் நாம் பார்த்தோம். நாம் இப்போது இந்த அற்புதமான தேசத்தில் இருக்கிறோம். இந்த நல்ல தேசத்தில் நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும்? உபாகமம் இதைப்பற்றிக் கூறுகிறது.

கர்த்தருடைய ஊழியக்காரனாகிய மோசே உபாகமத்தை எழுதியபோது இஸ்ரவேல் மக்கள் தேசத்துக்குள் நுழைவதற்கு எல்லாம் தயாராக இருந்தன. அவர்களிடம் உடன்படிக்கைப் பெட்டியையுடைய கூடாரம் இருந்தது, அவர்களிடம் ஆசாரியத்துவ சேவை இருந்தது. அவர்கள் ஒரு சேனையாக ஒருங்கிணைக்கப்பட்டு அமைக்கப்பட்டிருந்தார்கள். எல்லாக் காரியங்களும் ஆயத்த நிலையில் இருந்தன; நுழைய வேண்டியது தான் அடுத்த படி. ஆனால் மக்களை அந்தத் தேசத்துக்குள் நடத்திச்செல்ல தேவன் தன்னை அழைக்க வில்லை என்று மோசே உணர்ந்துகொண்டான். அவர்களை இந்த முழு ஆயத்த நிலைக்குக் கொண்டுவந்தது அவன்தான். ஆனால், அவனால் அவர்களுடன் சேர்ந்து தேசத்துக்குள் நுழையமுடியவில்லை. அவன் அவர்களைவிட்டுப் பிரியவேண்டும் என்று கர்த்தர் அவனிடம்

சொன்னார். அந்தக் கணத்தில் கர்த்தருடைய இந்த ஊழியக்காரனுடைய இருதயம் கர்த்தருடைய மக்கள்மேல்கொண்ட அன்பால் நிரம்பியது. அவன் அவர்களுடைய எதிர்காலத்தைப்பற்றி, குறிப்பாக அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்தபின்பு அவர்களுடைய வாழ்க்கையைப்பற்றி, மிகவும் அக்கறைகொண்டான். ஆகையால், அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்தபின்பு அவர்கள் வாழவேண்டிய வாழ்க்கைமுறைமையைப்பற்றி இப்படிப்பட்ட அன்பினாலும், அக்கறையினாலும், அறிவுரைகூறத் தன்னால் இயன்றதைச் செய்தான். அவன் முதிர்ந்துவரும் பிள்ளைகளுக்கு ஞானத்தின் வார்த்தைகளையும், அன்பான ஆலோசனைகளையும் கூறும் வயதான ஒரு தகப்பனைப்போல இருந்தான். கர்த்தர் தங்கள் பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின தேசத்தில் அவர்கள் வாழப்போகிற வாழ்க்கையைக்குறித்து ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்ற அறிவுரைகள் அவன் அவர்களுக்கு நிகழ்த்திய உரை முழுவதும் நிறைந்திருந்தது; இல்லையென்றால் அவர்கள் அந்தத் தேசத்தை இழந்துவிடக் கூடும். இதுவே அவன் அவர்களுக்குக் கடத்தின பாரம்; இதுவே இந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ளது.

உபாகமம் யோசுவா புத்தகத்திற்குமுன் வருகிறது. ஆனால் உபாகமத்தின் உள்ளடக்கங்கள் யோசுவா புத்தகத்தைத் தொடர்ந்து வரக்கூடிய காரியங்களோடு இடைப்படுகின்றன. புத்தகங்களின் வரிசையில் அது முன்பு இருக்கிறது. ஆனால் அதில் பேசப்படும் காரியங்களில் பின்வருகிறது. யோசுவா புத்தகம் தேசத்தைச் சுதந்தரிப்பதிலுள்ள ஆற்றைக் கடத்தல், போர்புரிதல், தேசத்துக்குள் நுழைதல், தகாத வழியில் பிடுங்கிவைத்திருக்கும் எதிரியிடமிருந்து தேசத்தைப் போராடிப்பெறுதல் போன்ற காரியங்களுடன் இடைப்படுகிறது. ஆயினும், உபாகமம் நாம் தேசத்தைச் சுதந்தரித்தபின்பு அந்தத் தேசத்தில் நாம் வாழவேண்டிய வாழ்க்கையுடன் இடைப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் சுதந்தரித்துக்கொண்டதை அனுபவித்துமகிழும்படிக்கு நாம் வாழவேண்டிய வாழ்க்கையை அது நமக்குக் காட்டுகிறது. நாம் தேசத்திற்குள் நுழைந்து அதைச் சுதந்தரித்துவிட்டோம்; இப்போது அதை எப்படி அனுபவித்துமகிழவேண்டும் என்றும், அதில் எப்படி வாழவேண்டும் என்றும் கற்றுக்கொள்ளவேண்டும். சகலத்தையும் உள் ளடக்கிய கிறிஸ்துவை எப்படிச் சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமென்று அறிந்தால் மட்டும்போதாது. மாறாக அவரைச் சுதந்தரித்த பின்பு அவரை அனுபவித்துமகிழச்செய்யும் ஒரு வாழ்க்கையை தேவனுடைய பார்வையிலே நாம் எப்படி வாழவேண்டும் என்றும் நாம் அறியவேண்டும். இதுவே உபாகமத்தின் செய்தியாகும்.

கிறிஸ்துவில் பிரயாசப்படுதல்

நல்ல தேசத்தை அனுபவித்துமகிழ்வதற்கு நமக்கு எப்படிப்பட்ட வாழ்க்கை தேவை? முதலாவது, அது கிறிஸ்துவில் பிரயாசப்படுகிற வாழ்க்கை. அது கிறிஸ்துவை நம் தொழில்துறையாக ஆக்குகிற வாழ்க்கை.

இன்று தொழில்துறையைப்பற்றி எவ்வளவோ பேசு கிறார்கள். தொழில்துறைக்காக மக்கள் அநேகப் பாடங்களைப் படிக்கிறார்கள், தொழில்துறைக்காக அவர்கள் தொழில் செய்கிறார்கள், தொழில்துறைக்காக நகரங்கள் திட்டமிடப்படுகின்றன. நடைமுறையில் இன்று எல்லாமே தொழில்துறைக் காகத்தான் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், தொழில் வளர்ச்சியில் தேசங்கள் ஒன்றோடொன்று போட்டிபோடுகின்றன. உலகத்தில் பலவகையான தொழில்துறைகள் இருக்கின்றன. ஆனால், சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் வாழ்கிற கர்த்தருடைய மக்களாகிய நமக்கு கிறிஸ்து என்ற ஒரேவொரு தொழில்துறைதான் இருக்கவேண்டும். கிறிஸ்துவே நம் தொழில்துறை; அவர்மேல் நாம் உழைக்கவேண்டும்.

இன்று அநேகப் பொறியியல் மாணவர்களும், அறிவியல் மாணவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருநாளும் இந்தக் காரியங்களுக்குள் ஆழமாகச்சென்று, அவைகளில் உழைக்கிறார்கள். இந்தத் துறைகளில் பிரயாசப்பட்டு படிப்பதற்கும், பரிசோதனைகள் செய்வதற்கும், பயிற்சிசெய்வதற்கும் அவர்கள் மணிக்கணக்காக நேரம் செலவழிக்கிறார்கள். கிறிஸ்தவன் என்ற முறையில், தேவனால் பிறந்தவன் என்றமுறையில், பரிசுத்த ஆவியால் பிரகாசிக்கப்பட்டவன் என்றமுறையில், உங்கள் உள்ளான மனிதனில் உயிர்த்தெழுந்த வல்லமையால் அனுதினமும் பலப்படுத்தப்பட்டவன் என்ற முறையில், நீங்கள் எதில் உழைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? வேறு வார்த்தைகளில் சொல்வதானால், உங்கள் தொழில் என்ன?

நான் எங்கு போனாலும் நான் ஒரு பிரசங்கி என்று மக்களிடம் கூறுவதற்கு ஒருபோதும் விரும்புவதில்லை. இது விநோதமாகத் தோன்றலாம். ஆனால் என்னை இப்படி மக்களுக்கு அறிமுகம்செய்வதற்கு நான் வெட்கப்படுகிறேன். நான் இன்னமாதிரி ஓர் ஊழியக்காரன் என்று மக்கள் என்னை அறிந்துகொள்வதை நான் விரும்பவில்லை. என் தொழில் என்னவென்று மக்களிடம் கூறுவது மெய்யாகவே எனக்குக் கடினம்தான். பலவேளைகளில் நான் ரயிலில் அல்லது விமானத்தில் பயணம்செய்யும்போது என்னருகே அமர்ந்திருப்பவர் என் தொழிலைப்பற்றி என்னிடம் விசாரிப்பதுண்டு. சில சமயங்களில், "நான் கிறிஸ்துவில் வேலைசெய்துகொண் டிருக்கிறேன்!

கிறிஸ்துவே என் வேலை!" என்று பதில்சொல்லி அவர்களுக்குச் சிறிது அதிர்ச்சி ஏற்படுத்துகிறேன். அவர்கள், "நீங்கள் எந்த நிறுவனத்தில் வேலைசெய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று என்னைக் கேட்கும்போது, "கூட்டிணைப்பான கிறிஸ்துவே என் நிறுவனம்," என்று சில சமயங்களில் நான் பதில் கூறுகிறேன். "கூட்டிணைப்பான கிறிஸ்து என்றால் என்ன?" என்று உடனே அவர்கள் கேட்கிறார்கள். இது அவர்களுடைய வழக்கமான கேள்வி. "ஒவ்வொருநாளும் நான் கிறிஸ்துவில் வேலைசெய்துகொண்டிருக்கிறேன், கிறிஸ்துவே என் தொழில்," என்று மட்டும்தான் என்னால் அவர்களிடம் கூறமுடியும்.

மாணவர்களாகிய நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் போதுகூட கிறிஸ்துவில்தான் வேலைசெய்துகொண்டிருக்கிறீர்கள் என்பதை உணரவேண்டும், அனுபவிக்கவேண்டும். கிறிஸ்துவே உங்கள் தொழில்துறை. உங்களில் லாரி ஓட்டுபவர்களாக இருப்பவர்கள் லாரி ஓட்டுவது உங்கள் மெய்யான தொழில் இல்லை என்பதை உணரவேண்டும்; உங்கள் மெய்யான தொழில் கிறிஸ்துவே; நீங்கள் தொடர்ந்து அவரில் வேலைசெய்யவேண்டும். குடும்பத் தலைவிகளாகிய நீங்கள் உங்கள் மெய்யான வேலை உங்கள் வீட்டையும், உங்கள் குடும்பத்தையும் பராமரிப்பது இல்லை, மாறாகக் கிறிஸ்துவே உங்கள் மெய்யான வேலை என்று அறிய வேண்டும்! நீங்கள் எல்லாநேரமும் கிறிஸ்துவில் வேலை செய்துகொண்டிருக்கிறீர்களா? எல்லாச் சூழ்நிலையிலும் நீங்கள் அவரை அனுபவிக்கவும், அனுபவித்துமகிழவும் விழைகிறீர்களா?

தேசத்தைச் சுதந்தரித்தபின் வாழும் வாழ்க்கை கிறிஸ்துவில் பிரயாசப்படும் வாழ்க்கையாகும். அது கிறிஸ்துவை நம் தொழில் துறையாக ஆக்குகிற, அவரை மாபெரும் அளவில் உற்பத்தி செய்கிற வாழ்க்கை. நாம் கிறிஸ்துவின் கூட்டிணைப்பான நிறுவனத்தில் உழைக்கிறோம். ஒவ்வொருநாளும் நாம் கிறிஸ்துவை உற்பத்திசெய்கிறோம். அநேக விவசாயிகள் பழம் வளர்ப்பவர்கள், பழ உற்பத்தியாளர்கள். நாம் கிறிஸ்துவை வளர்ப்பவர்கள். கிறிஸ்துவை உற்பத்திசெய்பவர்கள். நாம் இரவும் பகலும் கிறிஸ்துவின் பண்ணையில் ஜாக்கிரதையாய் உழைக்கிறோம். எனினும், நாம் சந்தோஷமாக உழைக்கிறோம். நம் வேலை நமக்கு இப்பேர்ப்பட்ட இளைப் பாறுதலாக இருக்கிறது.

இஸ்ரவேல் மக்கள் நல்ல தேசத்தைச் சுதந்தரித்து, அவர்களுடைய எல்லா எதிரிகளும் அடக்கிக்கீழ்ப்படுத்தப் பட்டபின்பு, அவர்களைப்பாருங்கள். அவர்கள் என்ன செய்தார்கள்? அவர்கள் நிலத்தில் உழைத்தார்கள். நிலத்தை உழுதார்கள், விதை விதைத்தார்கள், செடிகளுக்கு நீர் பாய்ச்சினார்கள், திராட்சைச் செடிகளை வளர்த்தார்கள், மரங்களை நறுக்கினார்கள். அந்தத்

தேசத்தை அனுபவித்து மகிழ்வதற்கு இந்த வேலைகளெல்லாம் தேவைப்பட்டன. அவருடைய சகலத்தையும் உள்ளடக்கிய ஐசுவரியங்களை அனுபவித்துமகிழுமாறு நாம் எவ்வளவு ஜாக்கிரதையாகக் கிறிஸ்துவில் உழைக்கவேண்டும் என்பதற்கு இது ஒரு சித்திரம். இதுவே நம் தொழில்.

கிறிஸ்துவே நம் தொழில்துறை. கிறிஸ்துவின் ஐசுவரியங்களை உற்பத்திசெய்வதற்கு நாம் அவரில் உழைக்கவேண்டும். அநேக அம்சங்களில் அந்த நல்ல தேசம் எவ்வளவு செழிப்பானது என்று நாம் பார்த்தோம். ஆனால், அதில் பிரயாசப்பட்டு உழைக்காமல், அதின் ஐசுவரியங்களை எப்படி வெளிக்கொண்டுவர முடியும்? எப்படி அவைகளை ஏராளமாக உற்பத்திசெய்யமுடியும்? ஐசுவரியமான இந்தக் கிறிஸ்து இருப்பது ஒரு காரியம். ஆனால் தொடர்ந்து அவரில் பிரயாசப்படுவது இன்னொரு காரியம்.

இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை என்ன? இது செழிப்பாக இருக்கிறதா அல்லது தரித்திரமாக இருக்கிறதா? மெய்யாகவே இது தரித்திரமாகத்தான் இருக்கிறது என்று நாம் அறிக்கை செய்தாக வேண்டும். கிறிஸ்து அளவிடமுடியாத அளவுக்கு ஐசுவரிய மானவர். ஆனால், சபையோ இன்று தரித்திரத்தில் ஊர்ந்து கொண்டிருக்கிறது. ஏன்? ஏனென்றால், கர்த்தருடைய பிள்ளைகள் வேலைசெய்ய மனமில்லாதிருக்கிறார்கள். கிறிஸ்துவில் பிரயாசப்பட்டு உழைப்பதற்குத் தங்களை வருத்திக் கொள்வதில்லை. ஞானி சாலமோன் இராஜா எழுதிய நீதி மொழிகளை வாசியுங்கள். "சோம்பேறியே, நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது உன் தூக்கத்தைவிட்டு எழுந்திருப்பாய்? இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக் கொண்டு நித்திரைசெய்யட்டும் என்பாயோ. உன் தரித்திரம் கொள்ளைக்காரனைப்போலவும், உன் வறுமை ஆயுதமணிந் தவனைப்போலவும் வரும்." அமெரிக்கா இன்று செழிப்பாக இருக்கிறதே, அது எப்படி? தேவன் மெய்யாகவே அமெரிக்கா வுக்கு மிகச் செழிப்பான நிலத்தைக் கொடுத்தார். ஆனால், இதுவல்ல முழுக் கதை. அதின் ஐசுவரியங்களை உற்பத்திசெய் வதற்கும், அதின் ஏராளமான செல்வத்தை வெளிக்கொண்டு வருவதற்கும் இந்த நிலத்தில் அநேக அமெரிக்கர்கள் கடுமையாய் உழைத்திருக்கிறார்கள். நாம் உழைக்கவேண்டும்; நாம் சோம்பேறிகளாக இருக்கக்கூடாது. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களின் நிலை என்ன? அவர்கள் உலகப்பிரகாரமான தொழில்துறைகளில் மிகவும் சுறுசுறுப்பாக இருக்கிறார்கள். ஆனால் கிறிஸ்துவில் உழைப்பதற்கு மிகச் சோம்பேறிகளாக இருக்கிறார்கள்.

எல்லா நேரமும் நாம் நம் ஆவிக்குரிய நிலத்தைப் பண்படுத்த வேண்டும்; நாம் ஆவிக்குரிய விதை விதைக்க வேண்டும்; ஆவிக்குரிய செடிகளுக்கு நீர்பாய்ச்ச வேண்டும். இதை மற்றவர்கள் நமக்காகச் செய்வார்கள் என்று அவர்களைச் சார்ந்திருக்கக்கூடாது; நாமே இதைச் செய்யவேண்டும்; இல்லையென்றால் அது ஒருபோதும் நடக்காது. சகோதரிகளே, இன்று காலையில் நீங்கள் வார்த்தையை வாசித்து ஜெபித் தீர்களா? சகோதரர்களே, இன்று நீங்கள் கர்த்தரை எத்தனை தடவை தொடர்புகொண்டீர்கள்? இதுதான் நிலைமை. நாம் கிறிஸ்துவைப் பயிர்செய்வதில்லை. நம்மிடம் மிகச் செழிப் பான நிலம் இருக்கிறது. ஆனால், நாம் அதில் பாடுபட்டு உழைப்பதில்லை; எனவே எந்த உற்பத்தியும் இல்லை. நாம் வளங்களில் மெய்யாகவே ஐசுவரியவான்கள். ஆனால் உற்பத்தியில் தரித்திரர்கள்.

வருடந்தோறும், குறைந்தபட்சம் பஸ்கா பண்டிகை, பெந்தெகொஸ்தே பண்டிகை, கூடாரப் பண்டிகை என்ற பண்டிகைகள் கொண்டாடப்படும் மூன்று தடவைகளிலாவது தம் மக்கள் தம்மை ஆராதிப்பதற்கு ஒன்றுகூடிவரவேண்டும் என்று கர்த்தர் அவர்களிடம் கூறினார். அவர்கள் இப்படி ஒன்றாகக் கூடிவரும்போதெல்லாம், வெறுங்கையாய் வரவே கூடாது என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். அவர்கள் தங்கள் கைகளில் அவருக்கென்று ஏதாவது கொண்டுவர வேண்டும், அந்த நல்ல தேசத்தின் விளைபொருளிலிருந்து ஏதாவது கொண்டுவர வேண்டும். அவர்கள் சோம்பேறிகளா யிருந்து, நிலத்தில் உழைக்கவில்லையென்றால் அவர்களால் கர்த்தருக்கு எதையும் கொண்டுவர முடியாது. அது மட்டும் இல்லை, தங்களைத் திருப்திப்படுத்துவதற்கும் அவர்களிடம் ஒன்றுமே இருக்காது. அவர்கள் பசியாயிருப்பார்கள்.

சகோதர சகோதரிகளே, நாம் கூட்டங்களுக்கு வரும் போதெல்லாம், நாம் கர்த்தரைத் தொழுதுகொள்ளவரும் போதெல்லாம் நாம் வெறுங்கையோடு வரக்கூடாது என்று நாம் உணரவேண்டும். கிறிஸ்துவின் விளைபொருட்களைக் கைகள் நிறையக் கொண்டுவரவேண்டும். நாம் கிறிஸ்துவில் ஒவ்வொருநாளும் பாடுபட்டு உழைக்கவேண்டும். அப்போது அவரை நாம் மாபெரும் அளவில் உற்பத்திசெய்யலாம். நம் தேவைகளை நிறைவுசெய்வதற்குச் சிறிதளவு கிறிஸ்துவை விடச் சற்று அதிகமாகவே நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் கிறிஸ்துவைத் தேவையான அளவுக்கு நாம் உற்பத்திசெய்ய வேண்டும். அப்போதுதான் மற்றவர்களுக்கும், தரித்திரர்களுக்கும், எளியவர்களுக்கும் கொடுக்க தேவைக்கும் அதிக மானமிச்சம் இருக்கும்: "ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும்,

எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்கவேண்டும்" (உபா. 15:11). ஆசாரியர்களின் தேவைகளையும், லேவியர்களின் தேவை களையும் நிறைவுசெய்வதற்கும் தேவைக்கும் அதிகமான அளவு நம்மிடம் இருக்கவேண்டும். "ஜனத்தினிடத்தில் பெற்றுக் கொள்ளவேண்டிய ஆசாரியருக்குரிய வரத்தாவது: ஜனங்கள் பலியிடும் ஆடுமாடுகளில்...ஆசாரியனுக்குக் கொடுக்க வேண்டும். உன் தானியம், திராட்ச ரசம், எண்ணெய், ஆட்டு ரோமம் என்னும் இவைகளின் முதற்பலனையும் அவனுக்குக் கொடுக்கவேண்டும்" (உபா. 18:3-4). எல்லாவற்றுக்கும் மேலாக, தேவைக்கு அதிகமானதில் மிக உச்சிதமானது கர்த்தருக்காக ஒதுக்கப்பட வேண்டும். "உங்கள் தேவனாகிய கர்த்தர் தமது நாமம் விளங்கும்படி தெரிந்துகொள்ளும் ஓர் இடம் உண்டாயிருக்கும்: அங்கே நீங்கள் நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் உங்கள் சர்வாங்க தகனங் களையும், உங்கள் பலிகளையும், உங்கள் தசம பாகங் களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்பு களையும், நீங்கள் கர்த்தருக்கு நேர்ந்துகொள்ளும் விசேஷித்த எல்லாப் பொருத்தனைகளையும் கொண்டுவந்து..." (உபா. 12:11). அவர்கள் வயல்களை அறுவடைசெய்தபோது, அதின் முதற் பலனை கர்த்தருக்கென்று ஒதுக்கிவிடவேண்டியிருந்தது. கால்நடைகள் பிறந்தபோது, தலையீற்றுகள் கர்த்தருக்காக ஒதுக்கப்படவேண்டும். நாம் கடுமையாய்ப் பிரயாசப்பட்டு உழைக்கவேண்டும். நம் சொந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் போதுமான அளவு உற்பத்திசெய்வதற்கு மட்டும் இல்லை, மற்றவர்களிடம் தேவைகளைச் சந்திப்பதற்கும் தேவைக்கும் அதிகமான அளவு நாம் சம்பாதிக்கவேண்டும், அதில் மிக உச்சிதமானவைகளைக் கர்த்தருக்கென்று ஒதுக்கி விடவேண்டும். அப்போது நாம் கர்த்தருக்கு ஏற்புடையவர்களாக இருப்போம். அவரும் நம்மில் பிரியமாயிருப்பார்.

இதுவே நல்ல தேசத்தில் வாழும் வாழ்க்கை. இது தொடர்ந்து கிறிஸ்துவில் பாடுபட்டு உழைக்கும் வாழ்க்கை, அவரை மாபெரும் அளவில் உற்பத்திசெய்யும் வாழ்க்கை. நாம் கிறிஸ்துவை மிக அதிகமாக அறுவடைசெய்கிறோம். எனவே, நாம் நிறைவாய்த்திருப்தியடைகிறோம்; இதையும் கடந்து மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்வதற்கும், தேவனை ஆராதிப்பதற்கும் நம்மிடம் தேவைக்கு அதிகமாகவும் இருக்கிறது. கிறிஸ்துவோடு தேவனை ஆராதிப்பது என்றால் அவரைத் தனித்தனியாக ஆராதிப்பது இல்லை, மாறாகத் தேவ பிள்ளைகளுடன் சேர்ந்து கூட்டாக ஆராதிக்கவேண்டும். ஒருவரோடொருவரும், தேவனோடும் கிறிஸ்துவை அனுபவித்து

மகிழ்வதின்மூலம், அவரை ஆராதிக்கவேண்டும். நீங்கள் வரும்போது கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை உங்களுடன் கொண்டு வருகிறீர்கள். இன்னொருவர் வரும்போது அவரும் கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றைக் கொண்டுவருகிறார். எல்லாரும் கிறிஸ்துவில் பிரயாசப்பட்டு உழைத்ததிலிருந்து கிறிஸ்துவின் ஒரு பங்கைக் கொண்டுவருகிறார்கள். எல்லாப் பரிசுத்தவான்களும் கிறிஸ்துவைச் செழிப்பாக அனுபவித்து மகிழ்வது மட்டும் இல்லை, எல்லாவற்றிற்கும்மேலாக தேவன் அனுபவித்துமகிழ்கிறார்; ஏனென்றால், அவருக்கு மிக உச்சிதமானது ஏறெடுக்கப்படுகிறது.

கிறிஸ்துவில் எப்படிப் பிரயாசப்பட்டு உழைப்பது

கிறிஸ்துவில் நாம் உழைக்கவேண்டியதின் அவசியத்தையும், கிறிஸ்துவை நம் தொழில்துறையாக மாற்றவேண்டியதின் அவசியத்தையும் நாம் சுருக்கமாகப் பார்த்தோம். இந்த விஷயத்தைக்குறித்து நாம் இப்போது மிகத் தெளிவாக இருக்கிறோம் என்று நான் விசுவாசிக்கிறேன். ஆனால், இந்த விஷயம் அநேகருக்கு வெறுமனே ஓர் உபதேசமாக இருந்து விடுமோ என்று நான் பயப்படுகிறேன். இதை நடைமுறையில் நம்மால் எப்படி செயல்படுத்தமுடியும்? கிறிஸ்துவில் அனுதினமும் உழைப்பதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

இதை இப்படி விளக்கலாம். "கர்த்தாவே, இன்னொருமுறை நான் என்னை உமக்கென்று அர்ப்பணிக்கிறேன்—உமக்காக உழைப்பதற்காக இல்லை, மாறாக உம்மையே அனுபவித்து மகிழ்வதற்காக," என்று ஒவ்வொருநாள் காலையிலும் நீங்கள் ஜெபிக்கவேண்டும். வேறெந்தக் குறிக்கோளுக்காகவுமின்றி, கர்த்தரை அனுபவித்துமகிழவேண்டும், அனுபவமாக்கவேண்டும் என்ற எளிமையான குறிக்கோளுக்காக நீங்கள் உங்களையே கர்த்தருக்கென்று உண்மையாக அர்ப்பணிக்கவேண்டும். காலையில் தூங்கியெழும் நேரத்திலிருந்து நீங்கள், "கர்த்தாவே, இதோ அடியேன். உம்மை அனுபவித்துமகிழ்வதற்கு நான் என்னையே தருகிறேன். எல்லாச் சூழ்நிலையிலும் நான் உம்மை அனுபவிக்கவும், பிரயோகிக்கவும், இந்தக் கணப்பொழுதிலிருந்து நாள் முழுவதும் உம் கிருபையை எனக்கருளும். நான் எதையும் நாளைக்காகக் கேட்கவில்லை. உம்மை இன்று அனுபவித்து மகிழ்வதற்கான கிருபையைக் கேட்கிறேன். எப்படி நிலத்தைப் பண்படுத்த வேண்டும், விதை விதைக்கவேண்டும், கர்த்தருடைய செடிகளுக்கு நீர்பாய்ச்சவேண்டும் என்று எனக்குக் காட்டும்," என்று ஜெபிக்கவேண்டும். நாள் முழுவதும் ஒவ்வொரு கணமும் கர்த்தருடனான உன் கலந்துறவாடுதலை நீ பராமரித்துக்கொள்வாய். நீ நடைமுறையில் கர்த்தருக்குள் வாழ்வாய், அவரில்

அனுபவித்துமகிழ்வாய். நீ இதைச் செய்வாயானால், உன் "பண்ணை" எவ்வளவு அழகாகவும், எவ்வளவு கனிநிறைந் ததாகவும் இருக்கும் என்று சிந்தித்துப் பார். கிறிஸ்துவின் பண்ணை உன் அனுதினவாழ்க்கையில் விளைபொருள்களால் நிறைந்திருக்கும். கர்த்தருடைய நாள் வரும்போது, பரிசுத்தவான் களோடு சேர்ந்து கர்த்தரை ஆராதிப்பதற்குச் செல்கிறாய். அப்போது, "நான் இப்போது என் தேவனைப் பார்க்கப்போகிறேன்; நான் என் கர்த்தரை ஆராதிப்பதற்குப் போகிறேன். நான் வெறுங்கைகளோடு போகமாட்டேன். மாறாகக் கிறிஸ்து நிறைந்த கைகளுடன் செல்வேன். என்னிடத்தில் தேவைக்கும் அதிகமாக இருக்கிறது. என் வலது கையில் என் அன்பான கர்த்தருக்கென்று ஒதுக்கப்பட்ட மிக உச்சிதமான பங்கு இருக்கிறது," என்று உன்னால் சொல்ல முடியும். நீ கூட்டத்துக்கு வரும்போது ஒரு சகோதரன் உன்னை அணுகி, "எனக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. நீங்கள் எனக்கு உதவமுடியுமா?" என்று கேட்கக் கூடும். அவனோடு நீ கொஞ்சம் ஐக்கியம்கொள்ளலாம். அப்போது உன்னிடம் உள்ள தேவைக்கும் அதிகமான கிறிஸ்துவிலிருந்து கொஞ்சத்தை அவனுக்குக் கொடுக்கலாம். நீ ஒவ்வொருநாளும் பிரயாசப்பட்டு உழைத்துக்கொண்டிருக்கும் கிறிஸ்துவின் விளைபொருளிலிருந்து, நீ ஒவ்வொரு நாளும் அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கும் கிறிஸ்துவின் விளைபொருளிலிருந்து, அவனுக்குக் கொஞ்சத்தைக் கொடுக் கலாம். நீ அவரைக்கொண்டு அபரிமிதமாய்த் திருப்தியடைந்திருக்கிறாய். சகோதர சகோதரிகளிடத்தில் பகிர்ந்துகொள்வதற்கும்கூட உன்னிடத்தில் அதிகமாக இருக்கிறது. கூட்டம் ஆரம்பிக்கும்போது, கர்த்தருக்கென்று நீ சேர்த்துவைத்தி ருக்கும் உன் கையிருப்பிலிருந்து ஸ்தோத்திரங்களையும், ஜெபங் களையும் ஏறெடுப்பதற்கு நீ மிகுந்த ஆயத்தமாக இருக்கிறாய். இதுவே நீ மிகுதியாய்ச் சேர்த்துவைத்திருப்பதில் உச்சித மானது. அதைப் பரிசுத்தவான்களுடன் சேர்ந்து கர்த்தர் அனுபவித்துமகிழ்வ தற்காகவும், அவருடைய திருப்திக் காகவும், அவருக்கு மகிழ்ச்சியுடன் செலுத்துகிறாய். உனக்காகவும், தேவையில் இருப்பவர்களுக்காகவும், கர்த்தருக்காகவும், போதுமான அளவுக்குக் கிறிஸ்துவை அறுவடை செய்திருக்கிறாய். வரக்கூடிய நாட்களில் உனக்கு நன்மை பயக்கத்தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்குப்போதுமான பங்கையும்கூட நீ உனக்கென்று ஒதுக்கிவைத்திருக்கிறாய்.

நாம் கிறிஸ்துவால் நிறைந்து செழிப்பாக இருந்தால், நிச்சயமாக உழைப்பால் நிறைந்து செழிப்பாக இருக்க வேண்டும், தொழில்களால் நிறைந்து செழிப்பாக இருக்க வேண்டும். கிறிஸ்துவுக்குள் நாம் சோம்பேறிகளாக இருக்கமுடியாது.

நம்மோடும், அதே நேரத்தில் மற்றவர்களோடும் சேர்ந்து தேவன் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதற்கு நாம் அவரை அனுமதிக்க வேண்டும். நீங்கள் இதைச்செய்தால், நான் இதைச் செய்தால், நாமெல்லாரும் இதைச்செய்தால், கர்த்தரை ஆராதிப்பதற்கு நாம் ஒன்றாகக் கூடிவரும்போது கூட்டங்கள் எவ்வளவு அற்புதமாக இருக்கும்! நான் உங்களுடன் பகிர்ந்துகொள்வேன். நீங்கள் என்னுடன் பகிர்ந்துகொள்வீர்கள். கர்த்தருக்குரிய ஏதோவொன்றை நீங்கள் எனக்குத் தருவீர்கள், அதற்குப்பதிலாக நானும் உங்களுக்கு ஏதோவொன்றைத் தருவேன். அங்கு எல்லாவிதமான பகிர்ந்தளித்தலும், பரஸ்பர இன்பமும் உண்டாயிருக்கும். கர்த்தர் தம் நிறைவான பங்கை அனுபவிப்பார்.

கிறிஸ்துவைக் காட்சியாக்குதல்

இன்று இந்த உலகத்தில் அநேகக் கண்காட்சிகளும், பொருட்காட்சிகளும் இருக்கின்றன. குறிப்பிட்ட சில சமயங்களில் குறிப்பிட்ட சில இடங்களிலிருந்தும், மாநிலங்களிலிருந்தும், இன்னும் சில சமயங்களில் அகில உலகத்திலிருந்தும் மக்கள் தங்கள் விளைபொருட்களைக் கண்காட்சிக்கு வைப்பதற்காக ஒரே இடத்துக்குக் கொண்டுவருகிறார்கள். நாம் தேவனை ஆராதிப்பதற்காக ஒரே இடத்தில் ஒன்றாகக் கூடிவரும்போது நாமும் இதையேதான் செய்கிறோம். கிறிஸ்துவைக் காட்சியாக்குவதற்காக நாம் ஒன்றாகக் கூடிவருகிறோம்—தேவன் நமக்குத் தந்த கிறிஸ்துவை இல்லை, மாறாக நாம் உற்பத்திசெய்த கிறிஸ்துவை, நாம் பிரயாசப்பட்டு உழைத்த கிறிஸ்துவை, நாம் அனுபவித்த கிறிஸ்துவை. இந்தக் கிறிஸ்துவைக் காட்சியாக்குவதற்காகவே நாமெல்லாரும் ஒன்றாகக் கூடிவருகிறோம். சகோதர சகோதரிகளே, நம் கூட்டங்கள் இதுவாகத்தான் இருக்கவேண்டும். கிறிஸ்துவினுடைய சகலவிதமான விளைபொருட்களும் காட்சியாக்கப்பட்டுள்ள கண்காட்சி, பொருட்காட்சி.

மறுபடியும், இஸ்ரவேல் மக்களைப் பாருங்கள். கூடாரப் பண்டிகையின்போது தேசம் எங்குமிருந்து திரளான மக்கள் தங்கள் மையமாகிய எருசலேமுக்கு ஒன்றாகக் கூடிவந்தார்கள். எல்லாரும் தங்கள் விளைபொருட்களில் சிலவற்றைக் கொண்டுவந்தார்கள். சிலர் பழங்களையும், சிலர் காய்கறிகளையும், சிலர் கால்நடைகளையும், இன்னும் அநேகக் காரியங்களையும் கொண்டுவந்தார்கள். அந்த நேரத்தில் நாம் அங்கிருந்து, அந்த நிகழ்ச்சியைக் கண்டிருந்தால், தேசத்தின் ஐசுவரியங்களைப் பார்த்து நாம் ஆச்சரியப்பட்டிருப்போம். விளைபொருட்கள் இங்கும் அங்கும் ஏராளமாகக் குவித்து வைக்கப்பட்டிருப்பதைப் பார்த்திருப்போம்—அழகான, பழுத்த பல வண்ணமான பழங்கள்,

எல்லாருடைய கைகளிலும் ஆடுகள், மாடுகள்; யெகோவாவின் பிரசன்னத்தில் எல்லா வற்றையும் ஒன்றாக வைத்துப் பரஸ்பரமாக அனுபவித்துமகிழ்ந் தார்கள். தேவனும் தம் சொந்தப் பங்கை அனுபவித்தார்.

சகோதர சகோதரிகளே, சபை வாழ்க்கை என்பது இதுதான், அதாவது சகல பரிசுத்தவான்களுக்கும், தேவனுக்குமுன்பாகவும் தேவனோடு சேர்ந்தும் பரஸ்பரமாகக் கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்வதே சபை வாழ்க்கை. அவர்கள் தாங்கள் உற்பத்திசெய்த கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறார்கள். ஒவ்வொருநாளும் அவர்கள் கிறிஸ்துவில் உழைக்கிறார்கள்; ஒவ்வொருநாளும் அவர்கள் கிறிஸ்துவை உற்பத்திசெய்கிறார்கள். பின்பு கர்த்தர் நியமித்த ஒரு குறிப்பிட்ட நாளில் அவர்கள் ஒன்றாகக் கூடிவருகிறார்கள். அவர்கள் கைகள் மட்டும் நிறைந்திருக்க வில்லை. உருவகமாகப் பேசுவோமென்றால் அவர்கள் தங்கள் தோள்களிலும்கூடக் கிறிஸ்துவைச் சுமந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிற நல்ல தேசத்திலிருந்து அறுவடை செய்த எல்லா ஐசுவரியங்களிலும், அவர்களுடைய அறுப்பின் மிகுதியிலும் அவர்கள் களிகூர்ந்துகொண்டிருக்கிறார்கள். சுருங்கிய, சிரிப்பற்ற முகங்களுடன், வெறுங்கையுடன் அவர்கள் வருவதில்லை. ஒரு பரிதாபமான ஊழியக்காரன் பிரசங்க மேடையில் நின்றுகொண்டிருக்க, அவர்கள் தங்கள் இருக்கையில் தூங்கிவழிந்துகொண்டிருக்கவில்லை. இப்பேர்ப்பட்ட சூழ்நிலை எவ்வளவு பரிதாபமானது! இது நிச்சயமாகக் கர்த்தருடைய மக்களின் ஆராதனை இல்லை, எந்தக் கிறிஸ்துவில் அவர்கள் பிரயாசப்பட்டு உழைத்தார்களோ, எந்தக் கிறிஸ்துவை அவர்கள் உற்பத்திசெய்திருக்கிறார்களோ, அந்தக் கிறிஸ்துவால் எல்லாரும் நிறைந்திருக்கும்போது, அந்தக் கிறிஸ்துவால் எல்லாரும் பிரகாசிக்கும் போது, அந்தக் கிறிஸ்துவை இவர்கள் காட்சியாக்கும்போது அதுவே அவருடைய மக்களின் ஆராதனை. ஒரு சகோதரன், "இன்று நான் பிரயாசப்பட்டு உழைத்து உற்பத்திசெய்த கிறிஸ்து இதோ இங்கிருக்கிறார். அவர் இந்த அம்சத்திலும், அந்த அம்சத்திலும் எனக்கு ஐசுவரியமானவராகவும், பரிபூரணராகவும் இருக்கிறார்," என்று சொல்லக்கூடும். ஒரு சகோதரி, "கர்த்தருக்கு ஸ்தோத்திரம், என் கஷ்டமான வீட்டுச் சூழ்நிலையில் கிறிஸ்துவின் நிஜமான பொறுமையையும், தயவையும் நான் அனுபவித்திருக்கிறேன். அவர் இந்த வகையில் எனக்கு இனிமையானவராகவும், நிஜமானவராகவும் இருக்கிறார்," என்று சொல்லக்கூடும். இது கிறிஸ்துவிலிருந்து உற்பத்திசெய்த அவருடைய விளைபொருள். அவரவர் உற்பத்திசெய்த கிறிஸ்துவை அவரவர் வெளியரங்கமாகக் காட்சியாக்குகிறார்கள். தேவனுக்கு

எப்பேர்ப்பட்ட ஆராதனை! பரிசுத்தவான்களுக்கு எப்பேர்ப்பட்ட பக்திவிருத்தி! எதிரிக்கு எப்பேர்ப்பட்ட அவமானம்! இப்படிப்பட்ட கூட்டம் வான மண்டலங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும், அதிகாரங்க ளுக்கும் ஒரு பெரிய சங்கடத்தை உண்டாக்குகிறது. கிறிஸ்து இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவாக இருப்பதால் இதை உற்றுப் பார்க்கும் பொல்லாத சேனைகளுக்கு அவமானமாகிவிடுகிறது. சகோதர சகோதரிகளே, உங்கள் ஊரில் உங்கள் கூட்டங்கள் இப்படி இருக்கின்றனவா?

நம் கிறிஸ்தவக் கூட்டங்களைப் பார்த்து இன்று எதிரி எள்ளி நகையாடுகிறான் என்றும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் பரிகாசம்பண்ணுகின்றன என்றும் நான் நினைக்கிறேன். ஆனால் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதின்மூலம், கிறிஸ்துவில் ஒவ்வொருநாளும் பிரயாசப்பட்டு உழைப்பதின் மூலம், அவருடைய அபரிமிதமான விளைபொருளைத் தேவனோடும் மற்ற எல்லாப் பரிசுத்தவான்களோடும் சேர்ந்து பகிர்ந்துகொள்வதற்குக் கொண்டுவருவதின்மூலம், அவைகள் மேல் கரியைப் பூசிவிடலாம். நாம் இப்படிச் செய்தால் எதிரியும், அவனுடைய சேனைகளும் கடுங்கோபத்தாலும், அவமானத்தாலும் நடுங்குவார்கள்.

இதுவே நல்ல தேசத்தைச் சுதந்தரித்தபின்பு வாழும் வாழ்க்கை. இது கிறிஸ்துவில் உழைக்கும் வாழ்க்கை. கிறிஸ்துவை உற்பத்திசெய்யும் வாழ்க்கை, கிறிஸ்துவை அனுபவித்துமகிழும் வாழ்க்கை, கிறிஸ்துவைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் வாழ்க்கை, தேவன் கிறிஸ்துவை நம்முடன் அனுபவித்துமகிழும்படிக்கு, கிறிஸ்துவைத் தேவனுக்கு ஏறெடுக்கும் வாழ்க்கை. இப்படி அனுபவித்துமகிழ்வதும், பகிர்ந்துகொள்வதும் கிறிஸ்துவை முழுப் பிரபஞ்சத்துக்கும் காட்சியாக்குவதாகும். இது தேவனுக்கு ஆராதனை, ஆனால் எதிரிக்கு அவமானம். ஒவ்வொரு தடவையும் தேவனுக்கு இப்பேர்ப்பட்ட ஆராதனையைச் செலுத்தியபின்பு கர்த்தருடைய பிள்ளைகளில் ஒருவர்கூட தரித்திரராக இருக்கமாட்டார்கள். எல்லாரும் ஐசுவரியமானவராயிருப்பார்கள், எல்லாரும் திருப்தியாயிருப்பார்கள், 'எருசலேமிலிருந்து' எல்லாரும் அக்களிப்போடு திரும்பிச்செல்வார்கள். இப்படிப்பட்ட கூட்டத்தின் முடிவில் எல்லாச் சகோதர சகோதரிகளும் செழிப்பாகவும், அபரிமிதமாகவும் போஷிக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் தேவைக்கும் அதிகமாகக் கொண்டுவந்தார்கள், அதைவிட அதிகமாகக் கொண்டுசெல்கிறார்கள். தேசத்தில் வாழ்க்கைக்குரிய எல்லாமே கிறிஸ்துதாம்; ஆனால், நம்மோடு தொடர்புடைய கிறிஸ்து. இது வெறுமனே உபதேசக் கிறிஸ்து இல்லை, மாறாக முற்றிலும் அனுபவிக்கத்தக்க கிறிஸ்து. இது நாம் பிரயாசப்பட்டு

உழைக்கும் கிறிஸ்து, நாம் உற்பத்திசெய்யும் கிறிஸ்து, நாம் அனுபவித்துமகிழும் கிறிஸ்து, நாம் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் கிறிஸ்து, நாம் தேவனுக்கு ஏறெடுக்கும் கிறிஸ்து.

கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதற்கு இரண்டு வழிகள்

உபாகமத்தில், கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதற்கு இரண்டு வழிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு வழியைத் தனிநபர் வழி, தனிப்பட்ட வழி என்று அழைக்கலாம்; மற்றொன்றை கூட்டு வழி என்று அழைக்கலாம். எடுத்துக்காட்டாக, கோதுமை, பார்லி என்ற தானியத்தைப் பொறுத்தவரை இஸ்ரவேல் மக்கள் எல்லாரும் அதை எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் அனுபவித்துமகிழலாம். இது தேசத்தின் விளைபொருளை அனுபவித்துமகிழ்வதற்கான ஒரு வழி. ஆனால், சில தானியங்களை தனிப்பட்ட முறையிலும், தனித் தனியாகவும் அனுபவித்துமகிழமுடியாது. அவர்கள் தானியங் களில் தசமபாகத்தையும், முதற்பலன்களையும் அவர்க ளுடைய அறுவடை எல்லாவற்றின் தசமபாகத்தோடும், முதற் பலன்களோடும் சேர்த்துப் பாதுகாத்துவைத்து, பின்பு ஒரு குறிப்பிட்ட நாளில் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆசாரியர்களிடத்தில் கொண்டுவரவேண்டும். தேவன் வாசம் பண்ணும் இடத்திற்கு, தேவன் தம் நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட இடத்திற்கு, அவைகளைக் கொண்டுவர வேண்டும். அந்த இடத்தில் தேவனுடைய பிரசன்னத்தில் தேவனுடைய பிள்ளைகள் எல்லாரோடும், தேவனோடும் சேர்ந்து அவைகளை அனுபவித்துமகிழவேண்டும். இதுவே கூட்டு ஆராதனை.

இந்த இரண்டு வழிகளும் கால்நடைகளுக்கும் பொருந்தும். அவர்கள் ஆட்டு மந்தைகளின் இறைச்சியைப் புசிக்க விரும்பினால், அந்த மிருகங்களை எந்த இடத்தில் வேண்டு மானாலும் கொன்று, அவைகளை அனுபவித்துமகிழலாம். ஆனால் அவர்கள் தலையீற்றுகளைச் சாப்பிடமுடியாது; அவர்கள் தசமபாகத்தைச் சாப்பிடமுடியாது. அவர்கள் அவைகளைப் பத்திரப்படுத்திவைத்து தேவன் தம் நாமம் விளங்கும்படித் தெரிந்துகொண்ட இடத்திற்கு, தேவன் வாசம்பண்ணும் இடத்திற்கு, தேவனுடைய பிள்ளைகள் சந்திக்கும் இடத்திற்கு, அவைகளை ஆசாரியரிடத்திற்குக் கொண்டுவரவேண்டும். ஒருபக்கம், நல்ல தேசத்தின் நிறைவில், ஐசுவரியங்களின் சிறிதளவை எந்த இடத்தில் வேண்டுமானாலும் அனுபவித்துமகிழலாம். ஆனால் இன்னொரு பக்கம், இன்னொரு பங்கு இருந்தது. அதில் அவர்களுக்கு எந்த உரிமையோ அல்லது

சுதந்தரமோ கிடையாது. தேவனுடைய பிள்ளைகளுடன் சேர்ந்து அனுபவித்துமகிழ்வதற்குத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இடத்திற்கு அவர்கள் அதைக் கொண்டுவரவேண்டும். இவ்வாறு அங்கு இந்த இரண்டு வழிகள் இருந்தன; தனிப்பட்ட வழி, கூட்டு வழி.

நாம் இப்போது இந்த அடிப்படைக் கோட்பாடுகளைப் பிரயோகிப்போம். நாம் கிறிஸ்தவர்கள் என்ற முறையில் கிறிஸ்துவை எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் நாமாகவே அனுபவித்துமகிழலாம். ஆனால் கர்த்தருடைய பிள்ளைகளுடன் சேர்ந்து கூட்டுமுறையில் நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ விரும்பினால் நமக்கு வேறு வழியே இல்லை; நாம் போவதற்கு ஒரேவொரு இடம்தான் உண்டு. அவரைத் தனித்தனியாகவும், தனிப்பட்ட விதத்திலும் அனுபவித்து மகிழ்வது எங்குவேண்டுமானாலும் அனுமதிக்கப்படத்தக்கது—இதற்கு நமக்கு முழுச்சுதந்தரம் உண்டு. ஆனால், தேவனுக்கு ஆராதனை செலுத்தும்வண்ணம், கர்த்தருடைய மக்களோடு சேர்ந்து கிறிஸ்துவை அனுபவித்து மகிழ விரும்பினால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இடத்திற்கே நாம் சென்றாகவேண்டும். இது உயிர்நாடிபோன்ற காரியம். ஏனென்றால், இது கர்த்தருடைய பிள்ளைகளின் ஒற்றுமையைப் பாதுகாக்கிறது.

இந்த அடிப்படைக் கோட்பாடு, இன்றைய கிறிஸ்தவத்தில் மேலோங்கிநிற்கிற சூழ்நிலைக்கு முற்றிலும் முரணானது. இந்த அடிப்படைக் கோட்பாடு மீறப்படுவதால் எவ்வளவு குழப்பம், எவ்வளவு சிக்கல், எவ்வளவு பிரிவினை உருவாகியுள்ளது! இஸ்ரவேல் மக்களைப் பாருங்கள். தலைமுறை தலைமுறையாக, நூற்றாண்டுகள் நூற்றாண்டுகளாக, அவர்களுக்கிடையே எந்தப் பிரிவினையும் கிடையாது. ஏனென்றால், தேவனை ஆராதிப்பதற்கு அவர்களுக்கு ஒரேவொரு மையம் தான் இருந்தது. வேறு யாரும் இன்னொரு மையத்தை ஸ்தாபிப்பதற்குத் துணியவில்லை. அவர்கள் கூடிவருவதற்கு அவர்களுக்கு ஒரேவொரு இடம்தான் இருந்தது, ஆராதிப்பதற்கு அவர்களுக்கு ஒரேவொரு இடம்தான் இருந்தது—அது கர்த்தர் தம் நாமம் விளங்கும்படி அவர்களுடைய சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொண்ட அவருடைய வாசஸ்தலமாகிய இடம். இஸ்ரவேல் தேசத்திலுள்ள எல்லா இடங்களிலும் எருசலேம் தன்னிகரற்றது. இதுவே அவருக்குக் கூட்டாக ஆராதனைசெலுத்துவதற்கு எல்லா மக்களும் வரவேண்டும் என்று கர்த்தர் நியமித்த இடம்.

கர்த்தருடைய வார்த்தையை வாசிப்போம்:

உபாகமம் 12:5-8: "உங்கள் தேவனாகிய கர்த்தர்

தம்முடைய நாமம் விளங்கும்படி உங்கள் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளும் ஸ்தானமாகிய அவருடைய வாசஸ்தலத்தையே நாடி, அங்கே போய், அங்கே உங்கள் சர்வாங்க தகனங்களையும், உங்கள் பலிகளையும், தசமபாகங்களையும், உங்கள் கை ஏறெடுத்துப் படைக்கும் படைப்புகளையும், உங்கள் பொருத்தனைகளையும், உங்கள் உற்சாக பலிகளையும், உங்கள் ஆடுமாடுகளின் தலையீற்றுகளையும் கொண்டுவந்து அங்கே உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியிலே புசித்து, நீங்கள் கையிட்டுச் செய்ததும், உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்ததுமான யாவுக்காகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் சந்தோஷப்படுவீர்களாக. இங்கே இந்நாளில் நாம் அவனவன் தன்தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக."

சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவாகிய அந்த நல்ல தேசத்துக்குள் நாம் வந்தபின்பு, நம் பார்வைக்குச் சரியானதையெல்லாம் நாம் செய்யமுடியாது. நாம் தெரிந்தெடுக்கும் இடத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுடன் கூட்டு ஆராதனைக்குக் கூடிவர முடியாது. தேவன் தெரிந்தெடுத்த அந்த இடத்திற்கு, அந்த ஒரே மையத்திற்கு, ஒற்றுமைக்கான அந்த ஒரே ஆதாரத்திற்கு நாம் போகவேண்டும். இன்றைய சூழ்நிலை எவ்வளவு முரண்பட்டதாக இருக்கிறது! ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒன்பது அல்லது பத்து சகோதரர்கள் இருந்தால்போதும், உடனே அவர்கள், "வாருங்கள்; நாம் ஒரு புதிய சபையைத் தொடங்குவோம்," என்று சொல்வது அவர்களுக்கு மிக எளிதாக இருக்கிறது. இரண்டு அல்லது மூன்றுபேர் ஒத்துக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் "சரி, நீங்கள் போய் உங்கள் சொந்தச் சபையை ஆரம்பித்துக்கொள்ளுங்கள்," என்று கூறுவார்கள். அவர்களும் போய் ஆரம்பித்து விடுவார்கள். ஒரே ஊரில் சபைகள் என்று தங்களை அழைத்துக்கொள்பவர்கள் எத்தனைபேர் இருக்கிறார்கள் என்று எண்ணுவது சற்றுக் கடினம். இன்று கிறிஸ்தவத்தில் அவனவன் தன்தன் சொந்த விருப்பத்தின்படி தெரிந்தெடுக்கத் தனக்கு உரிமை உண்டு என்பதுபோல் நடக்கிறான். "உனக்குப் பிடித்த சபைக்கு நீ போ" என்ற பேச்சுவழக்கு பிரபலமானது, தற்காலத்துக்குரியது. "தெரிந்தெடுக்க உனக்கு உரிமை இல்லை" என்று உரத்த குரலில் கர்த்தருடைய பிள்ளைகள் எல்லாருக்கும் நான் கூற விரும்புகிறேன். ஒருபக்கம், நீ எங்கிருந்தாலும் நீயாகவே கிறிஸ்துவை அனுபவித்துமகிழ உனக்கு முழு சுதந்திரம் உண்டு.

ஆனால் அவரை ஆராதிப்பதற்குக் கர்த்தருடைய பிள்ளைகளுடன் நீ ஒன்றாகக் கூடிவரும்போது நீ உன் சுதந்திரத்தை இழந்து விட்டாய். கர்த்தர்தாமே நியமித்த இடத்தில் மட்டுமே கர்த்தருடைய பிள்ளைகள் ஒன்றாகக் கூடிவரவேண்டும். நாம் அந்த இடத்திற்குப் போகவேண்டும்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில் நீ ஓர் இஸ்ரவேலனாக இருந்திருந்தால் தாவீதினிடத்தில் அல்லது சாலமோனிடத்தில், "உன்னிடத்தில் நான் சந்தோஷமாக இல்லை. எனவே நீ எருசலேமில் ஆராதனைசெய்தால், நான் பெத்லகேமுக்குப் போவேன். பெத்லகேமில் இன்னொரு ஆராதனை மையத்தை நிறுவுவேன்," என்று சொல்லமுடியாது. ஆனால் மக்கள் இன்று இதைத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். "நீ இருக்கக்கூடிய இடத்தில் நாங்கள் இருக்க விரும்பவில்லை. நீங்கள் முதல் தெருவில் கூடுவதாக இருந்தால், நாங்கள் இரண்டாவது தெருவில் இன்னொரு கூட்டத்தைத் தொடங்குவோம்." "ஏனென்றால், இரண்டு பேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" என்று மத்தேயு *18:20*ஐ மேற்கோள் காட்டி தாங்கள் செய்வதை நியாயப்படுத்தவும்கூட முயல்கிறார்கள். "நாங்கள் செய்வது முற்றிலும் வேதத்துக்கு ஒத்தது. நாங்கள் இரண்டு அல்லது மூன்றுபேர் கர்த்தருடைய நாமத்தில் கூடிவருகிறோம். கிறிஸ்துவாகிய தளத்தின்மேல்தான் கூடுகிறோம்," என்று அவர்கள் கூறுகிறார்கள். இந்தக் கூட்டத்தை ஆரம்பித்த ஒரு சில மாதங்களுக்குப்பின்னர் அவர்களிடையே உள்ள சில சகோதரர்கள் அங்கு சந்தோஷமில்லாமல் இருக்கலாம். எனவே, அந்தக் கூட்டத்தை விட்டுவிட்டு இன்னொரு கூட்டத்தை ஆரம்பிப்பார்கள். "உங்களால் ஒரு கூட்டத்தை இரண்டாவது தெருவில் ஆரம்பிக்க முடியுமானால், எங்களால் ஒரு கூட்டத்தை மூன்றாவது தெருவில் ஆரம்பிக்கமுடியும்," என்று அவர்கள் கூறுவார்கள். இது எப்பேர்ப்பட்ட குழப்பம்! இப்படிப்பட்ட சூழ்நிலையில், எந்தக் கட்டுப்பாடும் இல்லை. எந்தச் சட்டமும் இல்லை. பிரிவினைகளுக்கு முடிவே இராது.

ஒற்றுமை என்ற பொதுவான தளத்தின்மேல்தான் நாம் தேவனுடைய பிள்ளைகளுடன் ஒன்றாகக் கூடிவரவேண்டும். இந்தத் தளம் மிகவும் சட்டரீதியானது என்று நீங்கள் சொல்ல முடியாது. இப்படி நாம் சட்டரீதியாக இருக்கவேண்டும். நீங்களும், நானும் தேவனுடைய சட்டத்தினால் மட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆராதனைக்கென்று இன்னொரு மையத்தை நிறுவுவதற்கு நமக்கு எந்த உரிமையும் கிடையாது. இது கர்த்தருடைய பிள்ளைகளுக்கிடையில் பிரிவினையை மட்டுமே

உண்டாக்கும். நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய ஒரே தளம், நாம் நிற்கவேண்டிய ஒரே தளம்—ஒற்றுமை என்ற தளமே. நாம் நாமாகவே எங்குவேண்டுமானாலும் கிறிஸ்துவை அனுபவித்து மகிழலாம். ஆனால் தேவனுக்கு ஆராதனையாக மற்ற சகோதரர் களுடனும், சகோதரிகளுடனும் சேர்ந்து கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்வதற்கு நாம் நிச்சயமாக வேறெங்கும் ஒரு கூட்டத்தை ஏற்படுத்தமுடியாது. இப்படிச்செய்வதற்கு நம்மில் யாருக்கும் எந்த உரிமையும் கிடையாது. கர்த்தர் நியமித்த இடத்திற்கு, அவர் தம் நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட இடமாகிய அவருடைய வாசஸ்தலத்துக்கு நாமெல்லாரும் போகவேண்டும். இந்த முழுப் பிரபஞ்சத்திலும் கர்த்தருடைய சரீரம், கர்த்தருடைய வாசஸ்தலம், ஒன்றே ஒன்றுதான்; ஆகையால் ஒவ்வோர் இடத்திலும் கர்த்தருடைய சரீரத்தின் ஒரேவொரு வெளியாக்கம்தான் உண்டு. இது ஓர் அடிப்படை விதி.

சகோதர சகோதரிகளே, உபாகமத்தை வாசியுங்கள். தேசத்தில் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதற்கான இரண்டு விதிகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஒன்று நல்ல தேசத்தின் விளை பொருளை நீ தனிப்பட்ட முறையில் அனுபவித்துமகிழ்வதுடன் தொடர்புடையது. இதை நீ எந்த இடத்திலும், எல்லா இடத்திலும், உனக்குப் பிடித்தபடி எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும்செய்யலாம். இன்னொரு விதி என்னவென்றால், நல்ல தேசத்தின் விளைபொருட்களை கர்த்தருடைய பிள்ளைக ளுடன் சேர்ந்து தேவனுக்குமுன்பாக ஆராதனையாக நீ அனுபவித்துமகிழ விரும்பினால், தெரிந்தெடுக்கும் எந்த உரிமையும் உனக்குக் கிடையாது. உன் சொந்த மனவிருப்பங் களைப் பின்பற்றுவதற்கும், உன் பார்வைக்குச் சரியானவற்றைச் செய்வதற்கும் உனக்கு எந்த உரிமையும் கிடையாது. நீ உன் சொந்த எண்ணங்களைக் கைவிட்டுவிட்டு பயத்தோடும் நடுக்கத்தோடும், "கர்த்தாவே, நீர் தெரிந்தெடுத்த இடம் எங்கே இருக்கிறது? உம் நாமம் விளங்கும்படி நீர் தெரிந்தெடுத்த வாசஸ்தலம் எங்கே இருக்கிறது என்று எனக்குக் காண்பியும், நான் அங்கு போவேன்," என்று கேட்கவேண்டும். அங்கு அவருடைய சந்நிதானத்தில் தேவனோடும், தேவனுடைய பிள்ளைகள் எல்லாரோடும் நீங்கள் கிறிஸ்துவை அனுபவித்து மகிழலாம்.

இதைச்செய்தால், நீ தேவனுக்கு மிகவும் பிரியமானவனாக இருப்பாய் என்று என்னால் நிச்சயமாகக் கூறமுடியும். இல்லையென்றால் அவருடைய பிள்ளைகளுக்கிடையில் பிரிவினையை அதிகரிப்பதின்மூலம் நீ அவருக்கு விரோதமாக இருப்பாய். நீ மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இந்த

வார்த்தைகளை நீங்கள் கவனமாகக் கேட்கவேண்டும் என்று நான் உங்களை வேண்டுகிறேன்.

கிறிஸ்து அவ்வளவு நிறைவானவர், அவ்வளவு செழிப்பானவர், அவ்வளவு ஜீவனுள்ளவர்! அவரை நாம் எப்போதும், எல்லா நேரமும் அனுபவித்துமகிழலாம். நாம் எங்கிருந்தாலும் சரி, அங்கெல்லாம் அவரை அனுபவித்துமகிழ நாடுவது ஏற்புடையது மட்டும் இல்லை, அது நேர்த்தியானதும்கூட. ஆனால் கண்டிப்பான, அடிப்படை விதி ஒன்று இருக்கிறது. அதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். அது என்னவென் றால், தேவனுக்கு முன்பாக கர்த்தருடைய பிள்ளைகளுடன் சேர்ந்து ஆராதனை என்ற முறையில் அவரை அனுபவித்துமகிழ விரும்பினால், நாம் விரும்புகிறபடி நாம் செய்யமுடியாது. இந்த விஷயத்தில் நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் இருக்கவேண்டும்.

சகோதர சகோதரிகளே, தேவன் நியமித்த இடத்தில், தேவன் தம் நாமம் விளங்கும்படி தெரிந்துகொண்ட இடத்தில், தேவனுடைய பிள்ளைகளுடன் நீங்கள் இப்போது கூடி வருகிறீர்களா? நீங்கள் நின்று, கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும் என்று நான் உங்களுக்கு ஆலோசனை கூறு கிறேன். கர்த்தரைத் தேடுங்கள்; அவர் தெரிந்தெடுத்த இடத்தை உங்களுக்கு காட்டும்படி அவரைக் கேளுங்கள். அந்த இடத்திற்குப் போவதாக நீங்கள் அவரிடம் கூறுங்கள். இன்று கர்த்தருடைய மக்களுக் கிடையில் இருக்கும் பிரிவினை என்னும் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதுவே நமக்கிருக்கும் சரியான வழி. வேறு எந்த வழியும் இல்லை. தேவன்தாமே நமக்கு இரக்கம் பாராட்டுவாராக.

தேசத்தில் வாழும் வாழ்க்கை, கிறிஸ்துவைத் தனியாகவும், கர்த்தருடைய பிள்ளைகளுடன் சேர்ந்து கூட்டாகவும், முழுமை யாக அனுபவிப்பதற்கும், நம் கைகள் அவரால் நிரம்பி யிருப்பதற்கும் நாம் ஜாக்கிரதையாய் இருப்போமாக. பின்னர் அவர் நியமித்த இடத்திற்கு, ஒற்றுமையின் ஒரே தளத்திற்கு, தேவனுடைய பிள்ளைகளோடும் தேவனோடும் இந்தச் செழிப்பான, மகிமையான கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்வதற்கு நாம் வரவேண்டும்.

அதிகாரம் பதினாறு

தேசத்தின் விளைவு— தேவாலயமும், நகரமும்

வேத வாசிப்பு: உபா. 12:5-7, 17-18; 8:7-9; எபே. 1:22-23; 2:19-22

கிறிஸ்துவை அனுபவிப்பதைப்பற்றி நாம் அதிகமாகப் பார்த்திருக்கிறோம். கிறிஸ்துவைப் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவிப்பதில் ஆரம்பித்தோம். அனுதின மன்னா, பாய்ந் தோடும் நீரோடையை உடைய பிளக்கப்பட்ட கன்மலை, சாட்சிப்பெட்டி, அதின் பெரிதாக்கமாகிய கூடாரம், எல்லா வகையான பல்வேறு பலிகள், ஆசாரியத்துவத்தை உடைய ஆசாரியர்கள், பரிசுத்த சேனை போன்ற அநேகக் காரியங்களினூடாய்க் கடந்துவந்தோம். இறுதியாக தேசத்துக்கு, அதாவது சகலத்தையும் உள்ளடக்கிய தேசத்துக்கு, வந்திருக்கிறோம். இந்தத் தேசமே தேவனுக்கும், தேவ மக்களுக்கும் எல்லாமுமாக இருக்கிறது என்று பார்த்தோம். இந்தச் சித்திரம் போதுமான அளவுக்குத் தெளிவாக இருக்கிறது.

நம் அனுபவத்தின் வளரும் அளவு

ஆட்டுக்குட்டியிலிருந்து தேசம்வரையுள்ள எல்லாக் காரியங் களும் கிறிஸ்துவைக் குறிக்கும் முன்னடையாளங்கள். முன் னடையாளம் என்றமுறையில் ஒவ்வொன்றும் தன்னில்தானே முழுமையானது, பரிபூரணமானது; ஆனால் கடைசி முன்னடை யாளமாகிய தேசம் சகலத்தையும் உள்ளடக்கிய மாபெரும் முன்னடையாளம். பஸ்கா ஆட்டுக்குட்டி கிறிஸ்துவைக் குறிக்கும் ஒரு முன்னடையாளம் என்ற வகையில் மெய்யாகவே முழுமை யானது, பரிபூரணமானது; இருந்தபோதும், இது மிகச்சிறிய அளவிலான கிறிஸ்துவைக் குறிக்கிற முன்னடையாளம். கர்த்தரைப் பொறுத்தவரை, அவர் எல்லைக்குட்பட்டவர் அல்லர்; ஆனால் நாம் அவரை அனுபவிக்கும் அனுபவத்தைப் பொறுத்தவரை இப்படிப் பட்ட எல்லை என்ற வரையறை இருக்கிறது. நாம் கர்த்தரிடத்திற்கு வந்து அவரை நம் மீட்பராக ஏற்றுக்கொள்ளும்போது, நாம் பெற்றுக்கொள்ளும் கிறிஸ்து முழுமையானவர், நிறைவானவர், பரிபூரணமானவர்; ஆனால், நாம் அவரை அனுபவிக்கும் அனுபவத்தைப்பொறுத்த வரை ஒரு சிறிய அளவின்படி, அதாவது ஒரு சின்ன ஆட்டுக்குட்டியாக மட்டுமே, நாம் அவரை அனுபவிக்கிறோம்.

நாம் அவரை ஆட்டுக்குட்டியாக அனுபவித்த நேரத்தி லிருந்து தொடர்ந்து எப்போதும் முன்னேறிக்கொண்டும், முன்னேற்ற மடைந்துகொண்டும் இருக்கிறோம்; நாம் கிறிஸ் துவை அனுபவிக்கும் அனுபவத்தில் தொடர்ந்து நல்ல மேம்பாடு அடைந் திருக்கிறோம். நாம் அவரை மேன்மேலும் அனுபவித்துமகிழ்ந்தி ருக்கிறோம். இதன் பொருள், கிறிஸ்து பெரிதாக, மேலும் பெரிதாக ஆகிவிட்டார் என்பது இல்லை. இல்லை, கிறிஸ்து மாறாதவர்; ஆனால் நம் அனுபவத்தின்படி அவர் நமக்கு மேன்மேலும் பெரியவராகிக்கொண்டே இருக்கிறார் என்று நாம் உணர்கிறோம். ஒவ்வொருநாளும் நம் அனுபவத்தில் கிறிஸ்து மேன்மேலும் பெரியவராகிக்கொண்டே வருகிறார். நம் அனுபவத்தின் கடைசிக் கட்டமாகிய சகலத்தையும் உள்ளடக்கிய தேசத்தை நாம் எட்டும்போது, கிறிஸ்து நமக்கு எல்லையற்ற அளவில் பெரியவராக இருக்கிறார். அவர் ஒரு விசாலமான தேசம். அவர் ஒரு தேசம். அதின் கனபரிமாணங்களே அகலம், நீளம், ஆழம், உயரம். அதின் அகலத்துக்கும், நீளத்துக்கும் எல்லையேயில்லை; அதின் ஆழத்துக்கும், உயரத்துக்கும் எல்லையேயில்லை. கிறிஸ்து எவ்வளவு பரந்து விரிந்தவர் என்று யாராலும் சொல்லமுடியாது— அவருடைய விசாலம் எல்லையற்றது. நாம் இந்தத் தேசத்துக்குள் நுழைந்திருக்கிறோம். மற்ற காரியங்களை அளந்துவிடலாம். அவைகள் முன்குறிக்கும் கிறிஸ்துவின் தனிச்சிறப்புகளுக்கும், அனுபவங்களுக்கும் ஒரு விரிவளவு, எல்லை, உண்டு. ஆனால், தேசத்துக்கு எல்லையே இல்லை. தேசம் திருஷ்டாந்தப்படுத்துகிற கிறிஸ்து தீர்ந்துபோகாதவர், அளவிடமுடியாதவர்.

முதிர்ச்சியும், வேலையும்

நாம் கிறிஸ்துவை ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழும் போது, நாம் நம் வேலைகளையெல்லாம் நிறுத்தவேண்டும் என்று தேவன் கோருகிறார். பஸ்கா பண்டிகையின்போது யாரும் வேலைசெய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை—எல்லா வேலையும் நிறுத்தப்பட வேண்டும் (யாத். 12:16). ஆட்டுக் குட்டியை அனுபவித்துமகிழ்வதைத்தவிர செய்வதற்கு வேறு வேலை இல்லை. இரத்தம் வாசலில் பூசப்பட்டது; ஆட்டுக் குட்டியின் மாம்சத்தை வீட்டுக்குள்ளே புசித்தார்கள். இதைத் தவிர செய்வதற்கு வேறொன்றும் இல்லை. இதே காரியம் மன்னாவைப் புசிக்கும் விஷயத்துக்கும் பொருந்தும். அவர்கள் அனுபவித்துமகிழ்வதற்காக மன்னா வானத்திலிருந்து இறங்கி வந்தது. அவர்கள் சும்மா போய், அதை எடுத்து, அனுபவித்து மகிழவேண்டும், அவ்வளவுதான். செய்வதற்கு வேறொன்று மில்லை. அதுபோல நாம் கிறிஸ்துவை இப்படியாக அனுபவித்துமகிழும்போது நாமும் எதையும்

செய்யவேண்டாம். நாம் அவரை நம் இரட்சகராகவும், நம் அன்றாட உணவு நிரப்பீடாகவும் எடுத்துக்கொள்ளும்போது, நாம் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுமேயில்லை. ஏற்கெனவே வழங்கப் பட்டிருப்பதை நாம் இலவசமாகவும், நிறைவாகவும் ஏற்றுக் கொள்ளவேண்டும், அவ்வளவே. நாம் செய்யும் எந்த வகையான வேலையும் நாம் கிறிஸ்துவை இந்த அம்சங்களில் அனுபவித்து மகிழ்வதற்கு இடையூறாகவே இருக்கும். அது மட்டும் இல்லை, அது தேவனுக்கு அவமதிப்பாகவும் இருக்கும்.

ஆனால், நாம் உடன்படிக்கைப்பெட்டிக்கு வரும்போது, அதின் விஷயம் வேறு: அங்கு நாம் செய்யவேண்டிய காரியம் இருக்கிறது. கிறிஸ்துவைப் பெட்டியாக அனுபவிக்கும் விஷயத்தில் கூடாரத்தைக் கட்டும் வேலைஇருக்கிறது. நாம் தேசத்துக்கு வரும்போது, வேலைசெய்ய வேண்டும் என்ற அம்சம் இன்னும் அதிகமாகத் தீவிரப்படுத்தப்படுகிறது. ஏனென்றால், நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, தேசத்தில் நாம் வேலைசெய்யா விட்டால் அதிலிருந்து எந்த உற்பத்தியும் வராது. தேசம் மெய்யாகவே ஆட்டுக்குட்டியிலிருந்தும், மன்னாவிலிருந்தும் வித்தியாசமானது. மன்னா வானத்திலிருந்து பனியோடு கீழிறங்கியது (எண். 11:9). அதை அனுபவித்துமகிழ்வதற்கு எந்த வேலையும் செய்ய வேண்டிய தேவையில்லை. சும்மா எழுந்து போய், சேகரித்து அதை அனுபவிக்கவேண்டும். அவ்வளவுதான். ஆனால் இஸ்ரவேல் மக்கள் தேசத்துக்குள் நுழைந்து, அதின் நன்மைகளை அனுபவித்துமகிழ ஆரம்பித்தபோது, வானத்திலிருந்து விழுந்த மன்னா பெய்யாமல் நின்றுபோயிற்று. அவர்களுடைய உணவு நிரப்பீடாக மன்னாவுக்குப் பதிலாக, தேசத்தின் பலனை அவர்கள் புசித்தார்கள் (யோசுவா 5:12). இந்த வித்தியாசம் நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும்: மன்னாவை அனுபவித்து மகிழ்வதற்கு எந்த வேலையும் செய்யவேண்டிய தேவையில்லை; ஆனால் நல்ல தேசத்தின் விளைபொருளை அனுபவித்துமகிழ்வது நம் வேலையையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இது முற்றிலும் வித்தியாசமானது.

நாம் இரட்சிக்கப்பட்ட புதிதிலும், ஆவிக்குரிய நிலையில் முதிர்ச்சியடையாதபோதும்கூட நாம் கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்கிறோம். அவர் நமக்கு மிகவும் நல்லவராகவும், அற்புத மானவராகவும் இருக்கிறார்! ஆ! கிறிஸ்து நம் ஆட்டுக்குட்டி, நம் அன்றாட மன்னா, பாய்ந்தோடும் நீரோடையையுடைய நம் கன்மலை—அவர் எவ்வளவு நல்லவர்! அவர் நமக்காக யாவற்றையும் செய்கிறார்! ஆனால், நாம் கர்த்தருக்குள் படிப் படியாக வளரும்போது, நாம் செய்வதற்கு ஏதோ கொஞ்சம் இருக்கிறது என்று கண்டுபிடிக்கிறோம். நாம் கொஞ்சம்

பொறுப்பைச் சுமக்கவேண்டும்; நாம் வேலைசெய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக நம் குடும்பங்களில் சின்னக் குழந்தைகள், பாலகர்கள், தவழும் குழந்தைகள் இருக்கிறார்கள். தொடர்ந்து அவர்களுக்குக் கொடுக்கப்படுவதை அவர்கள் அனுபவித்து மகிழ்வதைத்தவிர வேறொன்றையும் அவர்கள் செய்யவேண்டிய தில்லை. அவர்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் மற்றவர்கள் ஆயத்தம்பண்ணிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் வளர்ந்துபோகும்போது, குடும்பத்தில் அவர்களுக்குச் சின்னச் சின்னப் பொறுப்புகள் கொடுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அவர்களைவிட இளையவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு, வீட்டைப் பெருக்குதல், சுத்தம்பண்ணுதல் போன்ற சில வேலைகள். பின்பு அவர்கள் இன்னும் சில ஆண்டுகள் வளர்ந்து முதிர்ச்சியடையும்போது, முன்பு கொடுக்கப் பட்டதை விட அதிகமான பொறுப்புகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன. இருபது அல்லது அதைவிடச் சற்று அதிகமான வயதை அடையும்போது, அவர்கள் வேலைக்குச் சென்று சம்பாத்தியம்பண்ணி, தங்கள் வாழ்க்கையைத் தாங்களே கவனித்துக்கொள்ளவேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் இது அப்படியே பொருந்தும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் நாம் நுழையும்போது, நாம் அவரை அதிகமாக அனுபவித்துமகிழ்கிறோம். அதே நேரத்தில், நாம் சுமக்க வேண்டிய பொறுப்பும் அதிகமாக இருக்கிறது. கிறிஸ்துவில் நாம் எவ்வளவு அதிகமாக உழைக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவுக்குரியதை உற்பத்திசெய்வோம். எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறோமோ, அவ்வளவு அதிகமாகப் பிறருடன் பகிர்ந்துகொள்வதற்கு நம்மிடம் கிறிஸ்துவுக்குரியது இருக்கும், அவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவைத் தேவனுக்கு ஏறெடுக்கலாம். இவையெல்லாம் நாம் கிறிஸ்துவில் படும் பிரயாசத்தின் அளவையே பொறுத்திருக்கிறது. நாம் தேசத்துக்குள் நுழையும்போது, வேலைசெய்யவேண்டும்!

சகோதர சகோதரிகளே, நீங்கள் உங்கள் நிறுவனத்தை உங்கள் நகரத்தில் எப்போது பதிவுசெய்யப்போகிறீர்கள்? என்ன நிறுவனம்? கூட்டிணைப்பான கிறிஸ்து! லாஸ் ஏஞ்செலஸி லுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! சான் பிரான்சிஸ்கோவி லுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! சாக்ரமெண்டோவிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! விசுவாசிகளின் கூட்டங்க ளெல்லாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய உள்ளூர் வெளியாக்கம் என்ற முறையில், கிறிஸ்துவை மாபெரும் அளவில் உற்பத்திசெய்யக் கூடிய ஒரு நிறுவனமாக, தொழில்சாலை யாக, இருக்கவேண்டும். நாம் ஒவ்வொருநாளும் கிறிஸ்துவில் உழைத்து, ஒவ்வொரு நாளும்

கிறிஸ்துவை உற்பத்திசெய்யவேண்டும். நாம் கிறிஸ்துவை நம் தொழில்துறையாக்கிவிட வேண்டும். நம் தொழில் என்னவென்று மற்ற வர்கள் நம்மைக் கேட்டால், கிறிஸ்துவே நம் தொழில் என்றும், கூட்டிணைப்பான கிறிஸ்துவே நம் நிறுவனம் என்றும் நம்மால் கூறமுடிய வேண்டும். இந்த நிறுவனத்துக்கு அகில உலகத்திலுமுள்ள எல்லா நகரங்களிலும் கிளைகள் இருப்பதைப் பார்க்க விரும்புகிறோம். நாம் போகுமிடமெல்லாம் கிறிஸ்துவை மட்டுமே தங்கள் ஒரே தொழிலாகக் கொண்டுள்ள ஒரு கூட்டம் மக்களைப் பார்ப்பது எவ்வளவு அற்புதமானது! இது எவ்வளவு நிஜம். லண்டனிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! பாரிசிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! டோக்கியோவிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து! சில சமயம் உலகக் கண்காட்சி நடத்தலாம். தைபேயிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து ஏதாவது கொஞ்சம் கொண்டுவரலாம். ஹாங்காங்கிலுள்ள கூட்டிணைப்பான கிறிஸ்து ஏதாவது கொஞ்சம் கொண்டுவரலாம். எல்லா நகரங்களிலிருந்தும் கர்த்தருடைய பிள்ளைகள் தாங்கள் உற்பத்திசெய்த கிறிஸ்துவைக் கொண்டுவந்து கிறிஸ்துவினுடைய பல்வேறு ஐசுவரியங்களை காட்சியாக வைக்கலாம். கிறிஸ்துவின் கண்காட்சியை நடத்துவதற்கு நாமெல்லாம் ஒன்றாகக் கூடி வருவோமாக. நாம் ஏதோ ஒருவகையான மனித நிறுவனத்தைப் பற்றிப் பேசவில்லை. மாறாகக் கிறிஸ்துவில் உழைத்து, அவரை உற்பத்திசெய்யவேண்டும். அவரை அனுபவித்துமகிழவேண்டும், அவரைப் பகிர்ந்துகொள்ள வேண்டும், அவரை வெளியாக்க வேண்டும் என்பதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்களைப் பற்றி, கிறிஸ்துவுக்குள் நடைமுறையில் ஒன்றாகக் கட்டப்பட்டவர் களைப்பற்றிப் பேசுகிறோம். இதுவே நாம் செய்யவேண்டும் என்று தேவன் விரும்புவதாகும்.

பண்டைய நாட்களில் வாழ்ந்த இஸ்ரவேல் மக்களை மீண்டும் ஒருமுறை பாருங்கள். அந்த நல்ல தேசத்தில் பிரயாசப்பட்டு உழைத்து, நிலத்தைப் பண்படுத்தி, விதை விதைத்து, செடிகளுக்கு நீர்பாய்ச்சி, செடிகளைச் சுத்தம்பண்ணின ஒரு வருடத்திற்குப் பின்பு கூடாரப் பண்டிகை வந்தது. பின்பு, தேசத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும், எல்லா நகரங்களிலிருந்தும், பட்டணங்களிலிருந்தும், தசமபாகங் களோடு தங்கள் விளை பொருட்களின் முதற்பலன்களோடு எருசலேமிலுள்ள தங்கள் மையத்துக்கு மக்கள் ஒன்றாகக் கூடிவந்தார்கள். கானான் தேசத்தினுடைய சகல விளை பொருட்களின் கண்காட்சி நடைபெற்றது. தேவ மக்கள் ஒன்றாகவும், தேவனோடும் சேர்ந்து கொண்டாடிய இந்தப் பண்டிகை முற்றிலும் அவர்கள் நிலத்தில் உழைத்த கடுமையான உழைப்பையே சார்ந்திருந்தது.

நாம் இப்போது கிறிஸ்துவை அளவிடமுடியாத அந்த நல்ல தேசத்தின் நிஜமாக அனுபவித்துமகிழ்கிறோம். தேவன் இப்பேர்ப்பட்ட நிலத்தை நமக்குத் தந்திருப்பது மெய்யாகவே அவருடைய கிருபை ஆகும். ஆனால், இது நம் முழு ஒத்துழைப்பைச் சார்ந்த விஷயம். நாம் தேவனோடு ஒத்துழைக்க வேண்டும், ஒருங்கிணைந்து செயல்படவேண்டும்; தேவன் இந்தத் துண்டு நிலத்தை ஆயத்தம்பண்ணித் தந்திருக்கிறார்; அதாவது தேவன் நமக்குக் கிறிஸ்துவைத் தந்திருக்கிறார். தேவன் இந்தத் தேசத்தின்மேல் வானத்திலிருந்து மழையைப் பொழிந்திருக்கிறார், அதாவது தேவன் நமக்குப் பரிசுத்த ஆவியைத் தந்திருக்கிறார். தேசம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம், மழை பரிசுத்த ஆவிக்கு முன்னடையாளம். இருந்த போதும் நம் ஒத்துழைப்பு அவசியம். நாம் தேவனோடு ஒத்துழைக்கவேண்டும்; அப்போது விளைபொருள் நமக்கு உண்டாயிருக்கும். நாம் எவ்வளவுக்குத் தேவனோடு ஒத்துழைக்கிறோம்? இதுதான் பிரச்சினை.

சபைகள் என்றழைக்கப்படுகிற சில இடங்களில் நல்ல தேசத்தின் விளைபொருளாக ஏதாவது இருப்பதை உங்களால் உணரமுடிவதில்லை. அவர்கள் மக்களுக்குக் கொடுக்க முடிந்ததெல்லாம் பஸ்கா ஆட்டுக்குட்டியும், வானத்திலிருந்து வந்த மன்னாவுமே. அவர்கள் மக்களுக்குப் பரிமாற முடிந்ததெல்லாம் மீட்கும் ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவும், அனுதின மன்னாவாகிய கிறிஸ்துவுமே. அவர்களால் கிறிஸ்துவை நல்ல தேசமாகப் பரிமாறமுடியாது. ஏனென்றால், அவர்கள் ஒருபோதும் நல்ல தேசத்துக்குள் நுழையவில்லை. ஆனால், சில உள்ளூர் சபைகளில் மக்களை நீங்கள் தொடர்புகொள்ளும்போது, அவர்களுடைய கூட்டங்களில் நீங்கள் கலந்துகொள்ளும்போது, அவர்கள் கூடிவரும்போதெல்லாம் ஐசுவரியமான கண்காட்சி இருக்கிறது என்று நீங்கள் உணர்கிறீர்கள்; கிறிஸ்துவினுடைய எல்லாவிதமான விளைபொருட்களும் காட்சியளிக்கின்றன. ஏன்? ஏனென்றால், அவர்கள் நல்ல தேசத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் கிறிஸ்துவில் பிரயாசப்பட்டு உழைக்கிறார்கள். கிறிஸ்துவிலிருந்து உற்பத்திசெய்த அநேக நல்ல காரியங்களை அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

சமாதான பலி

தேவனை ஆராதிப்பதற்கும், தேவனுக்கு முன்பாகவும் தேவனோடும் சேர்ந்து விளைபொருளை அனுபவித்துமகிழ்வதற்கும் இஸ்ரவேல் மக்களெல்லாரும் தங்கள் விளைபொருட்களை ஒரே இடத்திற்கு, அதாவது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இடத்துக்குக் கொண்டுவந்தார்கள் என்பதை நாம்

மீண்டும் கவனிக்கவேண்டும். உருவகமாகப் பேசுவதானால், அவர்கள் கிறிஸ்துவையே உற்பத்திசெய்தார்கள்; அவர்கள் கிறிஸ்துவையே தேவனுக்குப் பலியாக ஏறெடுத்தார்கள். தேவனுக்கு முன்பாகவும் தேவனோடு சேர்ந்தும் பரஸ்பரமாக அனுபவித்துமகிழ்வதற்கு அவர்கள் எதை உற்பத்திசெய்தார்களோ, அதையே தேவனுக்கு ஏறெடுத்தார்கள்.

தேவனுடைய முற்காலத்திய பிள்ளைகள் ஏறெடுத்த பலிகளுள் ஒரு பலி சற்று விந்தியாசமானதும், விசேஷ மானதும் ஆகும். அது சமாதான பலி. சமாதான பலியில் அந்தப் பலியை ஏறெடுத்தவன் அனுபவித்துமகிழ்வதற்கு ஏதோ இருந்தது. மற்றவர்கள் அனுபவித்துமகிழ்வதற்கும் அதில் ஏதோ இருந்தது. தேவன் அனுபவித்துமகிழ்வதற்கும் ஏதோ இருந்தது. நான் சமாதான பலியை ஏறெடுக்க வருவேனென்றால் எனக்கு ஒரு பங்கும், மற்றவர்களுக்கு ஒரு பங்கும், தேவனுக்கு இன்னொரு பங்கும் இருக்கும். லேவியராகமம் 7ஆம் அதிகாரத்தை வாசியுங்கள். சமாதான பலி, அதை ஏறெடுக்கிறவன் அனுபவித்துமகிழக்கூடிய பலி என்றும், பிறருடனும் தேவனுடனும் பகிர்ந்துகொள்ளக்கூடிய பலி என்றும் நீ காண்பாய்.

சகோதர சகோதரிகளே, நாம் கிறிஸ்துவில், கிறிஸ்துவோடு, கிறிஸ்துவின்மூலம் தேவனை ஆராதிக்கக் கூடிவரும்போ தெல்லாம் கிறிஸ்துவை சமாதான பலியாக ஏறெடுக்கிறோம். இந்தக் கிறிஸ்துவினிடத்தில் தேவனுக்கு ஒரு பங்கு இருக்கிறது. நமக்கு ஒரு பங்கு இருக்கிறது, மற்றவர்களுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. தேவனோடும் தேவனுக்கு முன்பாகவும் நாம் கிறிஸ்துவைப் பரஸ்பரமாக அனுபவித்து மகிழ்கிறோம். இதுவே மெய்யான ஆராதனை, இதுவே எதிரியாகிய சாத்தானை அவமானப்படுத்து வதாகும்.

ஆலயம்

உபாகமம் 12ஆம் அதிகாரத்திலுள்ள வார்த்தை நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். அது மிகமுக்கியமானது. நம் சகல விளைபொருட்களையும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இடத்துக்கு நாம் கொண்டுவர வேண்டும். இது எந்த இடம்? இது தேவன் வாசம்பண்ணும் இடம். கிறிஸ்துவை நீங்கள் இந்த மையப் புள்ளிக்குக் கொண்டுவர வேண்டும்; கிறிஸ்துவை நான் இந்த மையப் புள்ளிக்குக் கொண்டுவரவேண்டும்; நாமெல்லாரும் கிறிஸ்துவை இந்த மையப் புள்ளிக்குக் கொண்டுவரவேண்டும். அங்கு அவரைத் தேவனுக்கு முன்பாகவும், தேவனோடும் சேர்ந்து பரஸ்பரமாக அனுபவித்துமகிழலாம். இதன் விளைவாக தேவனுக்கு ஒரு வாசஸ்தலம் உண்டாகும். தனிப்பட்ட முறையில் மட்டும்

இல்லை, மாறாகக் கூட்டு முறையிலும் நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழும்போது அதனால் ஒரு விளைவு ஏற்படும் என்பதை நாம் உணரவேண்டும். தேவனுடைய வாசஸ்தலம் உண்டாகும். அதன் பொருள் என்னவென்றால் இந்தப் பூமியில், இந்த யுகத்தில், இந்தக் கணப்பொழுதில் தேவன் வாசம்பண்ணுவதற்கு அவருக்கு ஓர் இடம் உண்டாயிருக்கும். சகோதர சகோதரிகளே, கிறிஸ்துவை நாம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுபவித்துமகிழும்போது, தேவனுக்கு முன்பாகவும், தேவனோடு சேர்ந்தும், நாம் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ ஒன்றாகக் கூடிவரும்போது இந்த உண்மை எழும்புகிறது—அதாவது நாம் தேவனுடைய வாசஸ்தலமாகிறோம். தேவன் நம்மிடையே வாசம்பண்ணுகிறார். தேவன் எங்கிருக்கிறார் என்று யாராவது நம்மிடம் கேட்டால், "வந்து பார்" என்று நாம் அவர்களிடம் கூறலாம். நாம் ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ காண விரும்பினால் நாம் அவர்களுடைய வீட்டுக்கு, அவர்களுடைய வாசஸ்தலத்திற்கு, போகிறோம். அங்கு நாம் அவர்களைக் காண்போம்; அங்கு நாம் அவர்களுடன் கலந்துறவாடுவோம். தேவன் எங்கிருக்கிறார் என்று மக்கள் இன்று கேட்கிறார்கள். "நீங்கள் தேவனைப் பிரசங்கிக்கிறீர்கள். ஆனால், தேவன் எங்கிருக் கிறார்?" என்று அவர்கள் கேட்கிறார்கள். நாம் கிறிஸ்துவை நல்ல தேசமாக ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனுபவித்துமகிழ்பவர்களானால், கிறிஸ்துவைத் தேவனோடு சேர்ந்து பரஸ்பரமாக அனுபவித்துமகிழ்வதற்கு ஒற்றுமை என்ற தளத்தின் மேல் நாம் ஒன்றாகக் கூடிவருவோம். அப்போது நாம் நேர்த்தியான சபையாக இருப்போம். இப்பேர்ப்பட்ட சூழ்நிலை நம்மிடம் இருக்குமென்றால், "தேவன் எங்கே இருக்கிறார்?" என்று மக்கள் நம்மிடம் கேட்கும்போது, "வந்து பாருங்கள். தேவன் தம் வீட்டிலிருக்கிறார். தேவன் இப்போது இந்தப் பூமியிலே ஒரு வாசஸ்தலத்தைப் பெற்றிருக்கிறார்," என்று நாம் பதிலளிக்கலாம்.

இதை இப்படி விளக்கிச்சொல்லலாம். நீ ஒரு நகரத்துக்கு வருகிறாய், அந்த நகரத்தில் தங்குவதற்கு உனக்குக் குறிப்பிட்ட இடம் எதுவும் இல்லை. ஒவ்வொரு நாளும் அந்த நகரத்திலே அலைந்துகொண்டிருக்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். உன்னைக் கண்டுபிடிப்பது மிகக் கடினம். உன் பெயருக்கு எழுதப்பட்ட ஒரு கடிதத்தை தபால்காரரால் உனக்குப் பட்டுவாடா செய்யமுடியாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில், ஒரு குறிப்பிட்ட தெருவில், ஒரு குறிப்பிட்ட வீட்டில் நீ தங்கியிருப்பாய் என்றால் உனக்கு நிச்சயமான ஒரு முகவரி இருக்கும். உன்னை யார் வேண்டுமானாலும் கண்டுபிடிக்கலாம்.

விசுவாசிகளாகிய நீங்களும் நானும் தேவனைப்பற்றித்

தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறோம். ஆனால் தேவன் எங்கேயிருக்கிறார்? "நீங்கள் அவரைப்பற்றி அதிகமாகப் பேசுகிறீர்கள். ஆனால் அவர் எங்கேயிருக்கிறார்?" என்று அவிசுவாசிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். "தேவன் மிகப் பெரியவர்; தேவன் எங்குமிருக்கிறார்; தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார்," என்று நீங்கள் பதிலளிக்கலாம். ஆனால் கிறிஸ்துவை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் கூட்டாக அனுபவித்துமகிழும்போது, தேவன் ஒருவிதத்தில், மெய்யான விதத்தில் ஓர் இடத்தில் இருப்பார். இந்தப் பூமியில் அவருக்கு நிச்சயமான முகவரி இருக்கும். நீங்கள் உங்கள் நண்பர்களிடம் "வந்து தேவனைப் பாருங்கள். தேவனுடைய இருப்பிடத்துக்கு வாருங்கள். அவருடைய வீட்டுக்கு வாருங்கள்," என்று கூறமுடியும். "கூட்டிணைப்பான கிறிஸ்து" எங்கிருக்கிறாரோ அந்த இடமே தேவனுடைய வீடு. நீங்கள் போகுமிடமெல்லாம் உங்களால், "கூட்டிணைப்பான கிறிஸ்துவைக்" காணமுடியுமானால் அங்கு தேவனுடைய வீடு இருக்கிறது. கிறிஸ்தவர்கள் நேர்த்தியான முறையில் ஒன்றாகக் கூடிவரும்போது மக்கள் உள்ளே நுழைந்து பணிந்துகொண்டு தேவன் மெய்யாய் அவர்களுக்குள்ளே இருக்கிறார் என்று அறிக்கையிடுவார்கள் என்று *1* கொரிந்தியர் *14*ஆம் அதிகாரம் கூறுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அது தேவனுடைய இருப்பிடம் என்று அவர்கள் அறிக்கையிடுவார்கள்.

எதைக்கொண்டு தேவனுடைய இந்த இருப்பிடம், இந்த வீடு, கட்டப்பட்டிருக்கிறது. அநேக விசுவாசிகளோடு இரண்டறக் கலந்திணைந்து வேறுபாடின்றி இழைந்திணைந்த கிறிஸ்துவைக் கொண்டு அது கட்டப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் கிறிஸ்துவே, அவர்களுக்கு அவர் சகலத்தையும் உள்ளடக்கிய தேசம். அவர்கள் கிறிஸ்துவையே புசிக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவையே பருகுகிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கிறிஸ்துவே.

எடுத்துக்காட்டாக, ஆரோக்கியமான ஓர் அமெரிக்க வாலிபனை எடுத்துக்கொள்வோம். அவனுடைய சரீரத்தில் உள்ள ஒவ்வோர் உயிர் அணுவும் அமெரிக்கன். அவன் அமெரிக்காவில் பிறந்தான், அமெரிக்காவில் வளர்ந்தான், அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களால் பூர்த்தியாய் நிரப்பப்பட்டு அவைகளால் கட்டியமைக்கப்பட்டிருக்கிறான். அவன் வாழ்க்கை முழுவதும் அமெரிக்க தேசத்திலிருந்தே அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. அவன் அமெரிக்க முட்டை களையும், அமெரிக்க மாடுகளையும், கோழிகளையும், அமெரிக்க உருளைக்கிழங்குகளையும், ஆரஞ்சுகளையும், ஆப்பிள்களையும் சாப்பிட்டிருக்கிறான்.

ஒவ்வொரு நாளும் அவன் அமெரிக்காவை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான், ஒவ்வொருநாளும் அவன் அமெரிக்காவை ஜீரணித்துக்கொண்டிருக்கிறான், அமெரிக்கா அவனோடு இரண்டறக் கலந்துவிடுகிறது, அவன் அமெரிக்காவின் ஒரு பகுதியாகிவிடுகிறான். அவன் நூறு சதவிகிதம் அமெரிக்கன்.

அதே அடிப்படைக் கோட்பாட்டின்படி கிறிஸ்தவன் என்பவன் கிறிஸ்து-மனிதன். கிறிஸ்தவன் என்பவன் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவைப் புசிப்பவன், கிறஸ்துவைக் குடிப்பவன், கிறிஸ்துவை ஜீரணிப்பவன், கிறிஸ்துவோடு இரண்டறக் கலந்துவிடுபவன். கொஞ்சக் காலத்திற்குப்பின்பு, கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இந்த மனிதனாகி விடுகிறார். நீ ஓர் அமெரிக்கன் என்றால் அதை மற்றவர்களுக்கு நீ சொல்லவேண்டியதில்லை. உலகத்தில் நீ எங்கு சென்றாலும் நீ அமெரிக்கன் என்பதை மக்கள் உணர்ந்துகொள்வார்கள். உன்னை அமெரிக்கன் என்று குறித்துக்காட்டக்கூடிய பிரத்தியேகமான சில தனிப்பண்புகள் இருக்கின்றன. அதில் ஒன்று நீ சாப்பிடும் பொருட்கள். அப்படியே நீ ஒரு சீனன் என்றால் எல்லாருக்கும் அது தெரியும். சீன மக்கள் என்ன சாப்பிடுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியுமானால், அவர்கள் பூர்வீகத்தையும், கட்டமைப்பையும் பகுத்துணர்வதற்கு நீங்கள் உங்கள் முகர்தல் என்னும் உணர்வைப் பயன்படுத்தினால் போதும். சில சமயங்களில் சீனர்களையும், ஜப்பானியர்களையும் வித்தியாசப் படுத்துவது சற்றுக் கடினம். வெறுமனே அவர்களின் கண்களைப் பார்ப்பதின்மூலம் சுலபமாகப் பகுத்துணர முடியாது. ஆனால், சீனர்கள் ஜப்பானி யர்கள் இருவருடைய உணவுப்பழக்கமுறை உங்களுக்குத் தெரியுமென்றால், முகர்தல் என்னும் உணர்வைப் பயன்படுத்துவதின்மூலம் அவர்களை இனங்கண்டுகொள்ளலாம். சில குறிப்பிட்ட வகையான வாசனையை வெளியிடுகிற சில குறிப்பிட்ட உணவுகளை ஜப்பானியர்கள் சாப்பிடுகிறார்கள். சற்று வித்தியாசமான வாசனையை வெளியிடுகிற வித்தியாசமான உணவுகளைச் சீனர்கள் சாப்பிடுகிறார்கள். வேறு வார்த்தைகளில் சொன்னால், நீ எதைச் சாப்பிடுகிறாயோ அதுவாகவே நீ மாறிவிடுகிறாய். நீ எதைச் சாப்பிடுகிறாயோ அதன்மூலம் அறியப்படுகிறாய். ஓர் அமெரிக்கன் அமெரிக்காவின் சிறிதளவாக இருப்பதைப் போலவே ஒரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் சிறிதளவாக இருக்கிறான். இன்று காலையில் அவன் கிறிஸ்துவுக்குரிய சிறிதளவைச் சாப்பிடுகிறான். இன்று மாலையில் அவன் கிறிஸ்துவுக்குரிய சிறிதளவைச் சாப்பிடுகிறான். ஒவ்வொரு நாளும் அவன் கிறிஸ்துவைச் சாப்பிடுகிறான், கிறிஸ்துவைக் குடிக்கிறான். படிப்படியாகக் கிறிஸ்துவை அவன் ஜீரணித்துவிடுகிறான். கிறிஸ்து அவனோடு இரண்டறக் கலந்துவிடுகிறார். எனவே, அவனும்

கிறிஸ்துவும் ஒன்றாகிவிடுகிறார்கள்.

பின்பு அவன் தன்னைப்போலவே கிறிஸ்துவைப் புசித்துக் குடிக்கிற மற்ற கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து வரும்போது, கிறிஸ்துவைக் கொண்டுவருகிறான்; அவர்களும் கிறிஸ்துவைக் கொண்டுவருகிறார்கள். அவர்களுக்குக் கிறிஸ்துவே எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்துவே அவர்களுடைய உண்மையான கட்டமைப்பு. அவர்கள் எங்கு போனாலும் சரி, அங்கு அவர்கள் கிறிஸ்துவைக் கொண்டுபோவதைத் தவிர்க்க முடியாது. அவர்கள் ஒன்றாய்க் கூடிவரும்போது, அவர்கள் கிறிஸ்துவைத் தேவனுக்கு ஏறெடுக்கிறார்கள், அவர்கள் ஒன்றாகக் கிறிஸ்துவை அனுபவித்து மகிழ்கிறார்கள், அவர்கள் கிறிஸ்துவைக் காட்சியாக்குகிறார்கள். அவர்கள் பேசும்போதெல்லாம், கிறிஸ்து வெளிவருகிறார். எல்லாம் கிறிஸ்துவே. இதுவே தேவனுடைய வாசஸ்தலம், இதுவே தேவனுடைய இல்லம்.

இதுவே மெய்யான சபை, இதுவே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் மெய்யான வெளியாக்கம் என்பது மிகத்தெளிவாக இருக்கிறது. இவர்கள் கிறஸ்துவுடன் இரண்டறக்கலந்த ஒரு கூட்டம் மக்கள், கிறிஸ்துவால் பூர்த்தியாய் நிரப்பப்பட்ட மக்கள், ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்து கொண்டிருக்கிற மக்கள், ஒன்றாகக் கூடிவரும்போது வேறெதையும் கொண்டுவராமல் கிறிஸ்துவை மட்டுமே கொண்டுவருகிற ஒரு கூட்டம் மக்கள். அவர்கள் பரஸ்பரமாகக் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறார்கள்; அவர்கள் தேவனுக்கு முன்பாகவும், தேவனோடும் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறார்கள்; ஆகையால் தேவன் அவர்களிடையே இருக்கிறார். அந்தக் கணப்பொழுதில் அவர்களே தேவனுடைய வாசஸ்தலம்; அவர்களே அவருடைய இல்லம், அவருடைய வீடு. தேவனுடைய வாசஸ்தலமே தேவனுடைய ஆலயம். நம்மிடம் தேவனுடைய ஆலயம் இருந்தால், நம்மிடம் தேவ பிரசன்னமும் தேவ ஆராதனையும் இருக்கிறது.

நகரம்

ஆனால், தேவனுடைய இந்த ஆலயம் பெரிதாக்கப்பட வேண்டும். அது எப்படி பெரிதாக்கப்படமுடியும்? தேவனுடைய அதிகாரமாகக் கிறிஸ்துவைக்கொண்டு அது பெரிதாக்கப்படுகிறது. கிறிஸ்து நம் அனுபவமகிழ்ச்சியாக மட்டும் இல்லை, கிறிஸ்து தேவனுடைய அதிகாரமாகவும் நமக்குவேண்டும். இது அளவிடற்கரிய உண்மை. நாம் காண்பித்திருப்பதுபோல நீங்களும் நானும் கிறிஸ்துவை ஒன்றாக அனுபவித்துமகிழ்ந்தால் கிறிஸ்துவினுடைய அதிகாரத்தின் நிஜம் நம்மிடையே இருக்கும். இப்பேர்ப்பட்ட அனுபவமகிழ்ச்சியிலும், இப்பேர்ப்பட்ட

அனுபவமகிழ்ச்சியின் விளைவாகவும், நாம் தேவனுக்கும் ஒருவருக்கொருவரும் மிகவும் பணிந்தடங்கியிருப்போம். நாம் பணி வடக்கம் நிறைந்தவர்களாயிருப்போம். கிறிஸ்துவை இப்படி அனுபவித்து மகிழ்ந்தபின்பு ஒருவரோடொருவர் நாம் சண்டை போடமுடியும் என்று உங்களால் நம்பமுடியுமா? கிறிஸ்துவை இவ்வாறு அனுபவித்துமகிழும்போது நாம் ஒருவரையொருவர் பகைக்க முடியும் என்று உங்களால் நம்பமுடியுமா? இது சாத்திய மில்லை. நாம் எதிரியுடன் யுத்தம்பண்ணுவதற்காக ஒரு சேனையாக உருவாக்கப்பட்டபின்னும், சேனைக்குள்ளே ஒருவரோடொருவர் போராடிக்கொண்டிருப்பது சாத்தியமா? இது சேனை இல்லை என்றால் சாத்தியமே. நாம் கொள்ளைக் காரர்கள் அல்லது வழிப்பறிக்காரர்கள் என்றால் இது சாத்தியமே. பணிந்தடங்குதல் இல்லையென்றால் சேனை இல்லை. கிறிஸ்துவை நாம் இந்த அளவுக்கு அனுபவித்துமகிழும்போது, நாமெல்லாரும் ஒருவருக்கொருவர் பணிந்தடங்கியிருப்போம். நம்மால் வேறொன்றும் செய்யமுடியாது. மெய்யான அன்பு பணிந்தடங் குவதில் தான் இருக்கிறது. நாம் ஒருவருக்கொருவர் பணிந்த டங்கும்போது, மெய்யாகவே நாம் ஒருவர்மேல் ஒருவர் அன்புகூருகிறோம். மெய்யான அன்பு என் சுவையிலோ, என் விருப்பத்திலோ, என் ஆசையிலோ இல்லை, மாறாக என் பணிவடக்கத்தில்தான் மெய்யான அன்பு இருக்கிறது. பணிவடக்கம் நம்மிடையே இருக்குமென்றால் கிறிஸ்துவின் அதிகாரமும் நம்மிடையே இருக்கிறது என்று பொருள். கிறிஸ்து வினுடைய அதிகாரமே தேவனுடைய வாசஸ்தலத்தை, தேவனு டைய ஆலயத்தை, பெரிதாக்குகிறது.

எது தேவனுடைய ஆலயத்தின் பெரிதாக்கம்? தேவ னுடைய நகரமே. கிறிஸ்துவின் அதிகாரத்தின்படி சபை தேவனுடைய வீடு மட்டும் இல்லை, அது அவருடைய நகரமும்கூட. தேவ பிரசன்னம் மட்டும் இல்லை, தேவனுடைய இராஜ்ஜியமும் தேவனுடைய அதிகாரமும்கூட அங்கிருக்கின்றன. மக்கள் உள்ளே வரும்போது, அவர்கள் தேவ பிரசன்னத்தை உணர்வார்கள், அவர்கள் தேவனுடைய அதிகாரத்தையும்கூட உணர்வார்கள். "இது தேவனுடைய வீடு மட்டும் இல்லை, இது தேவனுடைய இராஜ்ஜியமும்கூட," என்று அவர்கள் சொல்வார்கள். பின்பு தேவாலயத்தையுடைய நகரம் உண்டாயிருக்கும். ஒரு கூட்டம் மக்கள் கிறிஸ்துவுடன் எல்லா வகையிலும் இரண்டறக் கலந்து இழைந்திருக்கிறார்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு அவரை அனுபவிக்கிறார்கள், அனுபவித்துமகிழ்கிறார்கள். இப்பேர்ப்பட்ட மக்கள் கூட்டம் எங்கிருக்கிறதோ அங்கு நகரமும், ஆலயமும் உண்டாயிருக்கும். அவர்கள் ஒன்றாய்க் கூடிவரும்போது

தேவனுக்கு முன்பாகவும், தேவனோடு சேர்ந்தும் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிறார்கள். அவர்களைப்பொறுத்தவரை எல்லாம் கிறிஸ்துவே. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் இப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருந்தால், நம்மிடம் தேவனுடைய வீடு இருக்கிறது, நம்மிடம் தேவனுடைய நகரம் இருக்கிறது. நாம் தேவனுடைய வீட்டில் இருக்கிறோம், நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருக்கிறோம். நம்மிடத்தில் வரக்கூடிய எல்லாரும் தேவ பிரசன்னத்தையும், தேவனுடைய அதிகாரத்தையும் உணர்வார்கள். "தேவன் இங்கு வாசம்பண்ணுவதோடு மட்டும் இல்லை, தேவன் இங்கு ஆட்சியும்செய்கிறார்," என்று அவர்கள் கூறுவார்கள்.

சகோதர சகோதரிகளே, தேவன் இன்று இதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறார். நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் இடத்தில், இந்தப் பூமியில் தேவன் இப்பேர்ப்பட்ட ஒரு சூழ்நிலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் லூயிஸ்வில்லேயில் வாழ்ந்துகொண்டிருந்தால், தேவன் இதை லூயிஸ்வில்லேயில் தேடிக்கொண்டிருக்கிறார். நீங்கள் சாக்ரமெண்டோவில் வாழ்ந்துகொண்டிருந்தால், தேவன் இந்த நிஜத்தை சாக்ரமெண்டோவில் தேடிக்கொண்டிருக்கிறார். நாம் எங்கு வாழ்ந்தாலும் சரி, அங்கு தேவன் நம்மிடையே தம் வீட்டையும், தம் இராஜ்ஜியத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார், தம் ஆலயத்தையும், தம் நகரத்தையும் தேடிக்கொண்டிருக்கிறார். ஆனால் நாம் கிறிஸ்துவை அனுபவிக்கவேண்டும். பஸ்கா ஆட்டுக்குட்டியில் ஆரம்பித்து, அநேக அனுபவங்களினூடாய்க் கடந்துசென்று, இறுதியில் சகல பரிசுத்தவான்களோடுங்கூட தேசத்துக்குள், அதாவது சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றாக வரவேண்டும். பின்பு கிறிஸ்துவின் அபரிமிதமான ஐசுவரியங்களை உற்பத்திசெய்வதற்கு நாம் நிலத்தில் பிரயாசப்பட்டு உழைக்கவேண்டும். நாம் "கூட்டிணைப்பான கிறிஸ்துவாக" மாறவேண்டும், நாம் கிறிஸ்துவை உற்பத்திசெய்கிற, கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்கிற, கிறிஸ்துவைப் பகிர்ந்துகொள்கிற, ஆராதனையில் கிறிஸ்துவைத் தேவனுக்கு ஏறெடுக்கிற கிறிஸ்தவர்களின் கூட்டமாக மாறவேண்டும். நம்மைப் பொறுத்தவரை எல்லாம் கிறிஸ்துவாக இருக்கவேண்டும். இதுவே கிறிஸ்துவினுடைய சரீரத்தின் மெய்யான வெளியாக்கம். இதோ இங்கே தேவனுடைய வீடும், தேவனுடைய இராஜ்ஜியமும் இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட நிஜம் நம்மிடம் இருந்தால், நம்மிடம் தேசம் இருக்கிறது, நம்மிடம் ஆலயம் இருக்கிறது, நம்மிடம் நகரம் இருக்கிறது.

தேவாலயத்தையும், நகரத்தையும்பற்றிய எல்லா விவரங்களுக்குள்ளும் நாம் இப்போது போகமுடியாது. ஆனால்

தேசத்தைப்பற்றி, தற்போது, நமக்குக் கொஞ்சம் தெரியும்—அதற்குள் நுழைவது எப்படி, அதைச் சுதந்தரிப்பது எப்படி, அதை அனுபவித்துமகிழ்வது எப்படி, அதற்குள் வாழ்வது எப்படி, அதில் பிரயாசப்பட்டு உழைப்பது எப்படி, அதில் தேவனை ஆராதிப்பது எப்படி, அதில் ஆலயத்தையும் நகரத்தையும் கட்டுவது எப்படி என்றெல்லாம் நமக்குக் கொஞ்சம் தெரியும். தேசம் கிறிஸ்துவே என்றும், ஆலயமும் நகரமும் கிறிஸ்துவின் நிறைவு என்றும் நமக்குத் தெளிவாக தெரியும். கிறிஸ்துவே தலை, கிறிஸ்துவின் நிறைவு சரீரமாகிய சபை. இந்தச் செய்திகளில் ஆலயத்தையும், நகரத்தையும் உடைய தேசத்தைப்பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். இது எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிற வருடைய நிறைவாகிய அவருடைய சரீரமாகிய சபையையுடைய கிறிஸ்து.

தேவன் இன்று இதைத்தான் தேடிக்கொண்டிருக்கிறார். நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருப்போமாக. கிறிஸ் துவை அனுபவித்து மகிழ்வது எப்படி என்றும், கிறிஸ்துவை அனுபவிப் பது எப்படி என்றும், கிறிஸ்துவை நம் அன்றாட வாழ்க்கைக்குப் பிரயோகிப்பது எப்படி என்றும் அவருடைய கிருபையினால் நாம் கற்றுக்கொள்வோமாக. பின்பு பரிசுத்தவான்களோடு நல்ல தேசத்துக்குள் நுழைந்து, அதில் பிரயாசப்பட்டு உழைத்து, ஆலயமும் நகரமும் உண்டாகும்வரை நாம் அவரை அனுபவிப் பதிலும், அனுபவித்துமகிழ்வதிலும் தொடர்ந்து வளர்ந்துகொண்டே யிருப்போம்.

கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்களுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதயமுள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தென்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலி.ஃபோர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.